ரஸ்யாவின்

ரஸ்புட்டீன்

தீர்க்க தரிசியா?
மக்கள் புரட்சிக்கு வித்திட்டவரா?

எம்.ரி.செல்வராஜா



ரஷ்யாவின்

ரஸ்புட்டின்

தீர்க்கதரிசியா?
புரட்சியாளரா?



(சரித்திர நாவல்)

உரும்பிராய் எம்.ரி.செல்வராஜா

சரஸ்வதி புத்தகாலயம்
எண்:18, 2வது சந்து,
பிரிக்கிலின் ரோடு, ஒட்டேரி,
சென்னை - 12.
✆: 24342926; 24346082

உள்ளே

1.	விண்ணிலே எரிநட்சத்திரம், மண்ணிலே ரஸ்புட்டீன்	1
2.	முதல் சோகம்	10
3.	வயதுக்கு மிஞ்சிய வார்த்தைகள்	20
4.	வயதுக் கோளாறு	31
5.	திருமணம்	43
6.	புதிய அனுபவங்கள்	54
7.	சமயமும் சல்லாபமும்	64
8.	புனிதமான யாத்திரையா?	76
9.	புகழின் ஆரம்பம்	86
10.	தலைநகரில் பதித்த கால்கள்	96
11.	அரச பரம்பரை	107
12.	அரசபரம்பரையின் அறிமுகம்	117
13.	மீண்டும் பிறந்த இடத்தில்...	127
14.	தலைநகரில் ஆரம்ப எதிரிகள்	140
15.	குற்றவாளியா? சுற்றவாளியா?	150
16.	அரசியாரின் அழைப்பு	161
17.	அரசியல் பிழைத்தல்	173

18.	உயிருக்கு வந்த ஆபத்து	187
19.	பக்தியா? போலியா?	198
20.	வெற்றியும் தோல்வியும்	209
21.	அழிவின் உச்சியில்...	220
22.	ஃபீலிக்ஸ் யுசெப்போ	230
23.	கடைக்கண் பார்வை செய்த கொடூரம்	241
24.	உயர்கல்வியும் திருமணமும்	256
25.	திடமான முடிவு	268
26.	திட்டங்களும் தீர்க்கதரிசனமும்	278
27.	கொலைக்களம் நோக்கி...	288
28.	கொடூரங்கள் அடங்கின...	299
29.	மகிழ்ச்சியும் மனச்சோர்வும்	314
30.	சாம்ராஜ்யம் சரிந்தது	327
31.	கனவிலும் காணாத முடிவுகள்	339
32.	பொலீஸ் அறிக்கை	353
33.	முடிவு	365

□□□

டாக்டர் இந்திரகுமாரின் முன்னுரை

1975இல் சோவியத் அரசின் அழைப்பை ஏற்று ஓர் எழுத்தாளன் என்ற ரீதியில் அந்த அதிவல்லரசில் ஒருமாத காலம் சுற்றுப்பயணம் செய்ததன் விளைவாக எழுதப்பட்டதுதான் "புதுயுகம் கண்டேன்" என்ற பயணநூல். விற்பனையில் அது ஒரு சாதனை ஏற்படுத்தியது.

1998இல் குலைந்துபோயிருந்த சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியான லெனின்கிராடிற்கு ஒரு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டிருந்தேன். அப்போது வீரத்தின் விளைநிலமான அந்த இடம் 'சென்ட்பீட்டர்ஸ்பர்க்' என்ற சமயாசாரப் போர்வையை மீண்டும் போர்த்தியிருந்தது.

ஆங்கிருந்து திரும்பியபோது, பழைய ரஷ்யாவையும் அதன் 'ஜார்' ஆட்சியையும் உலுக்கிய கொடிய சாமியார் 'ரஸ்புட்டினை'ப் பற்றி அதுகாறும் வெளியிடப்படாத புதிய தகவல்களை எல்லாம் அள்ளிக்கொண்டு வந்தேன். ரஷ்யாவின் சுவடிகள் காப்பகம் அந்த நாட்டின் மிக இருண்ட காலகட்டத்தின் வரலாற்றை ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்தியிருந்தது.

அப்போது நான் பிரதம ஆசிரியராக இருந்த 'மேகம்' என்ற சஞ்சிகையில் ரஸ்புட்டினின் வரலாற்றை ஒரு நாவலாக எழுதி தொடர் கதையாக வெளியிட எண்ணினேன். நாவலை எழுதுவது யார்? எனக்கு அதனை எழுதவேண்டும் என்ற ஆசை இருந்தபோதும், எனக்கு அப்போது இருந்த வேலைப்பளுவின் மத்தியில் அது உடனடியாக நிறைவேறக்கூடிய ஒரு காரியம் அல்ல என்று எனது மனச்சாட்சியின்

குரல் குறுக்கிட்டது. சஞ்சிகையின் உதவி ஆசிரியராக சீராக இயங்கி, நல்ல சிறுகதைகளையும் எழுதிவந்த இனிய நண்பர் எம்.ரி.செல்வராஜா விடம் இப்பணியை ஒப்படைக்கத் தீர்மானித்தேன்.

ரஸ்புட்டின் பற்றிய தகவல்கொத்தை செல்வாவின் கரங்களில் திணித்தேன். நாவல் எப்படி வரவேண்டும் என்று என் மனதில் இருந்த சில எண்ணங்களையும் அவருக்குத் தெரிவித்தேன். சஞ்சிகையில் ஆறு இதழ்களில் வரக்கூடிய அளவு எழுதி முடித்ததும் பிரசுரிக்க ஆரம்பிப்போம். அதன் பிறகு இதழ்கள் வரவர புதிய அத்தியாயங்களை அவர் எழுதிக்கொண்டே வர்லாம் என்று சொன்னேன். புன்னகையுடன் இந்தப் பணியை அவர் ஏற்றுக்கொண்டார். ஆறு இதழ்களுக்கு வேண்டிய நாவல் தொடர் என் கைகளுக்கு வந்து சேர்ந்தது. அற்புதமாக எழுதியிருந்தார். ரஸ்புட்டின் வரலாற்று நாவல் விரைவில் ஆரம்பம் என்று சஞ்சிகையில் விளம்பரமும் கொடுத்தாயிற்று.

பத்திரிகையின் வளர்ச்சி அதன் தரம் தமிழக சஞ்சிகை களுக்கு நிகராக இருந்தபோதிலும் தொடர்ந்து பாதித்து வந்த நிர்வாகப் பலவீனங்கள் காரணமாக சஞ்சிகையின் வெளியீடு தடைப்பட்டது. ரஸ்புட்டின் தொடர் நாவலும் இடையோடு நின்றது.

'மேகம்' நின்றுவிட்டாலும் நாவல் தொடரட்டும். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாவல் என்பதனால் அதை வேறு ஏதாவது இதழில் தொடராக வெளியிட முடியும். அதன்பின்னர் அதனை ஒரு நூலாக வெளியிடலாம் என்று அடிக்கடி செல்வாவிற்கு ஊக்கம் அளித்துவந்தேன்.

காலக்கெடு என்ற அழுத்தம் எதுவும் இல்லாத நிலையில் ரஸ்புட்டின் நாவல் மெல்ல மெல்ல வளர்ந்தது. ஒரு படைப்பிலக்கிய வாதியின் இலக்கிய ஆற்றலையும் அனுபவச் சிறப்புக்களையும் புதியன புனையும் வேட்கையையும் உரமாகக்கொண்டு உறுதியாக வளர்ந்தது. நிறைவு எய்தியது. உங்கள் கரங்களில் தவழக் காத்து நிற்கிறது.

வானம் பார்த்த யாழ் குடாநாட்டில் உரும்பிராயில் பிறந்து வளர்ந்து, இலண்டன் மாநகரில் ஒரு பொறியியலாளராகக் கடமையாற்றும் ஒரு தமிழ் இலக்கியகர்த்தாவின் மனக் கண்ணினூடாக, 19ஆம் நூற்றாண்டு ரஷ்யாவை ஆட்டிப்படைத்த ஒரு கொடூர சாமியாரின் திகில் வாழ்க்கையைத் தரிசிக்கப் போகிறீர்கள்.

ஈழத்து நாவல் இலக்கிய வரலாற்றில் இத்தகைய ஒரு நாவல் இதுகாறும் வந்தது இல்லை. நாவல் இலக்கியம் என்பது ஒரு பாரம்பரிய தமிழ் இலக்கிய வடிவம். மேற்கத்திய இலக்கிய வடிவங்களில் ஒன்றான இதனைத் தமிழுக்கு இறக்குமதி செய்தவர்கள் ஆங்கிலம் படித்த தமிழர்கள் ஆவர். மனித வாழ்வின் அன்றாடச் சூழலில் ஏற்படுகின்ற நிகழ்வுகளை அடிப்படையாக வைத்துப் புனையப்பட்ட நாவல் வடிவம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கைக்கு வந்தபோது, அங்கே நிலவிய நீண்ட கதை வடிவமோ, கடவுளர்களினதும் அவர்களுடைய அவதாரங்களதும் காவிய நாயகர்களும் வீரப் பிரதாபங்களையும் ஒழுக்க சீலங்களையும் முதன்மைப்படுத்திய காவிய, இதிகாச, புராண மரபு சார்ந்ததாக இருந்தது. தமிழ்நாட்டு இலக்கியத்தின் ஆளுமைக்கு உட்பட்டிருந்த இந்த மரபு இலங்கையின் ஆரம்பகால நாவல் வடிவத்தை அதிக அளவு பாதித்தது. காலஞ் செல்லச் செல்ல இந்தப் பாதிப்பு குறைந்து கொண்டு வந்தாலும் அதன் சுவடுகள் முற்றாக மறைய கணிசமான காலம் எடுத்தது. கடவுளரது காவியங்களைப் படிப்பதில் ஊறிப்போயிருந்த மக்கள் இரசனையும், சாமானியர்களின் வாழ்வை ஒட்டி அமைந்த நாவல்களை இரசிக்கத் தொடங்குவதற்கும் காலம் எடுத்தது.

இக்காலகட்டத்தில் ஏற்பட்ட அரசியல் - சமூக மாற்றங்களும் கல்விப் பரவாக்கலும் ஆங்கிலச் செய்திப் பத்திரிகைகளின் ஆரம்பமும் புதியதொரு வர்க்கத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்தன. ஆங்கிலம் வாசிக்கின்ற ஒரு மத்தியதர வர்க்கம்தான் அது. இவர்களில் பெரும்பாலானோர், ஆங்கில நாகரிகத்தினால் கவரப்பட்டும் இருந்தனர்.

இக்காலகட்டத்தில் கிறீஸ்தவ மிஷன்மாரும் அன்று நிலவிய பிரித்தானிய ஆட்சியின் குடையின் கீழ் தமது மதத்தை எம்மவரிடையே திணிப்பதற்காக வந்தனர். இதன் எதிர்விளைவாக உள்நாடுகளில் நிலவி வந்த மதங்களை நம்பிக்கையுடன் அனுட்டித்து அவை சார்ந்த வாழ்க்கை நெறிகளையும் பின்பற்றி வந்தோர் சார்ந்த இயக்கங்களும் கிறிஸ்துவ மிஷனரிமாருக்கு எதிராக எழுந்து வளர்ச்சியும் அடைந்தன. இத்தகைய ஓர் இயக்கச் செயற்பாட்டினூடாக வெளிவந்ததுதான் ஈழத்தின் முதலாவது தமிழ் நாவல்.

இஸ்லாமிய மறுமலர்ச்சித் தந்தை என்று போற்றப்படும் சித்திலெவ்வை மரைக்கார் எழுதிய 'அசன்பேயுடைய கதை' என்ற நாவல் 1885இல் அவரது தாய்மொழியான தமிழில் வெளிவந்தது. நாவலின் ஆசிரியர் காவிய மரபிலும் அரபு இரவுக்கதை மரபிலும் ஆர்வமுடையவர். அதனால் அவரது பாத்திர வர்ணனை, இயற்கை வர்ணனை என்பன காவிய மரபில் அமைந்தன. அரபு இரவுக்கதை மரபு கதாநாயகனே தனது வீர சாகசச் சம்பவங்களை, திடீர் திருப்பங்களை எல்லாம் வர்ணிப்பது ஆகும். இந்தக் கதையின் நாயகன் அசன், பேரழகன்; கன்னியரைக் கவரும் கதாநாயகன்; ஆங்கில உயர் கல்வி கற்றவன்; ஆங்கில நாகரிகப் பிரியன்; காளையை அடக்கி கதாநாயகியைக் கவர்பவன்; தனது இஸ்லாமிய சமய அனுட்டானங் களை அட்சரம் தவறாது நிறைவேற்றுபவன்; தனது வாழ்க்கையில் ஏற்படும் துயரங்களை எல்லாம் ஆண்டவனின் சோதனை என்று கருதுபவன்; அவனைக் காதலிக்கும் ஆங்கில நங்கை இஸ்லாத்துக்கு மாறி அவனைக் கைப்பிடிக்கிறாள்.

இந்த நாவலில் உள்ள மதப்பிரச்சினை ஒரு சமகாலப் பிரச்சினை யாக இருந்தபோதிலும், இரண்டு 'மிகைப்படுத்தும் மரபு'களின் பாற்பட்டு இந்த நாவல் எழுதப்பட்டதால் ஒருவித 'ஆகாசப் புளுகு' நாவலாக இன்றைய விமரிசன அணுகுமுறையில் இது தோன்றுகிறது.

சமீப காலத்தில் நடைபெற்ற இம்ரன்கான் - கோடீஸ்வரி ஜெமீமா கோல்ட்சிமித் (அவரும் இஸ்லாத்திற்கு மதம் மாறினார்) திருமணமும் சில ஆண்டுகளுக்குள் உடைந்து, விவாகரத்துச் சோகத்தில் முடிந்ததும் உலகம் அறிந்ததே.

'அசன்பேயுடைய கதை' என்ற நாவல் அடுத்து வந்த வீரசிங்கன் கதை, நொறுங்குண்ட இருதயம், காசிநாதன் நேசமலர், கோபால நேசரத்தினம், சித்தகுமாரன் போன்ற நாவல்களும் காவிய நடையிலேயே எழுதப்பட்டன. 1930 வரை வெளிவந்த நாவல்களெல்லாம் இத்தகைய ஆரம்பகால நாவல்களே.

1930கள் தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் சம்பந்தப்பட்ட காலகட்டம் ஆகும். வளர்ந்து வரும் வாசகர்களின் சுவைக்குத் தீனி போடுவது பத்திரிகை ஆசிரியர்களின் பணி ஆயிற்று. இதனால் தொடர்கதை நாவல்கள் வெளிவரத் தொடங்கின. ஆரம்பகால நாவலாசிரியர்களின் நடை சரியாக அமையாவிட்டாலும் தாம் எடுத்துக்கொண்ட சமயப்பிரசாரம், சமூக சீர்திருத்தம் போன்ற ஏதோ ஒரு குறிக்கோளை வலியுறுத்தி நாவல் இலக்கியத்திற்கென ஏதோ ஒரு சந்தையை உருவாக்கி வைத்திருந்தனர். அந்தச் சந்தையில் அற்புதமான சுவைமிக்க மர்ம நாவல்களை எழுதிக் குவித்து பணம் சம்பாதித்துக் கொண்டனர் எச்.நல்லையா, ஏ.சி.இராசையா, கே.வி.எஸ்.வாஸ் போன்ற பத்திரிகையாளர்கள். ஆங்காங்கே ஒழுக்கத்தையும் பற்றி எழுதிவந்த இவர்களது கருத்துக்கும் களத்திற்கும் தீனி போடுவதுபோல் மேல் நாட்டு நாவல்களும் தமிழ்நாட்டு நாவல்களும் ஈழத்தில் வந்து குவிந்தன.

இக்காலத்தில்தான் வெளிநாட்டு நாவல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் அல்லது தமிழில் தழுவி எழுதும் காத்திரமான பணிகளும் இடம்பெற்றன. எஸ்.வைத்திலிங்கம், இலங்கையர்கோன், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகியோர் இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இக்காலகட்டத்தில் தமிழ் நாட்டிலிருந்தும்

உருசிய மொழி நாவல்களும், வங்க நாவல்களும், காண்டேகர் நாவல்களும் தமிழில் வெளிவந்தன. இக்காலகட்டத்தில் நாவல் இலக்கியத்தின் முக்கிய பண்புகளை உணர்ந்து இலக்கிய சுத்தியுடன் எழுதியோரில் அ.செ. முருகானந்தன், சம்பந்தன், வ.அ.இராசரத்தினம் ஆகியோரைக் குறிப்பிடலாம். ஈழத் தமிழ் நாவல்களின் இந்தப் போக்கு ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு நீடித்தது. இருபதாம் நூற்றாண்டின் கடைசி ஐம்பது ஆண்டுகள் முக்கியமானவை. உலக அரங்கில் பாரிய அரசியல், சமுதாய, பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன. மார்க்சிச லெனினிசச் சித்தாந்தங்கள் சோவியத் ஒன்றியத்தினதும் மக்கள் சீனாவினதும் எல்லைகளுக்கப்பாலும் பரவின. மூன்றாம் உலக நாடுகளிலும் இளைய சமுதாயத்தினர் மத்தியிலும் இந்த நம்பிக்கைகள் எழுச்சி பெறத் தொடங்கின. இத்தகைய அரசியல் மாற்றங்களுக்கு இந்தியாவும் இலங்கையும்கூட விதிவிலக்கல்ல. கடந்த அரை நூற்றாண்டில் ஈழத்து நாவல் இலக்கியமும் இந்தப் புதிய யதார்த்தங்களைப் பிரதிபலிக்கும் வகையில் திசை மாறியது.

கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக எனது நண்பரும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக இருந்து சமீபத்தில் ஓய்வு பெற்றவரும், சிறந்த தமிழ் இலக்கிய விமர்சகருமான பேராசிரியர் எஸ்.தில்லைநாதன் கடந்த அரை நூற்றாண்டை ஈழத்தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றின் 'புது யுகம்' என்று போற்றியுள்ளார். இந்தப் புது யுகத்தில் வெளிவந்த நாவல்களை வசதி குறித்து ஆறு பிரிவுகளாக அணுகி விமர்சித்தும் உள்ளார்.

(1) அரசியல், பொருளாதாரப் பார்வை முக்கியம் பெற்ற நாவல்கள்

பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முதன்மை தந்து அவற்றின் தீர்வுக்கு ஒரு வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்ற கருத்தை வலியுறுத்தும் நாவல்களுக்கு இளங்கீரனும் செ.கணேசலிங்கனும் எழுதிய நாவல்கள் குறிப்பிட்டு நோக்கத்தக்கவை. இவை பொதுவாக சமகால அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைச் சித்திரித்த

போதிலும், பிரசார வேகம் அதிகரித்ததினால், வர்க்க குணாதிசயங்களை சதா வெளிப்படுத்தும் பாத்திரங்கள் செயற்கையாக இயங்கும் பாத்திரங்கள்போல் தெரிகின்றன. இது நாவலின் கலையம்சத்தைப் பாதிப்பது கவலைக்குரியது.

(2) யாழ்ப்பாணத்தில் ஒரு முக்கிய பிரச்சினையான சாதிப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட நாவல்கள்

இளங்கீரனும் இப்பிரச்சினையை அணுகியிருந்த போதிலும், இந்தப் பிரிவில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க நாவல்கள் (எனது நண்பர்) செ.கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்', (காலஞ்சென்ற எனது நண்பர்) எஸ்.அகஸ்தியரின் 'எரிமலை', கே.டானியலின் 'பஞ்சமர்' என்பன ஆகும். செ.கணேசலிங்கன் கோட்பாடுகளுக்கும் வர்க்க குணாதிசயங் களுக்கும் கொடுக்கும் அழுத்தம் மிகையானது. டானியல் அனுபவ ரீதியாக தான் அறிந்த சாதிப் பிரச்சினைக் கொடுமைகள் எல்லா வற்றையும் ஒரே நாவலில் பதிய முற்படுவதும், அதைச் சாடுகின்ற இயக்க வேகமும், உயர் சாதியினர் எனப்படுவோரின் ஒழுக்கக் கேடுகளை அம்பலப்படுத்தும் முறையும் மிகைப்படுத்தப்பட்டனவாகத் தெரிவதால் கலையம்சம் பாதிக்கப்படுகின்றது. அகஸ்தியரின் நாவலில் அவரது அரசியல் பார்வை பட்டவர்த்தனமாகத் தெரிவது ஒரு குறையாகும்.

(3) பல அவலங்களைத் தமக்கே உரியனவாகக் கொண்ட மலையகத் தமிழ் மக்களின் வாழ்வைச் சித்திரிக்கும் தமிழ் நாவல்கள்

கோகிலம் சுப்பையாவின் 'தூரத்துப் பச்சை', (எனது நண்பர்) டாக்டர் நந்தியின் 'மலைக் கொழுந்து', பெனடிக் பாலனின் 'சொந்தக்காரன்', (எனது நண்பன்) தெளிவத்தை ஜோசப்பின் 'காலங்கள் சாவதில்லை' ஆகியன இப்பிரிவில் குறிப்பிடத்தக்க நாவல்கள் ஆகும்.

(4) பிரதேச நாவல்கள்

பால மனோகரனின் 'நிலக்கிளி' (வன்னி) , (எனது நண்பர்) எஸ்.பொன்னுத்துரையின் 'சடங்கு' (யாழ்ப்பாணம்), மீனவர் நாவல் களான கே.டானியலின் 'போராளிகள் காத்திருக்கின்றனர்', (எனது நண்பர்) செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' (இது படமாக்கப்பட்டபோது கதாநாயகனாக நான் நடித்தேன்), (எனது நண்பர் காலஞ்சென்ற) வை.அ.கைலாசநாதனின் 'கடற்காற்று' என்பன குறிப்பிடத்தக்கவை.

(5) வரலாற்று நாவல்

இப்பிரிவில் வ.அ.இராசரத்தினம் எழுதிய 'கிரௌஞ்சப் பறவைகள்', (எனது நண்பர்) முல்லை மணி சுப்ரமணியம் எழுதிய 'கயிலாய வன்னியன்' (எனது சேர்ப்பு) என்பன இப்பிரிவில் அடங்கும்.

(6) நானாவித நாவல்கள்

பொழுதுபோக்கு நாவல்கள், குடும்ப நாவல்கள், சுவாரஸ்ய மான காதல் நாவல்கள், அற்புதமான மர்ம நாவல்கள் என்றும் சொல்லப்படுகின்ற நானாவித நாவல்களும் இப்பிரிவினுள் அடங்கும். 1977 வரை ஈழத்தில் வெளிவந்த தமிழ் நாவல்கள் பற்றிய ஒரு நோக்கு இது.

1885இல் அசன்பேயுடைய கதை என்ற நாவலோடு ஆரம்பித்த ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியப் பூங்காவின் வாசலில் இன்று 'ரஸ்புட்டின் தீர்க்கதரிசியா? புரட்சியாளரா?' வந்து நிற்கிறார். காவிய நடையிலே தவழ்ந்து அரபு இரவுக் கதை நடையில் துள்ளி விளையாடிய வீர சாகச காதல் மன்னன் அசன்தான் கதாநாயகன். ஆனால் ரஸ்புட்டின் நாவலில் தெரிவதெல்லாம் கதாநாயகனாக வரும் ஒரு கொடிய வில்லன்தான்.


யதார்த்தமான இந்த நாவலைத் தமிழ் இலக்கிய விமர்சகர் கள் எந்தப் பிரிவில் அடுக்கப் போகிறார்கள்? தமிழ் நாவல் இலக்கிய ஆர்வலர்கள் இந்த நாவலுக்கு எத்தகைய ஆதரவு தரப் போகிறார்கள்? பொறுத்திருந்து பார்ப்போம்.

டாக்டர் க. இந்திரகுமார்

மனநோய் மருத்துவ நிபுணர்,
எழுத்தாளர் - நூலாசிரியர் - பத்திரிகையாளர்
துணைத் தலைவர், உலகத்தமிழர் பேரவை.

□□□

அணிந்துரை



டாக்டர் சிவ.தியாகராஜா

1917ஆம் ஆண்டில் உலகப் பேரரசுகளில் ஒன்றான ரஷ்யாவில் இடம்பெற்ற பாட்டாளி மக்கள் புரட்சியும், அங்கே பலநூறு ஆண்டுகளாக நிலைபெற்றிருந்த "ரோமனோவ்" அரச வம்சத்தின் வீழ்ச்சியும் உலக வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

ரஷ்யப் பேரரசின் ராஜ குடும்பத்தை தனது செல்வாக்கினால் ஆட்டிப்படைத்து, அரசியல் விவகாரங்களில் தலையிட்டு நாட்டையே நாசப்படுத்தி, அந்த மண்ணில் வரலாறு கண்டிராத வகையில் ஒரு மக்கள் புரட்சி ஏற்படுவதற்குக் காரணமானவர்களில் ஒருவராக ரஸ்புட்டின் என்ற தத்துவஞானி சமகால வரலாற்று ஆசிரியர்களால் இனம் காணப்படுகிறார்.

ரஷ்யப் பேரரசர் ஜார் மன்னர் இரண்டாம் நிக்கலஸும், அவரது மனைவி ராணி அலெக்ஸாண்டிராவையும், மகன் அலெக்ஸையும் தனது வசீகர சக்தியால் கட்டுப்படுத்தி - அரச விவகாரங்களில் தலையிட்டு-

மன்னர் ஆட்சியில் மக்களுக்கு நம்பிக்கையின்மையை ஏற்படுத்தி - ரஷ்ய ரோமனோவ் அரச வம்சத்தின் அழிவிற்கே வழிகோலியவர் என்ற குற்றச்சாட்டு ரஸ்புட்டின் பெயரில் உண்டு.

ரஷ்ய வைதிக கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ரஸ்புட்டின் ஓர் ஆன்மீக ரிஷியாக - கபட சந்நியாசியாக - நோய் குணப்படுத்தும் சொஸ்தராக - பாலியல் பித்தராக - தீர்க்கதரிசனம் மிக்க ஞானியாக - பல தரங்களில் மதிப்பிடப்படுகிறார். இந்த ரஸ்புட்டினின் வாழ்க்கையில் இடம்பெற்ற நிகழ்வுகளை மையப்படுத்தி சுவாரஸ்யம் மிக்கதொரு நாவலை உருவாக்கித் தந்திருக்கிறார் நண்பர் செல்வராஜா.

கிரகொரி யெபினோவிச் ரஸ்புட்டின் 1869ஆம் ஆண்டு ஜனவரி 10ஆந் திகதி தூரா நதிக்கரையில் அமைந்திருந்த பொக்ரோஸ்கோவ் என்னும் கிராமத்தில் பிறந்தார். அவருக்கு டிமிட்றி என்ற பெயர் கொண்ட ஒரு மூத்த சகோதரனும், மரியா என்ற சகோதரியும் இருந்தார்கள். வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட மரியா ஒருநாள் ஆற்றில் குளித்துக்கொண்டிருக்கும்போது ஏற்பட்ட வலிப்பினால் நீரில் மூழ்கி இறந்துபோனார். ஒருநாள் ரஸ்புட்டின் தனது தமையனோடு விளையாடிக் கொண்டிருந்த சமயம் டிமிட்றி ஒரு குளத்தில் விழுந்துவிட்டான். அவனைக் காப்பாற்ற ரஸ்புட்டின் குளத்தில் குதித்தான். அவ்வழியால் சென்ற ஒருவர் இருவரையும் வெளியே இழுத்து எடுத்தார். இந்தச் சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட நிமோனியா காய்ச்சலால் டிமிட்றி உயிரிழந்தான். இந்த இரு நிகழ்வுகளும் ரஸ்புட்டினை வெகுவாகப் பாதித்திருந்தன. பின்னாட்களில் தனது பிள்ளைகள் இருவருக்கு மரியா, டிமிட்றி ஆகிய பெயர்களை ரஸ்புட்டின் கொடுத்திருந்தார்.

ரஸ்புட்டினைச் சூழ்ந்திருக்கும் தொல் கதைகள் (Myths) இளவயதிலிருந்தே அவரிடம் அமானுஷ்யமான ஆற்றல்கள் அமைந்திருந்தாகக் கூறுகின்றன. ஒரு சமயம் அவரது தந்தையின்

குதிரை ஒன்று களவாடப்பட்டபோது அதனைக் களவாடிய திருடனை தனது ஞான திருஷ்டியினால் அவர் கண்டறிந்ததாகக் கூறப்படுகின்றது.

அவரது பதினெட்டாவது வயதில் ரஸ்புட்டின் "வேர்க்கத்தேவ்" என்ற கிறிஸ்தவ மடாலயத்தில் சேர்ந்துகொண்டார். அங்கிருந்த சமயம் கன்னி மேரி அவருக்குக் காட்சி கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. பின்னர் அவர் சமூகத்தால் தடைசெய்யப்பட்ட "கைலிஸ்தி கிறிஸ்தவ" ஸ்தாபனத்தில் சேர்ந்துகொண்டார். சமயச் சம்பிரதாயங்களையும், பாலியல் பரவசத்தையும் ஒன்றிணைக்கும் சடங்குகளை இவர்கள் மேற்கொண்டார்கள். இச்சடங்குகளில் ரஸ்புட்டின் அதீத நம்பிக்கை கொண்டவர் என்கின்ற அபிப்பிராயம் அவரது இறுதிக்காலம் வரை நிலைத்திருந்தது. மடாலயத்தை விட்டு வெளிவந்த பின்னர் மக்கரிவ் என்ற மதகுருவின் சிஷ்யராகப் பணியாற்றினார்.

1889இல் ரஸ்புட்டினிற்கும் பிரஸ்கோவியாவியா என்ற பெண்ணிற்கும் திருமணம் நடைபெற்றது. அவர்களுக்கு டிமிட்றி, வர்யா, மரியா ஆகிய மூன்ற பிள்ளைகள் பிறந்தார்கள். 1901 இல் ஜெருசலம், கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு மத யாத்திரைகளை மேற்கொண்டார். 1903 இல் சென்ற்பீட்டஸ்பேர்க் திரும்பிய ரஸ்புட்டின் சர்வரோக நிவாரண ஆற்றலும், தீர்க்க தரிசனமும் கொண்ட ஒரு மத ஞானியாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

ரஷ்ய அரச குடும்பத்து ஆண்கள் "ஹீமோபிலியா" எனப்படும் இரத்தத்தை உறையவிடாமல் செய்யும் பரம்பரை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். ஜார் மன்னரின் மகன் அலெக்ஸ் இந்த நோயினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தான். இந்த நோயைக் குணப்படுத்தும் ஆற்றல் ரஸ்புட்டினிடம் உள்ளது எனக் கேள்விப்பட்ட ஜார் மன்னரின் மகிஷி அலெக்ஸாண்டிரா தனது சினேகிதி ஒருத்தி மூலம் ரஸ்புட்டினை அரண்மனைக்கு வரவழைத்தார். அவரது வருகையால் அலெக்ஸ்ஸியின் நோயில் முன்னேற்றம் காணப்பட்டது. ஒவ்வொரு

தடவையும் அலெக்ஸுக்கு உடலுக்கு உள்ளேயும் வெளியேயும் இரத்தப்பெருக்கு ஏற்படும் சமயங்களில் ரஸ்புட்டின் வரவழைக்கப்பட்டார். ரஸ்புட்டினின் மருத்துவ ஆற்றலைக்காட்டிலும், அங்கலாய்ப்பைக் குறைக்கும் ஆறுதல் பேச்சுக்களே (Counselling) நோயைக் குணமாக்க உதவியதாக நம்பப்படுகிறது.

காலப்போக்கில் ஜார் மன்னரும், ராணி அலெக்ஸாண்டிராவும் ரஸ்புட்டினைத் தங்கள் நண்பராகவும், குடும்ப மதத்தலைவராகவும் ஏற்றுக்கொண்டார்கள். சிறிது சிறிதாக ராணி அலெக்ஸாண்டிரா ரஸ்புட்டினின் செல்வாக்கிற்கு உட்பட்டார். ரஸ்புட்டின் அரண்மனையில் மன்ற அதிகாரிகளில் (Court Officials) ஒருவராக நியமிக்கப்பட்டார். அதன்பின் அரச நிர்வாகங்களில் தலையிட ஆரம்பித்தார்.

அரண்மனையில் இருந்த காலத்தில் அவரைச் சமூகத்தின் பல உயர் மட்டப் பெண்கள் சூழ்ந்திருந்தார்கள். அக்காலத்தில் ரஸ்புட்டினிடம் மது உபயோகமும், மங்கை உபயோகமும் உச்சநிலையை அடைந் திருந்தன. பாலியல் பரவசத்தின் மூலம் பக்திநிலை அடைவது அவரது மத்திய தத்துவமாக (Central doctrine) இருந்தது என ஒரு வரலாற்றாசிரியர் குறிப்பிடுகிறார்.

முதலாம் உலக யுத்தத்தின் சமயம், ஜார் மன்னர் யுத்த முன்றலுக்குச் சென்றிருந்த நேரம் அரண்மனையில் ரஸ்புட்டினின் ஆளுமை அதிகரித்திருந்தது. போர்முனையில் ரஷ்ய வீரர்கள் உயிர்த்தியாகம் செய்திருந்த நேரம், ஜார் அரண்மனையில் பாலியல் களியாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ரஷ்ய டூமாவில் (பாராளுமன்றம்) ரஸ்புட்டினிற்கு எதிராகக் குரல்கள் எழுப்பப்பட்டன. ரஷ்ய வைதிக கிறிஸ்தவ பாதிரிமார்கள் ரஸ்புட்டினின் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்தார்கள். மக்கள் மத்தியில் ரஸ்புட்டினிடம் வெறுப்பு அதிகமாகியது.

ரஷ்ய அரச வம்சத்தின் அபகீர்த்திக்கு ரஸ்புட்டினே மூலகாரணம் எனக்கருதிய பிலிக்ஸ் யுஸ்போவ் என்ற இளவரசன், தன்னைச்சுற்றி ஒரு பிரபுக்கள் கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு ரஸ்புட்டினைத் தீர்த்துக் கட்ட முடிவுசெய்தான். 1916 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16ஆந் தேதி ரஸ்புட்டின் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

ரஸ்புட்டினின் மகள் மரியா (1898 - 1977) ரஷ்யப் புரட்சிக் காலத்தில் பிரான்ஸுக்கு நாடு பெயர்ந்து பின்னர் அமெரிக்கா சென்று குடியேறினார். அவர் விட்டுச்சென்ற குறிப்புக்களில் தனது தந்தையார் சமூக சிந்தனையுள்ள ஒரு மதஞானி என்றும், அவரை இழிவுபடுத்தும் கதைகள் அவரது எதிரிகளால் கூறப்பட்ட கட்டுக்கதைகள் என்றும் கூறிச்சென்றிருக்கிறார்.

ரஸ்புட்டினின் இந்த வரலாற்றைப் பின்னணியாகக்கொண்டு சிறப்பான, சிந்திக்கவைக்கும் ஒரு நாவலை உருவாக்கித் தந்திருக் கின்றார் நண்பர் செல்வராஜா. முக்கியமான ஒரு நாவலுக்கு வேண்டிய கதையம்சம், பாத்திர அமைப்புக்கள், குணசித்திர வார்ப்புக்கள் அனைத்தும் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

அன்றைய ரஷ்ய நாட்டின் வாழ்வியல் நாவலின் பின்னணியாக அமைகிறது. பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட கண்கவர் முத்துக்களும், தங்கங்களும், வைரங்களும், வைடூரியங்களும் தம்மை அலங்கரிக்கப் பவனிவரும் பிரபுக்களும், நாகரிக மணிகளும் ஒருபக்கம் - ஒருவேளை உணவிற்கே வழியின்றி கந்தல் உடைகளை அணிந்துகொண்டு கீழ்த்தர வாழ்க்கை வாழும் அடிமட்ட மக்கள் மறுபக்கம் - என துல்லியமாக படம் பிடித்துக் காட்டுகிறார் நண்பர்.

ஜாதி வர்க்கத் திமிர், ஏழை - பணக்காரப் பாகுபாடு, அரசியல், மதம், காதல், கம்யூனிசம், புரட்சி, வர்க்கப்பலி, தேசிய மெத்தனம் எனப் பல தளங்களை இந்த நாவல் தொட்டுச்செல்கின்றது. ஆனால் இவை எதுவுமே நாவலின் மத்திய தளமாக (Central theme) உருவாக்கப்படவில்லை. அடித்தளமாக ஒலிப்பது ரஸ்புட்டின் என்ற மையப்பாத்திரம் மட்டுமே.

நண்பர் செல்வராஜாவின் தமிழ் நடை ஆரவாரமாகக் கரைபுரண்டோடும் காட்டாறு அல்ல. அமைதியாகச் சலசலத்தோடும் தேனருவி. அவரது அழகான நடையில் நமக்குப் பழக்கமான மரபுவழி வாழ்வியலுக்கும், வாழ்க்கை முறைகளுக்கும் பரிச்சியமில்லாத வேறொரு நாட்டு மக்களின் வாழ்வியல் பேதங்களும், வாழ்க்கைப் பண்புகளும், வாழ்க்கைப் பெறுமானங்களும் இங்கே படம் பிடித்துக் காட்டப்படு கின்றன.

இந்த வரலாற்று நவீனம் -
சுவாரஸ்யமான ஓர் அனுபவம்.

டாக்டர் சிவ.தியாகராஜா
B.Sc., M.B.B.S., Ph.D.

●●

ரஸ்புட்டின் நாவல் -
ஒரு கருத்தோட்டம்



நுணாவிலூர்
கா.விசயரத்தினம்

ஆற்றிலும், குளத்திலும், சேற்றிலும், தோட்ட மண்ணிலும், மரத்திலும், செடி கொடியிலும், பனையிலும், தென்னையிலும், எங்கும் எதிலும், செந்தமிழ் செழிக்கும் பூமி யாழ்ப்பாணம். அந்த மண்ணில் துளிர்த்து வளர்ந்த உரும்பையூர் எனும் பூங்காவில் மலர்ந்தெழுந்த ஒரு மலர்தான் திரு. மு.து. செல்வராசா அவர்கள். அந்த வாடாமலர் இன்று புகழ் பூத்த பிரித்தானியாவில் நறுமணம் வீசி நிற்கின்றது. அவர் ஓர் பொறியில் துறைப் பட்டதாரியாய், கவிஞராய், எழுத்தாளராய், ஆய்வாளராய், தமிழ்ப் பாடசாலைத் தலைமை ஆசிரியராய், நூல் ஆசிரியர்ராய், பல முகங்களுடன் தோற்றமளிக்கின்றார். எமது ஈலாப் மாதாந்தப் பட்டறைகளுக்கு வந்த காலத்தில் சமர்ப்பித்த ஆக்கங்கள் எமது 'பூந்துணர்-2010' என்ற நூலில் இடம் பெற்றுள்ளன. அவர் தமிழில் எழுதிய 'ரஸ்புட்டின்' எனும் ருசிய நாட்டின் சரித்திர நாவலுடன் பூந்தோட்டத்துள் நுழைகின்றேன்.

இந்நாவலின் ஒரு சிறிய சுருக்கம் இவை. 'ருசிய நாட்டின் பொக்ரொவ்ஸ்கோ (Pokrovskoe) என்ற ஒரு சிறிய கிராமத்தில் எவ்விம் அக்கோலிவிச் ரஸ்புட்டின் (Efim Akolevich Rasputin) என்பவருக்கும், அவர் மனைவி அனா எக்றோவ்னா (Anna Egrovna) என்பவருக்கும், 10.01.1869 அன்று கிரகரி எவிமெவிச் ரஸ்புட்டின் (Gregory Efimovich Rasputin) என்ற இரண்டாவது ஆண் குழந்தை பிறந்தது. இவர்தான் இந்நாவலின் கதாநாயகன். இவருக்கு ஞானஸ்நானம் செய்து 'கடவுளின் சேவகன்' என்று பிரகடனப்படுத்தினர். இவர் வளர வளர அதீத சக்திகள் பெருகிக்கொண்டன. இவரை ஒரு தெய்வக் குழந்தையாகவே மக்கள் கருதினர். அவரிடமும் அதிக ஆற்றல் இருந்தது. அவர் ஆற்றும் உபதேசங்கள் மக்களைக் கவர்ந்தன. அவர் திருமணம் செய்து பிள்ளைகளும் இருக்கின்றனர். அவர் புகழ் நாடெங்கும் பரவியது.

இவர் தன் தெய்வ அருளால் நோயுற்ற மக்களை குணப்படுத்தி வந்தார். இவரை நாடி மக்கள் கூட்டம் பெருகியது. ருசிய நாட்டை ஆண்டுகொண்டிருந்த பேரரசர், பேரரசியின் மகன் கடுஞ் சுகவீனமுற்று அரச வைத்தியர்களால் கைவிடப்பட்ட நிலையில் ரஸ்புட்டின் அரண்மனைக்கு வரவழைக்கப்பட்டு அவரின் பிரார்த்தனையால் இளவரசன் சுகமடைந்தான். இதனால் ரஸ்புட்டின் புகழ் மேலும் உயர்ந்தது. அவரை அரண்மனையில் தங்கவைக்கப்பட்டு அவரின் ஆலோசனைகளும் பெறப்பட்டு வந்தது. அவரைப் பேரரசரும் பேரரசியும் இராச மரியாதை கொடுத்து மந்திரி நிலைக்குக் கொண்டு வந்தனர். அவர் சொல் தெய்வ வாக்காகியது.

அதே நேரம் இவரை வெறுப்போரும் அரண்மனையிலும், மக்கள் மத்தியிலும் கூடியது. யேர்மன் துருப்புகளின் தாக்குதலால் கிட்டத்தட்ட ஒரு கோடி ருசிய இராணுவம் பலியானது. மக்கள் அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். இளவரசர் ஒருவரின் சதி வேலையால் 16.12.1916

அன்று ரஸ்புட்டின் விசம் கலந்த பழரசம் கொடுத்தும், துப்பாக்கியால் சுட்டும் கொன்று உடலை நதி அடியில் மறைத்து வைக்க, அதைப் பொலிசார் தேடி எடுத்து, தேவாலய வளாகத்தில் 21.12.1916 அன்று அடக்கம் செய்து வைத்தனர். பேரரசு நிலை குலைந்தது. பேரரசர் முடி துறந்தார். பேரரசர், பேரரசி, பிள்ளைகள், அரண்மனையிலுள்ளோர் அனைவரும் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர். மக்கள் அரசு தோன்றியது. இவ்வண்ணம் நாவல் பின்னிப் பிணைந்து சென்று முடிவடைகின்றது.'

இனி, இந்நாவல் கூறும் செய்திகளையும், அது தரும் பாடங்களையும் சற்றுக் காண்போம்.

ருசிய நாட்டில் உயர்ந்த மலைகள், ஆழமான ஏரிகள், பாய்ந்தோடும் ஆறுகள், பல மாதங்கள் - 44 பாகை சென்டிகிறேட் பூச்சியத்துக்குக் கீழ் உறைந்த பனிக்கட்டிக் கால நிலை, அரசியலில் இடம் பெற்ற லெனின், ஸ்டாலின் போன்றோர், கூட்டுப் பண்ணை முறை, தொழிற்புரட்சி, விஞ்ஞானம், தொழில் நுட்பம், விண்வெளி ஆகிய சாதனைகள், இராச பரம்பரை, முதல்முதல் மனிதனை விண்வெளிக்கு அனுப்பிய சாதனை, உலகில் முன்னோடி நாடு என்ற பெருமை ஆகியவை பேசப்படுவதையும் காண்கின்றோம்.

எரிநட்சத்திரம் ஒன்று வானில் தோன்றிச் சிறிய கிராமமான பொக்ரொவ்ஸ்கோவுக்கு நகர்ந்து செல்ல, மக்கள் எல்லாரும் திகைத்து நின்று பார்க்கையில், ரஸ்புட்டின் என்ற குழந்தை பிறந்தான். எரிநட்சத்திரம் வானில் தோன்றுவது உலகில் முக்கிய நிகழ்வு நடைபெறும் என்று இறை பக்தி கொண்டோர் நம்பினர். இக்குழந்தையைத் தெய்வக் குழந்தையென்று கருதினர். ரஸ்புட்டின் இரண்டரை வயதில்தான் பேசத் தொடங்கினான். திமிறி நிற்கும் குதிரைகள், பால் கறக்கும் பொழுது அடம் பிடிக்கும் பசுக்கள் - இவன் அருகில் சென்றதும் அடங்கிவிடும்.

இவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. பாடசாலை போவதில்லை. காட்டுக்குப் போவான், புல்லின்மேல் படுப்பான். தேவாலயம் செல்வான். பைபிள் வாசகங்களை நினைவில் வைத்திருப்பான். ஊர் மக்களுக்கு உதவுவான்.

ரஸ்புட்டின் இரக்கங் கொண்டவன். ஓர் இளம் விதவைப் பெண் இரவு தங்க இடமும், உணவும் கேட்டு வந்த ஒருவருக்கு உணவளித்தபின், தன் உடலையும் தானாகவே அர்ப்பணித்தாள். ஊரிலுள்ள பெரியவர்கள் அவளுக்குத் தண்டனை கொடுத்தனர். அவளை நிர்வாணமாக்கி, கைகள் இரண்டையும் கயிற்றால் கட்டி, அதன் மறு முனையை ஒரு குதிரையில் கட்டி, ஊர் நடுவே இழுத்துச் சென்றார்கள். மக்கள் கூடி நின்று அவளைக் கம்பால் அடித்தும், கல்லால் எறிந்தும் வதைக்க, அவள் உதிரம் கொட்ட அலறிக் கொண்டாள். அவளுக்கு உதவ யாரும் வரவில்லை. அவள் அறிவு மயங்கிய நிலையில் ஊரின் எல்லையில் விட்டுச் சென்றனர். ரஸ்புட்டின் இதை அறிந்து குற்றுயிராய்க் கிடந்தவளை குடிசை ஒன்றுக்குக் கொண்டு சென்று கைக்கட்டை அவிழ்த்து காயங்களைத் துடைத்துத் தன் கை வைத்துக் கடவுளை வேண்டிக் குணப்படுத்தி அவள் உயிரைக் காப்பாற்றினார்.

ரஸ்புட்டின் திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்றபின், மனைவியின் சம்மதத்துடன் துறவியாகச் சேர்ந்து பல இடங்களுக்குச் சென்று கிலிஸ்டி என்ற மதப்பிரிவிலிருந்தும் கொப்பொஸ்ரி என்ற மதப்பிரிவிலிருந்தும் பொறுக்கி எடுத்த கொள்கைகளோடு தனது புதிய கொள்கைகளையும் சேர்த்து அதனை மக்களுக்குப் போதித்தார். ஆடை நீக்கிப் பிறந்த மேனியுடன் பிரார்த்தனை செய்யும் முறையினையும் கொண்டு வந்தார். உடல் இன்பத்திலும் உற்சாகமான பிரார்த்தனை களிலும் புதிய புதிய அனுபவங்களை அனுபவிக்கத் துடித்தார்.

சிற்றின்ப வேட்கையால் சரிவரத் தியானிக்க முடியாதென்றும், அதைத் தணித்து விட்டால் தியானத்தில் பெரும் நிறைவைக் காணலாமென்று கூறியும் அதன்படி நடந்தும் காட்டினார் ரஸ்புட்டின். இளவயதான மூன்று அழகிகள் ஆடையின்றி நீர் நிலையில் நீராடியதைக் கண்ட ரஸ்புட்டின் காம ஆசை ஊற்றெடுக்க ஆடைகளைக் களைந்து அவர்களை நாடி நீரில் இறங்கி அவர்களுடன் இணைந்து நீராட அவர்களும் இவரின் காம வேட்கையைத் தணித்து வைத்தனர். அதன்பின், தான் மீண்டும் பரிசுத்தமாகி விட்டதாக எண்ணிக் கன்னி மேரிமாதாவைத் தரிசித்தார்.

அன்று அரச குடும்பத்தில் ஓர் ஆண்தான் எப்பொழுதும் அரசனாகி அரசாள முடியும் என்றும் பெண்கள் முடியுரிமை பெறமுடியாதென்ற சட்டம் இருந்துள்ளது என்ற செய்தியையும் காண்கின்றோம்.

துறவிகள் நீண்ட பயணம் செய்யும் பொழுது வரும் வழியில் நன்றாக இருட்டி விட்டால் குடிசையொன்றின் கதவைத்தட்டி அன்றிரவு தங்க இடமும், உணவும் கேட்கும் முறையொன்று நடைமுறையில் இருந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

அன்று ஆண் பெண் இரு பாலாரும் ஆடை களைந்து பிறந்த மேனியராய் நின்று காதல் புரிதல், இச்சை தீர்த்தல், மது அருந்தல், மாதர்களுடன் நடனமாடல் போன்றன சகசமான நிகழ்வுகள் என்பதையும் காண்கின்றோம். ரஸ்புட்டினும் இவற்றில் ஈடுபட்டிருந்தார். இவர் ஆசை நாயகிகளையும் வைத்திருந்தார். இதனால் அவரின் புகழ் மக்கள் மத்தியில் சரியத் தொடங்கியது.

ரஸ்புட்டினை சுயநலக்காரன், குடிகாரன், போலிச் சாமியார், காம இராட்சசன், பெண்ணாசை பிடித்தவன் என்று மக்கள் தூற்றினர். அவரைத் தீர்த்துக்கட்டப் பல சதித்திட்டங்கள் எழுந்தும் அவர்

இவற்றிலிருந்து தப்பிவிட்டார். ஆனால், ஈற்றில் நடந்த ஒரு சதித்திட்டத்தால் ரஸ்புட்டினை நஞ்சு கொடுத்தும், துப்பாக்கிகளால் சுட்டும் கொலை செய்யப்பட்டார்.

பேரரசரும், பேரரசியும் தாம் எண்ணியபடி நாட்டை ஆண்டனர். தமது சுயநலனை, தேவைகளைப் பூர்த்தி செய்தனர். மக்கள் குரல் காற்றில் மாத்திரம் பறந்தது. அரசுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். அரசு நிலை குலைந்தது. முடி சரிந்தது. பேரரசர் பதவி துறந்தார். அரச குடும்பத்தினர் அனைவரும் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொலை செய்யப்பட்டுச் சாதாரண குழியில் புதைக்கப் பட்டனர்.

இவ்வண்ணம் இச்சரித்திர நாவல் பல பல மறக்க முடியாத பாத்திரங்களுடன் பின்னிப் பிணைந்து, அறம் பல கூறி, வீறு நடை போட்டு, 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்ற உலகம் முழுவதற்கும் பொதுவான அறவுரைகள் பல கூறி நிற்கின்றது.

இவ்வாறான ஒரு சரித்திர நாவலைச் செந்தமிழில் செழிப்புற அமைத்துத் தந்த நூல் ஆசிரியர் திரு. செல்வராசா அவர்களைப் பாராட்டித்தான் ஆகவேண்டும். இன்னும் அவர் பல நூல்களைப் பண்ண வேண்டுமென எல்லாம் வல்ல இறையை வேண்டி நிற்போம்.

நுணாவிலூர் கா.விசயரத்தினம் MAAT,
இணைப்பாளர்,
ஈழவர் இலக்கியச் சங்கம்,
பிரித்தானியா (ELAB).

●●

என்னுரை

எனக்கு ஏதாவது நல்ல புத்தகங்களைக் கண்டால் அவற்றை வாங்கவேண்டும், படிக்கவேண்டும், வீட்டில் சேர்த்து வைத்திருக்கவேண்டும் என்ற ஆசை இளவயதிலிருந்தே இருக்கின்றது. இப்படியாக புத்தகங்களைச் சேர்த்தபோதுதான் ரஸ்புட்டின் என்ற ஆங்கில நாவல் என் கைகளில் அகப்பட்டது. நான் எனது பதினெட்டாவது வயதில் தாயகத்தில் இருந்தபோது இந்த ரஸ்புட்டின் நாவலைப் படித்திருக்கிறேன். அன்றிலிருந்து அந்த நாவலில் என்னையறியாமலே இதன்மேல் ஒரு பிடிப்பு இருந்துகொண்டே வந்தது.

இலண்டனுக்கு வந்து படித்துவிட்டுச் சிறிதுகாலம் நைஜீரியாவில் வேலை செய்தேன். அப்போது மீண்டும் ஒரு ரஸ்புட்டின் என்ற ஆங்கில நாவல் கைகளில் கிடைத்தது. அதனை நான் எப்போதும் என்னுடனே வைத்திருந்தேன். எனது முதலாவது புத்தகங்களான 'இலண்டனில் நாரதர், நினைவில் ஒரு நிலா' என்ற நூல்கள் வெளியீட்டின் பின்னர் ஒருநாள் டாக்டர் இந்திரகுமார் தொலைபேசியில் அழைத்து 'ரஸ்புட்டின் என்ற நாவலைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீரா?' என்று கேட்டார். 'எனக்கு அதனை தமிழில் மொழிபெயர்த்து ஒரு மர்மநாவல் வடிவில் எழுத ஆசை. ஆனால் நேரமின்மையால் முடியவில்லை, என்னால் முடியுமா?' என்று கேட்டார். நான் உடனேயே 'ஆம்' என்று கூறி அதுவரை அத்துடன் எனக்கிருந்த தொடர்பினையும் எடுத்துக்கூறினேன். இதனை 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' என்று கூறுவதா அல்லது 'ஊளி நாயும் வர உறியும் அறுந்து வீழ்ந்தது' என்ற பழமொழிபோல இருக்கிறது என்று கூறுவதா? தெரியவில்லை.

இதனை 1999 இல் ஆரம்பித்து 2005 இல்தான் நிறைவேற்றினேன். 2011 இல் தான புத்தகமாக்குகிறேன். எப்படியிருந்தபோதிலும் இதனை எழுதி முடித்ததில் ஒருவித மனத்திருப்தி ஏற்படுகின்றது.

'ரஸ்புட்டின்' என்றால் தீயொழுக்கம் நிறைந்த, கட்டுக்கடங்காத சிற்றின்ப வேட்கையுடைய, கொடிய நோக்கம் கொண்ட, ஊழல் நிறைந்தவர் என்றும் பொருள்படும். ரஸ்புட்டினுடைய வாழ்க்கை ரஷ்ய இராய்ச்சியத்தின் சரித்திரத்திலே ஒரு சிறிய இடத்தைத்தான் கொண்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. அவர் பிறந்த வருடம், மாதம், திகதி என்பன அண்மையில்தான் தெரியவந்துள்ளன. இளமைப் பிராயத்து வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. அவரது இறுதிக்கால வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகள் ரஷ்ய அன்றைய தலைநகரான 'சென்ட் பீட்டர்ஸ்பர்க்' (St.Petersburg)இல் இருந்த போதிலும் அவை முற்றாக மொழிபெயர்க்கப்படவும் இல்லை.

ரஸ்புட்டின் ஒரு மிதமிஞ்சிய குடிகாரனா? பண்பாடற்ற முரடனா? பதவி ஆசை பிடித்த அரக்கனா? முதலாம் உலகமகா யுத்தத்தின்போது தனியொருவனாக நின்று ரஷ்ய அரசிற்கு வழிகாட்டியவனா? அல்லது ஆண்டவன் அருள்பெற்ற ஒரு சாதாரண கிராமத்தவனை எதிரிகள் கெட்ட பெயர் அடையச் செய்தனரா? எப்படியிருந்தபோதிலும் ரஷ்ய சாம்ராஜ்யத்தின் இறுதிப்பகுதியில் இருந்தவர்கள் எல்லோரையும்விட இப்போதும் மற்றவர்களை மிகவும் கவர்ந்திழுக்கக் கூடியவர் ரஸ்புட்டின் ஒருவர்தான்.

ரஸ்புட்டினின் வாழ்க்கை இரு மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறது. முற்றுந்துறந்த ஞானியும், பாவச்செயல்களைப் புரிகின்ற பாவியும் இரண்டறக்கலந்த ஒருவர் ஆவர். ரஸ்புட்டின் அவரது குடும்பப்பெயர். முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல் இவரது துர்நடத்தை களால் ஊரார் வழங்கிய பட்டப்பெயர் அல்ல, இவர் ஒரு சந்நியாசியும்

அல்ல. இவர் எந்தவொரு மதத்துடனும் ஏற்பை உடையவரல்லர். தனியொருவராக நின்று ரஷ்ய சாம்ராஜ்யத்தை அழித்த 'சித்த சுவாதீனமுற்ற சந்நியாசி' என்றுதான் இதுவரை இவரை பெரும்பாலான மக்கள் ஞாபகம் வைத்திருக்கின்றார்கள்.

இந்த நாவலை எழுதிக்கொண்டிருந்தபோது நடந்த ஒருசில நிகழ்வுகளையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ரஸ்புட்டின் கொலையைப் பற்றிய பகுதியை எழுத எனக்கு நான்கு நாட்கள் வரை சென்றது. ஒரு நாள் ஒரு பயங்கர கனவு. அதிலே ரஸ்புட்டின் போல ஒருவர் வந்து என்னைப் பயமுறுத்துவதுபோல் இருந்தது.

அடுத்தடுத்து எமக்குத் தெரிந்தவர்கள் வீட்டிலும், நெருங்கிய உறவினர் வீட்டிலும் ஒருசில நாட்களுக்குள்ளேயே இருவர் இறந்து விட்டதாகவும் செய்திகள் வந்தன.

இறுதியாக இலங்கையிலும், தமிழ்நாட்டிலும், இந்தோனேசிய நாடுகளிலும் உலகத்தில் என்றுமே ஏற்பட்டிருக்காத கடற்கோள் அனர்த்தம் ஏற்பட்டதும் (Tsunamy) இந்த நாட்களிலேதான் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இவற்றிற்கும் எனது எழுத்துக்கும் எதுவித தொடர்புகளும் இல்லாமல் யதேச்சையாக நிகழ்ந்த சம்பவங்களாகவும் (coincidence) இருந்திருக்கலாம். இருந்தாலும் எனக்கு அவை அசாதாரணமான நிகழ்வுகள்போலவே இருந்தன. அதனால்தான் இங்கே குறிப்பிடுகின்றேன்.

எத்தனையோ தமிழர்களுடைய சரித்திரங்கள் இருக்கும்போது ஏன் உலகத்தின் இன்னொரு பகுதியில் நடந்த இந்தச் சரித்திரத்தை எழுதி எம் தமிழ் மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று பலர் கேட்கலாம். இவையெல்லாம் எப்போதோ நடந்து முடிந்துவிட்ட சம்பவங்கள் என்றாலும், இப்படியானவர்கள் இப்போதும் வாழ்ந்துகொண்டுதான்

இருக்கிறார்கள். தமது சுயநலத்திற்காக தமது நாட்டையும், எத்தனையோ கோடிக்கணக்கான மக்களின் வாழ்வை நாசமாக்கிக்கொண்டே வருகிறார்கள். சமூக அளவிலும் சரி, தேசிய அளவிலும் சரி, இப்படியான வர்களை இனம் கண்டு அப்படியானவர்களின் ஆதிக்கங்களை ஆரம்பத் திலேயே கிள்ளியெறிந்து விடவேண்டும். அருமையாகக் கிடைத்த மனிதவாழ்வை மற்றையவர்களுக்கும் பயன்படக்கூடியதாக வாழவேண்டும் என்பதே எனது அவா. அதுதான் இந்த நூலை எழுதத்தூண்டியது. இதனைப் படிப்பதனால் ஒரு சிலருக்காவது நன்மை கிடைத்தால் நான் மகிழ்வேன்.

இந்த நாவலை எழுதத் தூண்டியதுடன் முன்னுரை வழங்கிய அமரர் டாக்டர் திரு. இந்திர குமார் அவர்களுக்கு எனது முதல் நன்றியைக் கூறிக்கொண்டு இந்நூலை அவருக்கே சமர்ப்பணம் ஆக்குகிறேன். வீரகேசரி வார இதழ் ஆசிரியர் திரு. தேவராஜன் இதனை நான் எழுத ஆரம்பித்தபோதே எழுதி முடித்ததும் தமக்கு கட்டாயம் தரவேண்டும் என்றும் கேட்டிருந்தார். அதன்படி நான் எழுதி முடித்ததும் அவரிம் சேர்ப்பித்தேன். அவர்களும் அதனை விரும்பிய காரணத்தால் வீரகேசரி வாரப்பத்திரிகையில் சுமார் 51 வாரங்களாகத் தொடர்ந்து பிரசுரித்தார்கள். அவர்களுக்கும் எனது பிரத்தியேகமான நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அத்துடன் ஆசியுரை வழங்கிய டாக்டர் தியாகராஜா, நுணாவிலூர் கா.விசயரத்தினம் ஆகியோருக்கும் எனது இதயங்கனிந்த நன்றி. எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியிலும் இந்நூலை எழுதத் தூண்டிய அனைவருக்கும் எனது நன்றி. இதனைச் சிறப்பாக வெளியிடும் மணிமேகலைப் பிரசுரத்தாருக்கும், முக்கியமாக நண்பர் திரு. ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அன்புடன்

உரும்பிராய்

எம்.ரி.செல்வராஜா



1

விண்ணிலே எரிநட்சத்திரம் மண்ணிலே ரஸ்புட்டின்

அகிலமெங்கும் பரந்திருக்கின்ற நாடுகளிலே அதிகளவு நிலப்பரப்பைக் கொண்டிருப்பது ரஷ்யா. அதாவது கிட்டத்தட்ட பூமியின் ஆறிலொரு பகுதியைத் தன்பால் கொண்டுள்ளது. ஐரோப்பாவிலேயே அதி உயர்ந்த மலையையும், அதி ஆழமான ஏரியையும் தன்னுள் கொண்டு, தன் ஒரு பகுதியை ஆசியாவிலும், மறுபகுதியை ஐரோப்பா விலும் கொண்டிருக்கும் சிறப்பும் ரஷ்யாவிற்குத்தான் உண்டு. உறைபனியின் நிலை பூச்சியத்திற்குக்கீழ், -44 பாகை சென்டிகிரேட் வரை செல்லக்கூடியது. பாய்ந்தோடும் ஆறுகள்கூட பல மாதங்கள் அசையாது பனிக்கட்டிகளாக உறைந்துபோகும் காலநிலையையும் கொண்டுள்ளது.

அரசியல் சாசனத்திலே அழியாது இடம்பெற்றுவிட்ட லெனினும், ஸ்டாலினும் பிறந்த நாடு. இவர்கள் பெயர்கள் எல்லோர் வாயில் இன்றும் முணுமுணுக்கும் பெயர்களாகியும் விட்டன. பொதுவுடமைத்

தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, அகிலமெங்கும் அதனைப் பரப்பி, கூட்டுப்பண்ணை முறையை, உருவாக்கியதோடு தொழிற் புரட்சியையும் ஏற்படுத்தியதாகச் சரித்திரம் கூறுகின்றது.

பூவுலகில் விஞ்ஞானம், தொழில்நுட்பத்தில் சாதனைகளை ஏற்படுத்தியது மட்டுல்லாமல், விண்வெளியிலும் எண்ணற்ற சாதனை களைப் படைத்திருக்கின்றார்கள். உலகில் முதன்முதலில் மனிதனை விண்வெளியில் வலம்வர அனுப்பி, மீண்டும் மண்ணுக்கு வரவழைத்து தொழில்நுட்பத்தில் சாதனை படைத்ததும் இந்த நாடுதான்.

மனிதவர்க்கம் தோன்றிய நாளிலிருந்து அநேகமாக எல்லா நாடுகளும் தமக்கென ஒரு சரித்திரத்தைக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவை எல்லாம் எல்லோர் மனங்களிலும் நிற்பதில்லை. ஆனால் இந்நாட்டின் சரித்திரத்தின் ஒருபகுதி அதனைப் படிப்போரின் கண்களை அகல விரியச் செய்யும். படித்தவற்றைக் கிரகிக்க முடியாமல் கதிகலங்கவும் செய்யும். கேட்போர் தமது காதுகளில் கேட்டவற்றை நம்பமுடியாமல் திகைப்பார்கள். இப்படியும் நடந்ததா? என்று தம்மைத்தாமே கேள்விகள் கேட்கவும் செய்வார்கள்.

உலகிலுள்ள வல்லரசுகளிலே ஒன்றாக விளங்கிய ரஷ்யாவின் சரித்திரத்தின் பழைய ஏடுகள் சிலவற்றைப் புரட்டிப் பார்க்கிறோம். அதிலே ஒருசில பகுதிகள் யாராலுமே நம்பமுடியாத ஒன்று. ஆனால் எல்லாமே நடந்து முடிந்துவிட்ட உண்மைகள். முடிசூடிய மன்னராட்சி நடந்து கொண்டிருந்த காலம். இராஜபரம்பரையின் (ஜார்- Tsar) செல்வாக்கு ஓங்கியிருந்த நேரம். நாட்டுமக்களிடையே மலைபோல் உயர்ந்த செல்வச் செழிப்பும், ஒருவேளை உணவிற்கே வழியின்றித் திண்டாடும் வறுமை நிலையும் இரண்டறக்கலந்திருந்த காலம். கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு முந்திய ஒருநாள். மாலை நேரம்.

அழகிய அந்திச் சூரியன் ஆகாயத்திலிருந்து அழகாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தான். இலையுதிர்கால மூடுபனிகளின் அழகு இதயத்தை வருடிக்கொடுத்துக் கொண்டேயிருந்தது. அந்தி ஆதவனது இதமான ஒளிக்கற்றைகள் முடுபனியைக் கிழித்துக்கொண்டு ரஷ்யாவின் தலைநகரான சென்ட் பீட்டர்ஸ்பர்க் (St Petersburg) மேல் படிந்து பளபளத்துக்கொண்டே இருந்தன. அந்த அழகிய நகரை பாதியாகக் கிழித்தபடியே பனிபடர்ந்த நீவா நதி (Neva River) பாய்ந்து சென்றுகொண்டிருந்தது. சலசலத்தோடும் நீரலைகளின் ஒரு பகுதி ஒரு நிலைக் கண்ணாடியைப்போல் அதனருகே இருந்த மாதாகோவிலின் உயரிய தங்கக்கோபுரத்தை அவ்விடமெங்கும் பிரதிபலித்துக் கொண்டேயிருந்தது.

பகல் முழுவதும் பண்ணைகளில் வேலைசெய்து அலுத்துப்போன கிராமப்புறங்கள் எல்லாம் ஓய்வெடுக்க, பகட்டான நகரப்புறங்கள் எல்லாம் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தன. உண்டிச்சாலைகளெல்லாம் உயர்ந்தரக கடலுணவு வகைகளாலும், பலரகக் கனிவகைகளாலும், ∴பிரெஞ்சு நாட்டுத் தின்பண்டங்களாலும் நிரம்பி வழிந்தன. பிரபுக்களெல்லாம் பிரித்தானியா, ∴பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட கண்கவர் முத்துக்களாலும், தங்கங்களாலும், வைடூரியங்களாலும் தம்மை அலங்கரித்துக்கொண்டிருந்தார்கள். நகரத்தை காரிருள் மூடி இரவு தழுவும் வேளைகளில், பண்டைய சிற்பவேலைகள் நிரம்பிய செல்வந்தருடைய மாளிகைகள் எல்லாம் கண்களை மயக்கும் ஒளிமயமாகக் காணப்பட்டன.

அலங்காரமான குதிரை வண்டிகளும், நாகரீகமான மற்றைய வண்டிகளும், நவநாகரீக அழகிய நங்கைகளையும், மன்மதனை ஒத்த உயர் அதிகாரிகளையும் சுமந்துகொண்டு திட்டமிடப்பட்ட நள்ளிரவுக் களியாட்டங்களுக்காக வீதிகளில் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தன.

இரு வகுப்பு மக்கள் அப்போது அங்கே வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அசாதாரண காலநிலைகளோடும், அன்றாடம் தமது உயிரைத் தாங்கியிருக்கும் உடலுக்கு வேண்டிய உணவுக்காகத் திண்டாடும் சாதாரண மக்கள் ஒருபுறம். தினம் தினம் விதம் விதமான உல்லாசக் களியாட்டங்களிலும், வேடிக்கை விளையாட்டுக்களிலும், கேளிக்கைகளிலும் தம் பொன்னான நேரத்தைச் செலவிட்டுக்கொண்டிருந்த உயர் வகுப்பினர் இன்னொருபுறம்.

இதேவேளையில் உலகின் வேறும் பல பகுதிகளில் அரசியல், பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருந்தன. .'.பிரான்ஸில் நெப்போலியன் III இன் ராஜ்யம் நடந்துகொண்டிருந்தது. ஜேர்மனியில் அதுவரை சிற்றரசுகளாக இருந்தவைகள் எல்லாம் ஒரு பேரரசுடன் இணைந்து ஓரரசானது. இத்தாலி முழுவதும் இருந்த அரசுகளெல்லாம் ஒரே அரசின் ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டன.

அரச மாளிகைகளும், அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த உயர்ந்த கட்டிடங்களும் ரஷ்யாவின் நகரப்பகுதிகளை அலங்கரிக்க, பரந்த சமவெளிகளும், உயர்ந்த மலைகளும், அவற்றினிடையே செல்லும் நீண்ட ஆறுகளும் கிராமப்பகுதிகளை அலங்கரித்துக் கொண்டிருந்தன. வட துருவத்திற்கு அண்மையில் இருப்பது சைபீரியா. அதிலே டியூறா (Tura) என்ற நதிக்கரையிலே உள்ளது பொக்ரொவ்ஸ்கோ (Pokrovskoe) என்றொரு கிராமம். விவசாயத்தினால் அப்போது மிகவும் செழிப்புற்று விளங்கிய கிராமங்களில் இதுவும் ஒன்று.

பரந்த சமவெளிகளுக்கும், பாய்ந்து செல்லும் ஆறுகளுக்கும் இடையே நெடிதாக வளர்ந்திருக்கின்ற ஊசியிலைக் காடு ஒன்றின் அருகேதான் இக்கிராமம் அமைந்திருந்தது. பெரும்பான்மையான கிராம மக்களின் குடிசைகள், மரக்குற்றிகளினாலான எளிய வீடுகள்தான். வீடுகள் அருகே ஒரு சிறிய விளைநிலம், ஒரு சிறிய தானியக்

களஞ்சியம், அவற்றை அடுத்து ஒரு பன்றிக்கூடம். இவைகள்தான் அவர்களின் சொத்துக்கள்.

கிராம வாழ்க்கை கடினமான வாழ்க்கைதான். ஆனால் அங்கு வாழ்ந்தவர்கள் எல்லோரும் எளிமையானவர்கள், ஆழமான மத நம்பிக்கை கொண்டவர்கள், பாரம்பரிய பழக்கவழக்கங்களிலே ஊறிப்போனவர்கள். கிராமத்திலே ஏதாவது தப்புத்தண்டா நடந்தால் எம் ஊர்களில் பஞ்சாயத்தைக் கூட்டி நியாயம் வழங்குவதுபோல் அங்கேயும் ஊர்ப் பெரியவர்கள் நியாயம் வழங்குவார்கள். முறை தவறியோர், கறை படிந்தோர், களவு செய்தோர் என அமைதியான வாழ்க்கைக்கு இடையூறு செய்வோர்களுக்கு கடும் தண்டனை வழங்கும் காலம்.

போக்குவரத்துக்கும், பண்ணையிலே வேலை செய்வதற்கும் குதிரைகள்தான் பாவிக்கப்பட்டன. ஊர்விட்டு ஊர் செல்லும் வழிப் போக்கர்கள் எந்நேரமும் சென்று யார் வீட்டையாவது தட்டுவார்கள். இரவுப்போசனமும், இரவு தங்குவதற்கு இடமும் கொடுத்து, அவர்களை அனுசரிப்பது அநேகமாக எல்லாக் கிராமத்து மக்களின் கடமை யுமாயிருந்தது.

இப்போதுபோல் பிள்ளைகள் படிப்பதற்கான பாடசாலைகளோ, வேலை பார்ப்பதற்கான தொழிற்சாலைகளோ, அலுவலகக் காரியாலயங்களோ, வேறு எந்தவித வசதிகளோ இருந்திருக்கவில்லை. குடும்பத்திற்காகப் பண்ணையிலே பெற்றோர்களுடன் வேலை செய்யும் பிள்ளைகள் பலர் படிப்பறிவு அற்றவர்களாகவும், சிறிதேனும் எழுதவோ வாசிக்கவோ தெரியாதவர்களாகவுமே இருந்தார்கள்.

ஒருநாள் இரவு, எங்கும் ஒரே இருள் கௌவியிருந்தது. ஆனால் வானத்திலே பல ஆயிரம் விண்மீன்கள் பூமிப்பந்தைப் பார்த்துத் தம்

கண்களைச் சிமிட்டிக்கொண்டிருந்தன. வழக்கம்போல் பண்ணையிலே நாள் முழுதும் வேலைசெய்து இளைத்துப்போயிருந்தவர்கள் பலர்.

பக்கத்திலே இருக்கும் பெரிய ஊருக்குச் சென்று, தாம் கொண்டுசென்ற பண்டங்களை விற்றுவிட்டு வந்து, தம் பிரயாண அலுப்புத்தீரப் படுத்திருந்தோர் பலர். படிந்திருந்த பனிப்படலங்களின்மேல் பகல் முழுதும் ஓடி விளையாடிய அலுப்புத்தீர படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த இளவயதினர் இன்னொருபுறம்.

அது ஆண்டு ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தொன்பது. ஜனவரி பத்தாம் தேதி. எங்கும் ஒரே அமைதி. தைமாத உறைபனியின் உக்கிரம் தாங்கமாட்டாமல் மக்களில் பலர் தத்தம் வீடுகளுக்குள்ளேயே முடங்கி யிருந்தனர். கொட்டும் பனியின் கொடூரம் தாங்கமாட்டாது மக்களெல்லாம் தத்தம் இருப்பிடங்களுள் அடங்கியிருந்தார்கள். ஆனால் வெளியே, வானவெளியினிலே யாருக்கும் தெரியாமல் ஓர் அதிசயம் நிகழ்ந்து கொண்டிருந்தது. இருள் சூழ்ந்த மேற்கு சைபீரியாவின் (Western Siberia) வானத்திலே திடீரென்று மிகப் பிரகாசமான ஒளி தோன்றியது. இதனைக் கண்ணுற்றோர் தத்தம் விடுகளில் இருந்து வெளியே வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தனர். சூழ்ந்திருந்த இருளைக் கிழித்தபடியே எரிநட்சத்திரம் ஒன்று வானிலே தோன்றி, ரோபோலஸ் (Tobolas) மாகாணத்தில் இருந்த சிறிய கிராமமான பொக்ரொவஸ் கோவை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது.

எரிநட்சத்திரம் வானிலே எப்போதாவது தோன்றினால், அது உலகிலே ஏதோ ஒரு முக்கியமான நிகழ்வு நடைபெறுவதற்கான சகுனம் என்பதே இறைபக்தி உள்ளவர்களின் நம்பிக்கை. இயேசுநாதர் இப்பூமியிலே அவதரித்தபோது ஆகாயத்திலே வால் நட்சத்திரம் தோன்றியது என்பது சரித்திரமாகிவிட்ட உண்மை.

நடக்கப்போகும் முக்கியமான நிகழ்வு நன்மையான காரிய மானாலும் சரி, தீமையான காரியமானாலும் சரி இப்படித்தோன்றுவது வழக்கம் என்று மக்கள் பலர் பேசிக்கொண்டார்கள். 'இறைவா! இன்று நடக்கவிருக்கும் நிகழ்வு உலகிற்கு நன்மை தரவேண்டும்' என்று அதனைக் கண்ட சிலர் அந்த உறைபனியின்மேல் முழங்காலில் நின்று இறைவனை வேண்டிக் கொண்டார்கள். இக்கல்லுலகிலே சரித்திரத்திலே முக்கிய இடம் பிடிக்கப்போகும் காரியம் ஒன்று எங்கோ உருவாகின்றது என்றே கருதினார்கள்.

ஆமாம் அந்தச் சிறிய கிராமமான பொக்ரொவஸ்கோ என்ற இடத்திலே எவ்விம் அக்கோலிவிச் ரஸ்புட்டின் (Efim Akolevich Rasputin) என்பவருக்கும், அவரது மனைவி அனா எக்றோவ்னா (Anna Egrovna) என்பவருக்கும் ஏழு இறாத்தல் நிறையுடைய ஓர் அழகான ஆண் குழந்தை அப்போதுதான் பிறந்தது. அந்தக் குழந்தைதான் கிரகரி எவிமெவிச் ரஸ்புட்டின் (Gregory Efimovich Rasputin). உலகின் பேரரசுகளின் ஒன்றான ரஷ்யாவின் ராஜகுடும்பத்தையே பிற்காலத்தில் தனது செல்வாக்கினால் ஆட்டிப்படைத்து, நாசப்படுத்தி, ரஷ்யப் புரட்சிக்கு வழிவகுக்கக் காரணமாயிருந்தவர்களில் ஒருவரான அந்தக் குழந்தை எதுவுமே அறியாத பச்சிளம் பாலகனாக அங்கே உருவெடுத்தது.

ஆரவாரங்கள் ஓய்ந்தன. அந்த அழகிய குழந்தை ரஸ்புட்டின் குடும்பத்தில் இரண்டாவது ஆண் பிள்ளை. பெற்றோர் தமது கிறீஸ்தவ மத முறைப்படி தேவாலயத்திற்குக் கொண்டுசென்று குழந்தைக்கு முறைப்படி ஞானஸ்த்தானம் செய்து வைத்து, அப்போதைய வழக்கப்படி "கடவுளின் சேவகன்" என்றும் பிரகடனப்படுத்தினார்கள்.

குழந்தை ரஸ்புட்டின் ஆறு மாதங்களுக்குள்ளேயே எழுந்து நின்றான். பின்னர் இரண்டொரு மாதங்களில் நடக்கவும் ஆரம்பித்து

விட்டான். அதிசயமான குழந்தை என்றே எல்லோரும் பேசிக் கொண்ட னர். ஆனால் சாதாரண குழந்தைகளைப் போல் வாய்திறந்து பேசும் வயது வந்தும்கூட அவனால் வாய் திறந்து பேச முடியவில்லை.

இந்த அதிசயக் குழந்தை தனது வாய் திறந்து பேச ஆரம்பித்ததோ அவன் பிறந்து இரண்டரை வருடங்களின் பின்னர்தான். என்ன அதிசயம்? அதிசயச் சிறுவன் பேச ஆரம்பித்ததும் அவன் வார்த்தைகள் எல்லாம் அற்புதமாக வெளிவந்தன. கற்பனை வளம் மிகுந்தவையாகவே அமைந்திருந்தன. அதிசயமான குழந்தையை இப்போது அபூர்வமான சிறுவன் என்றே அனைவரும் கருதினர். அனைவரும் அவனது சொல்லையும், செயலையும் மிக ஆர்வத்தோடு கவனித்துக்கொண்டே வந்தனர்.

சிறுவயதிலிருந்தே ரஸ்புட்டின், மற்றைய சிறுவர்களைவிட வித்தியாசமாகவே காணப்பட்டான். தான் காணும் பொருட்களை மிகவும் கூர்ந்து அவதானிப்பான். அதனைத் துருவித் துருவி ஆராய்வான். மற்றையவர்களோடு பேசுகையில் தேவையின்றி ஏதும் அலட்டிக்கொள்ள மாட்டான், மிகவும் சாமர்த்தியமாகவே பேசுவான்.

காலமும் உருண்டுகொண்டே இருந்தது. சிறுவனாக இருந்த ரஸ்புட்டின் திடீரென ஒருநாள் சிறிது சுகவீனமுற்று படுக்கையில் சாய்ந்துவிட்டான். கடுமையான காய்ச்சல், தாங்கமுடியாத தலைவலி, இடைவிடாத இருமல், அடிக்கடி வயிற்றைக் குமட்டி வாந்தியும் எடுத்தான். உடலுக்கு வந்த நோயினால் இருக்கவும் முடியாமல், படுக்கவும் முடியாமல் இரவு பகலாகத் துடித்தான். அக்கிராமத்து மருத்துவரும் இடைவிடாது தனக்குத்தெரிந்த மருந்துகளையெல்லாம் கொடுத்தார். ஆனால் எதுவித பலனும் அளிக்கவில்லை. அவனுக்கு என்னவே நடக்கக் கூடாதது நடக்கப்போகின்றது என்றே எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

"சாதாரண மனிதருக்கு ஓர் அதிசயமான குழந்தை பிறந்தால், அது உலகில் அதிக காலம் உயிர்வாழ முடியாது. இது நான் கண்ட அனுபவம்" என்று ஒரு அனுபவமிக்க கிராமவாசி ஒருவர் கூறினார். அவருடைய கூற்றை அங்கிருந்த பலரும் ஆமோதித்தனர். ஆனால் ஒருசில நாட்கள் கழிந்தபின் ரஸ்புட்டின் திடீரென்று படுக்கையை விட்டு எழுந்தான். எழுந்தவன் உடனே தன் தாயை அவசரமாக அழைத்தான்.

"அம்மா! என் படுக்கையிலே ஓர் அழகான பெண் வந்து அமர்ந்தார். என் தலைமேலே தன் கையை வைத்து ஏதோ சொன்னார். உங்கள் எவராலும் தீர்க்க முடியாத எனது நோயைத் தணித்தாள்" என்று தாயிடம் கூறினான். அவனது வார்த்தைகளை அவர்கள் நம்பவில்லை. ஆனால் நோய் குறைந்த வேகத்தையும் அவர்களால் நம்பமுடியவில்லை. இறந்துபோவான் என்றிருந்தவன் திடீரென எதுவித நோயுமின்றி எழுந்திருந்து உட்கார்ந்து உரையாடுவதைக் கண்டதும் பெற்றவரும், மற்றவரும் சொல்லமுடியாதளவு ஆனந்தம் கொண்டார்கள். ஆனால் அதன்பிறகும் அவனது பேச்சுக்களும், செய்கைகளும் அன்னை தந்தையருக்கு மேலும் மேலும் ஆச்சரியத்தையும், வியப்பையும் ஊட்டிய வண்ணமே இருந்தன.

◆◆



2
முதல் சோகம்

சிறுவன் ரஸ்புட்டின் தன்னோடெத்த சிறார்களுடன் சேர்ந்து விளையாடப் போகமாட்டான். ஆனால் தந்தையின் பண்ணையிலே தனியாக நின்று அங்கிருக்கும் மிருகங்களுடன் நீண்ட நேரம் ஏதேதோ பேசுவான். தீனியைத் தின்று கொழுத்து திமிர் பிடித்துத் திமிறிக் கொண்டு நிற்கும் குதிரைகள் கூட இச்சிறுவனின் கை பட்டதும் திடீரென அடங்கிப்போகும்.

பால் கறக்கும்போது அடம்பிடிக்கும் பசுவின் அருகில் ரஸ்புட்டின் சென்றதும் அப்பசு பணிவுடன் அசையாது நின்று பாலைச் சுரக்கும்

ஏன் இப்படி? இவனில் அப்படி என்ன அதிசய சக்தி இருக்கிறது? எல்லாச் சிறுவர்களையும்விட இவன் வித்தியாசமாக இருப்பதற்கு என்ன காரணம்? பெற்றோரின் மனதில் இப்படியான கேள்விகள் எழுந்தவண்ணமே இருந்தனவே தவிர, அவற்றிற்கான பதிலை அவர்களால் அறிய முடியவில்லை. ஏதோ எல்லாம் நல்லபடியாக நடக்கின்றதே அதுவே போதும் என்னெண்ணி அமைதியாக இருந்தார்கள்.

ஒருநாள் எல்லோரும் மதியவேளை உணவருந்திக்கொண்டிருந்தார் கள். தந்தை கதையோடு கதையாக, "அந்தக்கறுப்புக் குதிரைக்கு காலில் ஏதோ அடிபட்டுவிட்டது போல் இருக்கிறது, நேற்றிலிருந்து எழுந்து நடக்க முடியாமல் படுத்திருக்கிறது" என்று கூறினார்.

அவர்கள் பேசிய மற்றையவற்றை அரையும் குறையுமாகக் கவனித்த ரஸ்புட்டின், இதைக்கேட்டதும் திடீரென்று உணவருந்துவதை நிறுத்தினான். சிறிதுநேரம் எங்கோ ஒரு மூலையைப் பார்த்து ஆழமான சிந்தனையில் மூழ்கினான். மறுகணம் கைகளை அலம்பிவிட்டு அமைதியாக எழுந்து குதிரை லாயத்தை நோக்கி நடந்தான்.

அதுவரை அவனின் செயல்களை இரகசியமாகக் கவனித்துக்கொண்டிருந்த தந்தையும் என்ன நடக்கப் போகின்றது என்று அறிய, மெதுவாக எழுந்து அவனுக்குத் தெரியாமல் சிறுவனைப் பின்தொடர்ந்தார். ரஸ்புட்டின் காலில் அடிபட்டுப் படுத்திருந்த குதிரையின் அருகே சென்று நின்றான். தனது கையை அந்தக் குதிரையின் பாதிக்கப்பட்ட இடத்தின்மேல் வைத்தான். வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே சிறிது நேரம் நின்றான். கண்களை மூடியபடியே ஏதோ புரியாத வார்த்தைகளால் ஏதோ பேசினான். என்ன அதிசயம்! சிறிது நேரத்தில் குதிரை எழுந்து நடக்க ஆரம்பித்துவிட்டது. வியப்பினால் தந்தை வாயடைத்துப்போய் அசையாது அப்படியே நின்றுவிட்டார்.

அவனை அப்போது யாராலுமே புரிந்துகொள்ளவே முடியவில்லை. பெற்றோர் வற்புறுத்தினாலும் தன் வயதினை ஒத்த சிறுவர்களோடு சேர்ந்து விளையாடமாட்டான். ஆனால் அகன்ற நீல நெடுவானத்தை அண்ணாந்து பார்த்தபடியே நெடுநேரம் அசையாது நிற்பான். பின்னர் கீழே தலையைக் குனிந்து தரையிலுள்ள புற்களின் வரிசைகளைப் பார்த்து ஆழ்ந்த சிந்தனையுடன் அமர்வான்.

இவற்றைக் கண்டதும் அவனது அன்னை அடிக்கடி கலங்கினார். கண்ணீர் விட்டார்.

"ஐய்யய்யோ! பாவம் என் பிள்ளை ஏன் இப்படிச் செய்கின்றான்? அவனின் மனநிலை சரியில்லாமல் இருக்கின்றதோ? அவனை யாரிடமாவது காட்டி மருந்து செய்தால் என்ன?" என்று ஆதங்கப்பட்டுத் தன் கணவனிடம் அவனுக்கு ஏதாவது பரிகாரம் செய்யுமாறு கேட்டாள்.

"அவனுக்கு பண்ணையிலே வேலை செய்ய விருப்பமில்லை. பன்றிகளைப் பராமரிக்க விருப்பமில்லை, குதிரைகளுக்குத் தீனி போட விருப்பமில்லை, அதனால்தான் இப்படிச் சுத்துமாத்துச் செய்கின்றான்". என்றார் அவர்.

தன் மகனிடம் ஏதோ அதீத சக்தி இருக்கின்றது என்று தெரிந்தும் அவரால் அதனை ஒத்துக்கொள்ள முடியவில்லை. காரணம் அவரால் அவனை முற்றுமுழுதாகப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அதனால் தான் அவரும் பெரும்பான்மையான தந்தைமார் பேசுவதுபோலவே பேசினார்.

சிறுவனான ரஸ்புட்டின் வளர வளர அவனுக்கிருந்த அதீத சக்திகளும் வளர்ந்துகொண்டே வந்தன. முன்னால் நிற்பவர்களின் மனதில் இருப்பதை அப்படியே அறியக்கூடிய அதீத ஆற்றல் படைத்தவனாகவும் விளங்கினான். அதனால் அவனுக்கு முன்னால் யாரும் பொய் சொல்லித் தப்பவே முடியாது.

இவனுடைய தந்தை முன்னர் அரச தபால் கந்தோரில் வண்டி ஓட்டுபவராக வேலை பார்த்தவர். அதிகமாக மது அருந்தும் பழக்கம் இருந்ததினால் அரசாங்க வேலையிலிருந்து நிறுத்தப்பட்டவர்.

அதன் பின்னர் குதிரைகளைத் திருடி விற்பதில் விற்பன்னராக விளங்கியவர். ஆனால் மகன் கிரகோறி ரஸ்புட்டின் பிறந்தபோது பண்ணையின் செழிப்பினால் கிராமத்திலே பெரிய மனிதராகிவிட்டார். பெரிய பண்ணைக்குச் சொந்தக்காரர். எட்டு அறைகளைக் கொண்ட இவருடைய வீடுதான் அந்தக்கிராமத்திலேயே மிகவும் பெரிய வீடு. சில காலமாக எதுவித குறைகளுமின்றி வசதியாக வாழும் ஒரு மனிதர்.

பணமுண்டு, வசதிகள் உண்டு இதனால் அவர் கிராமத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவர் இப்போதும் அவ்வளவு நேர்மையானவர் என்றும் சொல்வதற்கில்லை. ஆனால் எல்லோரும் இவரை ஊரில் நடக்கும் குற்றங்களை விசாரிக்கும் குழுவிற்குத் தலைவராகவும் நியமித்தனர்.

"விரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும்
விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும் -அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று"

என்பதுபோல, பணம், பலம், வசதிகள் படைத்திருந்தால் எந்தக் கொடியவர்களும், ஊருக்கே புத்தி சொல்லப் புறப்பட்டு விடுவார்கள். இது உலகெங்கும் அன்று தொட்டு இன்றுவரை இன்னும் வழக்கத்தில் இருந்துவரும் ஒரு நிலைப்பாடு. இது மாறவேண்டும். அவரவர் தகுதிக்கேற்றவாறு தொழில்களைச் செய்ய அனுமதிக்க வேண்டும். இவையெல்லாம் எப்போது மாறும்? மாறுமா?

ஒவ்வோரு குடும்பத்திற்கும் குதிரை மிக முக்கியமானதொன்றாக இருந்தது. பண்ணையில் வேலை செய்வதற்கும், பயணங்கள் செய்வதற்கும் பயனுள்ள ஒரு பிராணி குதிரை. அது இல்லாவிட்டால்

குடும்பமே பட்டினி. யாராவது அதைத் திருடினால் அவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும். ஒருமுறை கிராமத்திலே ஓர் ஏழையினுடைய குதிரை காணாமல் போய்விட்டது. கிராம மக்களுக்குத் தீராத கோபம். குற்றம் செய்தவனைப் பிடித்து தண்டனை கொடுக்கத் துடித்துக்கொண்டிருந்தார்கள்.

ரஸ்புட்டினின் தந்தையின் வீட்டிலே அந்த விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது சிறுவன் ரஸ்புட்டின் கடும் காய்ச்சலால் சுகவீனமுற்றுப் படுக்கையிலிருந்தான். விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது படுக்கையில் இருந்த சிறுவன் ரஸ்புட்டின் திடீரென எழுந்தான். அங்கிருந்த ஒருவரை மிகவும் கூர்மை யாகக் கவனித்தான். மறுகணம் தனது விரலால் அவரைச் சுட்டிக் காட்டினான்.

"அதோ அவர்தான் அந்தக் குதிரையைத் திருடியவர். நீங்கள் எல்லோரும் குற்றவாளியை விசாரணை செய்யாமல் வேறு என்னவெல்லாமோ செய்துகொண்டு இருக்கின்றீர்கள்" என்றான்.

ஆனால் அவனின் தந்தையோ "அவனுக்கு இரண்டு நாட்களாக சரியான காய்ச்சல். அதனால் அவனது மனநிலையும் குழம்பிவிட்டது. அதனால்தான் அப்படி வாய் புலம்புகிறான். தயவு செய்து அவன் கூறுவதை யாரும் பொருட்படுத்த வேண்டாம்" என்று அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

விசாரணைகள் எல்லாம் முடிந்து எல்லோரும் தத்தம் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். ஆனால் ரஸ்புட்டின் குறிப்பிட்டுக் காட்டியவர் நேரே தனது வீட்டிற்குச் செல்லாமல், இரகசியமாகத் தனது தானியக் களஞ்சியத்திற்குச் சென்றார். அங்கே தான் திருடி

மறைத்து வைத்திருந்த அந்தக் குதிரையை இரகசியமாக அவிழ்த்துக் கொண்டுபோய் வெளியே விரட்டிவிட்டார்.

இவருடைய செய்கையிலே சந்தேகம் கொண்டு, அவருக்குத் தெரியாமல் இரகசியமாக அவரைப் பின்தொடர்ந்து சென்ற சிலர், தானியக் களஞ்சியத்திலிருந்து வெளியே கொண்டுவந்த அந்தக் குதிரையை கண்டவுடன் நல்லவன் போல் நடித்த அந்தத் திருடனைப் பிடித்து தமது ஆத்திரம் தீரும்வரை அடித்துப் போட்டனர்.

இன்னொருநாள் அவனது தந்தையாருக்குத் தெரிந்த குதிரை வியாபாரி ஒருவர் வந்தார். இல்லாதனவெல்லாம் சொல்லி அவனது தந்தையாரிடம் தன் குதிரை ஒன்றை விற்க முனைப்பட்டார்.

"இந்தக் குதிரையின் தந்தை எத்தனையோ ஓட்டப் பந்தயங்களில் ஓடியிருக்கின்றது, பண்ணைகளில் காலை தொடக்கம் மாலை வரை களைப்பின்றி வேலையும் செய்யக் கூடியது. நீங்கள் இந்தக் கிராமத்திலே பெரிய மனிதர். உங்களுக்கு பண்ணையில் வேலை செய்யவும், சந்தைக்குச் சென்று வரவும் இந்த ஒரு குதிரையே போதும். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் போல" என்றார்.

"அப்படியா? இப்படியான ஒரு குதிரையை நான் எனது வாழ்நாளிலேயே காணவில்லை".

"இதன் சிறப்பை அறிந்து எத்தனையோ பேர் கேட்டார்கள் ஆனால் நான் உங்களுக்காகவே வைத்திருந்தேன் ".

"நான் இந்தக் கிராமத்திலே பெரிய பணக்காரன்தான், ஆனால் நீர் சொல்வதைப்போல இக்குதிரைக்குக் கொடுக்க என்னிடம் இப்போது போதிய பணம் இருக்குமோ தெரியவில்லை".

"நீங்கள் இதற்காக அதிகளவு பணம் கொடுக்கத் தேவையில்லை. மற்றைய குதிரைகளுக்குக் கொடுப்பதைவிட சிறிது அதிகமாகக் கொடுத்தால் போதும்".

"உமது நல்ல மனதுக்கு எனது நன்றிகள்".

இப்படியாக அவர்களது உரையாடல் தொடர்ந்துகொண்டே போனது. அதனை நன்றாக உற்றுக் கவனித்துக்கொண்டிருந்த சிறுவனான ரஸ்புட்டின் "அப்பா இவர் கூறுவதில் உண்மை எதுவுமில்லை. இவர் தன் குதிரையை விற்பதற்காக வேண்டுமென்றே பொய் சொல்கின்றார். இவரை நம்பாதீர்கள். எனக்கு இவற்றையெல்லாம் என் காதுகளில் யாரோ சொல்வதுபோல் இருக்கின்றது." என்றான்.

"முட்டாள்! உனக்குக் குதிரைகளைப் பற்றி என்ன தெரியும்? அவர் எனக்கு நன்றாகத் தெரிந்தவர், மிகவும் நேர்மையானவர். என்னை ஒருநாளும் ஏமாற்றமாட்டார். என் வேலைகளை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீ உன் உடம்பைப் பார்த்துக் கொள்" என்றார்.

நாட்கள் நகர்ந்துகொண்டே இருந்தன. அந்தக் குதிரையை விற்கும்போது தந்தையின் நண்பர் கூறிய எதுவித நல்ல குணாதிசயங்களும் அதில் காணப்படவில்லை. அவனின் தந்தையார் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்திருந்தும் அதை ஒத்துக்கொள்ளவில்லை. அதற்கு வேறு ஏதோ காரணங்கள் கூறினாரே தவிர, சிறுவன் ரஸ்புட்டின் அன்று கூறியதில் உண்மைகள் இருந்தன என்பதை ஒப்புக்கொள்ள மறுத்தேவிட்டார்.

இந்த அதிசயச் சிறுவனின் வாழ்க்கையும் ஓடிக்கொண்டே இருந்தது. காலமும் அதனோடு சேர்ந்து ஓடிக்கொண்டிருந்தது. ஒருநாள் நண்பகல், கோடை வெய்யோன் தன் கொதிக்கும் அனல் கதிர்களை

அள்ளி அள்ளி வீசிக்கொண்டிருந்தான். வழக்கம்போல் அண்ணனும் தம்பியுமாக ஆற்றங்கரைக்குக் குளிப்பதற்காகப் புறப்பட்டார்கள். அன்று அவர்கள் வழமையாகக் குளிக்கும் இடத்தில் வேறு ஆட்கள் குளித்துக்கொண்டிருந்தார்கள். இதனைக்கண்ட ரஸ்புட்டினின் அண்ணன்.

"தம்பி! இங்கே வேறு ஆட்கள் இருக்கின்றார்கள். அதனால் நாங்கள் இன்றைக்குச் சற்றுத் தள்ளிச் சென்று நீந்துவோம் வா" என்றான்.

"சரி அண்ணா நீங்கள் முதலில் போங்கள். நாங்கள் குளிப்பதற்கு ஒரு நல்ல இடத்தைப் பாருங்கள். நான் உடுப்புக்களைக் களைந்துவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு அண்ணனின் பின் தானும் ஆற்றில் இறங்க ஆயத்தமானான்.

ஆற்றிலே பாய்ந்து ஓடும் நீர் அமைதியாகத்தான் காணப்பட்டது. ஆனால் ரஸ்புட்டினின் அண்ணன் ஆற்றுள் இறங்கியதும் ஒரு சுழியினுள் அகப்பட்டுக்கொண்டான். ஓடும் நீரின் வேகத்தின் பிடியிலிருந்து விடுபட்டு எழுந்து நிமிர்ந்து நிற்க முயற்சித்தான், ஆனால் முடியவில்லை. தண்ணீருக்கு மேலே வர முனைந்தான் அதுவும் முடியவில்லை. சுழன்று பாயும் நீரின் வேகம் ரஷ்புட்டினின் அண்ணனை நீரின் கீழே இழுத்துக் கொண்டே போனது. மேலே எழவும் முடியாமல், மூச்செடுக்கவும் முடியாமல் திணறினான், திண்டாடினான்.

அண்ணன் நீரில் மூழ்கித் தத்தளிப்பதைக்கண்ட தம்பி ரஸ்புட்டின் ஓடிச்சென்று அவனைக் காப்பாற்ற முனைந்தான். அண்ணனை வெளியே இழுத்துவிடுவதற்காகத் தன் கையை நீட்டினான். தம்பியின் கையை அண்ணன் பிடித்துக்கொண்டான். ஆனால் அண்ணனை வெளியே இழுக்க முடியாமல் திணறினான்.

நீரின் வேகத்தினால், சிறுவர்களின் தத்தளிப்பு மேலும் அதிகரித்தது. அண்ணனின் தத்தளிப்பும், நீரின் கொந்தளிப்பும், ஆற்றின் நீரின் அதிவேகமும் சேர்ந்து ரஸ்புட்டினையும் ஆற்றுள் இழுத்து வீழ்த்திவிட்டது. மறுகணம் அண்ணனும், தம்பியும் தண்ணீரினுள் அகப்பட்டுக்கொண்டனர். இருவரும் நீரினுள் மூழ்கிக்கொண்டிருந்தார்கள்.


தற்செயலாக இவர்களின் அவலத்தைக்கண்ட அருகிலிருந்தோர் இவர்களருகே உதவுவதற்காக ஓடிவந்தார்கள். தகுந்த உபகரணங்கள், தக்க வசதிகள் ஏதும் இல்லாத காரணத்தால் இருவரையும் உடனே நீருக்கு வெளியே எடுக்க முடியவில்லை. மிகுந்த போராட்டங்களின் பின் எவ்வளவோ சிரமப்பட்டு ஒருவாறு இருவரையும் நீருக்கு வெளியே இழுத்து எடுத்துவிட்டார்கள். ஆனால் சிறுவர்கள் இருவரும் நீரினுள் மூழ்கியதால் நன்றாகத் தண்ணீரைப் பருகிவிட்டார்கள்.

வாயினூடாகவும், மூக்கினூடாகவும் சென்ற ஆற்று நீர், அவர்களின் இரைப்பைகள நிரப்பியதோடு மட்டும் நின்றுவிடாமல், இருவருடைய நுரையீரல்களுக்குள்ளும் சென்றுவிட்டது. அங்கிருந்தோர் ஓடிய நீரிலே அமிழ்ந்து சிறுவர்கள் இருவரும் அங்கேயே தங்கள் உயிர்களை விட்டுவிடாது தப்ப வைத்துவிட்டார்கள். ஆனால் இதய அறையினுள் இருக்கும் நுரையீரல்களுள் புகுந்த நீரினால் ஏற்பட்ட நியூமோனியா நோயிலிருந்து பூரணமாக விடுவிக்க அவர்களால் முடிய வில்லை.

கிராமவாசிகளின் ஒரே புகலிடமான நாட்டு வைத்தியமே அச்சிறுவர்களுக்குச் செய்யப்பட்டது. அவ்வூரிலிருந்த சிறந்த மருத்துவச்சி இவர்களைப் பீடித்திருந்த நோயைப்போக்க எவ்வளவோ முயற்சி செய்தாள். தனக்குத்தெரிந்த மூலிகை வகைகளையெல்லாம்

கொண்டுவந்து கரைத்துக் குடிக்கச் செய்தாள். காலங்காலமாய் தான் பெற்ற ஆனுபவங்களையெல்லாம் திரட்டி ஆவன செய்தாள். ஆனால் அவளின் சக்திக்கு அப்பாற்பட்ட அந்தக்கொடிய நோய் அவர்களைத் தொடர்ந்தும் வாட்டிக்கொண்டேயிருந்தது. ஆனால் கடைசியில், காலன் நியூமோனியா உருவில் வந்து கட்டிலில் படுத்திருந்த ரஸ்புட்டினின் அண்ணனின் உயிரை பாசாங்கயிறிட்டுப் பறித்துச் சென்றுவிட்டான்.

◆◆



3

வயதுக்கு மிஞ்சிய வார்த்தைகள்

இளவயதிலே ஏற்பட்ட அண்ணனின் மரணத்தால் ஏற்பட்ட அந்தத்தாக்கம், இளைஞனான ரஸ்புட்டினுக்கு மாறாத கவலையைக் கொடுத்துக்கொண்டேயிருந்தது. அண்ணனைவிட சிறுவன் ரஸ்புட்டின் பலமான உடற்கட்டும், மனவலிமையும் கொண்டிருந்ததினால் நீண்டநாட்கள் படுக்கையில் இருந்தபின் ஒருவாறு குணம் அடைந்தான். ஆனால் அண்ணனின் திடீர் மறைவு அவன் மனதில் மாறாத ஒரு வடுவை, மறையாத ஒருவித மனஅழுத்தத்தையே உண்டாக்கிவிட்டது.

விசித்திரமான பையனாக வளர்ந்த சிறுவன் ரஸ்புட்டினின் வாழ்க்கையிலே, திடீரென ஏற்பட்ட விபத்துக்களினால் முன்பிருந்த அதீத சக்திகளும் சிறிது காலம் மறைந்துவிட்டன. ஆனால் அவை திரும்பவும் வந்தபோது அவனால் முன்போல் தீர்க்கதரிசனமாக பின்னால் வரும் சம்பவங்களை முன்கூட்டியே கூறவோ, மற்றவர்கள் மனதிலிருப்பதை வார்த்தைகளில் எடுத்துக் கூறவோ முடியவில்லை.

குடும்பத்தில் நெருங்கிய ஒருவரை திடீரென இழக்கும்போதுதான் இருப்பவர்களுக்கு அவர்களது மாயைக் கண்கள் திறக்கின்றன. ஒருவகை ஞானமும் பிறக்கின்றது. இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை இறந்தவன் அல்லவா திறக்கின்றான்! இது எவ்வளவு உண்மை!

சிறுவன் ரஸ்புட்டினின் நடைமுறையிலே சில மாற்றங்கள் ஏற்பட்டன. அடுத்த நிமிடம் என்ன செய்வான் என்று யாராலும் கூற முடியாது. ஒருநாள் திடீரென வெளியே செல்ல ஆயத்தமானான்.

"ரஸ்புட்டின், இப்போ எங்கே செல்லப் போகிறாய்?"

"காட்டுக்குள் சென்று உலாவப்போகிறேன், அதன்பிறகு அந்தப் புற்களின் மேல் படுக்கப் போகிறேன், பிறகு ஆற்றங்கரைக்குப் போகப்போகிறேன்".

"ஆற்றங்கரைக்கு எதற்காகப் போகிறாய்?"

"அண்ணனைத் தேடப் போகிறேன்".

இப்படியாக ஏதேதோ எல்லாம் பேசுவான். மணிக்கணக்காக அருகிலிருக்கும் ஊசியிலைக் காடுகளிடையே அலைந்து திரிவான். பரந்திருக்கும் சமவெளிகளிலே பலமணி நேரம் படுத்திருப்பான். அர்த்தமில்லாமல் வீணாக வீட்டில் எல்லோருடனும் சண்டை போடுவான். அன்னையார் இனிமேலும் தன்னால் முடியாது, தனக்குப் பைத்தியம்தான் பிடிக்கப் போகின்றது என்கின்ற வரையில் கத்துவான். வீட்டில் ஒரு பரிதாபகரமான சம்பவம் நடந்ததினால்தான் இப்படிச் செய்கின்றான் என்பதை உணர்ந்த அனைவரும் அவனின் போக்கிற்கே விட்டு விட்டார்கள்.

வயதும் வளர வளர இளைஞர்களின் விருப்பு வெறுப்புக்களிலும் மாற்றம் ஏற்படுவது இயற்கைதானே? கூடுதலான நேரம் தனிமையையே விரும்பியவன் இப்போது தந்தை தாயாருடன் கிராமத்திலிருந்த தேவாலயத்திற்குச் சென்றுவர ஆரம்பித்தான்.

கல்வி அறிவில்லாத சிறுவன் ரஸ்புட்டின் பைபிளிலிருந்து வாசிக்கப்படும் பகுதிகளை ஒன்றும் விடாது நினைவில் வைத்துக் கொள்ள ஆரம்பித்தான். தேவாலயத்திலே நடக்கும் பிரசங்கங்களை ஊன்றிக் கவனிக்கத் தொடங்கினான், அவற்றிலுள்ள உட்பொருட்களை ஆராயத் தொடங்கினான். ஒருநாள் அங்கே கூறப்பட்ட வாசகங்கள் அவன் மனதில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டன.

"ஆண்டவனின் இராஜதானி என்பது யாரும் ஒன்றை ஊன்றிக் கவனிப்பதாலேயோ, அல்லது அவர்கள் கூறும் வார்த்தைகளிலோ, வேறெங்குமோ இல்லை. மிக நன்றாகக் கவனித்துப் பாருங்கள். இறைவன் உங்களுள்ளேதான் இருக்கின்றான்"

இவ்வார்த்தைகளைக் கேட்ட சிறுவனுக்கு ஆழ்ந்த யோசனை ஏற்பட்டது. "இறைவனின் இராஜதானி என்பது உண்மையா? அப்படியாயின் அவர் ஒவ்வொரு மனிதனுள்ளும் இருக்கின்றாரா? மிருகங்களுள்ளும் இருக்கின்றாரா? கடவுள் எம்முள் இருக்கின்றார் என்றால் அவரைத் தேவாலையங்களில் தேடக்கூடாது. எம்முள்ளேதான் தேடவேண்டும். தொலைவில் இருக்கும் சொர்க்கத்தில் தேடக்கூடாது. அவர் இங்கேதான் இருக்கின்றார். எந்தவேளையிலும் எம்முள்தான் இருக்கின்றார். எம்முள்ளேதான் அவரைத் தேடவேண்டும்" என்று அவன் மனம் அங்கலாய்த்தது.

தேவாலத்தை விட்டு வெளியில் வந்தவுடன் தாயிடம் ஏதோ சாக்குச் சொல்லிவிட்டு காட்டின் ஒருபகுதியை அடைந்தான். அங்கே

ஆண்டவனைத் தேடுவதற்காக நெடியதொரு மரநிழலில், மிருதுவான, பச்சைப்பசேல் என்ற புற்றரையில் அமர்ந்துகொண்டான். அமைதியாக இருந்துகொண்டு, ஐம்புலன்களையும் அடக்கி, மனத்தை தன்னுள்ளே செலுத்த முற்பட்டான்.

இறைவனை நேருக்கு நேராகச் சந்திக்க ஆவல்கொண்டான். ஆனந்த உணர்வலைகளால் ஈர்ந்தப்பட்டான். அமைதியாக இருந்து இறைவனுடன் கலக்கும் தியானத்தில் இன்பவயப்பட்டான். ஆரம்பத்தில் சிரமப்பட்டவனின் முயற்சி வீண்போகவில்லை.

உள்ளமெனும் கோவிலிலே இப்போது இலகுவாக நுழைந்து விட்டான். அவனது மனக்கண்ணிலிருந்து மங்கலான சிறு ஒளி தோன்றியது. அந்த மாயமான பொறி, அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே பெரிது பெரிதாக வளர ஆரம்பித்தது. பிரகாசமாகிக்கொண்டு மிகமிக அண்மித்துக்கொண்டே வந்தது. மிருதுவான அந்த பொன்னிற ஒளி, திடீரென்று கண்களைக் குருடாக்கும் வகையில் மிகப்பிரகாசமாகி மறைந்தது. என்ன அதிசயம்! ஆண்டவனை ஒளி வடிவமாக மனக் கண்களிலே கண்டான் சிறுவன் ரஸ்புட்டின். அது அவனுக்கு ஓர் இன்பமான முதல் அனுபவம்!

தியானத்திலிருந்து மீண்ட சிறுவனின் இதயமோ படபடத்துக் கொண்டே இருந்தது. உளக்கோவிலில் இருந்து மீண்டவனுக்கு பூவுலகம் விநோதமான பொருளாகக் காணப்பட்டது. மீண்டும் அப்படியான ஓர் அனுபவம் கிட்டாதா என்ற ஆவலில் அசையாது அப்படியே அமைதியாக இருந்தான் ஆனால் கிட்டவேயில்லை. ஆழ்ந்த தியானத்திலிருந்து மீண்டவன் வானத்தை நோக்கி தன்னிரு கைகளையும் உயர்த்தியபடி;

"ஓ! வானுறையும் தந்தையே! என் பிரார்த்தனைகளைக் கேளுங்கள். மீண்டும் ஒரு முறை உங்கள் ஒளியைக் காணவிடுங்கள்"

என்றான். பல முறை மன்றாடினான், ஆனால் பதிலில்லை. மெதுவாக எழுந்து வீடுநோக்கி நடந்தான்.

தளர்ந்த நடையுடன் தள்ளாடித் தள்ளாடி வந்து சோகமாக உட்கார்ந்த தனயனிடம் "உனக்கு என்ன நடந்தது? ஏன் இப்படிச் சோகமாக உடகார்ந்திருக்கின்றாய்?" என்று கேட்டார் தாயார்.

"அம்மா இன்று நான் கண்டவற்றை என் வார்த்தைகளால் கூற முடியாது, அப்படிக் கூறினாலும் அவையொன்றும் உங்களுக்கு விளங்காது" என்றான் அமைதியாக.

"பரவாயில்லை, நான் நம்புவேன். நான் உனது அம்மாதானே? நீ என்னிடம் எதுவாகினும் தயங்காது கூறலாம்."

"நல்லது தாயே! நான் முயற்சிக்கிறேன். ஆனால் .... அதை... எப்படிக் கூறுவேன்? அம்மா காட்டின் கரையிலே நான் அமர்ந்திருந்து கண்களை மூடித் தியானித்தேன். ஐம்புலன்களையும் அடக்கி, அந்த ஆண்டவனைக்காண ஆராதித்தேன். என் முயற்சி வீண்போகவில்லை. நான்...நான்... இன்று என்னுள்ளே கடவுளைக் கண்டுவிட்டேன் தாயே!" என்றான்.

சிறிது கோபமும் ஆச்சரியமும் கலந்தபடி "உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? பெரிய பெரிய ஞானிகளால்தான் இறைவனைக் காணமுடியும். சிறுவனான உன்னால் அது முடியாது. எதுவாக இருந்தாலும் உன் தந்தையிடமோ மற்றவர்களிடமோ இதனைப்பற்றி எதுவும் கூறாதே! சிரிப்பார்கள், பேசாமல் வந்து சாப்பிடு" என்றார் தாயார்.

இப்படியாக மதநம்பிக்கையிலே, அதன் வழிபாட்டு முறைகளிலே தன் இளவயதிலேயே தன் மனதைப் பறிகொடுத்தான். ஏனைய மத வழிபாட்டு முறைகளைப் பற்றி அறிய மிகுந்த ஆவல்பட்டான். சந்தர்ப்பம் கிடைக்கும் பொதெல்லாம் ஏனையோரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள முற்பட்டான்.

அப்போது ரஷ்யாவிலே இருந்த ஒரு சில பிரிவுகளின் வழிபாட்டு முறைகள் பலராலும் ஏற்றுக்கொள்ள முடியாதனவாக இருந்தன. அவை முறை தவறிய வழிபாட்டு முறைகள். அதுமட்டுமல்லாமல் பெரும் பான்மையானவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியாத கொள்கைகளையும் கொண்டிருந்தன. பலர் அவற்றை விரும்பாதபோதிலும், அவற்றைப் பின்பற்றுவதற்கும் சிலர் இருந்தார்கள்.

அவற்றில் ஒன்றின் வழிபாட்டு முடிவிலே, அங்கிருக்கும் பக்தர்கள் ஒவ்வொருவரும் ஒருவரோடொருவர் விரும்பியவாறு தங்குதடையின்றி உடலுறவு கொள்ளுதல் வேண்டும். நம்பவே முடியாத கொள்கை. முதலில் பாவம் செய்யப்படவேண்டும். பின்னர் செய்த பாவத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் அது அவர்களின் நம்பிக்கை அப்படியென்றால் தான் உண்மையான மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளலாம். அதாவது "பாவத்தைப் பாவத்தால்தான் களையலாம்."

தனிமை, போதனை, தவம், பிரார்த்தனை இவைகளின் பின்னர் ஒவ்வொருவரும் தெய்வீகத் தன்மையை அடையலாம் என்பது இன்னொரு மதப்பிரிவினரின் நம்பிக்கை. இதன் பிரகாரம் ஒருவர் என்ன பாவம் செய்தாலும் பின்னர் புனிதத்தன்மை அடைகின்றார். இதனால் அவர்கள் பூவுலக நியதிகளிலிருந்து உயர்ந்து விடுகின்றார்கள்.

மத நம்பிக்கைகளும், தீர்க்கதரிசன நிலையும், தியானங்களும், இரக்க குணங்களும் இளைஞனான ரஸ்புட்டினின் இதயத்தை

நிரப்பியிருந்த போதிலும், ஒரு சாதாரண இளவயது வாலிபனைவிட மது அருந்துவதிலும், தன்னோடொத்த பெண்களின் பின்னால் சுற்றுவதிலும், அவர்களை வம்புக்கிழுப்பதிலும், விரும்பாதவர்களின் ஆடைகளைக் களைந்தெறிவதிலும், விரும்பியவர்களோடு சேர்ந்து பருவ வயதுக் கேளிக்கைகளிலும், பாலுணர்வுக் களியாட்டங்களிலும் ஈடுபடவும் அவன் தவறவில்லை.

மீண்டும் அந்தக் கிராமத்திலே ஒருநாள் பஞ்சாயத்துக்கூடி ஒரு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஓர் இளம் விதவைப்பெண் அன்று தன் வீட்டிற்கு உணவும், இரவு தங்க இடமும் கேட்டு வந்த ஒருவனுக்கு உணவளித்த பின்னர், தன் உடலையும் தானாகவே அர்ப்பணித்துவிட்டாள். எப்படியோ இதனை அறிந்த ஊர் மக்கள் அவள் செய்த "பெரிய" குற்றத்திற்காக ஊரிலுள்ள பெரியவர்களை யெல்லாம் கூட்டி, "நீதி" வழங்க முற்பட்டார்கள்.

ஊர்ப் பெரியவர்களின் தண்டனைப்படி அவளை நிர்வாணமாக்கி, கைகள் இரண்டையும் கயிற்றால் கட்டி, அதன் மறுமுனையை ஒரு குதிரையில் கட்டி, ஊரார் நடுவே இழுத்துச் சென்றார்கள். அப்போது உறவினர், அயலவர், நண்பர்கள் எல்லோரும் கூடலாய் நின்று தடிகளால் அடித்தும், கற்களால் அவள்மேல் எறிந்தும், அல்லது வேறு எவற்றைக் கொண்டோ தாம் விரும்பியவாறு அவளிற்குத் தமது தண்டனைகளைக் கொடுத்தார்கள். குருதி உடலிலிருந்து கொப்பளித்து ஓட, ஊரார் செய்யும் கோரங்களினால் அவள் கூக்குரலிட்டு அலற, குதிரை அவளுடலை அங்குமிங்கும் இழுத்துக்கொண்டே போனது. அதனைத் தடுப்பதற்கோ, அவளின்மீது இரக்கம் காட்டுவதற்கோ யாருமிருக்க வில்லை. கூடலாக எல்லோரும் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

ஏழை விதவையின் உணர்ச்சிகள் ஊருக்கே தெரியாமல் போனது அதிசயம்தான். அதனைப் பெரியதொரு குற்றமாக எடுத்து, ஊரைக்கூட்டி

அவளை அவமானப்படுத்த பெரியவர்கள் கூடுவதுதான் பாவம். இது போன்ற மூடக்கொள்கைகள் இன்றும் சில நாடுகளில் கடைப்பிடிக்கப் பட்டு வருவதுதான் மேலும் வருந்தத்தக்காக உள்ளது.

பிறந்த மேனியுடன் பாதைவழியே அவளை குதிரை இழுத்துச் சென்றபோது அவளின் மென்மையான உடல் புண்பட்டது. இரத்தம் மேலும் மேலும் பீறிட்டுப் பாய்ந்தது. அறிவு மயங்கிய நிலையில் இருந்த அவளை ஊரின் எல்லையில் விட்டுவிட்டு எல்லோரும் தத்தம் விடுகளுக்குச் சென்றுவிட்டார்கள்.

எல்லாம் ஓய்ந்து நன்றாக இருள் சூழ்ந்தபின் இரக்க குணமுள்ள ரஸ்புட்டின் அவளை இரகசியமாகச் சென்று பார்த்தான். அவளின் கைக்கட்டுக்களை அவிழ்த்துவிட்டான். குற்றுயிரும் குறை உயிருமாகக் கிடந்தவளை ஒரு குடிசையிலே கொண்டுபோய் படுக்க வைத்தான். அவள் சுயநினைவு திரும்பியதும் தனக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட தெய்வசக்தியால் அவளின் காயப்பட்ட இடங்களின்மேல் தன் கையை வைத்துக்கொண்டு கடவுளை வேண்டினான்.

முன்னர் ஒரு குதிரைக்குச் செய்த அதே பரிகாரத்தை இன்று அவன் அந்த இளம் விதவையின் ஒவ்வொரு காயத்தின் மேலும் செய்தான். காயங்களின் அகோரம் ஒவ்வொன்றாகக் குறையத் தொடங்கியது. அவளை ஆற்று நீரில் குளிக்கச்செய்தான். தனது வீட்டிற்குச் சென்று தாயாருக்குத் தெரியாமல் உணவு எடுத்து வந்து அவளுக்குக் கொடுத்தான். ஊரார் அநாதையாக விட்ட உடலிலிருந்த அவளின் உயிரை ஒருவாறு காப்பாற்றிவிட்டான்.

இது நடந்து சில காலம் சென்றுவிட்டது. ஒருநாள் வயலிலே வேலை செய்துகொண்டு நின்றவன் திடீரென்று ஆகாயத்தைப் பார்த்தான். திடீரென அவனுக்கு முன்னே ஆகாயத்திலே பிரகாசமான ஒளி ஒன்று

தோன்றியது. செய்துகொண்டிருந்த வேலைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உடனே தனது முழங்காலில் நின்றுகொண்டு வானத்தை நோக்கி தன் இரு கரங்களையும் கூப்பினான்.

அந்த ஒளி அவனை நோக்கி மெதுவாக வந்துகொண்டே இருந்தது. அதேவேளை அவன் காதுகளிலே ஒரு தெய்வீக கானமும் ஒலித்துக்கொண்டே இருந்தது. அவனது இதயமும் ஆனந்தத்தினால் பூரித்தது. முதலில் மங்கலான ஒரு உருவம் அவனை நோக்கி வருவதுபோல் தெரிந்தது. அண்மையில் வந்தபின்னர்தான் அது யாரென்று தெளிவாகத் தெரிந்தது.

தூய வெள்ளை அங்கி அணிந்து, தலையில் தங்கக் கிரீடம் தரித்த கன்னி மரியாள் அவன் முன்னே காட்சி தந்தார். தனது வலது கரத்தைத் தாழ்த்தி, இடது கரத்தை அவனின் தலைக்குமேல் உயர்த்தி ஆசீர்வதித்த வண்ணம் பரிசுத்த அன்னை அங்கே நின்றுகொண்டிருந்தார்.

அவன் கண்களிலிருந்து நீர் அருவி அருவியாகப் பாய்தோடியது. இதயம் படபடவென அடித்துக்கொண்டே இருந்தது. வார்த்தைகள் ஏதும் வராமல் வாய் தடுமாறியது. அசையாது ஒரு சிலைபோல அப்படியே நின்றுகொண்டிருந்தான். சிறிது நேரத்தின்பின் அந்தத் தெய்வீக கானம் குறைந்துகொண்டு போனது. கன்னி மரியாளின் உருவ ஒளி சிறிது சிறிதாக மறைந்து கொண்டிருந்தது. தோன்றிய அன்னை மேரியின் உருவம் சென்று மறையும்வரை கண்களில் நீர் மல்க அசையாது அப்படியே நின்றுகொண்டிருந்தான்.

அதன் பின்னர் மீண்டும் அவனுள் கேள்விகள் எழுந்தன. எனக்கு மட்டும் கன்னி மேரிமாதா ஏன் காட்சி தந்தார்? எனக்கு அவர் இட்ட கட்டளைகள்தான் என்ன? நான் அவருக்குச் செய்யவேண்டிய பணிகள் என்ன? கேள்விமேல் கேள்விகள் கேட்டபடியே தன் நடுங்கும் கரங்களால்,

உழுதுகொண்டிருந்த குதிரைகளை அவிழ்த்துக்கொண்டு லாயத்தை நோக்கி நடந்தான். பதினெட்டு வயது நிரம்பிய ரஸ்புட்டின் தான் கண்ட அனுபவங்களை தன் தாயாரிடம் கூற எண்ணி அவசர அவசரமாக வீட்டை நோக்கி நடந்தான். ஆனால் அன்றைய அனுபவங்களை "யாரிடமும் சொல்லாதே! யாரிடமும் சொல்லாதே!" என்று ஒரு மாயக்குரல் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருப்பதுபோல் இருந்தது.

வீடு சென்றதும் தாயாரிடம் "அம்மா!. நான் இன்று பண்ணையில் வேலை செய்துகொண்டிருந்தபோது கன்னி மேரியின் திருவுருவத்தை வானில் கண்டேன். அது வெறும் பிரமையோ அல்லது பகற்கனவோ அல்ல. அந்தத் தேவதையின் காட்சியும், அவரிட்ட சைகையும் என்னைப் புனித யாத்திரைக்காகத் தேர்ந்தெடுத்து அதனைச் செய்யுமாறு கட்டளையிட்டதாகவே நான் முழுதாக நம்புகிறேன்" என்றான்.

"இதனை உன் அப்பாவிடம் மட்டும் சொல்லிவிடாதே. அவர் ஏற்கனவே பல தடவைகள் நீ பண்ணையில் ஒழுங்காக வேலைகள் செய்வதில்லை என்று என்னிடம் முறையிட்டுக்கொண்டிருக்கிறார். இதனைக் கேட்டால் என்ன செய்வாரோ எனக்குத் தெரியாது."

இவர்கள் இப்படியாக உரையாடிக்கொண்டு இருக்கையில் தந்தையாரும் அங்கு வந்து சேர்ந்தார் "கிரகோறி கூறியவை என் காதுகளிலும் விழுந்தன. சோம்பேறியான இவனுக்கு பண்ணையில் வேலைசெய்ய விரும்பமில்லை. அதுதான் புனித யாத்திரை செல்லப்போகிறான்' என்கிறார்.

"இல்லை அப்பா! எனக்கு அவர் என்ன சைகை காட்டினார் என்று தெரியும். கன்னிமேரி என்னை புனித பூமிக்குச் சென்றுவருமாறு கட்டளையிட்டார்" என்றான்.

"நான் தினமும் ஏராளம் சைகைகள் காட்டுகிறேன் அவை யொன்றும் உனக்கு விளங்கவில்லை ஆனால் ஆகாயத்திலே இருந்து கொண்டு காட்டிய சைகை மட்டும் உனக்கு உடனேயே விளங்கி விட்டது. அப்படித்தானே?"

"அப்பா நீங்கள் இன்னமும் அந்தப் பக்குவ நிலையை அடைய வில்லை. அதுதான் நான் கூறுவதொன்றும் உங்களுக்குப் புரியாமல் இருக்கின்றது."

"நீ என்னைத் தொந்தரவு பண்ணாமல் எங்காவது போய்வா. எனக்கு பண்ணையிலே ஏராளம் வேலைகள் இருக்கின்றன" என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

"ரஸ்புட்டின், கண்ணே! இதிலே வந்து அமர்ந்துகொள். உன் மனதில் உள்ளவற்றையெல்லாம் ஒன்றும் விடாமல் கூறு." என்று அழைத்து தாயார் தன்னருகே இருத்தி மகனுடன் பேச ஆரம்பித்தார்.

◆◆



4

வயதுக் கோளாறு

தந்தையாரின் பண்ணையில் விளைச்சல் பெருகிக் கொண்டே வந்தது. மேலதிகமாக விளைந்த பொருட்களை எடுத்து, அடுத்து இருக்கும் ஊரில் கொண்டு சென்று விற்றுவர குடும்பத்தில் ஒருவர் தேவைப்பட்டார். ஒருநாள் தந்தையார் ரஸ்புட்டினை அழைத்தார்.

"ரஸ்புட்டின் நாளையிலிருந்து உனக்கு நான் ஒரு புதிய வேலை தரப்போகிறேன். பண்ணையிலே பல பொருட்கள் மீதியாக இருக்கின்றன. நீ அவற்றை எடுத்துச் சென்று அடுத்த ஊரிலிருக்கும் பெரிய சந்தையிலே விற்றுவர வேண்டும்".

"அங்கே போய்வர இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஆகுமல்லவா?"

"அதனாலென்ன? நீ இங்கே பண்ணையிலே வேலை செய்வதை விட உனது பிரார்த்தனைகளிலேயேதான் கூடிய நேரத்தைச் செலவிடு கின்றாய். போகும்போதும் வரும்போதும் நீ பிரார்த்தனைகளைச் செய்து கொண்டே இருக்கலாம். உனக்கு இதுதான் பொருத்தமாக இருக்கும். நீதான் சென்றுவர வேண்டும்" என்றார் சிறிது நளினமாக.

"அதுவும் ஒருவழிக்கு நல்லதுதான். நான் இந்த வேலையைச் செய்து நன்றாகப் பரிச்சயம் ஆன பின்னர் பார வண்டிகளை ஓட்டுபவனாக வேலையில் சேருவேன். அதுவரை நான் தெருவிலே செல்லும்போதும் தெய்வத்தை வேண்டியபடி பிரார்த்தனைகளிலே ஈடுபடலாம், தேவைப்படின் தெருவோரத்தில் இறங்கி நின்றும் துதிக்கலாம். அதுவுமல்லாமல் உங்களுடைய நச்சரிப்புக்களில் இருந்தும் தப்பித்துக் கொள்ளலாம்".

தந்தையார் அவனுடைய கிண்டல் வார்த்தையைக் கேட்டதும் அவனை ஒருமாதிரியாகப் பார்த்தார். "நீ என்ன வேண்டுமானாலும் செய், ஆனால் வண்டியை ஓட்டிக்கொண்டு பிரார்த்தனைகள் செய்யும் போது எனது வண்டியையும், குதிரையையும் மற்றவர்களுடன் மோதி பிரச்சினைகளை மட்டும் விலைக்கு வாங்கிக் கொண்டு வராதே. கொண்டு செல்கின்ற பொருட்களை விற்று அவற்றிற்குரிய பணத்தைக் கொண்டு வா, அதுபோதும்".

"உங்களுக்குக் காசுதான் பெரிது. ஆனால் கடவுளின் பிரார்த்தனைகளிலே இருக்கும் மனத்திருப்தி, நிம்மதி, சந்தோஷம் இவைகளை எவ்வளவு பணம் கொடுத்தாலும் பெறமுடியாது".

"உனது போதனைகள் எனக்குத் தேவையில்லை. பணம்தான் உலகில் முக்கியமென்பதை நீ போகப்போக அறிவாய். அப்போது நான் சொன்னதுதான் சரியென்றும் உணர்வாய் ".

"அப்பா நீங்கள் சொல்வது தவறு. உங்களுக்கு கடவுள் நம்பிக்கை குறைவு. அதனால்தான் இப்படிப் பேசுகின்றீர்கள். எல்லா அனுபவங்களும் தாமாவேதான் வரவேண்டும். அவற்றுக்கு விலை ஏதுமில்லை".

"பெரிய அனுபவசாலி! உனக்குக் கெட்டித்தனமிருந்தால் உனது அனுபவங்களை பணமாக்க முயற்சி செய் பார்க்கலாம். அப்போது நான் சொன்னவைகளைப் பிழையென்று ஒப்புக்கொள்கிறேன்".

சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த ரஸ்புட்டின் மேலும் தந்தையுடன் பேச்சை வளர்க்க விரும்பாமல் வேறு பக்கம் பார்த்துக் கொண்டு நின்றான். குடும்பத்தில் தனக்குக் கொடுக்கப்பட்ட புதிய கடமையைச் செய்வதில் இளைஞனான ரஸ்புட்டின் ஒருவித சுகத்தைக் கண்டான். அதேவேளை ஒருவகையான சுதந்திரத்தையும் கண்டான்.

ரஸ்புட்டின் தந்தையின் கட்டளைப்படி கிழமையில் இரண்டு தடவைகளாவது பொருட்களை எடுத்துச் சென்று அடுத்த ஊரிலிருக்கும் பெரிய சந்தையிலே விற்றுவந்தான். ஒருநாள் பொருட்களை விற்றுவிட்டு வரும் வழியிலே இளைப்பாற எண்ணி ஒரு கடையில் உணவு வகைகளை வாங்கிக் கொண்டு அருகிலிருந்த பெரியதொரு மரத்தின் கீழ் வந்து அமர்ந்தான். உணவை உண்ட வண்ணம் வீதியால் போவோர் வருவோரையெல்லாம் நோட்டம்விட்டபடி இருந்தான். திடீரென்று தேவதைபோல் ஓர் அழகான பெண் தன் முன்னே போவதைக் கண்டான். அவளைக் கண்டதும் அவளின் அழகிலே மயங்கி அப்படியே அசையாது ஒருகணம் நின்றுவிட்டான்.

"யாரிந்தத் தேவதை? இவளை நான் ஒருபோதும் இங்கே காணவில்லையே? தேவ லோகத்திலிருந்து திடீரென இப்போதுதான் இங்கே குதித்தாளோ? மருளுகின்ற மானின் விழிகளை ஒத்த விழிகள், மயிலாக நடைபோடும் மயிலின் நடையை ஒத்த நடை, கொடியிலே கனிந்திருக்கும் கோவைப்பழம்போல் இதழ்கள் சுவைக்கையில் தேனாக இனிக்குமா?" ரஸ்புட்டினின் மனம் காதல் வயப்பட்டுக் கற்பனையில் மிதந்தது.

அந்தப் பெண்ணைக் கண்டவுடனேயே அவளின் அழகிலே மயங்கிவிட்டான். தன் மனதை அவளிடம் பறிகொடுத்தும் விட்டான். அவளின் நினைவாலே வாடினான். போவோர் வருவோரிடமெல்லாம் அவளைப் பற்றியே விசாரித்தான். அப்போது அருகே சென்று கொண்டிருந்த ஒருவரிடம்;

"அண்ணே! அதிலே போகிற பெண்ணை உங்களுக்கு தெரியுமா?"

"ஆளைத் தெரியும், இங்கே அடிக்கடி வந்து போவாள் பார்த்திருக்கிறேன் ஆனால் அவள் யார்? என்ன பெயர்? எதுவுமே எனக்குத் தெரியாது".

"ஏன் அப்படி?"

"அவள் இங்கே வரும்போதெல்லாம் அவளின் அழகை ரசிப்பேன் அவள் மற்றவர்களுடன் பேசும்போது அவளின் இனிமையான குரலை ரசிப்பேன். கலகலவென்று சிரிக்கும்போது அவளின் சிரிப்பை ரசிப்பேன் ஆனால் அவளுடன் நேரடியாக அவளுடன் கதைப்பதற்குத் தைரியம் இன்னும் வரவில்லை".

"அப்போ நீங்களும் நம்ம ஜாதிதான்" என்றான் சிறிது நளினமாக

"நீ என்ன சொல்றே?"

"ஒண்ணுமில்லை" என்று தனது உரையாடலை முடித்தான்.

அதோடு அவருடனான பேச்சை நிறுத்திக்கொண்டு வே யாராவது வருகிறார்களா என்று பார்த்தான். சிறிது நேரம் கழி இன்னொரு பெண் அவ்வழியே வந்தாள்.

"சகோதரி, அதோ அதிலே போகிற பெண் யார்? அவளை உங்களுக்குத் தெரியுமா? நீங்களும் அவளும் விலையுயர்ந்த ஆடைகள் அணிந்திருக்கிறீர்கள். அதனால் ஒருவேளை உங்களுக்கு அவளைத் தெரிந்திருக்கும். அதனால்தான் கேட்டேன்."

இதனைக் கேட்டவுடன் அந்தப் பெண் சற்று நின்று ரஸ்புட்டினை ஏற இறங்கப் பார்த்தாள். அவனது திடமான உடற்கட்டையும், கண்களில் உள்ள காந்த சக்தியையும் கண்டு தனக்குள் ரசித்தாள். ஆனால் அவற்றை வெளிக்காட்டவில்லை. "நீ அவளைப் பற்றி நிச்சயம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டுமா?"

"ஆமாம், இவளைப் போன்ற அழகியை நான் இதுவரை இப்பூமியிலே கண்டதில்லை. வானில் இருந்து குதித்த தேவதைபோல் இருக்கிறாள். அவளுடைய பெயரைக்கூட யாருக்கும் தெரியவில்லை. கண்களால் கண்டவுடனேயே என்னைக் கவர்ந்துவிட்டாள். என் இதயத்தைத் திருடிவிட்டாள். நான் அவளைக் காதலிக்க விரும்புகிறேன் அதனால்தான் உங்களிடம் கேட்டேன்" என்று தன்னை மறந்த நிலையில் ஏதேதோ பேசினான்.

"அது சரி. நானும் உன்னை நான் இங்கே ஒருநாளும் கண்டதில்லையே, அந்தப் பெண்ணைப்பற்றி அறியுமுன் நீ யாரென்று நான் அறியலாமா?"

"நான் பொக்ரொவஸ்கோவில் வசிக்கிறேன். என் பெயர் ரஸ்புட்டின். அடிக்கடி இந்தச் சந்தைக்கு வருவேன். எனது அப்பா அங்கே பெரிய பணக்காரர். பெரிய பண்ணைக்குச் சொந்தக்காரர்".

"அப்படியா? நீ அடுத்த ஊர்ப் பண்ணைக்காரன் மகனா? நீ கேட்டாயே அந்தப் பெண், அவளின் தோழி நான். அதோ அங்கே

தெரியும் அரண்மனையிலேதான் அவள் இருக்கிறாள். அவள் ஓர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளின் பெயர் ஐரீனா (Irina). போதுமா?" என்று சிறிது கோபமாகக் கூறிவிட்டு அந்தப்பெண் அவ்விடத்தைவிட்டு விரைவாகச் சென்றுவிட்டாள்.

இதனைக் கேட்ட ரஸ்புட்டின் ஒருவித அதிர்ச்சியால் தாக்கப் பட்டான். அப்படியே சிறிது நேரம் வாயடைத்துப்போய் அசையாது நின்றுவிட்டான். அவனோடு ஒத்த வயதுடையவர்களைவிட பாலுணர்வு அதிகமாகக் கொண்டிருந்த ரஸ்புட்டின், அவள் ஓர் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவள், சாதாரண மக்களின் காதலுக்கு இசையமாட்டாள், என்பதை நன்றாக அறிந்திருந்தும் அந்த அரசகுமாரியை இடைவிடாது பின்தொடர்ந்தான்.

அதன் பிறகும் சில தடவைகள் அந்தத் தோழி ரஸ்புட்டினை அதே இடத்தில் பார்த்திருக்கிறாள். ரஸ்புட்டின் அவளுடன் கதைப்பதற்கு முயற்சித்தும் அவள் எதுவும் பேசுவதில்லை. இடையிடையே ஏளனப் புன்னகையை வீசுவாள், அல்லது கண்டும் காணாததுபோல் சென்று விடுவாள்.

ஒருநாள் அரண்மனைப் பூங்காவிலே ஐரீனாவும் தோழியும் தனியே இருந்தபோது தோழி மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

"ஐரீனா, நான் உங்களிடம் ஒரு விடயம் கூறவேண்டும். கடந்த சில நாட்களாக பொக்ரோவஸ்கோவில் இருக்கும் ஒருவர் இங்கே உங்களைக் கண்டு, உங்கள் மேல் தீராத காதல் கொண்டு அலைகிறார். இன்றுகூட நான் அவரை சந்தையிலே பார்த்தேன். உங்களுடன் பேசுவதற்காகத் துடியாகத் துடிக்கின்றார்".

ஆச்சரியத்துடன் தோழியைப் பார்த்த ஐரீனா, "அப்படியா? யார் அவன்? அவனின் பெயர் என்ன? அவன் பெரிய அழகனோ?"

"பெயர் ரஸ்புட்டின், சுமாரான அழகன்தான். திடமான தேகக்கட்டும், தீண்டியிழுக்கின்ற கண்களையும் உடையவன். அவன் தந்தையார் அடுத்த ஊரிலே பெரிய பணக்காரராம். ஒரு பெரிய பண்ணைக்குச் சொந்தக்காரராம் ".

இதனைக் கேட்ட அந்த அழகியின் அரச மூளையும் ராஜதந்திரம் பண்ண எண்ணியது. சிறிது நேரம் ஆழமாக யோசனையில் இருந்தாள்.

"சரி, நான் நாளை அங்கே உன்னுடன் வருகிறேன். எனக்கு அவனைக் காட்டு. அவனைப் பார்க்கவேண்டும், பேசவேண்டும்போல் இருக்கிறது".

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"நீ முதலிலே எனக்கு அவனைக் காட்டு, பிறகு நான் எல்லாவற்றையும் உனக்கு விபரமாகக் கூறுகிறேன்."

மறுநாள் இருவரும் ரஸ்புட்டினைச் சந்தித்துப் பேசுவதற்காக கடைத் தெருவிற்குச் சென்றார்கள். ஆனால் அன்று வழமையாக நிற்கும் இடத்தில் ரஸ்புட்டினைக் காணவில்லை. சிறிது ஏமாற்றத்துடன் திரும்பிய இருவரும் மறுநாளும் அங்கே சென்றார்கள்.

அவர்கள் கடைத்தெருவில் சென்றுகொண்டிருக்கும்போது ரஸ்புட்டின் அவர்கள் எதிரே தனது வண்டியுடன் நிற்பதைக் கண்டார்கள். ரஸ்புட்டினை ஐரீனாவுக்கு அவள் தோழி தனது கண்களால் அடையாளம் காட்டினாள். ஐரீனா அவனை இரகசியமாக நோட்டம் விட்டாள். மறுகணம் தனது தோழியின் காதுகளில் எதையோ இரகசியமாகக் கூறினாள்.

மறுநிமிடமே தோழி தாம் சென்றுகொண்டிருந்த பாதையை விட்டு ரஸ்புட்டினை நோக்கி மெதுவாக வந்தாள். அவர்களையே பார்த்துக்கொண்டிருந்த ரஸ்புட்டினுக்கு தோழி தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் தன் கண்களையே நம்பமுடியவில்லை. அவள் அவனருகே வந்து கூறியதைக் கேட்டதும் தன் காதுகளையும் நம்ப முடியவில்லை.

"அழகனே! நலமாக இருக்கின்றீரா? நீர் அன்று கூறியதை நான் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. உம்மைப்போலவே எனது எஜமானியும் உம்மை விரும்புகிறார். உம்மை உடனே இரகசியமாகச் சந்திக்க விரும்புகிறார், இன்னும் ஒருமணி நேரத்தில் அதோ அங்கே தெரியும் பெரிய மதிலுக்கு அருகில் இருக்கும் கொட்டகைக்கு வரும்படி கூறினார்" என்று கூறிவிட்டு ஓட்டமாகச் சென்று தன் எஜமானியுடன் இணைந்துகொண்டாள்.

சற்றுத் தொலைவில் சென்றதும் இருவரும் ஒரே நேரத்தில் திரும்பி ரஸ்புட்டினைப் பார்த்தார்கள். அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த ரஸ்புட்டின் உடனேயே எழுந்து அவர்களைப் பின்தொடர ஆரம்பித்தான்.

ஒருவாறு அரண்மனையைச் சுற்றியிருந்த உயர்ந்த மதிலின்மேல் ஏறி அமர்ந்து கொண்டு, படபடக்கும் இதயத்துடன் அவர்கள் வரவையே பார்த்திருந்தான்.

இலேசாக அந்த அரண்மனையையும், அதன் அருகிருந்த அழகிய சிறிய நீரோடை, அதன் மறுபக்கத்திலிருந்த பூங்கா, பச்சைப் பசேல் என்றிருந்த புற்றரைகள், சிறிது தொலைவிலிருந்த கோடை விடுதி எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு வந்தவனின் பார்வை அரண்மனை யின் பின்புறத்தின்மேல் பதிந்ததும் அப்படியே நின்றுவிட்டது. திறந்

கதவுகளுக்கிடையில் அவனுடைய இதயம் கவர்ந்த காதலி நின்றுகொண்டிருந்தாள்.

தனது குளுகுளு உடலின்மேல் குருத்துப் பச்சை நிறத்தில் கழுத்தும் தோள்ப்பட்டையும், அரைவாசி முதுகும் தெரியும்படியான மெல்லிய ஆடை அணிந்தவண்ணம் பின்புறக் கதவுகளைத் திறந்துகொண்டு கோடைவிடுதியை நோக்கி மெதுவாக நடக்க ஆரம்பித்தாள். இடையிடையே ரஸ்புட்டினைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி அழகிய அன்னம்போல் அசைந்து அசைந்து நடந்து வந்து அருகேயிருந்த நீரோடையின்மேல் போடப்பட்டிருந்த பாலத்தின் ஒரு கரையில் நின்றாள்.

தன் காதலி தன்னை நோக்கி வருவதைக் கண்ட ரஸ்புட்டின் இது உண்மையிலேயே நடக்கின்றதா என்று தன்னைத்தானே ஒருமுறை கிள்ளியும் பார்த்துக்கொண்டான். கிள்ளிய இடம் சிறிது வலித்தபோதும் அவன் அதை பெரிதுபடுத்தவில்லை. உண்மை என்று அறிந்ததும் மீண்டும் அவள் வந்த திசையை நோக்கியே பார்வையைச் செலுத்தினான். வந்தவள் அங்கேயே நின்றபடி ரஸ்புட்டினை அந்தக் கோடை விடுதியைச் சுட்டிக் காட்டி அவனை அங்கே போகும்படி தனது கையினால் சைகை காட்டிவிட்டுத் தானும் அதனை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

ரஸ்புட்டின் தான் இருந்த மதிலில் இருந்து அவசரமாக உள்ளே குதித்தான். அவசரத்தில் குதித்தபோது காலகள் இடறுப்பட்டு கீழே விழுந்தான். அவ்வேளையில் தரையில் போடப்பட்டிருந்த கற்களின்மேல் அவனது இடது கால் அடிபட்டு இரத்தம் இலேசாகக் கசிந்தது. எதனையும் பொருட்படுத்தாது சிறிது அடிபட்ட காலை மெதுவாக நொண்டியவாறு அவள் காட்டிய இடத்திற்கு ஓடிச்சென்றான்.

ஒரு திருடனைப்போல அங்குமிங்கும் பார்த்தபடி உள்ளே நுழைந்த ரஸ்புட்டின், அந்த விடுதியின் மறுபுறத்தால் நுழைந்த அதன் நடுவிலே எழிலாக நின்றிருந்த அழகு தேவதையைக் கண்டான். அவனது இதயம் மேலும் மேலும் வேகமாக அடித்தது. அது மார்பகத்தி இருந்த விலா எலும்புகளில் முட்டி மோதுவதுபோல் பலமாக இடித்தது அந்த இடிகளின் அதிர்வினால் அவனது தலையே வெடித்துவிடுமே என்றும் என்னினான். வெடிக்காது என்று உள்மனதில் எண்ணியட அவளை நோக்கி மெதுவாக அடியெடுத்து வைத்தான்.

'என்னிடம் வந்துவிடு' என்பதுபோல் அவள் தன் இ கைகளையும் ரஸ்புட்டினை நோக்கி விரித்தாள். அவளருகே சென் மெதுவாக அவளது தளிர்க் கரங்களைத் தொட்டான். நரம் மண்டலத்தில் காந்தம் பாய்வதுபோல் இருந்தது.

அவளது இடையில் தனது ஒரு கையை வைத்து இலேசாக தடவினான். அவனது இரத்தம் இன்னும் அதிகமாகச் சூடே உடலெங்கும் ஓடியது. உடனே வியர்த்துக் கொட்டவும் ஆரம்பித்தது தீயில்லாமலே உருகும் மெழுகுவர்த்திபோல் ஆனான். கால்க தள்ளாடின, ஒருவாறு சமாளித்துக்கொண்டான். அவள் இவனை தொடுவதும் விடுவதுமாக இருந்தாள். இடையில் தொடுவதை நிறுத்த "உன் கீழ் ஆடைகளைக் களைந்துவிட்டு அடுத்த அறைக்கு வாரும் என்று கூறிவிட்டு அருகிலிருந்த அறைக்குள் சென்றாள்.

அவள் அப்படிக் கூறி முடிக்குமுன்னரே தான் அணிந்திருந்த எல்லா ஆடைகளையும் அரைகுறையாகக் கிழித்தெறிந்துவிட்ட சொர்க்கத்தின் வாசலை நோக்கி ஓடுவதுபோல் அடுத்த அறைக்கு தாவினான். அவள் கூறியபடி அந்த அரச அழகியின் அருகில் சென் நின்றான். காமவெறி தலைக்கேறிய நிலையில் இருந்த ரஸ்புட்டி தான் எங்கு செல்கிறேன், என்ன செய்கிறேன், என்ன சொல்கிறே

என்று அறியாத நிலையில், அங்கே நின்று அவள் சொல்வதை எல்லாம் செய்தான்

ஆடச்சொன்னாள் உடலை நெளித்து ஆடினான், பாடச் சொன்னாள் வாய்க்குவந்தபடி ஏதேதோ எல்லாம் பாடினான். அரைக்குமேலிருந்த கிழிந்த ஆடையைக் களையச் சொன்னாள். சொல்லிமுடிக்கு முன்னரே முழு ஆடைகளையும் களைய முற்பட்டான். ஆனால் அப்படிச் செய்யவில்லை. கைகளுக்கு எட்டாத தூரத்தில் ஒரு குதிரையில் இருந்துகொண்டு அந்த அரச அழகி சொல்வதை யெல்லாம் செய்துகொண்டிருந்த ரஸ்புட்டினின் மனம் இவள் தன் கைகளில் எப்போது கிட்டுவாள் என்றே அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

திடீரென்று அவள் ஏதோ ஒரு சைகை காண்பித்தாள். முன்னரே திட்டமிட்டபடி திடீரென்று அங்கு மறைந்திருந்த அவளது ஏவல் பெண்கள் எல்லோரும் ஓடிவந்தார்கள். என்ன நடக்கிறது என்று ரஸ்புட்டின் அறிய முன்னரே அவனின் மிகுதி உடைகளையும் களைந்து முழுநிர்வாணமாக்கினார்கள். ஆடைகள் அணிந்த பெண்கள் நடுவிலே ஆடைகளின்றி நிற்பதை உணர்ந்த ரஸ்புட்டின் நாணத்தால் குறுகினான். ஆடைகள் இன்றி அரைகுறைக் குளிரிலே நடுங்கிக்கொண்டிருந்த ரஸ்புட்டின்மீது தயாராக வைத்திருந்த பனிக்கட்டிகள் கலந்த குளிர்ந்த நீரை ஊற்றிக் குளிப்பாட்டினார்கள். ரஸ்புட்டின் திகைத்துப்போய் நின்றான்.

இவன் நிலையைக் கண்டு எல்லோரும் கைகொட்டிச் சிரித்தார்கள். அவனது உடலில் தொட்டும், தடவியும், கிள்ளியும், தள்ளியும் தாங்கள் விரும்பியபடியெல்லாம் அவனை இம்சைப்படுத்தி னார்கள். இப்போதுதான் அவனுக்கு அந்த அழகியின் சூழ்ச்சி என்னவென்று விளங்கியது. அதிர்ச்சியும், வெட்கமும், குளிரும்,

ஏமாற்றமும் ஒன்றாகச் சேர்ந்தன. தங்கள் இம்சைகள் எல்லாம் முடிந்தபின்னர் அரைகுறை மயக்கத்திலிருந்த ரஸ்புட்டினை எல்லோருமாகச் சேர்ந்து தூக்கிவந்து கோடை விடுதியின் முன்னால் இருந்த புற்றரையில் போட்டனர். எல்லோரும் சுற்றி நின்று கைகொட்டிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பதினான்கு வயதான டூனியா என்ற பெண் மட்டும் சிறிது ஒதுங்கிக் கொண்டு அங்கு நடப்பவைகளையெல்லாம் அரைமனதுடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இளவயதினரின் கேளிக்கைகளில் இதுவும் ஒன்று. அதுவுமல்லாமல் இவையெல்லாம் அரசகுடும்பத்தில் உள்ளோர்க்கு ஒரு பொழுது போக்கு. ரஸ்புட்டின் அதிர்ச்சியுடனும், ஏமாற்றத்துடனும் அலறியபடியே அந்த இடத்தைவிட்டு வெளியே ஓடிவந்தான். தனது ஆடைகளைத் தேடியெடுத்து அணிந்துகொண்டு அவமானம் மேலிட நலிந்த உடலோடும், நொந்த உள்ளத்தோடும் தனது குதிரை வண்டியில் ஏறி ஊரைநோக்கி விரைந்தான். ஆனால் அங்கு நடந்தவை எதனையும் யாரிடமும் கூறவில்லை.

◆◆



5
திருமணம்

காலங்கள் ஓடிக்கொண்டே இருந்தன. ரஸ்புட்டின் இப்போது இருபத்தொரு வயதை அடைந்துவிட்டான். அவனிடமிருந்த உள்ளொளி மறைந்துகொண்டே சென்றது. இதனால் சற்று மனமுடைந்தவன் இடைவிடாது தியானத்தில் இறங்கினான். ஆனால் எதுவித பயனும் கிடைக்கவில்லை.

ஒருநாள் ஊரிலே ஒரு கொண்டாட்டம். ஊரே அங்கு ஒன்றாகக் கூடியிருந்தது. அந்த ஊர்வழியாகச் சென்றுகொண்டிருந்த ஒரு நாடோடிக் கும்பலும் (Gypsy) அங்கே வந்து சேர்ந்துகொண்டது. ரஸ்புட்டினுக்கு நாடோடி இசையென்றால் வெகுவாகப் பிடிக்கும். அவர்களைக் கண்டதும் ரஸ்புட்டின் அந்தக் குழுவுடனேயே தங்கிவிட்டார். அந்த நாடோடிக் கும்பலின் நாடோடி இசைக்கு இடைவிடாது ஆடிக்கொண்டே இருந்தார்.

நல்ல தேகபலமுள்ள ரஸ்புட்டினால் அதிகநேரம் தொடர்ந்து ஆடமுடியும். ஆனால் மற்றையவர்களால் அது முடியாது. அதேவேளை ரஸ்புட்டினைப்போல் இன்னொரு பெண்ணும், அங்கே இசைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இசைக்கு இடைவிடாது ஆடிக்கொண்டேயிருந்தாள்.

அதனை நன்றாகக் கவனித்துக்கொண்டிருந்த ரஸ்புட்டின் சிறிது நேரத்தின்பின், அவளின் அருகே சென்று மெதுவாகப் பேச்சை ஆரம்பித் தான்.

"எனது பெயர் ரஸ்புட்டின்."

"எனது பெயர் பரஸ்கோவியா (Praskovia)."

"ம்! உங்களைப்போலவே பெயரும் அழகாகத்தான் இருக் கின்றது."

"ஆ! அப்படியா? நீங்கள் பொய் சொல்கிறீர்கள். நீங்கள் கூறுவதுபோல் நான் அப்படியொன்றும் பெரிய அழகியல்ல."

"இல்லை இல்லை. நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது, உங்களின் அழகைப்பற்றி உங்களுக்குத் தெரியாது."

"பெண்களை வர்ணிப்பதில் ஆண்கள் வல்லவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன், ஆனால் அதை இப்போதுதான் நேரில் பார்க்கிறேன்."

"ஒருவருடைய அழகையோ, அறிவையோ, அருஞ்செயல் களையோ அடுத்தவர் சொல்லும்போதுதான் அதற்குச் சிறப்பு அதிகம். நாமே நம்மைப்பற்றிப் புகழ்வதோ, அன்றிப் பெருமைப்படுவதோ இழிவானதாகும். அதேபோல்தான் இதுவும்."

"பெரிய பெரிய வார்த்தைகள் எல்லாம் பேசுகின்றீர்களே! தாங்கள் என்ன பெரும் அறிஞர் பரம்பரையில் வந்தவரோ? அன்றில் கவிஞரின் பரம்பரையில் வந்தவரோ?"

"நான் அப்படியொன்றும் பெரிய அறிஞனுமல்ல கவிஞனுமல்ல, உள்ளதை உள்ளபடி சொன்னேன் அவ்வளவுதான்."

இவர்களின் உரையாடலை அரைகுறையாகக் கேட்டும், கடைக் கண்களால் பார்த்து ரசித்துக் கண்சிமிட்டியவர்கள் அங்கேயும் இருந்தார் கள். ஆனால் அவர்கள் இருவரும் எவரையும் பொருட்படுத்தவில்லை. இருவரும் ஆனந்தமாக உரையாடியபடியே இசைக்கேற்ப ஆடிக் கொண்டேயிருந்தார்கள். நேரம் நடுநிசியைக் கடந்தபோதும் இவர்கள் இளைக்கவில்லை. இருவர் மனங்களும் ஒருவரையொருவர் சந்தித்த இன்பக் கிளர்ச்சியிலே திளைத்துக் கொண்டிருந்ததினால் உடற் களைப்பையும் அறியாது அதிகாலைவரை ஆடிக்கொண்டேயிருந்தார்கள்.

இப்படியாக உரையாடலில் ஆரம்பித்த அவர்களது அறிமுகம் காதலாக மாறியது. இருவரும் அடிக்கடி தனிமையிலே சந்தித்துக் கொண்டார்கள். மனம்விட்டு ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். இறுதில் தாம் திருமணம் செய்வதென்ற முடிவுக்கும் வந்துவிட்டார்கள். ரஸ்புட்டின் தன் தாயாரிடம் சென்று தன் விருப்பத்தைத் தெரிவித்தான். தீர விசாரித்தபின் தந்தையும் தாயும் அவர்கள் முடிவிற்குத் தமது முழுச்சம்மதத்தையும் தெரிவித்தார்கள். பெற்றோர் வசதியாக இருந்தபடியால் ஊரிலிருந்த தேவாலயத்திலே, ஊரார் முன்னிலையில் சிறப்பாக இவர்களுடைய திருமணம் நடந்தேறியது.

காலாகாலத்தில் கணவன்-மனைவியாகி இல்லற வாழ்க்கையிலே புகுந்து, இரண்டு ஆண் மக்களையும், இரண்டு பெண் பிள்ளைகளையும் பெற்றெடுத்தார்கள். ஆனால் விதி அங்கேயும் விளையாடியது. முதலாவதாகப் பிறந்த ஆண்பிள்ளை குழந்தையாக இருக்கும்போதே இறந்துவிட்டது. அடுத்ததாகப் பிறந்த ஆண்பிள்ளையும் சிறிது புத்தி சுவாதீனமற்றதாகவே பிறந்தது.

குடும்பத்தில் முதலாவதாகப் பிறந்த குழந்தை இறந்ததும் ரஸ்புட்டினுக்கு சிறுவயதில் தன் உயிருக்குயிராக இருந்த அண்ணன் நீரில் மூழ்கி இறந்தது மீண்டும் நினைவிற்கு வந்துகொண்டேயிருந்தது. உறங்கிக்கொண்டிருந்த துன்ப நினைவுகள் மீண்டும் தலை தூக்கியாட ஆரம்பித்தன. துன்பச் சுமைகளைத் தாங்கமாட்டாது ரஸ்புட்டின் தவித்தான், துவண்டான்.

பலகாலமாகப் பரிசுத்த ஆன்மாவை மறந்து, படுக்கையறையிலே இல்லற இன்பத்தை அனுபவித்து மகிழ்ந்ததற்காக இறைவனின் கொடுத்த தண்டனையே இது என்று எண்ணியெண்ணி மனம் அங்கலாய்த்ததான். ஆண்டவனின் அருளால் அரிதாகக்கிடைக்கும் அதீதசக்திகள் கிடைத்திருந்தும், ஆண்டவனைச் சிறிதுகாலம் அலட்சியப் படுத்தியதற்கான தண்டனையே அவையென்று இதயம் நொந்தான். மீண்டும் இறைவனை நோக்கிய பயணத்தைத் தொடர அவன் மனம் ஆர்வம் கொண்டது. அதனால் எந்நேரமும் அவன் மனம் அமைதியின்றியே அலைந்துகொண்டிருந்தது.

முன்புபோல் மீண்டும் இறைவனை வேண்டிய தியானங்களில் ஈடுபட்டான். மனக்கண்களிலே கண்டுமகிழ்ந்த ஆண்டவனின் அந்தப் பொன்னிற ஒளி வடிவை மீண்டும் காண விழைந்தான். அமைதியான இடத்திலிருந்து ஐம்புலன்களையும் அடக்கி எல்லா வழிகளில் முயன்றாலும் முடியவில்லை. கண்களை மூடியபடி கடவுளை எண்ணியபடி இருக்கையில் எவ்வளவு நேரந்தான் கரைந்தாலும் அவனால் அந்த உள்ளொளியைக் காணவே முடியவில்லை.

பெருகிவரும் தன் குடும்பத்திற்காக பெரிய வீடும் தேவைப்பட்டது. வசதிபடைத்த குடும்பத்தில் பிறந்ததினால், அந்தக் கிராமமான பொக்ரொவஸ்கோவிலேயே மிகப்பெரிதான வீடொன்றையும் அமைத்தான். தன்னைத் தேடிவரும் பக்தர்கள் இரவில் தங்கிச் செல்வதற்காக பல

அறைகளையும் அதிலே அமைத்தான். புதிய வீட்டை அமைப்பதில் முழுதாக ஈடுபட்டிருந்த ரஸ்புட்டினுக்கு மற்றைய விடயங்களில் ஈடுபட அவ்வளவு நேரம் இருக்கவில்லை.

ரஸ்புட்டின் இன்னொருநாள் வரும்வழியில் தற்செயலாக எங்கோ போவதற்காகக் காத்திருந்த ஓர் இளைஞனைக் கண்டான். அவனைத் தனது வண்டியில் ஏறுமாறு பணித்தான். ஏற்றிய பின்புதான் அவன் வெகோரோர் (Verkhoture) என்னும் இடத்தில் ஒரு சந்நியாசி மடத்தில் வசிக்கும் ஒரு பரிசுத்தமான மாணவன் என்பதைத் தெரிந்து கொண்டான். இதுவும் இறைவன் செயல்தான் என்று எண்ணி தன்னுள்ளே மகிழ்ந்தான்.

அந்த மாணவனிடம் பலவற்றையும் பேசிக்கொண்டு தனது வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தான். அவற்றினிடையே அண்மைக் காலங்களாகத் தான் காணும் கன்னி மாதாவின் காட்சிகளுக்கு என்ன காரணம் என்று விளக்கம் கேட்டான்.

"நீர் ஆண்டவனால் அழைக்கப்படுகின்றீர், ஆண்டவன் தன் கட்டளைகளை நிறைவேற்ற உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கின்றார். ஆண்டவனுடைய கட்டளைகளை நீர் கட்டாயம் செய்ய வேண்டும், இல்லையென்றால் அது தெய்வ நிந்தனையாகும்" என்றான்.

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?"

"நீர் வெகோரோவிற்கு வர வேண்டும். அங்குள்ள சந்நியாசிகள் அதற்குத் துணைபுரிவார்கள். "

"நான் அப்படி வருவதாயின் எனது குடும்பத்தை, மற்றைய வேலைகளை யார் கவனிப்பது? என்னால் அவர்களையெல்லாம் விட்டுவிட்டு வரமுடியாது."

"நீர் கடவுளின் சேவகன். கடவுளிற்கும் உமக்கும் இடையில் உமது குடும்பம் ஒரு தடையாக இருக்கக்கூடாது."

"எனக்கு எழுதவோ வாசிக்கவோ தெரியாது. நான் பாட சாலைக்குச் செல்லவேயில்லை. இந்த நிலையில் ஆண்டவனின் ஆணையை என்னால் சரிவரச்செய்யவே முடியாது."

"எண், எழுத்து இரண்டும் இரு கண்களைப் போன்றவைதான். ஆனாலும் அவைகள் எல்லாம் அவசியமில்லை, ஆனால் ஆண்டவன்மீது நீர் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கின்றீர் என்பதுதான் முக்கியம்."

இப்படியாக இருவரும் வழிநெடுகப் பேசிக்கொண்டே வந்தார்கள். அவன் இறங்குமிடம் வந்ததும் "நான் சொன்னவற்றை மறந்துவிடாதீர்கள், கடவுள் உங்களுக்காக காலமெல்லாம் காத்திருக்க மாட்டார். நீர் அங்கே போகவிரும்பினால் நாளைக்காலை பத்துமணியளவில் இதேயிடத்தில் வந்து நின்றால் நான் உம்மை அங்கே அழைத்துச் செல்வேன்" என்று கூறிவிட்டுச் சென்றான் அந்த மாணவன்.

புதிதாகக் கட்டிய வீட்டு வேலைகள் எல்லாம் முடிந்ததும் கன்னி மாதாவின் தோற்றங்கள் மீண்டும் அவரின் முன்னே தோன்றித் தோன்றி மறைவதாக மற்றையவர்களுக்குக் கூறினார். ஆனால் அதன் அர்த்தங்களை மற்றவர்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

தேவமாதா தனக்கு ஏதோ கட்டளையிட முயல்கிறார் என்றும், ஆனால் தான் தேவமாதாவின் கட்டளைகளைப் புறக்கணிக்கின்றேன் என்றும் அவர் கூறினார். இதனால் இருக்கை கொள்ளாமல் தவித்தார். ஆசையாக மணம் முடித்த மனைவியை அடிக்கடி ஏசினார். அருமையாகப் பெற்றெடுத்த குழந்தைகள் மீது பாசத்தைக்காட்ட மறந்தார். அன்பு காட்ட வேண்டிய எல்லோர் மேலும் எரிந்தும் விழுந்தார்.

பரஸ்கோவியாவிற்கு எதுவுமே புரியவில்லை. தான் ஒரு மனைவிக்குரிய இடத்திலிருந்தாலும், தன் கடமைகளைச் சரிவரச் செய்யவில்லையா? கணவன் மனைவியாக வாழும் உறவில் ஏதும் குறைகள் வைத்துவிட்டேனா? தெரிந்து நான் ஒரு தவறும் செய்யவில்லையே. நான் என்ன தவறு செய்தேன்? என்ன தவறு செய்தேன்? என்று தன்னைத்தானே கேளவி மேல் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருந்தாள். ஆனால் அவளால் அதற்கான விடையைக் கண்டு பிடிக்க முடியவேயில்லை.

ரஸ்புட்டினோ, மீண்டும் மீண்டும் புனித மாதா தனக்கு ஏதோ கட்டளையிடுவதாகவே எண்ணினார். ஆனால் அது என்னவென்றுதான் விளங்கவில்லை. "தாயே! எனக்கு எதுமே செய்யத் தெரியவில்லையே! நான் என்ன செய்ய வேண்டும் என்பதை தயவுசெய்து கூறுங்கள்" என்று நாளிலும் பொழுதிலும் பகிரங்கமாகவே மன்றாடினார்.

இந்தச் சந்தர்ப்பத்திற்குப் பின்னர் ரஸ்புட்டினின் மனதில் மேலும் குழப்பம் ஏற்பட்டது. குடும்பமா? கடவுளா? குடும்பமா? கடவுளா? என்ற கேள்விக் கணைகளாகத் தொடர்ந்து வந்து அவரின் மனதைத் துளைத்துக் கொண்டேயிருந்தது.

ஒரு நாள் இரவு படுக்கையில் படுத்திருந்த ரஸ்புட்டினின் மனைவி, தன்னருகே படுத்திருந்த தனது கணவனைக் காணாது திடுக்குற்று எழுந்தாள். அங்குமிங்கும் தேடினாள் காணவில்லை.

ஒரு மூலையில் மேரி மாதாவின் முன்னிலையில் மெழுகுவர்த்தி ஒன்றை எரிய வைத்துவிட்டு, முழங்காலில் நின்றபடியே பிரார்த்தனை பண்ணிக்கொண்டு நிற்பதைக் கண்டு மெதுவாக எழுந்து அருகே சென்றாள். கணவனின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்துகொண்டேயிருந்தது. மனைவியார் அருகே போவதற்கும் அவர்

பிரார்த்தனையை முடிப்பதற்கும் சரியாக இருந்தது. ஆனால் எழுந்திருக்கவில்லை.

கணவனின் கண்ணீரைக் கண்டவுடன் மனைவிக்கும் கண்கள் குளமாகின. கரைபுரண்டு வந்த கண்ணீரை அவளால் அடக்கவே முடியவில்லை. கண்களில் ஆரம்பமாகி கன்னத்தின் வழியோடி கீழே முழங்காலில் நின்றுகொண்டிருந்த கணவனின் கன்னத்தின்மேல் விழுந்தது. திடுக்குற்றுக் கண்களை விழித்த ரஸ்புட்டின் அருகே அழுதுகொண்டு நின்றுகொண்டிருந்த மனைவியைப் பார்த்து;

"கண்ணே! ஏன் கண் கலங்குகிறாய்? நீ அழவே கூடாது! நீ அழக்கூடாது என்பதற்காக நான் எவ்வளவு சிரமப்படுகின்றேன் தெரியுமா?"

"அத்தான் நீங்கள் இவ்வளவு சோகமாகவும், முகத்தில் துன்பத்தின் சாயலுடனும் இருந்ததை நான் இதுவரை கண்டதேயில்லை. நான் என்ன குற்றம் செய்தேன்? கூறுங்கள்! நீங்கள் துன்பப்படும்படியாக நான் நடந்துகொண்டேனா? அல்லது மனைவி என்ற கடமைகளிலிருந்து நான் தவறி விட்டேனா? அல்லது நான் உங்களுக்கு நல்ல மனைவியாக வந்து அமையவில்லை என்று எண்ணி அமைதியற்றீர்களா? சொல்லுங்கள் அத்தான்!"

ரஸ்புட்டின் ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தார். அவளின் இரு தோள்களையும் தன்னிரு கரங்களால் பிடித்தார். தான் தனது உள்ளொளியோடு அவதிப்பட்டுக் கொண்டிருப்பது தனது மனையாளையும் பாதித்திருக்கும் என்று இதுவரை அவர் எண்ணியிருக்கவில்லை.

"இல்லை, இல்லை அப்படி எதுவும் இல்லை. உன்னைப்போல் ஓர் அருமையான மனைவியை அடைவதற்கு நான் கொடுத்து

வைத்தவன். நீ ஒரு தவறும் செய்யவில்லை" என்று அவளைத் தன் மார்போடு அணைத்தார். மனைவியின் கன்னத்தின் வழியே வழிந்தோடிய நீரைத் துடைத்துவிட்டார். அவளை அணைத்தபடியே அழைத்துச் சென்று கட்டிலில் அமர வைத்தார். தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகள் விழித்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக இருவரும் தாழ்ந்த குரலிலேயே பேசினார்கள்.

இளைஞனாய் இருந்த வேளை மரத்தின் கீழிருந்து தியானம் செய்தது முதல் தான் பெற்ற எல்லா தெய்வீக அனுபவங்களையும் ஒன்றும் விடாமல் அடுக்கடுக்காய்ச் செல்லிக் கொண்டே வந்தார். அவர் கூறக்கூற அவளின் விழிகள் அகலத் திறந்துகொண்டே வந்தன. இறுதியில்;

"தனது கட்டளைகளை ஏற்று நடக்கும்படி அன்னை மேரி என்னை அழைக்கின்றார் என்பதும், அவர் தன்னைப் பின்தொடரும்படி எனக்குக் கட்டளையிடுகிறார் என்பதும் எனக்குத் தெரியும். நான் அவற்றைச் செய்யவில்லை, என்னால் அவற்றைச் செய்யமுடியவில்லை. நான் அவற்றையெல்லாம் உதாசீனம் செய்தேன்."

"நீங்கள் எதையும் உதாசீனம் செய்யவில்லை. ஒரு நல்ல கணவனாக, ஒரு நல்ல தந்தையாக இருக்கிறீர்கள். எமக்கு நல்ல வாழ்க்கை அமைந்திருக்கின்றது. நீங்கள் மாதா கோவிலுக்குச் செல்கின்றீர்கள், அவரை வணங்குகின்றீர்கள், தெய்வப்பணிகளும் செய்கின்றீர்கள். இதைவிட வேறென்ன வேண்டும்?"

"இல்லை இல்லை, வெளியே நான் அப்படித்தான் எல்லோருக்கும் தெரிகிறேன். ஆனால் உள்ளே நான் அப்படியல்ல. எல்லோருள்ளும் கடவுள் இருக்கின்றார். உன்னுள்ளும் கடவுள் இருக்கின்றார், என்னுள்ளும் கடவுள் இருக்கின்றார். எனக்காக அவர் சில பணிகளை

வைத்திருக்கின்றார். அவை எனக்கு மட்டும்தான் தெரியும். என் உள்நிலையை அறிய வேண்டுமென்று ஆண்டவன் விரும்புகிறார். இது யாருக்குமே தெரியாது."

இதனைக் கேட்ட ரஸ்புட்டினின் மனைவிக்குத் தலை சுற்றியது. அவர் கூறுவதின் அர்த்தங்கள் எதுவுமே அவளுக்கு விளங்கவில்லை.

"அதற்காக நீங்கள் இப்போது என்ன செய்ய விரும்புகிறீர்கள்?"

"எனக்கு வழிகாட்டும் ஆண்டவனின் அடியார்களையும், ஆசிரியர்களையும் தேடிச் செல்லப் போகின்றேன்."

அவளுக்கு அதிர்ச்சியினாலும், மனத்தெளிவற்ற தன்மையினாலும் தான் என்ன பேசுவது என்று தெரியாமல் ஏதேதோ எல்லாம் பேசினாள்.

"நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று எண்ணுகிறீர்களோ அதனைச் செய்யுங்கள், உடனே செய்யுங்கள். கடவுள் உங்களை அழைத்தால் காலம் தாழ்த்தாமல் உடனே செல்லுங்கள். அதற்குத் தடையாக இருக்க நான் விரும்பவில்லை."

இப்படித்தான் இவள் பேசவேண்டும் என்று எதிர்பார்த்தார். ஆனால் இப்படியாக அவள் இவ்வளவு சீக்கிரம் பேசுவாள் என்று எதிர்பார்க்க வில்லை. இதனைச் சற்றும் எதிர்பார்த்திராத ரஸ்புட்டினுக்கு இது சிறிது ஆச்சரியத்தைக் கொடுத்தாலும் அதனை வெளிக்காட்டவில்லை. மீண்டும் அவளே தொடர்ந்து கேள்விகள் கேட்டாள்.

"அப்படியானால் நீங்கள் எப்போது இங்கிருந்து போகவேண்டும்?"

"எவ்வளவு கூடிய விரைவில் செல்ல வேண்டுமோ அவ்வளவு கூடிய விரைவில் செல்ல வேண்டும். ஆனால் நான் இதுவரை எதுவித ஆயத்தங்களும் செய்யவில்லை."

"நீங்கள் எங்கு சென்றாலும் உங்கள் இறைபணிகள் முடிந்தவுடன் விரைவில் திரும்பி வந்துவிடுங்கள். நாங்கள் எல்லோரும் உங்களுக்காக எப்போதும் காத்திருப்போம்" என்றாள்.

அவள் உண்மையில் தனது கணவனைப் பிரிந்திருக்க ஒருபோதும் விரும்பியதேயில்லை. ஆனால் அன்புக் கணவனின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவேண்டியது மனைவியின் கடமை என்று அவளின் மனதில் பட்டதனால்தான் கணவனுடன் அப்படிப் பேசினாள். அதன் பிறகு அவளுக்குத் தூக்கமே வரவில்லை. அந்தப்படுக்கையில் அங்குமிங்குமாகப் புரண்டுகொண்டேயிருந்தாள். ஆனால் தனது எண்ணம் இவ்வளவு விரைவில் பலித்துவிடும் என்று எண்ணியிராத கணவன் ரஸ்புட்டினோ, எதுவித குழப்பங்களுமின்றி நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டேயிருந்தார்.

இவைகள் நடந்த சில நாட்களுள் ரஸ்புட்டின் தான் பிறந்த கிராமத்தையும், தனது உற்றார் உறவினர்களையும், தன் குடும்பத்தையும் விட்டு விட்டு, இறைவனை நோக்கிய புனிதப்பயணம் என்று சொல்லிக்கொண்டு தனது யாத்திரையை ஆரம்பித்தார்.

◆◆



6
புதிய அனுபவங்கள்

பொக்ரொவஸ்கோ (Pokrovskoe) என்ற கிராமத்திற்கு அருகிலிருந்த வெகொச்சுர்(Verkhoture) என்ற இடத்திலிருந்த சந்நியாசிகளின் மடாலயம் செங்கட்டிகளாலும், கற்களாலும் கட்டப்பட்ட ஒன்று. உயர்ந்த கூரிய கோபுரங்களும், கவிழ்ந்த சட்டிகள் போல் அமைந்த கூரைகளும் கொண்ட மடத்தைச் சுற்றி, கற்களால் ஆன பெரியதொரு மதில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது. பச்சைப்பசேல் என்றிருந்த வயல்வெளிகளினூடாக ரஸ்புட்டின் தனது புதிய மடத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது, ஆங்காங்கே சில துறவிகள் வேலை செய்துகொண்டிருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

அதேவேளையில அருகில் தெரிந்த அழகிய மலைகள், அவற்றினிடையே அமைந்திருந்த செழிப்பான விளைநிலங்கள், ஆங்காங்கே சிறு சிறு கூட்டமாக வளர்ந்திருந்த மரங்கள் எல்லாம் ரஸ்புட்டினை வெகுவாகக் கவர்ந்துவிட்டன. இயற்கைக் காட்சிகள் ரஸ்புட்டினின் உள்ளத்தில் ஆச்சரியத்தையும், ஒருவித புதிய கிளுகிளுப்பையும் ஏற்படுத்திய வண்ணமே இருந்தன.

துறவிகள் மடாலயத்தில் ஒரு புதிய அங்கத்தவராகச் சேர்வது ரஸ்புட்டினுக்குப் பெரிதாக இருக்கவில்லை. அங்கு மேற்பார்வையாளராக இருந்த அனுபவசாலியான ஒரு துறவி சில கேள்விகள் மட்டும் கேட்டார். ரஸ்புட்டினின் நேர்த்தியான, சாமர்த்தியமான பதில்களைக் கேட்டதும் அவர் உடனடியாகவே அங்கு சேர்வதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

புதிய மடாலயத்தில் உள்ள பண்ணைகளில் வேலை செய்வது ரஸ்புட்டினுக்குப் பெரிதாகப்படவில்லை. ஏனெனில் அது அவருக்குப் பழக்கப்பட்டதொன்று. ஆனால் அதிக நேரம் ஆண்டவனை வேண்டித் தியானிக்க அங்கே வசதிகள் அமைந்ததையிட்டு அவரது மனம் அளவில்லா ஆனந்தம் அடைந்தது.

எந்தக் காரியத்திற்கும் இரண்டு பக்கங்கள் உள்ளன. அதேபோல்தான் அந்தத் துறவிகள் மடாலயத்திலும் இரு பிரிவுகள் இருந்ததை சிறிது காலத்திற்குள்ளேயே அறிந்து கொண்டார். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வந்த பழைய முறைகளைக் கடைப்பிடிக்கும் ஒரு பகுதியினர். புதிய, தாராள மனப் போங்குடைய கொள்கைகளையுடைய இன்னொரு பகுதியினர். ஒரு சிறு விடயத்திற்குக் கூட ஒருவரை இன்னொருவர் மறைமுகமாக கள்ளி நகையாடுவதும், இழிவாகப் பேசுவதும் அங்கே இயல்பாகி விட்டதொன்று. இவைகளைப் பார்க்கும்போது ரஸ்புட்டினுக்குத் தகைப்பாகவே இருந்தது. அன்று வரையில் இப்படியாக இவர்கள் இருப்பார்கள் என்று அவர் எள்ளளவேனும் எண்ணியதேயில்லை. எங்கேயோ இருக்க வேண்டிய அவர்களின் எண்ணங்கள், சிந்தனைகள் எல்லாம் தேவையற்ற விடயங்களுக்காக விரயமாகின்றனவே என்று எண்ணி ஆதங்கப்பட்டார்.

சீரமான குளிர்ந்த அறை, சூரிய வெளிச்சத்தைவிட குளிரையே அதிகமாக அனுமதிக்கும் அகன்ற கற்சுவர்களில் அமைந்த குறுகிய

யன்னல், தளர்ந்த கால்களையுடைய கதிரை, அதற்கு ஏற்றாற்போல் ஒரு மேசை, மரத்தாலும், கயிற்றாலும் ஆன கட்டில், அதிலே மெல்லியதொரு மெத்தை. இவைகளே அவரது சொத்துக்கள். இவைகள் ஒன்றையும் அவர் பொருட்படுத்தவில்லை. ஆனால் அந்த மடாலயத்திலே இருந்த ஒற்யெற்ஸ் லுசிவ் (Otyets Losif) என்ற ஒருவரை மட்டும் அவர் மனம் ஏற்க மறுத்தது. அங்கு சென்று அதிக நாட்கள் கழியு முன்னரே அவரைப்பற்றி நன்றாக அறிந்து விட்டிருந்தார்.

ஒரு நாள் இரவு நன்றாகக் கண்ணயர்ந்து தூங்கி கொண்டிருந்தார். திடீரென்று ஏதோ சப்தம் கேட்டு விழித்துக் கொண்டா என்ன நடக்கிறதென்று அறியுமுன்னரே அவரது காதுகளில் யாரே கிசுகிசுப்பது கேட்டது.

"கிரகோறி எவிமோவிச் ரஸ்புட்டின்! நான் தான் ஒற்யெற்ஸ் லுசிவ் வந்திருக்கின்றேன்" என்று காதருகில் ஒரு இரகசியக் குர ஒலித்தது.

திடீரென்று தனது கட்டிலில் எழுந்து உட்கார்ந்தார் ரஸ்புட்டி சப்தம் வந்த திசையை நோக்கித் தன் கண்களைக் கூர்மையாக்கின குள்ள உருவம், ஊடுருவும் கண்கள், மிருதுவான பருத்த உதடுக குறுத்துக் கொழுத்த கைகளையுடைய உருவம் தனனையே உ நோக்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தார். அந்த உருவத்தின் பார்வை ஒருவித வெறுப்புக் கலந்திருப்பதை உடனே அவரால் உணர முடிந்

அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. இந்தக் குள்ளம துறவியைப்போல் ஒரு பத்துப்பேரைச் சமாளிக்கும் உடற்ப ரஸ்புட்டினிடம் இருந்தும், அவருள்ளிருந்த ஏதோ ஒருவித உள்ளுணர்வு அவருக்கு ஏதோ ஒருவித ஆபத்து வரவிருப்பதை உணர்த்துவ போன்றே இருந்தது.

"உமக்கு என்ன வேண்டும்?" என்று சிறிது கோபமாகவே கேட்டார் ரஸ்புட்டின்.

"நான் உன்னுடைய புதிய நண்பன். உன்னுடன் உளமார்ந்த நண்பனாக இருக்க விரும்புகின்றேன். இங்கே தனிமை என்னை வாட்டுகின்றது. நாம் இருவரும் நெருங்கிய நண்பர்களாக இருக்க நான் விரும்புகின்றேன், நான் கூறுவது உனக்குப் புரிகிறதுதானே?" என்று கூறிக்கொண்டே தனது குறுத்துத் தடித்த கரத்தை அவரது ஒரு தொடையில் வைத்து விரல்களால் அழுத்தினார்.

ரஸ்புட்டின் இதுவரை காலமும் மடாலயங்களிலுள்ள தன்னினச் சேர்க்கையாளர்களைப் பற்றியும், அவர்களின் செய்கைகள் பற்றியும் கேள்விப்பட்டிருக்கின்றார். ஆனால் நேரடியாக ஒரு தன்னினச் சேர்கையாளரிடமிருந்து பெற்ற அனுபவத்தை அப்போதுதான் பெற்றார்.

திடீரென்று படுக்கையைவிட்டு எழுந்தார். அங்கு நடந்த எதுவுமே அவருக்குப் பிடிக்கவில்லை. அறையை விட்டு வெளியேறுவதுதான் சரியென்று எண்ணி கதவை நோக்கி விரைவாக நடக்க ஆரம்பித்தார். திடீரென்று ரஸ்புட்டினின் இடுப்பைச் சுற்றி வளைத்துத் தன் இரு கைகளாலும் பிடித்தபடி மீண்டும் அவனே கூறினான்.

"இல்லை, இல்லை நீ எங்கும் போகவேண்டாம், போகக் கூடாது. இங்கேயே இருந்துகொள்ளும். நான் உன்னைத் தொடுவது உனக்கு விருப்பமில்லாவிட்டால் நாம் இருவரும் ஏதாவது பேசலாம்தானே? நாம் இருவரும் பேசக்கூடக் கூடாதா?"

ரஸ்புட்டினுக்கு அவருடன் எதுவிதமான பேச்சுக்களையும் வளர்க்க விரும்பவில்லை. குறிப்பாக அவர் என்ன மாதிரியான மனநிலையில் பேசுகின்றாரோ, அவற்றைச் சிறிதளவேனும் வளர்க்கவே விரும்பவில்லை.

"இன்னொரு தடவையில் பேசிக் கொள்ளலாம். நான் இப்போது தொழுகைக் கூடத்திற்குச் செல்ல விரும்புகின்றேன்" என்று கூறிவிட்டு தன் இடுப்பைச் சுற்றி அரைகுறையாகப் பிடித்திருந்த பிடியைத் தளர்த்திவிட்டு விரைவாக நகர்ந்தார்.

இப்படி நடப்பது இதுதான் கடைசித் தடவையாக இருக்காது என்பது அவருக்குத் தெரியும். பூட்டுக்களோ, திறப்புக்களோ இல்லாத அவரது அறையில் இனிமேல் அங்கு இருக்கும் தளவாடங்களைத் தன் கதவின் உட்புறமாக வைத்துக் கதவை அடைத்துவிட்டுத்தான் இரவில் தூங்கவேண்டும் என்ற முடிவோடு அங்கிருந்து வெளியேறினார்.

இப்படியான தொல்லைகளுக்கிடையில் ரஸ்புட்டினுக்கு ஒற்யெற்ஸ் பீலிக்ஸ் என்ற இன்னொரு ஒரு துறவியின் நட்புக் கிடைத்தது. அந்த மடாலயத்திலிருந்த துறவிகளில் அவரை ரஸ்புட்டினுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதையிட்டு மனம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. இருவரும் மணிக்கணக்கில் இருந்து பேசிக் கொண்டேயிருப்பார்கள். அவர்கள் இருவரின் தெய்வீக நம்பிக்கைகளில் அநேக ஒற்றுமைகள் இருந்ததே அவர்களின் நட்புக்கு மூலகாரணமாக இருந்தது.

சிற்றின்ப வேட்கைகளினால் அவர் உந்தப்பட்டால், அந்தக் காமதேவன் தன் தேகத்தை விட்டு அகலும்வரை, உடலை வருத்தும் தண்டனைகளைத் தனக்குத்தானே கொடுப்பார். இது ஒற்யெற்ஸ் பீலிக்ஸ் அவர்களின் கொள்கைகளில் ஒன்று.

ஒருநாள் ரஸ்புட்டின் காட்டின் நடுவே அமைதியான ஓர் இடத்தில் அமைந்திருந்த மடாலயத்தில் அந்தத் துறவியின் இடத்தை நோக்கிச் சென்றார். அவருடன் மனம்விட்டுப் பேசினார்.

"எனது கண்களுக்குத் தெரியும் பரிசுத்த மாதாவின் காட்சியின் பொருள் என்ன? அவைகள் உண்மையான காட்சிகளா?" இப்படியாகப் பல கேள்விகளை அவர் கேட்டார். அவர் அளித்த பதில்கள் அவருக்குத் திருப்தியைக் கொடுத்தன.

இறுதியில் "நான் தொடர்ந்தும் வெகொச்சுர் மடாலயத்திலேதான் இருக்க வேண்டுமா?" என்று கேட்டார்.

"ஆண்டவன் மடாலயங்களிலே மட்டும் இருப்பதில்லை. அகில உலகமுமே அவருடையதுதானே. அவர் எப்போதும் உன்னுடனே இருப்பார். அவர் எப்போதும் உன்னைக் கவனித்தபடியேதான் இருக்கின்றார். இதனை ஒருநாளும் மறவாது அதற்கேற்றால்போல் நீ வாழவேண்டும்" என்றார்.

அந்தத் துறவியின் பதில்கள் ரஸ்புட்டினை முழுதாகத் திருப்திப் படுத்தவில்லை. ஆனால் ஒரு வழியில் அவருடைய எண்ணமெல்லாம் தன் மனம் செல்லும் திசையினை நோக்கியே அவைகள் அமைந்திருப்பதாகப் பட்டது.

"ஆண்டவன் மடாலயங்களிலே மட்டும் இருப்பதில்லை" என்று அவர் கூறிய வார்த்தைகள் மட்டும் ரஸ்புட்டினின் மனதைவிட்டு மறையவேயில்லை. தான் அங்கிருப்பது நல்லதா? அல்லது வேறெங்காவது செல்வது நல்லதா? என்று அதிக நாட்களாகவே அவர் மனம் அங்கலாய்த்துக்கொண்டே இருந்தது.

இந்த மனநிலையில் ஒருநாள் இரவு தன் கதவினை உள்ளே யாரும் வரவிடாது தடுத்து வைக்கும் காரியத்தைச் செய்யாது மறந்துபோய் அயர்ந்து தூங்கிவிட்டார்.

நடுச்சாமம் இருக்கும். அவனது அறையினுள் ஏதோ சரசரப்புக் கேட்டுத் திடீரென்று கண்விழித்தார். இரண்டு முண்டாசு போட்ட உருவங்கள் அவன் முகத்தருகே குனிந்தபடி நிற்பதைக்கண்டு படுக்கையிலிருந்து துள்ளியெழுந்தார். அவர்கள் யாரென்று அறிந்து கொள்ள அதிகநேரம் பிடிக்கவில்லை. முன்பொருநாள் வந்திருந்த துறவியான ஒற்யெற்ஸ் லுசிவ்வோடு புதிதாக அறிமுகமான துறவி ஒற்யெற்ஸ் பீலிக்ஸும் அங்கே நின்றுகொண்டிருந்தார்கள்.

"உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று உரத்த குரலில் கத்தினார் · ரஸ்புட்டின்.

"சத்தம் போடாதே! நாங்கள் உமக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டோம். நாங்கள் உம்மைச் சந்திப்பதற்காகவேதான் இங்கு வந்திருக்கின்றோம்" என்று கூறியபடி ரஸ்புட்டினுடைய வாயைத் தன் கையால் பொத்தினார் ஒற்யெற்ஸ் லுசிவ்.

"நாங்கள் ஆண்டவனின் சேவகர்கள், புனித நூலான பைபிள் நாம் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும் என்று கூறுவதை மறந்து விட்டாயா?"

"அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு?"

"இருக்கிறது, சொல்லுகிறேன் கேள். நாங்கள் உன்னை நேசிக்கின்றோம், அதனால் உன்னுடன் உறவாக இருக்க விரும்பு கின்றோம், இன்னும் · விரிவாகச் சொன்னால் உன்னுடன் இப்போது உறவாட விரும்புகிறோம். நாங்கள் அதற்காகத்தான் இப்போது இங்கே வந்திருக்கின்றோம்" என்றார் மற்றவர்.

ரஸ்புட்டினுக்கு அதிர்ச்சியும், ஆத்திரமும் ஒன்றாக வந்தன. தனது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர், தான் மனம்விட்டுப் பேசக்கூடிய ஒருவர், தனக்கு அறிவுரை கூறும் ஒருவர் என்று எண்ணியிருந்த இவரா இப்படிப் பேசுவது என்று தனக்குள் எண்ணினார்.

அவர்களது அசிங்கமான வார்த்தைகளையும், உள்நோக்கத்தை யும் உணர்ந்தவர், தன்னைப் பிடித்திருந்த கைகளை விலக்கிவிட்டு;

"என்னுடைய அறையிலிருந்து உடனடியாக இருவரும் வெளியேறுங்கள். இழிவான உங்கள் நடத்தைக்கு நான் ஒருபோதும் உடன்படமாட்டேன். இறைவனை எண்ணவேண்டிய இதயங்களில் உடல் இன்ப இச்சையை வளர்க்க நான் ஒருபோதும் உடந்தையாக இருக்கமாட்டேன்" என்று மீண்டும் உரக்கக் கத்தினார்.

ரஸ்புட்டின் பேசிய வார்த்தைகள் குருடன் காதில் ஊதிய சங்குபோல் இருந்தன. அவரின் நிலையைக் கண்ட இரு துறவிகளும் அவரை பலாத்காரமாகத் தங்கள் விருப்பத்திற்கு இசைய வைக்க முயன்றனர். ஆனால் அவர்களால் முடியவில்லை. அதேவேளை அவர்களின் பிடியிலிருந்து தன்னை விடுவிக்க முயன்றார் ரஸ்புட்டின். சிறிதுநேரம் போராடியபின்னர் திடீரென்று ரஸ்புட்டின் ஒற்யெற்ஸ் லுசிவினுடைய குரல்வளையை எட்டி, இறுகப் பிடித்துக் கொண்டார்.

"உடனே இங்கிருந்து இருவரும் வெளியே போய்விடுங்கள், இல்லையென்றால் உனது குரல்வளையை நெரித்து இங்கேயே உன்னைக் கொன்றுவிடுவேன்" என்றார்.

இதனைச் சற்றும் எதிர்பார்த்திராத துறவி ஒற்யெற்ஸ் லுசிவ் அதிர்ச்சியினால் திடீரென்று இரண்டடி பின்வாங்கினார். பின்னர் ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு ரஸ்புட்டினை நோக்கி;

"இதுவரை என்னோடு யாரும் இப்படிப் பேசியதில்லை. நீ எங்களுடன் கடுமையாப் பேசலாம், காட்டுமிராண்டித் தனமான நடக்கலாம், ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளும். இங்கு எமக்குப் பல நண்பர்கள் இருக்கின்றார்கள். எங்களுக்குத் துணையாக வரவும் பலர் இருக்கின்றார்கள். நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்வோம். உம்மால் எதுவும் செய்துவிட முடியாது" என்றார்.

"எங்கே நீங்கள் செய்வதைச் செய்யுங்கள் பார்க்கலாம். என்னுடலில் கடைசி மூச்சு உள்ளவரை யாரும் என்னை எதுவும் செய்துவிட முடியாது. என் உடம்பில் எவராவது தொட்டால் மறுகணம் அவருடலில் உயிர் இருக்காது". என்று ஆத்திரமும், ஆவேசமும் கலந்த குரலில் கூறியபடி அவர்களை நோக்கி மெதுவாக அடியெடுத்து வைத்த முன்னேறினார் ரஸ்புட்டின்.

ரஸ்புட்டினின் செயலைச் சிறிதும் எதிர்பாராத மற்றைய துறவிக்கு என்ன செய்வதன்று தெரியவில்லை. இரவின் பதுக்கத்தில் மெதுவாக நழுவி, இரகசியமாகக் கதவைத்திறந்து கொண்டு தனது அறையை நோக்கி ஓட்டம் பிடித்தார். மற்றைய துறவியும் பின்னோக்கி அடியெடுத்து வைத்து நடந்தார், முன்னால் ஓடியவரைப் பின்தொடர்ந்து இருளோடு இருளாக மறைந்தார்.

தனது கதவை இறுகச் சாத்திய ரஸ்புட்டின், மேலும் அங்கே தன் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று சிந்திப்பதற்கு அதிக நேரம் இருக்கவில்லை. அவசர அவசரமாகத் தனது உடைகளை மாற்றினார். மீதி உடமைகளையெல்லாம் எடுத்து ஒரு மூட்டையாகக் கட்டினார். மடாலயம் என்ற போர்வையில் அது ஒருவகைச் சிறைக்கூடம். இன்னும் அங்கே இருந்தால் அது தன் எதிர்கால வாழ்வைப் பாழாக்கிவிடும் என்றே அவர் மனம் மேலும் எண்ணியது.

கதவை மெதுவாகத் திறந்து வெளியே பார்த்தார். யாரையும் காணவில்லை. தனது உடமைகளுடன் வெளியே இருந்த பெரிய கதவை நோக்கி மொதுவாக ஓடினார். திறந்த வெளியினூடாக ஓடிச்சென்று வெளிவாசலை அடைந்தார். காவலுக்கு அங்கும் யாரையும் காணவில்லை. வெளிக்கதவை மெதுவாகத் திறந்துகொண்டு பிரதான பாதைக்கு வந்தார்.

கூண்டில் அடைபட்டிருந்த பறவைக்கு விடுதலை கிடைத்தது போன்றதொரு உணர்வே அவருள் எழுந்தது. நிம்மதியாகப் பெருமூச்சொன்றை விட்டார். அமைதியாக இருந்த இரவின் சுதந்திரக் காற்றைச் சுவாசித்தபடியே தனது கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

◆◆



7

சமயமும் சல்லாபமும்

தளர்ந்த நடை, கந்தையான உடை, மெலிந்த உருவம், முகத்தில் நீண்ட தாடி, நாடோடி போன்ற தோற்றம். இரவோடு இரவாக சந்நியாசிகளின் மடாலயத்தைவிட்டு வெளியேறிய ரஸ்புட்டின் தான் பிறந்து வளர்ந்த சொந்த ஊரான பொக்ரொவஸ்கோவை நோக்கியே நடந்துகொண்டிருந்தார்.

கால்கள் பிறந்த இடத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தாலும், உதடுகள் இறைவனை எண்ணித் துதித்தவண்ணமே இருந்தன. ஆனால் அவர் உள்ளமோ முன்னர் ஒருநாள் வயலில் நின்றபோது உயர்ந்த வானிலே அருளோடு கூடித்தோற்றமளித்த அன்னை மேரிமாதாவின் காட்சியை மீண்டும் காணத் துடித்துக்கொண்டே இருந்தது. ஆனால் அதிக நாட்களாக முயற்சி செய்தும் அந்தக் காட்சியின் ஒரு சிறு பகுதியைக்கூடக் காணமுடியவில்லை.

இப்போதெல்லாம் தியானத்தில் இருக்கும்போது அருள்மிகுந்த அன்னை மேரி மாதாவின் காட்சிகளைக் காணமுடிவதில்லை. அதற்குப் பதிலாக அழகு நங்கையரின் ஆடையற்ற தோற்றங்களும்,

முழுநிர்வாணமான காட்சிகளுமே அவரது மனக்கண்களில் மலர்ந்தவண்ணம் இருந்தன.

ஏன் இப்படியெல்லாம் வருகின்றது? நான் ஏதாவது தவறுகள் செய்துவிட்டேனா? ஆண்டவனுக்குச் சேவை செய்வதையே அல்லும் பகலும் சிந்தையில் எண்ணிக் கொண்டிருக்கும் எனக்கு ஏன் இந்த ஏமாற்றங்கள்? என்னால் இனிமேல் அன்னை மேரிமாதாவின் திருவுருவைக் காணவே முடியாதா? என் உள்ளார்ந்த பிரார்த்தனைகள் எல்லாம் இறைவனின் காதுகளில் சென்று விழவில்லையா?

இப்படியாக அவர் மனதிலே கேள்விகள் மேல் கேள்விகளாக எழுந்த வண்ணமேயிருந்தன. மனதிலே ஏற்பட்ட மாறாத குழப்பங்களால், கடவுள் தன்னை ஏதோ காரணங்களுக்காகத்தான் தண்டிக்கின்றார் என்றொரு ஏக்கமும் எந்நேரமும் அவர் மனதை ஆக்கிரமித்துக்கொண்டே இருந்தது.

வரும் வழியில் நன்றாக இருட்டிவிட்டது. மேற்கொண்டு எங்கும் செல்லமுடியாத நிலையில் ஒரு குடிசையின் கதவைத் தட்டி, அன்றிரவு தங்க இடமும், வயிற்றுப் பசிக்கு உணவும் கேட்டார். காட்டிலே தினமும் விறகு வெட்டி விற்கும் அந்தக் குடியானவன் நன்றாகக் களைத்துப்போய் வந்திருந்தபோதிலும் விருந்தாளியாக வந்த ரஸ்புட்டினை வரவேற்று, உணவளித்தான். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு உடல் அலுப்புத்தீர உறங்கச் செய்தான்.

கணவன் உறங்கச் சென்றபோதும் குளுகுளு மேனியுடன் இருந்த அந்தக் குடியானவனின் மனைவி தூங்கச் செல்லவில்லை. அந்தக் குடியானவனின் மனைவிக்கு இரவைக் கழிக்க வந்த ரஸ்புட்டினின் மேல் அளவில்லா மோகம் பிறந்தது. அவனுடன் நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டே இருந்தாள். களைப்புடன் வந்த கணவன்

கண்ணயர்ந்ததும் தன்னிச்சையைத் தீர்க்கப் பல வழிகளிலும் முயன்றாள். அவளது ஜாடை மாடைகளை அவளது கள்ளப் பார்வை களாலும், அவள் கூறும் காம உணர்வுகளைத்தூண்டும் வார்த்தை களாலும், அவள் விடுக்கும் சமிக்கைகளாலும் ரஸ்புட்டின் அறிந்து கொண்டார்.

ஆண்டவனின் சேவகன் என்ற போர்வையில் இருப்பதனால் அதனை மீறி எதுவும் செய்ய முடியவில்லை. இயன்றவரை பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். அவள் மேலும் மேலும் நடந்துகொண்ட முறைகளைப் பார்க்கப்பார்க்க பக்தி என்ற போர்வைக்குள் அடக்கி ைவத்திருந்த காம உணர்வுகள் போர்வையை விட்டு வெளியே வந்தன.

அவளது ஜாடையை குறிப்பால் தானும் அறிந்துவிட்டதாக அவளுக்கு ஜாடை காட்டியபடி, தானும் அவளின் இச்சைக்கு இசைந்தவனாகி தன் இருக்கையைவிட்டு மெதுவாக எழுந்தார். அவளும் ரஸ்புட்டினின் ஜாடையான செயலை அறிந்து, தன் ஆசையை நிறைவேற்றும் ஆர்வத்தோடு அவரை நோக்கி மெதுவாக அடியெடுத்து வைத்தாள்.

ரஸ்புட்டினுக்கு தேகமெல்லாம் மெதுவாக நடுங்க ஆரம்பித்தது. அறியாத வீடு, அறிமுகமில்லாத பெண், காமவெறி தலைக்கேறிய நிலையில் இருந்த ரஸ்புட்டின் மெதுவாகத் தன் தலையை நிமிர்த்தி மேலே பார்த்தார். என்ன ஆச்சரியம்? எதிரே சுவரில் மாட்டப்பட்டிருந்த மேரி மாதாவின் படம்தான் முதலில் அவர் கண்களில் பட்டது. திடீரென ஒருவித அதிர்ச்சியால் தாக்கப்பட்டவர்போல் ஆகிவிட்டார். இச்சையைத் தீர்க்க இரகசியமாக எழுந்தவர் திரும்பவும் படுக்கையில் வந்து தொப்பென வீழ்ந்தார்.

கணப்பொழுதில் காமம் கரை கடந்தபோதும், கடவுள்மேல் கொண்ட பக்தியால் பரவசமானார், தான் கடவுளுக்குப் பாதகம் செய்வதாகவே எண்ணினார். ஆண்டவரே! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்று நாத்தழும்ப திரும்பத் திரும்ப வேண்டியபடி மீண்டும் படுக்கையுள் புகுந்தார்.

இப்படியெல்லாம் நடந்தபின் மறுநாள் காலையில் எப்படி அவள் கண்களில் விழிப்பது? அவளின் கணவனுடன் எப்படி முகம் கொடுத்துப் பேசுவது? மீண்டும் மீண்டும் எழுந்த மனப் போராட்டங்களினால் இரவு முழுவதும் அவர் தூங்கவேயில்லை. நீண்டநேர மனப் போராட்டத்தின் பின் யாருக்கும் எதுவும் சொல்லாமல், காலைச் சூரியன் தன் கரங்களை நீட்டு முன்னரே எழுந்து தனது மூட்டை முடிச்சுக்களுடன் தான் பிறந்த ஊரை நோக்கிய பயணத்தை மீண்டும் தொடர்ந்தார்.

கடந்த இரவு எற்பட்ட மனச் சபலங்களினால் சரியாகக் கண் தூங்காத ரஸ்புட்டினுக்கு வழியெங்கும் தூக்கம் கண்களைத் தழுவ ஆரம்பித்தது. தளர்ந்த கால்களுடன் தள்ளாடியபடியே வந்த ரஸ்புட்டின், தெளிந்த நீர்நிலை அருகே அடர்ந்த மரங்களின் அடங்கிய ஒரு பகுதியில் ஒன்றைக் கண்டார். சோர்வாக இருந்ததனால் சரிவாக இருந்த புற்றரையில் சற்றுக் கண்ணயர்வோம் என்று எண்ணியவாறு அதிலே மெதுவாக அமர்ந்தார்.

ஆன்ால் கண்களிலே தூக்கமோ வந்தபாடில்லை. கண்களை மூடிக் கன்னி மாதாவைக் காண முற்பட்டபோதெல்லாம் கூட, முதல் நாளிரவு சந்தித்த அந்தக் குடியானவனின் பெண்ணின் முழு உருவமே கண்முன்வந்து நின்றது. உடலும், மனமும் களைப்புற்றிருந்ததனால் சிறிது நேரத்தின்பின் அவரையறியாது தூக்கம் கண்களைத் தழுவிக்கொண்டது. ஒருவாறு கண்ணயர்ந்தார்.

காலைச்சூரியன் தன் சுடு கதிர்களை வீசிய வண்ணம் வானிலே மேலெழுந்துவிட்டான். அருகேயிருந்த உயர்ந்த மரத்திலிருந்து அழகிய ஆண் குருவியொன்று தன் துணையைக் காணாது சோகமாகப் பாடிக்கொண்டிருந்தது. சோகமான அந்தக் குருவியின் குரலைக் கேட்டுக் கண்விழித்தார் ரஸ்புட்டின். தனது துணையின் துயர ஒலியைக் கேட்ட பெண் குருவி தானும் பாடியபடியே இன்னொரு மரத்திலிருந்து ஒவ்வொரு கிளையாகத் தாவித் தாவித் தன் துணை நோக்கி வந்துகொண்டிருந்தது.

அமைதியாக இருந்த இடத்தில் கலகலவென்று திடீரென்று சில இளம் பெண்களின் சிரிப்பொலி கேட்டது. குருவிகளைப் பார்த்தபடி தன் குடும்பத்தை எண்ணிக் கொண்டிருந்த அவரது கவனத்தை அது ஈர்த்தது. ஒலி வந்த திசையை நோக்கித் தன் கவனத்தைத் திருப்பினார்.

அடர்ந்த மரங்களிடையே இருந்த அந்தத் தெளிந்த நீர்நிலையிலே இளவயதான மூன்று அழகிகள் ஆடைகள் எதுவுமின்றி ஆனந்தமாக நீராடிக்கொண்டிருந்தார்கள். குளு குளுவென்றிருந்த அவர்களது இள மேனிகளைகளைக் கண்டதும், கொஞ்சுவதுபோல் இருந்த அவர்களது இனிய பேச்சுக்களைக் கேட்டதும் மீண்டும் ரஸ்புட்டினின் தேகமெங்கும் காமச் சுவாலை கட்டுக்கடங்காமல் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

இவ்வளவு காலமும் இறைவனின் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ரஸ்புட்டினுள் அடங்கியிருந்த பெண் ஆசைகள் எல்லாம் ஆர்ப்பரித்து எழுந்தன. எதிரே பிறந்த மேனியுடன் ரதியினை ஒத்த இளம் பெண்களைக் கண்டவுடன், இந்த மன்மதனுக்கு எதனையும் சிந்திக்கத் தோன்றவில்லை. திடீரென்று இருக்கையைவிட்டு எழுந்தார். தான் அணிந்திருந்த உடைகளைக் களைந்து எறிந்தபடி அவர்களை நோக்கி ஓடினார். பிறந்த மேனியுடன் ஓடிச்சென்று தானும் அவர்கள்

குளித்துக்கொண்டிருந்த நீரில் குதித்தார். என்ன நடக்கின்றது என்று யாரும் அறியுமுன்னரே அவர்களுடன் இணைந்து கொண்டார்.

முன்பின் அறிமுகமில்லாத ஓர் இளைஞன் திடீரென்று தம்முடன் இணைந்து கொண்டதை அவர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவர்கள் எதுவித மறுப்பும் தெரிவிக்கவுமில்லை. அவர்களுக்கு அதிர்ச்சியோடு கூடிய ஆனந்தமாக இருந்தது. அந்த இளநங்கையரும் காம உணர்ச்சிகளினால் உந்தப்பட்டனர்.

இளவயதிலே அதிகமானோருக்கு இயற்கையாகவே ஏற்படும் காமம் தலைக்கேறிய நிலையில் இருந்த அந்த நால்வரும் கேளிக்கை விளையாட்டுக்களில் சிறிது நேரம் பொழுதைக் கழித்தார்கள். இறுதியில் ஓர் ஆண்டுகாலமாக அடங்கியிருந்த ரஸ்புட்டினின் காம வேட்கையை அந்த மூவருமாகச் சேர்ந்து தீர்த்து வைத்தார்கள். ரஸ்புட்டினுக்கும் பல மாதங்களாகத் தன்னை வாட்டிய காம வதை தீர்ந்துவிட்டதுபோல் ஓர் உணர்வே ஏற்பட்டது. அந்த நிகழ்விற்குப் பிறகு, தான் மீண்டும் பரிசுத்தமாகி விட்டதாகவே அவர் எண்ணினார்.

அன்றிரவு மீண்டும் பிரார்த்தனையில் ஈடுபட்டபோது அவரால் என்றுமில்லாதவாறு ஆனந்தமாகப் பிரார்த்தனை செய்ய முடிந்தது. காம உணர்வுகள் தணிந்தபின் கன்னி மேரி மாதாவின் திருவுருவைத் தன் அகக் கண்களில் கண்டு தரிசிக்கவும் முடிந்தது. அதுமட்டுமல்லாமல் மாதா தன்னைப் பார்த்துப் புன்னகை செய்வது போன்ற காட்சியையும் தன் மனக்கண்களில் கண்டு மகிழ்ந்தார். ஆண்டவனுடன், அந்த அழகிய வானத்து நட்சத்திரங்கள் எல்லாம் ஒன்றுகூடி ஆசிகள் வழங்குவது போன்ற பிரமையும் அவருள் ஏற்பட்டது. நீண்ட நேரம் முழங்காலில் நின்றபடியே கடவுளைப் பிரார்த்தனை செய்தார்.

பதினேழாம் நூற்றாண்டில் டனிலோ பிலிப்போ (Danilo Filipov) என்பவரால் கிலிஸ்டி (Khlisti) என்ற மதப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. கிலிஸ்டி அதீத சக்திகளைக் கொண்டிருந்ததோடு மட்டுமல்லாமல் செல்லுமிடமெல்லாம் ஆதரவாளர்களை அதிகரிக்கச் செய்யும் வாக்கு வன்மையையும் கொண்டிருந்தார். இந்த ஆதரவாளர்கள் எல்லாம் காந்தசக்தியால் கவரப்பட்ட இரும்புத்துண்டுபோல் ஆனார்கள். அவர்கள் எல்லோரும் மதவெறியர்கள் ஆனார்கள் என்றும் கூறலாம். தமக்கென மிக இறுக்கமான விதிமுறைகளைக் கடைப்பிடித்தார்கள். மத வழிபாட்டு முறைகள், கொள்கைகள் யாவும் ஆதரவாளர்களால் மிகவும் இரகசியமாகவே பேணப்பட்டன.

இவை எப்படியிருந்தபோதும் மற்றைய மத வழிபாட்டு முறைகளிலிருந்து வேறுபட்டதனால் அரசாங்கத்தினால் பலர் தண்டனைக்கும் உள்ளாக்கப்பட்டார்கள். பலர் வேறிடங்களுக்கு வலுக்கட்டாயமாகவும் அனுப்பப்பட்டார்கள்.

இதனை ஆரம்பித்த மதத் தலைவர் இறந்தபின் அப்பதவியை ஏற்ற புதிய மதகுரு பல மாற்றங்களைக் கொண்டுவந்தார். தான் கடவுளின் கட்டளைகளைச் செய்வதற்காக மட்டும் அனுப்பப்பட்ட தூதுவன் என்றார். பரிசுத்த ஆவிபோல் பணிவான, மென்மையான குரலில் பேசி மக்களின் நன் மதிப்பையும் பெற்றார். இதனால் அதிகாரிகளின் ஆதரவையும் பெற்றார். ஆனால் அங்கு நடப்பதோ வேறு.

ரஸ்புட்டின் இவைகளையெல்லாம் முன்பே கேள்விப்பட்டிருந்த போதிலும் அவர்களுடன் தொடர்புகொள்ளவோ அல்லது அவர்களுடன் இணைந்து கொள்வதிலோ சிறிதும் அக்கறை கெண்டிருக்கவில்லை. அவரது புனித யாத்திரை தொடர்ந்துகொண்டேயிருந்தது.

ஒருநாள் ரஸ்புட்டின் நீண்ட தூரம் நடந்தும், தியானித்தும் களைப்புற்றதினால் வழக்கம்போல் வழியிலிருந்த குடிசையில் வசித்தவர்களிடம் அன்றிரவு தங்க இடமும், உண்ண உணவும் கேட்டார். அவர்கள் சம்மதித்தபோதும் அவர்களின் முகம் வாடியிருந்ததை ரஸ்புட்டினால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. காரணம் கேட்டபோது,

"எமது மகள் சிலகாலமாக சுகவீனமுற்று இருக்கின்றாள். எல்லாவகையான மருத்துவங்களும் செய்து பார்த்துவிட்டோம். ஆனால் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை. அவள் இறந்துவிடுவாளோ என்று எமக்குப் பயமாக இருக்கின்றது."

"அப்படியா? தயவு செய்து என்னை அங்கே அழைத்துச் செல்லுங்கள். நான் என்னால் முடிந்த பரிகாரங்களைச் செய்கின்றேன்."

எதுவாகிலும் தம் பிள்ளையைக் காப்பாற்றினால் போதும் என்றிருந்த அந்தப் பெற்றோர் ரஸ்புட்டினை மகளின் படுக்கை அருகே அழைத்துச் சென்றார்கள். மயக்க நிலையிலிருந்த அந்த இளம் பெண்ணின் காய்ந்து உலர்ந்த உதடுகள் இடைஇடையே இலேசாக அசைவதும், உள்வேதனை தாங்கமாட்டாது இடைஇடையே முனகுவதும்தான் அவள் இன்னமும் உயிருடன் இருக்கின்றாள் என்பதனை வெளிப்படுத்திக்கொண்டிருந்தன.

"தயவுசெய்து என்னை இங்கே தனியே விட்டுவிடுங்கள். நான் உங்கள் மகளுக்காகப் பிரார்த்திக்கப்போகின்றேன்" என்று கூறிய ரஸ்புட்டின் தன் முழங்காலில் நின்றபடியே தனது ஒரு கரத்தை நோயாளியின் நெற்றியின்மேல் வைத்துக்கொண்டு, தன் இருகண்களையும் இறுக மூடி மேரி மாதாவை மனமுருக வேண்டியபடி தியானத்தில் ஈடுபட்டிருந்தார். எவ்வளவு நேரம்தான் அப்படி நின்றாரோ

தெரியாது. வெளியே சென்ற பெற்றோர்கள் என்ன நடக்கின்றது என்று அறிய மீண்டும் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தார்கள். என்ன ஆச்சரியம்! மரணப்படுக்கையிலிருந்த மகள் சிறிது சிறிதாகத் தன் கண்களை விழித்துக் கொண்டு எழ முற்பட்டாள்.

"இன்று என்ன நாள்? நான் அதிக நாட்களாக நோயுற்று இருந்தது எனக்குத் தெரியும். நீங்களா என்னைக் குணமாக்கினீர்கள்?" என்று ரஸ்புட்டினைப் பார்த்துக் கேள்விமேல் கேள்விகள் கேட்டாள்.

"இல்லை. என்னால் எவரையும் குணப்படுத்த முடியாது. எல்லாம் அந்த ஆண்டவன் செயல்தான். குழந்தாய்! நீ நன்றாகத் தூங்கு. காலையில் எழும்போது நீ நன்றாகக் குணமாகி விடுவாய்" என்று கூறிவிட்டு வெளியே வந்தார். ஆவலோடு அறைக்கு வெளியே நின்ற பெற்றோருக்கும் இதனையே கூறினார்.

தங்கள் பிள்ளையைக் குணப்படுத்தியதற்காக தாராள மனத்துடன் ரஸ்புட்டினுக்குத் தமது நன்றியைத் தெரிவித்தார்கள். ஏழைகளாயிருந்தபோதும் தம்மால் இயன்றளவு இனிய உணவும் சமைத்துக் கொடுத்தார்கள். பேசும்போதும் ஒரு தேவ தூதுவனோடு பேசுகின்ற பணிவுடனும், பக்தியுடனும் பேசினார்கள்.

"நீங்கள் ஒரு பரிசுத்த, பிரம்மச்சரிய வாழ்க்கை வாழ்கின்றீர்கள் என்றே நான் எண்ணுகின்றேன். அப்படித்தானே?" என்றாள் அந்தக் குடியானவனின் மனைவி.

"இல்லை! பரிசுத்த வாழ்வு வாழ்வதற்கு பிரமச்சரியம் முக்கியம் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை" என்றார்.

"அப்படியா? அப்படியென்றால் நீங்கள் கிலிஸ்டி மதத்தைச் சார்ந்தவரா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அந்த எஜமானி

"இல்லை. நான் அவர்களில் ஒருவன் இல்லை. உண்மையில் அவர்களின் மதத்தைப்பற்றி அதிகீம் எனக்குத் தெரியாது. ஆனால் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த மதப்பிரிவினரைப்பற்றி யாராவது கூறினால் தெரிந்து கொள்ளவும் விருப்பம்" என்றவர் மனதில் என்ன நினைத்தாரோ தெரியாது திடீரென்று;

"நீங்கள் அதில் அங்கத்தவரா? அப்படியென்றால் உங்கள் நம்பிக்கைகளைப்பற்றி எனக்குக் கூறுங்கள்" என்றார்.

இதனைக்கேட்டதும் வாயின்மேல் விரலை வைத்தாள் அந்த எஜமானி. ஏனென்றால் அவளும் அந்த மதத்தைச்சார்ந்தவள்தான். அந்த மதத்தில் இணைந்தவர்கள் அதன் வழிபாட்டு முறைகளையோ, மதத்தின் விதிமுறைகளையோ அல்லது வேறு எதைப்பற்றியுமோ வெளியில் பேசக்கூடாது.

நோயுற்றிருந்த மகள் குணமாகிவிட்ட ஆனந்த மிகுதியினால் அவளையறியாமல் ஏதாவது வாய்தடுமாறி உளறிவிடுவேனோ என்று எண்ணித்தான் அப்படி நடந்து கொண்டாள்.

"என்னால் அவைகளைப்பற்றி எதுவுமே சொல்ல முடியாது. ஆனால் அவளைப் பற்றி அறிய வேண்டுமானால் அதற்குரிய ஒருவரை இங்கு அழைத்துவந்து உங்களுக்கு அறிமுகப்படுத்த என்னால் முடியும்" என்றாள்.

இரண்டாம் நாள் தான் கூறியபடியே நடுத்தர வயதுடைய ஒருவரை அழைத்துவந்து ரஸ்புட்டினுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். இருவரும் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

"உங்களுடைய மதப்பிரிவைப்பற்றி நான் அறிந்தவற்றைத்தான் நான் உங்களுக்குக் கூறினேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அவையெல்லாம் வதந்திகள் என்றுதான் எண்ணுகின்றேன்".

"நீர் கூறுவது அத்தனையும் சரி. ஏனென்றால் எமது மதப்பிரிவின் இரகசியங்கள் வெகுவாகப் பாதுகாக்கப்படுகின்றன. அவற்றை அடியவர்கள் யாரும் வெளியே சொல்லவேமாட்டார்கள்".

அது சரியென்று ஆமோதிப்பதுபோல் ரஸ்புட்டினும் தன் தலையை ஆட்டினார்.

"எமது உடல்தான் ஆண்டவன் வாழும் ஆலயம். அந்த ஆலயத்தின் பசி, தாகம் இவைகளுக்கு அடுத்தாற்போல் மிக வலுவுள்ள சக்தி காமம்தான். உலகின் பல பாகங்களிலுமுள்ள நாடுகளில் உள்ள பல மதப்பிரிவுகளின் கொள்கைகளிலும் இதனையே வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். ஆலயங்களில் வடித்திருக்கும் சிற்பங்களிலும் இவற்றை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

எமது கிறீஸ்தவ மதத்தின் சிலுவைகூட ஆதிகாலத்தில் இப்படியான ஒன்றாகவே அழைக்கப்பட்டது. ஆனால் கி.பி.397 ஆம் ஆண்டே அவை முற்றாகத் தடைசெய்யப்பட்டுவிட்டன" என்றும், முக்கியமாக ஆண்-பெண் உறவுகளையே மதத்துடன் உதாரணம் காட்டி ஒரு நீண்ட பிரசங்கத்தையே அங்கே நிகழ்த்திவிட்டார் அந்த மதகுரு.

அவர் கூறியவற்றைக் கேட்டு ஆச்சரியம் அடைந்த ரஸ்புட்டின் "நீங்கள் இந்த விடயத்தை மிகவும் ஆழமாகத்தான் அறிந்து வைத்திருக்கின்றீர்கள்" என்றார்.

"ஆமாம். ஆனால் நான் இதுவரை கூறியவை கடுகளவுதான். மிகுதி கடல்போல் உள்ளது. எமது மதப்பிரிவு வெறும் எண்ணம்

அல்ல. இதனை அறியத்தான் இப்படிச் சில்வற்றை நான் எடுத்துரைத் தேன்" என்றார் அந்த மதகுரு.

"இப்போதுதான் எல்லாம் சிறிது சிறிதாகப் புரிய ஆரம்பிக்கின்றது. இப்படியான ஒரு மதப்பிரிவு இருப்பதாக இதுவரை எனக்குத் தெரியாமல் போய்விட்டதே" என்றார் ரஸ்புட்டின்.

"நான் கூறியவகைகள் எதுவும் உங்களை ஆச்சரியத்துள் ஆழ்த்தவில்லை என்றே நான் எண்ணுகின்றேன்."

"அப்படி ஒன்றுமில்லை. ஆனால் நான் கேள்விப்பட்டவைகளை வைத்துக்கொண்டு எடுத்த முடிவும், நீங்கள் கூறுவதும் கிட்டத்தட்ட ஒன்றாகத்தான் இருக்கின்றது. சிற்றின்பம் என்ற பேய் சிந்தையில் இருந்தால் ஒருபோதும் முழுமையாகத் தியானிக்க முடியாது. இது எனது அனுபவம்."

"இதனால்தான் உங்கள் மதப்பிரிவினர் மனத்திருப்தி உடையவர் களாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கின்றார்கள் போலும். ஏனையோர் களைவிட இவர்கள் இறைவனின் மிக அருகில் இருப்பது போன்ற உணர்வுடனும் இருக்கின்றார்கள் என்றே எண்ணுகின்றேன்."

"நீங்கள் சொல்வது முழுவதும் சரி."

"இன்றிரவு எமது தேவாலயத்தில் நடக்கவிருக்கும் வழிபாட்டில் நீங்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். உங்களை அங்கு அழைத்துவரும்படி உங்கள் வீட்டுக்காரரிடம் கூறுகின்றேன். மீண்டும் இன்றிரவு சந்திப்போம்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

மதகுருவின் பேச்சிலே மயங்கிவிட்ட ரஸ்புட்டினும் அன்றிரவு நடக்கவிருக்கும் தியானத்திற்காகப் புறப்பட ஆயத்தமானார்.



8

புனிதமான யாத்திரையா?

இரவு வேளையும் வந்தது. இரண்டு பெண் பக்தர்களுடன் ரஸ்புட்டின் அந்தத் தேவாலயத்தை நோக்கிப் புறப்பட்டார். அடர்ந்த காடுகள், அசுத்தமான பாதைகள், இரவின் நிசப்தம் இவைகளைக் கடந்து ஒரு சாதாரண கட்டிடத்தில் அமைந்திருந்த தேவாலயத்தை அடைந்தார்கள். அசுத்தமான தரை பழைய கம்பளம் ஒன்றால் மூடப்பட்டிருந்தது. அதிக உயரமில்லாத மரத்தாலான வளையில் அடுக்கடுக்காகப் பல விளக்குகள் தொங்கிக்கொண்டிருந்தன. எல்லாமாக ஒரு பத்துப்பேர் வரையில்தான் அங்கே கூடியிருந்தனர். அதில் மூவரே ஆண்கள். கூடுதலான பக்தர்களை எதிர்பார்த்துச் சென்ற ரஸ்புட்டினுக்குச் சிறிது ஏமாற்றமாகத்தான் இருந்தது.

புதிய அங்கத்தவரைக் கண்டதும் எல்லோரும் ஆனந்தமாக வரவேற்றனர். அறிமுகம் முடிந்ததும் மதகுரு நடுவில் நிற்க, ஏனையோர்கள் வட்டமாக நின்றுகொண்டிருந்தனர். மதகுரு வழிபாட்டை ஆரம்பித்தார். தேவாலய முறைப்படியே ஆராதனைகள் சென்று கொண்டிருந்தன.

"கடவுள் என்னுள்ளேயே இருக்கின்றார்? நான் முன்னரே கேட்டறிந்த அதே தத்துவம்தான் இங்கேயும் போதிக்கப்படுகின்றதா?" ரஸ்புட்டினின் தியானித்தினூடே மனதில் இக்கேள்வியும் எழுந்தது.

அமைதியாகச் சென்றுகொண்டிருந்த ஆராதனைகள் திடீரென்று திசை மாறின.

"இதோ கடவுள் வழிபாட்டின் உச்ச நிலையை நாம் அடைந்துவிட்டோம். நாமெல்லாம் கடவுளின் அவதாரங்களே!. நாம் ஒருவரை ஒருவர் துதிக்கவும், நேசிக்கவும் வேண்டும். கடவுளின் குழந்தைகளே! ஒருவரை ஒருவர் அன்பால் நேசியுங்கள்!" என்று உரத்த குரலில் கூறினார்.

அது ஒரு அறிவுரை மாதிரி இல்லாமல், ஒரு கட்டளை போன்றே இருந்தது. மறுகணம் ரஸ்புட்டின் சற்றும் எதிர்பாராதவகையில் அந்த மதகுரு தனது உடைகளை அகற்றிவிட்டு பிறந்தமேனியுடன் நின்றிருந்தார். மறுகணம் இன்னொரு பக்தர் தனது உடைகளை அகற்றினார். இப்படியாக எல்லோருமே அவரது கட்டளைக்குப் பணிந்தனர். ரஸ்புட்டின் நாணம் மேலிட அப்படிச் செய்ய விரும்பாதபோதும் அந்த மதகுருவின் கட்டளைக்கு அடிபணிந்து, ஏனையோர்போல் தானும் செய்தார். அதுவும் தன்னை அழைத்துவந்த அந்த எஜமானிக்கு அருகில் நிற்பது என்னவோ போலிருந்தது.

வட்டமாக நின்ற பக்தர் கூட்டம் பரவசத்தால் மெதுவாக, வரிசையாக அசையைத் தொடங்கியது. பின்னர் தங்கள் கால்களால் மட்டும் தாளமிட்டபடி வட்டமாக விரைவு விரைவாக ஆடிக்கொண்டு வலம் வந்துகொண்டிருந்தனர். நிமிடத்திற்கு நிமிடம் சுற்றும் வேகமும், தாளச்சத்தமும் அதிகரித்துக்கொண்டே வந்தன.

திடீரென்று ஒரு பெண் வட்டத்தின் நடுவே அசையாது நின்று கொண்டிருந்த மதகுருமீது பாய்ந்து அவரை நேசத்தோடு அணைத்துக் கொண்டாள். அடுத்த கணமே இருவரும் ஒருவரையொருவர் கட்டித் தழுவியபடி அனைவருக்கும் முன்னால் அந்த அழுக்குப் படிந்த தரையிலே வீழ்ந்து புரண்டனர். ஆனந்தமாக ஒருவரையொருவர் அணைத்தபடி சிற்றின்ப வேட்கை தலைக்கேற ஓருடலும் ஈருயிருமாக இணைந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து அங்கிருந்த அனைவரும் மதகுருவையும், பக்தையையும் பின்பற்றினர். ரஸ்புட்டினுக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமும், உள்ளூர ஒருவித கிளுகிளுப்பும் ஆரம்பமானது. திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து விடுபடு முன்னரே ஒரு கரம் ரஸ்புட்டினுடைய கரங்களைப் பற்றி, தன்னோடு இழுத்து அணைத்து, தன் உடலுடன் நேசத்தோடு இணைத்தும் கொண்டது. அது வேறு யருமல்ல. அவருக்கு இரவு தங்க இடம் கொடுத்து, உணவும் கொடுத்த அந்த எஜமானிதான்.

பக்திப்பரவசத்தால் பக்தர்கள் பிறந்த மேனியுடன் நடாத்திய பிரார்த்தனைகளை இனிமேலும் நடாத்த முடியாது என்ற அளவுக்கு வந்துவிட்டது.

உடனே அங்கு தலைவராக இருந்த மதகுரு, அரை இருளில் தனது ஆடைகளைத் தேடி எடுத்து அணிந்துகொண்டார்.

"கடவுளின் குழந்தைகளே! இத்தோடு இன்றைய பிரார்த்தனைகள் நிறைவடைகின்றன, எல்லோரும் அமைதியாக இருங்கள்" என்றார்.

அடுத்தகணமே எல்லோரும் தமது ஆடைகளைத் தேடியெடுத்து அணிந்துகொண்டார்கள். தமது இருப்பிடங்கள் நோக்கிப் புறப்பட்டார்கள். ரஸ்புட்டினும் அவரை அழைத்துவந்த இரு பெண் பக்தர்களுடனும் தான் தங்கியிருந்த வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

வீட்டிற்குச் சென்றதும் நேரே சென்று சுகவீனமுற்றிருந்த தனது பெண்பிள்ளையைப் பார்த்துவிட்டு வந்த தாய், அவள் அமைதியாகத் தூங்குகின்றாள் என்று கூறிவிட்டு இரவுச் சாப்பாட்டை எடுத்துவந்து எல்லோருக்கும் பரிமாறினாள். பக்திப் பரவசத்தால் பிரார்த்தித்து, உடல் களைப்புற்றுச் சோர்ந்திருந்ததனால் எல்லோரும் உடனே படுக்கைக்கும் சென்றுவிட்டார்கள்.

மறுநாள் காலையில் எழுந்து வழக்கம்போல் தன் கடமைகளை எல்லோருக்கும் செய்தார் அந்த எஜமானி. அவளின் கணவன் வேலைக்குச் சென்றதும், இரவு நடந்தவை பற்றி இன்னும் ஒருமுறை அந்த எஜமானியுடன் விரிவாகப் பேசிப்பார்க்கலாம் என்று முற்பட்டார் ரஸ்புட்டின். ஆனால் அவர் ஒரு நல்ல கற்புள்ள குடும்பப் பெண்ணிற்குரிய அடக்கத்தோடும், பண்போடும் மட்டுமே நடந்து கொண்டாள். மேலும் அவற்றைப் பற்றிப் பேசினால் தனக்கு அவமானமாகப் போகவும் கூடும் என்று எண்ணி எதுவுமே பேசாமல் விட்டுவிட்டார். அந்த மனத் திருப்தியோடு மீண்டும் பிறந்த இடத்தை நோக்கிப் புறப்பட்டார்.

உடல் இன்பத்திலும், உற்சாகமான பிரார்த்தனைகளிலும், புதிய புதிய அனுபவங்களை அனுபவிக்கத் துடிக்கும் ரஸ்புட்டின், மிகவும் குறுகிய காலத்திற்குள்ளேயே கிலிஸ்டி (Khlisti) என்ற மதப்பிரிவிலிருந்தும் கொப்பொஸ்ரி (Skopsty) என்கின்ற மதப்பிரிவிலிருந்தும் பொறுக்கி யெடுத்த கொள்கைகளோடு தனது புதிய கொள்கைகளையும் சேர்த்து அதனை மக்களுக்குப் போதித்தார்.

எவரிடமும் இல்லாத பேச்சுத்திறமையும், கேட்போரை நூற்றுக்குநூறு வீதம் நம்பச்செய்யும் நம்பிக்கையூட்டும் உபதேசங்களும், ஆண்டவன்மேல் அவர்கள் வைத்திருக்கும் அளவில்லாத பக்தி எனும் பயிரை வளரச்செய்யும் நீராக, அதற்கேற்ற உரமாக அமைந்தன.

தன்னைத் தொடரும் பக்தைகளையெல்லாம் ஆண்டவன் பெயரால் பாலுறவுக்கு உட்படுத்தவேண்டும் என்ற அந்தக் கொள்கைமேல் கொண்டிருந்த ஆணித்தரமான நம்பிக்கையே அப்படியாகச் செய்யத் தூண்டியது.

காந்த சக்தியைப்போல் கவரும் ரஸ்புட்டினின் உபதேசத்தினால், தெய்வபக்தி நிரம்பிய சாதாரண குடும்பப்பெண்கள் எல்லாம் தமது உள்ளத்தையும், உடலையும் இறைவனுக்கு அர்ப்பணிக்கத் தயாரானார்கள்.

உயர்ந்த வகுப்பைச்சேர்ந்த பல பெண்கள் தங்கள் மனத்தையும், உடலையும் கடவுளுக்கு அர்ப்பணிக்கிறோம் என்று எண்ணி ரஸ்புட்டின் சொல்வதுபோல் செய்வதற்குத் தயாராக இருந்தார்கள். மதப்பிரிவின் கொள்கைகளை மக்களுக்குச் சிறந்த முறையில் உபதேசிக்கும் திறமை ரஸ்புட்டினுக்கு நிறையவே இருந்தது. மதப்பிரிவின் கொள்கைகளின் மேல் இருந்த நம்பிக்கையினால் அதனை உபதேசித்து, அதற்கு உடன்படுபவர்களுடன் உடலுறவு கொள்வதை தனது பிரார்த்தனைகளுள் இணைத்திருந்தார்.

ரஸ்புட்டினின் புகழ் காட்டுத்தீபோல் எங்கும் பரவலாயிற்று. நாளுக்கு நாள் பக்தர் கூட்டம் பெருகிக்கொண்டே வந்தது. கூடுதலாகப் பெண்கள் கூட்டமே நிரம்பி வழிந்தது. பக்தர்கள் என்ற போர்வையில் புதிய புதிய பாலியல் அனுபவங்களை அனுபவிக்கத் துடித்த பல பெண்களும், ஆண்களும் இந்த மதப்பிரிவில் இணைந்துகொண்டார்கள்.

பிரார்த்தனைகளில் உடலுறவுக் கொள்கையையும் உட்புகுத்திய தால், பக்தர்கள் என்கின்ற போர்வையில் கூட்டம் கரை புரண்டது. காலம் செல்லச் செல்ல இப்படியான விசேட பிரார்த்தனைகளை எங்கெங்கு வசதிப்பட்டதோ அங்கங்கெல்லாம் நடாத்த ஆரம்பித்தார்

ரஸ்புட்டின். காட்டிற்குள்ளும், குடிசைகளுள்ளும், சிறுசிறு கிராமங்களுள் ளும், பண்ணைகளுள்ளும், இடம் கிடைக்குமிடமெல்லாம் நடாத்த ஆரம்பித்தார்.

கடவுள் வழிபாட்டிலும், உபதேசங்களிலும், நோயுற்றோரைக் குணப்படுத்துவதிலும், விசேட ஆராதனைகளிலும் தன் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தார் ரஸ்புட்டின். காலம் வாரங்களாகி, மாதங் களாகி, வருடங்களாகிவிட்டன.

ஆனால் தன் பிள்ளைகள், பிறந்து வளர்ந்த ஊர், கூடி வாழ்ந்த உறவினர் யாவரையும் பிரிந்து யாத்திரை போன ரஸ்புட்டினைக் காணாது அவரின் மனைவி பல இரவுகள் கண்கள் தூங்காது காலத்தைக் கழித்தார்.

பண்ணைகளில் வேலை செய்யப் பல வேலையாட்கள், வீட்டு வேலைகளைக் கவனிக்க இரண்டு வேலைக்காரப் பெண்கள். பண்ணை யில் வருமானம் பெருகிக்கொண்டே வந்தது. வீட்டில் கணவனாக, பிள்ளைகளுக்குத் தந்தையாக ரஸ்புட்டின் இல்லை என்ற குறையே தவிர, வேறு குறைகள் எதுவும் இல்லை. எத்தனை கோடி பணம் இருந்தாலும் வீட்டிலே சந்தோஷமில்லை. மனைவியின் மன்திலே நிம்மதியில்லை.

அவர்களுடைய வீட்டில் ஒரு வேலைக்காரியாக இருக்கும் டுன்னியா (Dunia) என்பவள், சில ஆண்டுகளுக்கு முன் ஐரீனா (Irina) என்ற அரச குடும்பத்துப் பெண்ணின் ஆணைக்கு உட்பட்டு, ரஸ்புட்டினின் ஆடைகளைக் களைந்து, அவமானப்படுத்தி, ஆனந்தம் கண்டவர்களில் ஒருத்தி என்பது யாருக்கும் தெரியாது.

அரச மாளிகையிலிருந்த தனது உயரிய பதவியை விட்டுவிட்டு ரஸ்புட்டின் வீட்டில் வேலைக்காரியாகச் சேர்ந்திருக்கின்றாள். ரஸ்புட்டின் வீட்டில் இல்லாதபோதும் அவர்மேல் கொண்ட அளவுகடந்த பாசத்தால், அன்பால் அவரருகே இருப்பதுபோன்ற உணர்வோடு அங்கே பணிபுரிந்துகொண்டிருந்தாள். அவர் வீட்டில் வசிப்பதில் மகிழ்ந்தாள், அவர் உடமைகளுக்கு அருகிலிருப்பதில் மகிழந்தாள், அவர் நடந்து திரிந்த தரையைச் சுத்தம் செய்வதில் ஆனந்தம் கொண்டாள்.

ரஸ்புட்டினின் மனைவி தினமும் தெருவோரம் நின்று கொண்டு வெளியூரிலிருந்து வருவோர் போவோரிடம் தனது கணவனின் அடையாளங்களைச் சொல்லி, அப்படியான ஒருவரைக் கண்டீர்களா? அப்படிக் கண்டால் தான் கேட்டதாகச் சொல்லுங்கள் என்றும் செய்திகள் அனுப்பி வைப்பார்.

ஒருநாள் ஒரு வழிப்போக்கன் எங்கோ ஓரிடத்தில் ஒரு சந்நியாசி புதிய மடம் ஒன்றை ஆரம்பித்து, கடவுளின் அருளினால் நோயுற்றவர்களைக் குணமாக்குகின்றார் என்று கேள்விப்பட்டாள். அப்போது அது தனது கணவன் ரஸ்புட்டினாகத்தான் இருக்கவேண்டும் என்று உள்ளம் குளிர இறைவனை வேண்டினாள். அதே வேளையில், ஒரு துறவி புதிய மதப்பிரிவை ஆரம்பித்து ஆண்-பெண் உறவுகளுடன் பிரார்த்தனைகள் நடாத்துகின்றார் என்ற இன்னொரு வதந்தியும் கேள்விப் பட்டாள். அப்போது அது தனது கணவனான ரஸ்புட்டினாக இருக்கக் கூடாது என்றும் கடவுளை வேண்டினாள்.

ஆனால் அவை இரண்டையும் நடாத்துவது அவளது கணவன் ரஸ்புட்டின்தான் என்பது அவளுக்கு அப்போது தெரியாது. ஊருக்கு உபதேசம் செய்துகொண்டு உடல் நலமற்றோரைக் குணப்படுத்திவந்த ரஸ்புட்டின், தான் புதிதாக ஆரம்பித்த புதிய மதப்பிரிவின் பிரார்த்தனை

களையே இப்போது தானே முன்னின்று நடாத்தி வருகின்றார் என்பதும் அந்தத் தாய்க்குத் தெரியாது.

புனித யாத்திரை போகிறேன் என்று சொல்லிக்கொண்டு சென்ற தன் கணவன் எப்போது அந்த யாத்திரையை முடித்து வீடு திரும்புவார் என்று வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தார்.

ரஸ்புட்டின் தன்னை அன்னை மேரி புனித பூமிக்குச் செல்லுமாறு கட்டளையிடுகிறார் என்று கூறி பொக்கரவொஸ்கியாவை விட்டு சுமார் இரண்டாயிரம் மைல்கள்வரை நடந்து கடைசியாக கிரேக்க நாட்டின் ஏதோஸ் (Athos) மலையிலுள்ள சந்நியாசி மடத்தை வந்தடைந்தார். இங்கே இரண்டு வருடங்களைக் கழித்தார். அதன் பிறகுதான் தனது புதிய கொள்கைகளையுடைய பிரிவை ஆரம்பித்து போதனைகளையும், தனது அபிலாஷைகளையும் நிறைவேற்றி வந்தார்.

சில வருடங்கள் கழித்து திரும்ப பொக்கரவொஸ்கியாவை வந்தடைந்தபோது ரஸ்புட்டினின் பேச்சிலும், போக்கிலும் முற்றிலும் மாறுபட்டிருந்தார். சுலபத்தில் யாராலும் புரிந்துகொள்ளமுடியாத பேச்சு. புராதன வேதாந்த சாஸ்திரம் கலந்த பேச்சு. மாறுபட்ட கருத்துக்களோடு கூடிய நீண்ட பேச்சு. அர்த்தமில்லாத கற்பனைகளோடு விவிலிய நூலிலிருந்து அரைகுறையாக நினைவுபடுத்தி வைத்திருப்பவற்றைக் குறிக்கோள் காட்டிப் பேசும் பேச்சு. இப்படியாக எவராலும் இலகுவாக விளங்கிக்கொள்ள முடியாதவகையில் பேச்சுக்கள் இருந்தபோதிலும் ரஸ்புட்டின் மற்றவர்களைத் தன்பால் கவர்ந்திழுக்கும் வகையில் பேச்சுவல்லமை படைத்திருந்தார். பொக்கரவொஸ்கியாவில் இருக்கும் சாதாரண மக்களைவிட காந்தசக்தி படைத்த தலைவருக்குரிய அம்சங்கள் அத்தனையும் பொருந்தியவராக இருந்தார்.

காலமும் உருண்டுகொண்டேயிருந்தது. ஒருநாள் மாலை ரஸ்புட்டினின் மனைவியும் குழந்தைகளும் இரவுச்சாப்பாட்டிற்காக அமர்ந்திருந்தார்கள். அந்த வேளையில், யாருடைய அனுமதியுமில்லாமல் ஒரு அன்னியர் உள்ளே நுழைந்தார்.

தலையிலே பழுப்பு நிறமான நீண்ட தலைமுடி, முகத்திலே முடிச்சுக்களுடன் கூடிய ஒழுங்கற்ற தாடி. ரஸ்புட்டினின் மனைவி அதிர்ச்சியால் அப்படியே அசையாது நின்றுவிட்டார். உள்ளே வந்தவர் எதுவும் பேசாது எல்லோரையும் ஒவ்வொருவராக ஏற இறங்கப் பார்த்தார்.

'இவருக்கு என்ன தேவைப்படுகிறது? ஏன் எல்லோரையும் ஏற இறங்கப் பார்த்துக்கொண்டே இருக்கின்றார்?' என்று தன்னுள்ளே எண்ணினாள். ஆனால் வாய் திறந்து எதுவும் கேட்கவில்லை, எல்லோரை யும் ஒவ்வொருவராகப் பார்த்துக்கொண்டே வந்த அழையா விருந்தாளி, இறுதியாக ரஸ்புட்டினின் மனைவியைப் பார்த்து ஓரப் புன்னகையை இலேசாக வீசினார்.

அன்னியரான ஓர் ஆணின் மெல்லிய புன்னகையைக்காண முகம் நாணிய அவர், வேறு பக்கம் திரும்பினார். ஆனால் ஏதோ ஒருவித காந்தசக்தி அவரை மீண்டும் அந்த அன்னியனின் முகத்தைப் பார்க்க வேண்டும்போல் தூண்டியது. என்ன ஆச்சரியம்! அடுத்த கணமே ஓடிச்சென்று அவரை இறுக அணைத்துக் கொண்டார். பிள்ளை களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரே குழப்பமாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. திகைப்போடு எல்லோரும் ஒருவரையொருவர் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே இருந்தனர்.

"அத்தான்! அத்தான்! நீங்களா? நீண்ட தாடியும், நீளமான தலைமுடியுடன் வந்திருப்பது என் ஆசைக் கணவன் கிறகோறி

ரஸ்புட்டினா? ஆண்டவன் பணிகளைச் சிரமேல் கொண்டு ஆண்டுக் கணக்காக எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்த என் அத்தானா இப்போது மீண்டும் எம்மைத்தேடி வந்திருக்கின்றார்? இவ்வளவு காலமும் பிரிந்து வாழ்ந்தது போதும் அத்தான்! இனிமேல் நான் உங்களை எங்குமே போக விடமாட்டேன்" என்று கூறி அவரை இறுக அணைத்தவாறு கண்கலங்கியபடி கூறிக்கொண்டேயிருந்தாள்.

◆◆



9

புகழின் ஆரம்பம்

இப்போது வீடு முழுவதுமே குழப்பத்திற்கு ஆளானது. அந்த அறையில் இருந்த அனைவரும் ஆச்சரியத்திலிருந்து மீள்வதற்கு முன்னால் மீண்டும் அவரே "அத்தான் எம் குழந்தைகளைப் பார்த்தீர்களா? எவ்வளவு பெரியவர்களாக வளர்ந்துவிட்டார்கள். இதுதான், மிற்ரா, இதுதான் மரியா, இதுதான் வர்யா" என்று ஒவ்வொருவராக அறிமுகம் செய்து கொண்டே சென்றார்.

இதற்கிடையில் அவருக்கும் உணவு மேசையில் ஓர் இடம் ஒதுக்கப்பட்டது. வேலைக்காரி டுன்னியா ஓடிச்சென்று சிறந்த ரக திராட்சை மதுவைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

ரஸ்புட்டினும் அமைதியாக இருந்து எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டேயிருந்தார். குழந்தைகளின் குழப்பம் இப்போது ஒருவாறு தீர்ந்துவிட்டது. அங்கே வந்திருப்பது அவர்களுடைய தந்தையார்தான் என்று அறிந்து கொள்வதற்கு அதிக நேரம் எடுக்கவில்லை. குழந்தைகள் ஒவ்வொருவராக சிறிது தயக்கத்துடன்

சென்று தந்தையை அணைத்து முத்தமிட்டனர். ரஸ்புட்டினும் ஒவ்வொருவராகக் குசலம் விசாரித்து உச்சி மோந்தார்.

அதன்பின்னர் ரஸ்புட்டினை உணவருந்தவிடாமல் எல்லோரும் கேள்விமேல் கேள்விகளாகக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். முதற்கேட்ட கேள்விக்கு விடை கூறுமுன்பே மற்றைய கேள்வி கேட்கப் பட்டுவிடும். தந்தையைக் கண்ட ஆவேச மிகுதியால் ஆரவாரப்பட்ட பிள்ளைகளை தாயார் ஒருவாறு கட்டுப்படுத்தி அமைதியை நிலை நாட்டினார்.

ஆண்டுக்கணக்காக அமைதியாக இருந்த வீட்டிலே திடீரென்று எதிர்பாராமல் எழுந்த ஆரவாரத்தைக்கண்டு அக்கம் பக்கத்தில் உள்ள வீட்டுக்காரார்களும் அங்கே வந்து குழுமிவிட்டார்கள். இவைகளைக் கண்ட குழந்தைகளின் இரைச்சல்கள் மேலும் அதிகமாகின. வீடெங்கும் அக்கம் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடன் ஒளிந்தும், ஓடிப்பிடித்தும் விளையாடினார்கள். அவர்களைத் தடுக்க யாருமே முன்வரவில்லை. ஏனென்றால் குழந்தைகளைவிட அங்கே பெரியவர்கள் போடும் சத்தமே பெரிதாக இருந்தது. சிறிய குழந்தைகளும், பெரிய குழந்தைகளும் சேர்ந்து போடும் இரைச்சல்கள் ஒன்றாகச் சேர்ந்து வானத்தைப் பிளந்தன.

இவ்வளவு காலமும் எங்கெங்கு சென்றீர்? என்னென்ன செய்தீர்? என்ற ஒரே கேள்விகளையே பலரும் திரும்பத்திரும்பக் கேட்டார்கள். ரஸ்புட்டினும் ஒரே பதில்களையே திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே இருந்தார். ஆனால் மிகவும் கவனமாக, காக்க வேண்டிய இரகசியங்களைக் காத்தும், சொல்லவேண்டியவற்றை பலரும் விரும்பிக் கேட்கும் வகையிலும் விளக்கம் கொடுத்துக்கொண்டேயிருந்தார்.

அசாதாரணமாக நடக்கும் தேவாலய பிரார்த்தனைகளையோ, பக்தி என்ற போர்வையில் அங்கு நடக்கும் கேளிக்கைகளையோ எள்ளளவேனும் வெளிக்கொணராது வார்த்தைகளை அளவோடு வடித்து, அனைவரும் விரும்பிக் கேட்கும் வேண்டியவற்றை மட்டும் எடுத்துரைத்தார்.

யாரோ எங்கிருந்தோ சில இசைக் கருவிகளைக் கொண்டுவந்தார். தனக்குத் தெரிந்த அளவில் இசையென்ற ஏதோ ஒன்றை வாசித்தார். உள்ளக் களிப்பில் உட்கார்ந்து இருந்தவர்கள் எல்லோரும் ஒருவர் ஒருவராக எழுந்து ஆடத் தொடங்கினார்கள். இசைக்கேற்ப ஆடா விட்டாலும் எல்லோரும் ஏதோ ஆடினார்கள். இடையே இசை நின்ற போதெல்லாம் அவர்களில் பலர் ரஸ்புட்டினிடம் ஓடிவந்து அவர் சொல்லிவிட்ட கதையை மீண்டும் தொடரச் சொல்லிக் கேட்டார்கள்.

விருந்தினர் வருகை அதிகரிக்க அதிகரிக்க தின்பண்டங்களின் தேவையும் அதிகரித்தது. அங்கிருந்த இரு வேலைக்காரர்களும் விருந்தினர்களுக்குத் தேவையான சிற்றுண்டிகள், மதுபானங்களை யெல்லாம் வேண்டியளவு வழங்கி உபசரித்தனர்.

மனைவியும், குழந்தைகளும், உற்றார் உறவிரும் ரஸ்புட்டினின் வருகையால் மனம் பூரித்திருந்தனர். வேலைக்காரி டுன்னியா தான் வேலைகளைச் செய்துகொண்டிருந்தாலும், அவளின் கவனம் முழுவதும் ரஸ்புட்டின் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளையும் அவதானிப்பதிலேயே கூடுதலாக இருந்தது.

ஒயெற்ஸ் பேயோற்ரா (Otyets Pyotr) என்பவர் அரசாங்கத்தால் ஊதியம் பெறும் மதகுருவாகவும், கிராமப் பாடசாலையில் முதல்வராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். அத்தோடு மட்டுமல்லாமல் குழந்தைகளின் ஞானஸ்நானம், திருமணம், நோயுற்றிருப்போருக்கான விசேட பிரார்த்தனைகள், மரணச்சடங்குகள், இறந்தவர்களின் ஆத்ம

சாந்திக்கான சடங்குகள் என்பன எல்லாம் அவர்தான் செய்வார். ஆனால் அவை எல்லாவற்றிற்கும் பணம் கொடுக்கவும் வேண்டும். முக்கியமாக அவரது பதவி மிகவும் வருமானமுள்ள ஒரு பதவியாகவே இருந்தது.

ரஸ்புட்டினின் வருகை அவருக்கு அது ஒரு சவாலாகவே காணப் பட்டது. நோயுற்றவர்கள் ஒயெற்ஸ் பேயோற்ராவின் பிரார்த்தனைகளை நாடவில்லை, தனது அதீத சக்தியால் குணமாக்கும் ரஸ்புட்டினினையே நாடினார்கள். ஆன்மீகத்தை நாடியோர்கள் மதகுரு கொடுக்கும் சிறிய கற்களை வேண்டாமல், ரஸ்புட்டின் கொடுக்கும் உணவை நாடினார்கள்.

ரஸ்புட்டின் தனக்குள்ள அதீத சக்தியால் மக்களின் நோய்களைக் குணப்படுத்துவதில் முதன்மையானவர் என்பதும், அதேவேளையில் சன்மானம் ஏதுமின்றித் தொழிற்படுபவர் என்பதும் அவர் அறிந்ததொன்று. இதனால்தான் அவருக்கு ரஸ்புட்டினின் வருகை அவ்வளவாக மனத்திருப்தியைக் கொடுக்கவில்லை.

வந்ததுதான் வந்தான் பரவாயில்லை போகட்டும் என்றிருந்த ஊர்ப்பாதிரியாருக்கு ரஸ்புட்டின் தனது பண்ணையிலிருந்த ஒரு வீட்டின் கீழேயுள்ள ஒரு அறையைப் பிரார்த்தனைக் கூடம் ஆக்குகிறார் என்ற செய்தி கேட்டதும் 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதுபோல் வேதனைப் பட்டார்'. எப்படியாவது இவற்றைத் தடுத்துவிடவேண்டும் என்று எண்ணி இரவும் பகலும் ஆலோசனை செய்தார்.

ஏற்கனவே ரஸ்புட்டினைப் பற்றி அவதூறான வதந்திகளைக் கேள்விப்பட்டிருந்த அவர், இப்புதிய தேவாலயத்தின் வருகை தன்னை மேலும் அவமதிப்பதைப்போன்ற உணர்வால் உந்திக்கப்பட்டார்.

ரஸ்புட்டினைப் பற்றிப் பல அவதூறான செய்திகளைக் கேள்விப்பட்டிருந்தபோதும், அவற்றை நிரூபிப்பதற்கு அவருக்கு எதுவித

ஆதாரங்களும் கிடைக்கவில்லை. என்ன செய்வது என்று எண்ணி எண்ணி நாட்களைக் கடத்திக்கொண்டிருக்கையில் ரஸ்புட்டினின் புதிய தேவாலய வேலைகள் பூர்த்தியாகிவிட்டன.

தினமும் பெருந்தொகையான மக்கள் அங்கே படையெடுக்க ஆரம்பித்தனர். இவற்றைப் பார்க்கப் பார்க்க அவருக்கு இதயமெல்லாம் வெடிப்பதுபோல் இருந்தது. ரஸ்புட்டினைப் பற்றியும், அவரது வழிபாட்டு முறைகளைப் பற்றியும் மிகவும் இழிவான முறையில் பிரச்சாரம் செய்தார்.

எவ்வளவு இழிவான முறையில் ஒயெற்ஸ் பேயோற்ரா ரஸ்புட்டினின் வழிபாட்டுமுறைகளைக் குறை கூறினாரோ அவ்வளவுக்கு அவ்வளவு அவருடைய தேவாலயத்திலே மக்கள் தொகை குறைந்துகொண்டே வந்தது. 'சாண் ஏற முழம் சறுக்குவது போல்' இருந்தது. இனிமேலும் விட்டுவைத்தால் தான் இருந்த இடமே தெரியாமல் போய்விடக்கூடும் என்ற ஆதங்கப்பட்டார். என்ன செய்வதென்று தெரியாத நிலையில் ரஸ்புட்டினைப்பற்றி மேலும் புகார் செய்ய எண்ணினார். ரஸ்புட்டினைப்பற்றித் தான் முன்பு அரை குறையாகக் கேள்விப்பட்டவற்றையும், என்றுமே கேள்விப்படாதவற்றை யும் ஒன்றாகச் சேர்த்து, நன்றாகத் திரித்து ஒயெற்ஸ் பேயோற்ரா பாதிரியாரிடம் சென்று பல குற்றச்சாட்டுக்களைக் கூறி முறையிட்டார்.

நாளுக்குநாள் புதிய தேவாலயத்தில் புதிது புதிதாக மக்கள் வந்து சேர்ந்த வண்ணமே இருந்தனர். ஒயெற்ஸ் பேயோற்ராவின் குற்றச் சாட்டுக்களைக் கேள்வியுற்ற பாதிரியார் ரஸ்புட்டின் தெய்வநிந்தனை செய்வதாக எண்ணிக் கொதித்தெழுந்தார். அபச்சாரம், தீய ஒழுக்கங்கள் நடைபெறுவதை வேரோடு அறுத்தெறிய வேண்டும் என்று ஆவேசம் கொண்டார்.

உண்மையை அறிவதற்காக உளவாளிகளாக மாற்ற சில மண்டலாதிபதிகளையும், நகர் பாதுகாவலர்களையும் தன்னுடனே இரகசியமாக அழைத்து வந்து இரகசியமாக அந்தக்கிராமத்திலே சென்று சிலநாள் குடியிருக்க ஆயத்தமானார்.

இவர்கள் பாதிரியாரின் யோசனைப்படி ரஸ்புட்டினுடைய பிரார்த்தனைகளுக்குப் போகும்போது சாதாரண கிராமவாசிகள்போல் உடையணிந்து சென்று கலந்துகொண்டார்கள். அதுமட்டுமல்லாமல் துறவிகள் கிராமம் எங்கும் சென்று நடக்கும் பிரார்த்தனைகள் பற்றிக் கடும் விசாரணைகளும் நடாத்தினார்கள்.

உளவறிய வந்தவர்கள் தங்களின் விசாரணைகளின் முடிவில் எதுவித துர்ப்பிரயோகத்தையும் அங்கே அவதானிக்க முடியவில்லை. தங்கள் பாதிரியாரிடம் சென்று தாம் அறிந்தவற்றை எடுத்துரைத்தார்கள்.

தன்னுடைய குற்றச்சாட்டுக்களால் ரஸ்புட்டின் நிச்சயமாக அவரது சேவைகளிலிருந்து நீக்கப்படுவார் என்று கங்கணங் கட்டிக் கொண்டிருந்தவருக்கு ஒரே ஏமாற்றம். குற்றச் சாட்டுக்களைக் கூறியவரே குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டார். பாதிரியாருக்குக் கோபம் பொத்திக்கொண்டு வந்தது. குற்றம் சுமத்தியவர்மேல் பாய்ந்து வீழ்ந்தார்.

"குற்றவாளி ரஸ்புட்டின் அல்ல, நீதான் இப்போது குற்றவாளி. உனக்குக் கொடுக்கப்பட்ட பணிகளைச் செய்யாமல், அடுத்தவர் என்ன செய்கின்றார் என்பதிலேயேதான் நீ கூடிய கவனம் செலுத்தினாய். மக்களுக்கு ஆண்டவனின் அருளைப் போதிக்காமல் அடுத்தவர்மேல் அவதூறான பழிகளைப் பிரசாரம் செய்தாய். இதனால்தான் உமது தேவாலயத்தில் மக்கள் தொகை மிகமிகக் குறைந்துவிட்டது. எது உண்மை, எது பொய் என்று ஆராய்ந்து அறியாமல் குற்றம் சாட்டினாய். ரஸ்புட்டின் ஒரு நிரபராதி. ஓர் உண்மையான தெய்வத் தொண்டர். நோயற்றவர்களைக் குணமாக்கும் அதீத வல்லமை பெற்றவர்.

தான் எறிந்த அம்பு திரும்பத் தன்னையே நோக்கிப் பாய்வதைக்கண்ட ஒயெற்ஸ் பேயோற்ரா திகைத்துப்போனார். இதனை அவர் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

"என்னை மன்னித்துவிடுங்கள்" என்று ஒரு வார்த்தை மட்டும்தான் ஒயெற்ஸ் கூறினார்.

"அதுமட்டுமல்லாமல் நன்றாக மக்களுக்குச் சேவை செய்து கொண்டிருக்கும் ஒருவர்மேல் வேண்டாத பழிகளைச் சுமத்தியதற்காக ரஸ்புட்டினிடம் சென்று மன்னிப்புக் கேட்கவும் வேண்டும். நீ ரஸ்புட்டினிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவையும் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. முன்னர் நான் உம்முடைய கட்டுக் கதைகளைக் கேள்வியுற்றிருந்தாலும் அவைகளைப் புலன் விசாரிக்க முற்படவில்லை ஆனால் இப்போது விசாரித்து எல்லா உண்மைகளையும் தெரிந்துகொண்டேன்" என்று மிகுந்த கோபத்தின் மத்தியில் கூறினார் பாதிரியார்.

பாதிரியாரின் செல்லம்புகளால் தாக்கப்பட்ட ஒற்யெஸ் மேலும் ஆடிப்போனார். எதுவுமே பேசாது தலைகுனிந்தார். ஆனால் காலமும் நேரமும் வரும்போது ரஸ்புட்டினைப் பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்று தன் மனதிற்குள் எண்ணிக் கொண்டார்.

ரஸ்புட்டினின் சிறிய தேவாலயம் "நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக" புதுப்பொலிவுடன் விளங்கியது. மக்கள் வெள்ளம் எந்நாளும் கரைபுரண்டது. முன்புபோல் மதகுருமாருடைய இடையூறுகள், எதுவுமே இருக்கவில்லை. ரஸ்புட்டினின் மனதிலே மகிழ்ச்சி தாண்டவமாடியது. மனையிலே மழலைகள் மகிழ்ச்சியில் திளைத்தார்கள். மனைவியின் மனத்திலேயும் மட்டற்ற மகிழ்ச்சிக் கடல் அலைமோதியது.

இவற்றைக்கண்டு எல்லோரும் மகிழ்ச்சிக்கடலில் குளிக்கவில்லை. ரஸ்புட்டினைக் குற்றம் கூறிய ஒயெற்ஸ் பேயோற்ராவின் மனமே எந்நாளும் உள்ளூர எரிந்துகொண்டேயிருந்தது. ரஸ்புட்டினைப் பழிக்குப் பழி வாங்குவதற்குக் தக்க தருணம் வரும்வரை காத்திருப்பதெனத் தனக்குள் முடிவு செய்துகொண்டு மற்றவர்கள் முன்னால் தானும் மிக்க மகிழ்ச்சியாக இருப்பதுபோல் நடிக்க ஆரம்பித்தார்.

ரஸ்புட்டினின் தேவாலயமும், வீடும் செழிப்புற்று விளங்கின. வருமானமும், வாழ்க்கையின் வசதிகளும் அதிகரித்தன. மனைவியும் மக்களும் மிகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தார்கள்.

ரஷ்யாவின் பழமையை விரும்பும் புராதான தேவாலயங்கள் கடவுள் சில சாதாரண மனிதர்களுக்கு நோய் தீர்க்கும் சக்தியையும், வருமுன் உரைக்கும் தீர்க்கதரிசனத்தையும் வழங்குகிறார் என்று நம்பின. இதேவேளையில் தம்மிடம் அதீத சக்திகள் இருக்கின்றன என்று கூறிக்கொண்டு திரியும் பல சந்நியாசிகளையும் கொண்டுள்ளன. இப்படிப் பட்ட பல சந்நியாசிகள் ரஷ்ய ராச்சியம் முழுவதும் இருக்கும் மடங் களில் தங்குவதும், நாடு முழுவதும் பிரயாணங்கள் செய்வதும், உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் உயர்ந்த பதவிகள் வகிப்பவர்களும் வழங்கும் உபசரணைகளைத் தமக்கு அனுகூலமாக்கிக் கொள்வதிலும் தமது வாழ்வைச் செலவிட்டனர்.

வாழ்நாள் முழுவதும் சந்நியாசி மடங்களிலேயே வாழும் துறவிகள் அதிகார வர்க்கத்தினருக்கு ஆன்மீக வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள். இப்படியானவர்களை முதிர்ந்த அறிவாளிகள் (Starets) என்ற பட்டம் சூட்டி அழைப்பர். இவர்கள் ஆன்மாவைக் குணப்படுத்தவும், ஆண்டவனின் விருப்பத்தை அறிய விரும்புவோர் களுக்கு விளக்கமளிக்கவும் பயிற்றப்பட்டவர்கள். இப்படிப்பட்டவர்கள்

புராதன தேவாலயங்களின் வரம்பிற்குள்ளே நின்று செயற்பட்டாலும் அவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட பிரிதிநிதிகளாகவே கருதப்படுவர்.

ரஸ்புட்டின் ஒருபோதும் ஒரு முதிர்ந்த அறிவாளி என்று அழைக்கப்படவில்லை. உண்மையானவர்கள் மிகவும் கட்டுப்பாடான மதக்கோட்பாடுகளுக்கு உட்பட்டு பாலுறவுகளுக்கு அப்பாற்பாற்பட்டவர் களாகவே வாழ்வார்கள். இவர் தனது சுய தேவைகளைப் பூர்த்தி செய்ய அலையும் ஒரு சாதாரண குடியானவன். அவர் பல புனிதப் பயணங்களைச் செய்வதற்கு தான் ஆண்டவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று நம்பியபோதிலும் அவருடைய உண்மையான நோக்கம் என்ன வென்று யாருக்கும் தெரியாது.

இந்த வேளையில்தான் நாட்டில் அமைதியின்மை ஆரம்பித்தது. அயல் நாடுகளுடன் ஆரம்பித்த கொடூர யுத்தம், நாட்டில் ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள், திருத்தியமைக்கப்பட்ட அரசியல் யாப்பின்படி மக்களின் செல்வாக்கு அதிகரித்தல், அரசியல் கட்சிகளிடையே பிளவு என்பன ரஸ்புட்டினின் காதுகளுக்கு எட்டின. தலைநகரிலிருந்து வரும் செய்திகள் பொக்கரவொஸ்கியாவை வந்தடையும்போது கை கால்கள் முளைத்தோ, அல்லது கை கால்களை இழந்தோதான் வந்து சேர்ந்தன.

பொதுவுடமைத் தத்துவத்தை மக்களிடம் பரப்பி, ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்ட தலைவர்கள் ஆங்காங்கே உருவாகத் தொடங்கினர். நாட்டில் ஆரம்பித்த குழப்பங்கள் ரஸ்புட்டினின் மனதிலும் குழப்பத்தை உண்டாக்க ஆரம்பித்துவிட்டன.

ரஸ்புட்டினுக்கு அமைதியின்றியிருந்த தலைநகருக்குச் சென்று தன் பணிகளை ஆற்றவேண்டும் அல்லது அவற்றிலே தலையிடவேண்டும் என்று உள்மனதிலே ஓர் உந்துதல் ஏற்பட்டிருக்கவேண்டும். அதற்கு இதுதான் சமயம் என்று எண்ணி, ஆண்டவனின் கட்டளையும் அதுதான்

என்று கூறித் தன் குடும்பத்தவரையும் நம்பவைத்து அங்கிருந்து தலைநகரை நோக்கிய தன் பயணத்தை ஆரம்பித்தார். அவரது மனைவி யார் ரஸ்புட்டினுக்கு அன்னை மேரியின் காட்சி மீண்டும் கிடைத்து விட்டதோ என்றும் எண்ணினார். ஆனால் அவரிடம் எதுவும் கேட்கவில்லை.

தலைநகரான சென்ட்பீற்றஸ்பேக்கை நோக்கிய பயணத்திற்கான நாளும் வந்தது. மனைவியும், பிள்ளைகளும், உறவினர்களும் சூழ்ந்து நின்று, ஈரமான விழிகளோடு வழியனுப்பி வைத்தார்கள். புழுதி படிந்த வீதியினூடே கைகளை அசைத்தபடியே அவர்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு சென்று சில நாட்களின்பின் ஒருவாறு ரஷ்யாவின் கசான் (Kazan) என்ற இடத்தை வந்தடைந்து பின்னர் ஒருவாறு அன்றைய தலைநகரான சென்பீற்றஸ்பேக்கை வந்தடைந்தார்.

◆◆



10

தலைநகரில் பதித்த கால்கள்

சென்பீற்றஸ்பேக்கிற்கு வயது இருநூறு. நீவா நதிக்கரையில் சுமார் இருபதினாயிரம் வேலையாட்களைக் கொண்டு 1703 இல் புதிய நகருக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பீற்றர் (Peter the Great) அவர்களுடைய சிலை உட்பட பல பலருடைய சிலைகளும், அருகே யிருக்கும் முப்பத்துமூன்று சிறிய தீவுகளையும் இணைக்கும் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட பாலங்களும், விலையுயர்ந்த மாடமாளிகைகளும், கூரானதும், குவிந்ததுமான தங்கநிறக் கோபுரக் கலசங்களையுடைய அரசாங்க அலுவலகங்களும், அழகிய பூங்காக்களும், அகன்ற வீதிகளும் எங்கு திரும்பினாலும் காண்பவர் கண்களைக் கொள்ளை கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு திட்டமிடப்பட்டு, எழில்மிகு காட்சிகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஐரோப்பாவின் மற்றைய நகரங்களைவிடச் சிறப்பாக அமையவேண்டும் என்ற போட்டியோடு ஆரம்பிக்கப்பட்ட நகரம், முழுவதாகக் கட்டி முடிப்பதற்குள்ளேயே ரஷ்யாவின் அரசியல் மையமாகவும், கலை கலாச்சார மையமாகவும் செயற்பட ஆரம்பித்தது. செல்வந்தர்களும், பிரபுக்களும் தத்தமது வசதிகளுக்கேற்ப

ஆடம்பரமான மாளிகைகளையும் அங்கே அமைக்க வழிகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

ரஸ்புட்டின் தான் பிறந்த கிராமத்தைவிட்டு தலைநகரை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தபோது மக்கள் பலரும் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். ரஸ்புட்டின் மதம் என்ற போர்வையிலே நடாத்திய சிற்றின்பக் களியாட்டங்களினால் கோபமடைந்த கிராம மக்களால் அவர் அக்கிராமத்தைவிட்டே துரத்தப்பட்டார் என்ற ஒரு கருத்தும் நிலவுகின்றது. ரஸ்புட்டின் என்ற பெயருக்கு நாடோடி என்றும் பொருள்படும். தீயயொழுக்கம் நிறைந்து, தெருவெல்லாம் பரதேசிக் கோலம் கொண்டு திரிந்ததினால்தான் கிராம மக்கள் இவருக்கு ரஸ்புட்டின் என்ற பெயரைச் சூட்டினார்கள் என்றும் ஒரு கருத்து உண்டு.

ரஸ்புட்டினின் மதப்பிரசாரங்களும், கொள்கைகளும் தவறான அபிப்பிராயங்களையே மக்களிடம் பரப்பியிருந்தன. புராதன தேவாலயங்கள் ஆண்டவன் சில சாதாரண மனிதர்களுக்கு தெய்வீகத் தன்மையையும், தீர்க்கதரிசனத்தையும், நோய்களைக் குணமாக்கும் சக்தியையும் கொடுத்திருக்கிறார் என்றொரு அசையாத நம்பிக்கையைக் கொண்டிருந்தன. இதனால் பல தேவாலயங்கள் தெய்வீகத்தன்மை கொண்டுள்ளவர்கள் என்று அலைந்து திரியும் பல போலிகளையும் கொண்டிருந்தன. இந்தப்போலிகள் பலர் ரஷ்ய இராச்சியம் முழுவதும் நடமாடி ஆங்காங்கே இருக்கும் சந்நியாசிகள் மடாலயங்களிலும், பிரபுக்களும் கொடுக்கும் உபசரணைகளையும் பெற்று வசதியாக வாழ்ந்தார்கள்.

உண்மையான சந்நியாசிகள் தங்கள் சீவியகாலம் முழுவதும் தேவாலயங்களிலேதான் வசிப்பார்கள். ஆண்டவன் வழிபாட்டின் மூலம் அதீத சக்திகளைப் பெறுவதற்காக தமது வாழ்நாட்களையே

தேவாலயங்களிலே செலவழிப்பார்கள். நெறித்வறாத எளிய வாழ்க்கையே எந்நாளும் வாழ்வார்கள்.

ரஸ்புட்டின் 1902 ஆம் ஆண்டு கசான் (Kazan) இல் இருக்கும் தேவாலயத்தை வந்தடைந்தார். அங்கே இருந்த பாதிரியார் அன்றூ (Andrew) அவர்களுக்கு புதிதாக் வந்திருக்கும் யாத்திரீகரை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. ஏனைய மதகுருமார்களின் மனதிலும் ரஸ்புட்டினைப்பற்றி அனுகூலமான எண்ணங்களே நிறைந்திருந்தன. ஆரம்பகாலத்திலிருந்தே அங்கிருந்த கிறிஸ்தவ மதகுருமார்களின் பெரு மதிப்புக்கு ஆளான ரஸ்புட்டினை தலைநகரான சென்பீற்றஸ்பேக்கிற்கு அனுப்பி அங்குள்ள தேவாலையத்தின் மிக முக்கியமான மதகுருமார்களைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்தார்.

ரஸ்புட்டின் தலைநகரை வந்தடைந்தபோது அங்கே ஓர் அமைதியற்ற நிலை காணப்பட்டது. ஒரு பகுதி, உயர்வகுப்பினரின் சட்டத்திற்கு அடங்காத தீயொழுக்கங்களால் நிறைந்திருந்தது. ஒரு பகுதி நாட்டின் ஆரோக்கியமான வாழ்க்கையைப் பாதுகாப்பதில் கண்ணாக இருந்தது. ஒரு பகுதி அரசுக்கெதிரான புரட்சிக்காரர்களால் குமுறிக் கொண்டிருந்தது. எந்நேரமும் ஒரு மாற்றம் வருவதற்கான அறிகுறிகள் ஆங்காங்கே தெரிய ஆரம்பித்தன.

புதிதாக வந்த ரஸ்புட்டின் ஆரம்ப நாட்களில் இவைகளை அவதானிக்கவில்லை. நாட்கள் செல்லச்செல்ல அங்கே வாழ்பவர்களிடம் ஓர் அதிருப்தி, ஒருவித பயம், ஒரு பதட்டநிலை இருப்பதையும், அதிலிருந்து சாதாரண மக்கள் ஒதுங்கி வாழ்வதற்கு அல்லது விடுபடுவதற்கு எத்தனிப்பதையும் ரஸ்புட்டினினால் உணரமுடிந்தது.

அழகிய இயற்கைக் காட்சிகள் நிறைந்த கிராமப்புறமும், ஆடம்பரமில்லாத எளிய வாழ்க்கை வாழும் மனிதர்களையும்,

அமைதியான திறந்தவெளிகளில் தெளிந்த காற்றையும் சுவாசித்து வந்ததையும் விட்டுவந்த ரஸ்புட்டினிற்கு ஆரம்பத்தில் இவையொன்றும் பிடிக்கவில்லை. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல நகர வாழ்க்கை நன்றாகவே பிடித்துவிட்டது. தனக்கு அன்னை மேரி கட்டளை இட்டு விட்டார், அவரது கட்டளைகளை நிச்சயம் நிறைவேற்றியே தீரவேணடும் என்கின்ற ஆதங்கத்தினால்தான் இங்கு வந்தேன் என்று கூறிக்கொண்டு தலைநகர மக்களோடு சேர்ந்து வாழ்க்கையை ஓட்டினார்.

கண்விழித்திருந்த நேரமெல்லாம் கடவுள் பிரார்த்தனைகளிலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கும் ரஸ்புட்டின் தன்னுள்ளே மேலும் மேலும் உள்ளொளி பரவுவதாகவும், அதனால் தன் ஆன்மா மேலும் மேலும் வலுப்பெறுவதாகவும் மற்றவர்களுக்குக் கூறினார். ரஷ்யத் தாயின் தலைவிதியை நிர்ணயிக்கும் கடமைகளைச் சரிவரச் செய்யும் காலம் உதயமாகும் நாள் அதிக தூரமில்லை என்றும், இது தான் ஆண்டவன் தனக்கு இட்ட கட்டளையாக இருக்கும் என்றும் கூறினார்.

அருட்தந்தை ஜோன் தலைநகரில் மிகவும் செல்வாக்கு உடையவராக இருந்தார். அவருடைய தேவாலயம் தலைநகருக்குச் சிறிது வெளியே உள்ள கடற்படைத் தளமொன்றில் அமைந்திருந்தது. கனிவான பேச்சும், இனிதான பண்பும், ஆண்டவனின் அடியார்களைக் கவர்ந்திழுக்கும் வல்லமையும் கொண்டிருந்தார். அரச குடும்பத்தில் இருந்த பலருக்கு இவர் பாவ ஒப்புதல்களைக் கேட்கும் மதகுருவாகவும் இருந்தார்.

எத்தனையோ பேர் இவரிடம் தனிப்பட்டமுறையில் பேசி பாவ மன்னிப்புப் பெறுவதற்காகப் படையெடுத்து வந்தார்கள். அதிகளவு செல்வாக்குப் பெற்றிருந்த இவர் அனைவரையும் பிரார்த்தனைக் கூடத்திற்கு ஒன்றாக அழைத்து, எல்லோருடைய பாவ ஒப்புதல்களையும் ஒரே நேரத்தில் கூறக்கேட்கும் புதிய முறையையும் உருவாக்கியிருந்தார்.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை ஆன்மீக வல்லமை மிகுந்த புகழ்பெற்ற ஜோன் அவர்களுடைய போதனைகளை எப்படியாவது கேட்கவேண்டும் என்று ரஸ்புட்டின் அங்கே சென்றார். பிரார்த்தனைக் கூடத்தின் பின்பகுதியில் சென்று உட்கார்ந்தார். அமர்ந்த உடனேயே அங்கே பாலைவனச் சோலையிலே அழகிய பூக்களின் நறுமணம் வீசுவது போல் இருப்பதை உணர்ந்தார். பிரார்த்தனைகளின் முடிவிலே எல்லோரும் எழுந்துநின்று ஒரேவேளையில் தமது பாவங்களை ஒருவருக்கொருவர் சத்தமிட்டுக்கூறினார்கள், கடவுளிடம் தமது பாவங்களை மன்னிக்கும்படி வேண்டினார்கள். எழுந்து நின்ற எல்லோரும் முடிவில் வரிசையாகச் சென்று புனித தேவப்பிரசாதம் பெற்றார்கள்.

இவற்றை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்த ரஸ்புட்டின் பல மாதங்களின் பின்னர் அந்தப்புனித தேவாலயத்திலே கடவுளுக்கு மிக அருகில் இருப்பதைப்போன்ற ஓர் உணர்வைப் பெற்றார். திடீரென்று தனது முழங்காலில் நின்று ஆண்டவனைப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தார்.

கண்களை விழித்துப் பார்த்தபோது அங்கே வழிபாடுகள் செய்துகொண்டிருந்த பாதிரியார் ஜோன் எதிரே நிற்பதைக்கண்டு அதிசயித்துப் போனார். கண்களிலிருந்து நீர் அருவியாக ஓடியது. ஜோன் ரஸ்புட்டினின் கைகளைப் பிடித்து எழுந்திருக்குமாறு கூறினார்.

"மகனே! இந்த ஆண்டவன் சந்நிதானத்திலே தூயவனான உம்முடைய வருகையை நான் என்னுள்ளே உணர்ந்தேன். ஆண்டவன் என்னை உம்மிடம் பேசும்படி பணித்ததாகவும் உணர்கிறேன். தெய்வீகத்தன்மை உம்முள்ளே பிரகாசிப்பதை என்னால் காணமுடிகின்றது" என்றார்.

"என்னை ஆசீர்வதியுங்கள் சுவாமி."

"கடவுள் உம்மை ஆசீர்வதிக்கட்டும்! நீர் இங்கேயே இருந்து கொள்ளும். பிரார்த்தனைகள் முடிந்தபின் நான் உம்மை வந்து சந்திக் கின்றேன்."

பிரார்த்தனைகள் எல்லாம் முடிந்தவுடன் அவர் வந்து "நான் அருகிலிருக்கும் மடாலயத்திற்கு மதிய உணவுக்காகச் செல்கிறேன் நீரும் என்னுடன் வாரும்" என்றார்.

இருவரும் நெடுநாட்கள் நெருங்கிப் பழகியவர்கள்போல மிகவும் நெருக்கமாகத் தம் மனத்தைவிட்டு நீண்டநேரம் அளவளாவினார்கள். "சுவாமி! எனக்குக் கன்னி மேரி காட்சி கொடுத்து இங்கே எனக்கென்று ஏதோ கடமைகள் இருப்பதாகக் கட்டளையிட்டார். ஆனால் அவை என்னவென்று இதுவரையில் எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை."

"அமைதியாக இரும், அவைகள் எவையென ஆண்டவன் தக்க தருணம் வரும்போது வந்து வழிகாட்டுவார். அதுவரையில் நீர் என்னுடன் வந்து தங்கியிரும். உமக்கு இங்குள்ள பெரும் புகழ்வாய்ந்த இறைபணியாளர்களை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்" என்றார் அந்த தலைமைக் குருவானவர்.

இது நடந்து சில தினங்கள் கழிந்தபின்னர் ஜோன் ரஸ்புட்டினை தன் தேவாலயத்திற்கு அழைத்தார். பிரார்த்தனைகள் எல்லாம் முடிந்தபின் தன்னுடைய அறைக்கு வருமாறு பணித்திருந்தார் பாதிரியார். அங்கு சென்று காத்துக்கொண்டிருந்த ரஸ்புட்டினுக்கு தனது வாழ்வில் சில மடாலயங்களில் முன்பு நடந்த அசாதாரண சம்பவங்களும் அடிக்கடி மனதில் வந்து வந்து அலைமோதிக்கொண்டிருந்தன. அப்படி யொன்றும் நடக்கக்கூடாது என்று ஆண்டவனை வேண்டினார். திடீரென்று

ஜோன் அறைக் கதவைத் திறந்துகொண்டு முன்னே வந்து நின்றார். அவரைக்கண்டதும் ரஸ்புட்டினும் தனது இருக்கையைவிட்டு எழுந்து நின்றார். ரஸ்புட்டினை ஜோன் வரவேற்றபின் அமைதியாகப் பேச்சை ஆரம்பித்தார்.

"நான் இவ்வளவு நாளும் எனக்குள்ளே உமக்கு ஒரு பரீட்சையை நடாத்தியிருந்தேன். எம்மைப்போன்ற உயர்ந்த சமூகத்திலே உள்ளவர்களோடு ஒன்றாக இணைவதற்கு உமக்குத் தகுதிகள் போதுமா? அவர்களுடைய பாவ ஒப்புதல்களைக் கேட்கும் பக்குவம் உமக்கு வந்துவிட்டதா? அவர்களைத் தகுந்த முறையில் கையாள உம்மால் முடியுமா? அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய உம்மால் இயலுமா? என்றெல்லாம் நான் பரிசோதித்தேன்."

அதுவரையில் அவரின் முகத்தைப் பார்க்காது நிலத்தையே பார்த்திருந்த ரஸ்புட்டின் அவரை ஆச்சரியத்தோடு மெதுவாக நிமிர்ந்து பார்த்தார். ஆனால் எதுவும் பேசவில்லை. அவரது பேச்சிலிருந்து தான் பல ஆயிரம் மைல்கள் தாண்டி, உயர் வகுப்பினரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென்ற தனது ஆசை நிறைவேறும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்று உள் மனதில் எண்ணியபடி அமைதியாக நின்றார்.

முகத்தில் எதுவித சலனமுமின்றி முன்னே நின்றுகொண்டிருந்த ரஸ்புட்டினைப் பார்த்து ஒரு புன்னகையை வீசியபடியே; "அவற்றுக் கெல்லாம் ஆம் ஆம் என்ற பதிலே எனக்குக் கிடைத்தது. அதுபோதும் எனக்கு. இன்று உமக்கு இன்னுமொரு ஆனந்தமான செய்தியைக் கூறத்தான் இங்கே உம்மை அழைத்தேன்" என்றார். ரஸ்புட்டினின் இதயம் இலேசாகப் படபடத்தது. ஆனால் அமைதியாகவே நின்றார்.

'இப்போது நாட்டிலே ஆங்காங்கே புரட்சிக்காரர்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டார்கள். ஆங்காங்கே அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் டுபடவும் ஆரம்பித்துவிட்டார்கள். இவ்வேளையில் எமது அரசுக்கு துவித பாதிப்புகளும் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டியது மது தலையாய கடமை. அதற்காக உயர்ந்த வகுப்பினர்களையும், ல்விமான்களையும், பெரிய பெரிய நிலப்பிரபுக்களையும், தேவாலய த்திபதிகளையும் இணைத்து "உண்மையான ரஷ்ய மாந்தர்கள்" ன்றொரு சங்கத்தை ஆரம்பித்துள்ளோம். இவர்கள் அத்தனைபேரும் குந்த தெய்வநம்பிக்கை உடையவர்கள். இவர்களோடு இந்தச் ங்கத்திலே உம்மையும் ஓர் அங்கத்தவராக இன்றுமுதல் இணைத்துக் காள்ள விரும்புகிறேன்' என்றொரு நீண்ட விளக்கத்தைக் கொடுத்து ஸ்புட்டினின் பதிலை எதிர்பார்த்து நின்றார்.

"நீங்கள் நாட்டின் நன்மைக்காக எதனைச் செய்யச் சொன்னாலும் ான் செய்யக் காத்திருக்கின்றேன். கன்னி மேரி எனக்கிட்ட ட்டளைகளிலே இதுவும் ஒன்று என்றே எண்ணுகிறேன். கலகமும், ழப்பமும், அரசுக்கெதிரான நடவடிக்கைகளும் ஆரம்பித்தால் அதற்காக மது பிரார்த்தனைகளும், தெய்வ வழிபாடுகளும், ராஜதந்திரங்களும் மது ரஷ்யாவைக் காப்பாற்றும்" என்றார். சாதுரியமான பதிலைக் கட்டதும் ஜோனுக்கு ரஸ்புட்டினின் மேல் மேலும் நம்பிக்கை பிறந்தது.

இப்படியாகக் காலமும் ஓடிக்கொண்டே இருந்தது.

ரஸ்புட்டின் சகலரையும் கவர்ந்திழுக்கும் பேச்சுவன்மை காண்டவர். சக நண்பர்கள், குருமார்களிடம் காட்டும் பக்தியும், க்தி போன்ற நடிப்பும், பேச்சின் இடையே விவிலிய நூலில் டிக்கப்பட்டிருக்கும் வாசகங்களுக்கு அனைவரும் அதிசயிக்கத்தக்க கையில் கொடுக்கும் விளக்கங்களும், ஆன்மீக முறையில்

ஆண்டவனை அடையத் துடிக்கும் அணுகுமுறையும் அறிமுகம் செய்து வைத்த அனைவரையும் கவர்ந்துவிட்டது.

இப்படியாக போலியாக தாம் தெய்வீத்தன்மை கொண்டவர்கள் என்று பெயர் பெற்றவர்கள் காலப்போக்கில் ஏனைய மதகுருக்கள், பாதிரிமார்கள், இளவரசர் ஆகியோரின் கவனத்திற்குள்ளாவது ஒன்றும் ஆச்சரியமில்லை. இந்தப் புதியவர்களைத் தமது சமூகத்திற்கும், நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்திப் பெருமைப்படுவதில் இவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் இன்பம் கொள்வார்கள். ஆனால் ரஸ்புட்டின் ஒரு குறுகிய காலத்திற்குள்ளேயே தேவாலயத்தின் உயர் பதவி வகிக்கும் எல்லோரிடமும் நன்மதிப்பைப் பெற்றது அவரிடமுள்ள பேச்சுத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது.

ஆரம்பத்தில் தலைநகர் வாழ்க்கையில் சந்தித்த உயர் வகுப்பினருடன் பழகும்போது மிகவும் பக்குவமாகவே பழக ஆரம்பித்தார். கடந்த காலங்களில் நீண்ட தூரம் நடந்து சென்ற அனுபவங்களும், கிலிஸ்டி (Khlisti) என்ற அந்த மதப்பிரிவில் இணைந்தபோது பெற்ற பாலியல் அனுபவங்களும், ஏனைய அனுபவங் களும் வரலாறுகள் ஆகிவிட்டன. அவைகளில் தனக்கு விருப்பமில்லாதது போலக் காட்டிக்கொண்டாலும் அவைகள் எல்லாம் இப்போதும் நீறு பூத்த நெருப்புப்போலே ரஸ்புட்டினது அடி மனதில் அப்படியே இருந்தன. மற்றவர்கள் முன்னால் ரஸ்புட்டின் இப்போது எந்நேரமும் கடவுளை அடையத்துடிக்கும் கடுமையான பிரார்த்தனைகளில் ஈடுபட்டார். சில வேளைகளில் அப்படியாக ஈடுபடுபவர்போல் நடித்தார்.

ரஸ்புட்டின் இதுவரை காலமும் படிப்பறிவு குறைந்த, குறுகிய மனப்பான்மையுள்ள, ஆனால் ஆழமான மதப்பற்றுள்ளவர்களுடைய பிரதிநிதியாகவே தனது பிரார்த்தனைகளை நடாத்திவந்துள்ளார். ஆனால்

இங்கோ பிரபுக்களும், உயர்குலத்துப் பெண்களும் வெளியே ஆடம்பரமாக ஆடைகளும், அணிகலன்களும் அணிந்தபோதிலும் உள்ளே புதிய புதிய, அசாதரணமான, ஆனால் சாகசமான களியாட்டங்கள் போன்றவற்றிற்காக ஏங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் ஆண்களோ ஆன்மீக வழிகாட்டலுக்கும், அதன் இறுதியில் பெறும் அதீத சக்திகளுக்கும் ஆசைப்பட்டார்கள். அவர்களுக்கு ரஸ்புட்டினின் வருகை அளவில்லா ஆனந்தத்தைக் கொடுத்தது.

ஆனால் ஒருசாராருக்கு ரஸ்புட்டினின் பணிவில்லாத் தன்மையும், பண்படாத பழக்கவழக்கங்களும் பார்ப்பதற்கு அசிங்கமாக இருந்ததி னால் போலிச்சாமி என்றும், தற்புகழ்ச்சிக்காகவும், தன்னலத்திற்காகவும் சமுதாயத்திலே புகுந்து விளையாடும் சுயநலவாதி என்றும் பலர் முன்னிலையில் பகிரங்கமாகவும் பேசிக்கொண்டார்கள். இவைகளைக் கேட்க ரஸ்புட்டினுக்கு உள்ளே எங்கே தன் சுயரூபம் வெளிப்பட்டு விடுமோ என்றும் அச்சமாக இருந்தது. ஆனால் அமைதியாகவே தனது காரியங்களைக் கவனித்தார்.

சில நாட்களின் பின்னர் கிறிஸ்தவ மதஅதிகாரி அருட்தந்தை ஜோன், ரஸ்புட்டினை தியோபன் என்ற மதகுருவுக்கு அறிமுகம் செய்துவைத்தார். தியோபன் ரஸ்புட்டினின் ஒவ்வொரு செயலையும் மிக உன்னிப்பாகக் கவனித்து வந்தார். தனது முழு ஆதரவையும் ரஸ்புட்டினுக்குக் கொடுத்தார். இதனால் சில காலத்திற்குள்ளேயே ரஸ்புட்டின் தியோபனின் நன்மதிப்பிற்கும் ஆளானார். இவர் ரஸ்புட்டினை பாதிரியார் கேமோகன் அவர்களுக்கும், வேறு பல உயர்வகுப்பினருக்கும் அறிமுகம் செய்துவைத்தார். அவர்களுள் முக்கியமாக மொன்ரிநீகிரோ (Montenegro) இளவரசிகள், மிலிற்ஷா (Militza), அனற்றாசியா (Anastasia) இவர்களுக்கும் ரஸ்புட்டினின் அறிமுகம் கிடைத்தது.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பதுபோல புதிதாக வந்த ரஸ்புட்டினின் செயல்கள் எல்லாம் இவர்களை வெகுவாகக் கவர்ந்துவிட்டன. இப்படிப்பட்ட ஒருவரை அரசருக்கும் அரசியாருக்கும் கட்டாயம் அறிமுகப்படுத்தி வைக்கவேண்டும் என்று எண்ணிய இளவரசிகள் முதலில் தமது கணவன்மார்களான பிரபு நிக்கோலாய் நிக்கொலவிச் (Duke Nikoli Nikolayevich) அவர்களுக்கும், அவருடைய சகோதரர் பிரபு பேயோற் நிக்கொலவிச் (Duke Poy Nikolayevich) அவர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தனர்.

◆◆



11

அரச பரம்பரை

ரஷ்யாவை ஆண்டுகொண்டிருந்த அரசர் நிக்கலஸ்க்கும் (Nicholas II) பேரரசி அலெக்ஸ்ஸான்றா (Alexandra) விற்கும் அவர்கள் திருமணமாகி ஆறு வருடங்களுக்குள்ளேயே அடுக்கடுக்காக நான்கு பெண் பிள்ளைகள் பிறந்துவிட்டனர். ஒல்கா (Olga), ரற்ரீனா (Tatiana), மேரி (Maria), அனஸ்றாசியா (Anastasia) என அழகான நான்கு இளவரசிகள்.

அரசியார் பிரித்தானிய அரச குடும்பத்துடன் நெருங்கிய இரத்த உறவு கொண்டவர். விக்டோரியா மகாராணியாரின் ஒன்பது பிள்ளை களில் ஒருவரான இளவரசி அலிஸ் (Alice) இவருடைய தாயார். தந்தையார் கெஸ்ஸி-றம்ஸ்ராட் (Hesse-Darmstadt) என்ற ஜேர்மனியர்.

அரசர் நிக்கலஸ் இற்கும் பிரித்தானிய அரச குடும்பத்துடன் உறவுண்டு. தாயார் டாக்மா (Dagmar), டென்மார்க் அரசர் ஒன்பதாம் கிறிஸ்டியன் (Christian IX) அவர்களின் மகளும் ஏழாம் எட்வேட்டின் (Edward VII) மனைவி அலெஸ்ஸான்றாவின் (Alexandra) சகோதரியுமாவர். தந்தையார் பெயர் மூன்றாம் அலெக்ஸாண்டர்

(Aleksandr III). இவரைத் திருமணம் செய்தபின்னர் டாக்மா என்ற பெயர் மரியா விடெறேவ்னா (Maria Feodorovna) என்றாகிவிட்டது.

அரசர் நிக்கலஸுக்கும் பேரரசி அலெக்ஸ்ஸான்றாவிற்கும் திருமணம் செய்துகொண்ட சிறிது காலத்திற்குள்ளேயே ஆட்சிபீடம் ஏறிவிட்டார். முடிசூட்டுவிழாவிற்கு வந்திருந்த பல ஆயிரம் மக்கள் நெரிசலுக்குண்டாகினார்கள். அதிலே பலர் உயிரிழக்கவேண்டியும் ஏற்பட்டது. இதனால் மனமுடைந்த அரசர், அடுத்து ஏற்பாடாகியிருந்த வரவேற்புகள், விருந்துபசாரங்கள் எல்லாவற்றையும் ரத்துச் செய்யுமாறு கேட்டார். ஆனால் அரச ஆலோசகர்களின் வேண்டுதலுக்கிணங்க அன்றிரவு ∴பிரான்ஸ் தூதரகத்தில் கொடுக்கப்பட்ட நடன விருந்துபசாரத்தில் மட்டும் கலந்துகொண்டார். இதனைக் கேள்வியுற்ற மக்களின் மனதில் அன்றிலிருந்தே அரசர்மேல் ஒருவித வெறுப்பு ஏற்படலாயிற்று. தங்களது துன்பத்தையும், சோகத்தையும் அரசர் அலட்சியம் செய்கிறார் என்றே மக்கள் பலரும் எண்ணினார்கள்.

நாட்டின் நிர்வாகத்தில் அனுபவம் குறைந்தவராக இருந்தபோதும், நாட்டின் நிலைமையும் சீராக இல்லாததால் அரசராகப் பொறுப்பேற்ற உடனேயே அரச காரியங்களைக் கவனிக்க ஆரம்பமாகிவிட்டார். ஆனால் தனது புதுமணப்பெண்ணான அரசியாரோடு கூடியிருக்க அதிகநேரமில்லாமல் இருந்தது. அரசியார் நெடுநேரம் தனிமையால் வாடினார். அரசரும், அரசகுடும்பத்தினரும் தன்னை அலட்சியம் செய்வ தாகவும் எண்ணினார். ஜேர்மன் நாட்டவராகிய அவரால் உயர்வகுப்பினர் நடத்தும் ஆட்சியோடு ஒத்துப்போக முடியாமலிருந்தது. அவர்கள் பணத்தாசை பிடித்தவர்களாகவும், தன்னிச்சைப்படி நடப்பவர்களாகவும், நாட்டுப்பற்று உள்ளவர்கள் குறைவாக இருப்பதாகவும் அவருக்குப் பட்டது.

அரச குடும்பத்துச் சட்ட திட்டங்களின்படி ஓர் ஆண்தான் எப்போதும் அரசனாகி அரசாள முடியும். பெண்கள் முடியுரிமை பெறவே முடியாது. அப்படியாக எதுவித ஆண்களும் அக்குடும்பத்தில் இல்லாதுவிடின் அரசருடைய சகோதர சகோதரிகளின் குடும்பத்தில் இருக்கும் ஓர் ஆண் அரசனாகி ஆட்சி செலுத்த முடியும். அப்படி யாருமே அரச குடும்பத்தில் இல்லையென்றால் மட்டும் பெண்கள் அரசபீடம் ஏறி அரசாள முடியும்.

இந்தச் சட்டம் முதலாவது போல் (Paul-1) என்ற மன்னனால் ஆக்கப்பட்டது. இவர் தனது தாய் கதரீன் (Catherine the Great) அரசியாக இருந்தபோது செய்த ஆட்சியை அடியோடு வெறுத்தார். அதன் காரணமாக, தான் அரசனாக வந்தபோது இனிமேல் பெண்கள் அரசபீடம் ஏறி ஆட்சி செய்ய அனுமதிக்கவே கூடாது என்ற ஒரே நோக்கத்திற்காக ஆக்கப்பட்ட சட்டம்தான் அது.

இதன்படி தங்களுக்கு ஆண் குழந்தை பிறக்காவிட்டால் தனது கணவனின் சகோதரரான மைக்கேல் (Michael) இற்கு அரசபீடம் கிட்டிவிடும், இதனால் தனது குடும்பம் இனிமேல் அரசாள முடியாது போய்விடும் என்ற ஆதங்கம் பேரரசி அலெக்ஸ்ஸான்றாவை ஆட்டிப்படைத்தது.

உலகிலேயே உள்ள ஒரு வல்லரசின் மன்னன் தனது கணவன். அவருக்குப் பட்டத்து ராணியாக இருக்கும் தன் உயர்ந்த அந்தஸ்து, கௌரவம் எல்லாம் ஓர் ஆண் மகவு பிறக்காவிடில் தன் குடும்பத்தைவிட்டு அற்றுப் போய்விடும் என்ற அச்சத்தினால் அல்லும் பகலும் அதனை எண்ணியே அல்லலுற்றார்.

காலமெல்லாம் தம் நாட்டின் காவலனாக தன் குடும்பத்திலிருந்தே ஒருவன் வரவேண்டும் என கனவிலும் நனவிலும் கடவுளை வேண்டினார்.

அதற்காக தங்களுக்கு ஓர் ஆண் பிள்ளையைக் கொடுக்கும்படி ஆண்டவனிடம் இடைவிடாது இறைஞ்சினார்.

விரைவாக ஓர் ஆண் மகவைப் பெற்றெடுக்க வேண்டும் என்ற ஆதங்கமே அவரின் மனதில் எந்நாளும் குடிகொண்டிருக்கின்றது என்பது வெள்ளிடைமலையாகிவிட்டது. பண வாஞ்சை கொண்ட மாந்திரீகர்களும், போலித் துறவிகளும், இறையருளால் வியாதிகளைக் குணப்படுத்துவோம் என்று கூறித்திரிவோரும் தாங்கள் அரசியாரின் வயிற்றிலிருக்கும் கருவை ஆண் மகவாக மாற்றுவோம் என்று கூறிக்கொண்டு அரச குடும்பத்துள் நுழைய ஆரம்பித்தனர். வயிற்றில் வளரும் சிசு வெளியே வரும்வரை சுகபோகத்தில் வாழ்ந்தவர்கள், அது பெண்ணாகப் பிறந்ததும் இரகசிய மாக அங்கிருந்து தாமாகவே வெளியேறி ஊர், பேர் தெரியாமற் சென்றுவிடுவார்கள்.

இப்படியாக ஒருமுறை பெண் துறவி ஒருவர் வந்தார். பார்ப்பதற்கு மிகவும் பக்தியுள்ளவர்போலவே தோன்றினார். அவரது பேச்சுக்கள், செயல்கள் எல்லாம் சாதாரண மனிதன் பேசுவதுபோல், செய்வதுபோல் இருக்கவில்லை. காண்போர் எல்லாம் இவர் கடவுள் கிருபை நிறைந்தவர் என்றே பேசிக்கொண்டனர். ஆண்தான் பிறக்கும் என்றார் அடித்துக் கூறிக்கொண்டே இருந்தார். ஆனால் பிறந்ததோ பெண். பின்புதான் அவர் சாதாரணமானவர் இல்லை, சிறிது புத்திசுவாதீனம் அற்றவர் என்பது தெரியவந்தது.

அடுத்து இன்னொருவர் ஓர் அடியாரோடு வந்தார். அவருக்குக் கைகளும் கால்களும் வழங்காது. இடைக்கிடையே இவருக்கு காக்கை வலிப்பு வந்துவிடும். அப்படி வரும்போது நிலத்திலே வீழ்ந்து வலிப்பால் துடிப்பார், கூச்சலிடுவார், உரக்கக் கத்துவார். அப்போதெல்லாம் அவர் தெய்வீக சக்தி கூடியே நிலத்தில் வீழ்ந்து கை, கால்களை

உயர்த்தியபடி கூச்சலிடுகின்றார் என்று அவரது அடியார் அர்த்தம் கூறுவார்.

வலியால் துடிக்கும் அவரின் அங்க அசைவுகளுக்கு அவரது அடியார் இனந்தெரியாத ஏதேதோ அர்த்தங்கள் எல்லாம் சொல்லுவார். அவற்றைக்கொண்டு அரசியாருக்கு அடுத்துப் பிறக்கப்போவது நிச்சயம் ஆண்தான் என்று ஆணையிட்டுக் கூறினார். ஆனால் அதுவும் பெண்ணாகத்தான் பிறந்தது. அதன் பின்னர்தான் இவரும் சிறிது புத்தி சுவாதீனம் அற்றவர், பணம் சேர்க்கும் நோக்கத்துடனேதான் இப்படி யெல்லாம் செய்தார் என்று அறிந்துகொண்டார்கள். இருவரும் அரண்மனையை விட்டுத் துரத்தப்பட்டனர்.

மூன்றாமவர் தனியே வந்தார். இவர் .பிரெஞ்சு நாட்டில் இறைச்சி வியாபாரம் செய்துகொண்டிருந்தவர். ஆனால் மருத்துவத்தில் சிறிது நாட்டமுள்ளவர். பல தடவைகள் சட்டவிரோதமாக மருத்துவம் செய்ததற்காக காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டவர். இலகுவான வழியில் பெருமளவு பணம் சேர்க்க ஒரேவழி இறை வழிபாடுதான் என்ற எண்ணத்துடன் இறை வழிபாட்டில் கவனம் செலுத்தினார். அரசியாரின் கவலையைக் கேள்விப்பட்டு, தன்னிடம் பல அதீத சக்திகள் இருப்பதாகக் கூறிக் கொண்டு அரண்மனையுள் நுழைந்துவிட்டார்.

முன்னர் வந்தோர் எல்லாம் போலிகள், தான்தான் உண்மையான பக்தன் இம்முறை நிச்சயம் ஆண்தான் என்று அடித்துக் கூறினார். என்ன ஆச்சரியம்! அதுவும் பெண்ணாகத்தான் பிறந்தது. பின்னர் இரண்டு தடவைகள் அரசியார் கருத்தரிக்காமல் இருக்கும் போதே அரசியார் கருத்தரித்துவிட்டார், அவருக்கு ஆண் குழந்தை பிறக்கப் போகிறதென்று பொய் வதந்திகள் கட்டிவிட்டார். அரசியாருக்கு அவர்மேலும் நம்பிக்கை இன்றிப் போய்விட்டது. ஆனால் இறுயில் ஏனையோரைப்போல் அவரும் அரண்மனையை விட்டு வெளியேற்றப் பட்டார்.

அவர் போகும்போது அரசியாரை அவரின் துயரங்களிலிருந்து மீட்க ஒருவர் இங்கு வருவார். ஆண்டவன் அவரை விரைவில் இங்கே அனுப்பிவைப்பார் என்று உறுதிமொழி கூறிவிட்டுச் சென்றார். இப்படியாக நான்கு பெண் பிள்ளைகளும் பிறந்துவிட்டார்கள்.

அரசியாருக்கு இனித் தனக்கு ஆண்பிள்ளை பிறக்கும் என்ற நம்பிக்கையே இல்லாமல் போய்விட்டது. அரச மருத்துவர்கள் மீதும், ஆண்டவனின் தூதர்கள் என்று கூறிக்கொண்டு அரண்மனையில் நுழையும் போலிகள் செய்யும் அட்டகாசங்களினாலும் எதிலுமே நம்பிக்கையற்றுப் போய்விட்டது.

காலம் ஓடிக்கொண்டேயிருந்தது. என்ன அதிசயம்? எதுவித மருத்துவ சிகிச்சைகளும், மாந்திரீக சக்திகளும் இல்லாமலே 1904 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசியார் அழகான ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார்.

பிறந்த குழந்தையை அன்போடு ஏந்தியெடுத்து, அலெக்ஸி (Alexei) என்று அக்குழந்தைக்குப் பெயரிட்டு ஆசையோடு வளர்த்து வந்தார்கள். ஆண் குழந்தையின்றி சூனியமாகவிருந்த அரச குடும்பத்தின் எதிர்காலம் சுபிட்சமாக மாறியதுபோல் ஒரு சந்தோஷம் அவர்கள் மனதை ஆக்கிரமித்திருந்தது. அடுக்கடுக்காக நான்கு பெண்கள் பிறந்த அரச குடும்பத்திலே, ஐந்தாவதாக ஓர் ஆண் மகவு பிறந்தவுடன் திடீரென்று அரச குடும்பத்தின் கவனமெல்லாம் குழந்தை அலக்ஸியின் பக்கமே திரும்பியது.

தன் கணவருக்கு அடுத்தாற்போல் அரசபீடம் ஏறி ஆட்சி செய்ய ஓர் அன்பு மகன் பிறந்துவிட்டான் என்று அரசியார் ஆனந்தவெள்ளத்தில் மிதந்தார். எங்கே தன் வாரிசுகளுக்கு ஆட்சிபீடம் கிட்டாமல் போய் விடுமோ என்று ஏங்கிய மன்னரின் கவலையெல்லாம் கணப்பொழுதில்

கதிரவன் முன் பனித்துளிபோல் காணாமல் போயின. ஆண்டவன் தங்கள் மீது கருணை மழை பொழிந்துவிட்டார், தான் அல்லும் பகலும் செய்த பிரார்த்தனைகள் எல்லாம் பலித்துவிட்டன, எதுவுமே வீணாகிவிடவில்லை யென்று அரசியார் மட்டிலா மகிழ்ச்சியடைந்தார். குழந்தை அலக்ஸியும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக செல்வம் கொழிக்கும் அரச மாளிகையிலே புதுப்பொலிவுடன் வளர்ந்து வந்தது.

மனத்தில் மகிழ்ச்சி மேலிட்டு மலையுச்சியை அடைந்திருக்கும் போதுதான் சிலவேளைகளில் மறக்கமுடியா மனக்கவலை மறைமுக மாக ஆரம்பிக்கும். இனிமேல் இப்படியெல்லாம் நடக்காது என்று எடுத்தியம்பிய சில நாட்களுக்குள்ளேதான் நடக்காதென்று கூறிய தெல்லாம் நடக்க ஆரம்பித்துவிடும்.

இன்ப வெள்ளம் கரைபுரண்டோடிய அரச மாளிகையிலே திடீரென்று துன்ப வெள்ளம் ஒன்று ஊற்றெடுக்க ஆரம்பித்தது. ஆண் மகவு பிறந்து ஆறு கிழமைகள் ஆரவாரமாக இனிதே கடந்துவிட்டன. திடீரென்று ஒருநாள் குழந்தையின் தொப்புழிலிருந்து குருதி வடிய ஆரம்பித்தது. மருத்துவர்கள் வடியும் குருதியைக் கட்டுப்படுத்த துணியால் பல கட்டுக்கள் போட்டார்கள். முன்று நாட்களாகியும் அது நிற்கவேயில்லை. குருதி வடியும்போது குழந்தை வேதனையில் துடிப்பதும், பின்னர் சிறிது நேரம் அமைதியாக நித்திரை செய்து கொள்வதுமாக இருந்தது. என்ன செய்வதென்று யாருக்கும் எதுவுமே புரியவில்லை. மூன்றாம் நாள் முடிவில் குருதிப் பெருக்கு ஒருவாறு நின்றுவிட்டது.

இது நடந்து சில மாதங்கள் ஆகிவிட்டன. குழந்தை அலெக்ஸி தவழ ஆரம்பித்தபோது குழந்தையில் உடல் நிலத்தில் படும் இடமெல்லாம் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கும் இரத்தத் தழும்புகள்

ஏற்பட ஆரம்பித்தன. இதனைக் கண்டவுடன் மீண்டும் அவசரமாக அரச மருத்துவர்கள் அழைக்கப்பட்டனர். நீண்ட பரிசோதனைகளின் பின்னர் அரசிளங்குமரனுக்கு குருதி உறையா நோய் (Hemophilia) இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நோய் உள்ளவர்களுக்கு சிறு காயம் கூடப்படக்கூடாது. ஏதாவது கர்ய்ம் பட்டுவிட்டால் சாதாரண மனிதர்களுக்கு நடப்பதுபோல் அவர்களது உடலே குருதியை உறையச் செய்யாது. இதனால் ஓடும் குருதி ஓடியபடியே இருக்கும். கட்டுப்படுத்தப்படாத இரத்தப் பெருக்கால் பரிதாபமாக அந்த உயிர் உடலை விட்டுப்பிரியவேண்டிய நிலைக்கே ஆளாகவும் கூடும்.

குழந்தை அலெக்ஸி பிறந்தபோது குருதியுறையா நோய் ஒரு பயங்கரமானதும், மர்மமானதுமான நோயாகவே இருந்தது. அதற்கான காரணங்களும், சிகிச்சை முறைகளும் சிறிதாகவே அறியப்பட்டிருந்தன. அலெக்ஸ்ஸான்றாயாவில் குடும்பத்திலே இந்த நோய் அரை நூற்றாண்டுக்கு முன்னரே அறியப்பட்டிருந்தது.

அலெக்ஸ்ஸான்றாவினுடைய பேத்தியாரான விக்டோரியா மகாராணிக்கு நான்கு மகன்களும், ஐந்து பெண் பிள்ளைகளும் இருந்தார்கள். இவரின் மகனான இளவரசன் லியோபோல்ட்டிற்கு (Prince Leopold) இந்த நோய் இருந்தது. இளவரசிகளான அலிஸ் (Alice), பியெற்றிஸ் (Beatrice) இருவர் வழியாக அவர்களது ஆண் பிள்ளைகளுக்கு இந்த நோய் கடத்தப்பட்டது. இளவரசி அலிஸ் அலெக்ஸ்ஸான்றாவின் தாய். அரசர் நிக்கலஸுக்கும் (Nicholas II) பேரரசி அலெக்ஸ்ஸான்றாவுக்கும் (Alexandra) 1894 இல் திருமணமாகியபோது இந்நோய் அரச குடும்பத்திலே இருப்பது யாவரும் அறிந்த ஒன்று. இதற்குக் காரணமான கரு எப்போதும் தாயிடமிருந்து ஆண்பிள்ளைகளுக்குத்தான் கடத்தப்படும்.

பிறந்த குழந்தையின் நோயை அறிந்த அரசர் இடியேறுண்ட நாகம்போல் ஆனார். ஒரு நாளுக்குள்ளேயே தமது வாழ்வு தடம்புரண்டு விட்டதுபோல் தவித்தார். தம்மை இதுவரை துரத்திக்கொண்டு வந்திருந்த துர்அதிர்ஷ்டம், தம்மை இனிமேல் மீள முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளிவிட்டதாக எண்ணி எண்ணித் துன்புற்றார்.

"நானும் அரசியாரும் மகனை எண்ணி பெரும் வேதனை யடைந்தோம். காலையில் எதுவித காரணமுமின்றி பாலகனின் கொப்புழிலிருந்து குருதி வடிய ஆரம்பித்தது. அது மாலை வரையும் பெருகிக்கொண்டேயிருந்தது. மருத்துவரை அழைப்பதைத்தவிர வேறுவழி எமக்குத் தெரியவில்லை. மாலை ஏழு மணியளவில் மருத்துவர் வந்து கட்டுப்போட்டார். அதன்பிறகு குழந்தை அமைதியாகத் தூங்கியது. என்ன அழகான குழந்தை! அழகான ஆண் மகவைக் கொடுத்த ஆண்டவன் ஆற்றமுடியாத நோயையும் கொடுத்துவிட்டான். அவன் நோயால் துடிக்கும்போது எங்களால் அதனைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாமல் இருக்கின்றது" என்று தனது குறிப்புப் புத்தகத்திலே எழுதிவைத்தார்.

ஆனால் அரசியார் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. மீண்டும் மீண்டும் மருத்துவர்களை அழைத்து மகனைப் பரிசோதித்துப் பார்க்கச் செய்தார். மருத்துவர்களும் திரும்பத்திரும்ப அதே முடிவைத்தான் கூறினார்கள். அதுவுமல்லாமல் இந்த வியாதி தாயிலிருந்துதான் மகனுக்குக் கடத்தப்பட்டது என்று அறிந்ததும் மேலும் மேலும் துன்பத்தால் தவித்தார்.

பல மணி நேரமாகத் தனியே இருந்து படைத்தவனை இறைஞ்சினார். இருட்டிய பிறகும்கூட இறைவன் சந்நிதானத்தில் இருந்து இடைவிடாது பிரார்த்தனை செய்தார். விதியின்படியே வாழ்க்கை செல்லும் என்ற வார்த்தைக்கு அடிமையாவதை அடியோடு வெறுத்தார்.

காலமும் ஓடிக்கொண்டேயிருந்தது. குழந்தை அலெக்ஸி குளுகுளுவென வளர்ந்துகொண்டு வந்தது. கொழுத்த உருவமும், குறுகுறு விழிகளும், கண்களைக் கவரும் கேசமும் இளவரசனின் அழகிற்கு மேலும் மெருகூட்டின. மன்மதனை ஒத்த உருவோடு மூர்க்கத் தனமும், மற்றவர்களுக்குக் கீழ்ப்படியாத மனப்பாங்கும் கூடவே வளர்ந்தன.

மாற்றமுடியாத நோய் மகனுக்கு இருக்கிறதென்பது மன்னருக்கும் மகாராணியாருக்கும் மனதிலே இருந்தாலும், மகனது வளர்ச்சியைக் கண்டு மட்டிலா மகிழ்ச்சியடைந்தார்கள். எதுவித காயமும் பட்டுவிடக் கூடாதென்பதிலும் எந்நேரமும் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

◆◆



12

அரச பரம்பரையின் அறிமுகம்

ரஷ்யாவை ஆண்டுகொண்டிருந்த பேரரசர் நிக்கலஸுக்கும் (Nicholas II), பேரரசி அலெக்ஸ்ஸான்றாவிற்கும் ரஸ்புட்டினின் செய்தி எட்டியதும் அவரைப்பற்றி அறிய அரசர் மிகுந்த ஆர்வம் கொண்டார்கள். ஒருநாள் தமது பாவ ஒப்புதலைக் கேட்கும் மதகுருவாகப் பணியாற்றும் தியோபனிடம் ;

"உங்கள் தேவாலயத்திலே ரஸ்புட்டின் என்றொரு புதிய குருவானவர் வந்துள்ளாராமே! அவர் மிகவும் திறமைசாலி என்று அறிந்தோம். ஆனால் நீர் இதுவரை அவரைப்பற்றி எதுவித வார்த்தை களும் கூறவில்லையே" என்றார்.

"நானும் உங்களிடம் அவரைப்பற்றிக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் பார்த்திருந்தேன் அதற்கிடையில் எப்படியோ உங்களுக்குச் செய்தி எட்டிவிட்டது. அதிலிருந்து அவர் எப்படிப்பட்ட திறமைசாலி என்று நான் கூறத்தேவையில்லை".

"மற்றவர்கள் வாயால் கேட்பதை நான் நம்புவது குறைவு அதுதான் நான் உம்மிடமே நேரே கேட்கலாமென்று இப்போது கேட்டேன். பேரரசியார்கூட அவரைப்பற்றி மேலும் அறியவேண்டுமென்ற மிகுந்த ஆவலாக இருக்கின்றார்".

"ரஸ்புட்டின் ஒரு கிராமத்தவர்தான் ஆனால் மனிதருள் தெய்வம். அவரால் இந்த ரஷ்யாவிற்கு ஆகவேண்டியன ஏராளமாக உள்ளன. அவருடைய பாவங்களை நான் அறிவேன். அவை கணக்கிலடங்காதவை. அவைகளிற் பல மிகமிகக் கொடியவை. ஆனால் அவையெல்லாம் அவருள் ஆழமாக வதிந்து தம் செயல்களுக்காக உள்ளே உணர்ச்சி ததும்ப பச்சாதாபப்படுகின்றன. அவை எமக்கெல்லாம் ஒரு பாரபட்சமற்ற பாவமன்னிப்பு வழங்கி ஒரு நிரந்தரமான முத்தி நிலையைக் கொடுக்கும் என்று முழுமனத்தோடு நம்பலாம். ஒவ்வொரு தடவையும் அவர் எமக்காக வருந்தும்போதும் ஒரு குழந்தை ஞானஸ்நானம் பெறுவதுபோல் பரிசுத்தமாக இருக்கின்றது. அவர் நிச்சயமாக கடவுளால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒருவர்தான் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது" என்றார்.

இந்த அற்புதமான அறிமுகத்தைக் கேட்ட அரசரும், அரசியாரும் அந்தப் புனிதத் துறவியைச் சந்திக்க மேன்மேலும் ஆவல் கொண்டனர். இருவரும் ஒருவரையொருவர் ஒரேநேரத்தில் பார்த்துப் புன்னகை புரிந்தனர். அதன் காரணம் அவர்களுடைய மனங்கள் இரண்டும் ஒன்றையே நாடுகின்றன என்பதைச் சொல்லாமல் சொல்லியது.

"தியோபன், அந்தத் தேவதூதரை, மனிதருள் தெய்வத்தை நாம் விரைவில் சந்திக்க ஏற்பாடு செய்யும்" என்று கூறிவிட்டு இருவரும் உள்ளே சென்றுவிட்டனர்.

1905 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் திகதி பிரபு நிக்கோலாய் நிக்கொலவிச் (Duke Nikoli Nikolayevich) அவர்களுடைய

மாளிகையில் ரஸ்புட்டினை அரசருக்கும், அரசியாருக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். காந்த சக்தியுடைய கண்களையும், ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை கொண்ட அற்புதமான பேச்சும் ரஸ்புட்டினைப் பார்த்த மாத்திரத்திலேயே இருவருக்கும் பிடித்துவிட்டது. விவிலிய நூலில் வடிக்கப்பட்டிருக்கும் வாசகங்களுக்கு அளித்த எளிமையான விளக்கங்களும், சகலரையும் கவர்ந்திழுக்கும் பேச்சுவன்மையும், சக நண்பர்கள், குருமார்களிடம் காட்டும் பக்தியும், ஆன்மீக முறையில் ஆண்டவனை அடையத் துடிக்கும் அணுகுமுறையும் இவர்களையும் வெகுவாகக் கவர்ந்துவிட்டன. இவற்றைக்கண்ட அரசரும் அரசியாரும் ஏதோ மந்திரத்தால் கட்டுண்டவர்கள்போல் ஆனார்கள்..

பேரரசர் எப்போதும் டயறி எழுதும் பழக்கம் உடையவர். தனது வாழ்க்கையிலே நடக்கும் முக்கிய சம்பவங்களை அழகாகக் குறித்து வைப்பார். அடுத்த நாள் நவம்பர் முதலாம் திகதி அன்று ரஸ்புட்டினைச் சந்தித்ததை தனது நாள் குறிப்பில்:

"இன்று நாம் கடவுள் உருவில் ஒரு மனிதரைச் சந்தித்தோம். ரேபோல்ஸ்க (Tobolsk) மாகாணத்திருந்து வந்த அவர் பெயர் கிறிகோறி எவிமோவிச் ரஸ்புட்டின்" என்று குறித்து வைத்தார்.

அரச குடும்பத்தினர் ரஸ்புட்டினை உயர்வாக மதிப்பதற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருக்கின்றது. டாக்டர் பிலிப்பே (Dr.Philippe) என்ற .பிரான்ஸ் நாட்டவர் அரச குடும்பத்தவர்களுக்கு மருத்துவரீதியான, தெய்வரீதியான அறிவுரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். டாக்டர் பிலிப்பே இளமையில் ஓர் இறைச்சிக் கடையில் உதவியாளராக வேலை பார்த்தவர்தான். ஆனால் மிகவும் தன்னம்பிக்கையுள்ள மருத்துவர். அத்தோடு ஞானதிருஷ்டியால் சக்திகள் பெறுவதை உருவாக்கியவர்.

அவர் தனது மரணப்படுக்கையில் இருந்தபோது 'எனக்குப் பின் உங்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு என்னைவிட மேலான ஒருவர் இங்கு வருவார். அவர் ஆண்டவனைப்போல் அருள் மிகுந்த தொனியில் பேசுவார். என்னுடன் நீங்கள் எப்படி அன்பாக இருந்தீர்களோ அதேபோல் அவரிடமும் அன்பாக நடந்துகொள்ளுங்கள். அவர் கூறுவதைக் கேளுங்கள், அதன்படி நடவுங்கள்' எனக்கூறியிருந்தார்.

குழந்தை பிறந்து ஒரு வருடம் ஓடி மறைந்தது. ஒரு நாள் வழக்கம்போல் உலா வந்துகொண்டிருந்தபோது குழந்தை அலெக்ஸி யாரும் கவனிக்காதபோது தான் விளையாடும் வண்டியின்மேல் ஏறினார். மறுகணம் படார் என்று நிலத்தில் வீழ்ந்து மோதிக்கொண்டார். ஆனால் வெளியில் எதுவித காயங்களும் பட்டதாகத் தெரியவில்லை.

. தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதாகவே தாயும், தந்தையும் எண்ணினார்கள். ஆனால் இது நடந்து சிலமணி நேரத்தின் பின்னர் பெரிதான உள்வீக்கம் தென்பட ஆரம்பித்தது. உடலெல்லாம் அடித்துப்போட்டதுபோல் ஆகிவிட்டது.

அவசரமாக அரச மருத்துவர்கள் அழைக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களால் குழந்தை அலெக்ஸி அருகே காத்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறு எதுவுமே செய்ய முடியவில்லை. முன்னர் குழந்தைக்கு குருதியுறையா நோய் இருக்கிறது என்பதைக் கூறியபோது அரைகுறையாக நம்பியவர்கள் எல்லோரும் இப்போது அவர்கள் கூற்று முற்றிலும் உண்மையானது என்று நம்பினர்.

சில தினங்களின் பின்னர் வீக்கங்கள் தணிய ஆரம்பித்தன. குழந்தை ஒருவாறு உயிர் தப்பிவிட்டார். அரச மருத்துவர்கள் "அரசியார் இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். இளவரசர் இந்த நோயிலிருந்து ஒருபோதும் முற்றாகக் குணமடைய மாட்டார். இதன்

தாக்கம் எப்போது ஏற்படும் என்று எவராலும் சொல்லமுடியாது. நிலத்தில் விழுவதால் ஏற்படும் ஒரு சிறு காயங்களோ, கீறல்களோ ஏற்படாமல் இளவரசரைக் காப்பாற்றத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். ஏனென்றால் ஒரு சிறு குருதிப் பெருக்குக்கூட உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம்" என்று விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

குழந்தைகள் வளரும்போது எத்தனையோ தடவைகள் தமது குருதியின் சிறு பகுதிகளை இழப்பது வழமை. ஆனால் குழந்தை அலெக்ஸியால் அப்படி இழக்க முடியாது. அப்படிக் குருதிப்பெருக்கு ஏற்பட்டால் அதனைத் தடுக்கவே முடியாது என்பதற்காக இளவரசர் அலெக்ஸியைக் கண்ணின் மணியைப் போலக் கண்காணிக்கவென அரசியார் ஒருவரை நியமித்தார். குழந்தை எங்கு சென்றாலும் அவரைக் கண்காணிப்பதே அவரது வேலை. ஏனென்றால் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டுக்களால் ஏற்படும் மிகச் சிறிய காயம்கூட இரத்தப்பெருக்கை ஏற்படுத்தினால் அதிலிருந்து குழந்தையின் உயிருக்கே ஆபத்து எற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

அலெக்ஸ்ஸான்றா பேரரசியான ஆரம்பத்தில் இருந்து இற்றைவரை வரையறையற்ற வரவேற்பு வைபவங்களிலும், ஏராளமான விருந்துபசாரங்களிலும், பெருந்தொகையான பொது வைபவங்களிலும் கலந்துகொண்டிருக்கின்றார். ஆனால் இவற்றில் கலந்துகொண்ட போதெல்லாம் அவர் முழுமனதோடு ஒருபோதும் கலந்துகொள்வதே யில்லை. ஏதோ வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட பணிகளைச் செய்வது போல்தான் செய்து வந்தார்.

இதனால் ஏனையோர்களின் இம்சைகளுக்கும், வெறுப்புகளுக்கும் ஆளானார். அரை மனதோடு தனது அரசபணிகளைச் செய்துவந்த அரசியாரின் மனம் இப்போது மகன் அலெக்ஸியின் ஆற்றமுடியாத நோயினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. பொது இடங்களில் வலிந்து

செய்யும் அசட்டுச் சிரிப்புக்களும், இயற்கையான நாணத்தினால் கோணிக் குறுகுவதும் உயர்வகுப்பினருக்கு எரிச்சலைக் கொடுத்தது. அவரின் மனநிலையை உணர்ந்தோர் அப்படியான இடங்களுக்கு அவரை அழைப்பதையே குறைத்துக்கொண்டார்கள்.

பேரரசி அலெக்ஸ்ஸான்றா நாளடைவில் எங்குமே செல்லாது இறைவன் சந்நிதானத்தில் இருந்துகொண்டு மகனுக்காகப் பிரார்த்தனை செய்வதிலேயே கூடியளவு நேரத்தைச் செலவு செய்தார். இளவரசனின் இந்த நோய் அவரை ஈன்றவர்கள் மனதை எந்நேரமும் ஆக்கிரமித்துக் கொண்டே இருந்தது. அது எங்கே, எப்போது அலெக்ஸியைத் தாக்கும் என்று அறியாதவர்களாகவே இருந்தார்கள். ஒருகணம் தனது சகோதரிகளுடன் ஓடியாடி விளையாடுவார், மறுகணம் எதோவொன்று டனே முட்டிமோதிவிட்டு வேதனையோடு கூடிய முனகலோடு படுக்கை யிலிருப்பார். இவரின் நிலையைப் பார்த்தவுடன் முழுக்குடும்பமுமே மாறாத துயரத்தில் மூழ்கிவிடும்.

காலமும் ஓடிக்கொண்டேயிருந்தது. குழந்தை அலெக்ஸ்க்கு நான்கு வயதாகிவிட்டது. ஒரு நாள் குளியலறையில் குளித்துக் கொண்டிருக்கும்போது இடறுப்பட்டுக் கீழே வீழ்ந்துவிட்டார். வெளியே காயம் எதுவும் பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அடிபட்ட இடத்திலிருந்து குருதிக்குழாய் வெடித்து உடலுள்ளே இரத்தப் பெருக்கு ஏற்பட்டுவிட்டது. குழந்தை அலெக்ஸி கொடிய வலியினால் துடித்தார். படுக்கையைவிட்டு எழுந்திருக்கவே முடியவில்லை. அரச வைத்தியர் இரவும் பகலும் அருகேயிருந்தும் அவரால் எதுவுமே செய்யமுடியவில்லை

மூன்று நாட்கள் நத்தை வேகத்தில் நகர்ந்தனவே தவிர இளவரசனின் உடலில் எதுவித மாற்றமுமில்லை. நாட்டிலுள்ள தேவாலயங்களில் எல்லாம் நாட்டின் எதிர்கால முடிக்குரிய இளவரசனுக்காக இரவும் பகலும் பிரார்த்தனைகள் நடைபெற்றன.

ஆனால் எதுவித பலனுமில்லை. மருத்துவர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட ஏதாவது அற்புதத்தால்தான் அலெக்ஸி குணமடைவார் என்று பலரும் பேசிக்கொண்டனர்.

இந்தவேளையில்தான் அனற்றாசியா (Anastasia) இவற்றைக் கேள்விப்பட்டார். இரவு பன்னிரண்டு மணியை அண்மித்திருந்தது. எப்படியாவது அரசியாரைச் சந்தித்துப் பேசவேண்டும் என்று சிறுவன் படுத்திருந்த அறைக்குச் சென்று, தான் அரசியாருடன் தனியே அவசரமாகப் பேசவிரும்புவதாகக் கூறினார்.

"அரசியாரே! நான் முன்பு உங்களுக்கு அறிமுகப்படுத்திவைத்த ரஸ்புட்டின் அவர்களை அழைத்து வந்து சிறுவன் அலெக்ஸியைக் காட்டுவதைப் பற்றித் தாங்கள் சிந்தித்தீர்களா?" என்றார்.

"இல்லை, எனக்கு இருக்கும் மனநிலையில் நான் அதனைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. அவர் ஒரு துறவிதான். அவருடைய பிரார்த்தனைகள் ஒருவேளை இளவரசனைக் காப்பாற்றவும் கூடும்."

"அவர் துறவிக்கும் மேற்பட்டவர், அவர் நோய்களைக் குணமாக்கு வதிலும் வல்லவர், மிகவும் திறமைசாலி என்றும் நான் அறிந்திருக் கின்றேன்."

"அப்படியா? இப்படியான நோயைக் குணமாக்கும் வல்லமை படைத்தவர் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. எனக்கு அது தெரியாது. அப்படியானால் உடனே அவரை இங்கே வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அலெக்ஸியின் உடலைவிட்டு உயிர் பிரிவதைத் தடுக்க நான் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்" என்றார்.

அரசியார் அப்படிச் சொன்னதுதான் தாமதம் அனற்றாசியா அரண்மனையை விட்டு அவசரமாக வெளியேறினார். சேவகர்கள் சிலரை நாலாபக்கமும் அனுப்பி ரஸ்புட்டினைத் தேடிடுமாறு பணித்தார். அரச குதிரைவண்டியிலே ஏறி ரஸ்புட்டின் வசித்துவத்த இடத்தை நோக்கி அதிவேகமாக விரைந்தார்.

ஒரு மணிக்குள்ளேயே ரஸ்புட்டின் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துவிட்டார். உடனே அவரிடம் நடந்த விடயத்தைக்கூறி அரண்மனைக்கு வருமாறு அழைத்தார். ரஸ்புட்டினும் அனற்றாசியாவின் வேண்டுதலைக் கேட்டவுடன் எதுவித மறுப்புமின்றி அவரோடு அரண்மனைக்குச் சென்றார்.

இளவரசர் அலெக்ஸியின் படுக்கையைச் சுற்றி பெற்றோரும் நான்கு சகோதரிகளும், தியோபனும், டாக்டரும், தாதிகளும் நின்று கொண்டிருந்தார்கள். ரஸ்புட்டின் அந்த அறையினுள் செல்லுமுன்னரே தனது வலது கரத்தை உயர்த்தி, சிலுவைச் சின்னைத்தைத் தன் கைகளால் காட்டி, அந்த அறையினுள்ளே இருப்பவர்கள் அனைவரையும் ஆசீர்வாதம் செய்தார். பேரரசரையும், பேரரசியாரையும் பணிந்தபின்னர் சிறுவனின் பக்கம் போனார்.

தாங்கமுடியாத வேதனையினால் துடித்துக்கொண்டிருந்த சிறுவனை சிறிது நேரம் உற்று நோக்கினார். மறுகணம் தனது முழங்காலிலே நின்றுகொண்டு இறைவனைப் பிரார்த்தனை செய்தார்.

அங்கிருந்த எல்லோரும் தங்கள் மனங்களில் திடீரென்று ஓர் அமைதியான தெய்வீகத்தன்மை படருவதாக உணர்ந்தார்கள். திடீரென்று அந்த அறையுள் இருந்த அனைவருமே தமது முழங்கால்களில் நின்றுகொண்டு அமைதியாகப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தனர்.

பத்துநிமிடங்கள் கழிந்திருக்கும் முழங்காலில் நின்றிருந்த ரஸ்புட்டின் எழுந்தார். கட்டிலில் படுத்திருந்த சிறுவனை உற்று நோக்கினார். முகத்திலே புன்சிரிப்போடு கூடிய ஒருவித பிரகாசம் தோன்றியது. "குழந்தாய் உன் கண்களைத் திறந்து என்னைப் பார்" என்றார். இதனைக் கேட்டவுடன் அந்த அறையுள் பிரார்த்தனை செய்துகொண்டிருந்த அத்தனை பேரும் எழுந்து நின்றார்கள். அவர்கள் அத்தனை பேரும் அதிசயத்தோடு அங்கே நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அலெக்ஸியின் கண்ணிமைகள் இலேசாகப் படபடக்க ஆரம்பித்தன. பின்னர் முழுதாகத் திறந்து அருகே நிற்பவர்களைப் பார்த்தன. அதேவேளை அந்தச் சிறிய இதழ்களிலும் புன்னகை அரும்ப ஆரம்பித்தது.

அரசியாரின் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. அங்கிருந்த அனைவரையும் காரணமின்றிப் பார்த்தார். அழுதபடியே குழந்தை அலெக்ஸியின் அருகே ஓடிவந்து ஏதேதோ எல்லாம் சொல்ல ஆரம்பித்தார். இவற்றைக் கண்ட ரஸ்புட்டின் அனைவரையும் அமைதியாக இருக்கும்படி தனது கைகளினால் சைகை காண்பித்தார்.

"அரசிளங்குமரனே! உமது தொல்லைகள் எல்லாம் அகல்கின்றன. இதற்கு நீர் ஆண்டவனுக்குத்தான் நன்றி கூறவேண்டும். இப்போது ஓய்வாக நித்திரை செய்யும்" என்று கூறிவிட்டு பெற்றோரைப் பார்த்தார். அவர்கள் முகங்களில் பணிவோடு கலந்த ஆனந்தம் பரவியிருப்பதைக் கண்டார்.

"இளவரசர் அலெக்ஸி இனி உயிர் வாழ்வார், நீங்கள் எவருமே அச்சம் கொள்ளத் தேவையில்லை" என்று உரக்கக் கூறினார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட அரசியார் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஆண்டவனுக்கு நன்றி சொன்னார். அருகே நின்றுகொண்டிருந்த ரஸ்புட்டினை நன்றியுடன் அன்பொழுகப் பார்த்தார். ரஸ்புட்டினை தகுந்த நேரத்தில் வந்து தனக்கு நினைவூட்டியதற்காக அனற்றாசியாவுக்கு அடிக்கடி நன்றி கூறினார். தான் அதுவரை அலெக்ஸியின் அருகேயிருந்து பட்ட துன்பமெல்லாம் அரைநொடியிலே மறைந்து விட்டதுபோன்ற உணர்வையும் பெற்றார். தன் கண்முன்னே ஓர் அதிசயம்தான் நிகழ்ந்திருக்கின்றது என்று எண்ணினார் அரசியார். தங்கள் அரசிளங்குமரனையும், ரஷ்யாவின் அரச குடும்பத்தையே வாழவைக்க ரஸ்புட்டின் இறைவனால்தான் இங்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்று முழுதாக நம்பினார்.

இந்தச் சந்தர்ப்பத்திற்குப் பின்னர் ரஸ்புட்டின் அரண்மனைக்கு அடிக்கடி அழைக்கப்பட்டார். அரச மாளிகையில் பல விருந்துகளுக்கும் வரவழைக்கப்பட்டார். அரசியாரிடமிருந்து பல பரிசில்களும் தாராளமாகவே ரஸ்புட்டினின் இருப்பிடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. பல உயர் வகுப்பினரின் அறிமுகமும் அவ்வப்போது கிடைத்தது.

◆◆



13

மீண்டும் பிறந்த இடத்தில்...

பல மாதங்களாகத் தலைநகரிலே வசித்த ரஸ்புட்டின் தலை நகருக்கும் பொக்கெரவொஸ்கியாவிற்கும் இடையில் புதிதாக அமைக்கப்பட்ட ரஷ்ய புகையிரத சேவையைப் பயன்படுத்தி தனது மனைவி, மக்களைப் பார்க்கவெனப் புறப்பட்டு வந்தார். செழிப்புற்றிருந்த பண்ணையும், பழக்கப்பட்ட ஊர்களையும், மனைவி, மக்கள், உற்றார் உறவினர் நண்பர்களையும் கண்டு அளவில்லா ஆனந்தம் அடைந்தார். தலைநகரிலே புதிய வாழ்க்கை முறைகளை அமைத்துக்கொண்ட போதிலும் தான் பிறந்த இடத்தில் வாழ்ந்த வாழ்க்கையை எண்ணி எண்ணி மகிழாமலும் இருக்க முடியவில்லை.

சில தினங்கள் கழிந்ததும் ஒருநாள் அனைவரும் தூக்கத்திலிருந்த போது இரவின் நிசப்தத்தைக் கிழத்துக்கொண்டு ரஸ்புட்டினின் மனைவியில் கூக்குரல் எழுந்தது. தூக்கத்திலிருந்த அனைவரும் இக்கூக்குரலைக் கேட்டு எழுந்துவிட்டார்கள். "என்ன நடந்தது? ஏன் இப்படிக் கூக்குரலிடுகிறீர்?" என்று மனைவியைக் கேட்டார்.

இதற்கிடையில் முத்த மகள் மரியா ஓடிவந்து கதவைத் தட்டினார். "அம்மா! என்ன நடந்தது? என்ன நடந்தது? கதவைத் திறவுங்கள்" என்றார்.

"எனக்கு ஒன்றுமில்லை, எல்லோரும் போய்த் தூங்குங்கள்" என்றார். மறுநாள் மகள் கேட்டபோதும் தாயார் முன்னர்போல் தனக்கு எதுவுமில்லை என்று எதையோ கூறி மழுப்பிவிட்டார். ஆனால் அவரது முகத்தில் எதனையோ மறைப்பது போன்ற அறிகுறி தென்பட்டது.

இது நடந்து சில தினங்களின் பின்னர் ரஸ்புட்டின் மீண்டும் தலைநகரை நோக்கிப் புறப்பட்டார். புறப்பட்ட சில தினங்களுக் குள்ளேயே மனைவியாரின் உடல்நிலை மோசமாகியது. வயிற்றிலிருந்து இரத்த நாளம் வெடித்து குருதிப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் உடல் இளைத்தும் விட்டது. வைத்தியசாலைக்குச் செல்லவோ, யாரையும் இதுபற்றி தனது கணவருக்குத் தெரியப்படுத்தவோ கூடாது என்றும் தடுத்து விட்டார்.

உடல்நிலை சற்றுக் குணமானதும் தாயார் திரும்பவும் ஓடியாடி வேலை செய்ய ஆரம்பித்தார். இரண்டொரு தினங்களின் பின்னர் மீண்டும் இரத்த நாளம் வெடித்து வயிற்றிலிருந்து குருதிப் பெருக்கு ஏற்பட்டது. இம்முறை தாயாரால் எழுந்து நடக்கவே முடியவில்லை. இம்முறை வீட்டில் வேலைக்குத் துணையாகவிருந்த டுனியா அருகில் இருந்த தபால் நிலையத்திற்குச் சென்று தந்தி கொடுத்து ரஸ்புட்டினுக்குத் தெரியப்படுத்திவிட்டார்.

ரஸ்புட்டின் தலைநகரில் இருந்துகொண்டே தனது மனைவியை நல்ல வசதிகளோடு தலைநகருக்கு அழைப்பித்தார். அங்கிருந்த சிறந்த வைத்தியசாலையில் சேர்த்தார். வைத்திய நிபுணர்களின் பரிசோதனை களின் பின்னர் மனைவிக்கு கருப்பையில் ஒரு கட்டி வளருவதாகக்

கண்டுபிடிக்கப்பட்டது. இதன் வளர்ச்சி ஆரம்ப நிலையில் இருப்பதனால் அவரது கருப்பையை அகற்றுவதன் மூலம் அந்த நோயைத் தடுக்கலாம் என்று டாக்டர்கள் ஆலோசனை கூறினர். அதன்படி அவருடைய கருப்பை அகற்றப்பட்டுவிட்டது.

அரசபரம்பரையினரின் செல்வாக்கு இருந்ததினால் மனைவியின் சிகிச்சைகளுக்குத் தேவையான செலவுகள் எல்லாம் அரச பரம்பரை யினரின் அனுசரணையுடனேதான் நடந்தது. அதன் பின்னர் சிலநாட்கள் தலைநகரிலே தங்கிவிட்டு ரஸ்புட்டினும் மனைவியும் மீண்டும் பொக்கொரவஸ்கியாவிற்கு வந்து சேர்ந்தனர்.

ரஸ்புட்டினின் இரண்டாவது மகள் மரியா மிகவும் துடிதுடிப்பான வர். பள்ளியில் படித்துக்கொண்டு இருக்கும்போது பல தடவைகள் ஆசிரியர்களால் தண்டிக்கப்பட்டிருக்கிறாள். ஆனாலும் அவளின் குறும்புகள் ஓய்வதில்லை. ஆசிரியரைச் சீண்டிவிட்டு ஏதும் தெரியாதவள் போல் இருந்துவிடுவாள். ஆசிரியருக்கு மரியாதான் இப்படிச் செய்கின்றாள் என்று தெரிந்தபோதும் கையும் களவுமாகப் பிடிக்க முடியாமல் திண்டாடினார்கள். மரியாவிற்கு பெண் சினேகிதிகளைவிட ஆண் சினேகிதர்களே அதிகமாக இருந்தனர். மரியாவின் புன்னகைக்காக அவர்கள் அவளுக்கு எப்போதும் அனுசரணையாகவே இருந்தார்கள். ஆசிரியர்களுக்கு மரியா எப்போதும் பெரிய தலையிடியாகவே இருந்துவந்தாள்.

மரியாவின் உயிர்த்தோழி லில்லி. சிறுவயதிலேயே தந்தையை இழந்த லில்லி தாயாருடன் கிராமத்து எல்லையில் ஓர் சிறிய குடிசையில் வசித்துவந்தாள். அவளை மரியா பல தடவைகள் தனது வீட்டிற்கு அழைத்துவந்து உணவும், குளிரைப் போக்குவதற்கு வேண்டியவற்றையும் செய்து கொடுப்பாள். மிகவும் வாயாடியாகவும், வீட்டிற்கு வெளியே சுதந்திரமாகவும் திரிந்தவள் தாய் மறுமணம் செய்தவுடன் வீட்டிற்குள்ளே

அடங்கியவளாகவும், ஊமைபோலவும் ஒடுங்கிவிட்டாள். மரியாவை அலட்சியம் செய்தாள். மரியாவிற்கு இவையொன்றையும் சகித்துக் கொள்ள முடியவில்லை.

பள்ளியிலும், பள்ளி முடிந்தபின்னர் வீட்டிலும் நல்லதொரு தோழியாக, நண்பியாக இருந்தவளின் மாற்றத்தைக்கண்டு மிகுந்த கவலையுற்றாள். இன்று எந்தப் பையன் எந்தப்பெண்ணை காட்டிற்குள் கூட்டிச்சென்றான், வேறு யார் யார் எல்லாம் என்ன செய்தார்கள் போன்ற இரகசியங்களை முன்னர்போல் நண்பியுடன் பகிர்ந்து கொள்ள முடியாமல் தவித்தாள்.

திடீரென ஒருநாள் மரியாவின் தாய் மருத்துவமனையில் இருந்தபோது தானாகவே வந்து தனது பழைய நட்பைப் புதுப்பித்துக் கொண்டாள் லில்லி. மரியாவிற்கு இது சிறிது ஆச்சரியத்தைக் கொடுத்தபோதிலும் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. பாடசாலைக்குச் செல்லும்போது 'உனது அம்மா என்னிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தார். இப்போது எனது அம்மா உன்னை எமது வீட்டில் வந்து இரவு தங்கிச் செல்லும்படி கேட்கச் சொன்னார்' என்றாள்.

தோழியின் அழைப்பைக் கேட்டதும் மரியாவிற்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. இதுவரை வேறு ஒருவருடைய வீட்டில் தங்கியதுமில்லை. உடனே 'நான் வருகிறேன், ஆனால் பாடசாலை முடிந்ததும் டூனியாவிடம் அனுமதி பெற்றுவிட்டுத்தான் வருவேன்' என்று பதில் கூறினாள்.

மரியாவின் ஆர்வத்தைக்கண்ட டூனியாவும் மறுக்காமல் அனுமதி கொடுத்தார். அன்றிரவே மரியா லில்லியுடன் அன்றிரவைக் கழிப்பதற்காக தோழியின் வீட்டிற்குச் சென்றாள். அங்கு சென்றபின்னர்தான் மரியா

எண்ணியதுபோல் இன்பமாகப் பொழுதைக் கழிக்க முடியாது என உணர்ந்தாள்.

லில்லியினுடைய பெற்றோர்களின் வீடு மிகவும் சிறியதாக இருந்தது. அங்கு போடப்பட்டிருந்த தளவாடங்களும் அவர்களுடைய ஏழ்மையை எடுத்துக்காட்டின. தாயார் மிகவும் மெலிந்தும், இளைத்தவராகவும் காணப்பட்டார். சிறிய நடுக்கத்துடன் அடிக்கடி மரியாவைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டேயிருந்தார். மரியாவிற்கு காரணம் புரியவில்லை. இரவு இரண்டு சிறிய படுக்கைகள் இருவருக்கும் போடப்பட்டன. கிழிந்த திரைச்சீலைதான் அவர்களுடைய போர்வை. லில்லியின் சிற்றப்பா வந்தவுடன்தான் மரியாவிற்கு அவர்களுடைய நடுக்கத்தின் காரணம் புரிந்தது. லில்லியும், தாயாரும் அவருக்கு மிகவும் பயந்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

நடு வீட்டிற்குள் தனது இரண்டு கால்களையும் அகட்டியபடி நின்றுகொண்டு தனது கட்டைப் பெருவிரல்கள் இரண்டையும் இடுப்பில் கட்டியிருந்த 'பெல்ற்றிக்குள்' சொருகியபடி நின்றுகொண்டு மரியாவைப் பார்த்துப் புன்னகை செய்தார். மறுகணம் திரும்பி சாப்பாட்டு மேசையைப் பார்த்துவிட்டு 'எங்கே எனது 'வைன்' போத்தல்? அதனை எங்கே ஒளித்து வைத்திருக்கின்றாய்?' என்று மனைவியைப் பார்த்து உரத்த குரலில் கேட்டார்.

"நான் காணவில்லை" என்று மனைவி பதில் கொடுத்தார்.

"அதனை மட்டும் எனக்குச் சொல்லாதே! எங்கே அது?" என்று அவளது தோள்களைப் பற்றியபடி ஆவேசத்துடன் கேட்டார்.

"உண்மையில் எனக்குத் தெரியாது" என்றார் லில்லியின் தாயார்.

தனது மனைவியைப் பிடித்து ஒரு மூலையில் தள்ளி விட்டுவிட்டுப் போத்தலைத் தேடினார். சிறிது நேரத்தின் பின்னர் தனது கட்டிலுக்கடியில் அதனைக் கண்டெடுத்தார். 'இவள் எந்த நாளும் இந்தப் போத்தலை எடுத்து மறைத்துவிடுவாள். இவளுக்கு வேற வேலையே இல்லை' என்று கூறியபடி போத்தலின் மூடியைத் தனது பற்களால் கடித்து அதன் மூடியைத் தூரத்தே துப்பிவிட்டு மடமடவென்று மூச்சுவிடாமல் குடித்தார்.

லில்லியின் தாயார் சிறுமிகளைப் பார்த்து 'அவர் இன்று இருக்கும் நிலை மோசமாக உள்ளது. அவருக்குக் கிட்டப் போகவேண்டாம்' என்றார்.

இரு சிறுமிகளும் சாப்பிட்டுவிட்டுக் கையலம்பிவிட்டுப் படுக்கைக்குப் போகும்போது அவர் இருந்த கதிரையைத் தாண்டித்தான் செல்லவேண்டியிருந்தது. வழக்கம்போல் லில்லி அரை மனதுடனே சென்று அவருக்கு கன்னத்தில் முத்தம் கொடுத்தவிட்டுச் சென்றாள். அவளையடுத்து மரியா அவரருகே சென்றபோது அவளை இடுப்பில் வளைத்துப் பிடித்தபடி 'எனக்கு நீ முத்தம் கொடுக்க மாட்டாயா?' என்று கேட்டார். மரியா விருப்பமில்லாமல் சம்பிரதாய முறைப்படி கன்னத்தில் இலேசாக முத்தமிட்டாள். அதில் திருப்தியடையாத அவர் மரியாவை மேலும் தன்னுடன் இறுக அணைத்தபடி அவளின் உதடுகளில் முத்தமிட்டார். அதேவேளையில் அவரது வலது கை அவளுடைய உடலைத் தழுவவும் ஆரம்பித்தது. இதனைக் கண்ட லில்லியின் தாயார் ஓடிவந்து மரியாவை விடுவித்தபடி "குடிகாரப் பயலே! மரியாவை மரியாதையாக விட்டுவிடு. அவள் ஒரு சிறு பிள்ளை. நீ ஒரு கெட்டவன்" என்றார்.

"இதிலென்ன தப்பு? ஒரு பெண்ணுடன் சிறிது நேரம் சந்தோஷமாக இருக்கக்கூடாதா? அதற்குத்தானே பெண்களை

ஆண்டவன் படைத்தான். அப்படியென்றால் மரியாவை விட்டுவிட்டு அதற்குப் பதிலாக நான் உன்னை எடுத்துக்கொள்கிறேன்' என்று தலைக்கேறிய வெறியுடன் நாத்தளதளக்கக் கூறினார். மறுகணம் லில்லியின் தாயாரைப் பிடித்து இழுத்து ஆடைகளைக் களைய முற்பட்டார். நிலத்தில் வீழ்த்தினார். இதனைக் காணச் சகிக்காமல் இரு இளம் பெண்களும் ஒருவரை யொருவர் அணைத்தபடி படுக்கையில் சாய்ந்தனர். லில்லிக்கோ அழுகை தாங்க முடியவில்லை. தனது உயிர் நண்பியின் முன்னிலையில் சிற்றப்பாவின் நடத்தையால் நாணிக் குறுகினாள். அப்படியே சிறிது நேரத்தில் நித்திரையாகிவிட்டாள்.

லில்லி நித்திரையாகியதுதான் தாமதம் மரியா எழுந்து பார்த்தாள் பெரியவர்களின் ஆரவாரங்களும் அடங்கிவிட்டன. எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். இதுதான் தருணம் என்று மெதுவாக எழுந்து கால் பெருவிரல்களில் நடந்து சென்று இரகசியமாக தான் கொண்டுவந்த பொருட்களையெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு தனது வீட்டை நோக்கி ஓட்டம் எடுத்தாள்.

மரியாவின் வீட்டில் டூனியா தூங்காமல் ஏதோ செய்து கொண்டிருந்தாள். மரியாவைக் கண்டதும் 'என்ன மரியா? இந்நேரம் நீ அங்கே தூங்கியிருப்பாய் என்றல்லவா நான் எண்ணினேன். ஏன் இந்த நேரத்தில் ஓடி வருகிறாய்? என்ன நடந்தது?' என்று கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டாள்.

மரியாவால் உடனே பதிலொன்றும் கூற முடியவில்லை. டூனியாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஓவென்று ஆழ ஆரம்பித்து விட்டாள். பிறகு ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டு 'டூனியா அங்கே நடந்தது கொடுமை. அதனை என் வாயால் சொல்ல முடியாது' என்றாள்.

'அப்படியானால் உனக்கு ஒன்றும் ஆகவில்லையே?'

'இல்லை, அப்படி எனக்கு ஒன்றும் ஆகவில்லை.'

'அப்படியென்றால் அங்கே என்னதான் நடந்தது? விபரமாகச் சொல்.'

மரியா தன்னைச் சமாளித்துக்கொண்டு நடந்த எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் கூறினாள்.

ரஸ்புட்டினும் மனைவியும் மருத்துவமனையிலிருந்து வீடு வந்ததும் மரியாவிற்கு நடந்ததை ரஸ்புட்டினுக்குச் சொல்வதா விடுவதா என்று டூனியாவும், மரியாவும் திண்டாடிக் கொண்டிருந்தார்கள். இறுதியில் அதனைச் சொன்னால் தன் மனதிற்கு ஆறுதல் கிடைக்கும் என்று எண்ணி தந்தையிடம் எல்லாவற்றையும் கூறினாள்.

இதனைக் கேட்டதும் ரஸ்புட்டினின் முகம் வெளிறிப்போனது. யாரிடமும் இதுபற்றிக் கூறவேண்டாம், முக்கியமாக மரியாவின் தாயாரிடம் எதுவும் கூறவேண்டாம் என்று உறுதிமொழி பெற்றார். அன்றிரவு மரியாவின் தாயார் உறங்கிய பின்னர் லில்லியின் வீட்டிற்குச் சென்று அவளின் சிற்றப்பாவை வெளியே வரும்படி அழைத்தார்.

'மரியா ஓர் அப்பாவிப் பெண். உனது அநாகரீகமான காடைத் தனத்தை எனது சிறு பெண் மரியாவுக்கு முன்னால் எப்படிக் காட்ட முடிந்தது?' என்று கேட்டார்.

'அவளுக்கு அது அநாகரீகமாக இருந்திருக்காது. ஏனென்றால் அவள் உனது மகள்தானே, அவளும் உன்னைப்போல்தானே இருப்பாள்' என்றார் பரிகாசமாக. ரஸ்புட்டின் தாறுமாறாக அவரை வாய்க்கு வந்தபடி

ஏசினார். லில்லியின் சிறிய தகப்பன் எதுவும் பேசாமல் தனது கைகளை உயர்த்தியபடியே ரஸ்புட்டினின் பின்னால் வந்து தனது கையில் வைத்திருந்த ஓர் கோடரிப் பிடியால் ரஸ்புட்டினின் நெற்றியில் ஓங்கி ஒரு அறை விட்டார். இதனைச் சற்றும் எதிர்பாராத ரஸ்புட்டின் திடீரென மயக்கமுற்று வீழ்ந்துவிட்டார். நெற்றியிலிருந்து குருதி ஆறாகப் பெருகியது. இதனைக்கண்ட லில்லியின் தாயார் அலறியடித்துக்கொண்டு ஓடிவந்தார்.

அவருடைய கூக்குரலைக் கேட்ட அயலவர்களும் அங்கே குழுமி விட்டனர். ரஸ்புட்டினுக்கு நிகழ்ந்ததைக் கண்டதும் ஆச்சரியமுற்றனர். எல்லோருமாகச் சேர்ந்து ரஸ்புட்டினைத் தூக்கிக்கொண்டு அவரது வீட்டிலே கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டனர். ரஸ்புட்டினுக்கு நெற்றியில் பட்ட காயம் ஆறிய போதும் மாறாத ஒரு வடுவை அந்த இடத்திலே விட்டிருந்தது.

ரஸ்புட்டினின் மனம் அமைதியடையவில்லை. இனிமேல் இந்தக்கிராமத்திலே தனது இளம் மகள் இருக்கக்கூடாது என்பதற்கு இந்த ஒரு நிகழ்வே போதுமானதாக இருந்தது. இருப்பினும் மனைவியாருடன் இதுபற்றி ஆற அமர இருந்து பேசியபின்னரே ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தார். மனைவியாருக்கு முதல் முதலாக மகளைப் பிரிந்திருக்கப் போகிறேன் என்றவுடன் மிகவும் சங்கடமாகவே யிருந்தது. ஆனால் தந்தையாருடன் மகள் தலைநகரில் இருந்தால் மரியாவின் எதிர்காலமும் சிறந்ததாக இருக்கும் என எண்ணி அவர்களை வழியனுப்பி வைக்கச் சம்மதித்தார்.

தலைநகரை வந்தடைந்த இருவரும் முதலில் சசனோவ் (Sasanov) என்கிறவருடைய வீட்டிலே தங்கியிருந்தார்கள். அழகான வீடு ஆனால் சிறியது. அங்கே இரு வேலையாட்கள் இருந்தனர். வீட்டில் பொருட்கள் எல்லாம் வைத்த வைத்த இடங்களிலேயே இருக்கும்.

ஆனால் ரஸ்புட்டின் அதற்கு எதிர்மாறானவர். வெளி வேலைகளிலும் சரி, பொது வாழ்விலும் சரி எதுவும் ஒழுங்கில்லை.

தலைநகரிலே தமக்கென ஒரு வீட்டைக் கண்டுபிடிப்பது என்பது சிரமமான காரியம். எனவே ரஸ்புட்டின் பேரரசியாரின் தோழியான அனா விருபோவாவின் உதவியை நாடினார். இலக்கம் 64 கொறக்கோவயா உல்ற்சா (Gorokhovaya Ulitsa) என்ற இடம் ஓர் அமைதியான, ஆடம்பரமில்லாத, அயலவர்களால் மிகவும் மதிக்கப் படுகின்ற நகரப்பகுதியில் அமைந்திருந்தது. பிரதான வீதியை விட்டு சற்றுத் தள்ளியே அமைந்திருந்தாலும் ரஸ்புட்டினுக்கு மிகவும் பிடித்திருந்தது. வீட்டுக்கு முன்னால் உள்ள சிறிய முற்றத்தை முன்னாலிருக்கும் சுற்றுமதில் பாதுகாத்தது. முற்றத்தின் நுழை வாசலை அலங்கரிக்கும் அழகிய வளைவு முன்மதிலின் ஒரு பாகமாகவும் அமைக்கப்பட்டிருந்தது. இதன் வழியாக வந்து மூன்றாம் மாடிக்குச் சென்றால் ரஸ்புட்டினின் வதிவிடத்தை அடையலாம். ரஸ்புட்டினுக்கு இவையெல்லாம் மிகவும் பிடித்திருந்தன. அவசரமான பெரிய நகர வாழ்க்கையில் தான் அமைதியாக அந்த முன்றாம் மாடியில் இருப்பதையே விரும்பினார்.

ஐந்து அறைகளைக் கொண்ட இந்த மாடி வீட்டில் வரவேற்பு அறை, சாப்பாட்டு அறை, படிக்கும் அறை, இரண்டு படுக்கை அறைகளோடு ஒரு குளியலறையும் ஒரு சமையல் அறையும் இருந்தன. ஒரு நடுத்தரவர்க்க மனிதன் வாழும் ஒரு சாதாரண வீடு. எல்லா அறைகளிலும் சிந்தூர (Oak) மரத்தினால் செய்யப்பட்ட தளவாடங்கள் போடப்பட்டிருந்தன.

ரஸ்புட்டினின் அறையில் ஒரு ஒடுங்கிய படுக்கையும், அதற்கு மேல் பேரரசருடையதும் பேரரசியாருடையதுமான உருவப்படங்கள் தொங்கின. வரவேற்பு அறையில் சுவர் ஓரமாக அங்கு வந்து

காத்திருப்பவர்களுக்காக கதிரைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. படிக்கும் அறையில் வெளிக்கதவிற்கு அருகே அரசமாளிகையுடன் நேரடித் தொடர்புடைய ஒரு தொலைபேசி வைக்கப்பட்டிருந்தது.

இது அமைப்புக்கள் ரஸ்புட்டினுக்கு மட்டுமல்ல அவரின் மகளுக்கும் மிகவும் பிடித்திருந்தது. ரஸ்புட்டினுக்கு இன்னும் ஒன்று மிகவும் பிடித்திருந்தது. அங்கிருந்து ஆரம்பித்து வீதியை வந்தடையும் ஒரு தனியான மாடிப்படிக்கட்டுக்கள் ரஸ்புட்டினை மேலும் கவர்ந்திருந்தன. மூன்று மாடிகளிலும், முற்றத்திலும், வீதியிலும் ரஸ்புட்டினைக் காண்பதற்காக யாரும் காத்திருந்தால் அவர்கள் யாருமே அறியாமல் உள்ளே வரவும், வெளியே போகவும் இந்த மாடிப்படிகள் உதவுமென நம்பினார். அன்று தொடக்கம் மகள் மரியாவுடன் சென்று அங்கே தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

மரியா மிகவும் இளவயதுப் பெண்ணாக இருந்தபோதிலும் சசனோவினுடைய மகள் மரூசா (Marusa) இளைஞர்களுடன் செய்யும் களியாட்டங்களைக் கண்டு தானும் அப்படிச் செய்ய முற்பட்டாள். இதனைக் கண்ட ரஸ்புட்டின் மரியாவை அழைத்து 'மகளே மரியா, மரூசா உன்னைவிட வயதில் மூத்தவள். நீயோ மிகவும் சிறிய பெண். இளம் பெண்களுக்கும், ஆண்களுக்கும் இப்படியானவைகளிலே ஆசை வருவது இயற்கைதான். இருப்பினும் உனக்கு இன்னும் அப்படியான அனுபவங்களைப் பெறுவதற்குக் காலம் இருக்கின்றது. இந்த இளவயதில் இப்படிச் செய்ய முற்படுவது இறைவனுக்கே அடுக்காது' என்றார். இறைவனைத் தெடர்புபடுத்திக்கூறியதும் மரியாவிற்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

புதிய வீட்டில் ரஸ்புட்டினின் போதனைகளுக்காகவும், பிரார்த்தனைகளுக்காகவும் மக்கள் படை நாளுக்கு நாள் அதிகமாகியது. சில வேளைகளில் அரச குடும்பத்துப் பெண் பக்தர்கள் ரஸ்புட்டினைச்

சுற்றி அமர்ந்திருப்பார்கள். ரஸ்புட்டினுடைய சாதாரண, ஆனால் சாதுர்யமான அறிவுரைகளை, போதனைகளைக் கேட்பதற்காக அவரது காலடியில்கூட மண்டியிட்டிருப்பார்கள். இவ்வளவு நாட்களுக்குப் பின்னர் ரஸ்புட்டின் தான் விரும்பியபடி தனது கருமங்களை ஆற்றவும், தனது போதனைகளைப் போதிக்கவும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு ஆண்டவனுக்கு நன்றி கூறினார்.

இந்தக் கூட்டத்திலே இன்னும் ஒரு முககியமான அரச குடும்பத்தினர் வந்து இணைந்துகொண்டார். அவரின் பெயர் முன்யா கொல்வீனா (Munia Golovina). இவர் மரியா கொல்வீனா என்றும் அழைக்கப்படுவார். இவர் மிகுந்த கடவுள் நம்பிக்கையுள்ள, ஓர் அழகான ஆனால் எந்நேரமும் ஆழ்ந்த யோசனையிலே மூழ்கியிருக்கின்ற இருபது வயதுடைய நங்கை. மற்றவர்களைப்பற்றிச் சரியாக எடைபோடமுடியாத வர். நல்லதையும் கெட்டதையும் நன்றாகப்பிரித்தறியக்கூடிய தன்மையில்லாதவர். எதையும் எளிதாக நம்பிவிடுவார்.

கிராமத்திலே இருந்தபோது ரஸ்புட்டின் தங்களுக்கு மட்டுமே உரிய சொத்தாகவே மரியா எண்ணியிருந்தாள். ஒவ்வொரு நாளும் ரஸ்புட்டினைச் சந்திப்பதற்காக சகலவிதமான மக்களும் வந்து வரிசை வரிசையாக நிற்பதைக்கண்டவுடன் அவர் எல்லோருக்கும் உரிய சொத்து ஆகிவிட்டதைப்போல் உணர்ந்தாள். ஆனால் அதற்கு எதிர்மாறாகவே எல்லாம் நடந்தன.


ரஸ்புட்டின் தலைநகருக்கு வந்துவிட்டார் என்பதை அறிந்தவுடன் அந்தச் சிறிய வீடு அங்கவீனமுற்றவர்களாலும், நோயாளர்களாலும், வசதியுடையவர்களாலும், வசதிகள் அற்றவர்களாலும், பதவி உயர்வடைய வேண்டுவோராலும், வறியவர்களாலும் நிரம்பி வழிந்தது. ரஸ்புட்டினின் அன்பான வார்த்தைகளுக்காகவும், அவரிடம் குறைகள் தீர்க்கும் தெய்வீகச் செயல்கள் இருக்கின்றன என்றும், தனது கைகளால்

தொட்டு ஆசீர்வதித்தால் தமது குறைகள் எல்லாம் நீங்கிவிடும் என்றும் எண்ணினர்.

ரஸ்புட்டினின் காந்தசக்தியுள்ள கண்களே அனைவரையும் கவர்ந்திழுத்தன. அவை பழுப்பான நீல நிறமுடையவை. மிகவும் பிரகாசமுடையவை. மனத்தை ஊடுருவி வசீகரிக்கக் கூடியவை, கர்வில்லாத தன்மையையும், தந்திரமான தன்மையையும் கொண்டவை. இவரின் மிகவும் ஆர்வமான உரையாடல்களைக் கேட்போர் விளக்க முடியாத ஒரு காந்த சக்தியால் கவரப்பட்டவர்கள் போல் ஆவார்கள்.

ரஸ்புட்டினின் தரிசனத்தால் மக்களின் குறைகளும், நோய்களும், தேவைகளும் அற்றுப்போகின்றன என்று கேள்விப்பட்ட பலரும் ரஸ்புட்டினைப் பார்ப்பதற்காகப் படையெடுத்தனர். தேவைகளோடு ரஸ்புட்டினைச் சந்தித்த அனைவரும் மிகுந்த மனத் திருப்தியோடு திரும்பிச் சென்றனர். 'என்னால் ஆவதொன்றுமில்லை. எல்லாம் இறைவன் செயலே' என்று அடிக்கடி கூறுவார். ஆனால் இவரது செயல்கள் எல்லாம் உண்மையா அல்லது நடிப்பா என்று பிரித்தறிய முடியாமல் இருந்தன.

◆◆



14

தலைநகரில் ஆரம்ப எதிரிகள்

ரஸ்புட்டின், இலியடோ (Iliodor) இருவரும் ஒரே தேவாலயத்தில் தான் பணியாற்றினார்கள். ஆனால் இருவரும் எதிர்மாறான கருத்துக்களையே எப்போதும் கொண்டிருந்தார்கள். ரஸ்புட்டினுக்கு மாதா கோவிலைச் சார்ந்தவர்கள் பகட்டான ஆடைகள் அணிவது அவ்வளவாகப் பிடிப்பதில்லை. இலியடோ விவாகமாகாதவர். ஆனால் பகட்டாக ஆடைகள் அணிவதிலும், எப்போதும் பலர் தன்னைச் சுற்றி நிற்பதிலும் மிகவும் விருப்பம் கொண்டவர்.

ஒருமுறை இருவருக்கும் கடவுள் விடயத்தில் வாக்குவாதம் ஆரம்பமாகி அது தனிப்பட்ட தாக்குதல்கள் வரை சென்றுவிட்டது. 'நீர் எப்படி வேண்டுமானாலும் என்னைக் கேலி செய்யலாம். ஆனால் புனிதமாக இருக்க ஆசைப்படுபவன் ஆண்டவனுக்குச் சேவை செய்ய வேண்டும் அல்லது உரோமானியரின் காதல் தேவதைக்குச் சேவை செய்யவேண்டும். இருவருக்கும் சேவை செய்யமுடியாது' என்றார் இலியடோ.

'புனிதமானவனின் மனம் எப்போதும் துறவு நிலையிலேதான் இருக்கவேண்டும். தனது யாக்கை பற்றிய சிந்தனைகளை முன்வைக்கக்கூடாது. மதுவையோ, பலவகையான உணவுகளையோ, படுக்கையையோ பெரிதுபடுத்தக்கூடாது. பாவையர்களின் சேர்க்கையை மனதால்கூட எண்ணக்கூடாது. நான் சொல்வதை நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளவும். தமது யாக்கை பற்றிய சிந்தனைகளை விட்டு வெளியே வர முடியாதவனாலும் நிலையில் உயரமுடியும். தனது ஆன்மாவை சிற்றின்ப வேட்கையிலிருந்து விடுவிக்கவேண்டும். இந்த வேட்கை மிக அதிகமானால் அவன் என்ன செய்யவேண்டும்?'

'அவன் மிகவும் கடுமையாகப் பிரார்த்திக்க வேண்டும்' என்றார் இலியடோ.

'இல்லை, அப்படியொரு நிலை வந்தால் அவர் பிரார்த்திப்பதை நிறுத்திவிடவேண்டும். தனது துறவு நிலையை தொடரவிரும்பினால் அவருடைய உடலுக்குத் தீனி போடவேண்டும். தனது பிரார்த்தனைகளை நிறுத்திவிட்டு உடற்பசியைத் தீர்க்கக்கூடிய பெண்ணைக் கண்டுபிடிக்கவேண்டும். முதலில் தனது உடற்பசியைத் தீர்க்கவேண்டும். அதன் பிறகு தனது பிரார்த்தனைகளைத் தொடரலாம். இப்படியான இடைநிறுத்தலுக்காக கடவுள் அவரைத் தண்டிக்க மாட்டார். அவர் பெண்களைத் தேடி அலையாத காலம் கட்டாயம் வரும். மனதிலுள்ள ஆசைகள் எல்லாம் அகன்ற ஒரு நிலை வரும். அப்போது அவர் இறைவனை அடைய வேண்டிய வழிகளைத் தேடலாம்' என்று தனது நீண்ட விளக்கத்தைக் கொடுத்தார் ரஸ்புட்டின்.

'நீர் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. இப்படியாக நீர் தேவாலயங்களில் செய்த சத்திய வாக்குகளை அலட்சியம் செய்யலாம், இச்சைகளுக்கு அடங்காதவர்களாக இப்போதும் இருக்கிறோம் என்று

கூறலாம். அப்படியானால் நாம் எப்படி எமது அன்னை மேரிக்கு விசுவாச முள்ளவர்களாக விளங்கமுடியும்?' என்று எரிந்தார் இலியடோ.

'தேவாலயங்களைப் பற்றி நான் உம்முடன் விவாதிக்க விரும்பவில்லை. இந்தச் சத்தியப் பிரமாணங்கள் எல்லாம் தவறான விளக்கங்களின் அடிப்படையில்தான் ஆரம்பமாகின. ஒரு துறவி யினுடைய ஆன்மா ஆசைகளினால் நிரம்பியிருக்கும்போது அவரால் எப்படி மண்டியிட்டுப் பிரார்த்திக்க முடியும்? முன்னைய பாதிரிமார்கள் பாலுறவின்போது எந்த முக்கியமான சக்தியை நாம் செலவிடுகின்றோமோ அதே சக்திதான் எம்மை ஆண்டவனின் பாதங்களிலும் கொண்டுபோய் விடுகிறது என்று விளக்கினார்கள். இந்தியாவில் உள்ள யோகிகள்கூட ஆன்மீக சக்தி அதன் அடித்தளத்திலிருந்து எமது முதுகெலும்பு வழியாக தலையின் உச்சியை அடைந்து அங்கே அறிவுஒளி ஆரம்பித்துப் பிரகாசிக்கின்றது என்றும், ஒருவனால் அவனுடைய சிற்றின்ப வேட்கைகளால் சரிவரத் தியானிக்க முடியாது போனால் அவன் அந்த வேட்கைகளை உடனே தீர்த்து வைக்கவேண்டும். அதன் பிறகு தியானத்தை ஆரம்பிக்கலாம். அப்போதுதான் தியானத்தில் ஒரு நிறைவைக் காணலாம் என்று கூறுகின்றார்கள். இறுதியில் ஆசைகளினால் ஆட்கொள்ளப்படாத பேரானந்தத்தை அடையலாம் என்று கூறுகின்றார்கள்' என்ற இன்னொரு நீண்ட விளக்கத்தையும் ரஸ்புட்டின் கொடுத்தார்.

இப்படியாக சொற்கணைகளால் தொடுத்த வாக்குவாதம் மேலும் மேலும் உக்கிரமாக உருவெடுத்தது. இலியடோருக்குப் பொறுக்க முடியவில்லை.

'ரஸ்புட்டின் அவர்களே! உமது கூற்றுக்களிலிருந்து ஏமாற்றுதல், கபட நாடகமாடுதல் என்றெல்லாம் கூறுகின்றீர். ஆனால் நீர் பரிசுத்தமானவர் என்று மக்கள் நம்பும்படி நீர் பரிசுத்தமானவரா? நீர்

மற்றவர்களுக்குப் போதிக்கும் போதனைகளுக்கிடையில் தூய்மை அல்லாத களியாட்டங்கள் பற்றியும் போதிக்கவில்லையா? உமது வீட்டிலே உமது போதனைகளுக்காக வந்திருக்கும் பிரபுக்களின் பெண்கள் எல்லாம் உண்மையான, தெளிவான பக்தியுடன்தான் வருகின்றார்களா? அவர்களுக்கு உம்மிடமிருந்து என்ன வேண்டும்? என் கேள்விகளுக்கு நீர் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்' என்றார்.

ரஸ்புட்டினுக்கு இலியடோ அவர்களின் போக்கு சிறிதும் பிடிக்கவில்லை. கடுமையான கோபம் வந்தபோதும் அதனை அடக்கிக்கொண்டு மிகவும் அமைதியான தொனியில் 'இலியடோ, உமக்கு என்னை நன்றாகத் தெரியும். நான் பொய் சொல்வதில்லை என்பதும் உமக்கு நன்றாகத் தெரியும். நான் எனது மனைவியாரைத் தொட்ட நாளிலிருந்து வேறொரு பெண்ணை இதுவரை தொட்டதேயில்லை. இது முற்றிலும் உண்மை' என்றார்.

'ரஸ்புட்டின் அவர்களே இதை நீர் எனக்குச் சொல்கிறீரா? உம்மைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். உமது தீய செயல்களை தெய்வீகமான வார்த்தைகள் கூறி மறைக்க முற்படவேண்டாம்' என்று ஏளனத்தோடு கூறினார்.

இது ரஸ்புட்டினை கோபத்தின் உச்சிக்குக் கொண்டுபோய் விட்டது. 'இங்கே பாரும் இலியடோ, உமக்கு உம்மையே விளங்கிக் கொள்ள முடியவில்லை. சுய அறிவின்மையே இதற்குக் காரணம். உன்னையே நீ அறிவாய் என்பதை நீர் அறியவில்லையா? நான் என்னையும் என்னோடு இருப்பவர்களைப் பற்றியும் நன்கறிவேன். எனது இதயத்தில் நான் வெட்கப்படும்படியாக மறைத்து வைப்பதற்கு எதுவும் இல்லை. எல்லோரது இதயங்களிலும் ஏதேதோவெல்லாம் இருக்கின்றன. சிலவற்றை நினைக்கும்போது வலியெடுக்கும் ஏன் அவற்றைச் செய்தோம் என்று வேதனைப்படுவோம்' என்றார்.

'உமது உள்ளத்தில் இருக்கும் பல நிகழ்வுகள் அவற்றை நினைக்கும்போதெல்லாம் உம்மை உறுத்தலாம். ஆனால் எண்ணும் போதெல்லாம் என்னை உறுத்தி இழிவுபடுத்தும் எண்ணங்கள் என்னிதயத்தில் ஒன்றுமில்லை' என்றார்.

'அப்படியா? நீர் ஒருமுறை எனது வீட்டிற்கு வந்திருந்தபோது எனது வீட்டு வேலை செய்யும் டூனியா குளியலறையில் இருந்தபோது எட்டிப் பார்த்ததை எல்லாம் நீர் மறந்துவிட்டீரா?' என்றார் சிறிது கிண்டலாக.

'நீ, நீ' என்று பிதற்றினார் இலியடோ.

'உண்மையைக் கூறும், அதுதான் உமது ஆன்மாவிற்கு உகந்தது. அவை கவலையைத் தரலாம் ஆனால் இதயத்தைப் பரிசுத்தமாக்கும்.'

'என்னிடம் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. நீ பொய் கூறுகிறாய். அப்படி ஒன்றும் அங்கே நடக்கவில்லை' என்று கோபத்தால் கொதித்தார் இலியடோ. குழப்பமும் ஆவேசமும் அவர் முகத்திலே வெளிப்படை யாகின. உதடுகள் துடித்தன ஆனால் வார்த்தைகள் வெளியே வர மறுத்தன.

'இன்றுதொட்டு நீர் எனது எதிரி. நீர் கடமையில் இருந்து தவறியவர், பாவங்களைச் சுமப்பவர். எனது மனைவி எதுவித குற்றமும் அற்றவள். அவளுக்கு நான் என்றும் விசுவாசமாகத்தான் இருக்கிறேன். அது பற்றி நீர் அக்கறை கொள்ளத் தேவையில்லை. உம்முடன் இனிமேல் எதுவித தொடர்புகளும் எனக்குத் தேவையில்லை. அதோ கதவு திறந்துதான் இருக்கின்றது, அதனூடாக வெளியே போகலாம்' என்றார் ரஸ்புட்டின் தனது கைகளைக் காட்டியபடியே. இலியடோ

தொடர்ந்தும் அங்கிருக்க விருப்பமில்லாமல் அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

ரஸ்புட்டினுடைய வீட்டில் சீடர்களும், பக்தர்களும், நண்பர்களும் அவருடைய பேச்சுக்களைக் கேட்பதற்காக வருவார்கள். சிலர் நாள் முழுவதும் அங்கேயே இருப்பார்கள். சில சீடர்களுடன் பழகும்போது மிகவும் பக்குவமாக நடந்துகொள்ளவேண்டியிருந்தது. அவர்கள் அவருடைய பேச்சுக்களைக் கேட்பதற்காக மட்டும் அங்கே செல்லவில்லை. அவருடன் நெருங்கிய நட்புக்கொள்ளவும், நெருங்கிப் பழகவும், வேண்டுமானால் உடல் தொட்டு மகிழவும் அங்கே சென்றார்கள். இப்படியானவர்களைப் பகைத்தால் அவர்கள் இவரை விட்டுவிட்டு வேறு குருவை நோக்கிச் சென்றுவிடுவார்கள்.

அப்படியானவர்களில் ஒருவர்தான் முன்பு கன்னியர் மடத்தைச் சேர்ந்த அக்குலினா (Akulina) என்பவர். சில வருடங்களுக்கு முன்னர் அக்குலினா கன்னியர் மடத்தில் இருந்தபோது சிலரால் தாக்கப்பட்டார். உடலில் காயங்களுக்குள்ளாகி மனங்குழம்பிய நிலையில் இருந்தபோது ரஸ்புட்டின் காயங்களை ஆற வைத்துக் காப்பாற்றிவர். நாட்டிலே பொதுவுடமைவாதிகளால் அந்த மடத்திலிருந்து வெளியேறியபின் கடவுளின் பணிகளுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். துன்புறுபவர்களுக்கும், தேவைப்படுபவர்களுக்கும் தனது பணியை ஆற்றிவரும் வேளையில்தான் ரஸ்புட்டின் தலைநகருக்கு வந்திருப்பதை அறிந்தார். ரஸ்புட்டினின் வதிவிடத்தைத் தேடிக் கண்டுபிடிப்பதில் சிரமம் இருக்கவில்லை.

அக்குலினா எப்போதும் ரஸ்புட்டினின் காலடியிலேதான் அமர்ந்துகொள்வார். அவருக்கு வேண்டியவைகளையெல்லாம் செய்வார். கேட்கும் போது தண்ணீர் எடுத்துவந்து கொடுப்பார். கேட்காமலே

பழங்களை சிறு துண்டுகளாக நறுக்கிக் கொடுப்பார். கைகளை இலேசாக வருடிக் கொடுப்பார். கன்னத்திலே தெரியாததுபோல் மெல்லிய முத்தங்களும் கொடுப்பார். இவருடைய செயல்களால் அங்கிருப்பவர் களுக்கு இவருடைய நோக்கம் நன்றாகவே விளங்கிவிட்டது. ஆனால் அவருடைய எண்ணம் ஒருநாளும் நிறைவேறவேயில்லை.

ஒல்கா விலடிமிறோவ்னா லக்ரீனா (Olga Vladimirovna Lokhtina) என்பவர் ரஸ்புட்டினுக்கு எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்தவர். மிக நல்ல அழகியும்கூட. உயர் குடும்பத்தவராயினும் பெரிய அறிவாளி என்று கூறமுடியாது. பார்ப்பவரைக் கவர்ந்திழுக்கும் பொன்னிறக் கூந்தலுடன் கூடிய திடமான உடற்கட்டும் உடையவர். பக்தியின் நிமித்தம் ரஸ்புட்டினுடைய வீட்டிற்கு வருவதைவிட அவர் மேலுள்ள இனந்தெரியாத காதல் நிமித்தம்தான் ஒல்கா அங்கே வர ஆரம்பித்தார். ரஸ்புட்டினுக்கு இவருடைய நோக்கம் தெரிந்திருந்தது அதனால் மற்றவர் முன்னால் மிகவும் அவதானமாகவே இருந்தார்.

ஒருநாள் வழிபாடுகள் முடிந்து எல்லோரும் வீடுகளுக்குச் சென்றுவிட்டனர். தனது வீட்டிற்குப் போகாமல் தயங்கித் தயங்கி நின்றுகொண்டிருந்த ஒல்கா ரஸ்புட்டினிடம் தனது கணவன் நோயுற்று படுக்கையில் இருப்பதாகவும் அவரை அங்கே வந்து பார்க்கும்படியும் வேண்டிக்கொண்டார். அவரின் அழைப்பிற்கிணங்க அன்று சாயந்தரமே ரஸ்புட்டின் ஒல்காவின் வீட்டிற்குச் சென்றார். ஒல்கா அவரை அன்புடன் வரவேற்றார். ஒல்காவின் கணவரைப்பற்றிக் கேட்க எண்ணி ஒல்காவை நோக்கித் திரும்பிய ரஸ்புட்டின், சற்றும் எதிர்பார்க்காத வகையில் ஒல்கா தான் அணிந்திருந்த ஆடைகளைத் தளர்த்திவிட்டு பிறந்த மேனியுடன் நிற்பதைக் கண்டார். இதனைக் கண்டவுடன் சற்றுத் தடுமாறிய ரஸ்புட்டின் பின்னர் தன்னைச் சமாளித்துக்கொண்டார்.

இந்த நிகழ்வுக்குப் பிறகு ஒல்கா ஒரு விநோதமான மத போதனைகளை ஆரம்பித்தார். ரஸ்புட்டின் கடவுளின் பிரதிநிதி என்றும், தான் அன்னை மேரியின் மறுபிறப்பு என்றும் மற்றையவர்களுக்குப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். இவற்றைக் கேற்வியுற்ற ரஸ்புட்டின் ஒல்காவை அழைத்து முதலில் அன்பாக இப்படிச் செய்ய வேண்டாம் என்று அறிவுரை கூறினார். ஆனாலும் அவர் தொடர்ந்து செய்துகொண்டே யிருந்தார். மீண்டும் மீண்டும் அழைத்து அப்படிச் செய்யவேண்டாம் என்று கூறியபோதும் எதுவித பலனுமில்லை. இறுதியில் தனது பொறுமையை முற்றிலும் இழந்த ரஸ்புட்டின் ஒல்காவைத் தனது இருப்பிடத்திற்கு இனிமேல் ஒருநாளும் வரக்கூடாது என்று கட்டளையிட்டார். இதனைக் கேட்ட ஒல்கா 'சரி வரமாட்டேன்' என்று கூறிவிட்டு மறுநாளே இலியடோவின் இருப்பிடம் நோக்கித் தன் கால்களைச் செலுத்தினார்.

ஒருவித மனக்குழப்பமான மனநிலையிலிருந்த ஒல்கா, இலியடோவின் இருப்பிடத்தை அடைந்து ரஸ்புட்டின் தன்னை உதாசீனம் செய்துவிட்டார் எனவும் தன்னை அவருடைய சிஷ்யையாக ஏற்றுக்கொள்ளும்படியும் கூறினார். ரஸ்புட்டினிடம் மிக நெருக்கமாக இருந்த ஒல்கா, தன்னிடம் வந்து சரணடைந்ததைக் கண்ட இலியடோவிற்கு அதிர்ச்சி ஒருபுறம் ஆச்சரியம் மறுபுறமுமாக இருந்தது. எப்படியாகத் தன் புதிய எதிரியான ரஸ்புட்டினைப் பழிவாங்கலாம் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த இலியடோவிற்கு ஒல்காவினுடைய வரவைக் கண்டதும் அவர் ஊடாகவே அதனைச் செய்யலாம் என்ற எண்ணமும் அதே நேரத்தில் எழுந்தது.

சிறிது நேரம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்த இலியடோ திடீரென்று பலமாக எக்காளமிட்டுச் சிரித்தார். 'என்னையா வேடதாரி, கபட நாடகம் ஆடுபவன் என்று கூறினாய்? உன்னை என்ன செய்கிறேன்

பார்?' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டார். மறுகணம் பணிவும், பக்தியும் ஒருங்கே கூடிவர அருகே நின்ற ஒல்காவை எட்டி தன் பக்கம் இழுத்தார். அவளைத் தன்னிரு கரங்களாலும் இறுக அணைத்தார். பக்கவாட்டில் சாய்த்து பலவந்தமாக நிலத்திலே வீழ்த்தினார். என்ன செய்வதென்று அறியாத நிலையில் அவளைக் கட்டியணைத்து முத்தம் கொடுக்கப் போனார்.

தீடீரென்று இலியடோவின் இந்தச் செயலைக் கண்ட ஒல்கா உரத்து ஓலமிட்டுக் கத்தினார். ஒல்காவின் இந்தச் சத்தத்தைக் கேட்டதும் அருகிலிருந்த வராந்தாவிலும் சில காலடிகள் கேட்டன. மறுகணம் அவர்கள் நின்றிருந்த அறைக் கதவு அகலத் திறந்துகொண்டது. அங்கே இரு துறவிகள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் இலியடோவையும் ஒல்காவையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.

எதிர்பாராத இந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக இலியடோவின் மூளை மீண்டும் விரைவாக வேலை செய்ய ஆரம்பித்தது. திடீரென தன்னை விடுவித்துக்கொண்டு 'பார்த்தீர்களா? இவளின் வேலையை? நாம் ஆண்டவன் முன்னால் கொடுத்த சத்தியவாக்கிற்கு எதிராக என்னைப் பலாத்காரமாக தன்னிச்சைக்கு இசைய வைக்க முனைகிறாள். இவளை வெளியே கொண்டு செல்லுங்கள்' என்று அவர்களைப் பார்த்துக் கூறினார்.

இலியடோவின் இந்தச் செயலைக் கண்டதும் அந்தப் பெண் மேலும் கூக்குரலிட்டாள். ஆனால் அங்கு வந்த துறவிகள் இலியடோவின் சொல்லையே நம்பினார்கள். குழப்பமடைந்திருந்த ஒல்காவைப் பிடித்து இழுத்து வெளியே கொண்டு சென்றார்கள். அவளது ஆடைகளைக் கிழித்தெறிந்தார்கள். கைகளிலிருந்த சவுக்கால் அடித்தார்கள். ஒரு குதிரையிலே அவளைக் கட்டி தெருவழியே இழுத்துச் செல்லப் பணித்தார்கள்.

குதிரை கிராமத்தின் ஒரு கரைக்குச் சென்றபோது சில விவசாயிகள் அவளைக் கண்டார்கள். அவளது பரிதாபமான நிலையைக் கண்ட விவசாயிகள் ஒல்காவை விடுவித்து அவளுக்குத் தேவையான மருந்து வகைகளையும், உணவையும் கொடுத்துப் பராமரித்தார்கள். நாட்கள் செல்லச்செல்ல அவளது உடற்காயங்கள் ஆறினவே தவிர அவளுடைய மனக்காயங்கள் ஆறவேயில்லை.

இலியடோவின் இந்த இழிவான செயல் ரஸ்புட்டினின் காதுகளுக்கு எட்டியது. ரஸ்புட்டினின் இரத்தம் கொதித்தது. தனது குற்றத்தை மறைப்பதற்காக ஒல்காவின்மேல் குற்றம் சுமத்தியதை ரஸ்புட்டினினால் மன்னிக்கவே முடியவில்லை. எப்படியாவது இதற்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்று 'பரிசுத்த மதத்தலைவர்கள் சபையிடம்' சென்று முறையிட்டார்.

இதனைக் கேள்வியுற்ற உடனே இலியடோ தானும் சென்று ரஸ்புட்டினுக்கு எதிராக வேறொரு புகார் செய்தார். இச்சபையிலே இருந்த கேமோகன் (Hermogan) என்ற மதகுருவின் இரு நண்பர்கள் முன்னர் ஒருமுறை "உண்மையான ரஷ்ய மாந்தர்கள் அமைப்பிலிருந்து" பணம் திருடியதற்காகத் தண்டனை பெற்றவர்கள். தியோபன் இந்தத் திருட்டுச் சம்பவத்தை இரகசியமாக வைத்திருக்க எண்ணியிருந்த போதும் ரஸ்புட்டின் விட்டுவிடவில்லை. இது கேமோகனின் மனதில் இப்போதும் அழியாது இருக்கின்றது. ரஸ்புட்டினைப் பழிவாங்க இதுதான் நல்ல தருணம் என்று இலியடோவின் குற்றச்சாட்டுக்களை மட்டும் விசாரிக்கத் தயாரானார்.

◆◆



15

குற்றவாளியா? சுற்றவாளியா?

இந்த வழக்கு மடாலயம் ஒன்றிலே ஆரம்பமாகியது. கேமோகன் ரஸ்புட்டினைப் பார்த்து 'ரஸ்புட்டின் அவர்களே! எமது வணக்கத்திற்குரிய சகோதரர் இலியடோ அவர்கள் உங்கள்மேல் பல குற்றச்சாட்டுக்களை வைத்திருக்கின்றார். நீர் பல பாவச் செயல்களைப் புரிந்ததை ஆதாரங்களோடு கொண்டுவந்திருக்கின்றார்' என்று ஆரம்பித்தார்.

'வணக்கத்திற்குரியவரே, குற்றம் புரிந்தது நான் அல்ல அவர்தான்.....' என்று ஆரம்பித்த உடனேயே கேமோகன் 'நிறுத்தும், நான் பேசிக்கொண்டிருக்கும்போது இடையிலே நீர் குறுக்கிடவேண்டாம். நீர் எப்போது பேசவேண்டும் என்பதை நான் உமக்குக் கூறுவேன். அதுவரை பொறுத்திடும்' என்று ஒருவிதமான கண்டனக் குரலில் கூறினார்.

ரஸ்புட்டின் எதுவும் பேசாது அடங்கிவிட்டார். மறுகணம் இலியடோ எழுந்து 'எங்கோ இருந்து வந்த இந்த திடீர்ப் 'பெரியவர்' இதுவரை எத்தனையோ பெண்களை ஏமாற்றி தன் இச்சைக்கு இணங்க

வைத்துள்ளார். எனக்கு அவர்களின் எண்ணிக்கை தெரியாது. அப்படியானதொரு அப்பாவிப் பெண்தான் என்னிடம் வந்து இவரைப்பற்றி முறையிட்டார். இவர் அந்தப் பெண்ணை மயக்கநிலையில் வைத்திருந்த படியால் அவளால் எதுவுமே செய்யமுடியவில்லையாம். அவளுடைய மனநிலை கூடப் பாதிக்கப்பட்டுவிட்டது. அதனால்தான் அவளை மன நோயாளர் விடுதிக்கு அனுப்பிவைத்தேன்' என்று ஒருவித நளினத்தோடு கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை மேலும் கேட்டுக்கொண்டிருக்க முடியாத ரஸ்புட்டின் மீண்டும் எழுந்தார் 'வணக்கத்துக்குரியவரே! என்னால் இனிமேலும் இவருடைய ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. இலியடோ கூறுவதெல்லாம் பச்சைப் பொய்' என்று கூறியதுதான் தாமதம் இருவர் வந்து ரஸ்புட்டினைப் பிடித்து அவர் இருந்த இடத்தில் அமர வைக்க முயன்றனர்.

'இவரைப் பிடித்து வைத்துக்கொள்ளுங்கள். நான் கூறப்போகும் உண்மைகளால் தான் தண்டிக்கப்படப்போகிறேன் அன்ற அச்சத்தினால் இவர் என்னைப் பேச விடாமல் தடுக்க முயல்கிறார். அந்தப் பெண் சித்தம் கலங்கிய நிலையில்தான் எனது அறைக்கு வந்தார். அதற்குக் காரணம் இவர்தான். இவருக்குத் தகுந்த தண்டனையை நீங்கள் வழங்கியே ஆகவேண்டும்' என்று உரத்த குரலில் கத்தினார் இலியடோ. அங்கிருந்தோர் அனைவரும் அதனை ஆமோதிப்பதுபோல் தமது தலைகளைப் பலமாக ஆட்டினர்.

கேமோகன் ரஸ்புட்டினை எரித்துவிடுவதுபோல் பார்த்தார். 'இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கெல்லாம் என்ன பதில் கூறப்போகிறீர்? அவர் கூறுதெல்லாம் உண்மைதானே? என்று அவரும் ஒரு ஏளனமாகப் பார்த்துக் கேட்டார்.

ரஸ்புட்டினின் முறை வந்தது. அவர் எழுந்து நின்று பேச ஆரம்பித்தார். 'இவர் கூறுவதெல்லாம் பொய். தனது குற்றங்களை எனது தோள்களில் சுமத்தப் பார்க்கிறார். ஒல்காவை குதிரையில் கட்டிச் சவுக்கால் அடித்ததெல்லாம் யார்? அவரது சித்தம் கலங்கியது என்னால்தான் என்றால் அவருக்குத் தண்டனை கொடுக்கும்படி இவர் ஏன் பணித்தார்? சித்தம் கலங்கிய நிலையில் அந்தப் பெண் இவரது அறைக்குச் சென்றபோது இவர் அவருக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கவல்லவா முனைந்திருக்கவேண்டும்? அடித்து விரட்டியிருக்கக் கூடாது அல்லவா?' என்று கூறிக்கொண்டிருக்கும்போது இலியடோ மீண்டும் எழுந்து;

'ரஸ்புட்டினை மேலும் பேசவிடாதீர்கள். அவருடைய குற்றங்கள் எல்லாம் அவருடைய முகத்திலேயே எழுதப்பட்டிருக்கின்றன. அவர் பேசியது போதும். அவரைப் பிடித்துத் தகுந்த தண்டனையை வழங்குங்கள்' என்று மீண்டும் கத்தினார்.

முன்னர் ரஸ்புட்டினைப் பிடித்துக் கதிரையில் இருத்திய இருவரும் மீண்டும் ரஸ்புட்டினை நோக்கி வந்தனர். ரஸ்புட்டின் திடீரென எழுந்து தான் இருந்த கதிரையை எடுத்து அவர்கள் மீது வீசினார். ஓடிச்சென்று அருகேயிருந்த இன்னொரு அறையினுள் புகுந்து கதவை மூடினார். மற்றவர்கள் இவரை அணுகு முன்னமே மடாலயத்தின் வாசல் வழியாகப் புறப்பட்டு வெளியே ஓடிவிட்டார்.

இப்படி அந்த மடாலயத்திலே நடந்தது அரசியாரின் காதுகளுக்கு எட்டிவிட்டது. அனைவரையும் அரசர் முன் வந்து ஆஜராகும்படி பணித்தார். அரச காவலர்களை அனுப்பி உண்மையாக நடந்தவற்றை அறிந்து வரும்படி பணித்தார். அவர்கள் சேகரித்து வந்த செய்தி களையும், குற்றம் சாட்டப்பட்ட அனைவரது வாக்குமூலங்களையும் கேட்டு அறிந்ததிலிருந்து அரசருக்கு உண்மை புலனாகிவிட்டது.

கேமோகனும், இலியடோவும் உண்மை வெளியானதையிட்டு வெட்கித் தலைகுனிந்தனர். தம்மை மன்னிக்கும்படி அவரிடம் வேண்டினர். ஆனால் அரசர் இருவரையும் பார்த்து 'நீங்கள் இருவரும் இன்றே இந்த மடாலயத்தை விட்டு வெளியேறவேண்டும். தலைநகரிலிருந்து 200 மைல்கள் தள்ளியுள்ள ஏதாவது மடாலயத்திலேயேதான் இனிமேல் உங்கள் வாழ்நாள் முழுவதும் வாழவேண்டும். ஒருநாளும் தலைநகரின் பக்கமே வரவே கூடாது' என்று தீர்ப்பளித்தார்.

அரசர் ரஸ்புட்டினுக்குச் சார்பாகவே தீர்ப்பளித்துள்ளார் என்று இலியடோவும், கேமோகனும் எண்ணினர். அரசரைவிட ரஸ்புட்டினின்மேல் அவர்கள் இருவருக்கும் கடுமையான கோபமாக இருந்தது. ரஸ்புட்டினையோ அரசரையோ நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. ஆனால் அந்தக் கணத்திலிருந்து அவர்களின் உள்மனம் இவர்களைப் பழிவாங்கவேண்டும் என்றே எண்ண ஆரம்பித்தது.

இலியடோவும், கேமோகனும் வெளியே சென்றபின்னர் அரசியார் அரசரின் பக்கம் திரும்பி 'எமது நண்பர் இந்த நிகழ்வால் மனம் சோர்ந்துவிட்டார். அவரை இன்று இரவு எமது மாளிகைக்கு அழைத்து விருந்து கொடுக்கலாம் என்று விரும்புகிறேன் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு அரசர் 'இன்று எனக்கு வேறு பல வேலைகள் இருக்கின்றன, அதனை நாளைக்கு வைத்துக் கொள்வோம்' என்றார்.

அதன்படி ரஸபுட்டினும் அவரது மகள் மரியாவும் மறுநாள் இரவு விருந்திற்கு அழைக்கப்பட்டனர். மரியாவிற்கு இது புதிய அனுபவமாக இருந்தது. வீட்டில் வேலை செய்யும் டூனியாவின் உதவியுடன் தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டு தந்தையாருடன் அரச மாளிகைக்கு விருந்திற்குச் சென்று வந்தாள்.

மரியா அன்றுதான் முதல்முதலாக அரச குடும்பத்து இளவரசிகளையும், இளவரசன் அலெக்ஸியையும் கண்டாள். விருந்து முடிந்து திரும்பி வந்தவுடன் அரச மாளிகை எப்படி அலங்கரிக்கப் பட்டிருந்தது? என்ன வகையான யன்னல் திரைச் சேலைகள் போட்டிருந் தார்கள்? எப்படியான கதிரைகள், மேசைகள் அங்கே இருக்கின்றன? எப்படியாக மேசைமேல் பொருட்கள் வைத்திருக்கின்றார்கள்? என்னென்ன பொருட்கள் எல்லாம் வைத்திருக்கின்றார்கள் என்று டூனியா கேள்விமேல் கேள்வியாகக் கேட்டுக்கொண்டேயிருந்தார். ஆனால் எப்படியான உணவு பரிமாறினார்கள் என்று ஒரு கேள்விகூடக் கேட்கவில்லை. அதன் பிறகு அடிக்கடி ரஸ்புட்டின் அரச மாளிகைக்கு அழைக்கப்பட்டார்.

அரண்மனையில் இப்படியாக நடைபெற தலைநகரை விட்டு வெளியேறிய இலியடோவும், கேமோகனும் அமைதியாக இருக்கவில்லை. ரஸ்புட்டினைப்பற்றி பல செய்திகளைப் போகுமிடமெல்லாம் பரப்பிக் கொண்டே சென்றார். ரஸ்புட்டின் வீட்டிலே பக்தர்கள் என்ற போர்வையில் பலரையும் அழைத்து பல துர்ச்செயல்களை நடாத்துகின்றார் என்றும், அரச மாளிகையும் பல கேளிக்கைகள் நடக்கின்ற இடமாக மாறிவிட்டது என்றும், ரஸ்புட்டினுக்கு அரச மாளிகையிலேயே பல காதலர்கள் இருக்கின்றார்கள் என்றும், அவருக்கும் அரசியாருக்கும் கூட கள்ளக்காதல் இருக்கின்றதென்றும் கூறிக்கொண்டே சென்றனர்.

நாட்டில் உள்ள நிலைமைகளாலும், நாட்டு மக்களை அரச குடும்பத்தினர் கவனிக்காமல் எந்நாளும் கேளிக்கை, களியாட்டங்கள், விருந்துபசாரங்கள் என்று தமது பொழுதைக் கழிக்கின்றார்கள் என்ற கருத்து பொதுவாக நிலவி வந்ததாலும் இவர்கள் சொல்வதை அவர்களில் பெரும்பாலானோர் நம்பினர். அண்மையில் அரச பரம்பரை யினருக்கு அறிமுகமான ரஸ்புட்டினின் செல்வாக்கு அரண்மனையில் சிறிது சிறிதாக அதிகரிக்க அதிகரிக்க, பல புதிய புதிய பிரச்சனைகளும் அதிகரித்துக்கொண்டே சென்றன. இதனால் அரச குடும்பத்தினருக்கு

எதிரானவர்களும் எந்நாளும் எண்ணிக்கையில் அதிகரித்துக்கொண்டே வந்தனர்.

நாட்டில் விரைவில் ஒரு மாற்றம் வரப்போவதற்கான அறிகுறிகள் ஆங்காங்கே தென்பட ஆரம்பித்தன. அரசுக்கெதிரான வேலைகளில் ஈடுபடுவோர் இலியடோவின் ஊடாக ரஸ்புட்டினைப் பற்றிய அந்தரங்கமான விடயங்கள், அவரது பழக்கவழக்கங்கள் பற்றி மேலும் அறியவேண்டும் என்ற ஆவலினால் இலியடோவையும், கேமோகனையும் தம்பக்கம் இழுத்துவிட்டார்கள். இவர்களுக்கு ரஸ்புட்டின் நாடோடி வாழ்க்கை வாழ்பவர்களின் இசையிலும், அவர்களின் நடனத்திலும் மிகவும் நாட்டம் கொண்டவர் என்பதும், அவர் நாடோடிகளின் இசைக்குழு அமைந்திருந்த இருப்பிடமான நாட்டு மாளிகைக்கு அடிக்கடி சென்று வருவதையும் இவர்கள் ஊடாக அறிந்திருந்தார்கள். ரஸ்புட்டின் அங்கு கட்டாயம் வருவார் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். அங்கு வந்தபின் இரகசியமாக அவரின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கென்று ஆட்களை நியமித்துவிட்டு அவரின் வருகைக்காகக் காத்திருந்தனர்.

அவர்கள் எதிர்பார்த்தபடியே ரஸ்புட்டின் அங்கே சில தினங்களில் வந்து சேர்ந்தார். விரைவிலேயே அங்கிருந்த அனைவருடனும் அன்னியோன்னியமாகிவிட்டார். பெண்களைக் கண்டால் தானாகவே சென்று அறிமுகமாகும் ரஸ்புட்டினைப் பலரும் அழைத்து நடனமாடினர். இவர்களில் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த லீசா ரான்சின் (Lisa Tansin) என்கிற பெண்ணும் ஒருவர். இவர் ஒரு நடன ஆசிரியை. மிகவும் நன்றாக நடனமாடக்கூடியவர். சிறிது நேரத்திற்குள்ளேயே இவர் ரஸ்புட்டினுடன் மிகவும் நெருங்கியவராகிவிட்டார். இருவரும் அடிக்கடி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடாமல் நன்றாகவே நடனம் ஆடினார்கள். யார் நன்றாக நடனமாடுவார்கள் என்ற போட்டிகளும் அங்கிருப்பவர்களுக்கிடையில் இடைவிடாமல் நிகழ்ந்துகொண்டிருந்தன.

சவால்களை எதிர்கொள்வதில் ரஸ்புட்டினுக்கு எப்போதும் அலாதியான விரும்பம் உண்டு. இதனால் நேரம் போவதே தெரியாமல் மதுவை உட்கொள்வதும் மாதர்களுடன் நடனமாடுவதுமாக அன்றைய இரவைக் கழித்துக்கொண்டிருந்தார். நடனப் போட்டிகள் இறுதியில் களியாட்டமாக மாறின. மது மயக்கத்தில் நாடோடி நடனம் ஆடியபடியே பலரும் தாம் அணிந்திருந்த ஆடைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி எறிந்தனர். ரஸ்புட்டினுக்கும் மதுமயக்கத்தில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் தானும் மற்றவர்களைப்போல் செய்துகொண்டிருந்தார். இவரின் செயல்களை இரகசியமாகக் கவனிக்க வந்தவர்கள் கவனித்துக் கொண்டிருந்ததையோ, பிறந்த மேனியுடன் பெண்களின் நடுவே உட்கார்ந்திருந்த ரஸ்புட்டினையும் மற்றும் அனைவரையும் சேர்த்து அழகான புகைப்படங்கள் பிடித்ததையோ ரஸ்புட்டின் அப்போது அறிந்திருக்கவில்லை.

மறுநாள் பொழுது விடியும் தறுவாயில் இரு ஆண்கள் ரஸ்புட்டினைக் கைத்தாங்கலாகப் பிடித்தபடி அவரின் வீட்டை நோக்கி அழைத்துக்கொண்டு சென்றார்கள். மதுபோதையில் இருந்த ரஸ்புட்டின் வழி நெடுகிலும் வாய்க்கு வந்தபடியெல்லாம் உரத்த குரலில் பாடியபடியே சென்றுகொண்டிருந்தார். ரஸ்புட்டினின் குரல் இரவின் நிசப்தத்தையும் கிழித்துக்கொண்டு அருகிலுள்ள வீடுகளில் தூங்கிக் கொண்டு இருந்தவர்களை எல்லாம் எழுப்பியது.

ரஸ்புட்டினின் வீட்டு வேலை செய்யும் டூனியா இதனைக் கண்டதும் ஆச்சரியப்படவில்லை. ஆனால் ரஸ்புட்டினின் செயலைக் காண சிறிது வெட்கமாக இருந்தது. ரஸ்புட்டினை ஒருவாறு கூட்டிச்சென்று அவருடைய படுக்கையிலே படுக்க வைத்தாள். ஈரமாக இருந்த அவரது ஆடைகளைக் களைந்து புதிய ஆடைகளை அவருக்கு அணியும்போது ரஸ்புட்டின் மது மயக்கத்திலிருந்து சிறிது தெளிவாகி னார். டூனியா இப்படியாக அவருக்கு ஒருநாளும் செய்ததில்லை.

நிர்வாணமான பெண்களின் நடுவில் இருந்தபோது உண்டான உணர்ச்சிகள் இன்னும் அவருக்கு அடங்கவில்லை. திடீரென டூனியாவை இழுத்துத் தன்னுடன் படுக்கையிலே வைத்து அணைத்தார். அடங்காதிருந்த தனது காம இச்சைகளை டூனியா முலம் அடங்கவைத்தார். டூனியா எதுவுமே பேசவில்லை. அன்றிலிருந்து டூனியா அவரது ஆசைநாயகி ஆனாள்.

சில தினங்கள் கழிந்தன. ரஸ்புட்டின் தனது வீட்டில் சில விருந்தினர்களுடன் இருந்தபோது யாரோ ஒருவர் ஒரு சிறிய பொதியைக் கொண்டுவந்து கொடுத்தார். கொண்டு வந்தவர் யாரென்றும் தெரியவில்லை, பொதிக்குள் என்ன இருக்கின்றதென்றும் தெரியாத நிலையில் அதனை வாங்கி அவசரமாகப் பிரித்தார். திடீரென அவரது முகத்தில் என்றுமில்லாத கலவரம் தோன்றியது. அந்த மனிதனை அழைத்துக்கொண்டு அருகிலிருந்த அறைக்குள் சென்றார். அவருடன் ஏதோ கேள்விகள் எல்லாம் கேட்டார். கொண்டு வந்தவருக்குப் பதில் தெரியவில்லை. ரஸ்புட்டின் அவரை அழைத்துக்கொண்டு வெளியே வந்து இரகசியமாக ஏதோ காதிற்குள் கூறிவிட்டு வழியனுப்பி வைத்தார். இவர்கள் இப்படி இரகசியமாகக் கதைத்ததை டூனியா கண்டுவிட்டாள். விருந்தினர்கள் எல்லாம் சென்றபின்னர் டூனியா தான் செய்துகொண்டிருந்த வேலைகளை அப்படியே விட்டுவிட்டு ரஸ்புட்டினின் அறைக்குள் வந்தாள். இதனை ரஸ்புட்டின் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

'அந்த மனிதன் என்ன பொதி கொண்டுவந்து கொடுத்தார்?' என்று கேட்டாள்.

'சில புகைப்படங்கள்.'

'அந்தப் பகைப்படங்களைப் பார்த்ததும் ஏன் உங்கள் முகம் பேயறைந்ததுபோல் இருந்தது? நான் அவற்றைப் பார்க்கலாமா?'

'நீ அவற்றையெல்லாம் பார்க்கக் கூடாது. அவை மிகவும் ஆபாசமானவை.'

'நான் அவற்றைப் பார்த்து அவற்றில் என்ன இருக்கின்றன என்று அறிந்தால்தான் உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடியும். நான் அவற்றைப் பார்க்க வேண்டும்' என்று பிடிவாதமாக நின்றாள். டூனியாவைத் தனது திருமணமாகாத மனைவியாக எண்ணியிருந்த ரஸ்புட்டின், உரிமையோடு கூறிய இந்த வார்த்தைகளைக் கேட்டதும் எதுவும் பேசாமல் அந்தப் புகைப்படங்களை டூனியாவிடம் கொடுத்தார். அவற்றை வாங்கிப் பார்த்து ஆச்சரியமடைந்த டூனியா 'ஓ! இதுதான் அங்கே நடந்ததா? அதற்காகத்தான் இதை என்னிடமிருந்து மறைத்தீர்களா?' என்றாள் சிறிது கோபத்தோடு.

'நான் இப்போது என்ன செய்ய வேண்டும்? எனக்கு எதுவுமே தெரியவில்லை. இது எப்படி நடந்தது என்றே எனக்கு நினைவில்லை' என்று ரஸ்புட்டின் தனது இழிவான செயலுக்காக கூனிக்குறுகினார்.

மற்றையவர்கள் கடவுளின் தூதுவர் என்று ரஸ்புட்டினை எண்ணும் போது இந்தப் புகைப்படங்களைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள்? ரஸ்புட்டினின் நிலையை எண்ணி டூனியா மனதிற்குள் வருந்தினாள். எப்படி இவரைப் பழைய நிலைக்குக் கொண்டுவரலாம் என்று சில நிமிடங்கள் ஆழ்ந்து சிந்தித்தாள். அப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது;

'நான் இப்போது என்ன செய்ய? ஒன்றில் தலைநகரை விட்டு உடனே வெளியேற வேண்டும் அல்லது இந்தப் படங்களை அரசரிடம் உடனே காட்டவேண்டும்' என்று ரஸ்புட்டின் கூறினார்.

டுனியாவிற்கு ரஸ்புட்டின் கூறிய இரண்டாவது கூற்று சரியாகப் பட்டது. 'ஆம் நீங்கள் கூறியதுதான் சரி. இவற்றை உங்கள் எதிரிகள் அரசருக்குக் காட்டுவதற்கு முன்பாக நீங்கள் அரசருக்கு இவற்றைக் காட்டி நடந்ததை விளக்கிவிடுங்கள்' என்றாள். மறு நிமிடமே அந்தப் புகைப்படங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அரச மாளிகையை நோக்கி தன் காலடிகளை எடுத்து வைத்தார்.

அரசர் அவற்றை வாங்கி ஒவ்வொன்றையும் மிகவும் அவதானமாகப் பார்த்தார். பிறகு குழப்பமடைந்திருந்த ரஸ்புட்டினைப் பார்த்துத் தனது தலையை ஆட்டினார். 'உமக்கு இந்தப் படங்களை என்னிடம் கொண்டுவந்து காட்டுவதற்கு எவ்வளவு துணிச்சல் இருந்திருக்கிறது. ஆனால் நீர் சரியானதைத்தான் செய்திருக்கின்றீர். வேறு யாராவது இதனை மகாராணியாரிடம் கொடுத்திருந்தால் அதன் அதிர்ச்சிகளைத் தாங்குகின்ற சக்தி அவருக்கு இருந்திருக்காது. அதன் விளைவுகளே வேறு விதமாக அமைந்திருக்கும். இவற்றிலிருந்து என்ன தெரிகிறது? எமது எதிரிகள் உம்மை ஒரு பகடைக் காயாக வைத்து எம்மைப் பலவீனப்படுத்த முயல்கின்றார்கள், எமது இராச்சியத்தைக் கவிழ்க்க முனைகின்றார்கள். நீர் ஒரு முட்டாள், வடிகட்டிய முட்டாள். சரி நடந்தது நடந்துவிட்டது. இதனால் ஒருவித பாதிப்புக்களும் ஏற்படாமல் நான்பார்த்துக்கொள்கிறேன். அவர்கள் வேறு பல வழிகளிலும் தீங்கு செய்ய முனைவார்கள். ஆனால் நீர் செய்யும் ஒவ்வொரு செய்கையிலும் இனிமேல் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்' என்று ரஸ்புட்டினைப் பார்த்து மிகவும் அழுத்தமாகக் கூறினார்.

ரஸ்புட்டின் எதுவுமே பேசாது மௌனமாக பேரரசர் கூறுவதைக் கேட்டுக்கொண்டேயிருந்தார். அரசர் சிறிது நேரம் அருகிலிருந்த அலங்கரிக்கப்பட்ட கதிரையிலிருந்து ஆழமாகச் சிந்தித்தார். அவர் எதிர்பார்க்காத அளவிற்கு அரச குடும்பத்தவர்களுக்கு எதிராக நாட்டிலே பல சக்திகள் உருவாகிக் கொண்டிருந்ததையும் அரசர் அறிந்திருந்தார்.

இவற்றைக் குறைப்பதற்கான வழிகளைத் தேடினார். சில நிமிடங்கள் கழிந்ததும் மீண்டும் ஏதோ சொல்வதற்காக எழுந்தார். ரஸ்புட்டினைப் பார்த்து மிகவும் அமைதியாக ஆனால் மிகவும் அழுத்தமாக 'அண்மைக் காலமாக நாட்டின் நிலைமைகள் மோசமாகிக் கொண்டு வருகின்றதை நீரும் அறிந்திருப்பீர். இதிலே உமது பெயரையும் அரச குடும்பத்தினரது பெயர்களையும் சில விஷமிகள் தொடர்புபடுத்தி மக்களின் மனங்களிலே விஷத்தை ஊட்டி வருகின்றார்கள். அதில் ஒன்றுதான் இந்தப் புகைப்படங்கள். ஆதலால் இவைகள் சிறிது தணியும்வரை நீர் அரச பரம்பரையின் உடனான தொடர்புகளை சிறிது காலம் குறைத்துக் கொள்ளவேண்டும். நீர் புனித பூமியான பெத்தலகேம் நகருக்குப் புனித யாத்திரை சென்றுவர விருப்பம் என்று முன்பு ஒருமுறை என்னிடம் கூறியிருந்தீர் அல்லவா? அதற்கு இதுதான் நல்ல தருணம் என்று எண்ணுகிறேன்.

அங்கு சென்று வருவதற்கு உரிய ஏற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்கலாம்' என்று உத்தரவிட்டார்.

ரஸ்புட்டின் இதனைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அரசரின் இந்த முடிவை ஏற்காமலும் இருக்க முடியவில்லை. 'சரி தங்கள் உத்தரவு எதுவோ அப்படியே செய்கிறேன்' என்றார்.

சில நாட்களுக்குள்ளேயே தனது மகள் மரியாவையும், டூனியாவையும் தனது கிராமமான பொக்ரொவஸ்கோவிற்கு அனுப்பிவிட்டு தானும் தனது புனித யாத்திரை என்று கூறிக்கொண்டு அரை மனதோடு தன் பயணத்தை ஆரம்பித்தார்.

◆◆



16
அரசியாரின் அழைப்பு

ரஸ்புட்டின் தனது புனித யாத்திரையை முடித்துக்கொண்டு மீண்டும் தலைநகருக்கு வந்து சேர்ந்தார். இதனை அறிந்த பிரதம மந்திரியான கொக்கோவ்ரோவ் (Kokovtsov) தனது பதவிக்கு ரஸ்புட்டினினால் ஆபத்து வந்துவிடுமோ என்று அச்சம் கொள்ள ஆரம்பித்தார். ரஸ்புட்டின் தலைநகருக்கு வந்து அரச பரம்பரையினருடன் அறிமுகமாகும் வரையில் இவர்தான் அரசரின் முக்கிய ஆலோசகராக இருந்தார். ஆனால் ரஸ்புட்டினின் திடீர் வளர்ச்சியினால் அரச ஆலோசகர் பதவி போய்விட்டது. இப்போது பிரதம மந்திரிப் பதவியும் பறிபோய்விடுமோ என்ற அச்சமும் சேர்ந்து அவரை வாட்டியது.

அரசரிடமும் அரசியாரிடமும் ரஸ்புட்டினின் செல்வாக்கு அதிகம் என்றும் அவருக்குத் தெரியும். அப்படியிருந்தும் அரசரிடம் சென்று 'அரசே! ரஸ்புட்டின் ஒரு போலியான வைத்தியன். இவரை விட்டு வைத்தால் எதிர்காலத்தில் உங்கள் அரசுக்கே பேராபத்து வந்துவிடும்' என்றார்.

'அதெப்படி அவ்வளவு உறுதியாகக் கூறுகின்றீர்? அவர் தனது வீட்டில் வைத்தே பல சேவைகளை நாட்டு மக்களுக்காகச் செய்கிறார். இவற்றை நீர் அறியவில்லையா?'

'அறிந்திருக்கிறேன் ஆனால் அங்கெல்லாம் களியாட்டங்களும், வேறு பல வெட்கக்கேடான செயல்களும் நடைபெறுகின்றன என்ற வதந்திகளும் பரவுகின்றன என்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.'

'அவை வதந்திகள் என்று நீரே கூறிவிட்டீர். அவை உண்மையாக இருக்கும் என்று நீர் நம்புகிறீரா?' என்ற அரசர் கேட்டார்.

'ஆமாம் நம்புகிறேன். அதுமட்டுமல்ல பத்திரிகைகள்கூட ரஸ்புட்டினை திருடன், ஏமாற்றுக்காரன் என்றெல்லாம் செய்திகள் வெளியிடுகின்றனவே. அவைகளை நீங்கள் நிராகரிக்கக் கூடாது. அவை நாட்டுமக்களின் எதிரொலிப்புக்கள்தான். நாட்டுமக்களின் கருத்துக்களை அலட்சியம் செய்தால் அது உங்கள் இராய்ச்சியத்திற்கே உலை வைத்துவிடும்' என்று மிகவும் ஆணித்தரமாகக் கூறினார்.

'பொதுமக்கள் இந்த நாட்டை ஆளவில்லை. நான்தான் ஆளுகிறேன். அவர்களின் அவர்களின் நன்மை கருதியும், நல்வாழ்விற் காகவும் எடுக்கவேண்டிய முடிவுகள் என்னவென்று எனக்குத் தெரியும். இதெல்லாம் நாட்டுமக்களுக்குத் தெரியுமோ இல்லையோ எனக்குத் தெரியாது' என்று சற்று இறுமாப்புடன் கூறினார்.

நீண்ட நேர உரையாடலின் பின்னர் அரசர் தனது அரசாங்கத்திற் குள்ளேயே மேலும் பல எதிரிகளை உருவாக்க விரும்பாத காரணத்தால் 'சரி நான் ரஸ்புட்டினை இன்னமும் சில காலத்திற்கு சற்று விலகி யிருக்கும்படி பணிக்கிறேன்' என்றார்.

அதன்படியே ரஸ்புட்டினையும் அழைத்து விபரத்தைக் கூறினார். 'உயர் பதவியில் இருப்போர் சிலருக்கு இன்னமும் உம்மீது கோபம் தீரவில்லை. ஆதலால் நீர் இன்னும் சில காலத்திற்கு எங்காவது சென்று வாரும். நாம் உமது சேவை தேவைப்படின் சொல்லியனுப்பு கிறோம்' என்றார்.

பேரரசியாருக்கு இந்த முடிவு அவ்வளவு விருப்பம் இல்லாமலே இருந்தது. ஆனால் இந்தப் பிரிவு மிகவும் குறுகியதாகவே இருக்கும் என்று ரஸ்புட்டினிடம் கூறிவைத்தார். அரசரின் கூற்றை மீறமுடியாத ரஸ்புட்டின் மீண்டும் தனது மூட்டை முடிச்சுக்களுடன் தனது மனைவி, பிள்ளைகளைப் பார்க்கவென தனது சொந்தக் கிராமமான பொக்ரொவஸ்கோவிற்குப் புறப்பட்டார்.

கோடைகாலம் மறைய வந்த இலையுதிர்காலம் தனது இறுதிக் கட்டத்தை அடைந்துகொண்டிருந்தது. பச்சைப்பசேல் என்றிருந்த இலைகள் எல்லாம் பழுத்து நிலத்தில் வீழ்ந்து பசலையாக மாறிக்கொண்டிருந்தன. ரீங்காரம் செய்துகொண்டிருந்த உயிரினங்களில் சில நீண்ட உறக்கத்திற்குத் தம்மைத் தயார்படுத்திக்கொண்டிருந்தன. நீளமான இரவுகளில் நீண்ட உடையணிந்த மாந்தர்கள் தாராளமாகவே தென்பட்டனர்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் பொக்ரொவஸ்கோவிற்குச் சென்ற ரஸ்புட்டினை மனைவியும், பிள்ளைகளும் மகிழ்வோடு வரவேற்றனர். இதனையறிந்த பக்தர் கூட்டமும் இவரது வீட்டை நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்தது.

ஆனால் பழைய பகைவர் ஒயெற்ஸ் பேயோற்ரா (Otyets Pyotr) வினால் இவற்றைப் பொறுத்துக்கொள்ளவே முடியவில்லை. ரஸ்புட்டினின் மேல் சாபம் போட்டபடியே இருந்தார்.

இப்போது பரம விரோதியாகிவிட்ட இலியடோ (Iliodor) ரஸ்புட்டின் தலைநகருக்கு வந்தபோது நெருங்கிய நண்பராயிருந்தார். ஒருமுறை ரஸ்புட்டினுடன் புகையிரதத்தில் பொக்ரொவஸ்கோவிற்குச் சென்றுகொண்டிருந்துபோது ரஸ்புட்டின் அரச மாளிகையில் தனக்கிருக்கும் செல்வாக்கைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தார். 'அரசர் என்னை யேசு கிறீஸ்துவின் அவதாரம் என்றுதான் எண்ணுகிறார் என்பது உமக்குத் தெரியுமா? அரசரும் அரசியாரும் எனக்கு முன்னால் முழங்காலில் நிற்பார்கள், தமது தலையைத் தாழ்த்தித்தான் எனக்கு எப்போதும் வணக்கம் சொல்வார்கள், என் கைகளிலே முத்தமிடுவார்கள். யார்தான் தன்னைத் தட்டிக் கழித்தாலும் கடைசிவரை தான் எனக்கு நல்ல நண்பராக இருப்பேன் என்று அரசியார் சத்தியமும் செய்திருக்கிறார்' என்று கூறினார். அதுமட்டுமல்லாமல் தான் அரசிளங்குமரிகள் முன்னிலையில் அரசியாரை அணைத்து முத்தமிடுவேன் என்றும் கூறியிருந்தார்.

ஆனால் இலியடோ அவருடைய கூற்றுக்களை நம்பவில்லை. ரஸ்புட்டின் தான் ஒரு பெரிய செல்வாக்குள்ள மனிதன் என்று தனது புதிய நண்பனான தன்னை நம்பவைப்பதற்காகவே அப்படிச் செய்கிறார் என்று நினைத்தார். பொக்ரொவஸ்கோவில் இருந்தபோது அரச குடும்பத்தில் இருந்து அவருக்கென தனியாக வந்த சில கடிதங்களையும் ரஸ்புட்டின் இலியடோவிடம் காட்டியிருந்தார். அவற்றில் சிலவற்றை இலியடோவிடம் நீரே வைத்துக்கொள்ளும் என்று கொடுத்தும் விட்டிருந்தார்.

ஆனால் இலியடோவிற்கு ரஸ்புட்டினுடனும், அரச குடும்பத் தினருடனும் பகைமை ஏற்பட்டதன் பின்னர் ரஸ்புட்டினின் களங்கமான அரசியல் செல்வாக்கு உண்மையாக இருக்கலாம் என்று நம்பினார். ரஸ்புட்டினின் பெயரை எப்படியாக மாசுபடுத்தமுடியுமோ அப்படி யெல்லாம் மாசுபடுத்திக்கொண்டே இருந்தார். ரஸ்புட்டின் அரசரையும்,

அரசியாரையும் பற்றி முன்னர் கூறிய கூற்றுக்களை விரும்பிக் கேட்போருக்கெல்லாம் மீண்டும் மீண்டும் எடுத்துச் சொன்னார். இந்தவகையில் அரச குடும்பத்தினரின் கௌரவத்தை மேலும் மேலும் குறைத்துக்கொண்டேயிருந்தார்.

அதுமட்டுமல்லாமல் முன்னர் ரஸ்புட்டின் கொடுத்த அரசியாரின் கடிதங்களைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கவும் கொடுத்தார். அதிலொன்று இப்படி இருந்தது;

'என்றும் மறக்கமுடியாத என் அன்புக்குரிய ஆசிரியர், இரட்சகர், ஆலோசகர் அவர்கட்கு;

நீங்கள் இல்லாமல் இருப்பது எனக்குச் சலிப்பை ஊட்டுகிறது. நீங்கள் என் பக்கத்தில் இருக்கும்போதுதான் என் ஆத்மா அமைதியாக ஓய்வுபெறும். நான் உங்கள் கைகளை முத்தமிட்டு உங்கள் புனிதமான மார்பில் என் தலையை' வைத்துச் சாய்வேன். ஓ! அப்போது என்ன இதமாக இருக்கும்! எப்போதும் உங்கள் கைகளிலும் மார்பிலும் துயிலவேண்டும் என்பதுதான் என் ஒரே ஆசை. நீங்கள் என் அருகில் இருந்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்? நீங்கள் எங்கே? எங்கே போய்விட்டீர்கள்? என்னிதயம் உங்களுக்காக ஏங்குகிறது. நீங்கள் மீண்டும் விரைவில் என்னருகில் இருக்கமாட்டீர்களா? விரைவில் வரவும். நான் உங்கள் வரவுக்காகக் காத்திருக்கிறேன். என் வேதனையை உங்களுக்காகத் தாங்கிக் கொள்கிறேன். உங்கள் புனிதமான ஆசீர்வாதத்தை வேண்டி உங்கள் புனிதமான கைகளை கற்பனையில் முத்தமிடுகிறேன். நான் உங்களை எப்போதும் நேசிக்கிறேன்' என்று எழுதப்பட்டிருந்தது.

இதனைக் கண்டதும் ரஸ்புட்டினின் இழிவான செல்வாக்கைக் கண்டு இகழ்ந்தவர்களுக்கு திடீரென எவராலும் அழிக்கமுடியாத ஆதாரம்

கிடைத்துவிட்டதாக எண்ணிக் கொதித்தார்கள். அரசியார் ஆண்டவனின் அனுக்கிரகம் பெற்ற ஒரு பக்தன் எழுதுவதுபோல் எழுதியிருந்தபோதிலும் அது இரு பொருள்பட, ரஸ்புட்டினுடன் பாலுணர்வு இன்பக் கிளர்ச்சி களைத் தூண்டுவதுபோலவும் பொருள் கொடுத்தது. அரசரும் அரசியாரும் ரஸ்புட்டினின்மேல் கடுமையான கோபம் கொண்டார்கள். தமது பெயர் இந்த வகையில் பாதிக்கப்படுவதையும் கண்டு வருந்தினார்கள்.

நகர வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுவிட்ட ரஸ்புட்டின் மீண்டும் கிராம வாழ்க்கைக்கு தன்னைப் பழக்கிக்கொண்டார். ஒருவேளை தான் இனிமேல் தலைநகருக்குத் திரும்பிப்போக முடியாமலும் வரக்கூடும் என்றும் எண்ணினார். பதவிகளுக்காகப் போட்டிகளும், பணத்தாசை பிடித்தவர்களும், அதிகார வர்க்கமும், ஆசை மேலிட்ட பெண்களும், குழப்பமும் கேலிக்கூத்துகளும் நிரம்பிய நகர வாழ்வைவிட அமைதி யான கிராம வாழ்க்கை எவ்வளவு இதமாக இருக்கின்றது என்று மனதிற்குள் எண்ணினாலும் தலைநகருக்கு எப்போது செல்வேன் என்ற அவாவும் அடிமனதில் இருந்து அரித்துக்கொண்டே இருந்தது.

1912 ஆம் ஆண்டு இலையுதிர் காலவேளையில் அரச குடும்பம் கிழக்குப் போலந்திலுள்ள வேட்டையாடும் வீடுதிக்குச் சென்றார்கள். வழக்கமாக வருடாவருடம் இந்தக் காலத்தில் இங்கே தமது விடுமுறை நாட்களை வேட்டையாடுவதில் செலவழிப்பார்கள்.

பெரியவர்கள் எல்லோரும் மிருகங்களையும், பறவைகளையும் வேட்டையாடி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். ஒருநாள் குழந்தை அலெக்ஸி குளியலறையில் விளையாடிக் கொண்டிருந்தபோது தவறுதலாக வழுக்கி விழுந்துவிட்டார். வழுக்கி விழும்போது குளிக்கும் தொட்டியின் விளிம்பில் இடது தொடை பலமாக அடிபட்டுவிட்டது. மருத்துவர் வந்து பார்த்தபோது இடது காலின் உட்பகுதி பெரிதாக வீங்கியிருந்தது. தாங்கமுடியாத வேதனையுடன் குழந்தை படுக்கையில்

கிடந்தார். ஒரு கிழமையாக இடைவிடாது டாக்டர்கள் கவனித்துக் கொண்டே வந்தார்கள். உட்காயம் ஆறியதுபோல் இருந்தது, வேதனையும் குறைந்தது. அதனையடுத்து அரசகுடும்பத்தின் திட்டத்தின்படி ஸ்பாலா (Spala) என்று இன்னொரு வேட்டையாடும் விடுதிக்குச் செல்ல மருத்துவர்கள் அனுமதித்தார்கள்.

பேரரசியாருடன் அவருடன் நண்பி அனா விருபோவாவும் (Anna Vyrubova) அங்கே உடனிருந்தார். மகனின் உடல்நிலையில் கூடிக கவனம் செலுத்திய தாயார் சில நாட்கள் மகனை வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. ஒருநாள் மகனின் இடைவிடாத வேண்டுதலுக் கிணங்க வண்டியில் ஏற்றி சுற்றியிருக்கும் காட்டுப்பகுதிகளுக்கு அழைத்துச் சென்றார். காட்டுவழியே இருந்த கரடுமுரடான பாதை வழியாக வண்டி செல்கையில் அது மேலும் கீழும் குலுங்கியபடியே சென்றது. உள்ளே இருந்தவர்கள் எல்லோரும் அதனோடு சேர்ந்து குலுங்கியபடியே சென்றார்கள். இப்படியாகச் சென்றுகொண்டிருக்கையில் அடிவயிற்றில் வலியெடுப்பதாக அரசகுமாரன் தன் அன்னையிடம் வேதனையுடன் கூறினார்.

இதனைக் கேட்டதும் அன்னையாருக்கு அதிர்ச்சி உண்டாயிற்று. திடீரென்று வண்டி ஓட்டுபவரிடம் வண்டியைத் திருப்பி விடுதியை நோக்கி வேகமாக ஓட்டச் சொல்லிக் கட்டளை இட்டார். பாதையிலிருந்த பள்ளங்களிலும் மேடுகளிலும் வண்டி சென்றபோது பாலகன் பெரும் வலியால் துடித்தான். விடுதியை வந்து சேர்ந்தபோது வேதனையில் அரைகுறையாக அறிவு மயங்கிய நிலையில் காணப்பட்டான்.

விடுதிக்கு வந்ததும் முன்னர் அடிபட்ட இடத்திலிருந்து வீக்கம் விடுபட்டு, தொடையின் மேற்பகுதியில் இன்னொரு இடத்தில் உள்ளீடான குருதிப்பெருக்கு ஆரம்பமாகியிருப்பதை டாக்டர்கள் கண்டுபிடித்தார்கள். அவசரமாக தலைநகரிலிருந்து மருத்துவ நிபுணர்களையெல்லாம்

வருவித்துப் பரிசோதனை செய்தார்கள். ஆனால் அவர்களால் குருதிப் பெருக்கைத் தடுக்கவே முடியவில்லை. அதற்கான மருந்துவகைகளும் எதுவும் இல்லை.

தொடையின் உடைந்த குருதிக்குழாய்களிலிருந்து குருதி ஓடி, வயிற்றின் அடிப்பாகத்தை அடைந்தது. தொடையில் வீங்கிய இடத்திலும் இரத்தம் புகுந்து நிரம்பியது. ஓடுகின்ற குருதி சிறுவனின் உடலில் எங்கெல்லாம் புகமுடியுமோ அங்கெல்லாம் புகுந்து அங்குள்ள இழையங்களையும், எலும்புகளையும் தாக்கியது. இதனால் ஏற்படும் தாங்கமுடியாத வேதனையால் சிறுவன் அலெக்ஸி போடுகின்ற சப்தம் அரசவிடுதியின் அகன்ற சுவர்களையும் துளைத்துக்கொண்டு அருகேயிருக்கும் அடர்ந்த காடுகளை வந்தடைந்தது.

மகனின் வேதனையைத் தாங்கமாட்டாத தாயார் அவரருகிலேயே எந்நேரமும் இருந்தார். ஓய்வின்றி, உடுத்த உடையோடு, இரவு பகலாகக் கண்விழித்துக் காத்திருந்தார். சில நிமிடங்களுக்கு ஒருமுறை வலியோடு கூடிய தாக்கம் வந்துகொண்டேயிருந்தது. இதனால் ஏற்பட்ட கடும் காய்ச்சலால் அவருடைய வாய் எந்நேரமும் எதையெதையே பிதற்றிக் கொண்டே இருந்தது.

கட்டிலில் எழுந்திருக்க முனையும் ஒவ்வொரு தடவையும் வேதனை கூடிக்கொண்டே சென்றது. நித்திரை என்பது இல்லையென்றே சொல்லலாம். இறுதியில் அழுவதற்குக்கூடச் சக்தியில்லாமல் போய் விட்டது. "கடவுளே என்னைக் கண்டு இரங்கமாட்டீரா? இரங்கமாட்டீரா?" என்றும், பின்னர் தாயை நோக்கி "அம்மா எனக்கு ஏதாவது செய்யுங்கள், என்னால் வலி தாங்கமுடியவில்லை" என்றும் கேட்டுக்கொண்டே இருந்தார்.

தாயார் சிறுவனின் பிஞ்சுக்கரங்களை அன்பாகப் பிடித்து அணைத்தபடி, கொதிக்கும் நெற்றியைத் தன் கைகளால் வருடியபடியும் இருந்தார். அடிக்கொரு தடவை அவர் வேதனையால் துடிக்கும் போதும் "ஆண்டவரே! அலெக்ஸியை நீங்கள்தான் காப்பாற்றவேண்டும், நீங்கள்தான் காப்பாற்றவேண்டும்" என்றும் மனத்துள் வேண்டினார்.

வேதனை முற்றிய நிலையில் இருந்த இளவரசன்; "அம்மா, நான் இறந்துவிட்டால் எனக்கு ஒரு வேதனையும் இருக்காது இல்லையா?" என்று கேட்டார். சிறிது பொறுத்து "நான் இறந்தபின் இந்தக் காட்டிலே எனக்கு கல்லினால் ஆன சிலை ஒன்று செய்துவிடுங்கள். அப்படியென்றால் யாரும் என்னை மறக்கமாட்டீர்கள் அல்லவா?" என்றும் கேட்டார்.

அதனைக் கேட்ட அன்னையார் "என் செல்வமே உனக்கு அப்படி யொன்று நடக்காது, நீ சீக்கிரமே குணமாகிவிடுவாய் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள், நீ பேசாமல் படுத்துத் தூங்கு" என்றார். இதனைப் பார்த்துக்கொண்டு நின்ற அரசர் இவைகளைச் சகிக்க முடியாமல் அறைக்கு வெளியே போய்விட்டார்.

அக்டோபர் ஆறாம் நாள் அரச மருத்துவர் "அலெக்ஸியின் அடிவயிற்றில் ஏற்பட்டுள்ள குருதிப்பெருக்கிற்கு எதுவித மருந்து வகைகளும் எம்மிடம் இல்லை. இதனால் அவர் எந்தநேரமும் இறக்க நேரிடலாம். அதற்கு முன்னர் நாட்டு மக்களுக்கு அலெக்ஸியின் உடல்நிலை பற்றித் தெரியப்படுத்துவது நல்லது" என்று ஆலோசனை கூறினார். தவிர்க்க முடியாததொன்றைச் சந்திக்க விரும்பாத அரசரும் அரசியும் வேறு வழியின்றித் தவித்தனர்.

அதன்படி மகனின் உடல்நிலை பற்றிய முதலாவது மருத்துவ அறிக்கையை வெளியிடுவதற்கு இருவரும் இணக்கம் தெரிவித்தனர்.

அரச அறிக்கை அக்டோபர் எட்டாம் திகதி வெளியிடப்பட்டது. ஆனால் அதில் சிறுவனின் நோயைப் பற்றி எதுவித விபரங்களும் குறிப்பிடப் படவில்லை. அடுத்தநாள் மதகுருவை வரவழைத்து சிறுவனுக்கான இறுதிப் பிரார்த்தனையைச் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. அதற்கு அடுத்தநாள் சிறுவனின் மரணம் பற்றிய செய்தியை நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற்கெனவும் செய்திகளும் தயாரிக்கப்பட்டுவிட்டன.

என்ன செய்வதென்று அறியாது இருந்த அரசியாருக்கு இறுதியாக ரஸ்புட்டினை அழைத்து இளவரசன் அலெக்ஸியைக் காட்டலாமா என்ற எண்ணம் மனதிலே உதயமானது. அவர் அரண்மனைக்கு வந்து போவதால் அரசாங்கத்தில் உள்ளவர்களையும், நாட்டுமக்களையும் வீணாகப் பகைக்க வேண்டியுள்ளதை அறிந்துதான் அவரைச் சிறிது காலம் தூர விலகி இருக்கும்படி சொன்னோம். ஆனால் திரும்பவும் அவரை இங்கு அழைப்பதால் ஏற்படப்போகும் மனஸ்தாபங்களையும், பிரச்சினைகளையும் அவர் அப்போது சிறிதுகூட எண்ணிப்பார்க்க வில்லை. பிரியப்போகும் குழந்தை அலெக்ஸியின் ஆவியைத் தடுத்து நிறுத்த எந்தவிதமான இன்னல்களையும் ஏற்கத் தயாரானார்.

மறுகணமே அனா விருபோவாவை அழைத்து உடனே பொக்கரவொக்கியாவில் இருக்கும் ரஸ்புட்டினுக்குத் தந்தி கொடுத்து விபரத்தை அறிவிக்குமாறு கட்டளையிட்டார். அதன்படி ரஸ்புட்டினுக்குத் தந்தி கொடுக்கப்பட்டது. 'இளவரசர் அலெக்ஸிக்கு அடிவயிற்றிலே அடிபட்டதினால் ஏற்பட்ட குருதிப்பெருக்கை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது. குழந்தையின் நிலமையும் கவலைக்கிடமாகவே இருக்கின்றது. அரசியார் தங்களை உடனே அரண்மனைக்கு வருமாறு அழைக்கின்றார். அதுவரையில் தாங்கள் அங்கிருந்தபடியே குழந்தை அலெக்ஸுக்காகப் பிரார்த்தனை செய்யும்படியும் கேட்டுக்கொண்டார்' என்று அதிலே குறிப்பிடப்பட்டிருந்தது.

தந்தி கொடுத்துவிட்டு அனைவரும் பதிலுக்காகக் காத்திருந்தார் கள். சிலமணி நேரத்தின்பின் ரஸ்புட்டினிடமிருந்து பதில் தந்தி வந்தது. 'அரசிளங்குமரனுக்கு எதுவும் நடக்காது. யாரும் கவலைப்படத் தேவையில்லை. டாக்டர்களை சிறுவனைத் தேவையில்லாமல் துன்பப் படுத்தவேண்டாம் என்று கூறுங்கள். நான் இங்கிருந்துகொண்டே அரசிளங்குமரனுக்காகப் பிரார்த்திக்க ஆரம்பித்துவிட்டேன். நீங்களும் அவ்விடம் பிரார்த்தனைகனை ஆரம்பியுங்கள்' என்று பதில் வந்தது.

அரசியாரும், அனாவும் இதனைக்கேட்டுச் சிறிது ஆறுதலடைந் தார்கள். உடனே ரஸ்புட்டின் அறிவித்தபடி பிரார்த்தனைகள் ஆரம்பமாகின. என்ன ஆச்சரியம்! சிறிது நேரத்துள்ளேயே, அவர்களின் கண்முன்னே அலெக்ஸியின் தொடையிலிருந்த வீக்கம் சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. உள்ளே பெருகிய இரத்தப்பெருக்கும் குறைந்து குறைந்து கொண்டு வந்து இரண்டு மணி நேரத்தில் அடியோடு நின்றுவிட்டது. இளவரசன் எழுந்திருந்து எதுவுமே நடக்காததுபோல் விளையாடிக்கொண்டிருந்தான்.

அங்கிருந்த டாக்டர்கள் எல்லோரும் தாம் கொடுத்த மருந்துதான் தாமதமாக வேலை செய்ததினால்தான் குழந்தையின் நோய் குணமாக நேரம் ஆகியது என்று கூறியபடி ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டனர்.

அரசியாருக்கு இறக்கப்போகும் தறுவாயிலிருந்த இளவரசனை காலனின் கைகளிலிருந்து காப்பாற்றியவர் ரஸ்புட்டின்தான் என்று நம்பினார். அவரை கையெடுத்துக் கும்பிடவேண்டும்போல் இருந்தது. ஆனால் அவர் அருகிலே இல்லை. மகனுக்கு மறு வாழ்வு கொடுத்த அந்த தெய்வீகத்தன்மை வாய்ந்தவரை தன் மனக்கண்களிலே கண்டு மகிழ்ந்தார். எல்லையில்லா ஆனந்தமடைந்த அரசியார் ரஸ்புட்டினை மீண்டும் தலைநகருக்கு அழைக்கவேண்டும் என்று தனது கணவனிடம்

கேட்டுக்கொண்டார். அதன்படி உத்தியோகபூர்வமான கடிதம் ஒன்றையும் எழுதி அனுப்பிவைத்தார். ரஸ்புட்டினை மீண்டும் நேரில் சந்திக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டேயிருந்தார். ரஸ்புட்டினைப் பற்றி எப்படித்தான் அவதூறான செய்திகள் வந்தபோதிலும் அவற்றையெல்லாம் தட்டிக்கழித்துவிட்டு ரஸ்புட்டின் பரிசுத்தமானவர் என்றே நம்பினர்.

◆◆



17

அரசியல் பிழைத்தல்

தனது வாழ்க்கை இனிமேல் கிராமத்திலேயேதான் கழிந்து விடுமோ என்று உள் மனதில் எண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டிருந்த ரஸ்புட்டின் அரச மாளிகையிலிருந்து வந்த அழைப்பைக்கண்டு அளவில்லா ஆனந்தம் அடைந்தார். எவருக்கும் கிடைக்காத பெருமை தனக்குக் கிடைத்ததையிட்டு பெருமிதமும் கொண்டார். இனத்தவர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் இந்த இனிய செய்தியை இறுமாப்போடு கூறினார். எத்தனையோ கதைகளைத் திரும்பத்திரும்பக் கூறி, தனது இல்லாளுடைய மனத்தையும் மாற்றினார். மூத்த மகள் மரியாவோடு இளைய மகள் வாரியா (Varya) வையும் இந்தத்தடவை தலைநகருக்கு அழைத்துச் செல்லப்போவதாகக் கூறினார். பெண் பிள்ளைகள் இருவரையும் தலைநகருக்கு அழைத்துச்செல்ல தனது மனைவியிடம் அனுமதியும் பெற்றார். அதற்கான நாள் வந்ததும் எல்லோருக்கும் இன்முகத்துடன் விடை கூறிவிட்டு தனது மூத்த மகள் மரியா, இளைய மகள் வாரியா, வீட்டு வேலை செய்ய வந்த டூனியாவையும் அழைத்துக்கொண்டு மீண்டும் தலைநகருக்கு வந்து சேர்ந்தார்.

வீட்டிற்கு வந்ததும் வராததுமாக அரசியாரிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அனைவரையும் அழைத்து சுகம் விசாரித்தார். ரஸ்புட்டினின் வரவால் தான் மனம் மிகவும் மகிழ்ந்திருக்கிறேன் என்றார். அத்தோடு மட்டும் நின்றுவிடாது அன்றிரவு எல்லோரையும் அரண்மனைக்கு விருந்துண்ண வரும்படியும் அழைத்தார்.

இதன்பிறகும் முன்னர்போல் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் ரஸ்புட்டின் அரண்மனைக்கு அழைக்கப்பட்டார். அவருடைய செல்வாக்கு நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே சென்றது. சிறிது காலத்திற்குள்ளேயே ரஸ்புட்டின் அரசகுடும்பத்தில் ஒரு முக்கிய அங்கத்தவர்போல் ஆகிவிட்டார். இவரை குழந்தை அலெக்ஸியின் காவலன் என்று அரசியார் நம்பியிருந்தபோதும், ரஸ்புட்டின் சிறிது சிறிதாக அவர்களின் ஏனைய விடயங்களிலும் தன் தலையைப் புகுத்த ஆரம்பித்தார்.

இயற்கையான கிராமப்புற அழகையே கண்டு கண்டு பழகிப்போன ரஸ்புட்டினின் இரண்டாவது மகள் வாரியாவின் கண்கள் அந்திக்கருக்கலில் தலைநகரின் செயற்கையான அழகைக் கண்டு பிரமித்துப்போயின. கம்பீரமாக நிற்கும் உயரிய கட்டிடங்களும், பட்ட மரங்கள்போல் தமது இலைகளை உதிர்த்துவிட்டு பனிமழையை எதிர்பார்த்திருக்கும் நெடிய மரங்களும், அகன்ற அழகான சாலைகளும் அவையருகே நிற்கின்ற அழகான ஒளிவிளக்குகளும், அவைகளின் குறுக்கே அமைதியாக ஓடுகின்ற ஆறுகளும் பார்ப்பவர் கண்களை நிச்சயம் கவர்ந்துவிடும் ஆகையால் பன்னிரண்டு வயதான வாரியாவின் கண்களைக் கவர்ந்ததிலும் ஆச்சரியமில்லை.

தலைநகரின் அழகு கண்களைக் கவர்ந்தாலும் நாட்டில் நடந்துகொண்டிருந்த அரசியல் பலருடைய மனங்களைக் கவரவில்லை. நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசரிடம் போதியளவு திட்டங்களும் இருக்கவில்லை. அவ்வப்போது வலது

சாரிகளிடமும் இடதுசாரிகளிடமும் மாறி மாறிப் பக்கம் சாய்ந்ததினால் இருபகுதியின்ரையும் அரசர் அதிக கோபத்திற்கு உள்ளாக்கினார்.

நாட்டின் சட்டமும் ஒழுங்கும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. அரசியல் சீரமைப்புச் செய்ய வேண்டுமானால் முதலில் சட்டமும் ஒழுங்கும் சரியாகப் பேணப்படவேண்டும். அரச பரம்பரையினர் தாம் நாட்டுமக்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்ற எண்ணமின்றி சாதாரண மக்களோடு நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. பெரும்பாலான சாதாரண மக்கள் அரசரையும் அரசியாரையும் இரக்கமில்லாத அரக்கர்கள் என்றே எண்ணினார்கள். இவற்றை ஆதரிப்பதுபோல் புரட்சிக்காரர்களும் அரசுக்கெதிரன தமது பிரசாரங்களையும் பெருக்கிக்கொண்டே போனார்கள்.

முன்னர் ஒருமுறை எதிரிகள் அரசரைக் கொல்ல எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததால் மீண்டும் அவர்கள் அரசரின் உயிருக்கு உலை வைக்கவும் கூடும் என்று எண்ணிய அரசியார் அரசரை அரண்மனைக்குள்ளேயே அதிக நேரம் இருந்து தன் காரியங்களை ஆற்றுமாறு வேண்டிக்கொண்டார். அரண்மனையின் உயரிய மதில்களும், உறுதியான அரண்மனைக் காவலர்களும் அரசரைக் காப்பாற்றுவார்கள் என்று அரசியார் நம்பினார். தன்னை ஒரு தேவனின் தூதுவர் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டும், மதபோதனைகள் செய்துகொண்டும் இருக்கும் ரஸ்புட்டினும் தனது சேவை முக்கியமாக இப்போதுதான் அரசமாளிகைக்குத் தேவைப்படுகின்றது என்கின்ற எண்ணத்தில் தனது ஆலோசனைகளையும் ஆவ்வப்போது கூறி அரசியல் விடயங்களிலும் தனது தலையை நுழைக்க ஆரம்பித்தார்.

தலைநகரில் தனது இருப்பிடத்தில் பிரார்த்தனை என்ற பெயரில் பலரையும் வரவழைத்து பாவத்தைப் பாவத்தினால்தான் களையலாம்

என்கிற அடிப்படையில் உருவாக்கிய தனது மத போதனைகளைத் தொடர்ந்தும் போதித்தார். இறைபக்தியுடன், பாலுறவுகளும் சேர்ந்தே போதிக்கப்பட்டன. இதனை விரும்பியவர்கள் தொடர்ந்தும் இவரின் வீட்டை நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்தனர். இப்படியாகக் கூட்டம் கூடுவதைக் கேள்விப்பட்டவுடன் பலவிதமான கிசுகிசுக்களும் பரவ ஆரம்பித்தன. ரஸ்புட்டினினால் பலவிதமான தீய கிரியைகள் அங்கே நடத்தப்படுவதாகவும் செய்திகள் அடிபட்டன.

ரஸ்புட்டினுக்கு முன்னர்போல் இல்லாமல் இப்போது சமுதாயத்தின் முன்னால் மதகுருமாரின் உடைகளை அணிந்து ஆடம்பரமாகக் காட்டுவதில் மிகவும் விருப்பமாக இருந்தது. இவருடைய பக்தர்கள் என்று வருபவர்களில் அதிகமானோர் பெண்கள்தாம். அவர்கள் ரஸ்புட்டினை 'அருட்தந்தை கிறகோரி' என்று மிகவும் மரியாதையாக அழைத்தனர். ஆனால் அதிகமானோர்களுடன் பேசும் இவருடைய அநாகரிகமான பேச்சும், பண்பாடில்லாத பழக்கவழக்கங்களும் இறைபக்தியை மட்டுமே வேண்டி அங்கு வரும் பக்தர்கள் பலருடைய கணவன்மார்களையும், மனைவிமார்களையும், ஏனையோர்களையும் ஆச்சரியம் அடையச்செய்தன.

எல்லோர் முன்னாலும் அவருக்கு மிகவும் விருப்பமான மீன் போட்ட கூழ் சட்டிக்குள் தனது அழுக்குப் படிந்த விரல்களை விட்டுத் துழாவுவார். தான் குடித்த மிகுதிக் கூழை மற்றவர்களைக் குடிக்கும்படி கூறுவார். பாண் துண்டின் ஒரு பகுதியை அல்லது ஊறுகாயின் ஒரு பகுதியைக் கடித்துவிட்டு மிகுதியை மற்றவர்களை உண்ணும்படி கொடுப்பார். பழக்கூழ் போத்தலுள் விரலை வைத்து எடுத்துவிட்டு அதனை பக்தர்களின் நாவினால் நக்கிச் சுத்தமாக்கும்படி பணிப்பார். இப்படியாகச் செய்வதும் ஒருவித கிறிஸ்தவ மார்க்க உபதேசம் என்றே போதிப்பார்.

அவருடைய போதனைகள் புதுமையாக இருக்கும். விவிலிய நூலில் இருந்து பொறுக்கி எடுத்த வசனங்கள் இடையிடையே கலந்திருக்கும். பாவத்தையும் முத்தியையும் கலந்துகொண்டதாகவும் இருக்கும். நாவன்மை மிக்க ரஸ்புட்டினின் பேச்சில் மயங்கிய அவருடைய பக்தர்களில் பலர் அவரை இயேசுவின் மறுபிறப்பு என்றும் முழுதாக நம்பினர்.

பல பெண்கள் ரஸ்புட்டினுடன் உடலுறவு கொண்டால் அது பாவம் அல்ல அது தங்களைப் பரிசுத்தமாகிவிடும் என்று எண்ணி ரஸ்புட்டின் அவர்களை அந்த நோக்கத்துடன் நெருங்கும்போது தாமாகவே முன்வந்து தம்மை அர்ப்பணித்துவிடுவார்கள். இது மனச்சாட்சிக்கு விரோதமானது என்று எண்ணவே மாட்டார்கள். போதனைகளில் நடுவே ரஸ்புட்டின் ஒருவரை விரும்பிவிட்டால் தான் எழுந்து நின்று அவரை நோக்கி நான் உன்னைப் பரிசுத்தமாக்குகிறேன் என்று கூறிப் பலரும் பார்த்திருக்கத் தனது படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றுவிடுவார். இது தினமும் நடக்கும் நிகழ்வு. அன்றிலிருந்து அவர் பரிசுத்தமாகிவிட்டார் என்று மற்றவர்களும் நம்புவார்கள்.

பொலிஸ் அதிகாரிகளும் அவரது நடமாட்டத்தைக் கவனித்துக் கொண்டே இருந்தார்கள். காவலிருந்த இரகசியப் பொலிசார் அவருக்குப் பாதுகாப்பு வழங்கியது மட்டுமல்லாமல் அரசகுடும்பத்திற்குத் தெரியாமல் அங்கு வருவோர் போவோரைப் பற்றியெல்லாம் குறிப்புக்களும் எடுத்துக்கொண்டிருந்தார்கள். அவற்றிலே சில இப்படி இருந்தன.

'டாக்டரின் மனைவி இன்று ஒரு கம்பளம் பரிசாகக் கொடுத்தார்.'

'இராணுவ அதிகாரியின் மனைவி ஒருவர் கொடுமையான தன் கணவனிடமிருந்து தப்புவதற்காக ரஸ்புட்டினிடம் சென்றார். சிறிது

நேரத்திற்குள்ளேயே வெளியில் வந்த அவரின் கூற்றுப்படி; நான் உள்ளே சென்றதும் வேலைக்காரர் கதவைத் திறந்து உள்ளே இருக்கும் ரஸ்புட்டினைக் காட்டினர். அவரை நான் முன்னர் ஒருபோதும் கண்டதில்லை. என்னைக் கண்டவுடன் முதலில் எனது ஆடைகளைக் களையுமாறு கூறினார். அவரது விருப்பப்படியே நான் செய்தேன். ஆனால் நான் சொல்வதை அவர் கேட்டதாகத் தெரியவில்லை. ஆனால் எனது மார்பிலும், முகத்திலும் மாறிமாறித் தொட்டுக்கொண்டே இருந்தார். தனக்கு முத்தம் தருமாறு கூறினார். என்னால் அப்படிச் செய்ய முடியவில்லை. பின்னர் ஒரு காகிதத்தில் ஏதோ எழுதினார் ஆனால் என்னிடம் தரவில்லை. அன்று தன்னை நான் கோபப்படுத்திவிட்டதாகவும், மறுநாள் தன்னை வந்து பார்க்கும்படியும் கூறினார்.'

'சீமாட்டி லிக்காட் என்பவர் ரஸ்புட்டினைப் பார்க்கச் சென்றார். தனது கணவனது நடத்தைகளில் குறுக்கிடுமாறு வேண்டினார். ரஸ்புட்டின் அதற்காகத் தன்னை முத்தமிடுமாறு கூறினார். ஆனால் சீமாட்டி மறுத்துவிட்டு வெறியேறிவிட்டார்.'

'பிஸ்ரொல்கோஸ் (Pistolkors) இனது குடும்பத்தைப் பார்க்கச் சென்றபோது ரஸ்புட்டின் விலைமாது ஒருவரைத் தனது முழங்காலில் இருத்தி அவரது காதுகளில் ஏதோ முணுமுணுத்தார்.'

'ரஸ்புட்டின் தனது இல்லத்திற்குச் சென்று யாராவது பார்வையாளர்கள் தனக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறார்களா என்று கேட்டார். இரு பெண்கள் அங்கே காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறியபோது 'அவர்கள் அழகானவர்களா? நல்ல அழகானவர்களா? அதுதான் நல்லது. எனக்கு அழகானவர்கள்தான் தேவை' என்றார்.'

'ரஸ்புட்டின் மதுபோதையில் வந்தார். ஆனால் உடனே வெளியேறிவிட்டார். திரும்பி வரும்போது அதிகாலை இரண்டு மணி ஆகிவிட்டது. முன்னையைவிட இப்போது மிகுந்த வெறியில் இருந்தார்.'

'ரஸ்புட்டின் அதிகாலை 7.30 மணியளவில் இரு ஆண்களுடனும், ஒரு பெண்ணுடனும் வீட்டிற்கு வந்தார். மிகுந்த வெறியில் இருந்தார். வழிநெடுகிலும் வாய்க்குவந்தபடி உரத்த குரலில் பாடிக்கொண்டே வந்தார். முன்பின் தெரியாத ஒருவர் அவரை அவருடைய வீட்டிற்குள் கொண்டுசென்று விட்டார்.'

'இராணுவ சேனைத் தலைவர் ஒருவருடைய மனைவியார் அவரைப் பார்க்க வந்தார். ரஸ்புட்டின் அவரது முன்னிலையில் ஓர் இளம் பெண்ணை முத்தமிட்டார். மனைவியாருக்கு அந்தச் சம்பவம் மிகவும் தாக்கத்தை உண்டுபண்ணிவிட்டது. அதன்பிறகு அவர் அந்தப் பக்கமே வரவில்லை.'

'மரியா கில் என்கிற 45ஆம் இராணுவப் படைப்பிரிவுத் தலைவரின் மனைவி இன்றிரவை ரஸ்புட்டினின் இல்லத்தில் கழித்தார்.'

'ரஸ்புட்டின் காலை 9.50 மணிக்கு அனா விருபோவாவுடன் தனது இல்லத்திற்கு வந்தார். அவர் அன்றைய இரவை அனாவினுடைய இருப்பிடத்தில்தான் கழித்திருக்கவேண்டும்.'

'காவலாளியின் மனைவியை தன்னுடைய இருப்பிடத்திற்கு வருமாறு ரஸ்புட்டின் அழைப்பு விடுத்தார். ஆனால் அவர் வர மறுத்து விட்டார். பின்னர் ரஸ்புட்டின் அவர் வீட்டிற்குச் சென்றார். அங்கே தையல் வேலை செய்துகொண்டிருந்த அவரைத் தன்னுடன் வருமாறு அழைத்தார். அவர் மீண்டும் மறுத்துவிட்டார். ரஸ்புட்டின் வெளியே வரும்போது அவரைப்பார்த்து 'அடுத்த கிழமை என் வீட்டிற்கு வா. நான் உனக்கு ஐம்பது ரூபில்கள் (ரஷ்ய நாணயம்) தருகிறேன்' என்று கூறினார்.'

இப்படியாகப் பல சம்பவங்கள் நடைபெற்றன. காலமும் ஓடிக்கொண்டேயிருந்தது. மரியாவிற்கு அவர்களின் வீட்டு முன்வாசலில் இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் இருந்துகொண்டு ரஸ்புட்டினைத் தொடர்ந்து அவதானிப்பது சங்கடமாக இருந்தது. ரஸ்புட்டினுக்கே அதற்கான காரணம் தெரியாது.

ஒருநாள் இதுபற்றித் தந்தையாரிடம் கேட்டபோது அவர் 'எதுவித காரணங்களுமில்லை. ஆனால் அவர்களுக்கு ஏதாவது வேலை கொடுக்க வேண்டும் என்பதற்காக அவர்களை அங்கே அப்படி விட்டிருக்கிறார்கள்' என்றார். 'இந்நாட்களில் எல்லோரும் எல்லாவற்றிற்கும் சந்தேகம் கொள்கிறார்கள். அதிலும் ரஷ்யா எப்போதும் அதிகாரவர்க்க ஆட்சியை நடாத்துபவர்களையே அளவுக்கதிகமாகக் கொண்டிருக்கிறது. அரசரிலிருந்து ஆண்டிவரை எல்லோரையும் அவர்கள் பற்றி எல்லாவற்றையும் அறியவே விரும்புகிறார்கள் அதனால்தான் அப்படிச் செய்திருக்கிறார்கள்' என்றார்.

ஆனால் ஒருமுறை அரசியாரிடம் இதுபற்றி மரியா கேட்டபோது 'குழந்தாய் உனக்கு அரண்மனையிலே நடக்கின்ற சதியாலோசனை களைப் பற்றி அறிய வயது போதாது. எமது விரோதிகள் எம்முடன் நட்பு வைத்திருப்பவர்களை அழிப்பதற்கு பல தடவைகள் முயன்றிருக்கின்றார்கள். உன்னுடைய தந்தையாரை இழப்பதற்கு நாம் தயாரில்லை. அவர் எமது குழந்தை அலெக்ஸியின் உயிர்க்காவலர். எல்லா மருத்துவர்களாலும் கைவிடப்பட்ட இந்நாட்டு முடிக்குரிய இளவரசனின் உயிரைக் காப்பாற்றியவரை, கடவுளின் தூதுவரைக் காப்பதற்காக நான்தான் அங்கே இரகசியப் பொலிஸ் உத்தியோகத்தர் களை நிறுத்தியிருக்கிறேன்' என்றார்.

தலைநகரில் ரஸ்புட்டின் பகிரங்கமாக நடாத்தும் மானக்கேடான கேளிக்கைகளையும், மற்றவைகளையும் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக

எழுதின. திரும்பத்திரும்ப எழுதின. துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் அச்சடித்து வெளியிட்டன. வெண்கட்டிகளால் எழுதக்கூடிய சுவர்களில் எல்லாம் வரி வரியாக எழுதினர். அங்கே நடக்கும் ஒவ்வொரு சம்பவங் களையும் காது வழியாகக் கேட்டவர்கள் தமக்குத் தெரிந்தவர்களுக் கெல்லாம் வாய்வழியாக விளக்கிக் கூறினார்கள். மக்கள் தமது கடுமையான எதிர்ப்பை இந்த வகையான முறைகளினால் வெளிப்படுத்திக்கொண்டே இருந்தனர்.

'ரஸ்புட்டின், ரஸ்புட்டின், ரஸ்புட்டின்' என்பது எல்லோர் வாயிலும் முணுமுணுக்கும் பிரபல்யமான பாடலின் பல்லவிபோல் பரவிக்கொண்டே யிருந்தது. இவருடைய அருவருப்பான, இழிவான செய்கைகள் ரஷ்யாவையே ஒரு காரிருள்போல் கௌவிக்கொண்டிருந்தன. அவைகள் வார்த்தைகளால் விளக்கமுடியாதவை, கேட்போரைப் பிரமிக்க வைப்பவை, ஒருவராலும் நம்பவே முடியாதவை. இராச்சியத்தில் உள்ள ஒரு பெரிய மகானின் புகழ் பரவுவதுபோல் இந்த வகையிலும் இவரது பெயர் எல்லோரிடமும் பரவிக்கொண்டே வந்தது.

அவரைக் கவர்ந்தவர்களிடம் அவர்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு சிறு காகித அட்டையில் 'அன்புள்ள நண்பரே இதனை எனக்காகச் செய்யவும்' இப்படிக்கு கிறகோறி என்று மட்டுமே எழுதி அனுப்பிவிடுவார். சிலவேளைகளில் அவை யாருக்கு எழுதப்பட்டதென்றோ, யாருக்கு இதனைச் செய்யவேண்டுமென்றோ குறிப்பிடப்பட்டும் இருக்கமாட்டாது பொதுவானதாகவே இருக்கும். அட்டையில் மேல் பக்கத்தில் ஒரு சிலுவையின் அடையாளம் வரையப் பட்டிருக்கும். அரச குடும்பத்தின் செல்வாக்கு மிகுந்த ரஸ்புட்டினின் இந்தக்கடிதங்கள் தலைநகரிலுள்ள எல்லாக் கதவுகளையும் திறக்கும் வல்லமை பெற்றவையாகவும் இருந்தன. ரஸ்புட்டின் முகவரியின்றி எழுதிக்கொடுக்கும் காகித அட்டையைப் பற்றிக் கேள்விப்பட்ட மக்கள் அதனைக் கள்ளச் சந்தையில் பெறுவதற்கும் முனைந்தனர்.

பேரரசியாரின் தோழியான அனா விருபோவா அரச பரம்பரையை அடுத்து ரஸ்புட்டினுக்கே மிகவும் விசுவாசமானவராக இருந்தார். இவர்களை இப்படியாக ரஸ்புட்டினின் இருப்பிடத்திற்கு வந்து போவதற்கு ஒழுங்குகள் செய்பவர் அனா விருபோவாதான் என்ற பேச்சுக்களும் அடிபட்டன.

ரஸ்புட்டின் பலரைத் திரட்டி தானாகவே ஒரு சங்கத்தை நிறுவினார். நாட்டின் நிலமையைச் சீராக்கி அமைதியை நிலைநாட்டுவதே அதன் அங்கத்தவர்களின் கடமை என்று விளக்கினார். அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படாத சங்கத்தை உருவாக்கியதால் ரஸ்புட்டின் மேலும் பல எதிரிகளை உருவாக்கினார். பிரபுக்கள், பணம்படைத்தவர்கள், அதிகார வர்க்கத்தினர், வணிகர்கள், சாதாரண தொழிலாளர்கள் என எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இதனை எதிர்த்தனர். இவர்களுள் அரசியாரின் சகோதரி எலிசவெற்றா வியோடேறோவ்னா (Elizaveta Feodorovna) வும் ஒருவர். அடுத்தவர் புதிய பிரதம மந்திரி றெட்சியன்கோ (Rodzianko), இவர்களோடு சேர்ந்து இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போ ∴பீலிக்ஸ் (Nikolas Yussupov Feliks) அவர்களும் ரஸ்புட்டினின் செய்கைகளை கடுமையாக எதிர்த்தார். இவர் பேரரசரின் இனத்தவரும் ஆவர்.

1913 ஆம் ஆண்டு ரஷ்ய இராசதானி அமைக்கப்பட்டு 300 வருடங்கள் ஆகப்போகின்றது. இதனை நாடளாவிய ரீதியில் கொண்டாடுவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டன. இந்தக் கொண்டாட்டங்கள் மக்களை தம் பக்கம் திருப்பும் என்று அரசர் நப்பாசை கொண்டார்.

'பெரும் பகுதியான மக்கள் பட்டினியாலும், போரின் கொடுமைகளாலும் வாடிக்கொண்டு இருக்கும்போது இப்படியான கொண்டாட்டங்கள் தேவைதானா? மக்களின் நலன்களிலே உண்மையில்

அரசகுடும்பத்தினருக்கு அக்கறை இருக்குமானால் இப்படியான கொண்டாட்டங்கள் செய்ய அனுமதியளித்திருக்கவே கூடாது. ரஷ்யாவிற்கு இந்த அரச பரம்பரையினால் கெடுதலே ஒழிய ஒருபோதும் நன்மை கிடைக்காது. இப்படியான அரச பரம்பரை இனிமேல் எமக்குத் தேவையில்லை. இதற்கு ஒரே வழி புரட்சிதான்' என்ற வார்த்தைகள் தான் எல்லோர் வாயிலும் பேசப்பட்டன.

திட்டமிட்டபடி நடாத்தப்பட்ட அந்தக் கொண்டாட்டங்களின்போது அரச குடும்பத்திற்கு எதிராக மக்கள் வெள்ளம் கரை புரண்டது. நாட்டில் பல இடங்களிலும் வேலை நிறுத்தங்கள் ஆரம்பமாகின. நாடெங்கிலும் அமைதியின்மையும், ஆர்ப்பாட்டங்களும், கொலைகளும், கொள்ளைகளும் நடந்தன. கொடிய நிகழ்வுகளுக்கான சகுனங்கள் தென்பட ஆரம்பித்தன.

இதேவேளையில் பால்கன் தீபகற்ப நாடுகளுக்குக் (Balkans) கிடையிலான யுத்தம் மிகவும் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. கிரேக்க தேசமும், பல்கேரியாவும், சேபியாவும் இவற்றுடன் மென்ரிநீகிறோவும் (Montenegro) தம்மை அடக்கிய துருக்கிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கின. மொன்ரிநீகிரோ இளவரசிகள், மிலிற்ஷா (Militza), அனற்றாசியா (Anastasia) இருவரும் தீவிரமான தேசாபிமானிகள். இவர்கள் இருவரும் தமது கணவன்மார்களை பேரரசருடன் பேசி தமது நாட்டுடன் சேர்ந்து துருக்கிக்கு எதிரான போரில் ஈடுபடுமாறு வற்புறுத்தினர். பேரரசருக்கு மறுப்புச் சொல்ல மனம் வரவில்லை. அவரது அறிவுக்கும், மந்திரி சபையினரின் ஆலோசனைகளுக்கும் எட்டியவரை அந்தப் போரில் ரஷ்யாவும் ஈடுபட்டால் பல அனுகூலங்கள் இருப்பதாக எண்ணினார்கள். அண்மையில் யப்பான் நாட்டுடன் செய்த போரில் ஏற்பட்ட தோல்வியை இந்தப் போரில் வெற்றி கொண்டால் நிவர்த்தி செய்யலாம் என்றும் எண்ணினார்.

ரஷ்யப் படையினரின் இழந்த கௌரவத்தை மீண்டும் தழைக்க வைக்கலாம். போரில் வெற்றி கொண்டு சிறிது நிலப்பரப்பை ரஷ்யாவின் கீழ் வைத்துக்கொண்டால் ரஷ்யாவின் இராசதானியை மத்தியதரைக் கடற்பகுதிவரை நீடிக்கலாம். ஓய்ந்துபோய் இருக்கும் தொழிற்சாலை களில் ஆயுத உற்பத்திகளையும், மற்றைய பொருட்களின் உற்பத்தி களையும் ஆரம்பிக்கலாம். இதனால் பலருக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம் என்றே பட்டது.

இதனையறிந்த ரஸ்புட்டின் அரசரிடம் சென்று போரின் கொடுமை களை விளக்கினார். 'அரசே! போர் அழிவுகளையே கொண்டுவரும். ரஷ்யா இப்போதிருக்கும் நிலையில் இன்னும் ஒரு போர் வந்தால் ரஷ்யாவே அழிந்துவிடவும் கூடும். ஆதலால் தயவுசெய்து இன்னும் ஒரு போரில் எமது ரஷ்யாவை ஈடுபட வைக்காதீர்கள்' என்று மன்றாடினார்.

அரசர் ரஸ்புட்டின் சொல்வதிலும் உண்மை இருப்பதாக நம்பினார். 'சரி நாம் இப்போது எதற்கெடுத்தாலும் உமது அறிவுரைகளுக்கே கூடுதலாகச் செவி மடுக்கின்றோம். நான் உம்மைக் கலந்தாலோசியாது இன்னுமொரு போருக்கு அனுமதியளிக்கமாட்டேன்' என்று கூறினார். அதன்படி பால்கன் தீபகற்ப நாடுகளுக்குக் (Balkans) கிடையிலான யுத்தத்தில் ரஷ்யா ஈடுபடமாட்டாது என்று ஓர் அறிக்கையையும் விடுத்தார். அதனை அடுத்து நாட்டில் இருந்தால் தனது மனத்தை மற்றவர்கள் மாற்றிவிடவும்கூடும் என்ற நோக்கத்தாலோ என்னவோ தனது குடும்பத்தையும் அழைத்துக்கொண்டு போலந்து நாட்டுக்கு வேட்டையாடச் சென்றுவிட்டார்.

அயல் நாடுகளில் கடுமையான யுத்தம் நடந்துகொண்டிருக்கும் போது அரசரும் அவரது குடும்பமும் விடுமுறையில் வேட்டையாடச்

சென்றது மென்ரிநீகிறோ இளவரசிகள் மிலிற்ஷா, அனற்றாசியா இருவருக்கும் மிகுந்த கோபத்தை ஊட்டின. ரஸ்புட்டினின் தலையீட்டினால் தமக்குக்கொடுத்த வாக்குறுதியை பேரரசர் மீறிவிட்டார், அரசர் தங்கள் எல்லோரையும் ஏமாற்றிவிட்டார் என்று நிக்கோலாய் நிக்கொலவிச் (Duke Nikoli Nikolayevich) எண்ணினார். இவற்றிற் கெல்லாம் முக்கிய காரணம் ரஸ்புட்டின்தான் என்றும் திட்டவட்டமாக முடிவுசெய்தனர். நேரே ரஸ்புட்டினின் இருப்பிடத்தை அடைந்தார். எதுவுமே பேசாது ரஸ்புட்டினை இழுத்துப்போட்டு தமது ஆத்திரம் தீரும்வரை நையப்புடைக்க ஆரம்பித்தார். எதிர்பாராத இந்தச் செயலைக் கண்டு ரஸ்புட்டினின் பிள்ளைகள் வீறிட்டுக் கத்தியபோதும் அவர் விடவில்லை.

ஒரு அரச குடும்பத்தினர் அவரது இருப்பிடத்திற்கு வந்து தாக்கியது இதுவே முதல் தடவை. ரஸ்புட்டினுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி தீரும் முன்னமே விரைவாக எல்லாம் நடந்து முடிந்துவிட்டன. ரஸ்புட்டின் தன்னைச் சமாளித்துக்கொண்டு எழுந்தார். ரஸ்புட்டின் எப்படி நிலமையைச் சமாளிக்கலாம் என்று சிந்தித்துக்கொண்டிருந்தார். நிக்கோலாய் நிக்கொலவிச்சின் நிந்தனைகளும், பழிச்சொற்களும் தொடர்ந்தன. அரசரையும், அரசியாரையும், ரஸ்புட்டினையும் இணைத்து ஆத்திரம் தீரும்வரை பலவகையான சொற்கணைகளால் தாக்கிப் பேசினார்.

இன்னும் ஆத்திரம் அடங்காத நிக்கோலாய் நிக்கொலவிச் ரஸ்புட்டினை நோக்கித் தனது ஆள்காட்டி விரலை நீட்டியபடியே 'உமது புதிய உறவான அரசியாருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று எல்லோருக்கும் தெரியும். அதற்குக் காரணம் உம்முடைய ஆலோசனைகள் தான் என்பதும் எல்லோருக்கும் தெரியும். அரசியாரை அரண்மனையிலிருந்து அகற்றி, உம்மிடமிருந்தும் பிரித்துக் கொண்டு

போய் ஒரு மனநோயாளர் விடுதியில் வைத்துப் பூட்டினால்தான் நாடு உருப்படும். அந்த முதுகெலும்பில்லாதவரை அகற்றுவது ஒன்றும் பெரிய காரியமில்லை. உமக்கும் விரைவில் நாம் நல்லதொரு பாடத்தைக் கற்பிக்காமல் விடமாட்டோம். இவை எல்லாம் விரைவில் நடக்கத்தான் போகின்றன. பொறுத்திருந்து பாரும்' என்று தனது ஆத்திரம் தீரும்வரை கத்தினார். தனது ஆத்திரம் தீர்ந்ததும் சிறிது அமைதியானார். ரஸ்புட்டின் தனது வாய் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. மீண்டும் ஒரு முறை ரஸ்புட்டினை தனது எரிக்கும் விழிகளால் பார்த்தார். மறுகணம் அந்த இடத்தைவிட்டு வெளியேறினார்.

◆◆



18

உயிருக்கு வந்த ஆபத்து

ரஸ்புட்டினிற்கு எப்படித்தான் எதிரிகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போனாலும் அவரின் இருப்பிடம் நோக்கி இப்போதும் வசதி படைத்தவர்களும், வறியவர்களும் வந்தவண்ணமே இருந்தார்கள். அன்பளிப்புகளும், லஞ்சங்களும் அவர்களோடு கூடவே வந்தவண்ணமே இருந்தன.

நாட்டில் ரஸ்புட்டினின் எதிரிகள் பலமடங்காக அதிகரித்த போதும் அவருக்கு அரசபரைம்பரையினரின் செல்வாக்கு எள்ளளவேனும் குறையவேயில்லை. நாடு ஓர் அழிவுப்பாதையை நோக்கிச் செல்கின்றது என்ற எண்ணமே எல்லோர் மனங்களிலும் பரவியிருந்தது. இதற்கெல்லாம் முக்கிய காரணமாக இருப்பவர் ரஸ்புட்டின்தான் என்ற கருத்தும் அவர்களிடையே பரவியிருந்தது. இவர் உயிரோடு இருக்கும் நாளெல்லாம் நாட்டிற்குத் துரோகம் விளைவித்துக்கொண்டே இருக்கப்போகிறார் இவரை எப்படியாவது தீர்த்துக்கட்டினால் அவருடன் சேர்த்து அரச பரம்பரையினருக்கும் ஒரு பாடம் கற்பிக்கலாம் என்ற எண்ணமே ரஸ்புட்டினின் எதிரிகளில் ஒருவரான இலியடோ (Iliodor) வின் மனதில் எப்போதும் மேலோங்கி நின்றது.

இலியடோ ரஸ்புட்டினின் எதிரிகள் பலரையும், தீவிரவாதிகளையும் ஒன்றாகத் திரட்டி 1913 ஆம் ஆண்டு ஒக்டோபர் 6ஆம் திகதியன்று ஒரே நாளில் அறுபது அரசாங்க உத்தியோகத்தர்களையும், நாற்பது மதகுருமார்களையும் கொலை செய்வதென்று ஒரு சதித்திட்டம் போட்டார். அதற்கான நபர்களையும் தேர்ந்தெடுத்து போதிய பயிற்சி களும் கொடுக்கப்பட்டன. அவை நடாத்தப்படவேண்டிய இடங்களும் தெரிவுசெய்யப்பட்டன. வேண்டியளவு வெடிகுண்டுகளும் கொள்வனவு செய்யப்பட்டன.

ஆனால் அந்தச் சதிக்கூட்டத்திலே இருந்த ஒருவர் பெருந்தொகை யான பணத்தைப் பெற்றுக்கொண்டு இந்தச் சதித்திட்டம் பற்றி அரசாங்கத்திற்குத் தெரிவித்துவிட்டார். அடுத்த கணம் அரச காவலர் களால் இலியடோவும் அவரது சகாக்களும் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். ஆனால் சிறைக் கதவுகளின் பின்னால் இருந்தும்கூட இலியடோவின் சதியாலோசனைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருந்தன. இதற்கு பிரபு நிக்கோலாய் நிக்கொலவிச்சின் ஆதரவும் யாருக்கும் தெரியாமல் இருந்துகொண்டே வந்தது.

இலியடோவிற்கு சினோயா குசிவா (Chionya Guseva) என்றொரு பக்தை இருந்தார். நாளிலும் பொழுதிலும் அவருக்கு ரஸ்புட்டினினது நடத்தைகளையும், நாட்டு விவகாரத்தில் ரஸ்புட்டினின் தலையீடுகளையும், தனது அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காகவே ரஸ்புட்டின் அரச பரம்பரையினரைத் தனது அழுங்குப் பிடியில் வைத்துக்கொண்டிருப்பதையும் ஓதியோதி அவரை ரஸ்புட்டினினது முழு எதிரியாக மாற்றிவிட்டார். பெண்களைக் கண்டால் அவர்களின் பரிவுக்காக எதனையும் செய்யக் கூடிய ரஸ்புட்டினைப் பின்தொடர்ந்து அவர் செயல்களைக் கவனிக்குமாறு கட்டளையிடப்பட்டது. தகுந்த தருணம் வரும்போது அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த கூரிய

கத்தியினால் ரஸ்புட்டினைக் குத்திக் கொல்லவேண்டும் என்றும் பணிக்கப்பட்டது.

இவை இப்படியிருக்க ரஸ்புட்டினின் 15 வயதான மகள் மரியாவிற்கு பாடசாலையில் பாடங்களைப் படிப்பதைவிட தன்னுடன் படிக்கும் மாணவர்களோடு மணிக்கணக்காகப் பேசுவதிலும், தான் போகுமிடமெல்லாம் இளம் இராணுவ வீரர்களைப் பார்த்து இரசிப்பதிலும் அலாதியான ஆனந்தம் ஏற்பட்டது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் தனது நண்பியும், சசனோவ்வினுடைய மகளுமான மரூசா (Marusa) வுடன் சேர்ந்து பொழுதுபோக்காகத் தொலைபேசியில் யாராவது ஆண்களின் எண்களைச் சுழற்றி அவர்களுடன் சரசப் பேச்சுக்கள் பேசுவதிலும் கூடிய நேரத்தைச் செலவிட்டாள். இப்படிச் செய்துகொண்டிருக்கும்போது ஒருநாள் முன்பின் தெரியாத ஒருவரிடமிருந்து மரியாவிற்கு ஓர் தொலைபேசி அழைப்பு வந்தது.

இதனைச் சற்றும் எதிர்பார்த்திராத மரியாவுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அந்த ஆண்குரலுக்கு உரியவர் 'உமக்கு என்னை யாரென்று தெரியாது ஆனால் நான் உம்மை நன்கு அறிவேன். உமது அழகில் நான் மயங்கி என்னிதயத்தைப் பறிகொடுத்துவிட்டேன். என் காதலை நீர் ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்று மிகவும் பணிவோடு கூறினார். மேலும் தான் மரியாவைச் சில நாட்களாகப் பின்தொடர்வதாகவும், மரியா ரஸ்புட்டினுடைய மகள் என்பது தனக்குத் தெரியும் என்றும் கூறினார். இப்படியாகச் சில நாட்களாக அவரது தொலைபேசி அழைப்புக்கள் தொடர்ந்தவண்ணமே இருந்தன. இந்தப் பருவத்தில் காதல் வியாதியைத் தூண்டும் காமரசப் பேச்சுக்களால் அந்த ஆண்மகனை நேரில் பார்க்காமலே மரியாவிற்கு அவரின்மேல் காதல் ஏற்பட்டுவிட்டது. சில நாட்கள் கழித்து அவர் மரியாவை தன்னுடன் நாடகக் கொட்டகைகளுக்கும், நகரின் அழகிய இடங்களைச்

சுற்றிவர தன்னுடன் வரும்படியும் தொலைபேசியில் கேட்டார். ஆனால் மரியா மறுத்துவிட்டாள்.

ஏன் வர மறுக்கிறீர் என்று அதற்குக் காரணம் கேட்டபோது தான் இன்னும் இரண்டொரு தினங்களில் தன் தந்தையாருடன் தனது பிறந்த கிராமத்திற்குச் செல்ல இருப்பதாக மரியா கூறினாள். மறுமுனையில் இருந்தவர் 'அப்படியா?[92]' என்று மட்டும் கேட்டார்.

மரியா கூறியதன்படி இரண்டொரு தினங்களில் தனது கிராமத்தை நோக்கிய நீண்ட புகையிரதப் பயணத்தை ஆரம்பித்தாள். புகையிரதப் பயணத்தின் களைப்பால் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களையோ அல்லது அங்கு நடப்பவைகளையோ, அந்த ஆணிடம் இருந்து வந்த தொலைபேசி அழைப்புக்களையோ அல்லது அவருடன் பேசிய உரையாடல்களையோ மரியாவால் திரும்பவும் எண்ணிப் முடியவில்லை.

புகையிரதம் அவளுடைய கிராமத்தை அண்மித்துக் கொண்டிருந்தது. ரஸ்புட்டின் எழுந்து எங்கேயோ சென்றார். அப்போது தனியாக இருந்த மரியாவின் முன்னால் ஓர் உயரிய ஆண்மகன் வந்து நின்றார். 'என்னைத் தெரிகிறாதா?' என்று கேட்டார். ஆச்சரியத்துடன் அவரின் முகத்தைப் பார்த்த மரியாவிற்கு அவரை அடையாளம் காண முடியாவிட்டாலும் அவரது குரலை எங்கேயோ கேட்டதுபோல் இருந்தது. எதுவும் பேசாதிருந்த மரியாவை நோக்கி 'நான் தான் உம்முடன் தொலைபேசியில் பேசியவன்' என்றும், தனது பெயர் டேவிட்சன் (Davidson) என்றும், தான் ஒரு பத்திரிகை அறிவிப்பாளன் என்றும் தன்னை அறிமுகப்படுத்தினார். அப்படியே சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு தனது இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டார்.

மரியாவிற்கு அவர் தனது தந்தையார் எழுந்து சென்றதும் தன்னுடன் வந்து பேசியது சிறிது சந்தேகத்தைக் கொடுத்தது.

புகையிரதம் கிராமத்தை அடைந்ததும் அவரும் புகையிரதத்தை விட்டு இறங்கி வேறு பாதையால் பிரிந்து சென்றுவிட்டார். மரியாவிற்கு அவர் தன்னைத் தொடர்ந்து வருவதுபோல் இருந்தது. தன்மேல் உள்ள அன்பால், காதலால்தான் அப்படிப் பின்தொடர்கிறார் என்று எண்ணினாள். அதனை எண்ண மிகவும் மகிழ்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. ஆனால் இதுபற்றி எதுவுமே தந்தையாரிடம் கூறவில்லை.

மறுநாள், 1914 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் நாள். அது ஒரு ஞாயிற்றுக் கிழமை. கோடை காலத்தின் ஆரம்பம். அன்று மாலைச் சூரியனின் ஒளி வானத்திலே மிகவும் பிரகாசமாக இருந்தது. ரஸ்புட்டினின் குடும்பத்தினர் மதியவேளை தேவாலயத்திற்குச் சென்று தமது பிரார்த்தனைகளை முடித்துக்கொண்டு வந்ததும், சாயந்தரம் அயலவர் ஒருவரின் அழைப்பிற்கிணங்க அவருடைய வீட்டிற்கு விருந்துண்ணச் சென்றிருந்தனர்.

ரஸ்புட்டின் என்றுமில்லாதவாறு அன்று மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். தலைநகரில் தான் வாழும் வாழ்க்கையைப் பற்றி அங்கிருந்தவர்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார். அரச பரம்பரையினரிடம் தனக்குள்ள மரியாதைகளைப் பற்றியும், அவற்றை விரும்பாதோர் தனக்கு எதிராகச் செய்யும் காரியங்களைப் பற்றியும், முக்கியமாக தான் போகுமிடமெல்லாம் தன்னைப் பின்தொடரும் இரகசியப் பொலிசாரைப் பற்றியும் அவர்களைத் தான் எப்படியாக ஏமாற்றுவது என்பது பற்றியும் தனது கெட்டித்தனத்தைக் கூறிப் பெருமிதப்பட்டுக்கொண்டிருந்தார். ரஸ்புட்டினின் மனைவி இவற்றைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தார். இதனைப் பார்த்த ரஸ்புட்டின் மேலும் மேலும் பல கதைகளைத் தனது கற்பனையுடன் கலந்து சொல்லிக்கொண்டே இருந்தார்.

விருந்தினை முடித்து வீடு சென்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று யாரோ கதவில் தட்டும் சத்தம் கேட்டது. டூனியா சென்று கதவைத் திறந்து பார்த்தார். வாசலில் ஒரு தபால்காரர் நின்றுகொண்டிருந்தார். கையிலே அரசியார் அனுப்பிய ஓர் அவசரத் தந்தி இருந்தது.

ஓஸ்ரியாவின் பிரதமரும் அவரது துணைவியாரும் சேபியாவின் (Serbia) ஒரு நகரான சறஜேயாவில் (Sarejeva) வைத்துக் கொலை செய்யப்பட்டு விட்டதாகவும் இதனால் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் பதட்ட நிலைய்யில் இருப்பதாகவும் ரஸ்புட்டினை உடனே தலை நகருக்குத் திரும்பி வரும்படியும் அதற்கான பதிலைத் தான் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் அதிலே குறிப்பிடப்பட்டிருந்து.

ரஸ்புட்டினுக்கு அதனைப் பார்த்ததும் மனதில் முன்பிருந்த மகிழ்ச்சி எல்லாம் மறைந்துவிட்டது. ரஸ்புட்டின் அதற்கான பதிலை உடனே எழுதி தபால் நிலையம் சென்று அதனை அரச மாளிகைக்கு அனுப்பிவிட்டு தபால் நிலையத்திலிருந்து தமது வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தார். கிராம மக்களில் பலர் வழக்கம்போல தமது இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு வீதிகளிலே அங்குமிங்கும் நடந்தபடி உல்லாசமாக தமது பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் யாருக்கும் தலைநகரில் நடக்கின்ற செய்திகளை அவ்வளவு விரைவாக அறிய வாய்ப்புக்கள் இருந்திருக்கவில்லை. மக்களில் சிலர் ரஸ்புட்டினைப் பார்த்துத் தலையை அசைத்தனர். இன்னும் சிலர் வணக்கம் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் தலையை அசைத்தும், பதில் வணக்கமும் சொல்லிக்கொண்டு நடந்தபோதிலும் ரஸ்புட்டினின் மனமெல்லாம் தலைநகரைப் பற்றிய சிந்தனையிலேயே இருந்தது.

ரஸ்புட்டின் அந்தப் பாதையில் வருவதைக் கண்ட ஒரு பெண் அவரை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டே இருந்தார். தான்

மேலே போர்த்தியிருந்த அங்கியைச் சரிசெய்தபடி தனது ஒரு கையை உள்ளேயும், மறு கையை வெளியேயும் வைத்தபடி ரஸ்புட்டினையே பார்த்துக்கொண்டிருந்தார். தன்னையே உற்றுப் பார்க்கும் பெண்ணை இவரின் கண்களும் அவதானிக்கத் தவறவில்லை.

தனது ஒரு கையை நீட்டியபடி பிச்சை கேட்கும் பாணியில் ரஸ்புட்டினை நோக்கி ஓரடி எடுத்து வைத்தார் அந்தப் பெண். ரஸ்புட்டின் அவரருகில் வந்ததும் தனது நடையை நிறுத்தி தனது கைகளைப் பைகளுள் விட்டு நீட்டிய கையில் போடுவதற்காக பணத்தைத் தேடினார். தனது ஒரு கையை நீட்டியபடியே நின்ற அந்தப் பெண் சினோயா குசிவா (Chionya Guseva) திடீரென தனது மேலங்கியுள் மறு கையில் இறுக்கமாகப் பிடித்தபடி மறைத்து வைத்திருந்த கூரிய கத்தியை எடுத்து ரஸ்புட்டினின் அடி வயிற்றிலே தனது பலம் எல்லாவற்றையும் சேர்த்துக் குத்தினார். அடிவயிற்றில் பாய்ந்த அந்தக் கத்தி தொப்புள் பகுதியினூடாக தோலைத் துளைத்து இரைப்பையின் ஊடாகச் சென்று சிறுகுடல்களை அறுத்து விலா எலும்புகளில் பட்டு நின்றது.

குத்திய கத்தியை வெளியே இழுத்து மறுபடியும் ரஸ்புட்டினைக் குத்துவதற்கு முயன்றார். ஆனால் ரஸ்புட்டின் கத்தியால் குத்திய வேதனையையும் தாங்கிக்கொண்டு அவரைத் தள்ளிவிட்டுவிட்டுத் தன் காயத்தைக் கைகளால் அழுத்திப்பிடித்தார். மறுகணமே அந்தப்பெண் கத்தியை எறிந்துவிட்டு ஓட்டம் பிடித்தார். ஆனால் இந்தச் செயலையும் ரஸ்புட்டினின் முனகலையும் கண்டவர்கள் அந்தப் பெண் சிறிது தூரம் ஓடுமுன்னமே துரத்திப் பிடித்துவிட்டனர்.

வயிற்றின் அடிப்பகுதியில் ஏற்பட்ட காயத்தினூடாக இரத்தம் பெருகிக்கொண்டே இருந்தது. வலியும் அதிகரித்துக்கொண்டே போனது. அதிர்ச்சியும், அடிவயிற்றில் வலியினாலும், துடித்த ரஸ்புட்டினின் கால்கள் தள்ளாடின. கண்களும் இருட்டிக்கொண்டு வந்தன. அரை

மயக்கத்திலிருந்த ரஸ்புட்டினை அங்கிருந்தவர்கள் கைத்தாங்கலாகப் பிடித்தபடியே அவருடைய வீட்டிற்குக் கூட்டிச் சென்றனர். காயத்திலிருந்து வழியெல்லாம் இரத்தம் வழிந்துகொண்டே இருந்தது. இதனைக் கண்ட அவரின் மனைவிக்கும் மற்றவர்களுக்கும் அதிர்ச்சியால் எதுவும் பேசவே முடியவில்லை. அவரை ஒரு படுக்கையில் படுக்கவைத்து ஆடைகளைக் களைந்து காயத்திற்குக் கட்டுப்போட்டனர். அதேவேளையில் அருகேயிருந்த ஒரு மருத்துவரையும் அழைத்துவர ஆட்களையும் அனுப்பிவைத்தனர்.

ரஸ்புட்டின் தொடர்ந்து வலியால் வேதனைப்படுவதும், இடையிடையே மயக்கமாவதுமாக இருந்தார். பிள்ளைகள் வீட்டின் ஒரு புறத்தில் நின்று தந்தையைப் பார்த்துப் பார்த்து அழுதவண்ணம் நின்றிருந்தார்கள். இதனைக் கேள்விப்பட்ட அயலவர்கள் சிலரும் அங்கே வந்து குழுமிவிட்டார்கள். இவர்கள் யாரையும் கவனிக்காது ரஸ்புட்டினின் மனைவியாரும், டூனியாவும் அவர் அருகே நின்றுகொண்டு அவரை அணைத்தபடி தலையை வருடிக்கொடுத்தபடியும், அவருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிக்கொண்டும் இருந்தார்கள்.

சிறிது நேரத்தின் பின்னர் மீண்டும் யாரோ கதவில் தட்டும் சத்தம் கேட்டது. மருத்துவர் வந்துவிட்டார் என்று ஓடிச்சென்று மரியா சென்று கதவைத் திறந்தாள். அங்கே மருத்துவர் இல்லை ஆனால் மரியாவின் காதலன் என்று சொல்லிக்கொண்டு வந்த டேவிட்சன் (Davidson) நின்றுகொண்டிருந்தார். 'நான் ஒரு பத்திரிகைக்காரன். ரஸ்புட்டின் கத்தியால் குத்தப்பட்ட செய்தியை இப்போதுதான் கேள்விப்பட்டேன். அவரது நிலைமை பற்றி அறியவேண்டும். அவரது நிலைமையை அறிந்து பத்திரிகைக்கு எழுதவேண்டும். அப்படி எழுதுவதற்கான செய்திகளைத் திரட்டவே இங்கு வந்திருக்கின்றேன்' என்றார்.

மரியாவிற்கு அப்போதுதான் டேவிட்சன் மேல் சந்தேகம் வரத்தொடங்கியது. அவரின் தந்திரமும் தெரியவந்தது. தலைநகரில் இருக்கும்போது தொலைபேசியில் பேசியது, தன்னைக் காதலிப்பதுபோல் கூறிக்கொண்டு தன்னிடமிருந்து தந்தையாரின் நடமாட்டங்களை அறிந்தது, தங்களைத் தொடர்ந்து வந்து புகையிரதப் பயணத்தின்போது பேசியது, திடீரென இப்போது வந்து நிற்பது எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக் மனதிலே காட்சிகளாகத் தோன்றின. இவர் தன்னூடாக தனது தந்தையாரைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து வைத்துக்கொண்டது மட்டுமல்லாமல், அந்தக் கொலைகாரியையும் இவர்தான் அழைத்துக்கொண்டு வந்திருக்கவேண்டும் என்று சந்தேகப் பட்டாள். மரியாவிற்கு அழுகையும், ஆத்திரமுமாக வந்தது. 'நீ ஒரு ஏமாற்றுக்காரன். என்னிடம் பொய் கூறிவிட்டாய். எங்கள் எல்லோரையும் ஏமாற்றிவிட்டாய். நீ ஒரு கொலைகாரப் பாவி, எனது தந்தையாருக்குச் செய்தது எல்லாம் போதும். வெளியே போ' என்று வீறிட்டுக் கத்தியபடியே கதவை இழுத்து மூடினாள்.

நடுச்சாமம் தாண்டியபிறகுதான் மருத்துவர் ஒரு தாதியுடன் குதிரை வண்டியிலே வந்து இறங்கினார். காயத்தைப் பரிசோதித்த மருத்துவர் அவரை உடனடியாக மருத்துவசாலைக்கு எடுத்துச்சென்று சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்று கூறினார். சிறுகுடலும், இரைப்பையும் வெட்டுப்பட்டதனால் அவற்றிலிருந்து வெளியான பதார்த்தங்கள் வயிற்றுப் பாகத்தை அசுத்தப்படுத்தி கிருமிகளைப் பரவச் செய்து தொற்றுநோயை உண்டுபண்ணிவிடும் என்றும் விளக்கினார்.

அதிர்ச்சியும் கவலையும் நிறைந்திருந்த அந்த வீட்டில் அன்றிரவு யாருமே நித்திரை கொள்ளவில்லை. மருத்துவரின் கூற்றுப்படி அதிகாலையில் வலிமை மிக்க குதிரைகள் கொண்ட இன்னொரு

வண்டியைத் தயார் செய்து அதிலே நோயாளியை ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றனர். ஜூலை மாதக்கடைசிவரை ரஸ்புட்டின் ஆபத்தான நிலையிலேதான் வைத்தியசாலையில் இருந்தார்.

இந்த இரு மாதங்களுக்குள் அயல் நாடுகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. தமது பிரதமர் கொலை செய்யப்பட்டதை அடுத்து ஒஸ்ரியா சேபியாவிற்கு இறுதி எச்சரிக்கை ஒன்றை விடுத்திருந்தது. இதனையறிந்த .பிரான்ஸின் தலைவர் றேமண்ட் பொயின்கேர் (Raymond Poincare) ஒஸ்ரியாவிற்கு சேபியாவைத் தாக்கவேண்டாம் என்று வற்புறுத்துமாறு இங்கிலாந்திற்கும் நேச நாடுகளுக்கும் ஓர் அழைப்பையும் விடுத்தார். முக்கியமான நாடுகள் எல்லாம் சேர்ந்து ஒரு மகாநாடு கூடி ஒஸ்ரியாவிடம் சேபியாவைத் தாக்கவேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்தன. ஆனால் ஒஸ்ரியாவோ தமது நாட்டு விவகாரத்தில் வெளிநாடுகள் தலையிடுவதை அடியோடு எதிர்த்தது. அத்தோடு மட்டும் நின்றுவிடாமல் 1914 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி ஒஸ்ரியா சேபியாவின்மேல் கடுமையான போரை ஆரம்பித்தது. போர் ஆரம்பமானதும் ஜேர்மன் தலைவர் ரஷ்யாவை ஒஸ்ரியாவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவருமாறு வற்புறுத்திக்கொண்டே இருந்தார்.

இதேவேளையில் ரஷ்யப் படைகள் ஒஸ்ரியாவின் கரையை நோக்கி நகர்த்தப்பட்டுக் கொண்டிருந்தன. இராணுவத் தளபதிகள் சிறிது காலத்திற்குள்ளேயே ரஷ்யாவின் மேற்குக் கரை முழுவதும் தமது படைகளை நகர்த்திவிட்டனர். 31 ஆம் திகதி ஜேர்மன் அரசாங்கம் தமது நாட்டின் கரையோரங்களுக்கு ரஷ்யப் படைகளை நகர்த்தாமல் நிறுத்திவிடும்படியும் அப்படி நகர்த்தினால் பேராபத்துக்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்ற கடுமையான எச்சரிக்கையை ஒன்றையும் விடுத்திருந்தது. முன்னர் எதிர்பார்த்திருந்தபடியே மறு நாள் மாலை 7

மணிக்கு ஜேர்மன் அரசாங்கம் ரஷ்யாவின்மேல் ஒரு பயங்கரமான போரைக் கட்டவிழ்த்து விட்டது.

டூனியா ரஸ்புட்டின் மருத்துவ சாலையில் இருந்தபோது எப்போதும் ரஸ்புட்டினுக்காகப் பிரார்த்திப்பது வழக்கம். அன்னை மேரிக்கு சில பொருட்களைப் படைத்துவிட்டு அவர் முன்னால் தனது முழங்காலில் நின்றுகொண்டு பிரார்த்தித்துக் கொண்டிருந்த வேளையில் ஒருநாள் மேரியின் கண்ணருகே பனித்துளி படர்ந்திருப்பதை அவதானித்தார். ஒரு துணியை எடுத்து அதனைத் துடைத்துவிட்டார். மீண்டும் தனது பிரார்த்தனையை முடித்துக்கொண்டு தலையை நிமிர்த்தியபோது மீண்டும் அன்னை மேரியின் திருவுருவச் சிலையிலிருந்து கண்ணீர் வடிவதைக் கண்டார். அதனைத் துடைக்கத் துடைக்க கண்ணீர் மீண்டும் மீண்டும் வடிந்துகொண்டே இருந்தது. ஆச்சரியமடைந்த டூனியா ரஸ்புட்டினின் மனைவியையும் மற்றவர்களையும் அழைத்துக் காட்டினார். அவர்களுக்குக் காரணம் புரியவில்லை. ஆனால் இதனை ரஸ்புட்டினிடம் கூறியபோது 'ரஷ்ய மக்களுக்காக அன்னை மேரி கண்ணீர் விடுகின்றார்' என்று ஒரு வியாக்கியானத்தைக் கூறினார்.

ரஸ்புட்டினும் சிறிது சிறிதாகக் குணமடைந்துகொண்டே வந்தார். அவர் குணமடைந்துவிடுவார் என்ற நம்பிக்கையில் மூத்த மகள் மரியாவை அவருக்குத் துணையாக விட்டுவிட்டு அவரது மனைவியும், மற்றைய பிள்ளைகளும் தமது கிராமத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தனர்.

◆◆



19

பக்தியா? போலியா?

மீண்டும் தலைநகர் வந்துசேர்ந்த ரஸ்புட்டினுக்கோ அந்தப் பெண் சினோயா குசிவாவினால் அடிவயிற்லே கத்தியால் குத்திய காயம் இன்னமும் முழுதாக ஆறவேயில்லை. இதேவேளையில் போர்க் கைதிகளாக எதிரிகளிடம் அகப்பட்டுள்ளோர்களின் பெற்றோர்களும், சகோதரர்களும், மனைவி மக்கள் பலரும் ரஸ்புட்டினுடைய உதவியை நாடிவந்தனர். ஆனால் ரஸ்புட்டினுக்கு முன்னர்போல இப்போது எதுவும் செய்யமுடியவில்லை. அரசாங்கத்திலுள்ளோர் பலர் இப்போது ரஸ்புட்டினை அலட்சியம் செய்யத் தொடங்கினர். தான் தனிமையில் விடப்பட்டதாக உணர்ந்தார். ரஸ்புட்டின் முழுநேரமும் மதுபானத்துடனேயே நேரத்தைக் கழிக்க ஆரம்பித்தார். வேதனையைக் குறைக்கச் சிறிது குடித்தால் அதனால் ஏற்படும் வேதனையைக் குறைக்க மேலும் மேலும் குடிக்கவேண்டி இருந்தது.

ஒவ்வொரு இரவும் குடிபோதையில் இருப்பதும், புகழ் பெற்ற நடிகைகள், பாடகிகள், விலைமாதர்களோடு பொழுதைக் கழிப்பதுமாவே இருந்தார். இரவில் அலுப்புத் தீர்ந்தவுடன் சாயந்தரம் எழுந்து தன்னைத்

தாயார்படுத்திக்கொண்டு அலெக்ஸாண்டர் மாளிகைக்கு அரசியாருக்கு அறிவுரை சொல்லப் புறப்பட்டுவிடுவார்.

1915 ஆம் ஆண்டு மொஸ்கோ (Moscow) வில் உள்ள கிறிம்லின் (Kremlin's) தேவாலயத்தில் பிரார்த்தனை செய்வதாகக் கூறிவிட்டுச் சென்றார். அன்றிரவு ஒரு பிரபல்யமான விடுதியிலே பல ஆங்கில விருந்தினர்கள் அமர்ந்திருந்து இசை நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதன் அருகேயிருந்த தனிப்பட்ட அறை ஒன்றினுள்ளேயிருந்து ஏதோ பயங்கர அமளி துமளிகள் நடப்பதுபோல் இருந்தது. ஒரு பெண்ணின் பயங்கரமான கூச்சலும், யாரோ ஓர் ஆண் அவரைத் துரத்துவதுபோலவும், அதனைத் தொடர்ந்து கண்ணாடிகள் உடைபடுவதும் கதவுகளில் பலமாக யாரோ மோதுவதுபோலவும் இருந்தது. அங்கு வேலை செய்துகொண்டிருந்த பணியாளர்கள் திடீரென்று அந்த அறையை நோக்கி மேலே ஓடினார்கள். விடுதி நிர்வாகி உடனே பொலிஸ் காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்தார். ஆனால் அங்கு குழப்பமும், அமளிகளும் தொடர்ந்துகொண்டே இருந்தன.

இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் காரணம் மிதமிஞ்சிய குடிவெறியில் இருந்த ரஸ்புட்டின்தான். மது தலைக்கேறியதும் அங்கே தன்னுடன் இருந்த ஒரு பெண்ணை பலவந்தமாக தனது சிற்றின்ப வேட்கைக்கு ஆளாக்க முற்பட்டிருந்தார். பொலிஸ் காவலர்களாலோ அல்லது விடுதியின் நிர்வாகிகளாலோ ரஸ்புட்டினை அங்கிருந்து அகற்றவே முடியவில்லை. திடீரென்று தனது கால்சட்டையைக் கழற்றி அங்கிருந்தோர் எல்லோரும் வியக்கத்தக்க வகையில் திறந்து காட்டினார். எல்லோரையும் பார்த்து உரத்துக் கத்தினார். 'அரசர் முன்னிலையிலும் நான் இப்படித்தான் நடப்பேன்' என்று உரக்கக் கத்தினார். 'எனது பழைய பெண்மணி'யிடமும் (அரசியாரிடமும்) இப்படித்தான் நடப்பேன் என்றும் கத்தினார்.

பொலிஸ் அதிகாரிகள் அவரை ஒருமாதிரி வெளியே இழுத்துக் கொண்டு சென்றார்கள். அப்போதுகூட தான் செய்த செயலுக்கு வருந்தாதவராக உரத்து உறுமிக்கொண்டும், ஏனையோர் மீது வெறுப்பும் கோபமும் கொண்டவராகவே காணப்பட்டார்.

உதவி உள்நாட்டு அமைச்சர் ஜெனரல் விலடிமர் டுகன்கொவிஸ்கி (Gen.Vladimir Dzhunkovsky) அங்கு நடந்தவை பற்றிய உண்மையான அறிக்கையொன்றை அரசரிடம் சமர்ப்பித்தார். இதனைக்கண்ட அரசர் மிகுந்த கோபத்துக்குள்ளானார். உடனே ரஸ்புட்டினை அழைத்து விசாரித்தார். அதற்கு ரஸ்புட்டின் தான் ஒரு சாதாரணக் குடியானவன்போல் அன்று தெரியாமல் சற்று அதிமாகக் குடித்துவிட்டேன். ஆனால் தனது ஆடைகளைக்கழற்றி அம்மணமாக நின்றதையோ, அரசரையும் அரசியாரையும் பற்றி இழிவாகப் பேசியதையோ அடியோடு மறுத்துவிட்டார். ரஸ்புட்டின் கூறியதற்கு எதிரிடையாகவே சாட்சியங்கள் இருந்தன. கோபம் கொண்ட பேரரசர் ரஸ்புட்டினை தலைநகரைவிட்டு வெளியே போகும்படி பணித்தார். அரசரின் கட்டளைப்படி தனது வீட்டைவிட்டு வெளியேறும்போது அங்கிருந்த பொலிஸ் அதிகாரியிடம் 'உங்களுடைய விலடிமர் டுகன்கொவிஸ்கி முடிந்தார்' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அங்கு நடந்தவைகளைப் பற்றிய அறிக்கையை வாசித்த அரசியார் ரஸ்புட்டின் ஒருவேளை இனிமேல் திரும்பவும் தலைநகருக்கு வரமுடியாமல் போகவும் கூடும் என எண்ணினார். இளவரசனுக்கு ஏதும் நடந்தால் என்ன செய்வது என்று யோசித்தார். அவர் ரஸ்புட்டின் செய்த தவறுகளைப் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் உதவி உள்நாட்டு அமைச்சரை உடனடியாக வேலையிலிருந்து நீக்கும்படி அரசரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளையில் அரசருடைய ஒன்றுவிட்ட சகோதரன் சீமான் டிமிற்றி பவலோவிச் (Grand Duke Dmitri Pavlovich) அவர்களும் அந்த அறிக்கையை வாசித்துவிட்டார் என்றும் கேள்விப்பட்டார். திடீரென்று அரசருக்கு ஒரு கடிதம் எழுதினார்:

'எனது எதிரி விலடிமர் டுகன்கொவிஸ்கி அந்த இழிவான, அசிங்கமான அறிக்கையை உங்கள் சகோதரர் டிமிற்றிக்குக் காட்டினாராம். எமது நண்பர் இதனால் தண்டனைக்கு உள்ளானால் நாமும், நமது இராச்சியமும் நிச்சயம் தண்டனை பெறும். நான் இப்படியானவற்றைக் கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டேன். நாங்கள் வணங்கும் ஒருவர்மீது இப்படி அபாண்டமான பழிகளைச் சுமத்துவது மிகவும் கொடுமை. அவர்களை உங்களுக்குப் பயப்படக்கூடிய வகையில் நீங்கள் நடத்தவேண்டும். அல்லாதுவிட்டால் அவர்கள் எங்கள் தலைமேல்தான் ஏறி அமர்ந்து கொள்வார்கள்' என்று எழுதியிருந்தார். இவை நடந்து சில காலத்தின் பின்னர் உதவி உள்நாட்டு அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

* * * * *

ரஸ்புட்டினின் வெளிப்படையான குணமாக்குத் திறனைப்பற்றி பல ஆண்டுகளாகப் பலரும் பலவாகப் பேசிக்கொண்டனர். ரஸ்புட்டினின் வாழ்க்கையிலே இந்த அதிசயமான சிகிச்சை முக்கிய பங்கை வகித்தது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் இந்த அதிசயத்தின் இரகசியம் என்னவாக இருக்கலாம்? ரஷ்யாவின் எங்கோ ஒரு மூலையிலே இருக்கின்ற கிராமப்புறத்திலே பிறந்த சாதாரண விவசாயி, ரஷ்யாவின் முடிக்குரிய இளவரசனின் துன்பத்தை பல மருத்துவ முக்கியத்துவங்களின் முன்னிலையில் எப்படிக் குறைத்தார் என்பதுதான் பலருக்கும் விளங்காத ஒன்றாக இருந்தது.

சிலர் ரஸ்புட்டினின் பிரார்த்தனைகளால் நோய் குணமாவ தென்பதை முற்றாக நிராகரித்தனர். அதிசயமான சிகிச்சை என்பதெல் லாம் உண்மையல்ல. இந்த அதிசயமான சிகிச்சை என்பதெல்லாம் எதிர்பாராது நடக்கின்ற ஒத்த நிகழ்வுகள்தான். விபத்துக்கள் ஏற்படும்போது இரத்தக் குழாய்களில் ஏற்படும் அழுத்தம் உடல் ஆறுதலடையும்போது மீண்டும் அமைதியடையும். இளவரசனின் உடலிலும் இதுதான் நடந்திருக்கின்றது.

இது ஓர் இரகசியமான மருத்துவச் சிகிச்சை எனவும் சில டாக்டர்கள் பேசிக்கொண்டனர். எண்ணற்ற காரணங்கள் ரஸ்புட்டினின் அதிசயமான சிகிச்சை முறைக்குக் கூறப்பட்டன. ஓரிரு முறைகள்தான் ரஸ்புட்டின் இளவரசனைத் தனது சக்தியால் காப்பாற்றினார். மற்றைய நேரங்களிலெல்லாம் எதிர்பாராது நடக்கின்ற ஒத்த நிகழ்வுகள்தான் (Coincidence). ஆனால் இந்தத் தந்திரத்தை எட்டு வருடங்களாக செய்திருக்க முடியாது. அதுவுமல்லாமல் ரஸ்புட்டின் இளவரசனின் வியாதியைத் தணிப்பதில் ஒருநாளும் தவறியதில்லை. ஒத்த நிகழ்வுகள் ரஸ்புட்டினின் சிகிச்சை முறையில் பெருமளவு பங்கினை வகித்திருந்த போதிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அப்படி நடந்திருக்கின்றது என்பதனை ஏற்றுக்கொள்ளவும் முடியாதிருந்தது.

ரஸ்புட்டின் திபெத் நாட்டு மூலிகை மருத்துவருடன் நெருங்கிய நட்புடையவர். அவரிடமிருந்து பெற்ற ஒருவகையான மஞ்சள் தூளை அவரது சினேகிதி அனா விருபோவாவும் அவ்வப்போது இளவரசருக்குப் பூசிவிடுவார். உயிருக்கு ஆபத்து விளைவிக்காத இதனைப் பூசியவுடன் இளவரசர் நோயாளியாகிவிடுவார். அந்த மருந்தின் வேலை முடியும் தறுவாயில்தான் ரஸ்புட்டின் அழைக்கப்படுவார். அவர் வந்து நோயைக் கட்டுப்படுத்துவதுபோல் நடிப்பார். குழந்தையின் நோயைக் குணமாக்குகிறார் என்கின்ற ஒரே காரணத்திற்காக அவருக்கு

அரண்மனையிலே அசைக்கமுடியாத செல்வாக்கு இருந்தது. இந்த இரகசிய நாடகத்தை ரஸ்புட்டினும், அனா விருபோவாவும் சேர்ந்து யாருக்கும் தெரியாமல் பல வருடங்களாகச் செய்துவருகிறார்கள் என்று சில மருத்துவர்கள் தமது கருத்தைத் தெரிவித்தனர்.

ஆனால் அனா விருபோவா பேரரசியாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். ரஸ்புட்டினைச் சந்திப்பதற்கு முன்னரே அரசியாருக்கு அறிமுகமானவர். எப்போதும் அரசியாருக்குத்தான் விசுவாசமாக இருப்பவர். இதனால் ரஸ்புட்டினின் அதிசயமான சிகிச்சை முறைக்குத் துணை போயிருக்கமாட்டார் என்பதும் உண்மை.

ரஸ்புட்டின் மற்றவர்களை மயக்கி உறக்கத்தில் வைத்திருக்கும் கலையையும் (Hypnosis) பயின்றவர் என்றும் கூறப்பட்டது. ஆனால் அந்தக்கலையைப் பயிற்றுவித்த ஆசிரியர் தலைநகரிலிருந்து ஆரம்பத்திலேயே விரட்டியடிக்கப்பட்டுவிட்டார். இதனால் ரஸ்புட்டின் அந்தக்கலையை முழுவதாகக் கற்றிருக்க வாய்ப்புக்கள் இருந்திருக்க வில்லை. இந்த முறையைப் பாவித்து அவர் நோயுற்றிருக்கும் இளவரசரை மயக்கித் தூக்கத்தில் வைத்திருந்து குருதிப்பெருக்கைத் தடுத்திருக்கவும் கூடும் என்றும் ஒரு சாரார் சந்தேகப்பட்டனர்.

அடிக்கடி மயக்கமாகும் இளவரசனுக்கு இத்தந்திரத்தைப் பாவித்திருந்தால் அது ஆபத்தை விளைவித்திருக்கவும் கூடும். அப்படிச் செய்திருந்தால் யாராவது அதனைக் கண்டிருப்பார்கள். ஆனால் அப்படிச் செய்ததிற்கான சாட்சியங்கள் அரிதாகவே காணப்பட்டன.

ரஸ்புட்டினுக்கு அவரது பரம்பரையினரிடமிருந்து சில அதீத சக்திகள் கிடைத்திருக்கலாம். புராதன நம்பிக்கைகளைக் கூடைப் பிடிக்கும் தேவாலயங்கள் தமது புராதன பரிகார முறைகளிலும், தெய்வீகமான சக்திகளிலும் அதிக நம்பிக்கை உடையவர்கள். இந்த

வழிகளிலே இரத்த ஓட்டத்தை நிறுத்தும் சக்தி சிலருக்கு இருந்ததாக வும் சரித்திரம் உண்டு. சாதாரண மனிதரால்கூட இரத்தப்பெருக்கைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால் ரஸ்புட்டின் இதனை மறைத்து தனக்கு அன்னை மேரியின் அருளால்தான் இச்சக்தி கிடைத்தது எனவும் கூறியிருக்கலாம்.

எப்படியிருந்தபோதும் ரஸ்புட்டினுக்கு மற்றையவர்களைவிட சில அதீத சக்திகள் இருந்திருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டுமென ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இதனை ரஷ்ய தேவாலையங்கள் ஒத்துக்கொள்ளாத போதிலும் இந்த அதிசய சிகிச்சை முறைகள் உண்மையானவை என்றே போதிக்கின்றன. ஆண்டவன் அனுக்கிரகத்தினால் சிலர் சில அதீத சக்திகளைப் பெற்றிருக்கின்றார் கள். அது ரஸ்புட்டினுக்கும் கிடைத்திருக்கின்றது. ஆனால் அதனை ரஸ்புட்டின் தூய்மையான முறையில் பாவித்தாரா என்பதுதான் கேள்விக்குறி.

* * * * *

போர் ஆரம்பித்த சில மாதங்களில் ரஷ்யப் படைகள் சகல முனைகளிலும் முன்னேறிக்கொண்டே இருந்தன. நாட்டிலே இருந்த வேலைநிறுத்தங்கள் முடிவுற்றன. தனது இருபத்தைந்து வருட் கால அரசாட்சியிலே என்றுமே காணாத நாட்டு மக்களின் ஆதரவை அவர் காணக்கூடியதாகவும் இருந்தது. ரஷ்யாவின் பேரரசர் நிக்கலஸ் (Nicholas II) தனது யுத்த ஆலோசனைக் குழுவின் கூற்றுப்படி ஜேர்மனுடன் யுத்ததை ஆரம்பித்தது சரியான ஒரு முடிவு என்றே எண்ணினார்.

நாட்டிலுள்ள ஆண்கள் தேசிய சேவைக்காக இராணுவத்தில் பெருந்தொகையாக வந்து சேர்ந்தனர். ரஷ்ய தேசியக்கொடி நாட்டின்

மூலைமுடுக்கெல்லாம் பறந்துகொண்டிருந்தது. ரஷ்யாவின் நேச நாடுகளான இங்கிலாந்து, ஃபிரான்ஸ், பெல்ஜியத்தின் தேசிய கீதங்களும் சகல இடங்களிலும் இசைக்கப்பட்டன. செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி ரஷ்ய இராணுவம் ஜேர்மனியில் லாம்பேக் (Lemberg) என்ற இடத்தில் பெரும் வெற்றி அடைந்தது.

ரஷ்யாவிற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய ஜேர்மன் நாட்டின்மேல் ரஷ்ய நாட்டுமக்களுக்கு வெறுப்பு ஏற்பட ஆரம்பித்தது. ஜேர்மன் நாட்டுடன் தொடர்புடைய எதனைக் கண்டாலும் அவர்களுக்கு வேப்பெண்ணெயைக் குடித்ததுபோல் இருந்தது. ரஷ்யாவின் தலைநகரான சென்ட் பீட்டர்ஸ்பர்க் (St Petersburg) இன் பெயரிலே அதிகளவு ஜேர்மன் வாடை அடிப்பதாக உணர்ந்தார்கள். அதனால் அதன் பெயரை பீற்றோகிராட் (Petrograd) என்று அரசினர் மாற்றி வைத்தனர்.

நாட்டில் மூண்டுள்ள போரினால் மக்கள் அரசரின் மேலுள்ள தமது அழுங்குப்பிடியை சிறிது தளர்த்தினார்கள். இதனை அறியாத அரசர் தனது செல்வாக்கு மேலும் மேலும் பெருகிவருவதாக ஒரு தப்புக்கணக்கைப் போட்டுக்கொண்டார். போரில் வெற்றி கொண்டால் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கலாம், தனது புகழ் உலகுள்ளவரை நீடிக்கும், தனக்குப் பின் இராச்சியத்தை தனது இளவரசனிடம் எதுவித தயக்கமுமின்றி ஒப்படைக்கலாம் என்றும் எண்ணி மகிழ்ந்தார்.

போரைச் சாக்காக வைத்து நாட்டிலே பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. நாட்டில் மதுபானங்கள் விற்பது தடைசெய்யப்பட்டது. ஆனால் அரச பரம்பரையினருக்கும், வசதிகள் படைத்தோருக்கும் மதுபானங்களைப் பெற்றுக் கொள்வதில் எதுவித சிரமங்களும் இருக்கவில்லை.

போர் தொடர்ந்து சில மாதங்களாக நடைபெற்றுக் கொண்டே இருந்தது. அது 1915 ஆம் ஆண்டின் நடுப்பகுதியை எட்டிவிட்டது. ஆரம்பத்தில் பெரு வெற்றிகளை ஈட்டிக்கொண்டிருந்த ரஷ்யப் படைகளுக்கு இப்போது தோல்விமேல் தோல்விகளாக வந்துகொண்டே இருந்தன. சிறிது காலத்திற்குள் ஜேர்மன் படை களிடமிருந்து கைப்பற்றிய லாம்பேக் (Lemberg) நகரம் அவர்களிடமே திரும்பச் சென்றுவிட்டது.

போதிய யுத்த ஆயுதங்கள் இல்லாமையாலும், படைகளின் வலுவின்மையாலும் ஆகஸ்ட் ஏழாம் திகதி ரஷ்யப்படைகள் போலாந்தின் வோசோ (Warsaw) நகரில் இருந்து வெளியேற்றப்பட்டன. அடுத்த மாத முடிவிற்குள்ளேயே ஜேர்மனியும், ஒஸ்ரியாவும் சேர்ந்து போலாந்தையும் கைப்பற்றிவிட்டன. போலாந்திலிருந்து இராணுவம் வெளியேறியபோது ரஷ்யப் படைகள் அங்கிருந்த யூத இனத்தவர் களையும் அழைத்துக்கொண்டு ரஷ்யாவிற்கு வந்தார்கள். அவர்களை ரஷ்யாவின் பல பாகங்களிலும் சென்று குடியேறும்படி பிரித்துப் பிரித்து அனுப்பினர். இதற்குக் காரணம் அவர்கள் ஜேர்மனிக்குச் சார்பாக இருக்கிறார்கள் என்ற ஒரே காரணம்தான்.

அவர்கள் ரஷ்யாவில் வந்து குடியேறியதும் எல்லோரும் அவர்களை ஜேர்மனியின் ஒற்றர்கள் என்ற கண்ணோடு பார்த்தார்கள். இருக்க இடமும் பசித்த வயிற்றுக்கு உணவும் இல்லாதிருந்த யூத இன மக்களைச் சில கும்பல்கள் சேர்ந்து காணுமிடமெல்லாம் தாக்கவும் தொடங்கினர். ரஸ்புட்டின் இதனைக் கண்டு இவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று எண்ணி அவர்களுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கினார். இந்தச் செயல் ரஸ்புட்டினின்மேல் பொதுமக்களுக்கு மேலும் மேலும் அதிக கோபத்தைத் தூண்டிய வண்ணமே இருந்தது.

அரசாங்கத்தின் உதவியுடன் யூத மக்களின் பிள்ளைகள் படிப்பதற்காக பாடசாலைகளில் அனுமதிக்கவேண்டும் என்கிற சட்டத்தையும் அரசபரம்பரை ஊடாக அமுல்படுத்தினார். இதேவேளையில் இவர்களுடன் வீட்டில் வேலைகள் செய்வதற்கென வந்திருந்த டூனியாவின் தாயாருக்குப் பீடித்திருந்த நோய் முற்றிவிட்டதாகவும், அவர் இறுதித் தடவையாக தனது மகள் டூனியாவைப் பார்க்க விரும்புவதாக கிராமத்திலிருந்து செய்தி வந்தது. அதனால் மரணப்படுக்கையில் இருக்கும் தன் தாயாரைப் பார்க்க டூனியா உடனே புறப்பட்டுப் போய்விட்டார். மனமும் உடலும் வேதனையுற்றபோது அவற்றிற்கு வேண்டிய பரிகாரங்களைச் செய்து ரஸ்புட்டினைப் பராமரித்துக்கொண்டிருந்த டூனியா சென்றதும் ரஸ்புட்டின் தனது ஆசைகளையும், தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக நாடோடிகளின் இல்லத்திற்கும், அவ்வப்போது கபரே நடனம் ஆடுபவர்களின் இருப்பிடங்களையும் தேடிச்சென்றார்.

தாயாரைப் பார்க்கச் சென்ற டூனியா தாயாரின் மரணச் சடங்குகளையும் முடித்துக்கொண்டுதான் தலைநகருக்குத் திரும்பி வந்தார். அதுவரை வீட்டுவேலைகள் செய்வதற்கென அங்கிருந்த கற்யா (Katya) ரஸ்புட்டினின் கிராம வீட்டிற்குத் திரும்பிச் சென்றுவிட்டார். இப்படியிருக்கும்போது ஒரு நாள் ஒரு துயரமான செய்தி வந்தது. அரண்மனையில் அரசியாருக்குத் துணையாக இருந்தவரும் ரஸ்புட்டினின் மிக நெருங்கியவருமான அனா விருபோவா பிரயாணம் செய்த புகையிரதம் பனிமழையின்போது புகையிரத நிலையத்தில் நின்றுகொண்டிருந்த இன்னொரு புகையிரதத்துடன் மோதித் தடம்புரண்டது. அவருக்குத் தலையில் பலத்த அடி பட்டுவிட்டது. கால்களும் நொறுங்கிவிட்டன. பொதுமக்களோடு மக்களாக அங்கே அடிபட்டு இறக்கப்போகுந் தறுவாயிலிருந்த அவரை அரசியாரின் தோழி என்று அறிந்தவுடன் அனைவரும் ஓடிச்சென்று வெளியே எடுத்து

வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அல்லாது விட்டால் அந்த இடத்திலேயே அவர் இறந்திருப்பார்.

ரஸ்புட்டினுக்கு அரசர் அடுத்தடுத்துத் தோல்விகளைத் தழுவிக் கொள்வதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தனது இருப்பிடத் திற்கு வந்து தன்னைத் தாக்கியிருந்தபோதும் அவற்றையெல்லாம் மறந்து படைகளுக்குப் பொறுப்பாக இருந்த பிரபு நிக்கொலவிச்சுக்கு ஒரு செய்தி அனுப்பினார். அதில் 'உங்கள் படைகளின் தோல்வியை நான் அறிவேன். இதற்கு நான் செய்யவேண்டியது ஒன்று இருக்கிறது. எனது உடல் நலமில்லாமல் இருக்கின்ற போதிலும் நான் போர் முனைக்கு வந்து அவர்களை ஆசீர்வதித்து அவர்களுக்காகப் பிரார்த்திக்க விரும்புகிறேன். இதற்கான உங்கள் பதிலை ஆவலுடன் காத்துக்கொண்டு இருக்கிறேன்' என்று எழுதியிருந்தார்.

அதற்கு பிரபு நிக்கொலவிச் இடமிருந்து ஒரேயொரு பதில் மட்டும்தான் வந்தது. அதிலே 'நீர் இங்கே தாராளமாக வரலாம், ஆனால் வந்தவுடன் இராணுவ வீரர்களை ஆசீர்வதிக்க விடமாட்டேன். நீர் வந்தவுடன் நான் உம்மைத் தூக்கில் போடக் காத்திருக்கிறேன்' என்று பதில் வந்தது.

◆◆



20

வெற்றியும் தோல்வியும்

பிரபு நிக்கொலவிச் இடமிருந்து பதில் வந்த செய்தி அரசியாரின் காதுகளுக்கு எட்டிவிட்டது. அவர் இப்போதும் ரஸ்புட்டினுடைய ஆலோசனைகளைக் கேட்டு அதனை அரசருக்குக் கூறிக்கொண்டே இருப்பவர். அவர் உடனே தன் கணவனுக்கு ஓர் அவசரக் கடிதம் எழுதினார்.

'உங்கள் நண்பர் இரவும் பகலும் உங்களுக்காகப் பிரார்த்திக் கின்றார். அவரது பிரார்த்தனைகள் ஆண்டவனின் காதுகளில் நிச்சயம் சென்று சேரும். அவை உங்களது முடிக்கு பல மகிழ்ச்சியான செய்தி களைக் கொண்டு வரும்' என்று அவர் கூறினார். 'நான் அவர் கூற்றை நம்புகிறேன்' என்று எழுதிவிட்டு முடிவில் 'பிரபு நிக்கொலவிச் அவர்களை விரைவாக வேறு பதவிக்கு மாற்றவும். இதனால் எதுவித சலனங்களும் ஏற்படக்கூடாது' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

கடிதத்தைக் கண்டவுடனேயே பிரபு நிக்கொலவிச் அவர்களை அவர் படைகளை முன்னின்று வழிநடத்தும் முறைகள் சரியில்லை என்று காரணம் காட்டி அரசர் அவரது பதவியை மாற்றிவிட்டார்.

படைகளிடமும், பொதுமக்களிடமும் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த பிரபு நிக்கொலவிச் அவர்களை அரசர் பதவி மாற்றியதால் மக்கள் அரசர்மேல் மேலும் அதிருப்தியும் கோபமும் அடைந்தார்கள். அரச பரம்பரையினர்மேல் கொண்டிருந்த கோபம் போரினால் தணிந்திருந்த போதிலும் இச்சம்பவத்தால் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது.

சில நாட்களின் பின்னர். அரசியாரைத் தலைநகரிலிருந்து அரசகருமங்களை ஆற்றும்படி விட்டுவிட்டு பேரரசர் தலைநகரிலிருந்து பல நூறு மைல்களுக்கப்பால் இருந்த இராணுவ தலைமைக் காரியாலத்திற்கு வந்துசேர்ந்து படைகளின் தலைமைப் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டார். போரினால் சோர்ந்துவிட்ட இராணுவ வீரர்கள் தன்னைக்கண்டால் சுறுசுறுப்பாக இயங்குவார்கள் என்ற நம்பிக்கையில் அங்கிருந்து இராணுவத்தினரை வழிகாட்டிக்கொண்டிருந்தார். இருந்தபோதிலும் ரஷ்யப் படைகள் பலவழிகளிலும் தோல்விகளையே சந்தித்துக்கொண்டிருந்தன.

பதினெட்டு மாதங்களுக்குள் இராச்சியம் நிலைதளர்ந்து விழுந்துவிடும் அளவிற்கு வந்துவிட்டது. இதற்குக் காரணம் அரண்மனையிலிருந்து வழிகாட்டும் ரஸ்புட்டின்தான் என்று மக்கள் எண்ணி மேலும் ஆத்திரம் கொண்டனர். அரசியாரைப் பொறுத்தவரை ரஸ்புட்டின் இல்லாவிட்டால் தமது ஒரே வாரிசான இளவரசனைக் காப்பாற்ற முடியாது என்ற ஒரே எண்ணமே அவர் மனதை எந்நேரமும் நிறைத்திருந்தது. அதேவேளையில் தற்போது அரசரும் அங்கில்லாத நிலையில் அரசகருமங்களை ஆற்றுவதற்கும் ரஸ்புட்டினின் ஆலோசனை களைத்தான் அவர் நம்பியிருந்தார்.

மக்களில் பெரும்பான்மையோர் தான் அரண்மனையில் வாசம் செய்துகொண்டும், அரசியாரையும் அரசரையும் அழுங்குப்பிடியாக தன்வசப்படுத்தி வைத்திருப்பதையும் சிறிதளவும் விரும்பவில்லை.

என்பதை நன்றாக அறிந்திருந்தும் ரஸ்புட்டின் அவற்றிலிருந்து தன்னை விலக்கிக்கொள்ள எதுவித பிரயத்தனங்களும் எடுக்கவில்லை. ஒரு சுயநலவாதியாக தனது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அரண்மனையில் தனது தொடர்ச்சியான நிலைப்பாட்டிலுமே அவர் கண்ணாயிருந்தார்.

அரசர் தனது ஆலோசகர்களோடும், தளபதிகளோடும்தான் கூடிய நேரத்தைச் செலவிட்டார். அதனால் அரசியாரோ ரஸ்புட்டினுடனேதான் கூடிய நேரத்தைச் செலவிட்டார். அரசியல் அனுபவமில்லாத ரஸ்புட்டின் தான் இராச்சியத்தைக் காப்பாற்றுகிறேன் என்று கூறிக்கொண்டு தனது அறிவுக்குத் தெரிந்தவற்றை எல்லாம் எடுத்துக் கூறினார். ரஸ்புட்டின் சொல்வதையெல்லாம் பொன் வாக்காகவே எண்ணி அவற்றை அரசருக்குத் தெரியப்படுத்திக்கொண்டேயிருந்தார். சில வேளைகளில் மனக்குழப்பத்தில் இருக்கும் அரசரும் என்ன செய்வதென்று அறியாத நிலையில் ரஸ்புட்டின் கூறுவதைக் கேட்டு அவற்றை அமுல்படுத்திக் கொண்டே இருந்தார். இது நாட்டு மக்களுக்கும், அரச எதிரிகளுக்கும் மேலும் மேலும் கடுங்கோபத்தை உண்டுபண்ணியது.

ரஸ்புட்டின் அடிக்கடி கூறும் அறிவுரைகளை தான் அடுத்தடுத்து அரசருக்கு எழுதும் கடிதங்களில் அப்படியே எடுத்துரைப்பார்: 'எமது நண்பர் கூறுவதை நன்றாக உற்று அவதானியுங்கள், அவரை நம்புங்கள். அவர் இதயத்தில் உங்களின் நலனும், ரஷ்யாவின் விடிவும்தான் நிரம்பியிருக்கின்றன. ஆண்டவன்தான் அவரை எம்மிடம் அனுப்பி யிருக்கின்றார் என்பது மட்டுமல்ல, அவர் கூறுவதை நாங்கள் அவதானமாகக் கேட்டு அதன்படி நடக்கவேண்டும். அவரது அறிவுரைகள் அத்தனையும் அருமையானவையே' என்று எழுதியிருந்தார்.

இதற்கு அடுத்தநாள் இன்னொரு கடிதம் வந்திருந்தது. அதிலே: 'எமது நண்பரின் வாசகங்கள் என் மனதை வாட்டிக்கொண்டிருக்கின்றன. அவற்றை நாம் நிறைவேற்றாது விடுவோமானால் நாமும் எமது நாடும் அழிவுப்பாதையில் போவதைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாது. அவர் தீர்க்கமாக ஆலோசித்து எடுக்கும் முடிவுகள் அத்தனையும் முக்கியமானவை. ரஸ்புட்டின் உங்களை சேபியாவின் அரசருக்கு உடனே ஒது தந்தி அனுப்புமாறு மன்றாடிக் கேட்டுக்கொள்கிறார். இல்லையேல் பல்கேரியா நாட்டுப்படைகள் அவர்களை அழித்துவிடுவார் கள். நான் அவருக்குத் தந்தி கொடுப்பதற்கான பத்திரத்தையும் இத்துடன் இணைத்துள்ளேன். நீங்கள் எழுதுவது சுருக்கமாகவும் அர்த்தமுள்ள தாகவும் அமைய வேண்டும்.' என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்தச் செய்தி அரசாங்க அமைச்சர்களையும், இராணுவத்தினரையும் விசாரப்படுத்தியது.

அரசியார் ரஸ்புட்டினின் பெயரால் தன் கணவனுக்கு அடிக்கடி பல பரிசுப் பொருட்களையும் அனுப்பிக்கொண்டிருந்தார். அதிலொன்று ஒரு மீன் ஒரு பறவையை தடியால் குத்திக்கொல்வதாக அமைந்திருந்தது. இது ஒரு புதுமையான பரிசு. 'ரஸ்புட்டின் இதனை உபயோகித்துவிட்டார். இதனை உங்களை ஆசீர்வதிப்பதற்காக அனுப்பியிருக்கிறார். இத்துடன் எமது நண்பருடைய புகைப்படம் ஒன்றும் அனுப்புகிறேன். இவற்றை எப்போதும் உங்கள் அருகிலேயே வைத்திருந்தால் உங்களுக்கு வேண்டிய பலத்தை அவை கொடுக்கும்.

இறுதியாக எமது நண்பர் பாவித்த சீப்பு ஒன்றையும் உங்களுக்கு அனுப்புகிறேன். ஏதாவது சிக்கலான பேச்சுவார்த்தைகளின் முன்னரும், தீர்க்கமான முடிவுகள் எடுக்கும் முன்னரும் இதனால் உங்கள் தலையைச் சீவுவதற்கு மறக்கவேண்டாம். இது உங்களுக்கு நிச்சயம் உதவும்' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

1915 ஆம் ஆண்டிலிருந்து 1917 ஆம் ஆண்டுவரை நான்கு பிரதம மந்திரிகளும், ஐந்து உள்நாட்டு அமைச்சர்களும், நான்கு கலாச்சார அமைச்சர்களும், நான்கு நீதி அமைச்சர்களும், மூன்று விவசாய அமைச்சர்களும், மூன்று வெளிநாட்டு விவகார அமைச்சர் களும், நான்கு பாதுகாப்பு அமைச்சர்களும் பதவியிலிருந்தார்கள். இருபது மாதங்களில் ஏழு மந்திரிப்பதவிகளை இருபத்தேழு மந்திரிகள் ஏற்றிருந்தனர். ரஸ்புட்டினின் தலையீட்டினால் நான்குபேர் பதவிமாற்றம் செய்யப்பட்டனர். அரசருடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள் காரணமாகவோ அல்லது மற்றவர்களின் தலையீடு காரணமாகவோ எண்மர் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். மிகுதியாக இருந்தவர்களில் ஏழுபேர் அரசியாரின் ஆணைப்படி பதவி நீக்கம் செய்யப்பட்டனர். ரஸ்புட்டின் அரசரும் அரசியாரும் கூறும் கருத்துக் களைத் திரும்பத்திரும்பக் கூறுவார். அதேபோல்தான் அரசர் இல்லாதவிடத்து அரசியார் விரும்பியதை தான் கூறுவதுபோல் கூறுவார். அரசியாரும் உடனே தன் கணவனுக்கு 'எமது நண்பர் அந்த மந்திரியாரை விரும்பவில்லை அவரை பதவியிலிருந்து நீக்கிவிடுங்கள், இந்த மந்திரியாரை விரும்பவில்லை இவரையும் பதவியிலிருந்து நீக்கிவிடுங்கள்' என்று அறிவித்துவிடுவார்.

அரசியார் தான் நினைத்ததை எப்படியும் நிறைவேற்றிவிடுவார். ரஸ்புட்டினையும் தனது முடிவுகளுக்கு ஒத்தாசை புரியவும் வைத்துவிடுவார். அவருடைய முடிவுகளுக்கு எதிராக ரஸ்புட்டின் ஒருபோதும் போகமாட்டார். அரசியாரின் பல சர்வாதிகாரமான முடிவுகளுக்கும் ரஸ்புட்டின் சாதுரியமாக ஒத்துக்கொண்டுவிடுவார். அரசியார் தனது முடிவுகள் எல்லாம் ஆண்டவனின் முடிவுகள் என்ற எண்ணத்தோடு பின்வரும் விளைவுகளைப் பற்றிச் சிறிதேனும் சிந்திக்காது தான் எண்ணியவாறெல்லாம் செயற்பட்டுக்கொண்டே யிருந்தார்.

ரஷ்ய அரசாங்க அலுவல்களில் ரஸ்புட்டினின் தலையீடு பற்றி இந்தப் போர்க்காலத்தில் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. ரஸ்புட்டினின் விருப்பத்திறகேற்ப அமைச்சர்களின் மேல் வீண்பழி சுமத்தியும், அவதூறு கூறி அவர்களைப் பதவியிறக்குவதும், பதவி மாற்றங்கள் செய்வதும் அமைச்சர்கள் மனதில் ஆத்திரத்தையே வளர்த்தது. எல்லாவற்றிற்கும் மேலாக 1916 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த பதவி மாற்றம்தான் எல்லோரையும் பிரமிக்க வைத்தது.

1916 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி. முதலாவது உலகமகாயுத்தம் ஆரம்பித்து இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. ரஷ்யப் பேரரசு, போருக்குத் தன்னைச் சரிவரத் தயார் செய்யாதபடியினால் நேச நாடுகளைவிடப் பாரிய இழப்புக்களைச் சந்தித்தவண்ணமே இருந்தது. ஆரம்பத்தில் சில வெற்றிகளைக் கண்டபோதும் ஜேர்மன் இராணுவத்தினரின் கடுமையான தாக்குதலால் வெற்றிகொண்ட பகுதிகளெல்லாம் பறிபோய்விட்டன. கிட்டத்தட்ட ஒரு இலட்சத்திற்கு மேல் இராணுவவீரர்கள் உயிரிழந்துவிட்டனர்.

அரசியார் பிறப்பால் ஒரு ஜேர்மன் பிரஜை ஆனபடியினால் அவர் ஜேர்மனியின் உளவாளி என்றும், தனது அரண்மனையினுள்ளே இருந்துகொண்டே ரஷ்யாவின் இராணுவ இரகசியங்களை ஜேர்மன் இராணுவத்தினருக்குத் தெரிவிக்கின்றார், ரஸ்புட்டினும் அர்சியாரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகளைத்தான் அரசர் அமுல்படுத்துகின்றார் என்றும், அரசர் இப்போது அரசியாரின் கைப்பொம்மை ஆகிவிட்டார் அதனால்தான் அதிகாரிகளை தான் நினைத்தபடியெல்லாம் பதவி மாற்றம் செய்கின்றார் என்றும், இதனால்தான் ரஷ்யாவிற்குத் தோல்விமேல் தோல்வியாக வருகின்றது என்று மக்கள் எல்லாம் ஒரே முகமாகக் கொதித்தெழுந்தனர்.

தலைநகரில் சமுதாய உச்சத்திலிருந்தோர் வெளியே நடந்து கொண்டிருக்கும் கொடூரமான போர் அழிவுகளைப்பற்றி சிறிதேனும் அக்கறை கொள்ளவில்லை. ஆடல், பாடல், அர்த்தமற்ற பேச்சு, காலமெல்லாம் களியாட்டங்கள், விருந்துபசாரங்களிலே காலத்தைக் கழித்தனர். பிரபுக்களும் பெரிய அதிகாரிகளும் பகட்டான வாழ்க்கை யிலும், புதுப்புது மதுப்புட்டிகளை ருசி பார்ப்பதிலும் காலத்தைக் கழித்தனர்.

போர்முனையில் பதுங்கு குழிகளுக்குள் பல ஆயிரம் போர்வீரர்கள் பரலோகம் போய்க்கொண்டிருந்தார்கள். இளவயதிலேயே விதவைகள் ஆக்கப்பட்டோர், அநாதைகள் ஆக்கப்பட்டோர் பல ஆயிரம். தினம் தினம் உயர்ந்துகொண்டு செல்லும் விலைவாசியினால் எதுவும் வாங்க வசதியற்ற சாதாரண மக்கள் கால் வயிற்றிற்குக்கூடக் கஞ்சியின்றி, நடுங்குளிரிலே பலமணி நேரம் பரிதவித்து, கடும் உழைப்பிற்குப்பின் நாம் வசிக்கும் பாசறைகளுக்குள் சென்று முடங்கிக் கொள்வார்கள். போரின் கொடுமை இவர்களை மேலும் வாட்டியது. வாழ்க்கையிலேயே அவர்களுக்கு விரக்தி ஏற்பட்டுவிட்டது.

சீக்கிரம் பெருவெற்றி கிடைக்கும் என்றிருந்த ரஷ்யாவிற்கு, நீண்டு கொண்டு செல்லும் போரினால் நம்பிக்கையும் வலுவிழந்து அவமானமாகவும் இருந்தது. போர்க் காரியங்களிலே பல ஆயிரக்கணக்கான போர்வீரர்களை இழந்தபின்னர்தான் பேரரசுக்கெதிராக மக்கள் தங்கள் வெறுப்புணர்ச்சிகளையும், விரோதங்களையும் வெளிப்படையாகவே காட்ட ஆரம்பித்தார்கள். ரஷ்யப் பொருளாதாரம் சீர்குலைந்து முற்றாக வீழ்ச்சியடையும் நிலையில் இருந்தது.

வெளியே போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதிலும் உள் நாட்டிலே புரட்சித் தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண்டே இருந்தது. இந்த வேளையில் "புரட்சி" என்ற சொல்லை எல்லா இடங்களிலும்

கேட்கக்கூடியதாகவும் இருந்தது. அரச பரம்பரையினருக்கெதிராக மக்கள் செயற்படத் தொடங்கினர். மக்கள் கூறுவதை அரசகுடும்பத்தினர் அலட்சியம் செய்தனர். இராணுவத்திலிருந்து பலர் தப்பியோடினர். தினமும் மக்கள் ஒரு துண்டு பாணுக்காக மணிக்கணக்கிலே உறையும் பனியின் குளிரையும் பாராது நீண்ட வரிசைகளிலே நின்றார்கள். இறுதியில் அதில் அரைவாசிப்பேர் ஏமாற்றத்துடனேயே சென்றார்கள். ஒருநாளும் முழுதாக மின்சாரம் கிடைக்காது. நிலக்கரிக்கும், மரக்குற்றி களுக்கும் தட்டுப்பாடு. மக்கள் கூடியளவு நேரம் தமது வீடுகளுக் குள்ளேயே கிடைக்கும் போர்வைகளைப் போர்த்தியபடியே இருந்தார்கள்.

அரசியார் அரசருக்கு எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் எமது நண்பர் கூறினார், எமது நண்பர் கூறினார் என்று குறிப்பிடத் தவறு வதில்லை. நாட்டில் புரட்சி ஆரம்பமாதற்குக் காரணமாக இருந்தவர் களும் இப்போது நாட்டை ஆள்பவர் அரசரல்ல, அந்தப் பைத்தியக்காரப் பாதிரியார்தான் என்று ரஸ்புட்டினையும், அனா விருபோவா ஒரு பிரபல்யமான ஜேர்மன் உளவாளி, இவர்களுடன் சேர்ந்து அரசியார் நாட்டையே படுகுழியில் தள்ளுகிறார் என்ற கருத்தையும் மக்களிடையே பரவச்செய்தனர்.

பொதுமக்களுக்கு அரச பரம்பரையினரின் தனிப்பட்ட வாழ்க்கை முறைகளைப் பற்றி முழுவதாக அறிய முடியாமலேயிருந்தது. ஒவ்வொரு சம்பவங்களிலிருந்தும், மற்றவர்கள் பேசுவதிலிருந்தும், அரச மாளிகையில் என்ன நடக்கின்றது என்பதனை ஊகித்துக்கொண்டார்கள்.

அரசியார் ரஸ்புட்டினுடன் தனக்குள்ள தொடர்புகளை மிகவும் இரகசியமாகவே வைத்திருந்தார். ஆனால் பொதுமக்கள் அனா விருபோவாதான் அரசியாருக்கும் ரஸ்புட்டினுக்கும் இடையில் தூது செல்கிறார் என்றும் நம்பினர். தான் செய்கிற செயல்களும், பேசுகின்ற வார்த்தைகள் ஒவ்வொன்றும் அரச குடும்பத்தினரின் கௌரவத்தை

எவ்வளவு தூரம் பாதிக்கின்றதென்பதைப் பகுத்தறிய முடியாத அனா விருபோவாவின் செயல்களால் மக்கள் மேலும் மேலும் விரக்தி யடைந்தனர்.

ரஸ்புட்டினையும் அனா விருபோவாவையும் இணைத்துப் பல செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிட்டன. அனா விருபோவாவி னுடைய சிறிய இருப்பிடத்திலேதான் அரசியாரும் ரஸ்புட்டினும் சந்திக்க ஏற்பாடுகள் செய்பவர் என்றும், போர்க்காலத்தில் பலவிதமான அரசியல் மந்திராலோசனைகளை அரசியாருக்கு வழங்கியவர் என்றும், அரச மாளிகையிலேயே பல களியாட்டங்களை ஒழுங்கு செய்பவர் என்றும் எழுதின. தாம் நினைத்தபடியெல்லாம் அரண்மனையிலிருந்தபடியே அரசியலை நடாத்திப் பலரைத் தமது எதிரிகளாக்கிக்கொண்ட அரசியாரையும், அரசரையும் தனது அழுங்குப் பிடிக்குள் வைத்திருக்க ரஸ்பட்டினுடன் சேர்ந்து வழிகோலியவர் என்றும் பல செய்திகளை அவை வெளிட்டன.

அவற்றில் எல்லாம் பிரபல்யமானது இவானோவ் (Ivanov) அவர்களால் வரையப்பட்ட ஒரு கேலிச்சித்திரம். ரஸ்புட்டின் என்ற இராட்சசன் பேரரசரையும், பேரரசியாரையும் தனது மடியில் இருத்தி இரு கைகளிலும் சிறிய பொம்மைகள்போல வைத்திருக்கும்படி அமைந்த கேலிச்சித்திரம் மக்களிடையே மிகவும் பிரபல்யமாகவிருந்தது. 'ரஷ்யாவை அரசாளும் இல்லம்' (Russia's ruling house) என்று அதற்கு வேண்டிய தலைப்பும் கொடுத்துப் பிரசுரித்தது மக்களுக்குத் தேனாக இனித்தபோதிலும் மன்னருக்கு அது வேம்பாகவே கசந்தது.

இதுமட்டுமல்லாமல் இளவரசனுக்கு மயக்கமருந்து போட்டு ரஸ்புட்டினுடன் சேர்ந்து நோயைத் தீர்ப்பதுபோல் செயற்பட்டவர் என்றும், ரஸ்புட்டினுடனும், பேரரசருடனும், பேரரசியாருடனும் கள்ளக் காதலியாக இருந்து லீலைகளில் ஈடுபட்டவர் என்றும் பரவலாகப் பேசப்பட்டது.

படிப்படியான வதந்திகளாலும், மந்திராலோசனைகளாலும் அரச குடும்பத்தினரதும், ரஸ்புட்டினினதும் பெயர்களின் மேலும் மேலும் பெரும் கறைகள் படிந்துகொண்டேயிருந்தன.

ரஸ்புட்டினினது கெட்ட செயல்களைக் கேள்வியுற்ற தேவாலயங்களும் பாதிரிமார்களும் ரஸ்புட்டினை எட்டத் தள்ளியே வைத்திருந்தனர். ரஸ்புட்டினின் அறிவுரைகளைக் கேட்கவேண்டாம் என்றும், அவரைத் தலைநகரைவிட்டு வெளியேற்றும்படியும் அரசரைத் திரும்பத் திரும்ப மன்றாடினர். ரஸ்புட்டினை ஆரம்பத்தில் அரசருக்கும் அரசியாருக்கும் அறிமுகப்படுத்தி வைத்த தியோபன் முன்னரே ரஸ்புட்டினின் மேல் கோபம் கொண்டிருந்தாலும் இப்போது அவரது பயங்கர எதிரியாக மாறிவிட்டிருந்தார். அடுத்தடுத்து பல பெண்கள் தாம் ரஸ்புட்டினுடன் உடலுறவு கொண்டோம் என்று தம்மிடம் வந்து கூறுவதைக் கேள்வியுற்ற தியோபன் இதுபற்றி அரசியாருக்குப் புகார் செய்தார். அரசியார் ரஸ்புட்டினை அழைத்து இதுபற்றிக் கேட்டபோது அரசியாரிடம் அப்படி எதுவும் நடக்கவில்லையென்றும், இது வேண்டுமென்றே தன்மீது சுமத்தப்பட்ட ஓர் அப்பட்டமான பொய் என்றும் இன்னொரு பொய்யைக் கூறினார். அதன்பிறகு ரஸ்புட்டினுக்கு தியோபன்மேல் அடக்கமுடியாத ஆத்திரம் வந்தது.

அரசியார் முன்னரும் ஒருமுறை இப்படியான வதந்திகளைக் கேட்டவுடன் அனா விருபோவாவையும் வேறு இரு பெண்களையும் பொக்ரொவஸ்கோவிற்கு அனுப்பி உண்மையாக அங்கே என்ன நடக்கின்றது என்பதை அறிந்துவரச்செய்தார். அங்கே சென்ற மூவரில் ஒருவரை ரஸ்புட்டின் பலாத்காரமாகத் தன்னிச்சைக்கு இசைய வைக்க முயற்சித்ததாக அவர் வந்து அரசியாரிடம் கூறினார். ஆனால் அனாவும், மற்றவரும் ரஸ்புட்டினின் கிராம தேவாலயத்திலே அப்படியொன்றும் கெட்ட நிகழ்வுகள் நடைபெறுவதில்லை, ரஸ்புட்டினுக்கு அங்கே நல்ல

மரியாதை உண்டு என்றும் கூறினர். அரசியார் அந்தப் பெண் கூறியதை நம்பவில்லை ஆனால் அனா கூறியதையே நம்பினார். அதேபோல் இப்போதும் ரஸ்புட்டின் கூறுவதையே நம்பினார்.

ரஸ்புட்டினைப் பற்றிக் குறை கூறுபவர்கள் ஒவ்வொருவரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்கள் அல்லது வேறு இடத்திற்கு மாற்றப் பட்டார்கள் அவர்கள் யாருமே அரசியாருடைய செல்வாக்குகளைப் பெறமாட்டார்கள். இதேபோல்தான் சில நாட்களுள் தியோபனும் அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டார். ரஸ்புட்டின் இதனைக் கேள்வியுற்ற உடனே; 'பார்த்தீர்களா, அவர் எனக்கு வைத்த பொறியை நான் அகற்றிவிட்டேன். எனக்கு அரசியாரிடம் இருக்கும் செல்வாக்கைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன்' என்று மற்றவர்களிடம் பெருமையாகக் கூறிக்கொண்டார்.

◆◆



21

அழிவின் உச்சியில்...

ரஸ்புட்டின் 'அவர் எனக்கு வைத்த பொறியை நான் அகற்றி விட்டேன்' என்று மற்றவர்களிடம் பெருமையாகக் கூறிக்கொண்டதைக் கேள்வியுற்ற இன்னொரு பாதிரியார் ரஸ்புட்டினின் நடத்தைகளைப் பற்றி பேரரசரிடம் சென்று முறையிட்டார் அதற்கு அரசர்;

'தேவாலயங்களும், அரச பரம்பரையின் விவகாரங்களும் வேறு வேறு. இரண்டும் ஒன்றல்ல' என்றார். அதற்கு பாதிரியார்; 'இல்லை அரசே! அவை அரச விவகாரங்கள் மட்டுமல்ல அவை ரஷ்யாவின் விவகாரங்கள். இளவரசர் அலெக்ஸி உங்களுடைய மகன் மட்டுமல்ல அவர் ரஷ்யாவின் வருங்கால மன்னர், அவர் ரஷ்யாவிற்கு சொந்தமானவர்' என்றார்.

அரசர் அதனையும் தட்டிக் கழித்தார். அரசர் பாதிரியாருக்கு ஆக்கபூர்வமான பதில் எதையுமே கூறவில்லை. பாதிரியார் கவலையுடன் வெளியேறினார். அதேவேளையில் அரசியார் ரஸ்புட்டினைப் பற்றி யார் என்ன கூறினாலும் அவற்றை நம்புவதேயில்லை. அவர் நிச்சயம் கடவுளால்தான் அனுப்பப்பட்டவர் என்று நம்பினார். ரஷ்யப் பிரதமர்

பீட்டர் ஸ்ரோலிபின் (Peter Stolypin) ரஸ்புட்டினுக்கு பரம எதிரியாக இருந்தவர். ரஸ்புட்டினின் செயல்களை அறிந்துகொள்வதற்காக அரசியாரின் விருப்பத்திற்கு எதிராக நீண்டதொரு புலன்விசாரணையை நடாத்தினார். இறுதியில் அவர் நாட்டுப் பிரச்சனைகளால் கொலைசெய்யப்பட்டார்.

சீமான் டிமிற்றி பவலோவிச் (Grand Duke Dmitri Pavlovich) அவர்கள் இளவரசர் பீலிக்ஸ் யுசெப்போ (Nikolas Feliks Yussupov) உடன் சேர்ந்து ரஸ்புட்டினுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பிரதமர் கொலை செய்யப்பட்ட செய்தியைக் கேள்விப் பட்டவுடன் சீமான் டிமிற்றி பவலோவிச் அவர்களை அழைத்து;

'எவர் மனித வடிவில் இருக்கும் கடவுளின் தூதுவரான எம்முடைய நண்பரை வெறுக்கிறார்களோ அவர்களுக்கு கடவுள் ஒருபோதும் பாதுகாப்பு அளிக்கமாட்டார்' என்று தனது கருத்தைக் கூறினார்.

தனது உயிர்த்தோழியான அனா விருபோவாவிடம்; 'ரஸ்புட்டினை அவர்கள் எதிர்ப்பதற்குக் காரணம் நாங்கள் அவரை நேசிக்கின்றோம் என்ற ஒரே காரணத்திற்காகத்தான்' என்றார்.

ரஸ்புட்டினைப் பற்றி பல அவதூறான செய்திகள் வந்தபோதிலும் அரசியார் அவற்றையெல்லாம் தட்டிக் கழித்துக்கொண்டேயிருந்தார். ரஸ்புட்டின் என்ன செய்தாலும் பரவாயில்லை என்றிருந்தார். அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையைப்பற்றி தான் அக்கறை கொள்ளாததுபோல் இருந்தார். ரஸ்புட்டினிடம்தான் தனது ஒரே மகனான அலெக்ஸியின் நோயைக் குணப்படுத்தும் சக்தி இருக்கின்றது. அவர் இல்லாது விட்டால் இளவரசனை உயிருடன் நெடுநாள் பார்க்கமுடியாது அதற்காக ரஸ்புட்டினைப் பாதுகாக்க அவர் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தார்.

இளவரசனின் குருதியுறையா நோயைப் பற்றிய விபரங்களை அறிந்திராத மக்கள் ரஸ்புட்டின் அரண்மனைக்குள்ளே இருப்பதை அறிந்து ஆவேசம் கொண்டனர். இளவரசனின் நோயைப் பற்றி அறிந்திருந்த அரச குடும்பத்தினர், அரண்மனைச் சேவகர்கள் அனைவரும் அந்த உண்மைகளை வெளியில் கூறமாட்டோம் என்று அரசியார் முன்னிலையில் சத்தியப் பிரமாணங்களும் செய்துகொண்டனர்.

ரஸ்புட்டினிற்கும் அரச குடும்பத்திற்கும் உள்ள நெருக்கம் அரசாங்கத்தில் உள்ளவர்களையும் ஆத்திரமடையச் செய்தது. அவர்களும் ரஸ்புட்டினுக்கு எதிராக பல ஊர்வலங்களை நடாத்தியதோடு, பகிரங்கமாகவே தமது கண்டனங்களையும் தெரிவித்தனர். பத்திரிகைகளும் கட்டுமீறிப்போன ரஸ்புட்டினின் காமத்தனத்தை பக்கம் பக்கமாக எழுதின. அரசியார் ரஸ்புட்டினின் கள்ளக்காதலி என்றும், இளவரசிகள் நால்வரையும் ரஸ்புட்டின் கற்பழித்துவிட்டார் என்றும், மக்களை திருமணமாகு முன்னரே உடலுறவு கொள்ளப் போதிக்கும் கபட நாடகமாடும் சதியாளன் என்றும், எமது புனித தேவாலயத்தின் எதிரி என்றெல்லாம் திரும்பத்திரும்ப எழுதின.

இவற்றை மேலும் மேலும் பார்த்துக்கொண்டிருக்கப் பொறுக்காத அரச குடும்பத்தினர், அரசியாரையும் ரஸ்புட்டினையும் இணைத்து அவதூறான செய்திகளை பத்திரிகைகளில் பிரசுரமாக்குவதற்கு எதிராக அரசாங்கத்தினால் ஒரு சட்டம் கொண்டுவரச் செய்தனர். ரஸ்புட்டினைப் பற்றி எழுதினால் குற்றப்பணம் கட்டவேண்டும் என்று அரசரும் அறிவித்தார். அவர்களுக்கு இந்தச் சூடான செய்திகள் பத்திரிகைத் தொழிலில் அதிக இலாபத்தைத் தேடித்தந்தன. அதனால் அரசாங்கம் விதித்த குற்றப் பணத்தை சந்தோஷமாகக் கட்டிவிட்டு பத்திரிகைகள் எல்லாம் அவர்களைப் பற்றிய செய்திகளைப் பக்கம் பக்கமாக பிரசுரித்துக்கொண்டே இருந்தன.

1916 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அலெக்ஸாண்டர் புறோட்டோபோப்போவ் (Alexander Protopopov) என்பவர் உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் பழமையை நேசிக்கின்ற ஒரு தீவிர ஏகாதிபத்தியவாதி. இவருடைய அரசியல் சிந்தனைகள் அரசரையும், அரசியாரையும் வெகுவாகக் கவர்ந்திருந்தன. இவர் அரசாங்கத்தில் சில காலமாகப் பணியாற்றியபோதும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவேண்டிய அளவிற்குத் திறமை அற்றவர். ஆனால் இவர் ரஸ்புட்டினுக்கு நன்கு அறிமுகமானவர். இவருக்கு ரஸ்புட்டினின் திறமைகளைப் பற்றி அவ்வளவாகத் தெரியாத போதிலும் அவரை வெகுவாகப் பிடிக்கும். ஆதலால் அரசியாரின் அறிவுறுத்தலின்படி இவர் உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இது மக்களிடையே மீண்டும் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. அதுவுமல்லாமல் இவர் ஒரு மாந்திரீகன் என்றும் ஒரு கிசுகிசுப்பு இருந்தது. தனது மேசையில் எப்போதும் ஒரு விக்கிரகத்தை வைத்திருப்பார். அடிக்கடி அதனுடன் தனியே பேசிக்கொண்டும் இருப்பார். அங்கிருப்போருக்கு அதனைக் காட்டி 'இவர்தான் எனக்கு எப்போதும் வழிகாட்டுகிறார். நான் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் இவருடைய கட்டளையின் கீழ்தான் நடைபெறுகின்றது' என்பார். அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் அகப்பட்டுத் தவிக்கும் ஒரு பெரிய இராச்சியத்தின் அதிகாரமுள்ள உள்நாட்டு அமைச்சராக ஒரு பைத்தியக்காரனையா அரசியார் நியமித்துள்ளார்? என்று எல்லோரும் மேலும் மேலும் கொதித்தெழுந்தனர்.

அரசர் அருகே இல்லாதபோது அரசியாருக்கு அமைச்சர்களைப் பதிவியேற்றவும் பதவியிறக்கவும் மிகவும் இலகுவாக இருந்தது. அரசரைக் கேட்காமலே அலெக்ஸாண்டர் புறோட்டோபோப்போவ் அவர்களுக்கு உள்துறை அமைச்சர் பதவியோடு விவசாய அமைச்சர் பதவியையும் அரசியார் வழங்கினார். 'இரண்டு பதவிகளையும் உமக்கு

வழங்குவதற்கு என்னை மன்னித்துவிடுங்கள். நான் இதனைக் கட்டாயம் செய்யத்தான் வேண்டுமென எமது நண்பர் கட்டளையிட்டுள்ளார்' என்று புதிய அமைச்சரிடம் எடுத்துக் கூறினார்.

இப்படியான திடீர் நியமனங்களாலும், பதவி விலகல்களாலும் நாளுக்குநாள் அரசாங்கம் ஆட்டங் கண்டுகொண்டே வந்தது. அரசாங்கத்தில் இருந்தவர்கள் எல்லாம் பகிரங்கமாகவே அரசியாரைக் கண்டிக்கத் தொடங்கினார்கள். 'அரசியார் தேச பக்தி நிறைந்தவர் என்றால், நமது நாட்டில் அக்கறை உள்ளவர் என்றால் எதற்காக ஜேர்மன் உளவாளிகளுடனும் அனுதாபிகளுடனும் தலைநகரைச் சுற்றும் அந்தக் கேடுகெட்ட குடிகார மிருகத்தை அரண்மனைக்குள்ளே அழைத்து வைத்துள்ளார்? எமக்கு ரஸ்புட்டின் அரண்மனையிற்குள்ளே இருந்துகொண்டு என்ன செய்கிறார் என்பதனைத் தெரிவிக்கவேண்டும்' என்றெல்லாம் கூச்சலிட்டனர். ஆனால் எவரும் அதற்குப் பதிலளிக்க வில்லை.

இந்த நிலையில் ஒரு சாரார் அரசர் பயணிக்கும் வழியில் ஆகாய விமானத்திலே சென்று அவருடைய மோட்டார் வண்டிக்குமேல் குண்டு போட்டு அவரைக்கொலை செய்யத் திட்டம் போட்டனர். இன்னொரு சாரார் அரசியாரை போர் முடியும்வரை தலைநகரைவிட்டு வெளியேறி தூரத்திலுள்ள நகரம் ஒன்றில் வசிக்கும்படியும் கோஷமிட்டனர்.

அரச குடும்பத்திலுள்ள ஏனையோர் நாட்டு நிலமை இப்படியே போனால் விரைவில் ஒரு பேராபத்தை சந்திப்பதைத் தவிர்க்க முடியாது என்று ஆதங்கம் கொண்டனர். அரசரின் தாயாருக்கும் தனது மகன் செய்வது துளி கூடப்பிடிக்கவில்லை.

'ஒன்றில் ரஸ்புட்டினை தலைநகரை விட்டு வெளியேற்று அல்லது உனது மனைவியை வெளியேற்று, இதிலொன்றை நீயே சீக்கிரம் முடிவு செய்' என்று கூறினார். ஆனால் அரசர் தாயாரின் எதுவித வேண்டுகோள்களுக்கும் செவி சாய்க்கவில்லை. அடங்காத கோபத்துடன் வெளியேறிய தாயார் இனிமேல் நான் தலைநகரில் இருக்கவே மாட்டேன் என்று கூறிவிட்டு கீவ் (Kiev) என்ற இடத்தில் போய் தனது வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

பேரரசரின் மைத்துனர் பிரபு அலெக்ஸ்ஸாண்டர் மிக்கேலெவிச் (Duke Alexandra Michailovich) அவர்கள் பேரரசர் பணிபுரியும் இராணுவ தலைமைக் காரியாலயத்திற்கு மூன்று முறைகள் விஜயம் செய்தார். ஒவ்வொரு முறை அங்கு செல்லும்போதும் ரஸ்புட்டினையும், அரசியார் அலெக்ஸ்ஸான்றாவையும் வேறெங்காவது சென்று வசிக்கச் சொல்லும்படி திரும்பத் திரும்ப வேண்டுகோள் விடுத்தார். ஆனால் அவற்றால் எதுவித பலனும் கிடைக்கவில்லை. இதனை இப்படியே விட்டுவிடக் கூடாது என்று எண்ணிய பிரபு, அரசருக்கெதிரான நடவடிக்கைகளில் தான் நிச்சயம் இறங்கவேண்டும் என்று எண்ணி அதற்கான தனது அடுத்த திட்டத்தில் இறங்கினார்.

பிரபு நிக்கோலாய் நிக்கொலவிச் அவர்களும் இராணுவத் தலைமைக் காரியாலயத்திற்கு வந்து தனது ஒன்றுவிட்ட சகோதரனுடன் நாட்டு நிலைமை பற்றிப் பேசினார். சில மணித்தியாலங்களாக அரசரைப் பார்த்து உரத்த குரலில் பேசிக் கொண்டேயிருந்தார். ஆனால் அரசர் தொடர்ந்து மௌனமாக இருந்தார். அவர் கூறுவதையெல்லாம் அலட்சியம் செய்தபடி புகை பிடிப்பதிலேயே முக்கிய கவனமாக இருந்தார். பிரபுவுக்கு இனிமேலும் அரசருடைய பொறுமையைப் பொறுத்துக் கொள்ள முடியாமலிருந்தது;

'நீர் இன்னமும் ஏதும் பேசாமல் இருப்பதைவிட என்னைத் திட்டியிருந்தாலோ அல்லது என்னை அடித்திருந்தாலோ அல்லது உதைத்து வெளியில் தள்ளியிருந்தாலோ நான் சந்தோஷப்பட்டிருப்பேன். உமது கண்களுக்கு முன்னாலேயே உமது மணிமுடி பறிபோவதை உம்மால் இன்னமும் உணர முடியவில்லையா? காலங் கடந்தபின் கவலைப்படுவதை விட்டுவிட்டு இப்போதே உம்மைத் திடப்படுத்திக் கொள்ளும். ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்தைத் தரும்படிதான் நான் கேட்கின்றேன். இதனை நான் சென்ற ஆனி மாதமும் கேட்டேன். ஆனால் அதனைப் பற்றி ஏதும் செய்யாது இழுத்தடித்துக்கொண்டே போகிறீர். இப்போதுகூட காலம் கடந்துவிடவில்லை. நாடு போகின்ற போக்கில் கூடிய விரைவில் உம்மால் எதுவும் செய்ய முடியாமல் போகலாம்' என்றார். இதற்கும் அரசர் எதுவும் பேசாது தொடர்ந்து புகைபிடித்த வண்ணமே இருந்தார்.

இப்படியாக இராணுவத் தலைமையகம் சென்று தனது ஒன்றுவிட்ட சகோதரனிடம் பலமுறை பேசியும் எதுவித பயனும் இல்லை யென அறிந்த பிரபு நிக்கோலாய் நிக்கொலவிச் அரசருக்கு ஒரு நீண்ட கடிதத்தை எழுதினார்:

'உமக்கு உம்முடன் நெருங்கி இருப்பவர்கள் ரஷ்ய இராச்சியத்தின் உண்மையான நிலைமை பற்றி தெரியப்படுத்தினார்களா? முக்கியமாக சைபீரியா (Siberia), துருக்கிஸ்தான் (Turkestan), கேகேசஸ் (Caucasus) இவற்றின் நிலைமைகள் பற்றி அறியத்தந்தார்களா? அல்லது அவர்கள் (ரஸ்புட்டினும், அரசியாரும்) சேர்ந்து அவற்றையெல்லாம் மறைத்துவிட்டார்களா? இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் மூலம் எங்கே இருக்கின்றது? நான் உமக்குச் சிலவற்றை விளக்க விரும்புகிறேன். நீங்கள் அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பிரத்தியேக நோக்கம் கொண்ட ஒரு சிறு குழுவிற்குத்தான் தெரிந்திருக்கிறது. அது நன்மையையும் தரலாம்

தீமையையும் தரலாம். ஆனல் இந்த விடயம் வெளியில் தெரியவந்து பொதுமக்களால் விமர்சிக்கப்பட்டால் ரஷ்யாவை இந்த வகையில் நீண்டநாள் ஆள முடியாது.

நீர் யாரையும் நம்புவதில்லையென்றும், அருகிலிருப்பவர்கள் உமக்கு தொடர்ந்தும் நம்பிக்கைத் துரோகம் செய்கிறார்கள் என்றும் அடிக்கடி என்னிடம் கூறியிருக்கின்றீர். இந்தக் கூற்றுக்கள் உண்மையானால் இவை உமது மனைவிக்குத்தான் பொருந்தும். உம்மை அன்புடன் நேசிக்கும் அதேவேளையில் தவறான பார்தைக்கும் உம்மை இட்டுச் செல்கிறார். சுற்றியிருக்கும் கொடியவர்களின் அழுங்குப் பிடிக்குள்ளும் அகப்பட்டிருக்கிறார். அவரை நீர் நம்புவது இயற்கை. ஆனால் அவரிடமிருந்து வெளிப்படும் வார்த்தைகள் சாதுரியமான சதியாலோசனைகள்தான். அவை உண்மைக்குப் புறம்பானவை. இந்தவகையான செல்வாக்கை உம்மால் உதறித்தள்ள சக்தி இல்லா விட்டால் உமது மனைவியாரை ஒரு கருவியாகப் பாவித்து படிப்படி யாகத் தொடரும் சதியாலோசனைகளில் இருந்தாவது தப்பித்துக் கொள்ளும். இந்த விடாப்பிடியான கொடிய தலையீடுகளை உம்மால் தவிர்த்துக்கொள்ள முடியுமானால் எமது நாடு சீரான பாதையில் வெகுதூரம் சென்றுவிடும். நீரும் உமது பெரும்பான்மையான நாட்டுப் பிரஜைகளிமிருந்து இழந்துவிட்ட தன்னம்பிக்கையை விரைவில் திரும்பவும் பெற்றுக்கொள்ளலாம்.

நான் இந்த உண்மைகளை உமக்கு எடுத்துக் கூறுவதற்கு பல காலமாகத் தயங்கினேன். ஆனால் உமது அன்னையாரினதும், அன்புச் சகோதரிகளினதும் தூண்டுதலின்பேரில்தான் அவற்றைக் கூற முன்வந்தேன். இதில் எனக்கு ஒருவித இலாபமுமில்லை. நான் இதுவரை காலமும் எதுவித இலாபத்தினையும் எதிர்பார்க்கவுமில்லை என்பதும் உமக்குத் தெரியும். எமது பிரியமான நாட்டின்மேல் உள்ள பாசத்தினாலும், உமது முடியைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும்

என்ற ஆசையினாலும், எம்மை எதிர்நோக்கும் ஈடுசெய்யமுடியாத பேரழிவினின்றும் எம்மைக் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கையினாலுமே இவற்றைக் கூறுகிறேன்' என்று தனது கடிதத்தை முடித்திருந்தார்.

ஆனால் அரசரோ அதனை திறந்துகூடப் பார்க்காமல் தனது மனைவியாரிடம் அனுப்பிவைத்தார். அதனைப் பார்த்த அரசியார் 'இதனைப் பார்க்க எனக்கு அடக்கமுடியாத ஆத்திரம்தான் வருகிறது. அவர் அப்படிப் பேசியபோது அவரை இடைமறித்து என்னையோ அல்லது எமது நண்பரின் பெயரையோ குறித்துப் பேசினால் அது தேசத்துரோகத்திற்கு அடுத்ததாகும் என்றும், அதனால் உம்மைச் சேபியாவிற்கு அனுப்பிவிடுவேன் என்றும் நீங்கள் அவரை எச்சரித்திருக்கவேண்டும். அவர் எப்போதும் என்னை வெறுப்பவர். கடந்த இருபத்தியிரண்டு வருடங்களாக என்னைப் பற்றி ஒருபோதும் நல்ல வார்த்தைகள் கூறவில்லை' என்று பதில் எழுதியிருந்தார்.

1916 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ரஷ்ய சாம்ராஜ்யம் சரிந்துவிழும் நிலைக்கு வந்துவிட்டது. இரண்டு வருடங்களாகத் தொடரும் கொடூரமான போரும் அதனால் ஏற்பட்ட மலைபோல் உயர்ந்துவிட்ட விலைவாசிகளும், மந்திரிசபை மாற்றங்களும் நாட்டைப் படுகுழிக்குத் தள்ளிவிட்டன. மக்களுக்கு அரசர் மேலும், இராணுவத் தலைவர்களின் மேலும், அரசாங்க மந்திரிகளின் மேலும் இருந்த நம்பிக்கை அடியோடு அற்றுப் போய்விட்டது. இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணமாயிருந்த ரஸ்புட்டின் நாட்டிலுள்ள பெருந்தொகையான மக்களால் வெறுக்கப் பட்டார். இழிவான, தந்திரபுத்தியுள்ள, தனது சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சாதுர்யமாக செயற்படும், அதிகார ஆசைகொண்ட கொடியவன் என்று தலைநகரில் மூலைமுடுக்கெல்லாம் ரஸ்புட்டினைத் தூற்றினர்.

இதற்கெல்லாம் ஒரு தீர்க்கமான முடிவு கட்டவேண்டும் என்று அரச குடும்பத்திற்குள்ளேயே ஒரு சிலரால் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவர்களுக்கெதிராக கிளர்ந்தெழுந்த மக்களோடு அரசியாரின் சகோதரி எலிசவெற்றா வியோடேறோவ்னா (Elizaveta Feodorovna) வும், அரசாங்கத்தில் இருந்த பலரும், மதகுருமார்களும் இணைந்துகொண்டார்கள். இவர்களோடு சேர்ந்து இளவரசர் நிக்கொலஸ் பீலிக்ஸ் யுசெப்போ (Nikolas Feliks Yussupov) வும் போர்க்கொடி தூக்கினார்.

◆◆



22

ஃபீலிக்ஸ் யுசெப்போ

∴பீலிக்ஸ் சுமாரக்கோவ்-எல்ஸ்டன் (Felix Sumarakov-Elston) இற்கும் சினேயிட் யுசெப்போ (Zenaide Youssoupov) இற்கும் 1882 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 4 ஆம் திகதி திருமணம் நிகழ்ந்தது. சினேயிட் யுசெப்போ அவர்களின் அழகே தனியானது. பார்ப்பவர்களைத் தன்வசம் கவர்ந்திழுக்கும் அழகுப் பொம்மையாகத் திகழ்ந்தார். தெய்வ பக்தியும், நற்பண்புகளும் நிறைந்த நாகரீகமான பெண்ணாக வளர்ந்தவர். பிரபுக்களின் பரம்பரையில் பிறந்தபோதிலும் யாருடைய மனங்களும் கோணாமல் சகலரையும் சமமாக மதித்து நடப்பவர். அவருக்கு சித்திர வேலைப்பாடுகள், சங்கீதம், சங்கீத நாடகம், பலே நடனம் என்பன மிகவும் பிடித்தவை. கணவரான ∴பீலிக்ஸ் சுமாரக்கோவ்-எல்ஸ்டன் அவர்களுக்கு இவைகளில் அவ்வளவு ஈடுபாடு இல்லாவிட்டாலும் தனது அன்பு மனைவியின் அபிலாஷைகளுக்கு ஒருபோதும் தடையாக இருந்ததில்லை.

பல நூற்றாண்டுகளாக அரசகுடும்பத்திற்கு விசுவாசமாகத் தமது சேவைகளை யுசெப்போ குடும்பம் ஆற்றி வந்திருக்கின்றது. கிட்டத்தட்ட தொள்ளாயிரம் பட்டப்பெயர்களுள்ள பிரபுக்கள் ரஷ்யாவிலே வாழ்ந்து

வந்தனர். ஆனால் ஒரு சிறு பகுதியினர்தான் யுசெப்போ குடும்பத்தினர் போல் பெருந்தொகையான செல்வங்களைப் பலவழிகளாலும் குவித்துக்கொண்டே இருந்தனர். இப்படிப்பட்ட பிரபுக்கள் எவராலும் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாத செல்வச் செழிப்புடன் விலைமதிப்பற்ற அரண்மனைகளிலேயேதான் வாழ்ந்துவந்தார்கள். கோடை காலத்தில் வாழ்வதற்கு ஒரு மாளிகையும் குளிர்காலத்தில் வாழ்வதற்கு இன்னொரு மாளிகையுமாக பல மாளிகைகள் அவர்களுக்கு இருந்தன. ஆனால் யுசெப்போ குடும்பமே ரஷ்யாவில் இருந்த மற்றைய எல்லோரையும்விட பணத்திலும், சமூக அந்தஸ்திலும் தலைசிறந்து விளங்கியது.

சினேயிட் யுசெப்போ அவர்களிடம் அரச குடும்பத்திற்கு அடுத்தபடியாக விலைமதிப்பற்ற, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வைரக்கற்களும், இரத்தினக்கற்கள் கொண்ட ஆபரணங்களும், கிரீடங்களும், கொக்கிகளும், ஒட்டியாணங்களும், வளையல்களும், காதணிகளும், முத்துமணி மாலைகளும் வகை வகையாக இருந்தன. பல தலைமுறைகளுக்குப் போதுமான செல்வம் அவர்களிடத்தில் இருந்தது. ரஷ்ய இராச்சியத்திலே மிகவும் அதிகாரமுள்ள, செல்வந்தர்களாக யுசெப்போ குடும்பம் விளங்கியது.

இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போ பெற்றோருக்கு இரண்டாவது பிள்ளை. மூத்த ஆண் பிள்ளைக்கு அடுத்ததாக நிச்சயம் ஒரு பெண் பிள்ளைதான் பிறக்கும் என்று எண்ணிய சினேயிட் யுசெப்போ பிறக்கப்போகும் பெண் பிள்ளைக்கென மிகவும் அழகான வேலைப்பாடுகள் அடங்கிய ஆடைகளை தயாரித்து வைத்திருந்தார். ஆனால் அவர்கள் எதிர்பாராதபடி பங்குனி மாதம் 23 ஆம் தேதி ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது.

எதிர்பார்த்த குழந்தை ஆணாகப் பிறந்தபோதும் தனது ஏமாற்றத்தை ஈடுசெய்வதற்காக தான் தயார்படுத்தி வைத்திருந்த பெண் குழந்தைளின் ஆடைகளையே ஐந்து வயதுவரை அணிவித்து அழகு பார்த்தார். விக்டோரிய சமூகத்திலே ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும் தளர்ந்த, நீளமான ஆடைகள் அணிவிப்பதும், தலைமுடியை வாரி அவற்றிற்கேற்ப பொருத்தமான நாடாக்களால் கட்டிவிடுவதும் அபூர்வமானவையல்ல.

இப்படியாக ஆண் மகனை பெண்ணாக அலங்கரித்துப் பார்ப்பது பெற்றோரின் ஆசையாக இருந்தபோதிலும் ஆண்பிள்ளைகள் அவற்றைப் பெரிதாக விரும்புவதில்லை. வளர்ந்த பின்னர் அவற்றை எண்ணி எண்ணி வெட்கப்படுவார்கள். ஆனால் இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போ பீலிக்ஸ் இதனை எண்ணி பெருமையடைந்தாரே தவிர ஒருபோதும் வருத்தமடையவில்லை.

இளவரசர் யுசெப்போ சிறு குழந்தையாக இருந்தபோதே நோயாளியாகவே இருந்தார். தனது குழந்தைப்பருவத்தின் பெரும்பகுதியை படுக்கையிலேதான் கழித்தார். இவருக்கு நித்திரையில் நடக்கும் பழக்கமும் இருந்தது. அப்படியாக நடக்கும்போது எங்காவது விழுந்து அடிபட்டுவிடாமல் அரண்மனை வேலைக்காரர்கள் இரவு முழுவதும் கண்விழித்து இவரைப் பின்தொடர்ந்தபடியே இருப்பார்கள்.

சிறுவனைப் பராமரிக்கவும், பாடம் சொல்லிக்கொடுக்கவும் பல வேலையாட்களும், ஆசிரியர்களும், தாதிமார்களும் நியமிக்கப்பட்டார் கள். முதலில் இளவரசரைப் பராமரிக்க வந்த ஜேர்மன் தாதியினால் இளவரசனின் கட்டுக்கடங்காத தன்மையைச் சமாளிக்க முடியவில்லை. பணத்திற்காக அரச குடும்பத்தில் வேலைக்குச் சேர்ந்தவர், இறுதியில் ஒரு மனநோயாளராக மாறிவிட்டார். அதன்பின்னர் அவர் மனநோயாளர் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார். அடுத்தடுத்து வந்தவர்களும்

தம்மால் இயலாமையால் ஒவ்வொருவராக விலகி விலகிச் சென்று விட்டார்கள்.

இதனைக்கண்ட பெற்றோர் ரஷ்ய, ஆங்கில, ∴பிரெஞ்ச், சுவிஸ் நாட்டைச் சேர்தவர்களை ஆசிரியர்களாக நியமித்தார்கள். ஆனால் யாராலும் இளைஞனை நல்வழிப்படுத்தவோ, கல்வி கற்பதில் ஆர்வத்தை வரவழைக்கவோ முடியவில்லை.

சிறுவன் ஒரு நாயை வளர்த்தார். அதனை வைத்துக்கொண்டு செய்யாத குறும்புகள் இல்லை. விருந்துபசாரங்களின்போது அந்த நாய்க்கு 'சொக்லெட்டும், சாம்பெயினும்' நன்றாக ஊட்டிவிட்டு விருந்தினரிடையே ஓடவிடுவார். மதுபோதையில் இருக்கும் அந்த நாய் எடுப்பாக வந்திருக்கும் விருந்தினரின் மேல் தனது காலை உயர்த்தி தனது கருமங்களை ஆற்றிவிடும். இப்படி எத்தனையோ. இளவரசரின் இப்படியான குறும்பான பொழுதுபோக்குகளினால் அவரின் பெற்றோர் களுக்கு எந்நேரமும் தலையிடிதான்.

குழந்தையாக இருந்தபோது பெண்பிள்ளைகளின் ஆடைகளைப் பெற்றோர் அணிவித்து மகிழ்ந்தார்கள். குழந்தை வளர்ந்து பன்னிரண்டு வயதினை அடைந்தபோது தானாகவே பெண் பிள்ளைகளின் ஆடை களை அணிந்துகொள்வதில் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கினார். இப்படியாக பெண் வேடம் அணிவதற்கு அவருடைய அழகிய தோற்றம் ஒரு முக்கிய காரணமாக இருந்தது. தாயாரின் அழகிய மூக்கும், வாயும், அழகிய கருநீல விழிகளும், பார்ப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் நீண்ட புருவங்களும், தந்தையிடமிருந்து பெற்ற கேசமும், உடல்வாகும் காரணமாக இருந்தன.

ஒருமுறை பள்ளிக்கூட ஆசிரியருடன் இத்தாலி நாட்டிற்கு சுற்றுலா சென்றுவர அனுப்பினர். ஒருநாள் இரவு ஆசிரியர் வெளியே

சென்றுவிட்டார். அவர் வெளியே சென்றவுடன் இளவரசரும் இரகசியமாக வெளியே சென்று இரவுவேளைகளில் என்ன நடக்கின்றது என்று அறிய ஆவல் கொண்டார். சிறிது நேரத்தின் பின்னர் களியாட்டங்களில் பிரபல்யமான ஒரு விடுதியை அடைந்தார். அங்கே பல நிர்வாணமாண பெண்கள் மத்தியில் அகப்பட்டுக்கொண்டார். அந்த விடுதியின் உரிமையாளரான பெண் இவரைக்கண்டதும் டம்ளர்களில் 'சாம்பெயினை' கொண்டுவந்து கொடுத்தார். அடுக்கடுக்காக வந்த டம்ளர்களைக் காலி செய்தபின்னர் இளைஞனுக்கு மதுமயக்கம் தலைக்கேறிவிட்டது. நடக்கவே முடியாமல் தடுமாறியதைக் கண்டவுடன் அங்கிருந்த பெண்கள் எல்லோரும் விலகிச் சென்றுவிட்டார்கள். அந்தவேளையில் அங்கே வந்த ஆசிரியரை இளவரசர் கண்டுவிட்டார். இளவரசனைக் கண்டுவிட்ட ஆசிரியர் தனது சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியாமல் மேலும் 'சாம்பெயின்' போத்தலொன்றைக் கொடுக்கும்படி உத்தரவிட்டார். இதன் பிறகு பகலில் சுற்றுலாவும், இரவில் மதுபானக் கடைகளிலும், விலைமாதர்களின் விடுதிகளிலும் பொழுதைக் கழித்தார்.

இத்தாலியிலிருந்து திரும்பியபின்னர் இளவரசரைக் கட்டுப்படுத்து வது மிகமிகக் கடினமாக இருந்தது. உடனே அந்த ஆசிரியரை அகற்ற இளவரசரின் தந்தையார் முன்வந்தபோதும் தாயார் விடவில்லை. சில காலத்தின் பின்னர் அந்த ஆசிரியர் இளவரசரின் கரைச்சல்கள் தாங்கமுடியாமல் தானாகவே தனது பதவியைத் துறந்துகொண்டு சென்றுவிட்டார்.

தந்தையார் ஒருமுறை இளவரசனுடைய அறையிலுள்ள எல்லா தளவாடங்களையும் அகற்றிவிட்டு இராணுவத்தினர் படுக்கும் படுக்கை ஒன்றையும், இருப்பதற்கு ஒரு சிறு கதிரையும், ஒரு பெரிய பெட்டியையும் மட்டும் கொடுத்திருந்தார். மறுநாள் வேலைக்காரர்கள் இளவரசரைப் பிடித்து அவரது ஆடைகளை அகற்றிவிட்டு அந்தப் பெட்டியினுள் வைத்துப் பூட்டிவிட்டார்கள். மறுகணம் கடும் குளிரான நீர் இளவரசன்

மேல் ஊற்றப்பட்டது. அதிர்ச்சியினால் தாக்கப்பட்ட இளவரசன் உரத்த குரல் கூச்சலிட்டுக் கத்தினார். பெட்டியைத் திறந்துவிட்டதுதான் தாமதம் இளவரசன் நிர்வாணமான உடலுடன் அரண்மனையைவிட்டு வெளியேறி காவலர்களையும் தாண்டி ஓடிச்சென்று அருகில் இருந்த மரங்களின் பின்னால் மறைந்திருந்தார். காவலர்கள் தேடிப்பிடித்தபோது இனிமேல் இப்படியாக தன்னை நடத்தக்கூடாது என்று தந்தையிடம் உத்தரவாதம் வாங்கியபின்னரே பெற்றேரின் இருப்பிடத்திற்குத் திரும்பிவர சம்மதித்தார்.

இளவரசரின் தந்தையார் இவரை இராணுவப் பாடசாலைக்கு அனுப்பி படிக்க வைக்க விரும்பினார். ஆனால் இதனை அறிந்த இளவரசர் வேண்டுமென்றே புகுமுகப் பரீட்சைகளில் நன்றாக எழுதாமல் விட்டார். இதனை அடுத்து சென்ட் பீட்டர்ஸ்பர்க் (St Petersburg) இலுள்ள உயர்நிலைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு விரும்பினார். அங்கு இளவரசரைவிட பலமடங்கு கட்டுக்கடங்காத மாணவர்கள் கல்வி கற்றுவந்தனர். இளவரசர் அந்தப் புகுமுகப் பரீட்சைகளிலும் வேண்டுமென்றே நன்றாக எழுதாமல் விட்டார். இதனையறிந்த பெற்றோர் இளவரசரை பரீட்சைகள் எதும் இல்லாமலே பாடசாலைக்கு அனுமதிக்க வேண்டுமெனக் கூறி அங்கே படிக்க வைத்தனர்.

அங்கே சென்று படித்துவிட்டு வெளியேறிய இளவரசர் பழையபடி விருந்துபசாரங்களிலும், மதுபானங்களை ருசிப்பதிலும் கூடிய கவனத்தைச் செலுத்தினார். தனது ஆசைகளைப் பூர்த்திசெய்வதிலும், அவற்றிற்குத் தடையாக இருப்போரின் மேல் எரிந்துவிழுவதுமாகவே இருந்தார். பெற்றோரின் நண்பர்கள் இளவரசரை வெட்கம் இல்லாத முரடன் என்றார்கள். பார்ப்பதற்கு கண்கவரும் அழகன்தான் ஆனால் கர்வம் நிறைந்தவன் என்றார்கள். தனது இன்பங்களிலே மட்டும் கவனமுள்ள தூய்மையற்றவன் என்றார்கள். அவர்கள் ∴பிரெஞ்சு மொழியில் ஏதாவது கேட்டால் வேண்டுமென்றே ரஷ்ய மொழியில்தான்

பதில் கூறுவார். இது அவர்களுக்கு இளவரசன்மேல் மேலும் மேலும் வெறுப்பை ஊட்டியது.

ஒருநாள் மாலை பெற்றோர் இருவரும் வெளியே சென்றவுடன் இளவரசரும் அவரது உடன்பிறவாத சகோதரன் விலடிமர் லசுறோவ் (Vladimir Lazurov) இருவரும் சேர்ந்து தாயாரின் ஆடைகளையும், ஆபரணங்களையும் திருடி அணிந்துகொண்டு, பொருத்தமான தலைமுடியையும் அணிந்துகொண்டு, அழகான பெண்கள்போல் தம்மை அலங்கரித்துக்கொண்டு வெளியே சென்றார்கள். வழியில் குடிவெறியில் இருந்த சிலர் இவர்களை விலைமாதர்கள் என்று எண்ணி ஆசையாகப் பேசத்தொடங்கினர். குடிவெறியர்களின் பிடியிலிருந்து தப்புவதற்காக அருகிலிருந்த விடுதிக்குள் புகுந்தனர். அடுக்கடுக்காக 'சாம்பெயினை' வரவழைத்துக் குடித்தார்கள்.

மது தலைக்கேறியவுடன் தாயாரின் முத்துமாலையைக் கழற்றி அருகிருந்த மேசையில் இருந்தவர்களின் தலையை நோக்கி வீசினார். மாலையின் நூல் அறுந்து விலையுயர்ந்த முத்துக்கள் எல்லாம் நிலத்தில் வீழ்ந்து சிதறின. இதனைக்கண்ட விடுதியின் முதலாளி இவர்களை அழைத்து விசாரித்தபோது தாம் யாரென்ற உண்மையை ஒத்துக் கொள்வதைத்தவிர வேறெதையும் செய்ய இவர்களால் முடியவில்லை. இதனையறிந்த இளவரசரின் தந்தையார் அவமானம் மேலிட கடுங்கோபத்திற்கு உள்ளானார். அடுத்து வந்த பல கிழமைகளாக இளவரசரை வெளியில் எங்கும் விடாமல் அவரது அறையினுள்ளேயே அடைத்து வைத்திருக்கச் செய்தார். உடன்பிறவாச் சகோதரனை தன் முன்னே வரவேண்டாம் என்று இளவரசனின் சிற்றன்னை தண்டனை விதித்தார்.

எப்படித்தான் தண்டனை கொடுத்தபோதிலும், தனிமையில் தடுத்து வைத்திருந்தபோதிலும் இளவரசனுக்கு தன்னை ஒரு பெண்போல

பிறர் அறியாமல் அலங்கரித்து இன்பங்காண்பதில் இருந்த ஆனந்தம் அளவற்றிருந்தது. இதற்கு அவரது அண்ணன் நிக்கலஸ் (Nicholas) அவ்வப்போது அனுசரணையாக இருந்துவந்தார். ஒருமுறை ஒரு சங்கத்திலே தம்பியான யுசெப்போ பிலிக்ஸ் இற்கு யாருக்கும் தெரியாமல் மாறுவேடமிட்ட பெண் உருவில் பாடல்கள் பாடுவதற்கு ஒழுங்குகள் செய்தார். மிகவும் அருமையாகப் பாடல்களைப் பாடி பாராட்டுக்களை யும் பெற்றார். ஆனால் ஒருநாள் இவர் அணிந்திருந்த தாயாரின் ஆபரணத்தை அடையாளங்கண்டுவிட்டு ஒருவர் அவரது தாயாரிடம் இவ்விடயம் பற்றிக் கூறிவிட்டார்கள். இந்தத்தடவை இதற்கான குற்றச்சாட்டை அண்ணன் தன்னுடையது ஆக்கிக்கொண்டார்.

எச்சிரிக்கைகளும், தண்டனைகளும் எதுவித தாக்கத்தையும் இளவரசரிடம் ஏற்படுத்தவில்லை. தான் விரும்பிய இடத்திற்கெல்லாம் விரும்பிய வேளைகளில் சென்றுவர இந்த மாறுவேடம் உற்ற துணை புரிவதாக உணர்ந்தார். இன்னெரு நாள் இன்னொரு விடுதியில் பெண்வேடம் தரித்த இளவரசர் அங்கு மது அருந்திக்கொண்டிருந்த நான்கு அதிகாரிகளின் அழைப்பை ஏற்று அவர்களுடைய பிரத்தியேக அறைக்குச் சென்றார். மதுபோதையில் காமவெறி தலைக்கேறிய நிலையில் இருந்த அந்த நால்வரும் இளவரசரின் அழகில் மயங்கி அவருடைய ஆடைகளை ஒவ்வொன்றாகக் களைய முனைந்தனர். தனது சுயரூபம் அம்பலமாகப் போவதை உணர்ந்த இளைஞர் அருகிலிருந்த மதுப்போத்தலை எடுத்து அங்கே தொங்கிக்கொண்டிருந்த கண்ணாடியை நோக்கி எறிந்தார். எரிந்துகொண்டிருந்த விளக்குகளை அணைத்தார். எவருக்கும் தெரியாமல் இருளிலே மறைந்தபடி அங்கிருந்து இரகசியமாக வெளியேறிவிட்டார்.

நாளுக்குநாள் அதிகரித்துவரும் இளவரசரின் அசிங்கமான செய்கைகளினால் ஆத்திரமடைந்த தந்தை தனது மகனை 'இவன் ஓர் இழிவான அயோக்கியன், இவனால் எமது பரம்பரைக்கே இழுக்கு,

இவன் இருக்கவேண்டிய இடம் மெய்கா கானல் (Moika Kanal) அல்ல சைபீரிய சிறைச்சாலை' என்று பலவாறு தனது ஆத்திரம் தீரும்வரை எரிந்து விழுந்தார்.

இதன்பிறகு இளவரசனில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. தலைநகரில் இப்படியாகப் பெண்வேடம் போடுவதை நிறுத்தினார். ஆனால் தான் பிரயாணம் செய்த .ிபிரான்ஸ் போன்ற வெளிநாடுகளில் மீண்டும் இதுபோல் மாறுவேடம் தரித்து மகிழ்ந்தார்.

அண்ணனுடன் .ிபிரான்ஸின் தலைநகரான பாரீசில் வாழ்ந்தபோது இருவரும் மிகவும் அருவருக்கத்தக்க கெட்ட நடத்தையுள்ள வாழ்வையே மேற்கொண்டனர். இரவுநேர விருந்துகளில் கலந்து கொள்வதும், உணவு விடுதிகளுக்குப் போவதும், போதைப் பொருள் களைப் புகை பிடிப்பதும், கூதாடுவதும், மூக்குமுட்டக் குடித்துவிட்டு மயங்கிக்கிடப்பதுவும் நாளாந்தம் நடக்கும் ஒன்றாகிவிட்டது.

இளவரசர் தனது பதினெட்டாவது வயதை அடைந்தபோது தன்னைப்பற்றி ஏனையோர்கள் என்ன சொன்னாலும் அவற்றையெல்லாம் தட்டிக் கழித்துக்கொண்டு எதிலும் அக்கறை கொள்ளாமலே இருந்தார். ஆனால் தனக்குப் பிடித்த இடங்களில் மட்டும் அடக்கமானவர்போல் இருப்பார். காலம் செல்லச்செல்ல தலைநகரிலுள்ள செல்வந்தர்களின் ஆடம்பரமான வாழ்க்கை முறைகளுடன் தன்னையும் இணைத்துக் கொண்டார்.

இளவரசர் பீலிக்ஸ் யுசெப்போ இருபது வயதை அடைந்தபோது இப்படியான கூடாத பழக்கவழக்கங்களை நன்றாகவே பழகி வைத்திருந்தார். மது, போதைப் பொருள்கள் இவற்றோடு பாலுணர்வுக் கேளிக்கைகளிலும் இவருக்கு இப்போது நாட்டம் அதிகமாகியது. .ிபிரான்ஸ் நாட்டில் விடுமுறைக்காகச் சென்றிருந்த பன்னிரண்டு வயதான

யுசெப்போ பீலிக்ஸ் ஒருமுறை பாதையில் நடந்துகொண்டிருந்த வேளையில் பக்கத்து அறையினுள் இருவர் உடலுறவு கொள்வதை திறந்திருந்த யன்னலினூடாக கண்டுவிட்டார். ஆனால் அவருக்கு அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை ஊகித்து அறிய அனுபவம் இருக்க வில்லை. தாயாரிடம் கேட்டபோதும் அவர் ஏதேதோ கூறி மழுப்பிவிட்டார். அதில் திருப்தியடையாத இளவரசர் தனியே வெளியில் சென்றபோது தற்செயலாக அந்த ஆண்மகனைச் சந்திக்க நேர்ந்தது. அவரிடம் அதுபற்றிக் கேட்டபோது அவர் இளவரசரை அன்றிரவு அருகிலுள்ள விடுதி ஒன்றிற்கு வருமாறு அழைத்தார்.

அன்றிரவு மீண்டும் சந்தித்தபோது தான் ஆஜென்ரீனாவிலிருந்து வந்தவர் என்று மட்டுமே அவர் கூறினார். அவர் தனது பெண் சினேகிதியையும் இளவரசரையும் அழைத்துக்கொண்டு ஓர் அறைக்குள் சென்றார். இளவரசரின் முன்னால் அந்த இளம் ஜோடிகள் பல ஆபாசமான களியாட்டங்களில் ஈடுபட்டனர். ஆச்சரியத்துடன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த இளவரசன் 'அன்றிரவு எனக்கு ஏற்பட்ட அனுபவம் ஆச்சரியமானதும், புதுமையானதுமாக இருந்தது. எனது இளமையின் அறியாமையால் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டை இதுவரை அறியாது இருந்துவிட்டேன்' என்றும் கூறினார்.

பெண்களுடன் ஆரம்பித்த காதலும், பாலுணர்வுக் களியாட்டங் களும் பின்னர் ஆண்களுடனும் ஆரம்பமாகின. ஆனால் எவருடனும் அவை அதிக காலம் நீடித்திருக்கவில்லை. இதற்கு அவரே காரணம் கூறினார்;

'நான் என்னைத் தவிர யாரையும் பற்றி அக்கறை கொள்வதில்லை' என்றார். 'இனிமையான, சுவாரசியமான பெண்கள் என்றால் எனக்கு விருப்பம். எனது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சிலரைச் சந்தித்தேன். அதைவிட விசுவாசமும் பாரபட்சமுமற்ற

ஆண்களே சிறந்தவர்களெனக் கூறுவேன்' என்றார். இதிலிருந்து இவரது சுயநலம் தெரிகிறது. இரு பாலாருடனும் இவருக்கிருக்கும் பாலுணர்வின் பற்றுதல் தெரிகிறது. ஆனாலும் பலரால் இவரின் இரகசியங்களைப் புரிந்துகொள்ள முடியாமலே இருந்தது.

ரஸ்புட்டினும் பாலுணர்வுகளுக்கு அடிமைப்பட்டு சிலவேளைகளில் என்ன செய்கிறேன் என்று தெரியாமல் சில காரியங்களைச் செய்வார். சுயநலக்காரன், குடிகாரன், போலிச்சாமியார், காம இராட்சகன் என்றெல்லாம் பலராலும் பலவிதமாக வர்ணிக்கப்படுவார். அதேபோல்தான் இளவரசர் பீலிக்ஸ் யுசெப்போ அவர்களும் வர்ணிக்கப்பட்டார்.

◆◆



23

கடைக்கண் பார்வை செய்த கொடூரம்

1908 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி அதிகாலை வேளை. தலைநகரை அண்மித்த வெளியொன்றில் காலைப்பனி இன்னமும் முற்றாகக் கலையவில்லை. இருப்பினும் ஆகாயத்தில் காலைச்சூரியன் தாழ்வாகப் பறந்துகொண்டிருக்கும் முகில்களினூடே தனது கதிர்களை நுழைக்க முற்பட்டுக்கொண்டிருந்தான். முன்னர் அறிவித்ததின்படி குதிரைவண்டி ஒன்று அங்கே வந்து நின்றது. அதிலிருந்த பலரும் எதுவித சத்தமும் இல்லாமல் அங்கே இறங்கினர். அதிலிருந்த மரத்தினால் ஆன பெட்டி ஒன்று இறக்கப்பட்டது. பெட்டி திறக்கப்பட்டதும் அதற்குள்ளே இருந்த இரண்டு வெள்ளிக் கைத் துப்பாக்கிகளும் மங்கலான சூரிய வெளிச்சத்தில்கூட மினுமினுத்தன.

இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போ முதலாவதாக ஒரு துப்பாக்கியைத் தேர்ந்தெடுத்தார். அடுத்ததாக பிரபு ஆவிட் மன்ருவில் (Baron Arwid Manteufel) தனது துப்பாக்கியைத் தேர்ந்தெடுத்தார். அங்கிருந்த ஒருவர் அவர்கள் இருவரையும் முப்பது அடிகள் தள்ளி

நிற்குமாறு பணித்தார். ஒரு சைகை காட்டியதும் ஒருவரை நோக்கி ஒருவர் தாம் வைத்திருந்த கைத்துப்பாக்கிகளினால் சுட்டனர். முதல் தடவையில் இருவருமே தமது குறிகளைத் தப்பவிட்டுவிட்டனர். மீண்டும் அந்த அதிகாரி இருவரையும் பதினைந்து அடிகள் முன்னே வந்து நிற்கும்படி பணித்தார். அடுத்த சைகை காட்டியதும் மீண்டும் இருவரும் ஒருவரையொருவர் குறிபார்த்துச் சுட்டனர்.

ஒருவருடைய துப்பாக்கி வேட்டு ஆகாயத்தை நோக்கிப் பாய்ந்தது. அடுத்தவருடைய துப்பாக்கி வேட்டு அதிகாலையின் நிசப்தத்தைக் கலைத்துக்கொண்டு அவரது எதிராளியின் இதயத்தைத் துளைத்துக் கொண்டு அருகிலிருந்த காடுகளை நோக்கி விரைந்தது. அடுத்தகணம் குண்டு பட்டவரின் உயிரற்ற உடல் அந்த பனிபடர்ந்த புற்றரையில் பொத்தென்று வீழ்ந்தது.

இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போ இருபத்தைந்து வயதுடைய உயர்ந்த அழகான ஓர் இளவரசர். அரும்பு மீசையும், அப்பாவிடமிருந்து பெற்ற அழகான கறுத்த கேசமும் உடையவர். தலைநகரில் இருந்த இளைஞர்களில் அவரைப்போல் அழகன் இல்லை என்னுமளவிற்கு சிறந்த அழகன். தலைநகரில் ஒருநாள் நடந்த கொண்டாட்டத்தில் சீமாட்டி மரீனா கெய்டன் (Marina Heyden) என்ற அழகியைச் சந்திக்க நேர்ந்தது. இளவரசன் அந்த அழகியைக் கண்டதும் காதல் வயப்பட்டு விட்டார். ஆனால் அந்த அழகி அப்போது பிரபு ஆவிட் மன்ருவில் என்பவரைத் திருமணம் செய்து கொள்ள நிச்சயதார்த்தம் செய்யப்பட்டிருந்தது. பிரபு ஆவிட் மன்ருவில் ஒரு பிரதி படைத்தளபதி யாக பணிபுரிபவர். ஆனால் இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போ போல பெரும் செல்வந்தன் அல்லர். நிச்சயதார்த்தம் செய்யப்பட்டிருந்தபோதிலும் சீமாட்டி மரீனா கெய்டன் தனது வருங்காலக் கணவருக்குத் தெரியாமல் இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போவுடன் கள்ளக் காதல் தொடர்பை ஆரம்பித்தார்.

இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போ தனது பெற்றோரிடமும், சகோதரர் இளவரசர் பீலிக்ஸ் யுசெப்போவிடமும் தான் சீமாட்டி மரீனா கெய்டனைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார். சீமாட்டி மரீனா கெய்டனின் நடத்தையில் இளவரசரின் தந்தைக்கு ஏற்கனவே திருப்தியில்லாமல் இருந்ததினால் இதனை யாருமே ஏற்றுக்கொள்ளவில்லை.

இவர்களுடைய கள்ளக் காதலை அறியாத பிரபு ஆவிட் மன்ருவிடம் சீமாட்டி மரீனா கெய்டன் தமது திருமண நாளைத் தள்ளிப் போடும்படி கேட்டார். கணவனாகப்போகும் புது மாப்பிள்ளை அதற்குச் சம்மதிக்கவில்லை ஆனால் அப்போதுதான் அவருக்கு சந்தேகம் வர ஆரம்பித்தது. ஆனால் அதனை வெளிக்காட்டவேயில்லை. வருங்கால மனைவிக்குத் தெரியாமல் அவரைப் பின்பற்றத் தொடங்கினார். திருமணத்திற்காக நகைகள் வாங்குவதற்காக ∴பிரான்ஸ் நாட்டிற்குச் சென்ற சீமாட்டி மரீனா கெய்டன் இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போவையும் பின்தொடரும்படி அழைத்துச் சென்று அங்கேயும் தமது கள்ளக் காதலைத் தொடர்ந்தனர்.

பலவிதமான பிணக்குகள், பேச்சுவார்த்தைகள், வாக்குறுதிகளின் பின்னர பிரபு ஆவிட் மன்ருவிற்கும் சீமாட்டி மரீனா கெய்டனுக்கும் திருமணம் நடந்தேறியது. மறுநாள் புதுமணத் தம்பதிகள் தமது தேன்நிலவைக் கழிப்பதற்காக ∴பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றனர். பலர் இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போ இத்திருமணத்தை நடக்கவிடாமல் தடுப்பார் என்று எதிர்பார்த்தபோதிலும் அவர் எதுவுமே செய்யவில்லை. தனக்கு சீமாட்டி மரீனா கெய்டனின் மேல் இனிமேல் எதுவித அக்கறையுமில்லை என்று கூறினார். ஆனால் சில நாட்களின் பின்னர் ரஷ்ய இசைக்குழுவோடு ∴பிரான்ஸ் நாட்டுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார்.

அங்கு சென்றதுதான் தாமதம் தனது பழைய காதலியைத் தேடிக் கண்டுபிடித்து காதலியின் புதிய கணவருக்குத் தெரியாமல் அவருடன் உல்லாசமாக பொழுதைக் கழிக்க ஆரம்பித்தார். இது எப்படியோ புதிய கணவனுக்குத் தெரிந்துவிட்டது. இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டுமென எண்ணிய பிரபு ஆவிட் மன்ரு, இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போ இருந்த விடுதிக்கு வந்து இதுபற்றிப் பேசினார். துப்பாக்கி முனையில் இருவரின் பிணக்கைத் தீர்த்துக்கொள்ள வருமாறு அழைத்தார். இளமைத் துடிப்பில் எதுவித பயமும் அறியாதிருந்த இளவரசர் யுசெப்போ அதற்கு உடனேயே சம்மதித்துவிட்டார். ஆனால் இதுபற்றி பெற்றோருக்கு எதுவுமே தெரிவிக்கவில்லை. இதனை மற்றவர்கள் வாயிலாகக் கேட்டறிந்தபோது கூட உண்மையைக் கூறாது மழுப்பிவிட்டார்.

1908 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி அதிகாலை வேளையில் அலறியடித்துக்கொண்டு ஓடிவந்த பீலிக்ஸ் யுசெப்போவின் இன் வேலையாள் 'எல்லோரும் ஓடி வாருங்கள். நடக்கக் கூடாத கொடூரம் நடந்துவிட்டது' என்று கத்திக்கொண்டு வந்தபோதுதான் இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போ சற்றுமுன் நடந்த துப்பாக்கிச் சமரில் இறந்துவிட்ட செய்தி எல்லோருக்கும் தெரியவந்தது.

சில காலமாக தலைநகரையே இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போவின் மரணம் உலுப்பிவிட்டது. எல்லோர் வாயிலும் இதுபற்றிய பேச்சே பேசப்பட்டது. பிரபு ஆவிட் மன்ரு அவரது படைப்பிரிவினர் எல்லோராலும் ஒதுக்கி வைக்கப்பட்டார். பிரபு ஆவிட் மன்ருவிற்கும் சீமாட்டி மரீனா கெய்டனுக்கும் நடந்த திருமணமும் சில காலத்திற் குள்ளேயே விவாகரத்தில் முடிந்தது. இந்த விபரீதங்களுக்கெல்லாம் காரணமாகவிருந்த சீமாட்டி மரீனா கெய்டன் பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று தனிமையில் தனது வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

திருமணமாகவிருந்த மணமகன் திடீரெனக் கொல்லப்பட்டுவிட்டார். அவரோடு சேர்ந்து அவரது கள்ளக் காதலியும் தனிமையில் சென்றுவிட்டார். இந்த ஏமாற்றத்தையும், இரண்டு அதிர்ச்சிகளையும் மறப்பதற்காக இளவரசர் பீலிக்ஸ் யுசெப்போ ஆன்மீகத்தை நாடினார். அரச பரம்பரையிலிருந்து ரஸ்புட்டினை முதல் முதலில் நாடி வந்தவர் களில் இவரும் ஒருவர். இவரும் ரஸ்புட்டின் உண்மையில் மனித வடிவில் இருக்கும் தெய்வம் எனவே நம்பினார்.

ரஸ்புட்டினின் பக்தையான முன்யா கொல்வீனா (Munia Golovina) என்பவருக்கு பீலிக்ஸ் றுசெப்போவின் மேல் அளவு கடந்த காதல் ஏற்பட்டிருந்தது. அவருடைய கவனத்தைத் திருப்பித் தன்பால் இழுக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக முன்யா ரஸ்புட்டினைப் பற்றி பல கதைகளை இளவரசருக்குக் கூறினார்.

'அருமையாகக் கிடைக்கக் கூடிய ஆண்டவனின் கிருபை அவருக்குக் கிடைத்திருக்கின்றது. அவர் ஆண்டவனால் இவ்வுலக மக்களைப் பரிசுத்தமாக்கி நல்வழிப்படுத்தவே அனுப்பப்பட்டிருக்கின்றார். அப்படியான மனிதரை நீங்கள் கட்டாயமாகச் சந்திக்க வேண்டும்' என்று பலவிதமான கதைகளைக் கூறினார்.

பீலிக்ஸ் யுசெப்போ எதனையும் அறியவேண்டும் என்கின்ற ஆர்வம் உடையவர். அதனால் முன்யா கூறுவதை மிகுந்த ஆவலுடன் கேட்டார். 'அப்படியானால் அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்யவும்' என்று கூறினார்.

சிலநாட்கள் கழித்து முன்னரே ஒழுங்கு செய்தபடி பீலிக்ஸ் யுசெப்போ அவர்கள் முன்யா கொல்வீனாவின் தாயாரின் இருப்பிடம் வந்திருந்தார். இது தலைநகரில் கற்களால் கட்டப்பட்டு கம்பீரமாக நிற்கும் கண்கவர் மாளிகைகளில் ஒன்று. வரவேற்பறையில் நின்றிருந்த பீலிக்ஸ் யுசொபோ பன்னலூடாக தோட்டங்களிலும், வீதிகளிலும்

உறைந்துகொண்டிருக்கும் கொட்டிய பனியை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தார். இலைகளை இழந்துவிட்ட உயரிய மரங்களின் கிளைகள் அகன்ற வானத்தை நோக்கி நீண்டிருந்ன. இழந்த இலைகளை மீண்டும் தாருங்கள் என்று கேட்டுத் தவமிருப்பதுபோல் தங்கள் கிளைகளை மேலே நீட்டிக்கொண்டிருந்தன. மாலைச் சூரியனின் கதிர்கள் பட்டு அந்த மாளிகையின் யன்னல் கண்ணாடிகள் தீச் சுவாலையைக் கக்குவதுபோல் பிரகாசித்தன. அவைகளின் தங்க பிம்பங்கள் அருகே அமைதியாகவிருந்த நீவா நதியின் நீரோட்டத்திலே பட்டுத் தெறித்தன.

ரஷ்யாவிலே ஏராளமான செல்வந்தர்கள் இருந்தார்கள் ஆனால் அவர்கள் ஒருவரும் பீலிக்ஸ் யுசெப்போ போல் பெரிய செல்வந்தராகவோ அல்லது அண் அழகனாகவோ இருந்திருக்கவில்லை. நெட்டையான உயர்ந்த உருவம். நீல நிறக் கண்கள். அதற்கு மேலே பெண்களின் புருவங்களை ஒத்த புருவங்கள். தங்க நிறக் கேசம். இருபத்துமூன்று வயதுடைய கர்வமான இளைஞன் எப்போதும் மற்றவரைக் கவரும் வகையிலேதான் ஆடைகளை அணிவார். இன்றையை ரஸ்புட்டினுடனான சந்திப்பிற்கென ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தது அவரது அழகிற்கு மேலும் எடுப்பாகவிருந்தது.

ரஸ்புட்டின் இன்னமும் அங்கு வந்து சேரவில்லை. முன்யாவினதும், தாயாரினதும் முகங்கள் ரஸ்புட்டினின் வரவை பயபக்தியுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தன. அவரின் வரவால் தமது மாளிகையும் ஆசீர்வதிக்கப்படலாம் என்ற எண்ணமும் அவர்களிடம் நிறைந்திருந்தது. இந்த மூவரும் மிகவும் அமைதியாக ரஸ்புட்டினின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். திடீரென்று வரவேற்பு அறையின் கதவு திறக்கப்பட்டது. ரஸ்புட்டின் உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டதும்

பீலிக்ஸ் யுசொபோவிற்கு மனதிற்குள் ஏதோ ஒருவிதமான வெறுப்பு எற்படுவதுபோல் இருந்தது. ஆனால் அதனை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

பீலிக்ஸ் யுசெப்போ உடன் ஒப்பிடும்போது ரஸ்புட்டின் ஒரு சாதாரண மனிதராகவே தென்பட்டார். திடமான உடற்கட்டுடன் கூடிய சுமாரான உயரம். அகன்ற இரு புயங்களுடன் கூடிய நீண்ட கைகள். நடுவில் உச்சியாகப் பிரிக்கப்பட்ட தலைமுடி. நீண்ட மூக்கும், மெல்லிய உதடுகளுடன் கூடிய நீள்வட்ட முகம். நெஞ்சுவரை வளர்ந்து முறுக்கேறிய தாடியுடன் கூடிய மீசை. குறுகிய ஆனால் கூர்ந்து பார்க்கின்ற கூரிய நீல விழிகள. இவைகள் எல்லாவற்றையும் பீலிக்ஸ் யுசொபோ மிகவும் அவதானமாகக் கவனித்தார்.

ரஸ்புட்டினின் நடையில் சிறிது அசௌக்கியம் தெரிந்தது. பார்க்கும் பார்வையிலும் செய்யும் செயல்களிலும் ஏதோ ஒருவகைப் பாசாங்கு தெரிந்தது. விருந்தாளிகளை அமர வைத்துத் தேநீர் விருந்தும், அதன் பின்னர் இரவுப்போசனமும் பரிமாறப்பட்டது. ரஸ்புட்டினின் பேச்சு பீலிக்ஸ் யுசொபோவிற்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது ஆனால் அதிசயத்தைக் கொடுக்கவில்லை. ரஸ்புட்டின் பலவகையான விடயங்களைப்பற்றியும் பேசினார். விரைவான, சரளமான, தெளிவில்லாத பேச்சு. சர்வாதிகாரமான தொனியின் தான் மேலுலகத்திலிருந்து அனுப்பப்பட்டவர் என்ற தோரணையில் இடையிடையே புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட வசனங்களை உள்ளடக்கிய முன்மீகப் பேச்சு.

விருந்துபசாரங்கள் முடிந்து வீட்டிற்குப் பறப்படும்போது ரஸ்புட்டின் பீலிக்ஸ் யுசொபோவைப்பார்த்து 'மிகவும் விசுவாசமுள்ள நண்பரைத்தான் நீர் தேர்ந்தெடுத்திருக்கின்றீர். அவர் சொல்வதை அவதானமாகக் கேட்க வேண்டும். முன்யா உம்மைப்பற்றி என்னிடம்

மிகவும் உயர்வாகக் கூறியிருக்கின்றார். உணமையில் நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவரெனப் பிறந்தவர்கள்தான். நீர் இவருடன் இணைந்து வாழ்க்கைப்பயணத்தில் மிக வெகுதூரம் செல்லலாம்' என்று கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டார். இதுவே இவர்களது முதல் சந்திப்பு.

1905 ஆம் ஆண்டு பயங்கரவாதிகளின் குண்டுவெடிப்பில் பலியான சார்ஜ் வியோடேறோவ்னா (Serge Feodorovna) வின் விதவை எலிசபெற் வியோடேறோவ்னா (Elizabeth Feodorovna) மொஸ்கோவில் (Moscow) வாழ்ந்துவந்தார். இந்த துயரமான சம்பவத்தின் பின்னர் சிறிது காலம் யுசெப்போ குடும்பத்தாருடன் தங்கியிருந்தார். இளவரசர் பீலிக்ஸ் யுசெப்போவிற்கு தன் அண்ணனைக் கொன்றவனை பழிக்குப்பழி வாங்க வேண்டும் போல் இருந்தது. அதனை அவரிடம் தெரிவித்தபோது அவர் அப்படிச்செய்யவேண்டாம் என்று பல புத்திமதிகளைக் கூறித் தடுத்துவிட்டார்.

இளவரசர் பீலிக்ஸ் யுசெப்போவின் தாயார் தனது மூத்த மகனுக்கு நேர்ந்த கதியை எண்ணி எண்ணி கலங்கிக்கொண்டே இருந்தார். சிறுது காலத்திற்குள்ளேயே நரம்புத்தளர்ச்சி நோய்க்கு ஆளானார். முன்பெல்லாம் தினமும் சென்றுவரும் சகலவிதமான கொண்டாட்டங்களைத் தவிர்த்தார். நாடகக் கொட்டகைகளையும், நடன மாளிகைகளையும் தவிர்த்தார். இளவரசர் பீலிக்ஸ் யுசெப்போ தந்தையாரின் வேண்டுதலின்படி தாயாரின் அருகிலேயே அவர் குணமாகும்வரை இருந்தார்.

ஒரு நாள் இளவரசர் .'.பீலிக்ஸ் யுசெப்போ சோலை வழியாக நடந்துகொண்டிருக்கும்போது தனது குடும்பத்தைப் பற்றிப் பலவற்றையும் எண்ணியபடியே நடந்துகொண்டிருந்தார். முன்னர் அண்ணன் இருந்தார், ஆனால் அவர் இப்போது இறந்துவிட்டார். தங்கள் குடும்பத்தில் இருக்கும் ஏராளமான சொத்துகளுக்கெல்லாம் எதிர்காலத்தில் தான் ஒருவரே

உரித்தானவர் என்று எண்ணினார். அந்த எண்ணம் ஆனந்தமாக இருந்தபோதும் இத்தனை மாளிகைகளையும், பண்ணைகளையும், விலையுயர்ந்த ஆபரணங்களையும் எப்படிக் கட்டிக் காப்பது என்று எண்ணியபோது அந்த எண்ணமே இளவரசரை என்னவோ செய்தது. மொஸ்கோவிற்குச் சென்று எலிசபெற் வியோடேறோவ்னாவிடம் இதுபற்றிப் பேசிப்பார்ப்போம் என்று எண்ணியபடி காலத்தை ஓட்டினார்.

எலிசபெத் வியோடேறோவ்னா (Elizabeth Feodorovna) யுசெப்போ பீலிக்ஸ் இற்குத் தாய் போன்றவர். தனது கணவர் கொலை செய்யப்பட்டதன் பின்னர் தன்வசமிருந்த உடமைகள், திருமண மோதிரம் உட்பட பலவகையான ஆபரணங்களை விற்று அப்பணத்தைக்கொண்டு நாட்டிலுள்ள ஏழைகளுக்கு தன்னாலான உதவிகளைச் செய்துவந்தார். மிகவும் தெய்வ பகதியுடையவர். இவர் மொஸ்கோ (Moscow) வில் கன்னியர் மடம் ஒன்றை ஆரம்பித்து அதன் தலைவியாக அதன் பணிகளை முன்னின்று கவனித்து வந்தார். வறியவர்களுக்கும், நோயால் வாடுபவர்களுக்கும் தன்னால் ஆன பணிகளைச் செய்பவர். இதனால் மக்கள் எல்லாம் இவரை அன்னை மேரிக்கு அடுத்ததாக வைத்து மிக்க மரியாதை செய்தனர். செல்லுமிடமெல்லாம் தூய துறவிக்கு இணையாக வரவேற்று உபசரித்தனர்.

அங்குசென்று அவரைக் கண்ட இளவரசர் பீலிக்ஸ் யுசெப்போ தனது அண்ணனுக்கு நடந்த கொடூரத்தின் சோகமும், புதிதாகக் கொடுக்கப்பட்ட பல பொறுப்புக்களும் மேலிட அவரது காலடியில் வீழ்ந்து அடக்கமுடியாத துயரத்தினால் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

'மாளிகையில் வாழ்வதாலோ, மலைபோல குவிந்திருக்கும் செல்வங்களாலோ மனம் மகிழ்ச்சியாக இருந்துவிட முடியாது' என்றார். அதற்கு அவர் 'நீ கூறியது சரிதான். இவைகள் எல்லாம் இழந்துவிடக் கூடியவை. ஆனால் உண்மையான சந்தோஷத்தை எந்த மனிதனாலோ

அல்லது எந்த சம்பவத்தினாலோ உன்னிடமிருந்து எடுத்துவிட முடியாது' என்றார்.

இளவரசர் எலிசபெற் வியோடேறோவ்னாவின் இருப்பிடம் தேடி மீண்டும் சென்றார். அவருடன் மனம் திறந்து பேசினார். தனக்கிருக்கும் கவலைகளையும், தன்னிடமிருக்கும் குறைகளையும் எடுத்துக் கூறினார். அதற்கு சிற்றன்னை 'ஒருவர் வாழ்வில் சரியான பாதையில் நடந்தால் மற்றவர்களுக்கு எவ்வளவு கெட்டவற்றைச் செய்ய முடியுமோ அவரால் மற்றவர்களுக்கு நல்லவற்றையும் செய்யமுடியும். எவ்வளவு கொடூரமான குற்றத்தைச் செய்தபோதிலும் அவற்றிற்காக உண்மையாக வருந்தினால் அந்தக் குற்றங்களிலிருந்து இழந்தவற்றை மீண்டும் பெறமுடியும். தெய்வரீதியான பாவங்களால் மட்டும்தான் ஆத்மாவை மாசுபடுத்த முடியும். சிற்றின்பத்திற்கு அடிமையானலும் ஆத்மா பரிசுத்தமாகவே இருக்கும். நான் உனது ஆத்மாவைப் பற்றித்தான் சிந்திக்கிறேன். அதனை எதிர்காலத்திற்காகப் பாதுகாக்க விரும்புகிறேன்' என்றார்.

இந்த அறிவுரைகளைக் கேட்டதும் இளவரசரின் மனத்தில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. தனது எதிர்காலத்தை நோக்கிய புதிய நம்பிக்கைகளையும், புதிய உற்சாகத்தையும் அவை ஏற்படுத்திவிட்டதாக எண்ணி சிறிது மன ஆறுதல் அடைந்தார். அதன் பின்னர் இளவரசருடைய போக்கு அவரைச் சார்ந்தோருக்கும் ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது.

இளவரசரிடம் இருக்கும் பெருந்தொகையான செல்வங்களை எப்படியாக தர்ம சாதனங்கள் வழியாக ஏழைகளுக்குப் பயனடையச் செய்யலாம் என்று விளக்கினார். தன்னுடன் இணைந்து பணியாற்றும் படியும் கேட்டார். இளவரசரும் அதற்குச் சம்மதித்தார்.

எலிசபெற் வியோடேறோவ்னாவுடன் சேர்ந்து ஏழைகளுக்கான பணிகளை ஆரம்பிக்கு முன்னர் தலைநகரில் பல தொழிலாளர்களும்,

ஏழைகளும் வாழுகின்ற லாவா மாகாணத்திற்குச் சென்று வரவிரும்பினார். இதற்கு முன்னர் அங்கே சென்றுவர அப்படி ஒருபோதும் துணிந்த தில்லை. தன்னுடைய இரண்டு நண்பர்களையும் அழைத்துக்கொண்டு பிச்சைக்கார வேடமிட்டுக்கொண்டு அங்கே சென்றார். வீதியோரத்தில் நின்றுகொண்டு வருவோர் போவோரிடம் பிச்சை கேட்டார். பெரும் வசதிகள் படைத்தவர்கள் எவரும் அங்கிருப்பவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இது இளவரசருக்கு மிகுந்த கோபத்தை உண்டு பண்ணியது.

அடுத்து ஏழைகளை வைத்துப் பராமரிக்கும் ஓர் விடுதிக்குச் சென்றனர். அது எல்லாவற்றையும் விட கேவலமாக இருந்தது. அரை நிர்வாண ஆண்களும் பெண்களும் அழுக்கேறிய ஆடைகளுடன் அலங்கோலமாகக் கிடந்தார்கள். மதுப் போத்தல்களை இடைவிடாது காலி செய்வதும், காலியான போத்தல்களை அடுத்தவர் மீது எறிந்து விளையாடுவதும், மதுபோதையில் வாய்க்குவந்த வார்த்தைகளால் ஒருவரையொருவர் ஏசுவதும், வயிற்றைக் குமட்டி ஒருவர்மீது மற்றவர் வாந்தி எடுப்பதுமாக இருந்தார்கள். அந்த இடத்திலிருந்து அடக்கமுடியாத துர்நாற்றம் வீசிக்கொண்டேயிருந்தது. அந்த இடத்தில் அதிக நேரம் அவர்களால் இருக்க முடியவில்லை. ரஷ்ய அரசாங்கம் இந்த மனிதர்களின் வாழ்கையை ஏன் இப்படிப் பரிதாபகரமான நிலையில் விட்டுவைத்திருக்கின்றது என்ற கேள்விக்கு இளவரசரால் விடை காணவே முடியவில்லை. ஆனால் அங்கே கண்ட காட்சிகள் இளவரசரை அதிக நாட்களாக அலக்கழித்துக்கொண்டே இருந்தன.

எலிசபெற் வியோடேறோவ்னாவுடன் இணைந்து கிற்றோவா மாகாணத்தில் (Khitrova District) தர்ம வேலைகளில் ஈடுபட்டபோது தான் முன்னர் லாவா மாகாண வீதியிலும், விடுதியிலும் கண்ட காட்சிகள் எல்லாம் சாதாரணமானவையாகவே தென்பட்டன. விடியாத இருள்

கவிந்த வீதிகளில் மக்களால் கழிக்கப்பட்ட மலசலங்களிலிருந்தும், வாந்திகளிலிருந்தும் கொடிய நெடி வீசிக்கொண்டிருந்தது. அடுத்திருந்த கட்டிடங்கள் விலைமாதர்களின் வசிப்பிடமாகவும், மதுபானக் கடைகளாகவும், விடுதிகளாகவுமே இருந்தன. பலர் வீதிகளிலேயே தமது இரவையும் பகலையும் கழித்தனர். வீதிகளின் மூலை முடுக்கெங்கும் திருடர்களும் கொலைகாரர்களும் மறைந்திருந்து வருவோர் போவோரை எல்லாம் வழிப்பறி செய்தனர். எதிர்ப்படுவோரை எதுவித காரணங்களுமின்றிக் கொலைகளும் செய்தனர்.

ஒரு போத்தல் மதுவுக்காகவும், அணிந்திருக்கும் அழுக்கேறிய ஆடைகளுக்காகவும் கத்தியாலும், உடைந்த போத்தல்களாலும் குத்தியும், கழுத்தைத் திருகியும் கொலை செய்யப்படுவார்கள். விலை மாதர்களுக்கும் இதே நிலைதான். காலை வேளைகளில் பொலிஸ் அதிகாரிகள் பல வண்டிகளில் வந்து அநாதரவாகக் கிடக்கும் சடலங்களை எடுத்துச் சென்று மொஸ்கோவில் இருக்கும் மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பிவிடுவார்கள். யார் கொலை செய்தார்கள் என்றோ, யார் கொலை செய்யப்பட்டார் என்றோ விசாரணை செய்வதற்கு அவர்களுக்கு அச்சம். இரவில் அவர்கள் அந்தப் பக்கமே செல்வதில்லை.

பிச்சைக்காரர்கள் வீதியெங்கும் நிறைந்து காணப்படுவார்கள். விலை மாதர்கள் தமது குழந்தைகளை ஏலத்தில் விற்பார்கள். பிறந்த குழந்தைகளை சிறிய தொகைக்கு வாடகைக்கும் வாங்கி குழந்தைகளுக்கு உணவு எதுவும் கொடுக்காமல் பசியால் துடிக்கவிட்டு அவர்களின் அழுகையைக் கூட்டுவார்கள். அவர்களைக் காட்டி வருவோர் போவோர்களின் அனுதாபத்தைப் பெறுவார்கள். எத்தனையோ குழந்தைகள் இப்படியாக இறந்தனவோ தெரியாது. சிலர் இறந்த குழந்தைகளை மடியில் வைத்துக்கொண்டும் பிச்சை எடுப்பார்கள். பிச்சையெடுத்து வளர்ந்த குழந்தைகள் தாமும் பிச்சையெடுத்து உண்பதையே தொழிலாகவும் கொண்டனர்.

எலிசபெற் வியோடேறோவ்னாவுடன் தொண்டு செய்ய ஆரம்பித்த பின்னர்தான் இளவரசருக்கு ரஷ்யாவில் இன்னொரு உலகமும் இருப்பதை உணரக்கூடியதாக இருந்தது. 'நான் பார்த்தவைகளிலே வருந்துவதைப்போல் கொடுமையானது வேறெதுவும் இல்லை. ஏழைகளை அவர்களின் துன்பத்திலிருந்து விடுவிக்க ஆனமட்டும் முயற்சி செய்கிறேன். ஆனால் அத்தொண்டின் அளவைக் கண்டு நான் பிரமிக்கிறேன். நான் இதுவரை வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிப்பதற்காக மட்டுமே வாழ்ந்தேன். எதுவித சிறு துன்பத்தைக்கூட அணுக விடாமல் தவிர்த்தேன். பணமும் அதனால் கிடைக்கும் வலிமையையும் தவிர வேறெதுவும் முக்கியமாக இருக்கும் என்பதை நான் இதுவரை எண்ணவு மில்லை. இவையெல்லாம் உபயோகமற்றவை என்று இப்போதுதான் உணர்கிறேன். உலகத்தின் உடமைகளிலிருந்தும் அதிகாரத்தை அடையவேண்டும் என்கின்ற அவாவிலிருந்தும் விடுபட்ட சுதந்திரத்தை இப்போதுதான் அடைந்திருக்கின்றேன்' என்று கூறினார்.

இளவரசர் எலிசபெற் வியோடேறோவ்னாவைப்போல் தமது உடமைகளை விற்று ஏழைகளுக்கு உதவுவது என்று முடிவு செய்தார். ஆக்கன்கில்ஸ்கோ (Arkhangelskoe) வில் இருந்த மாளிகையை ஒரு கலைக் கூடமாக்குவதென்றும், இசைக் கலைஞர்களும், வர்ணம் தீட்டுபவர்களும், எழுத்தாளர்களும் இலவசமாக வசிக்க வசதி செய்வதென்று முடிவுசெய்தார். தலைநகரிலும், மொஸ்கோவிலும் இருக்கும் மாளிகைகளை வைத்தியசாலைகள், வயோதிகர் இல்லங்கள் ஆக்குவதென்றும், இருக்கும் நகைகளையும், விலையுயர்ந்த சித்திரங்களையும் விற்று பல வைத்தியசாலைகள் அமைப்பதென்றும், பண்ணைகளை அங்கு வசிப்பவர்களுக்கே கொடுப்பதென்றும், தொழிற்சாலைகள் தொழிலாளர்களின் உரிமையாக்கப்படவேண்டும் என்றும் முடிவு செய்தார்.

எலிசபெற் வியோடேறோவ்னா இதனை முழுதாக ஆதரித்த போதும் சொந்தத் தாயார் இவை ஒன்றையும் ஆதரிக்கவில்லை. இளவரசர்தான் யுசெப்போ குடும்பத்தில் எஞ்சியிருக்கும் ஒரே வாரிசு. அவரைத் திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்று தமது வாரிசை தொடர வழிவகுக்குமாறு வற்புறுத்தினார். ஆரம்பத்தில் தனக்கு திருமணம் செய்து வாழ்வதில் விருப்பமில்லை என்று வாதாடியபோதும் இறுதியில் தாயாரின் சொல்லுக்கு அடங்கிவிட்டார். தாயாரின் ஆணைப்படி இளவரசர் தனது அபிலாஷைகளைக் கைவிட்டுவிட்டு நாட்டின் பேரரசி அலெக்ஸ்ஸான்றாவை (Alexandra) சந்திக்கச் சென்றார்.

பேரரசி அலெக்ஸ்ஸான்றா இளவரசரைப் பார்த்து 'தன்மானம மிக்க எந்தவொரு மனிதனும் இராணுவத்தில் அல்லது அரசாங்கத்தில் ஏதாவது ஓர் அங்கமாகவே இருக்க ஆசைப்படுவான். ஆனால் நீர் எதுவுமே செய்ய விரும்பாது இருக்கிறீர்' என்றார்.

'நான் போரின் கொடுமைகளை கண்டிருக்கிறேன். அதனால் இராணுவத்தில் ஒருபோதும் இணையமாட்டேன். அரசாங்கத்தில் இருந்தாலும் எப்போதும் வெளிப்படையாகப் பேசும் என்னால் அரச இரகசியங்களைக் காப்பாற்றவும் முடியாது' என்றார்.

தீடீரென்று ஒருநாள் அரசியாரிடம் 'நான் எதிர்காலத்தில் எண்ணிக்கையற்ற சொத்துக்களுக்கு உரியவனாக ஆகப்போகிறேன். எனக்கு இப்போது இருபத்தியொரு வயதுதான் ஆகிறது. இச்சொத்துக்களைப் பராமரிப்பதற்கும், நாட்டுக்கும் அரசருக்கும் (Tsar) தனது சேவையை ஆற்றுவதற்குமாக வெளிநாடு சென்று உயர்கல்வி கற்றுவரப் போகிறேன்' என்றார்.

தாயாரும், பேரரசியாரும் இதனைத் தடுப்பதற்கு எவ்வளவோ எடுத்துக்கூறியும் இளவ்ரசர் தான் எடுத்த முடிவிலிருந்து சற்றேனும்

தளரவில்லை. 'நீ வெளிநாடு சென்றால் திரும்பி வரமாட்டாய். அப்படித்தான் திரும்பி வந்தாலும் உனக்கு ரஷ்ய அரசாங்கத்தில் வேலை எதுவும் இருக்காது' என்றார்.

'நான் படித்து முடிந்ததும் நிச்சயம் ரஷ்யாவிற்குத் திரும்பி வருவேன். ரஷ்யாவில் வேலை செய்வேன். இது உறுதி' என்று கூறிவிட்டு மேற்படிப்பிற்காக இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்திற்கு (Oxford University) பயணமானார்.

◆◆



24

உயர் கல்வியும் திருமணமும்

இளவரசர் நிக்கொலஸ் .'.பீலிக்ஸ் யுசெப்போ 1909 ஆம் ஆண்டு இலையுதிர்காலத் தவணையில் இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போட் (Oxford) பல்கலைக்கழகத்தில் வந்து சேர்ந்தார். ஒக்ஸ்போட் ஓர் அழகிய நகரம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கல்விக் கூடங்களையும், தங்கநிறம் கொண்ட உயர்ந்த கூரிய கோபுரங்களையும் கொண்டது.

இரவில் ஒன்பது மணி ஐந்து நிமிடத்திற்கு ஒரு மணி அடிக்கும். அதன் பின்னர் பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கும் காவலர்கள் அங்கிருக்கும் பெரிய வாயில் கதவுகளை மூட ஆரம்பிப்பார்கள். அதற்கிடையில் அங்கே வசிக்கும் மாணவர்கள் தமது இருப்பிடங் களுக்குச் சென்றுவிடவேண்டும்.

ஆரம்பத்தில் இங்கிலாந்திற்கு உயர் கல்வி கற்கவரும் ஏனையோரைப்போல் இளவரசருக்கும் ஆங்கில அறிவு போதாமலே இருந்தது. ஒருமுறை அவரது தந்தையார் இளவரசரிடம் இங்கிலாந்திலிருந்து சில பசுமாடுகளை வாங்கி ரஷ்யாவிற்கு அனுப்ப

உத்தரவிடுமாறு அறிவித்தார். அதற்கு இளவரசர் 'Please send me one man cow and three woman cow' என்று அவற்றை அனுப்பும் பண்ணைக்கு தந்தி கொடுத்தார். பண்ணையில் இருந்தோருக்கு அந்த ஆங்கில வசனங்களின் அர்த்தம் முதலில் புரியவில்லை. ஆனால் சிறு ஆராய்ச்சிகளின் பின்னர் பண்ணையிலுள்ளோர் அந்த உத்தரவை விளங்கிக்கொண்டார்கள். அதன்படி இளவரசரின் வேண்டுகோளையும் நிவர்த்தி செய்தனர். ஆனால் ரஷ்ய அரச குடும்பத்தினர் ஒருவரின் இந்தச் செய்தியை அறிந்த சில பத்திரிகைகள் அந்த வாசகங்களை அப்படியே தங்கள் பத்திரிகைகளிலும் பிரசுரித்தன. ஆனால் இளவரசர் அதனைப்பற்றி சிறிதளவேனும் கவலை கொள்ளவில்லை.

இளவரசர் .'.பீலிக்ஸ் யுசெப்போ சர்வகலாசாலை வாழ்விற்குத் தன்னை மிகவும் சிரமப்பட்டே பழக்கிக்கொள்ளவேண்டியிருந்தது. இவற்றிற்கிடையில் தேம்ஸ் நதியில் படகோட்டுவதிலும், துடுப்பெடுத் தாட்டம், 'போலோ' போன்ற விளையாட்டுக்களைப் பழகுவதிலும், குதிரையோட்டுவதிலும் தனது ஓய்வு நேரங்களைக் கழித்தார்.

இரவு வேளைகளில் தனது அறையில் அடிக்கடி நண்பர்களை அழைத்து யாருக்கும் தெரியாமல் விருந்துபசாரங்கள் நடாத்தினார். காவலர்கள் வெளிக்கதவுகளை பூட்டியபின்னர் கதவில் நண்பர்கள் வந்து இரகசியமாகத் தட்டுவார்கள். முடிச்சுக்கள் போட்ட ஆடை களாலான கயிறு ஒன்றை கீழேவிட்டு மாணவர்களை தனது யன்னல் வழியாக உள்ளே ஏறிவரச் செய்வார். கயிற்றைப் பிடித்து ஏற முடியாதவர்களை இருவர் சேர்ந்து இழுத்து உள்ளே எடுப்பார்கள். ஒருமுறை இப்படிச் செய்தபோது ஒரு பொலிஸ் அதிகாரியை யன்னலின் ஊடாக உள்ளே இழுத்துவிட்டார்.

இப்படியான குற்றச் செயல்களைச் செய்தால் அவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கப்படுவார்கள். ஆனால் இளவரசருக்கு

இலண்டன் பாதிரியாரின் செல்வாக்கு இருந்ததினால் அவரது தலையீட்டின் பின்னர் அதற்குரிய தண்டனையைப் பெறாமல் தப்பி விட்டார். அதன்பிறகும் இரவு வேளைகளில் யாருக்கும் தெரியாமல் எப்படியோ வெளியில் சென்றுவருவார்.

முதல் வருடத்தில் மட்டும்தான் பல்கலைக்கழக வளாகத்துள் வசிக்கவேண்டும். அடுத்தடுத்த வருடங்களில் அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு வெளியே இருக்கலாம். தனது இரண்டாம் வருடம் ஒக்ஸ்போட்டிற்கு வெளியே வேறு இரு நண்பர்களுடன் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அங்கே வசித்துவந்தார். ரஷ்ய சமையல்காரர், ∴பிரெஞ்ச் காரோட்டி, ஆங்கிலேய வீட்டுவேலைக்காரர் என சிறு செல்வச்செழிப்புடன் வாழ்ந்தார்.

மூன்றாவது வருட முடிவில் தனது B.A பட்டப்படிப்பை முடித்தார். ஆனாலும் உடனே ரஷ்யாவிற்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை. மேலும் ஒரு வருடம் இங்கிலாந்திலேயே தங்கியிருக்க விரும்பினார். இலண்டனில் 'Curzon றோட்டில்' இரு மாடிகளை வாடகைக்கு எடுத்தார். இரண்டு வயதான சகோதரிகளை அவற்றைப் பராமரிப்பதற் கென நியமித்தார். ஒரு பளபளப்பான விலையுயர்ந்த மோட்டார் வண்டியை வாங்கினார். தான் நினைத்தபடியெல்லாம் அதனை ஓட்டினார். வார இறுதி நாட்களில் நண்பர்களை விருந்துபசாரங்களுக்கு ஏற்றிச் செல்ல அதனை உபயோகித்தார்.

இலண்டனிலே இளவரசருக்கு ஏகப்பட்ட பெரிய பெரிய புள்ளிகள் எல்லாம் நண்பர்களாக வந்தனர். பல நாட்டு அரசர்களும், இளவரசர்களும், இளவரசிகளும், தூதுவர்களும், பெரும் செல்வர்களும் நண்பர்களாயினர். நண்பர்கள் அதிகரிக்க வீடும் பெரிதாகத் தேவைப்பட்டது. இலண்டனிலே உள்ள Hyde Park இல் இருக்கும்

'15 Parkside Street' என்ற இடத்தை பலவருட வாடகைப் பணத்தை ஒரேமுறையில் கொடுத்து தனதாக்கினார். கறுப்பு நிற தரைக்கம்பளம், நாடம்பழ நிற யன்னல் திரைச்சீலைகள், பச்சைநிற சுவர்கள், நீல நிற தளவாடங்கள் என்று விநோதமான முறையில் அதனை அலங்கரித்தார்.

இலண்டனிலுள்ள நாடக மண்டபங்களுக்குச் செல்லும்போதுகூட விநோதமான முறையில் தன்னை அலங்கரித்துக்கொண்டே செல்வார். இவருடைய அழகில் மயங்காத பெண்களோ மிக அரிது. இவருடைய அழகிற்கும் செய்யும் செயல்களுக்கும் பொருத்தம் இல்லாமலே இருந்தது. இவருடன் பழகிய ஒரு பெண்மணி இவரைப்பார்த்து 'உம்முடைய ஒரு கண்ணில் கடவுளும் மறு கண்ணில் பிசாசும் இருக்கின்றார்கள்' என்றார் ஆரம்பத்தில் பெண்களுடன் தொடர்புகளை வைத்திருந்த இளவரசர் காலம் செல்லச்செல்ல இளம் ஆண்களுடனும் தனது பாலுறவுத் தொடர்புகளை வைத்திருக்க ஆரம்பித்தார்.

இலண்டனில் இருந்து தனது மேற்படிப்பை முடித்துக்கொண்டு ரஷ்யாவிற்குத் திரும்பிச் சென்ற இளவரசரை அவரது தாயாரும் பேரரசியாரும் திருமணம் செய்யச் சொல்லி வற்புறுத்தினார்கள். திருமணம் செய்வதில் அவ்வளவாக விருப்பமில்லாத போதிலும் அவர்களுடைய சந்ததி அவரோடே அற்றுப் போகாமல் இருப்பதற்காக வேனும் அவர் திருமணம் செய்யத்தான் வேண்டும். தம்மிடம் இருக்கும் பெருந்தொகையான செல்வங்களுக்கும் மதிப்பிற்கும் தனக்கு வரப்போகும் மனைவி ரஷ்யாவிலேயே சிறந்த அழகியாக இருக்க வேண்டும் என்று கூறினார். உடனே பெண்பார்க்கும் படலமும் ஆரம்பமானது.

பேரரசருடைய சகோதரியான சீமாட்டி எக்சீனா Grand Duchess Xenia விற்கும் சீமான் அலெக்ஸாண்றா மிக்காயிலேவிச் Alexandra

Michailovich இற்கும் பிறந்த ஒரே மகள் இளவரசி ஐரீனா அலெக்ஸாண்றோவ்னா (Princess Irina Alexandrivna). ஐந்து ஆண் சகோதரர்களுடன் பிறந்த இளவரசி அழகிய நீல நிறக் கண்களும், தங்க நிறக் கேசமும் உடையவர்.

இளவரசர் இந்த இளவரசியாரை தனக்குப் பதினெட்டு வயதாக இருந்தபோதே சந்தித்திருந்தார். இவர்தான் பொருத்தமான பெண் என்று தாயாரும் பேரரசியாரும் கூறியவுடன் சீமான் அலெக்ஸாண்றா மிக்காயிலேவிச் இடம் சென்று தனது விருப்பத்தைத் தெரிவித்தார். இருவருடைய பெற்றோர்களும் பேசி இவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர். திருமண நிச்சயதார்த்தம் முடிவுற்று திருமண நாளும் குறிக்கப்பட்டுவிட்டது. இப்படியிருக்கும்போது மணமகளுக்கு இளவரசரின் கடந்தகால வாழ்க்கை தெரியவந்துவிட்டது. இருவரும் மனம்விட்டுப் பேசினர். ஐரீனா இளவரசரின் கடந்தகால வாழ்க்கையைப் பற்றி அவ்வளவாகப் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் அவரின் தந்தையார் தனது வருங்கால மணமகனின் பூர்வீகத்தைக் கேள்விப்பட்டவுடன் இந்தத் திருமணம் நடக்காது என்று ஒரேயடியாக மறுத்துவிட்டார். தங்களையோ ஐரீனாவையோ இனிமேல் சந்திக்கவேண்டாம் என்றும் கட்டளையிட்டார்.

ஒருநாள் பிடிவாதமாக அவர்கள் தங்கியிருந்த அறைக்கதவை உடைத்துக்கொண்டு நேரே அவர்களிடம் சென்றார்;

'இங்கே பாருங்கள், எனக்கு அப்படியான விருப்பம் முன்னர் இருந்ததுதான். ஆனால் அவையொன்றிலும் எனக்கு இப்போது ஆர்வமில்லை. நீங்கள்கூட இளமையாக இருந்தபோது பலவற்றிலும் ஆர்வம் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் வயதும் அனுபவமும் வளரும்போதுதான் அனேகமான இளைஞர்கள் தமது தவறுகளை உணர்ந்துகொள்வார்கள். நானும் இளைஞனாக இருந்தவன்தான். தவறு

செய்தவன் திருந்தி வந்தால் அவனை ஏற்கவேண்டிய மனப் பக்குவம் உங்களைப் போன்ற பெரியவர்களுக்கு வரவேண்டும். நானும் ஒரு மனிதப்பிறவிதான்.' என்று பலவற்றையும் விளக்கிக் கூறினார். இறுதியில் அவர்கள் மீண்டும் இருவருடைய திருமணத்திற்கும் தமது சம்மதத்தைத் தெரிவித்தனர். இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணம் சீமான் டிமிற்றி பவலோவிச் (Grand Duke Dmitri Pavlovich) என்பவர்தான்.

எத்தனையோ எதிர்ப்புகள், விளக்கங்கள், வாக்குறுதிகளின் பின்னர் 1914 ஆம் ஆண்டு மாசி மாதம் நான்காம் திகதி இருவருக்கும் திருமணம் நடந்தது. பல கோடி பெறுமதியான வைரக்கற்களும், ஆபரணங்களும் திருமணப் பரிசாகக் கிடைத்தன. பார்ப்பவர்கள் எல்லாம்; 'இந்தத் தம்பதிகள் ஒருவருக்கு ஒருவர் இப்படி இணை வதற்காகவே பிறந்தார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது' என்றார்கள்.

'பொருத்தம் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும். அவர் களுடைய அழகும், ஆபரணங்களும் எமது கண்களைப் பறிக்கின்றன' என்றார்கள். ஆனால் மணப்பெண்ணின் தாயாரின் முகத்தில் அளவற்ற மகிழ்ச்சி காணப்பட்டாலும் இனந்தெரியாத கவலையும் குடிகொண்டிருப்பதைப்போல் தெரிந்தது. விலையுயர்ந்த உணவுகளும், குடிவகைகளும் தங்கத்தால் செய்யப்பட்ட கோப்பைகளில் பரிமாறப் பட்டன. மணமக்கள் இருவரும் தேன்நிலவிற்குப் புறப்பட்டார்கள். புகையிரத நிலையத்தை அடைந்தபோது அங்கே ஒரு மூலையில் இளவரசரின் பழைய ஆண் சினேகிதன் சீமான் டிமிற்றி பவலோவிச் நின்றுகொண்டிருப்பதை அவதானித்தார். சீமான் டிமிற்றி பவலோவிச்சின் கண்கள் சோகத்தால் நிரம்பியிருந்தன. நெடுநாள் பழகிய காதலனைப் பிரிவதுபோல் அவரின் கண்கள் கலங்கின.

புதுமணத்தம்பதிகள் ஐரோப்பாவிலும் மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றிலும் தமது தேன்நிலவைக் கழித்தனர். சில மாதங்களாக சகல நாடுகளுக்கும் சென்று தமது பொழுதை உல்லாசமாகக் கழித்தனர். 1914 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இருபத்தியெட்டாம் திகதி ஜேர்மனியில் ஓர் விடுதியில் தங்கியிருந்தபோது ஒரு பயங்கரமான செய்தி இவர்களின் காதுக்கு எட்டியது.

ஒஸ்ரியாவின் (Austria) அரசரையும் அரசியாரையும் ஓர இளம் மாணவன் துப்பாக்கியால் சுட்டுவிட்டதாகவும், அதேவேளையில் பொக்ரொவஸ்கோவில் (Pokrovskoe) ஒரு பெண் ரஸ்புட்டினைக் கத்தியால் குத்திக் கொலைசெய்ய முயன்றதாகவும் செய்திகள் வந்தன. அன்று சாயந்தரமே ஒஸ்ரியாவின் அரசரும் அரசியாரும் இறந்துவிட்டனர். இதனையடுத்து ஒஸ்ரியா சேபியாவின்மேல் (Serbia) தனது போரை தீவிரமாக முடுக்கிவிட்டது. பெல்கிறேட் (Belgrade) இன்மேல் இடைவிடாத குண்டுமழை பொழிந்தது. சேபியாவின் புரட்சிக்காரர்களை நசுக்கிவிட எல்லா வழிகளாலும் முயன்றது. இதற்கெதிராக ரஷ்யா தனது படைகளை நகர்த்தியது. இதனையறிந்த ஜேர்மன் அரசாங்கம் ஒஸ்ரியாவுக்கு உதவ தன் படைகளை அனுப்பியது. ரஷ்யாவுக்கு உதவ .பிரான்ஸ் நாடும் தனது படைகளைத் தயாராக வைத்திருந்தது. முதலாம் உலக மகாயுத்தம் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் ஆங்காங்கே தெரியத் தொடங்கின.

ஜேர்மனியில் கிஸ்சிங்கன் (Kissingen) என்ற இடம் உல்லாசப் பிரயாணிகளின் மிகவும் பிரசித்திபெற்ற இடம். இங்கே இருந்த புதுமணத் தம்பதிகளுக்கும் ஏனைய ரஷ்ய உல்லாசப் பிரயாணிகளுக்கும் இந்த நிகழ்வுகள் முழுவதாகச் சென்று சேரவில்லை. ஜேர்மன் அரசாங்கம் ரஷ்ய அரசாங்கத்திற்கு இப்படை நகர்வுகளை உடனடியாக நிறுத்தும்படி இறுதி எச்சரிக்கை விடுத்தது. ஜேர்மன் அரசாங்கம்

கொடுத்த காலக்கெடு முடிவடையும் தறுவாயில் ஜேர்மன் மக்களின் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின. அங்கிருந்த ரஷ்ய மக்கள் அனைவரும் ஜேர்மனியரின் அவதூறுகளுக்கும், வெறுப்புக்கும் ஆளானார்கள்.

பிரபு நிக்கோலாய் நிக்கொலவிச்சின் மனைவி அனற்றாசியா (Anastasia) - இளவரசரையும் இளவரசியையும் உடனடியாக ரஷ்யாவிற்குத் திரும்புமாறு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பினார். இதனைக் கண்டதும் இருவரும் தங்கள் வேலையாட்களுடன் புறப்பட்டு ஜேர்மன் தலைநகரான பேர்லினில் (Berlin) இரவு ஒரு விடுதியில் தங்கினர். ஜேர்மன் அரசாங்கம் கொடுத்த காலக்கெடுவை ரஷ்ய அரசாங்கம் நிராகரித்தது. அந்தக் கணத்திலிருந்து ரஷ்யாவிற்கும் ஜேர்மனுக்கும் கடும் போர் மூண்டது. அடுத்த கணம் பல ஜேர்மன் பொலிசார் அதிகாரிகள் வந்து இரவு விடுதியில் தங்கியிருந்த இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போவையும் மனைவியையும், வேலையாட்களையும் கைது செய்துகொண்டு சென்று நீண்ட நேரமாக குறுக்குவிசாரணை செய்தனர். அவமரியாதையும், வெறுப்பும் கலந்த அந்த விசாரணைகள் முடிவுற்றதும் அவர்களை அன்றிரவே பேர்லினை விட்டு வெளியேற வேண்டும் அல்லாதுவிடில் அனைவரும் சிறையில் தள்ளப்படுவார்கள் என்று எச்சரித்து விடுதலை செய்தனர்.

இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போவின் மனைவி ஐரீனா தனது ஒன்றுவிட்ட சகோதரியும், ஜேர்மன் முடிக்குரிய இளவரசியான சிசிலிக்கு (Crown Princess Cecilie) தொலைபேசி அழைப்புச்செய்து அவரது மாமனார் கையிசர் (Kaiser) அவர்களுக்கு தமது நிலைபற்றித் தெரிவிக்குமாறு கூறினார். அவரும் அப்படியே செய்தார். அவர்கள் அனைவரும் சிறந்த முறையில் உபசரிக்கப்படுவார்கள் என்றும் ஆனால் அவர்கள் அனைவரும் போர்க் கைதிகளாக இருப்பதற்குத் தாயாராகும்படி கையிசர் (Kaiser) தெரிவித்தார். அதேவேளையில்

அவர்களுக்கு போர் ஓயும்வரை மூன்று பண்ணைகளைத் தருவதாகவும் தெரிவித்தார். இறுதியில் இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போவின் தந்தையாரின் தலையீட்டினால் ஸ்பானிய (Spain) நாட்டுத் தூதுவரின் உதவியால் அவர்கள் அனைவரையும் ரஷ்யாவிற்குத் திரும்பிச்செல்ல அனுமதித்தார்கள்.

ரஷ்யாவிற்குத் திரும்பிச் சென்ற இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போவிற்கு போரின் கொடுமைகளைக் காணச் சகிக்கவில்லை. போரை ஒருபோதும் விரும்பாத இளவரசர் பெரும்பாலான மக்கள் எல்லோரும் இருக்கக்கூட இடமின்றித்தவிக்கும் அதேவேளையில் தாம் மட்டும் அரசபோகத்துடன் வாழ்வது சரியாகப்படவில்லை.

தமது வாசஸ்தலமான மெய்கா கானலின் (Moika Kanal) ஒரு பகுதியை போர்வீரர்களைப் பராமரிக்கும் வைத்தியசாலையாக மாற்ற முடிவுசெய்தார். மிகச்சிறந்த வைத்தியர்களையும் தாதிமார் களையும் அங்கே வேலைக்கு அமர்த்தினார். சிறிது காலத்திற்குள்ளேயே அந்த பிரமாண்டமான மாளிகை போரில் காயப்பட்ட இராணுவ வீரர்களால் நிரம்பி வழிந்தது.

ரஷ்யத் தலைநகரிலும் மக்கள் ஜேர்மனுக்கெதிராகப் பொங்கியெழுந்தனர். ஜேர்மனிய தூதரகத்தை முற்றுகையிட்டனர். அங்கிருந்த விலையுயர்ந்த பொருட்களையும், ஓவியங்களையும் அடித்து நொறுக்கினர். அவையெல்லாவற்றையும் வீதியிலே தூக்கி வெளியே வீசினர். ஜேர்மன் பாடசாலைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இசை நிகழ்ச்சிகளில் ஜேர்மன் இசைமேதைகளின் இசைகள் தடைசெய்யப்பட்டன. நத்தார் காலங்களில் வீடுகளிலும் மற்றைய இடங்களிலும் வைக்கப்படும் நத்தார் மரம் (Christmas Tree) ஜேர்மன் வழக்கம் என்றபடியால் அதுவும் தடைசெய்யப்பட்டது. இதேவேளையில்தான் ரஷ்யாவின் தலைநகரான

செண்ட் பீட்டர்ஸ்பர்க் (St Petersburg) என்ற பெயரை பீற்றோகிராட் (Petrograd) என்றும் மாற்றி வைத்தனர்.

இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போவினுடைய தந்தையார் மொஸ்கோவின் ஆளுநராக அரசரால் நியமிக்கப்பட்டார். நகரின் ஒழுங்குகளை நிலைநாட்டுவதோடு இராணுவ அலுவல்களையும் கவனிப்பது அவரது கடமை. ஒருமுறை செஞ்சதுரத்தில் (Red Square) மக்கள் கூடி ரஸ்புட்டினுக்கு மரணதண்டனை கொடுக்கும்படியும், பேரரசியாரை கைதுசெய்யும்படியும், பேரரசரைப் பதவியிறங்கும்படியும், பிரபு நிக்கோலாய் நிக்கொலவிச் (Duke Nikoli Nikolayevich) அவர்களைப் பதவியேற்கும்படியும் கோஷமிட்டனர். அங்கே கன்னியர் மடத்தின் தலைவியாகப் பணியாற்றும் எலிசபெற் அவர்களையும் சந்தித்தனர். ஜேர்மன் பிரஜைகளாகவிருக்கும் அவர்கள் எல்லோரையும் நாட்டைவிட்டு வெளியேறுமாறு கூச்சலிட்டதோடு அவர்களை நோக்கி கற்களையும் வீசினர். பேரரசியாரை ஜேர்மன் தாசி என்றும் உரக்கக் கத்தினர்.

இதனைக் கேள்வியுற்ற பேரரசியார் மக்களைக் கட்டுப்படுத்த முடியாத ஃபீலிக்ஸ் யுசெப்போவினுடைய தந்தையாரை உடனே பதவி நீக்கம் செய்யவேண்டுமென பேரரசரிடம் கூறினார். உண்மையில் ரஸ்புட்டினை அரசியல் விடயங்களில் தலையிடவேண்டாம் என்றுதான் ஃபீலிக்ஸ் யுசெப்போவினுடைய தந்தையார் அரசரிடம் கூறியிருந்தார். இதனை அறிந்தவுடனே மக்களைக் கட்டுப்படுத்த முடியாதவர் என்ற காரணத்தைக் காட்டி அவரைப் பதவிவிலக்குமாறு பேரரசியார் பேரரசர் மூலமாக உத்தரவிட்டார். இதனையடுத்து இளவரசருடைய தந்தையாரும் தாயாரும் அவமானப்பட்டு தமது கிறிமியா (Crimea) மாளிகையில் சென்று தமது வாழ்வைத் தொடர்ந்தனர்.

அதன் பிறகு இளவரசருக்கு அவரது தாயாரிடமிருந்து பல கடிதங்கள் வந்தன. அவற்றிலெல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்காக

ரஸ்புட்டினை அங்கிருந்து எப்படியாவது அகற்றவேண்டும், பேரரசியாரை இனிமேலும் நாட்டை ஆள அனுமதிக்கக்கூடாது என்றே குறிப்பிடப் பட்டிருந்தன.

இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போவினுடைய தாயார் சினேயிட் யுசெப்போ ஒருமுறை அரண்மனையில் நடைபெற்ற ஒரு விழாவிலே ரஸ்புட்டினைப்பற்றிய தனது கருத்துக்களைக் கூறியவுடன் எதுவுமே போசாது அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த பேரரசியார் திடீரென ஒரு வேலையாளைக் கூப்பிட்டு அவரை வெளியேற்றிவிட்டார். இதனை பேரரசியாரின் சகோதரி எலிசபெற் அவர்களிடம் தெரிவித்தபோது அவர் நேரடியாகவே அரண்மனைக்கு வந்து தனது சகோதரியிடம் இதுபற்றிப் பேசினார். ஆனால் பேரரசியார் ரஸ்புட்டினைப் பற்றி தான் எவருடனும் பேசுவதற்குத் தயாரில்லை என்று மறுத்துவிட்டார். எப்படியிருந்த போதிலும் பதினாறாம் லூயி மன்னருக்கும் அவரது மனைவிக்கும் நடந்ததைப் பார் என்று பலவற்றையும் உதாரணம் காட்டி எடுத்துக் கூறினார். உடனே பேரரசியார் எழுந்து தொலைபேசி எடுத்து தனது சகோதரியை அவரது இருப்பிடத்திற்குச் செல்வதற்காக புகையிரத நிலையத்திற்கு அழைத்துப்போக ஒரு வண்டியை உடனே அனுப்புமாறு கட்டளையிட்டார்.

இதனை அறிந்த சகோதரி எலிசபெற் 'நான் இங்கே வந்திருக்கவே கூடாது' என்று கூறினார்.

'ஆம் அப்படிச் செய்திருக்கலாம்' என்று உடனே பதில் கூறினார் பேரரசியார்.

எலிசபெற் நேராக மெய்கா கானலின் இற்குச் சென்றார். அங்கே இளவரசரின் தாயாரைக் கண்டதும் 'என்னை ஒரு நாயை வெளியேற்றுவதுபோல் அங்கிருந்து வெளியேற்றிவிட்டார். அவருக்கு

தான் யாருக்கும், என்னவும் செய்வேன் என்ற ஆணவமும், அகங்காரமும் வலுத்துவிட்டது. இவையெல்லாம் எங்கே போய் முடியப்போகின்றனவோ தெரியாது. பாவம் நிக்கலஸ், பாவம் ரஷ்ய மக்கள்' என்று தனது ஆதங்கத்தை வெளியிட்டார். அதோடு மட்டுமல்லாமல் 'இனிமேல் இந்த நாட்டில் ஒரு புரட்சி வராமல் தடுப்பது மிகமிகக் கடினம்' என்று தனது தீர்க்கதரிசனமான கருத்தையும் இளவரசர் .ீபீலிக்ஸ் யுசெப்போவிற்குத் தெரிவித்தார்.

போர் ஆரம்பித்ததினால் அரச பரம்பரையினரும் நாட்டுமக்களும் பலவிதமான துன்பங்களுக்கும், சோகங்களுக்கும் உள்ளான அதேவேளையில் இளவரசர் .ீபீலிக்ஸ் யுசெப்போவின் குடும்பத்திலே ஒரு சந்தோஷமான நிகழ்வும் நடைபெற்றது. 1915 ஆம் ஆண்டு பங்குனி மாதம் எட்டாம் திகதி ஐரீனா ஓர் அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். குழந்தையினுடைய பெயர் சூட்டுவிழாவிற்கு ரஷ்யாவின் அரசகுடும்பத்தினர் அனைவருமே அவர்களது வாசஸ்தலமான மெய்கா கானலில் கூடினார். ஐரீனாவின் விருப்பப்படி அவரது தாயாரின் பெயரே குழந்தைக்கும் சூட்டப்பட்டது.

போர் நடந்துகொண்டிருந்தபோது பேரரசியாருக்கு அறிவுரைகள் வழங்கும் ரஸ்புட்டினைப் பற்றி பலவிதமான செய்திகளும் வெளிவந்து கொண்டிருந்தன. இதனால் நாடே அழிவுப்பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக இளவரசர் .ீபீலிக்ஸ் யுசெப்போ மட்டுமல்ல நாட்டிலுள்ள பலரும் எண்ணினர். இதனைத் தடுப்பதற்காக என்ன செய்யலாம் என்று அவரது மூளை எந்நேரமும் மிக வேகமாக வேலை செய்துகொண்டே இருந்தது.

◆◆



25

திடமான முடிவு

இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போ மட்டுமல்ல நாட்டிலுள்ள பலர் ரஸ்புட்டினைக் கொலை செய்ய முயன்றனர். ரஸ்புட்டின் முதல்முதலாக 1914 ஆம் ஆண்டு பொக்ரொவஸ்கோவில் இலியடோ அனுப்பி வைத்த பெண்ணின் கத்திக்குத்துக்கு இலக்கானார், ஆனால் ஒருவாறு உயிர் பிழைத்துவிட்டார்.

தலைநகரில் உள்ள ரஸ்புட்டினினது இருப்பிடத்தில் இன்னொரு பெண் தனது ஆடையுள் ஒரு துப்பாக்கியை மறைத்து வைத்துக் கொண்டு அவரைப் பார்க்கச் சென்றார். அந்தப் பெண் நடந்துகொண்ட முறையில் சந்தேகம் கொண்ட ரஸ்புட்டின் அவருடைய மேலாடையைப் பிடித்து திடீரென இழுத்தார். அப்போது அவர் தனது ஆடையுள் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கி கீழே விழுந்தது. அந்த முயற்சியும் கைகூடவில்லை.

தலைநகரில் இன்னொருமுறை ஒருநாள் சாயந்தரம் வழமைபோல் ரஸ்புட்டின் பாதையில் நடந்து போய்க்கொண்டிருந்தபோது திடீரென

ஒரு பார வண்டி அவரை நோக்கி மிக வேகமாக வந்துகொண்டிருந்தது. கடைசி நேரத்தில் அதனைக் கண்ட ரஸ்புட்டின் திடீரென்று மறுபக்கம் பாய்ந்து ஒருவாறு தப்பித்துக்கொண்டார். அதன் சாரதியைப் பிடித்து விசாரித்தபோது இலியடோதான் தன்னை அப்படி வண்டியால் மோதி ரஸ்புட்டினைக் கொல்லும்படி கூறினார் என்றார்.

அரசாங்கத்தில் பதவி வகுத்த அலெக்ஸி கொவொஸ்ரோவ் (Alexi Khvostov) ரஸ்புட்டின் இரவு உணவு விடுதியிலிருந்து வெளிவரும் போது காடையார்களால் தாக்கப்படுவதுபோல் கொலை செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டு வைத்திருந்தார். ஆனால் இட்ட திட்டமும் எப்படியோ ரஸ்புட்டினுக்குத் தெரிந்துவிட்டது. இறுதி நேரத்தில் அவர் அங்கு செல்வதை ரத்துச் செய்தபடியால். அந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

இதனையடுத்து ரஸ்புட்டினை நஞ்சு கொடுத்துக் கொல்வதென்று அலெக்ஸி கொவொஸ்ரோவ் முடிவுசெய்தார். இதுவும் தோல்வியில் முடியவே தன்னுடன் சேர்ந்து நஞ்சூட்டத் திட்டமிட்ட ஸ்ரீவன் பிலிற்ஸ்கி (Stephan Beletsky) அவர்கள் முலமாக இந்தத் திட்டம் வெளிவராமல் இருப்பதற்காக அவரை சைபீரியாவிற்கு இடமாற்றம் செய்தார். இதனை விரும்பாத ஸ்ரீவன் பிலிற்ஸ்கி அங்கு சென்றதும் பேரரசியாருக்கும், அனா விருபோவாவிற்கும் அவர்களின் சதித்திட்டம் பற்றி விரிவான கடிதம் ஒன்றை எழுதி அனுப்பினார். இதனை அறிந்தவுடன் அலெக்ஸி கொவொஸ்ரோவ் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

ரஸ்புட்டினைக் கொல்வது அவ்வளவு சுலபமானதல்ல என்று இளவரசர் .ீபீலிக்ஸ் யுசெபபோ நன்றாகவே அறிந்து வைத்திருந்தார். இராணுவப்படைகளை அவ்வப்போது முக்கியமான இடங்களுக்கு நகர்த்துவது என்பது மிகவும் முக்கியமான முடிவு. இவற்றையெல்லாம் ரஸ்புட்டின் ஒருவரே தீர்மானிக்கின்றார் என்பதே பெரும்பாலோர்களின்

முடிவும் கூட. இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போவும் அப்படித்தான் நம்பினார்.

அண்மைக்காலமாக பேரரசரும் பேரரசியாரும் எப்போதும் ரஸ்புட்டினின் வாயிலிருந்து வரும் வார்த்தைகளை அமுதமாக எண்ணிச் செயற்படுகின்றனர். அவர் என்ன் சொன்னாலும் அவற்றை அப்படியே நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர். இதனால் நாடு அழிவுப்பாதையை நோக்கி மிக வேகமாக நகர்ந்துகொண்டே இருந்தது. அண்மையில் எடுக்கப்பட்ட இப்படியான முடிவொன்றினால் இலட்சத்திற்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதுபோன்ற இழப்பை ரஷ்ய அரசாங்கம் ஒருபோதும் சந்தித்ததில்லை. இதன் பின்னர் எப்படியாவது ரஸ்புட்டினை அங்கிருந்து அகற்றி விடவேண்டும் என்ற இளவரசரின் எண்ணம் அவரது மனதை எந்நேரமும் ஆக்கிரமித்துக்கொண்டே இருந்தது.

ரஷ்யப் படை நகர்வுகளைப் பற்றி பேரரசியாருக்கு நன்றாகவே தெரியும். அதற்காகத் தயாரிக்கப்படும் வரைபடங்களும் அவரிடம் இருக்கும். இவற்றை பேரரசியார் ரஸ்புட்டினுடன் எப்போதும் கலந்துரை யாடுவார். ரஸ்புட்டின் சில முக்கியமானவர்களுடன் வாரந்தோறும் உணவு விடுதிகளில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளையும் நடாத்துவார். அப்போதெல்லாம் சுவீடன் போன்ற நாடுகளில் உள்ளவர்களும், சில ஜேர்மன் உளவாளிகளும் ரஸ்புட்டினைச் சுற்றி அமர்ந்திருப்பார்கள். ரஸ்புட்டின் சொல்வதை அவர்கள் குறிப்பெடுத்துக் கொள்வார்கள். ரஸ்புட்டின் அடிக்கடி நன்றாகக் குடித்துவிட்டு மதுபோதையில் வாய்க்குவந்தபடி எல்லாம் உளறுவார்: அப்போது இந்த அரசியல், போர் இரகசியங்களை எல்லாம் அவர்கள் ரஸ்புட்டினிடமிருந்து அறிந்துகொள்வார்கள். இப்படியெல்லாம் நடக்கின்றது என்பதை அறிந்த இளவரசர் ரஸ்புட்டினும் ஒரு ஜேர்மன் உளவாளி என்பதை முழுதாக நம்பினார். இது அவரது கோபத்தை மேலும் அதிகரித்தது.

இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போவிற்கு பேரரசரின் போக்கும் பிடிக்கவில்லை. 1916ஆம் இறுதிப்பகுதியில் அவர் வரவர மிகவும் சோம்பேறி ஆகி வருவதாகவும் எண்ணினார். பேரரசியாரும் பேரரசரும் தமது வியாதிகளைப் போக்க அபின், கஞ்சா போன்ற போதைப் பொருட்களை பாவிப்பது பற்றி அடிக்கடி பரிமாறிக்கொள்ளும் கடிதங்களில் குறிப்பிட்டிருப்பதும் பலரை சந்தேகத்திற்கு உள்ளாக்கியது. அதன் விளைவுதான் இப்படி பேரரசர் நடந்துகொள்கிறாரோ என்றும் எண்ணினர். பேரரசரை பேரரசியார் போதை மருந்துகொடுத்து மயக்கி வைத்துக்கொண்டு ரஸ்புட்டினுடன் சேர்ந்து தான் விரும்பியபடி அரசியல் விவகாரங்களை நடாத்துகிறார் என்றும் திரும்பத் திரும்ப மக்கள் வெளிப்படையாகவே தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

ரஸ்புட்டினை எப்படியாவது அரச விடயங்களில் தலையிடாமல் செய்துவிடவேண்டுமென்பது முடிவாகினாலும் அதனை எந்த வழியில் நிறைவேற்றுவது என்பது பற்றி இன்னமும் முடிவாகவில்லை. இலண்டனுக்குச் சென்று உயர்கல்வி கற்பதற்கு முன்னர் ஒருமுறை முன்யா கொல்வீனாவினின் தாய்ாரின் இருப்பிடத்திலே இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போ ரஸ்புட்டினைச் சந்த்தார். தான் எடுத்த முடிவை ரஸ்புட் டினுக்கு எதுவித சந்தேகத்தையும் ஏற்படுத்தாமல் நிறைவேற்றுவதற்கு ரஸ்புட்டினுடனான தொடர்பை மீண்டும் புதுப்பிப்பது நல்லதென்று பட்டது. அதேவேளையில் முன்யா கொல்வீனாவும் இளவரசரை மீண்டும் ஒருமுறை ரஸ்புட்டினைச் சந்திக்கும்படியும் திரும்பத்திரும்பக் கேட்டுக்கொண்டேயிருந்தார். இந்த அழைப்பு ரஸ்புட்டினுடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்துவத்ற்கு ஓர் அரிய சந்தர்ப்பமாகப் பட்டது. முன்யா கொல்வீனாவை மீண்டும் சந்தித்தபோது;

'எப்படி இந்த நல்ல மனிதனுடைய தெய்வீகத் தன்மைகள் மதுக் குடிப்பழக்கத்தினால் மாசுபடுத்தப்படுகின்றன?' என்று இளவரசர் கேட்டார்.

'அவைகள் எல்லாம் கட்டுக்கதைகள். ரஸ்புட்டினின் மீது வீண்பழிகளைச் சுமத்துவதற்காக அவரைச் சுற்றியிருப்பவர்கள் கூறுகின்ற பச்சைப் பொய்கள்' என்றார் முன்யா கொல்வீனா.

'ஆனால் ரஷ்யர்களும், ஐரோப்பியர்களும் அதனை உண்மை யென்று நம்புகிறார்களே' என்றார்.

'பேரரசரையும் பேரரசியாரையும் குற்றம் சொல்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. அவர்களுடைய செய்கைகளைப் பற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் மக்களின் அபிப்பிராயங்களுக்கு அப்பாற்பட்டவர்கள்' என்றார்.

இவற்றிலிருந்து இளவரசர் வெறும் வார்த்தைகளால் மட்டும் ரஸ்புட்டினின் செல்வாக்கை அழித்துவிட முடியாது. நியாயத்தை மறைந்து தாம் செய்வதுதான் சரியென எண்ணுபவர்களிடம் எவ்வளவு உண்மைகளை எடுத்துச் சொன்னாலும் எதுவித பயனுமில்லை என்றே எண்ணினார்.

இளவரசர் .'.பீலிக்ஸ் யுசெப்போ தனது திட்டத்தை நிறைவேற்று வதற்கு தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான இருவரைத் தேர்ந்தெடுத்தார். முதலாமவர் சீமான் டிமிற்றி பவலோவிச் (Grand Duke Dmitri Pavlovich). இவர் யுசெப்போ பீலிக்ஸ் இன் பழைய ஆண் சினேகிதர். இளவரசரின் திருமணத்தால் சிறிது விலகியிருந்தவர்கள் இப்போது மீண்டும் மிகவும் நெருக்கமாக தமது உறவை வளர்த்துக்கொண்டார்கள். இரண்டாமவர் இராணுவ உதவிப்படைத்

தலைவர் ஐவன் சுக்கோரின் (Lt. Ivan Sukhotin). முதலில் இந்த மூவரில் ஒருவர் தலைநகரில் இருக்கும் ரஸ்புட்டினுடைய இருப்பிடத் திற்குச் சென்று துப்பாக்கியால் சுட்டுக்கொல்வது என்று தீர்மானித் தார்கள்.

எந்த முடிவெடுத்தாலும் தான் ரஸ்புட்டினுடன் மிண்டும் உறவை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக முன்யா கொல்வீனாவிடம் ரஸ்புட்டினைச் சந்திக்க ஏற்பாடு செய்யும்படி கூறினார். இரண்டாவது முறையாக ரஸ்புட்டினைச் சந்தித்தபோது அவரில் பலவித மாற்றங் களை அவதானித்தார். உடல் பருத்தும், தளர்ந்தும் இருந்தது. பேசும் போது மிகவும் கவனக்குறைவாக இருப்பதுபோலவே காணப்பட்டார். சாதாரண பாதிரியார் அணியும் ஆடைகளைக்கூட அணிந்திருக்கவில்லை. பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பான, வெறுப்பூட்டும் ஆடைகளைத்தான் அணிந்திருந்தார்.

இருவரும் ஒருவரை ஒருவர் கண்டவுடன் முகத்துதி கூறி வரவேற்றபின்னர் பலதையும் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

'எனக்கு தீராத வியாதி ஒன்று இருக்கின்றது. அதற்கு மருத்துவர்களால் எதுவித பரிகாரங்களும் செய்ய முடியவில்லை. நீர்தான் எனக்கு உதவ வேண்டும்' என்று இளவரசர் கூறினார்.

அந்தச் சந்திப்பிற்குப் பிறகு இளவரசரை ரஸ்புட்டின் தன் இருப்பிடத்திற்கு சிகிச்சைக்கு வருமாறு அழைத்தார். முதல்நாள சிகிச்சையின்போது ரஸ்புட்டின் தனது மயக்கும் சக்தியைப் பாவித்து இளவரசரை மயக்க முயன்றார். ஆனால் இளவரசரின் மனோதிடம் அவரை ரஸ்புட்டினால் முழுதாக மயக்கித் தனது கட்டுப்பாட்டுள் வைத்திருக்க முடியவில்லை. ஆனால் ரஸ்புட்டின் இளவரசர் .பீலிக்ஸ் யுசெப்போவைத் தான் தனது சக்தியால் தோற்கடித்துவிட்டதாக

எண்ணினார். இதன் பின்னர் இருவருக்குமிடையில் பல சந்திப்புக்கள் நடைபெற்றன. ரஸ்புட்டின் இளவரசரைக் காணும்போதெல்லாம் தனது அதீத சக்தியைப்பற்றியும், தனது எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் பெருமிதப்பட்டுக்கொள்வார்.

'நீர் என்னைப் பார்த்துப் பயப்படவேண்டாம். உம்மால் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியுமானால் நான் எப்படிப்பட்டவன் என்று நீர் அறிந்துகொள்வீர். என்னால் எதுவும் செய்ய முடியும். பேரரசரும் பேரரசியாரும் எனக்குப் பணிகிறார்கள் என்றால் உம்மாலும் பணியமுடியும். நான் சீக்கிரம் அவர்களைச் சந்திக்க இருக்கிறேன் அப்போது நீர் என்னைச் சந்தித்ததாகக் கூறுகிறேன்' என்றார்.

தான் ரஸ்புட்டினைச் சந்தித்த விடயம் பேரரசியாருக்குத் தெரியாமல் இருப்பதையே இளவரசர் விரும்பினார். உடனே 'வேண்டாம், அப்படிச் சொல்ல வேண்டாம். நாங்கள் இங்கு சந்திப்பது அவர்களுக்குத் தெரியாமல் இருப்பதே நல்லது' என்றார்.

'அதுவும் ஒரு வழிக்கு நல்லதுதான். அரசாங்கத்தில் உள்ளோர் ஒருபோதும் என்னைப் பற்றி நல்லதாகப் பேசுவதில்லை. இதனால் பேரரசியார் எப்போதும் வேதனைப்படுகிறார். இந்த நிலை நெடுநாள் நீடிக்காது. நான் அரசாங்கத்தைக் கலைத்து எல்லா பிரதிநிதிகளையும் போர்முனைக்கு அனுப்பவுள்ளேன். பேரரசர் ஒரு குழந்தையைப் போன்றவர். ஆண்டவனின் ஆசீர்வாதத்தோடு நாட்டை ஆள்வதில் அவருக்கு நாம் உதவவேண்டும். பேரரசியார் மிகவும் சாதுரியமாக அரசாட்சி செய்கிறார். அவருடன் சேர்ந்து நான் எதனையும் செய்வேன், என்ன வேண்டுமானாலும் பெற்றுக்கொள்வேன்.

இந்தப் பூசல்கள் எல்லாம் அடங்கியபின்னர் பேரரசியாரை நாட்டை ஆளும்படி செய்துவிட்டு பேரரசரை லிவாடியா (Livadia) விற்கு ஒரு பூந்தோட்டக்காரனாக அனுப்பிவிடுவோம். நாட்டில் நடக்கும்

போரினால் அவர் நன்றாகக் களைத்துவிட்டார். அவருக்கு ஆறுதல் தேவை. பூக்களுக்கு அருகில் இருந்தால் கடவுளுக்கு அருகில் இருக்கலாம். அவர் பிரார்த்தனை செய்வதற்கு ஏராளம் இருக்கின்றன. ஒன்று நடக்கின்ற பெரும் யுத்தம், மற்றொன்று அதற்கான செலவுகள். அவர் தனது வாழ்நாள் பூராவும் பிரார்த்தனை செய்தாலும் தனது பாவங்களைத் துடைத்துவிட முடியாது. அதன் பிறகு நாட்டை அரசியாரைத் தனித்து அரசாள வைத்துவிடுவோம். உமக்கு வேண்டுமானால் இப்போது ஒரு மந்திரிப்பதவியை நான் பெற்றுத்தர என்னால் முடியும்' என்று நீண்டதொரு உரையையே நிகழ்த்தினார்.

இதிலிருந்து ரஸ்புட்டினுக்கு பேரரசியாரிடம் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதென்பது இளவரசருக்குப் புலனானது. அமைச்சர்களை நியமனம் செய்வதையும், இடத்துக்கிடம் மாற்றுவதையும் எவ்வளவு சுலபமாக இவர் செய்ய எண்ணுகிறார். இவை ஒன்றும் நாட்டுக்கு நல்லதல்ல என்று எண்ணியபோதும் ரஸ்புட்டினிடம் எதுவுமே கூறவில்லை. அவர் கூறுவதை ஆமோதிப்பதுபோல் நடித்தார். அவர் கூறிய கூற்றுக்களிலிருந்து தன்மீதும் அவருக்கு இருந்த நம்பிக்கை வலுத்துவிட்டதாகவும் எண்ணினார்.

இளசரவரின் திட்டங்களுக்கு உரம் சேர்ப்பதுபோல் விலாடிமர் புரூஸ்கோவிச் (Vladimir Purishkevich) அவர்களையும் தன்னுடன் இணைத்துக்கொண்டார். இவர் அரசாங்கத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக அங்கம் வகிப்பவர். தனது கருத்துக்களை வெளிப்படையாகக் கூறுவதற்கு ஒருபோதும் தயங்கமாட்டார். இதற்காக பல தடவைகள் பாராளுமன்றக் கூட்டங்களிலிருந்து வெளியேற்றப்பட்டும் உள்ளார். அவர் சபைக்கு வருகை தரும்போது இவர் சபையில் என்ன கூறப்போகின்றாரோ என்று எல்லோரையும் ஒருவித திகில் சூழ்ந்திருக்கும். இவருடைய இந்தத் துணிச்சலான, வெளிப்படையான பேச்சுக்களினால் சக அங்கத்தவர்களிடையேயும், பொது மக்களிடையேயும் மிகுந்த செல்வாக்கும் பெற்றிருந்தார். இவருடைய பெயரைத் தாங்கிய புகைப்

படங்களும், விளையாட்டுப் பொருட்களும் மக்களிடையே மிகவும் பிரபல்யமாகியும் இருந்தன.

இவர் ஒருமுறை பாராளுமன்றத்தில் ரஷ்யாவைச் சூழ்ந்திருக்கும் தீய சக்திகள் என்று ரஸ்புட்டினைக் குறிப்பிட்டு 'உயர்ந்த பதவியிலிருக்கும் இழிவான பிரஜை' என்று இரண்டு மணித்தியாலங்களாகப் பேசினார். பேச்சின் முடிவில் உடனே பேரரசரிடம் சென்று 'புரட்சி ஒன்று வரப்போகின்றது அதற்குமுன் ரஸ்புட்டினின் அரசியல் செல்வாக்கு பற்றி ஆட்சேபியுங்கள். ஒரு சாதாரண கிராமத்தவன் ரஷ்யாவை இனிமேலும் நாட்டை ஆள முடியாது என்று கூறும் துணிச்சலை வரவழையுங்கள்' என்று கர்ச்சித்தார்.

பேச்சு முடிந்ததும் சபையிலிருந்த அத்தனைபேரும் எழுந்துநின்று தமது கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர். இவற்றை பார்வையாளர் கூடத்திலிருந்து அவதானித்த இளவரசர் .ப்லிக்ஸ் யுசெப்போ அசையாது அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டிருந்தார்.

தனது இருப்பிடம் சென்றதும் உடனே விலாடிமர் புரூஸ்கோவிச் இற்குத் தொலைபேசி அழைப்புத் தொடுத்துப் பேசினார். அடுத்தநாள் அவருடைய இருப்பிடத்திற்குச் சென்றார். சுமார் இரண்டு மணி நேரம் அவர் முதல் நாள் பாராளுமன்றத்திலே பேசிய பேச்சுப்பற்றிப் பேசினார்.

'இவற்றிற்கெல்லாம் ஒரு முடிவு கட்டவேண்டும்' என்றார்.

'எப்படி?'

'ரஸ்புட்டினை ஒழித்துக்கட்டவேண்டும்'

'அதனைச் சொல்வது மிகவும் சுலபம். ஆனால் யாரதைச் செய்வது?'

'அதனைச் செய்வதற்கு உரிய ஆட்களை கண்டுபிடிக்கலாம்'

'நீர் அப்படி ஆட்களைக் கண்டுபிடிக்கலாம் என்று எண்ணுகிறீரா?' என்றார் விலாடிமர் புரூஸ்கோவிச்.

'ஆம், அதிலொருவர் உங்கள் முன்னே நிற்கின்றார்' என்றார். விலாடிமர் புரூஸ்கோவிச் ஆச்சரியத்துடன் இளவரசரைப் பார்த்துக் கொண்டு நிற்கையில் இளவரசர் தனது இரகசியத் திட்டங்களை எடுத்து விளக்கினார். தன்னோடு இணைந்திருக்கும் மற்றவர்களைப் பற்றியும் விளக்கினார்.

.'ரஸ்புட்டினிற்கு மிகவும் பாதுகாவலாக காவலர்கள் இருக்கிறார் கள். அவர்களை மீறி இதனை எப்படிச் செய்வது? என்றார்.

'ரஸ்புட்டின் என்னுடன் இப்போது நல்ல உறவாக இருக்கிறார். என்னால் அவருடைய வீட்டிற்கு நினைத்தவுடன் சென்றுவர அனுமதியும் உண்டு' என்றார்.

அதன் பின்னர் இருவரும் மற்றையவர்களைச் சந்தித்து தமது இரகசியத் திட்டங்களைப் பகிர்ந்துகொள்வதென முடிவு செய்தனர். ரஸ்புட்டினைக் கொல்வது ஆன்மீகத்தால் உந்தப்படும் ஓர் உயரிய குறிக்கோளை அடைவது போலாகும் என்று நம்பினார். இது தான் பிறந்த மண்ணிற்கு ஆற்றும் சேவை என்றும் நம்பினார். இதற்கு திடமான நம்பிக்கை வேண்டும். இப்போது என்னிடமிருந்த தயக்கமும், சந்தேகங்களும் என்னைவிட்டு ஓடி ஒளிந்துவிட்டன என்று பெருமைப் பட்டார். அடுத்துத் தாம் செய்யவேண்டிய காரியங்களை காலதாமத மின்றிச் செய்யவேண்டும் என்று எண்ணியபடியே தன் இருப்பிடத்தை நோக்கி விரைந்தார்.

◆◆



26

திட்டங்களும் தீர்க்கதரிசனமும்

இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போ ஆளும் வர்க்கத்தையும், டிமிற்றி பவலோவிச் பிரபுக்கள் வர்க்கத்தையும், ஐவன் சுக்கோரின் பெரும் படைப்பிரிவையும், விலாடிமர் புரூஸ்கோவிச் தற்போதைய அரசாங்கத்தையும் நிர்வகிக்கின்றவர்கள். தாம் எடுத்த காரியத்தை நிறைவேற்ற சரியாகத் திட்டமிடுவதற்கு இதைவிட சக்திவாய்ந்த குழு ஒன்று அமையாது என்று அனைவரும் மகிழ்ந்தனர்.

ரஸ்புட்டினைக் கொலை செய்தால்தான் அரசர் மந்திரிகளின் ஆலோசனைகளைக் கேட்பார், நாடும் போரிலிருந்து விடுபடும் என்பதே இவர்களுடைய நோக்கம். அரச வர்க்கத்தினர் அரசியல் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள். அவர்களுக்கு அதனால் தண்டனை கிடைக்காது. அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் தண்டனை கிடைக்காது. இதில் ஈடுபடும் அனைவருமே தப்பித்துக் கொள்ளலாம்.

பல திட்டங்களை இவர்கள் வகுத்தனர். முதலில் இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போ ரஸ்புட்டினுடைய இருப்பிடத்திற்குச் சென்று அவரை துப்பாக்கியால் சுட்டுக்கொல்வது என்று எடுத்த முடிவு

சரியானதல்ல என்று அதனைக் கைவிட்டனர். அவருடைய இருப்பிடம் எந்நேரமும் அவருடைய பக்தர்களாலும், பிரார்த்தனை செய்பவர்களாலும் நிறைந்திருக்கும். அப்படித்தான் அவரைச் சுட்டுக்கொன்றாலும் சுட்டுக் கொன்றவர் எதுவித ஆபத்தும் இல்லாமல் தப்பி வருவது கடினம். எனவே அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

பேரரசருக்கு வழிகாட்டும் ரஸ்புட்டின் கொலை செய்யப்பட்ட விடயம் மக்களுக்குத் தெரிந்தால், பேரரசரையும் அது பாதிக்கும். அதனால் ரஸ்புட்டினைக் கடத்திச் சென்று கொலை செய்துவிட்டு அவரது உடலை போர்முனையிலே கொண்டுபோய் போட்டுவிடுவது என்ற திட்டம் இரண்டாவதாகத் தீட்டப்பட்டது. அடுத்து ரஸ்புட்டினைக் கடத்திக்கொண்டுவந்து நஞ்சு கொடுத்துக் கொல்வது என்றும் ஒரு திட்டமும் தீட்டப்பட்டது. இத்தனை பேரிலும் ரஸ்புட்டினுடன் தொடர்புடையவர் இளவரசர் மட்டும்தான். ஆதலால் அவர்தான் இதனைச் செய்யவேண்டும். ஆனால் அவருடைய இருப்பிடத்திலே இடைவிடாது காவலிருக்கும் பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து எப்படித் தப்புவது? இப்படியான பிரச்சினைகளை அனைவரும் அலசி ஆராய்ந்தார்கள்.

ரஸ்புட்டினை வெறுக்கின்ற சட்டவல்லுனர் வாசிலி மக்கோலோவ் (Vassiii Maklakov) அவரிடம் இளவரசர் இதுபற்றிக் கலந்தா லோசித்தார். அவரையும் தம்முடன் இணையுமாறு கேட்டார். அவர் களுடன் இணைவதற்கு அவர் தயங்கினார். ஆனால் இளவரசடைய இந்தத் திட்டத்திற்குத் தான் எந்தவகையிலும் குறுக்கே நிற்கமாட்டேன் என்றும், இதனை யாருக்கும் வெளிவிட மாட்டேன் என்றும் வாக்குறுதி கொடுத்தார். எதற்கும் இளவரசரைத் தன்னுடன் கலந்தாலோசித்து அசட்டையான தவறுகள் ஏதும் நேரவிடாமல் இருக்கும்படியும் கேட்டுக் கொண்டார். இப்படியாகக் கதைத்துக் கொண்டிருக்கும்போது இளவரசர் அவருடைய அறையின் ஒரு மூலையில் இரும்பினாலும் தோலினாலும் ஆன கனத்த தடி ஒன்றையும் கண்டார். சிலவேளை அதுவும்

தேவைப்படாலம் என்ற எண்ணத்தில் அதனையும் கேட்டுப் பெற்றுக் கொண்டார்.

வாசிலி மக்கோலோவ் அவர்கள் மீண்டும் இளவரசரைச் சந்தித்தபோது அவர் ரஸ்புட்டின் தலைநகரில் வைத்தே கொலை செய்யப்படவேண்டும், அதன் பின்னர் அவருடைய உடல் தலைநகரிலேயே வீசப்படவேண்டும் போர்முனையிலே போடப்படக் கூடாது என்று தனது கருத்தைத் தெரிவித்தார். இதனை இளவரசர் ஏனையோர்க்கும் தெரிவித்தார். ஆனால் எந்தத் திகதியைத் தேர்ந்தெடுப்பது என்றுதான் முடிவாகவில்லை. பலவிதமான கருத்தாடல்களின் பின்னர் தமது திட்டத்தை மார்கழி மாதம் 16 ஆம் திகதி நிறைவேற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதனை இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போவின் இருப்பிடமான 94 மெய்கா கானல் (Moika Kanal) இல் உள்ள ஓர் அறையில் நிறைவேற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாராக இருந்தாலும் தனது வீட்டிற்கு விருந்தாளியாக அழைத்துக் கொலை செய்வதென்பது இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போவிற்கு பெரிய சங்கடத்தையும் கொடுத்துக்கொண்டிருந்தது. இதனை மற்றவர்களுடன் கூறியபோது 'நாம் எமது சுயநலங்களை ஒருபுறத்தே வைத்துவிட்டு எமது நாட்டின் நலனுக்காக இதனைக் கட்டாயம் செய்யத்தான் வேண்டும்' என்ற ஒரே முடிவிற்கே எல்லோரும் வந்தனர்.

கார்த்திகை மாதம் 29 ஆம் திகதி அன்று விலாடிமர் புரூஸ்கோவிச் அவர்கள் இளவரசருடைய இருப்பிடத்திற்கு வந்தார். இளவரசருடைய இருப்பிடத்தில் நிலத்தின் கீழிருந்த அத்தனை அறைகளையும் இருவருமாகச் சுற்றிப் பார்வையிட்டனர்.

தமது திட்டத்தை நிறைவேற்றத் தகுதியான இடத்தை இருவருமாகச் சேர்ந்து தேர்ந்தெடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இளவரசருடைய மாளிகைக்கு எதிரே ஒரு பொலிஸ் காவல் நிலையம் இருப்பதால் அவர்களுக்கு இங்கு நடப்பவைகள் எதுவுமே தெரிந்து விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தனர். இறுதியில் இளவரசரின் படிப்பு அறையின் நேரே கீழிருந்த நிலஅறை ஒன்றைத் தேர்ந்தெடுத்தனர்.

இது மாளிகையின் மேற்குப் பகுதியில் தனியாக இருக்கும் ஓர் அறை. உயரத்தில் இருக்கும் இரண்டு யன்னல்களும் அருகே ஓடும் ஆற்றைப் பார்த்தவண்ணம் அமைக்கப்பட்டிருந்தன. வீட்டு வேலை யாட்கள் தங்கும் இடத்திலிருந்து மிகவும் தூரத்தில் இருப்பதால் எதுவித சத்தங்கள் கேட்டாலும் அவை அவர்களைச் சென்றடையாது என்ற காரணங்களுக்காகவே அந்த அறையைத் தேர்ந்தெடுத்தனர்.

விலாடிமர் புரூஸ்கோவிச் சிலவேளைகளில் தான் செய்யப்போகும் காரியங்களை மற்றவர்களுக்குச் சொல்லிப் பெருமைப்படுவதில் ஆனந்தம் காண்பவர். அதேபோல் ஒருநாள் முட்டாள்தனமாக தாம் திட்டமிட்ட ரஸ்புட்டினின் கொலையைப் பற்றிப் பத்திரிகையாளர்களிடம் எடுத்துக் கூறிவிட்டார். தாம் செய்யப்போகும் காரியத்தை மிகவும் இரகசியமாக வைத்திருப்பது என்று உறுதி பூண்டபோதும் அன்று அப்படிச் செய்துவிட்டார்:

'மார்கழி 16ஆம் திகதியை மறக்கவேண்டாம்' என்றார்.

இதனைக் கவனித்த வாசிலி சுல்கின் (Vassili Shulgin) என்பவர் 'எதற்காக' என்றார்.

'பிரியாவிடை', 'அதாவது அன்று நாங்கள் அவனைக் கொலை செய்யப்போகிறோம். இதனை யாருக்கும் சொல்லமாட்டீர் என்று எண்ணுகிறேன்' என்றார் புரூஸ்கோவிச்.

'யாரை?' என்று கேட்டார் வாசிலி சுல்கின்.

'ரஸ்புட்டினை.'

'இதனைச் செய்யவேண்டாம்.'

'என்ன? ஏன் செய்யவேண்டாம்?'

'எனக்குத் தெரியாது, அது அருவருப்பான ஒரு செயல்.'

'நீர் ஒரு கோழை சுல்கின். அதுதான் இப்படிப் போசுகிறீர்' என்றார் விலாடிமர் புரூஸ்கோவிச்.

'அப்படி இருக்கலாம். இதற்கு வேறு ஏதோ காரணம் இருக்கின்றது. ரஸ்புட்டின் அவ்வளவு வெல்வாக்கு உடையவர் என்று நான் எண்ணவில்லை' என்றார்.

'நீர் கூறுவது உண்மையல்ல.'

'நீர்தான் அபத்தமாகப் பேசுகிறீர். அவர் ஒரு சிறந்த அறிவாளி. ஆனால் மந்திரிகளை அவர் வழிநடத்தவில்லை. அவர் அங்கே இருந்து கொண்டு எமது வருங்கால அரசருக்காகப் பிரார்த்திக்கிறார் அவ்வளவு தான்' என்றார் வாசிலி சுல்கின்.

'அப்படியானால் அவர் அரச குடும்பத்தின்மேல் கெட்ட பெயரை உண்டாக்கவில்லையா? என்னால் உம்மைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை' என்று கூறினார் விலாடிமர் புரூஸ்கோவிச்.

'ஏன் அப்படிக் கூறுகின்றீர்? யாரை நியமித்தாலும், எல்லோரையும் திருப்திப்படுத்திவிட முடியாது. மக்கள் மக்களையே நம்புகிறார்கள்.

இவர்களைத்தான் அரசகுடும்பம் நம்ப மறுக்கின்றது. இதற்கும் ரஸ்புட்டினுக்கும் எதுவித தொடர்புகளும் இல்லை. அவரைக் கொல்வதால் எதனையும் மாற்றிவிட முடியாது' என்றார் வாசிலி சுல்கின்.

'இந்த அவமானத்தை எம்மால் இனிமேலும் சகித்துக்கொண்டு இருக்க முடியாது. நான் உமக்குச் சொல்லவும் தேவையில்லை, நான் சொல்வதை நீர் கேட்கவும் தேவையில்லை. எமது அரச பரம்பரையே அழிந்துகொண்டிருக்கின்றது. அதோடு சோர்ந்து நாமும் அழிந்துகொண்டிருக்கிறோம். எமது நாடும் அழிந்துகொண்டிருக்கிறது. எதுவந்தாலும் இதற்கொரு முடிவைக் காணாமல் நாம் விடப்போதில்லை. ரஸ்புட்டினை ஒரு நாயைக்கூட கொல்வதுபோல் கொல்லப்போகிறோம்' என்றார் விலாடிமர் புரூஸ்கோவிச்.

மீண்டும் மார்கழி மாதம் முதலாம் திகதி சதியாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது டிமிற்றி பவலோவிச் 'ரஸ்புட்டின் 94 மெய்கா கானல் மாளிகைக்கு வரச் சம்மதம் தெரிவித்துவிட்டாரா? உம்மை நம்புகிறாரா? அங்கு வருவது பற்றிய அவரது மனேநிலை எப்படி இருக்கின்றது?' என்று இளவரசர் .'.பீலிக்ஸ் யுசெப்போ அவர்களிடம் கேட்டார்.

'ஓ, அவர் அங்கு வர சம்மதம் தெரிவித்துவிட்டார். அவருக்கு என்மீது எதுவித சந்தேகமுமில்லை. அவருக்கு நான் அரசாங்கத்தில் ஒருவித பதவியும் வகிக்கவில்லையே என்ற ஆதங்கமும் நிறையவே இருக்கின்றது' என்றார் சிறிது நகைப்போடு.

அவர்களின் சதியாலோசனைகளின்படி, ரஸ்புட்டின் இளவரசருடைய 'ாளிகைக்கு வந்து அவருடைய மனைவி ஐரீனாவைச் சந்திக்கவேண்டுமென நெடுநாளாக ஆசை இருக்கின்றது. அதனை நிறைவேற்றுவதுபோல் செய்து அவரை எமது வலையில் வீழ்த்தவேண்டும்.

ஐரீனா அப்போது அங்கே இல்லாவிட்டாலும் அதனைத் தெரியப் படுத்தாமல் அவர் அங்கே இருப்பதுபோல் காட்டிக்கொள்ளவேண்டும் என்றார்.

இளவரசர் தனது வேலையாட்களில் யாரையும் இதில் சம்பந்தப் படுத்த விரும்பவில்லை. தானே அன்று இரவு ரஸ்புட்டினுடைய இருப்பிடத்திற்குச் சென்று அவரை அழைத்துவருவதாகக் கூறினார். அதேபோல் டாக்டர் லசோவேட் (Dr.Lozovert) அவர்களை இளவரசரின் சாரதிபோல் அமர்த்தவேண்டும் என்று எல்லோராலும் சேர்ந்து ஒரே முடிவை எடுத்தனர்.

ரஸ்புட்டின் இளவரசருடைய மாளிகைக்கு வந்ததும் அவரை முன்னரே தெரிவு செய்து வைத்திருக்கும் நில அறைக்கு இளவரசர் அழைத்துவரவேண்டும். அங்கே அவருக்கு நஞ்சூட்டிக் கொன்றுவிட்டு அவருடைய உடலைச் சங்கிலியால் கட்டிக் கொண்டுபோய் நகரத்தின் ஒதுக்குப்புறமாகவுள்ள பாலம் ஒன்றிலிருந்து உறைந்து கொண்டிருக்கும் நாவா நதியில் தள்ளிவிடவேண்டும். சங்கிலியின் பாரத்தால் ரஸ்புட்டினின் உடன் நதியின் அடியைச் சென்றடையும். அங்கிருக்கும் வேகமான அலைகளால் அவருடல் ∴பின்லாந்துக் குடாவைச் சென்றடையும். அவருடைய சடலம் அடுத்த கோடைகாலத்தில் உருகும் பனிகள் அகன்ற பின்னர்தான் கண்டுபிடிக்கப்படும்.

அதேவேளையில் டிமிற்றி பவலோவிச்சும், ஐவன் சுக்கோரினும் ரஸ்புட்டினுடைய ஆடைகளை எடுத்துச் சென்று விலாடிமர் புரூஸ்கோவிச்சின் இடத்தில் எரித்துவிடவேண்டும். இறுதியாக 94 மெய்கா கானலில் நடந்தவற்றைத் திசை திருப்பி ஒரு குழப்பத்தையும் உண்டாக்குவதற்காக ரஸ்புட்டின் வழமையாக உணவருந்தும் விலா றோட் (Villa Rode) உணவுச்சாலைக்கு தொலைபேசி அழைப்புக்

கொடுத்து ரஸ்புட்டின் அங்கு வந்துவிட்டாரா? என்று கேட்கவும் வேண்டும் என்றெல்லாம் முடிவுசெய்தாரகள்.

இவை எல்லாம் நடைபெற்ற அன்றே இளவரசர் ரஸ்புட்டினின் இருப்பிடம் சென்று தான் முன்னர் அழைத்ததுபோல் தனது மாளிகைக்கு 16ஆம் திகதி வரமுடியுமா? என்று கேட்டார். அதற்கு ரஸ்புட்டின் உடனேயே ஆம் என்று உற்சாகமாகப் பதில் அளித்துவிட்டார். அதேவேளையில் இரவு அங்கே செல்வதாக இருப்பதால் தனது இருப்பிடத்தின் முன்பக்க வாசலால் வராமல் பின்பக்க வாசலால் வந்தால் முன்னால் காவலுக்கு நிற்பவரின் கண்களுக்குத் தெரியாமல் சென்றுவரலாம் என்றும் ஆலோசனை கூறினார். ரஸ்புட்டின் இளவரசருடைய மாளிகைக்கு யாரும் அறியாமல் சென்று வரவே விரும்பினார். இளவரசருக்கு இது 'பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போல்' இருந்தது.

இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போ குறிப்பிட்ட நாள் நெருங்க நெருங்க அமைதியின்றியே காணப்பட்டார். செய்வதில் தெளிவில்லை, பேசுவதில் ஒருவித அவசரம். எப்படியிருந்தும் தான் எடுத்த முடிவை நிறைவேற்றுவதிலேயே கண்ணாயிருந்தார் ஒருசில நாட்கள் கழிந்ததும் இளவரசர் தனது மனைவியாருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் எழுதியவை எதுவுமே தெளிவில்லாமல் இருந்தன. அதனைப் படித்த ஐரீனா,

'அன்புள்ள ஃபீலிக்ஸ், உமது கடிதத்திற்கு நன்றி. ஆனால் அதில் எழுதப்பட்டிருந்தவற்றில் அரைவாசியைக் கூட என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அதிலிருந்து நீர் ஏதோ கொடூரமான ஒன்றைச் செய்யப் போகிறீர் என்பதை உணர்கிறேன். ஆனால் தயவுசெய்து யாரும் சந்தேகப்படக் கூடிய வகையில் எந்தக் குழப்பங்களிலும் ஈடுபடவேண்டாம்' என்று பதில் எழுதியிருந்தார்.

பிரபு டிமிற்றி பவலோவிச்சிற்கும் இளவரசர் போன்றே மனோநிலை இருந்தது. எதிர்பாராத விதமாக தனது நண்பர் ஒருவரைச்சந்தித்தபோது தாம் செய்யப்போகும் கொலை பற்றி ஒன்றும் விடாமல் எடுத்து விளக்கினார். பேரரசியாரின் பிற்போக்குக் கொள்கைகளுக்குள் பேரரசரையும் இழுத்து நாட்டைச் சீரழிக்கத் தூண்டுபவர்களை இல்லாதொழிக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்து விளக்கினார். இதன் பின்னர் இந்தச் சதித்திட்டம் இப்போது தலைநகரிலிருந்த பலருக்குத் தெரிந்துவிட்டது.

குறிப்பிட்ட திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்பாக, இறுதித் தடவையாக சதியாலோசகர்கள் அனைவரும் ஒன்றுகூடினர். ஒரு சிறு ஒலிபெருக்கியை மேலுள்ள அறையினுள் வைத்து அங்கே ஒரு விருந்துபசாரம் நடைபெறுவதுபோலச் செய்யவேண்டும். அப்படியென்றால் தான் ஜரீனா மேலே விருந்தினர்களைக் கவனித்துக்கொண்டு இருக்கிறார், இன்னும் சிறிது நேரத்தில் தன்னைச் சந்திக்க வந்துவிடுவார் என்பதை ரஸ்புட்டின் நம்புவார். அதற்கிடையில் நாம் கொடுக்கும் நஞ்சு அவரைக் கொன்றுவிடும் என்று இளவரசர் தனது திட்டத்தை விளக்கினார்.

இவையெல்லாம் இப்படியிருக்க மார்கழி 16ஆம் திகதியை அண்மிக்கும்போது ரஸ்புட்டினையும் ஒருவிதமான ஐயமும், திகிலும் ஆட்கொள்ள ஆரம்பித்தன. தன்னைச் சுற்றியிருப்பவர்களிடம் தனது உயிருக்கு ஆபத்து வந்துவிடும்போல் இருக்கிறது என்று அடிக்கடி கூறிக்கொண்டேயிருந்தார். கடைசியாக பேரரசரைச் சந்தித்தபோது தான் பேரரசருக்கு வழமையாகச் செய்யும் ஆசீர்வாதத்தைச் செய்யாது;


'நான் இவ்வளவு நாளும் உம்மை ஆசீர்வதித்தேன், ஆனல் நீர் இன்று என்னை ஆசீர்வதிக்கவேண்டும்' என்று கூறினார். அது மட்டுமல்லாமல் அமைதியாக இருந்து ஒரு தீர்க்கதரிசனமான கடிதத்தையும் எழுதினர்.

பேரரசருக்கு பொக்ரொவஸ்கோ (Pokrovskoe) கிராமத்தின் கிரகோறி எவிமெவிச் ரஸ்புட்டினின் (Gregory Efimovich Rusputin) ஆவி எழுதுவது;

எனக்குப் பின் தலைநகரில் இந்தக் கடிதத்தை விட்டுச் செல்கிறேன். தை மாதம் முதலாம் திகதிக்குள் நான் எனது வாழ்வைத் துறந்துவிடுவேன் என்றே எண்ணுகிறேன். ரஷ்ய மாதா, பிதா, குழந்தைகளுக்கும், ரஷ்ய மண்ணிற்கும் அறியத்தருவது என்னவென்றால், நான் ஒரு சாதாரண ரஷ்ய பிரஜையால் அதாவது ஒரு சாதாரண மனிதானால் வஞ்சித்துக் கொல்லப்பட்டால் பேரரசர் ஒன்றிற்கும் பயப்படத் தேவையில்லை. அவர் தனது முடியோடும், கொடியோடும், படையோடும், பிள்ளைகளோடும் பல ஆண்டு காலம் அரசாள்வார். பிரபுக்கள் யாராவது என்னைக் கொலை செய்தால், என்னை இரத்தம் சிந்த வைத்தால் இருபத்தைந்து வருடத்திற்கு அவர்களின் கைகளிலிருந்து இரத்தக்கறை மறையாது. அவர்கள் ரஷ்யாவை விட்டு வெளியேறுவார்கள். சகோதரர்கள் ஒருவரையொருவர் வெறுப்பார்கள். ஒருவரை ஒருவர் வெட்டிக் கொலைசெய்வார்கள். இருபத்தைந்து வருடங்களுக்கு நாட்டில் பிரபுக்களே இருக்க மாட்டார்கள். அரசரே, உம்முடைய இனத்தவர் களால் நான் கொலை செய்யப்பட்டால் உம்முடைய குடும்பத்தில் உள்ளவர்களோ, உம்முடைய இனத்தவர்களே இரண்டு வருடங்களுக்கு மேல் உயிர் வாழமாட்டார்கள். அவர்கள் எல்லோரும் ரஷ்ய மக்களால் கொலை செய்யப்படுவார்கள். நான் அப்போது உயிரோடு இருக்க மாட்டேன். எனவே நன்றாகப் பிரார்த்திக்கவும். ஆசீர்வதிக்கப்பட்ட உமது குடும்பத்தை எண்ணிப் பார்க்கவும்.

இப்படிக்கு
கிரகோறி.

என்று கையொப்பமிட்டு எழுதப்பட்டிருந்தது.



27

கொலைக்களம் நோக்கி...

ரஸ்புட்டின் கூடுதலான நேரத்தை அரண்மனையிலேதான் செலவிட்டார். சில வேளைகளில் தனது இருப்பிடத்தில் இருந்தபோது இரண்டொரு தடவைகள் குழந்தை அலெக்ஸிக்கு உடல் நலமில்லை என்று அரசியார் அவரை அரண்மனைக்கு வரும்படி அழைத்திருக்கிறார். அதேவேளையில் இளவரசர் யுசெப்போ ∴பீலிக்ஸ் இப்போது ரஸ்புட்டினிடம் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தார். அவர் வருவதும் போவதும் வீட்டின் பின்புறத்திலுள்ள படிக்கட்டுகள் வழியாகத்தான். ரஸ்புட்டின் வீட்டில் ஓய்வு கிடைத்தால் தனக்குப் பிடித்த மடீரா (Madeira) என்கிற 'வைன்' போத்தலோடுதான் இருப்பார்.

மார்கழி 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை என்று மில்லாதவாறு மர்மமாகவே மலர்ந்தது. குளிரான தலைநகரின் மேலே ஆங்காங்கே குவிந்திருந்த செந்நிற மேகக்கூட்டத்தை பேரரசியார் தனது படுக்கை அறையிலிருந்து யன்னலூடாகப் பார்த்தார். என்று மில்லாதவாறு விநோதமாகவே இருந்தன.

ரஸ்புட்டினும் வெள்ளிக்கிழமையன்று தாமதமாகவே எழுந்திருந்தார். வழமைபோலக் குளித்துவிட்டு தேவாலயத்திற்குச் சென்றுவந்தார். வந்திருந்த விருந்தினர்களை அனுப்பியதுதான் தாமதம் தனக்குப் பிடித்தமான மடீரா வைன் போத்தல்களைத் திறந்து குடிக்க ஆரம்பித்தார்.

அன்று சாயந்தரம் அரசியாரின் தோழி அன்னா விருபோவா தாண்டித் தாண்டி படியேறி ரஸ்புட்டினின் இருப்பிடத்தை அடைந்தார். அவருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்கள் இன்னமும் முழுதாக ஆறவில்லை. கால்களை முன்னர்போல் நன்றாக நிலத்தில் வைத்து நடக்க முடியாமலிருந்தது. அப்படியிருந்தபோதிலும் அரசியாரின் வேண்டுதலின் பேரிலேதான் இப்போது ரஸ்புட்டினின் இருப்பிடத்திற்கு வந்திருக்கின்றார். அவரை வரவேற்ற ரஸ்புட்டினின் மூத்த மகள் மரியா உள்ளே அழைத்துச் சென்றார். ரஸ்புட்டினைக் கண்டதும் வணக்கம் கூறிவிட்டு இருக்கையில் அமர்ந்து பலவற்றையும் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

ரஸ்புட்டினுக்காக அரசியார் கொடுத்துவிட்ட பழக்கூடையை அருகே வைக்கச்சொல்லி அவரின் பின்னால் அதனைச் சுமந்து வந்தவரிடம் கூறிவிட்டு 'நேற்று அரசமாளிகைக்கு வந்து இளவரசனின் அறைக்குச் சென்றபோது நீங்கள் மிகவும் தன்னம்பிக்கையுடன் இருந்ததை நான் அவதானித்தேன். இளவரசர்கூட நீங்கள் வந்ததும் எழுந்து உட்கார்ந்துவிட்டார். இதுவரை இழந்த அந்த அதீத சக்தி உங்களுக்குத் திரும்பவும் வந்துவிட்டதா?' என்று கேட்டார்.

'என்றுதான் எண்ணுகிறேன்'

'இளவரசருக்கு இப்போது காலிலே சிறிது நோவு உண்டாகி யிருக்கிறது. அதனைப் பற்றியும் உங்களிடம் தெரிவிக்கச் சொல்லி அரசியார் கட்டளையிட்டார்' என்று கூறினார்.

'இளவரசருக்கு இனிமேல் அப்படி எதுவும் நடக்காது. நீங்கள் பயப்படும்படியாக அவருக்கு எதுவும் நிகழாது. அவர் தனது வாழ்நாள் முழுவதும் இனிமேல் எதுவித குறைகளும் இல்லாமல் வாழ்வார்' என்று கூறினார்.

'நீங்கள் மிகவும் களைப்புடன் இருப்பதுபோல் தெரிகிறது. இன்றிரவு நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்' என்று மீண்டும் அனா கூறினார். இதனை ஆமோதிப்பதுபோல் அவரது இரண்டாவது மகள் வாரியாவும் கூறினார்.

'இன்றைக்கு எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கின்றது. நான் இப்போது இளவரசர் யுசெப்போ .ீபீலிக்ஸ் இன் இருப்பிடமான மொய்கா கானலுக்கு (Moika Kanal) சென்று அவரது மனைவியார் இளவரசி ரைனா (Princess Irina) வைச் சந்திக்க இருக்கிறேன். இதுவே அவர்களின் மாளிகைக்கு நான் செல்லும் எனது முதல் பயணம்' என்று மிகுந்த சந்தோஷத்துடன் கூறினார் ரஸ்புட்டின்.

சிறிது நேரத்தில் அனா சென்றுவிட்டார். ரஸ்புட்டின் தொடர்ந்தும் மதுப் புட்டிகளை ருசி பார்த்தவண்ணமே இருந்தார். அனா விருபோவா சென்று அரைமணி நேரம் கழிந்திருக்கும் மீண்டும் கதவு தட்டப்பட்டது. அங்கே உள்நாட்டு விவகார அமைச்சர் புறோட்டப்போவோ (Protopopov) நின்றுகொண்டிருந்தார். பேச்சின் இடையே அவர் கூட ரஸ்புட்டினை இரவுவேளைகளில் எங்கும் செல்லவேண்டாம் என்று தடுத்தார்.

'உம்மைக் கொலைசெய்யப் பலர் காத்திருக்கின்றார்கள். அதனால் இந்த இரவு வேளையில் எங்கும் செல்லாது வீட்டில் இருப்பது தான் புத்திசாலித்தனம்' என்றார்.

'என்னால் அப்படிச் செய்ய முடியாது. அதனை ரத்துச் செய்ய முடியாது. நான் எப்படியும் அங்கே போய்த்தான் ஆக வேண்டும்' என்றார் ரஸ்புட்டின்.

'நான் உமக்கு மட்டும் ஒரு விடயத்தை இரகசியமாகச் சொல்கிறேன் கேளும். அரசருக்கு மிகவும் வேண்டியவர்களே அரசரையும் அரசியாரையும் கடத்திச் செல்லவும், இளவரசருக்கு முடிசூட்டவும், உம்மை சைபீரியாவிற்குத் திருப்பி அனுப்பவும் திட்ட மிடுகின்றார்கள். அவர்கள் சிலருடைய பெயர்களும் எனக்குத் தெரியும். ஆனால் அவற்றை நான் இப்போது கூறமாட்டேன்' என்றார். இவ்வாறு பலவற்றையும் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவரும் சென்றுவிட்டார்.

அனா விருபோவா அரண்மனைக்குச் சென்று பேரரசியாரிடம் பேசிக்கொண்டிருந்தபோது 'நான் ரஸ்புட்டினினுடைய இருப்பிடத்திற்குச் சென்றிருந்தபோது அவர் தான் இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு இளவரசர் பீலிக்ஸ் யுசெப்போவினுடைய மெய்கா கானல் மாளிகைக்குச் சென்று ஐரீனாவைச் சந்திக்கப்போவதாகக் கூறினார்' என்றார்.

பேரரசியார் சிறிது யோசித்துவிட்டு 'இதில் எங்கோ தவறு நடந்திருக்கிறது' என்றார். மீண்டும் சிறிது நேரம் அமைதியாக யோசித்துவிட்டு 'எங்கோ தவறு நடந்திருக்கிறது, ஏனென்றால் ஐரீனா இப்போது கிரிமியா (Crimea) வில் அல்லவா இருக்கிறார்?' என்றார். அதன்பிறகு அதில் அதிக கவனமெடுக்காது அவர்கள் தமது வேலைகளைக் கவனிக்கச் சென்றுவிட்டனர்.

அமைதியான இருள் கவிந்த இரவு. வானத்திலிருந்து வீழ்ந்த பனிப்பூக்களும் அந்த இருள்போல் சென்பீற்றஸ்பேக் நகரத்தையே மூடி மறைத்திருந்தன. வடதுருவத்திலிருந்து வீசும் கடும் குளிர் நாட்டிலிலுள்ளோர் அனைவரையும் வீட்டிற்குள்ளேயே

பூட்டிவைத்துவிட்டது. அடர்ந்த இருள்சூழ்ந்த நெடுவானவெளியில் ஆங்காங்கே விண்மீன்கள் மட்டும் இடையிடையே தங்கள் கண்களைச் சிமிட்டிக்கொண்டிருந்தன. இருந்தபோதிலும் இன்னும் பூமியிலே வீழ்ந்து உறைவதற்கென பனி மூட்டங்கள் சென்பீற்றஸ்பேக்கிற்கு மேல் வட்டமிட்டுக்கொண்டேயிருந்தன.

1916 ஆம் ஆண்டு மார்கழி 16 ஆம் திகதி அரசப் படைகள் ரஷ்யப் படைத் தளபதி புறுசுலோவ் (Brusilov) வின் ஆணைப்படி லட்சுக் (Lutsk), செனோவிற்ச் (Czernowitz), ரெனோபோல் (Tenopol) இலும் அமோக வெற்றியீட்டிய போதிலும், அடுத்தடுத்து வந்த ஜேர்மன் துருப்புக்களின் தாக்கங்களைத் தாங்கமுடியாமல் தத்தளித்தன. வெகு சிரமப்பட்டுக் கைப்பற்றிய பிரதேசங்களைவிட்டு இராணுவம் வலுக்கட்டாயமாகப் பின்வாங்கவும், எதிரிகளிடம் சரணடையவும் நேரிட்டது. இந்த யுத்தத்தில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரஷ்ய இராணுவ வீரர்கள் பலியாகினர். இந்த அவசியமற்ற போரினால் மக்களிடையே அரசருக்கும் அரசியாருக்கும் எதிரான கோஷங்கள் தினமும் தொடர்ந்து கொண்டே இருந்தன.

இரவு நேரம் மணி பத்து அடித்து ஓய்ந்தது. ரஸ்புட்டின் மூத்த மகள் மரியாவைப் படுக்கைக்கு அனுப்பிவிட்டு இளைய மகள் வாரியாவுடன் பேசிக்கொண்டிருந்தார். இப்போது கடிகாரம் பதினொரு மணி என அறிவித்தது. இரண்டாவது மகளையும் படுக்கைக்குப் போகும்படி கூறிவிட்டு வரவேற்பறையில் போய் அமர்ந்தார். எங்கும் ஒரே அமைதி. விநாடிகளைக் காட்டும் சுவர்க்கடிகாரத்தின் 'டிக் டிக்' என்ற ஒலி மட்டும் இலேசாகக் கேட்டுக்கொண்டேயிருந்தது.

இளவரசர் .'.பீலிக்ஸ் யுசெப்போ அன்று சாயந்தரம் முழுவதும் அமைதியில்லாமல் தவித்துக்கொண்டிருந்தார். அதேவேளையில் தாம் ரஸ்புட்டினை அழைத்து வந்து தங்கவைக்கப்போகும் அறையினை

அலங்கரிப்பதிலே கவனமாக இருந்தார். அந்த நில அறையின் நடுவில் அழகாக அமைக்கப்பட்ட அரை வட்ட வடிவான வளைவுகளும், அதன் ஒரு மூலையில் முதல் மாடிக்குச் செல்லும் வளைவான படிக்கட்டுகளும் அமைந்திருந்தன. படிக்கட்டுக்களின் அரைவாசியில் பின்னாலிருக்கும் தோட்டத்திற்குச் செல்லும் கதவு ஒன்று மறைவாக அமைக்கப் பட்டிருந்தது.

மாளிகையின் சேமித்து வைக்கும் அறைகளிலிருந்து பலவிதமான தளவாடங்களை எடுத்துவந்து அங்கே வைத்தார். கருங்காலி மரத்தால் செய்யப்பட்ட மதுபானப் போத்தல்கள் வைக்கும் பெட்டி ஒன்றினை ஒரு மூலையில் வைத்து அதன் மேலே கற்கள் பதிக்கப்பட்ட மிகவும் விலையுயர்ந்த வெள்ளிச் சிலுவை ஒன்றை வைத்தார். கண்ணாடிகளும், பீங்கான் கோப்பைகளும் அருகே அழகாக அடுக்கி வைக்கப்பட்டன. குளிரான தரையை மறைத்து விலையுயர்ந்த கம்பளமும், குளிர்காய நிலக்கரி எரிக்கும் இடத்தின் முன்னால் அழகிய வெள்ளை நிறக் கம்பளமும் விரிக்கப்பட்டன.

மாளிகையின் வேலைக்காரர்களை அழைத்து அன்றிரவு அறுவருக்கு அங்கே தேனீர் விருந்து நடைபெற இருப்பதாகவும் தெரிவித்தார். அன்று மாலை தேவாலயத்திற்குச் சென்று நீண்ட நேரம் பிரார்த்தித்தார். பிரார்த்தனைகளின் பின்னர் தனக்குள்ளே ஒரு அபூர்வமான ஒளி தோன்றுவதைப்போல் உணர்ந்தார். தான் அன்றிரவு செய்யப்போகும் காரியம் நாட்டின் விடிவுக்காக ஆண்டவனின் ஆசியுடனே செய்யப்படுவ தென்றே எண்ணினார்.

கருங்காலி மரத்தால் செய்யப்பட்ட பெட்டியின்மேல் பழரசப் போத்தல்களும், டம்ளர்களும், 'கேக்' துண்டுகளும் மற்றும் உணவுப் பொருள்களும் வெள்ளித் தட்டுக்களில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டன. சுமார் பன்னிரண்டு மணிக்கெல்லாம் மற்றையோர்களும் ஒவ்வொருவராக

வந்து சேர்த்துவிட்டார்கள். இளவரசர் டாக்டர் லசோவேட் (Dr.Lozovert) அவர்களிடம் சயனைட் அடங்கிய ஒரு பெட்டியைக் கொடுத்தார். அவர் அதனை மிகவும் அவதானமாக 'கேக்' துண்டுகளிடையேயும், வைன் போத்தல்களிற்குள்ளும் இட்டார். இந்த சயனைட் விஷமானது பல மனிதர்களை ஒரேநேரத்தில் கொல்லக்கூடியது என்றார். எல்லோருமாகச் சேர்ந்து அந்த அறையை ஒரு விருந்துபசாரம் நடந்து முடிந்த இடம்போல் ஆக்கினார்கள். அரைகுறையாக கடிக்கப்பட்ட உணவுவகைகளும், விடப்பட்ட டம்ளர்களும், அங்குமிங்குமாக விடப்பட்ட கதிரைகளும், கசக்கியெறியப்பட்ட கடுதாசிகளும் அந்த அறையின் பாதியை நிறைத்தன.

நள்ளிரவைத்தாண்டி அரை மணிநேரம் சென்றதும் டாக்டர் ல்சோவேட் காரோட்டும் சாரதிபோல் உடையணிந்துகொண்டு வந்தார். இளவரசர் ஒரு நீண்ட மேலங்கியும், பெரிய தொப்பியுடனும் வந்தார். இருவரும் புறப்பட்டு ரஸ்புட்டினுடைய இருப்பிடம் நோக்கித் தமது மோட்டார் வண்டியை ஓட்டினர்.

வெளியே அமைதியாக இருந்த நகரின் பகுதியை பனிக்கம்பளம் விரித்தாற்போல் ஆகாயத்திலிருந்து விழும் பனித்துகள்கள் மறைத்துக் கொண்டிருந்தன. பார்ப்பதற்கு பொங்கியெழும் புரட்சிக்காரர்களை தளர்த்தியான வெண்ணிற ஆடையால் அமுக்கிப் பிடித்திருப்பதுபோல் இருந்தது. இருண்ட மேகக்கூட்டங்களினூடே அள்ளித் தெளித்ததுபோல ஆங்காங்கே ஆடகப்பூக்களும் மின்னிக்கொண்டிருந்தன. அவற்றினோடு சேர்ந்து மிகப் பெரிதான வியாழன் நட்சத்திரத்தின் ஒளியும் ரஷ்யத் தலைநகரான பீற்ரோகிராட் மேல் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

அமைதியாக இருந்த வீதியின் நிசப்தத்தைக் கலைத்தபடி கறுத்த நிறமுடைய நீண்ட ஆடம்பரமான மோட்டார் வண்டி ஒன்று வந்து ரஸ்புட்டினின் இருப்பிடத்திற்கு அருகே நின்றது. வாகனத்தின்

பின்பக்கக் கதவைத் திறந்துகொண்டு ஓர் உயரிய உருவம் கீழே இறங்கியது. அணிந்திருந்த மேலங்கியின் மேற்பாகம் அவருடைய முகத்தின் முக்கால்வாசியை மறைத்திருந்தது. தலையில் அணிந்திருந்த தொப்பியும் காதுகளை மூடி மறைத்திருந்தது. உறைந்திருந்த பனிப் படலங்களை உடைத்துக்கொண்டு கால்களை மெதுவாகப் பதித்தபடியே ரஸ்புட்டினின் பின்பக்கத்திலிருந்த படிக்கட்டுக்களை நோக்கி அந்த உருவம் நகர்ந்தது.

அந்த உருவத்திற்குரியவர் இளவரசர் யுசெப்போ .்பீலிக்ஸ்தான் என்பது ரஸ்புட்டினுக்குத் தெரியும். எதிர்பார்த்தபடியே அவர் வந்து வாசல் மணியை அடித்ததும் வந்து கதவைத்திறந்தார். இளவரசர் ரஸ்புட்டினையும் தள்ளிக்கொண்டு நுழைவதுபோல் உள்ளே நுழைந்தார். இதனை அவதானித்த ரஸ்புட்டின் 'ஏன் என்ன அவசரம்? எதற்காக ஒளிவதுபோல் முயலுகிறீர்?' என்றார்.

''நீர் இன்றிரவு என்னுடன் வெளியே போவதுபற்றி நாம் யாருக்கும் தெரியப்படுத்துவதில்லை என்று பேசினோம் அல்லவா? அதுதான் நான் அப்படிச் செய்கிறேன்' என்றார்.

'உண்மை உண்மை, நான் இதுபற்றி எனது வீட்டில் யாருக்கும் சொல்லவில்லை' என்றார். ஆனால் ரஸ்புட்டின் ஏற்கெனவே அங்கு வந்த சிலருக்கு இதுபற்றிக் கூறியிருந்தார். இருவரும் இரகசியமான குரலில் கதைத்துக்கொண்டே வரவேற்பு அறையை அடைந்தனர். இளவரசரை அங்கே அமர வைத்துவிட்டு தனக்கு மிகவும் விருப்பமான ஆடைகளை எடுத்து அணிய ஆரம்பித்தார். தலையையும், தாடியையும் மிகவும் நேர்த்தியாக வாரிவிட்டார்.

ரஸ்புட்டின் தனது பாதணிகளைத் தேடினார் ஆனால் அவை களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தூங்கிக் கொண்டிருக்கும் தனது

பெண் பிள்ளைகளின் நித்திரையைக் குழப்பிவிடாது மெதுவாகச் சென்று தூக்கத்திலிருந்த வீட்டு வேலைக்காரியை எழுப்பினார்.

இளவரசரும் ரஸ்புட்டினும் எப்போதும் மெதுவான குரலில்தான் பேசுவார்கள். இன்று இன்னும் மெதுவான குரலில் ஏதேதோ பேசியபடி வெளியே போவதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். இந்த ஆரவாரமில்லாத ஆயத்தங்களைக் கேட்டதும் அரைத் தூக்கத்திலிருந்த அவரது மூத்த மகள் மரியா மெதுவாக எழுந்து யார் வந்திருக்கிறார் என்று அறிவதற்காக அவர்கள் இருந்த அறையின் கதவின் ஓரமாக வந்து நின்றார். அறையின் வெளியே வந்த ரஸ்புட்டின் முகத்தில் பேயறைந்ததைப்போல் நின்றிருந்த மகளைப் பார்த்து 'மரியா, நான் உன்னை நித்திரையை விட்டு எழுப்பிவிட்டேனா?' என்று கேட்டார்.

அதற்குப் பதில் கூறாத மரியா' 'நீங்கள் இப்போது கட்டாயம் வெளியே போகத்தான் வேண்டுமா?'

'ஆம் மகளே, நான் கட்டாயம் போகத்தான் வேண்டும்.'

'அப்பா, உங்களுக்கு ஓய்வுதான் முக்கியம். நீங்கள் போக வேண்டிய இடத்திற்கு நாளைக் காலை செல்லலாம்தானே?'

'இல்லை, அப்படிச் செய்ய முடியாது. நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நான் விரைவில் வந்துவிடுவேன். நீ போய் படுத்துத் தூங்கு' என்றார்.

மரியா கதவின் இடுக்கு வழியாக அழகாகவும் மிகவும் எடுப்பாகவும் ஆடைகள் அணிந்து வந்த அந்த மனிதரைப் பார்த்தாள். மிகவும் பழக்கமான முகம்தான். விலையுயர்ந்த மேலங்கியையும், தொப்பியையும் இப்போதும் அணிந்தபடியேதான் இருந்தார். திரும்பி

தனது தந்தையாரின் அறையை நோட்டமிட்டாள். அருகே இருந்த தேக்குமரத்தால் செய்யப்பட்ட வட்டமான மேசையில் பல திறந்த புத்தகங்களும் வேறு சில பொருட்களும் சிதறிக் கிடந்தன.

முதல் முதலாக இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போவின் மாளிகையான மெய்கா கானலுக்குச் (Moika Kanal) சென்று அவரது மனைவியார் இளவரசி ரைனா (Princess Irina) வைச் சந்திக்க இருக்கிறேன் என்கின்ற சந்தோஷத்தில் தன்னிடம் இருந்த விலையுயர்ந்த ஆடைகளையும், தனக்குப் பிடித்த மேலங்கியையும் எடுத்து அணிந்தார். தனது நிலைக் கண்ணாடியின் முன்னே நின்று தன்னையே ஒருமுறை பார்த்து இரசித்தார்.

இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த இளவரசருக்கு தன்னை அறியாமல் தன் மனச்சாட்சியின் ஒருபக்கம் ஏதோ பேசுவதுபோல் இருந்தது. தன்னை நம்பியிருக்கும் ஒருவருக்கு தான் இழிவானவனாக, மாற்றுக்காரனாக, வஞ்சகம் நிறைந்தவனாக மாறி இப்படியொரு காரியத்தைச் செய்வதற்கு எப்படி எண்ணம் வந்தது என்று கேட்பதுபோல் இருந்தது. அதேவேளையில் ரஸ்புட்டினைப்பற்றித் தான் கேள்விப் பட்டவைகளையும், ரஸ்புட்டினின் அழுங்குப்பிடியான கொடிய அரசியல் செல்வாக்கினால் ஏற்படுகின்ற அழிவுகளும் மனதில் வந்து நின்றன.

ரஸ்புட்டின் இருக்கையில் அமர்ந்திருந்த இளவரசரின் பக்கம் திரும்பி தான் தயார் என்பதுபோல் புன்முறுவல் செய்தார். சிறிது நேரத்தின் பின்னர் இருவரும் எழுந்து பின்பக்க வாசல்வழியே எதுவித சத்தமும் செய்யாது வெளியே சென்றனர். மெதுவாக கதவை இழுத்துப் பூட்டிவிட்டு இளவரசர் முன்னே செல்ல ரஸ்புட்டின் அவரைப் பின்தொடர்ந்தார். குடி மயக்கத்திலும், உடல் வலிமையில்லாத நிலையிலும் சறுக்கும் பனிக்கட்டிகளின் மேல் தளர்ந்த நடையுடன் மாற்றுத் தாமதமாகவே நடந்துகொண்டிருந்தார். இதனைக் கண்ட

இளவரசர் அவரைக் கைத்தாங்கலாப் பிடித்தவண்ணம் அழைத்துச் சென்று இருளில் நின்றிருந்த அந்தக் கரிய வாகனத்திலே ஏற்றிவிட்டுக் கதவைச் சாத்தினார். இரவின் அமைதியைக் குலைத்தபடியே சறுக்கும் பனியையும் பொருட்படுத்தாது அந்த ஆடம்பரமான மோட்டார் வண்டி இரைச்சலுடன் புறப்பட்டு வேகமாகச் சென்றது.

யாராவது பொலிஸ் அதிகாரிகள் தம்மைப் பின்தொடர்ந்தால் என்று எண்ணி சுற்றிச் சுற்றித் தலைநகரின் இருளான வீதிகள் வழியாக அந்த மோட்டார்வண்டி ஓடிச்சென்று இறுதியில் இளவரசரின் மாளிகையை அடைந்தது. இப்படியாக இளவரசர் வந்ததையும், ரஸ்புட்டின் அவருடன் வெளியே சென்றதையும் யாரும் அவதானிக்க வில்லையென்று அவர்கள் இருவரும் எண்ணினாலும் ரஸ்புட்டினுடைய இருப்பிடத்தில் காவலிருந்த இரகசியப்பொலிஸ் ஒருவர் அவதானித்து விட்டார். அவர் யாருக்கும் தெரியாமல் ரஸ்புட்டின் ஏறிச்சென்ற மோட்டார் வண்டியைப் பின்தொடர்ந்தார். இளவரசருடைய மாளிகைவரை சென்றார். அதிலிருந்து இறங்கி மூவரும் பக்கக்கதவினூடாக உள்ளே செல்வதையும் அவதானித்தார். ஒன்றும் விடாமல் தனது குறிப்புப் புத்தகத்தில் குறித்தும் வைத்தார். அப்போது இரவு ஒரு மணி ஆகிவிட்டதை அவரின் கைக்கடிகாரம் காட்டியது.

◆◆



28

கொடூரங்கள் அடங்கின

விரைந்து சென்ற வண்டி அங்கே வந்து நின்றதும் அங்கிருந்த மூவரும் இளவரசருடைய படிக்கும் அறையுள் சென்று அரவம் எதுவும் செய்யாமல் அமர்ந்துகொண்டனர். சிறிய ஒலிபெருக்கியில் அங்கிருந்த அமெரிக்காவின் அணிவகுக்கும் இசையடங்கிய 'யாங்கி டூடில்' (Yankee Doodle) என்கின்ற இசைத்தட்டின் இசையை முடுக்கிவிட்டனர். இதன் இசை அங்கிருந்து மிதந்துவந்து கீழிருக்கும் நில அறையை அடைந்தது. அறையினுள் வந்த ரஸ்புட்டின் மேலிருந்து வந்த இசையையும், அந்த அறையின் நிலையையும் கண்டவுடன் 'என்ன இது? யாராவது இங்கே விருந்துபசாரம் செய்கிறார்களா?' என்று கேட்டார்.

'இல்லை, எனது மனைவியார் சிலரை இன்று விருந்திற்கு அழைத்திருக்கின்றார். அவர்கள் இன்னும் சில நேரத்தில் போய்விடுவார்கள், நீர் அதுவரை இங்கே அமர்ந்துகொள்ளலாம்' என்று இளவரசர் பதிலளித்தார்.

ரஸ்புட்டின் தனது மேலங்கியைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு கதிரையில் அமர்ந்தார். இளவரசர் அங்குமிங்குமாக நடந்தபடியே

உரையாடிக்கொண்டிருந்தார். 'இன்று உமது இருப்பிடத்திற்கு உள்நாட்டு விவகார் அமைச்சர் புறோட்டப்போவோ வந்திருந்ததாக அறிந்தேன்' என்றார்.

'ஆமாம் வந்திருந்தார்.'

'அவர் உமது உயிருக்கு ஆபத்து உண்டுபண்ண சிலர் சதி வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று ஏதாவது கூறினாரா?'

'ஆமாம் கூறினார். ஒரு சாதாரண குடிமகன் அரச மாளிகைக்குள் வரவேற்கப்படுவதை உயர்குடிப்பிறந்தவர்களும், பிரபுக்களும் விரும்பு கிறார்களில்லை. ஏனென்றால் அவர்களுக்குப் பொறாமை, பயம். ஆனால் நான் அவர்களுக்குப் பயப்படவில்லை. அவர்களால் எனக்கு ஒரு தீங்கும் செய்துவிட முடியாது. துர்அதிர்ஷ்டம் என்னை ஒருபோதும் நெருங்காது. இதுவரை என்னைக் கொல்வதற்குப் பலர் முயற்சித்தார்கள். ஆனால் அவர்களால் அது முடிந்ததா? அவர்களால் அது முடியாது. ஏனென்றால் ஆண்டவன் எப்போதும் என் பக்கம்தான் இருக்கிறார். என்னை எதிர்ப்பவர்களுக்குத்தான் அழிவு ஏற்படும்' என்று மிகுந்த தன்னம்பிக்கையோடு கூறினார்.

இதனைக் கேட்டதும் இளவரசர் சிறிது ஆடிப்போனார். தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு சில நிமிடங்கள் மீண்டும் இப்படியே பேசிக்கொண்டிருக்கும்போது ரஸ்புட்டினை 'ஏதாவது குடிக்கிறீரா? அல்லது உண்கிறீரா?' என்று கேட்டார். ஆனால் ரஸ்புட்டின் எதுவுமே வேண்டாம் என்றார். இளவரசர் மேலே சென்று வருவதாகக் கூறிக் கொண்டு சென்றார். அங்கே ஒளிந்திருந்த மற்றவர்களைச் சந்தித்து 'எதுவுமே நாம் திட்டமிட்டபடி நடக்கவில்லை. அந்த மிருகம் எதையுமே உட்கொள்ள மறுக்கிறது' என்றார்.

'திரும்பவும் சென்று முயற்சித்துப் பாரும்' என்று அவர்கள் கூற, திரும்பவும் ரஸ்புட்டின் இருந்த அறைக்கு வந்தார். ஆரம்பத்தில் தனக்கு எதுவுமே வேண்டாம் என்ற மறுத்த ரஸ்புட்டின் அங்கே அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த அவருக்கு மிகவும் விருப்பமான 'கேக்' துண்டுகளைக் கண்டதும் சிறிது விருப்பம் உண்டானது. சிறிது நேரத்தின் பின்னர் நஞ்சு கலக்காத 'கேக்' துண்டு ஒன்றை எடுத்து உண்டார். பின்னர் பலவற்றை எடுத்து உண்டார். இந்த வேளையில் இளவரசர் நஞ்சு கலந்த 'கேக்' துண்டுகளையும் எடுத்து நீட்டினார். ரஸ்புட்டின் அவற்றில் சிலவற்றையும் எடுத்து உண்டார்.

சிறிது நேரத்தில் அதிலே கலந்த நஞ்சு வேலை செய்ய ஆரம்பித்துவிடும் என்றே எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் நேரம் சென்றுகொண்டிருந்ததே தவிர உட்கொண்ட நஞ்சினால் எதுவித தாக்கங்களும் ஏற்படவில்லை.

இளவரசர் 'உமக்கு சிறிது வைன் தரட்டுமா?' என்று கேட்டார்.

'வேண்டாம்' என்று முன்னர்போல் முதலில் கூறினாலும் சிறிது நேரத்தின் பின்னர் தானாகவே அதனை எடுத்துக் குடிக்க ஆரம்பித்தார். ஆனால் இன்னமும் உடலுள் சென்ற நஞ்சு எதுவித வேலைகளையும் செய்யவில்லை. இளவரசர் தனக்கென வைத்திருந்த நஞ்சு கலக்கப்படாத டம்ளரில் இருந்த 'வைனையும்' ரஸ்புட்டின் எடுத்து மடமடவெனக் குடித்தார்.

சற்றுத் தளர்ந்த நிலையில் 'மடீரா (Madeira) வைக் கொண்டு வாரும்' என்று கூறினார் ரஸ்புட்டின். இளவரசர் தாம் முன்னரே நஞ்சு பூசி வைத்திருந்த டம்ளர்களில் அந்த வைனை ஊற்றினார். உடனே ரஸ்புட்டின் 'அதற்குள் ஊற்றவேண்டாம், நான் குடித்த டம்ளருள்ளேயே ஊற்றும்' என்றார்.

'சிவப்பு வைனையும், வெள்ளை வைனையும் கலக்கக் கூடாது' என்று இளவரசர் கூறினார்.

'பரவாயில்லை என்னுடைய டம்ளர் உள்ளேயே ஊற்றும்' என்று அடம் பிடித்தார். எதுவும் செய்ய முடியாத நிலையில் ரஸ்புட்டின் கூறியபடியே செய்தார். ஆனால் மறுகணம் எங்கோ பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டு அவர் குடித்துவிட்டு வைத்திருந்த டம்ளரைத் தட்டி நிலத்தில் வீழ்த்தி வேண்டுமென்றே உடைத்துவிட்டார் இளவரசர். அந்தச் செயலுக்கு ரஸ்புட்டினிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு விஷம் பூசப்பட்ட டம்ளரில் 'வைனை' ஊற்றி ரஸ்புட்டினுக்கு வழங்கினார். அதனை வாங்கி முகர்ந்து பார்த்துவிட்டு மெதுவாகப் பருகினார்.

'மடீரா (Madeira) மிகவும் நன்றாக இருக்கின்றது. இன்னும் கொஞ்சம் ஊற்றும்' என்று தனது விருப்பத்தைக் கூறினார். நேரமும் ஓடிக்கொண்டிருந்தது. மது மயக்கம் தலைக்கேறியதே தவிர வேறொன்றும் நடக்கவில்லை. ஆனால் அடிக்கடி தனது தொண்டையைத் தடவியபடி இருந்தார். விஷம் தனது வேலையை விரைவில் செய்துவிடும் என்றிருந்த இளவரசருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

'நான் மேலே சென்று ஜரீனாவைக் கீழே வரும்படி அழைக்கப் போகிறேன்' என்று கூறிவிட்டு மீண்டும் மற்றையவர்களிடம் சென்றார். 'என்னால் இனி முடியாது, இரண்டு டம்ளர் விஷம் கலந்த வைன் குடித்துவிட்டார். பல 'கேக்' துண்டுகளையும் உண்டுவிட்டார். பதினைந்து நிமிடமாகியும் எதுவித பயனுமில்லை. என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை' என்றார்.

'திரும்பிப் போய் அங்கேயே அமர்ந்துகொள்ளும். அந்த விஷம் கட்டாயம் வேலை செய்யும். மேலும் ஐந்து நிமிடங்களில் அப்படி வேலை செய்யாவிட்டால் மேலே வாரும். நாம் அவரைத் தீர்த்துக்

கட்டுவதற்கு வேறு ஏதாவது வழிசெய்வோம்' என்றனர் அங்கே மறைந்திருந்த மூவரும்.

இளவரசர் கீழே சென்றபோது ரஸ்புட்டின் அரைத்தூக்கத் திலிருப்பதுபோல் அமர்ந்திருந்தார். ரஸ்புட்டின் இளவரசரைப்பார்த்து அவரது 'கிற்றார்' (Guitar) இசைக்கருவியை எடுத்து ஒரு பாட்டுப் பாடும் என்றார். இளவரசர் மறுத்தபோதும் ரஸ்புட்டின் விடவில்லை. ஏதும் செய்யமுடியாத நிலையில் இளவரசர் சில பாடல்களை விருப்பமின்றியே பாடினார். முடிவில் மீண்டும் மேலே ஓடினார். 'இப்போது என்ன செய்வது?' என்று இளவரசர் கேட்டார்.

'இன்று இத்தோடு நிறுத்திக் கொள்வோம். நஞ்சினால் எதுவித பயனுமில்லை. இன்னொரு நாளைக்கு, இன்னொரு இடத்திலே, இன்னொரு வழியிலே ரஸ்புட்டினைத் தீர்த்துக்கட்டுவோம்' என்று சீமான் டிமிற்றி பவலோவிச் கூறினார்.

'ஒருபோதும் முடியாது. இன்று ரஸ்புட்டினைத் தப்ப விட்டால் விட்டதுதான். நாம் அவரை மீண்டும் எமது வலையில் விழவைப்பது மிகவும் கடினம். தன்னை இளவரசர் தந்திரமாக ஏமாற்றிவிட்டார் என்று தெரிந்தால் அவர் மீண்டும் இங்கே ஒருபோதும் வரமாட்டார். அவரை இங்கிருந்து உயிரோடு விட்வே கூடாது' என்று ஆவேசமாகக் கூறினார் விலாடிமர் புரூஸ்கோவிச்.

'அப்போது என்ன செய்வதாக உத்தேசம்?' என்று சீமான் டிமிற்றி பவலோவிச் கேட்டார்.

'நாம் எல்லோரும் கீழே சென்று அவரை எமது கைகளினாலேயே திருகிக் கொன்றுவிடுவோம்' என்றார் புரூஸ்கோவிச்.

மூவரும் ஒருவர் பின் ஒருவராக கீழே இறங்க ஆயத்தமானார்கள். ஆனால் மீண்டும் தமது முடிவை மாற்றிக்கொண்டார்கள். 'கைத் துப்பாக்கியால் இளவரசர் ரஸ்புட்டினைச் சுட்டுக்கொல்வதுதான் நல்லது. விரைவாகவும், இலகுவாகவும் அவர் கதையை முடிக்கவேண்டும் என்றால் இதுதான் நல்ல வழி' என்று கூறினார் டிமிற்றி பவலோவிச்.

டிமிற்றி பவலோவிச் இடமிருந்து அவரது கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டு இளவரசர் மீண்டும் மெதுவாக கீழிருந்த அறையை நோக்கி நடந்தார். அங்கே ரஸ்புட்டின் தலையைக் கீழே தாழ்த்தியபடியே அமர்ந்திருந்தார். கண்கள் அரைத்தூக்கத்தில் இருப்பதுபோல் இருந்தன. ஒவ்வொரு தடவையும் மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடும்போதும் உடலின் அரைவாசிப்பகுதி மேலே எழுந்து கீழே இறங்கி வந்துகொண்டிருந்தது. இப்போதுதான் தான் கொடுத்த நஞ்சு வேலை செய்ய ஆரம்பமாகி இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டு அவரையும் தாண்டி அப்பால் சென்றார்.

'என்ன உமக்கு உடல் நலமில்லாமல் இருக்கிறதா?' என்று ஏதும் தெரியாததுபோலக் கேட்டார்.

'ம், எனது தலை சுற்றுகிறது, வயிறும் இலேசாக எரிவதுபோல் இருக்கிறது. இன்னும் ஒரு டம்ளர் 'வைன்' தாரும் அது சிலவேளை இவற்றைத் தணித்துவிடும்' என்றார். இளவரசர் மீண்டும் விஷம் கலந்த வைனை வார்த்துக் கொடுத்தார். இந்த நிலையில்கூட ரஸ்புட்டின் இளவரசரைப் பார்த்து தனது கண்களைச் சிமிட்டினார். 'ஆண்டவனின் எண்ணமும் ஆண்மகனின் சதையும் கொண்டவன் நான்' என்று ஏதோ பொருள்படக்கூறினார். இவ்வார்த்தைகள் இளவரசரும் ரஸ்புட்டினும் தன்னினச் சேர்க்கைகளில் விருப்பமுடையவர் என்பதையே காட்டுகின்றதா? இதற்காகத்தான் அந்த இரவு வேளையில் இளவரசருடன் தனியே அங்கே வந்தாரா?

அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த இளவரசருக்கு தான் கொடுத்த விஷம் இன்று அவரைக் கொல்லும் என்ற நம்பிக்கை அடியோடு போய்விட்டது. இனிமேலும் தாமதிக்கக் கூடாது என்கின்ற முடிவுடன் ரஸ்புட்டின் இருந்த இடத்தைக் கடந்து சென்றார். அங்கிருந்த சிலுவையையின் அருகே சென்ற இளவரசர் சிறிது நேரம் அதனையே பார்த்துக்கொண்டிருந்தார்.

'அங்கே என்ன செய்துகொண்டு இருக்கிறீர்? என்று கேட்டார் ரஸ்புட்டின்.

'இந்தச் சிலுவை மிகவும் அழகானது. அதில் எனக்கு அளவு கடந்த விருப்பம் அதுதான் அதனையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.'

'ஆமாம். அது மிகவும் அழகாகத்தான் இருக்கிறது. இதனைப் பெறுவதற்கு எவ்வளவு பணம் செலவழித்தீர்?' என்று கேட்டுவிட்டு எழுந்து சென்று அதனருகில் நின்றுகொண்டு அதனை உற்றுப் பார்த்தார்.

அப்படிப் பார்த்துக்கொண்டிருந்தபோது; 'கிரகோறி எவிமெவிச் ரஸ்புட்டின் அவர்களே அந்தச் சிலுவையை நன்றாகப் பாரும். பார்த்தபின் நன்றாக ஒரு பிரார்த்தனையையும் செய்யும்' என்று ரஸ்புட்டினைப் பார்த்து மிகவும் அழுத்தமான, வெறுப்புக் கலந்த தொனியில் கூறினார் இளவரசர்.

இளவரசரின் இந்த அழுத்தமான வார்த்தைகளைக் கேட்டதும் ரஸ்புட்டின் தனது தலையை நிமிர்த்தி ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தார். இலேசான பயம் அவரைக் கௌவிக்கொண்டது. அதே வேளையில் இளவரசரையும் ஒருவித பயம் சூழ்ந்துகொண்டது. அவர் மனித சக்திக்கு அப்பாற்பட்ட தெய்வீக சக்தி இருப்பதை நம்புபவர். இவ்வளவு விஷத்தை உண்டும் எதுவித பாதிப்பிற்கும் ஆளாகாமல்

இருப்பதற்கு அந்தத் தெய்வீக சக்திதான் காரணமாக இருக்கவேண்டும் என்றே எண்ணினார். துப்பாக்கி ரவைகள்கூட எதுவித தாக்கத்தையும் அவருக்கு உண்டுபண்ணிவிடாது விடவும் கூடும் என்றும் எண்ணினார். இதற்காகவேதான் அந்தச் சிலுவையின் அருகில்போய் நின்றார்.

எழுந்துவந்த ரஸ்புட்டினை தன்னையும் சிலுவையையும் தாண்டி அப்பால் செல்லவிடாது தடுத்தார். வந்த ரஸ்புட்டின் மறுபுறமாகத் திரும்பினார். ரஸ்புட்டின் தனது கைகளை உயர்த்தி சிலுவை சைகை காட்ட ஆரம்பித்த உடனேயே அவரை நோக்கித் தனது கைத் துப்பாக்கியை நீட்டினார். அவரது இதயத்தைக் குறிவைத்து துப்பாக்கியின் விசையை அழுத்தினார். பெரியதொரு வீறிட்ட உறுமலுடன் நிலக்கரி எரிந்துகொண்டிருக்கும் இடத்தின் முன்னால் இருந்த அழகிய வெள்ளை நிற கம்பளத்தின்மேல் தொப்பென்று வீழ்ந்தார் ரஸ்புட்டின். அவரது உடலிலிருந்து பெருகிவந்த குருதி அந்த வெள்ளைக் கம்பளத்தை சிவப்பு நிறமாக்கிக்கொண்டிருந்தது.

துப்பாக்கிச் சத்தத்தையும், வீறிட்ட அலறலையும் கேட்டவுடன் மேல் அறையுள் ஒளித்திருந்தவர்கள் அனைவரும் கீழே இறங்கி ஓடிவந்தார்கள். ஓடிவந்த அவசரத்தில் யாரோ அங்கிருந்த விளக்கை அணைத்துவிட்டார்கள். மீண்டும் அந்த அறையினுள் வெளிச்சத்தைப் போட்டபோது ரஸ்புட்டினின் உடலுக்கு மேல் இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போ நின்றுகொண்டிருப்பதையும், கையிலே புகைத்தவண்ணம் இருக்கும் துப்பாக்கியையும் கண்டனர்.

திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியினால் எவரும் எதுவும் பேசவில்லை. ரஸ்புட்டினின் உடல் அங்குமிங்கும் நெளிந்துகொண்டிருந்தது. மூச்சும் பெரிதாக இழுத்துக்கொண்டேயிருந்தது.

'அவரின் உடலை அப்புறம் இழுத்துவிடுங்கள். அவரின் குருதி கம்பளத்தில் படிகின்றது' என்றார். அதன்படி எல்லோருமாகச் சேர்ந்து இழுத்து அதனைக் கல் தரையில் விட்டனர். சிறிது நேரத்தின் பின்னர் எல்லாம் அடங்கிவிட்டன. டாக்டர் லசோவேட் குனிந்து அவதானித்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக அறிவித்தார். சிறிது நேர அமைதியின் பின்னர் ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் முதல் மாடிக்குச்சென்று இளவரசருடைய அறையில் அமர்ந்தனர். இளவரசர் தனது தனியான அறையினுள் போய் அமர்ந்தார். மணி இரவு மூன்றாகிவிட்டதைக் காட்டியது.

சிறிது நேரம் அப்படியே இருந்துவிட்டு அமைதியாக எழுந்து தாம் நினைத்த காரியத்தை நிறைவேற்றிவிட்டதற்காக ஒருவரையொருவர் பாராட்டினார்கள். முன்னர் திட்டமிட்டதின்படி ரஸ்புட்டினுடைய ஆடைகளை எடுத்துச்சென்று எரித்துவிட்டு வந்து உயிரற்ற உடலை வெளியே எடுத்துச்செல்லவேண்டும் என்பதற்கான வேலைகளில் ஈடுபட்டனர்.

இளவரசருக்கு திரும்பவும் அந்த நில அறையைச் சென்று பார்க்கச்சொல்லி ஏதோ ஒரு சக்தி உந்துவதுபோல் இருந்தது. கீழே சென்று பார்த்தபோது ரஸ்புட்டினின் உடல் அசையாது அப்படியே இருந்தது. நாடித் துடிப்பைத் தொட்டுப் பார்த்தார். எல்லாம் அடங்கிவிட்டிருந்தன. திடீரென்று இளவரசருக்கு அடக்கமுடியாத கோபம் வந்தது. இறந்து கிடந்த ரஸ்புட்டினின் தோள்களைப் பிடித்து முரட்டுத்தனமாக உலுப்பினார். இறுதியில் உடலை ஒருபக்கத்திற்குத் தள்ளிவிட்டார்.

இன்னமும் ஆத்திரம் தீரவில்லை. மீண்டும் அப்படிச் செய்வதற்காகக் குனிந்தார். என்ன ஆச்சரியம். ரஸ்புட்டினின் இடது

கண் மெதுவாக அசைந்தது. மறுகணம் முழுதாகத் திறந்துகொண்டது. மறுகணம் வலது கண்ணும் திறந்துகொண்டது. அவையிரண்டும் ஒரு கொடிய விஷப் பாம்பின் பச்சைநிறக் கண்களைப்போல் பிரகாசித்தன. இளவரசரைப் பிடித்து விழுங்கி விடுவதைப்போல் வெறுப்புடனே கொடூரமான பார்வை ஒன்றை வீசியது. இதனைக் கண்டதும் இளவரசருடைய இரத்த ஓட்டம் அப்படியே உறைந்துவிட்டதுபோல் இருந்தது. கால்கள் அசைய மறுத்தன. வார்த்தைகள் வெளியே வர மறுத்தன.

யாரும் எதிர்பார்த்திராத வண்ணம் ரஸ்புட்டின் எழுந்து நின்றார். தள்ளாடியபடியே தனது இரு கைகளையும் ஆட்டியபடி இளவரசரை நோக்கி வந்தார். கண்கள் வெளியே வருவதுபோல் இருந்தன. வாயிலிருந்து இரத்தம் இலேசாக வழிந்துகொண்டிருந்தது. இளவரசரது தோள்களைப் பற்றி '.'.பீலிக்ஸ் .'.பீலிக்ஸ்' என்று மட்டும் உறுமிக் கொண்டு நின்றார். அவர் பிடித்த அழுங்குப்பிடியில் தோள்பட்டையில் அணிந்திருந்த இராணுவச் சின்னம் பிடுங்குப்பட்டு வந்தது. இளவரசர் ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ரஸ்புட்டினை மறுபுறமாகத் தள்ளிவிட்டு மாடியை நோக்கி ஓடினார். கீழே விழுந்த ரஸ்புட்டின் ஒரு காயப்பட்ட பயங்கரமான மிருகத்தைப்போல் உறுமிக் கொண்டு முழங்கால்களிலும், கைகளிலும் நின்று தவண்டுகொண்டு இளவரசரைப் பின்தொடர முயன்றுகொண்டிருந்தார்.

அவசரமாக ஓடிவந்த இளவரசர் 'புரூஸ்கோவிச், புரூஸ்கோவிச் அவர் இன்னமும் சாகவில்லை, உயிருடன்தான் இருக்கிறார், வெளியே தப்பிச் செல்வதற்கு முயற்சிக்கிறார். அவரை அப்படியே விடக்கூடாது துப்பாக்கியால் சுடுங்கள், சுட்டுக்கொல்லுங்கள்' என்று அவசரமாகக் கத்தியபடி அரண்மனையின் அறைகளிடையே ஓடினார்.

புரூஸ்கோவிச் உடனே தனது கைத்துப்பாக்கியை எடுத்து வைத்துக்கொண்டு படிக்கட்டுக்களின் மேலே ரஸ்புட்டினுடைய வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார். ஆனால் எவரையுமே காணவில்லை. திடீரென்று படிக்கட்டுக்களின் நடுவில் மறைவாக அமைக்கப்பட்டிருந்த கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. உடனே கீழிறங்கி ஓடினார். அவருக்கு சில அடி தூரம் முன்னதாக ரஸ்புட்டின் தள்ளாடியபடியே '.'.பீலிக்ஸ், .'.பீலிக்ஸ் இங்கு நடந்த எல்லாவற்றையும் நான் இப்போதே சென்று பேரரசியாரிடம் சொல்லப்போகிறேன்' என்று கூறிக்கொண்டு சென்றார்.

ரஸ்புட்டின் பின் தோட்டத்தின் சுற்றுமதில்களிடையே இருந்த இரும்புக்கதவைத் திறந்துகொண்டு வெளியே செல்ல முற்பட்டபோது புரூஸ்கோவிச் பின்னாலிருந்தபடியே ரஸ்புட்டினை நோக்கித் தன் கைத்துப்பாக்கியால் சுட்டார். இரவின் நிசப்தத்தைக் குலைத்துக் கொண்டு அந்த சத்தம் கேட்டதே தவிர அந்தத் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட ரவை எங்கு சென்றதென்பது யாருக்கும் தெரியவில்லை. இரண்டாம், மூன்றாம் தடவைகளும் இதே நிலைதான். ரஸ்புட்டினும் அவரிடமிருந்து தப்புவதற்காக ஓடிக்கொண்டேயிருந்தார். நான்காவது தடவை நன்றாக நிதானித்து சுடப்படபோது துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட சன்னம் ரஸ்புட்டினினது தலையைத் துளைத்துக்கொண்டு சென்றது. அதற்குமேல் ரஸ்புட்டினினால் ஓரடிகூட எடுத்துவைக்க முடியாமல் அதேயிடத்தில் முகம் குப்புற வீழ்ந்தார். புரூஸ்கோவிச் ஓடிச்சென்று பனிக்கட்டிகளின் மேல் வீழ்ந்த ரஸ்புட்டினின் தலையில் பலமுறை தன் கால்களால் உதைத்தார். இப்போதுகூட கைகளாலும் முழங்கால்களாலும் தவழுவதற்கே ரஸ்புட்டின் முயற்சித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவரால் புரூஸ்கோவிச் அவர்களைப் பார்த்து கொடூரமாக உறுமுவதைத்தவிர வேறு எதனையும் செய்ய முடியவில்லை. சிறிது நேரத்தில் எல்லாம் ஓய்ந்துவிட்டன.

அரண்மனைக்கு வெளியே பாதையில் காவல் செய்து கொண்டிருந்த இரு காவலர்களை அழைத்து அங்கு நடந்த எதனையும் வெளியே கூறவேண்டாம் என்று கூறினார். அவர்களைக் கொண்டே ரஸ்புட்டினின் சடலத்தை இழுத்துக்கொண்டுபோய் நில அறைக்குப் போகும் படிக்கட்டுகளுக்கு அருகில் போடுமாறும் பணித்தார்.

புரூஸ்கோவிச் இளவரசரைத் தேடிக்கொண்டு எல்லா இடமும் திரிந்தார். ஆனால் இளவரசர் மாளிகையின் முன்னால் சென்று ரஸ்புட்டினின் வரவுக்காகக் காத்திருந்தார். யாரையும் காணாத நிலையில் அரண்மனையின் முன்னாலுள்ள பாதையினூடே சென்றுகொண்டிருந்த போதுதான் பின் வளவில் துப்பாக்கிச்சத்தம் கேட்டது. உடனே பின்புறமாக ஓடிவந்து அங்கிருந்தவர்களுடன் இணைந்துகொண்டார். அதேவேளையில் ஒரு பொலிஸ் அதிகாரி அங்கே என்ன நடக்கின்றது என்பதைப் பார்ப்பதற்காக அங்கே வந்தார். அவர் வருவதைக் கண்ட இளவரசர் அந்த உடலத்தை மறைத்தபடி நின்றார். இளவரசரைக்கண்ட பொலிஸ் அதிகாரி;

'இளவரசே, நான் சற்று முன்னதாக இங்கே துப்பாக்கிச் சத்தங்களைக் கேட்டேன். அப்படி இங்கே ஏதாவது நடந்ததா?' என்று கேட்டார்.

'இல்லை. அப்படி எதுவித அசம்பாவிதங்களும் இங்கே நடைபெறவில்லை. இன்றிரவு என்னிடம் சில விருந்தினர் வந்திருக் கிறார்கள். அவர்களில் சிலர் குடிபோதையில் அங்குமிங்கும் துப்பாக்கி யால் சுட்டார்கள், அவ்வளவுதான். யாராவது கேட்டால் இங்கு யாருக்குப் எதுவும் நடக்கவில்லை என்று கூறும்' என்று அவரை அனுப்பிவைத்தார்.

பொலிஸ் அதிகாரி அப்பால் சென்றதும் திரும்பி ரஸ்புட்டினின் உடலைப் பார்த்தார். அது சற்று இடம்மாறி இருப்பதுபோல் இருந்தது.

ரஸ்புட்டின் மீண்டும் உயிர்த்துவிட்டாரா என்ற சந்தேகம் எழுந்தது. உடனே அரண்மனையுள் ஓடிச்சென்றார். ஓடிச்சென்றவர் அவரது பெற்றோரின் குளியலறையினுள் நின்றுகொண்டு முன்னர் ரஸ்புட்டின் சொன்னதுபோல் '.'.பீலிக்ஸ் .'.பீலிக்ஸ்' என்று பிதற்றிக்கொண்டு வாந்தியெடுத்துக்கொண்டிருந்தார்.

இதனைக் கண்ட புரூஸ்கோவிச் இளவரசரை அழைத்துக் கொண்டு வரவேற்பறையை அடைந்தார். அதற்குள் ரஸ்புட்டினின் உடலை காவலர்கள் அங்கே கொண்டுவந்து விட்டனர். ரஸ்புட்டினின் உடலைக் கண்டவுடன் இளவரசருக்கு மேலும் கட்டுப்படுத்த முடியாத கோபம் வந்தது. ஓடிச்சென்று தான் முன்னர் மறைத்து வைத்திருந்த இரும்பினாலும் தோலினாலும் ஆன கனத்த தடியை எடுத்துவந்தார். '.'.பீலிக்ஸ் .'.பீலிக்ஸ்' என்று மீண்டும் மீண்டும் பிதற்றியபடியே பிணத்தின் தலையிலும், மார்பிலும் பலங்கொண்டமட்டும் அடித்தார். ரஸ்புட்டினின் பாதி இரத்தம் இப்போது இளவரசரின்மேல் படிந்துவிட்டது.

சிறிது நேரத்தின் பின்னர் புரூஸ்கோவிச் இளவரசரை அப்புறம் அகற்றும்படி அங்கிருந்த காவலர்களிடம் கூறினார். அப்படி அவர்கள் செய்தபோது இளவரசர் மீண்டும் வாந்தியெடுத்தார். மறுகணம் மயங்கி வீழ்ந்துவிட்டார். அங்கிருந்தவர்கள் அவரைத் தூக்கிக்கொண்டு உள்ளே சென்று படுக்கையில் படுக்க வைத்தனர்.

முன்னர் வந்த பொலிஸ் அதிகார் மீண்டும் வந்து கதவைத் தட்டினார், அவரிடம் சென்ற புரூஸ்கோவிச் தாம் என்ன செய்தோம், ஏன் செய்தோம் என்பவற்றை விளக்கினார்.

'நாம் ரஸ்புட்டினைக் கொன்றுவிட்டோம். உமக்கு எமது பேரரசரும், ரஷ்ய மாதாவும் கொடிய மனிதனான ரஸ்புட்டினின் பிடி யிலிருந்து விடுபடவும், ஜேர்மனியை போரிலே வெல்லவும் உண்மையில்

விருப்பமாக இருந்தால் இங்கு நடந்த எதனையும் நீர் வெளியே சொல்லக்கூடாது' என்றார். அவரும் அதற்குச் சம்மதித்தார்.

இதற்கிடையில் ரஸ்புட்டினினுடைய உடலை துணியால் சுற்றிக் கயிற்றினால் கட்டிவிட்டார்கள். அங்கே எதுவித தடயங்களும் இருக்கக் கூடாது என்று காவலாளர்களிடம் கூறினார். அதேவேளையில் அங்கு நடந்த சம்பவங்களை யாரிடமும் கூறக்கூடாது என்ற வாக்குறுதி களையும் பெற்றுக்கொண்டார்.

ரஸ்புட்டினைக் கொலை செய்யத் திட்டமிட்ட எல்லோரும் அங்கே வந்து குழுமினர். எல்லோருக்கும் அங்கு நடந்த சம்பவங்கள் விளக்கப் பட்டன. நேரம் அதிகாலையை அண்மித்துக்கொண்டு இருந்ததினால் இளவரசரைத் தவிர மற்றைய நால்வரும், அங்கிருந்த ஒரு போர் வீரருமாகச் சேர்ந்து அந்த உடலத்தைத் தூக்கிக்கொண்டு அவசரமாக வெளியே சென்று மோட்டார் வண்டியுள் வைத்தனர்.

மோட்டார்வண்டியினுள் ரஸ்புட்டினினது உடலை அகற்றுமுன்னர் எரித்திருக்கவேண்டிய ஆடைகள், பாதணிகள் என்பன அங்கே வைக்கப்பட்டிருந்தன. புரூஸ்கோவிச் காரணம் கேட்டதற்கு அவற்றை எரிப்பது கடினமாக இருந்தினால் ஆற்றில் எறிவதே நல்லது என்று கூறினர். அனைவரையும் சுமந்துகொண்டு சென்ற மோட்டார்வண்டி நகரத்தின் அமைதியையும் குலைத்துக்கொண்டு சென்று பெற்றோவஸ்கி (Petrovsky) யின் கரையை அடைந்தது.

அங்கே அதனையும் கிறிஸ்றோவஸ்கி (Krestovsky) தீவையும் இணைக்கும் குறுகிய மரத்தாலான பாலம் அமைந்திருந்தது. கிறிஸ்றோவஸ்கி தீவின் கரையில் உள்ள சிறு குடிசையுள் ஓர் காவலாளி சிறிய விளக்குடன் கடமையிலிருப்பது தெரிந்தது. இரகசியமாகச் சென்ற பார்த்தபோது அவர் நல்ல தூக்கத்தில் இருப்பதும்

தெரிந்தது. சென்ற வழியே இரகசியமாகத் திரும்பி வந்து மோட்டார் வண்டியுள் இருந்த பிணத்தை வெளியே எடுத்தனர். அதனைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு சென்று பாலத்தின் மறுமுனையிலுள்ள தடுப்பு வேலியின் மேலாக கடுங்குளிரினால் உறைந்துகொண்டிருக்கும் நிவா (Neva) ஆற்றினுள் எறிந்தனர்.

எல்லோரும் மீண்டும் இரகசியமாக வந்து மோட்டார் வண்டியினுள் ஏறினர். அப்போதுதான் ரஸ்புட்டினின் ஆடைகளும், சடலத்துடன் கட்டி ஆற்றில் எறிவதற்கென வாங்கிய மிகவும் பாரமான சங்கிலியும், எடைகளும் அங்கே காலடியில் இருப்பதை அவதானித்தார்கள். அவற்றையும் கொண்டு சென்று ஆற்றினுள் எறிந்துவிட்டு வந்தனர். ஆனால் இந்த அவசரத்தில் ரஸ்புட்டினினுடைய காலணி ஒன்றை மட்டும் ஆற்றினுள் எறிவதற்கு மறந்துபோய் அங்கிருந்த பாலத்தின்மேல் வைத்துவிட்டு வந்துவிட்டார்கள்.

◆◆



29
மகிழ்ச்சியும் மனச்சோர்வும்

இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போ அங்கிருந்த சோபாவில் இருந்தபடியே தூங்கிவிட்டார். திடீரென்று விழித்தெழுந்து பார்த்தால் அங்கே நடந்தவையெல்லாம் கனவா அல்லது நனவா என்றே அறிய முடியாமலிருந்தது. நாலாபுறமும் பார்த்த்துவிட்டு அங்கு நடந்தவைகளை மீண்டும் ஒருமுறை இரை மீட்டிப் பார்த்தார். ஒரு காவலாளி அந்த அறையை எதுவித தடயங்களுமில்லாமல் செய்வதற்காக சுத்தம் செய்துகொண்டிருந்தார். அவரோடு இளவரசரும் சேர்ந்து தம்மாலானளவு சுத்தம் செய்தார்.

எப்படியோ பொலீசிற்கு அங்கு நடந்த சம்பவம் தெரிந்துவிட்டது என்பது அவர்களுக்குத் தெரியும். தற்செயலாக பொலிஸ் அதிகாரிகள் வந்து மீண்டும் விசாரித்தால் அவர்களுக்குக் காட்டுவதற்கென ஒரு நாயைச் சுட்டுக்கொன்று அதனை ரஸ்புட்டினின் உடலை இழுத்துவந்த பாதையால் இழுத்து வரவேண்டும் என்றும் தீர்மானித்தார். அதனை தனது காவலாளி ஒருவருக்குக் கூறினார். அன்றிரவு அங்கிருந்த விருந்தினர்களில் ஒருவர் மிதமிஞ்சிய குடிவெறியில் ஒரு நாயைச்

சுட்டுக்கொன்றுவிட்டார் என்று கூறலாம் என்றே அப்படிச் செய்ய எண்ணினார்.

அதிகாலை ஐந்துமணியளவில் புறப்பட்டு தனது மாமனார் வீட்டிற்குச் சென்றார். இவரைக் கண்டதும் இவரது மைத்துனர் 'என்ன நடந்தது? எங்கே போயிருந்தீர்? ஏன் இவ்வளவு நேரம் தாமதித்து வருகிறீர்? நாங்கள் உம்மைக்காணாது இங்கே ஏங்கிக்கொண்டிருந்தோம்' என்றார்.

'ரஸ்புட்டின் கொலை செய்யப்பட்டுவிட்டார். மேற்கொண்டு எதுவும் இப்போது என்னிடம் கேட்கவேண்டாம்' என்று கூறிவிட்டு நேரே தனது படுக்கை அறைக்குச் சென்றுவிட்டார்.

மறுநாள் பொழுது விடிந்தும்கூட வானில் சூழ்ந்திருந்த கார்மேகங்கள் அகலவில்லை. தொடர்ந்தும் பனிமழை பொழிவதற்கான அறிகுறிகளே தென்பட்டன. வீசும் காற்றிலே கலந்த கடும் குளிர், தான் தொடும் இடங்களையெல்லாம் விறைக்கச் செய்துவிட்டுத்தான் சென்றது. ரஸ்புட்டின் வீட்டில் இருந்தவர்கள் அதிகாலைவேளையில்தான் அதிகமாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

ரஸ்புட்டினின் தொலைபேசி மணி அவசரமாக அழைப்பதுபோல் ஒலித்தது. மரியா ஓடிச்சென்று அதனை எடுத்தார். மறுமுனையில் அலெக்ஸாண்டர் புறோட்டோபோப்போவ் (Protopopov) பதட்டத்துடன் காணப்பட்டார். 'மரியா, மரியா உங்கள் அப்பா வீட்டில் இருக்கின்றாரா? இருந்தால் கூட்டி வாரும். நான் அவருடன் அவசரமாகப் பேசவேண்டும்' என்றார்.

'அப்படியே அழைப்பில் இருங்கள். நான் அவரை அழைத்து வருகிறேன்' என்று கூறிவிட்டு மரியா அவரது அறைக்குச் சென்று

பார்த்துவிட்டுத் திரும்பவும் ஓடிவந்து 'அப்பாவை அவரது அறையில் காணவில்லை. அவர் இரவு படுக்கையில் படுத்ததாகவும் தெரியவில்லை' என்றார்.

'சரி, நான் பின்பு பேசுகிறேன்' என்று கூறிவிட்டுத் தொலை பேசியை வைத்துவிட்டார்.

மரியா மறுகணமே அனா விருபோவாவை அழைத்து 'வீட்டிலே அப்பாவைக் காணவில்லை. அவர் இரவு இளவரசர் நிக்கொலஸ் ஃபீலிக்ஸ் யுசெப்போ அவர்களுடன் வெளியே போனார். இதுவரை வீட்டிற்குத் திரும்பி வரவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை' என்றார்.

'நீ எதற்கும் பயப்படாதே, அவருக்கு ஒன்றும் நடந்திருக்காது. நான் சிலருக்குத் தொலைபேசி அழைப்புச் செய்து விசாரிக்கிறேன். வெளியே எங்கும் போகமல் வீட்டிலேயே இருந்துகொள்' என்றார்.

அடுத்த கணமே அரண்மனையை நோக்கி ஓடிச்சென்று பேரரசியாருக்கு மரியா கூறியதைக் கூறினார். பேரரசியாருக்கு இதனைக் கேட்டவுடன் அதிர்ச்சியாக இருந்தது. உடனே அனாவிடம் 'உமக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம் தொலைபேசி அழைப்புச் செய்து விசாரித்துப் பாரும்' என்று கூறிவிட்டு உள்ளே ஓடினார்.

இப்படி அரண்மனையில் நடக்க இளவரசர் தனது மாமனார் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தார். காலைவேளை சுமார் பத்து மணியளவில் ஒரு வேலைக்காரன் வந்து இளவரசரை எழுப்பினான்.

அங்கு ஒரு பொலிஸ் அதிகாரி வந்திருப்பதாகவும் இளவரசருடன் பேசவேண்டும் என்றும் கூறியதாகத் தெரிவித்தான். இளவரசர் எழுந்து

சென்று அங்கு வந்த பொலிஸ் அதிகாரியைச் சந்தித்தார். அந்தப் பொலிஸ் அதிகாரி இளவரசரிடம் பல கேள்விகள் கேட்டார். அதனிடையே; 'ரஸ்புட்டினைக் காணவில்லை. எமது பொலிஸ் அறிக்கைகளில் இருந்து கடந்த இரவு மொய்கா மாளிகையில் நடந்த குழப்பங்களுக்கும் ரஸ்புட்டின் காணாமல் போனதற்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்பிருப்பதாக நாம் எண்ணுகிறோம்' என்றார்.

'நான் ரஸ்புட்டினைக் காணவேயில்லை. ரஸ்புட்டின் எனக்கு இரவு பன்னிரண்டு மணியளவில் தொலைபேசி அழைப்புத் தொடுத்து என்னைத் தன்னுடன் நாடோடிகளின் இருப்பிடத்திற்கு வருமாறு அழைத்தார். ஆனால் நான் எனது மாளிகையில் சில விருந்தினர் வந்திருக்கின்றனர் என்பதால் வரமுடியாது என்று கூறினேன். அதுமட்டுமல்லாமல் எனது விருந்தினர்களில் ஒருவர் அளவுக்கு மிஞ்சிய மதுமயக்கத்தில் எனது நாய் ஒன்றையும் சுட்டுக்கொன்று விட்டார். சில காலமாக சிலர் ரஸ்புட்டினைக் கொலை செய்யத் திட்டம் போட்டிருந்தனர். அது உண்மையில் நிறைவேறியிருந்தால் அவர்கள் அதனை எனது மாளிகையில் நடந்த சம்பவத்தோடு என்னையும், எனது மாளிகையையும் தொடர்புபடுத்தப் பார்க்கிறார்கள் போலிருக்கின்றது' என்று கூறினார்.

'எனது மாளிகையின் பின்வளவில் அந்த நாயின் சடலம் இருக்கிறது. நீங்கள் வேண்டுமானால் அங்கே சென்று பார்க்கலாம்' என்று மீண்டும் அந்தப் பொலிஸ் அதிகாரிக்குக் கூறினார் இளவரசர்.

இளவரசருடன் பேசிய பின்னர் பொலிஸ் அதிகாரிக்கு மேலும் சந்தேகம் வலுத்துவிட்டது. அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு சென்ற பொலிஸ் அதிகாரி நேரே தனது மேலதிகாரியிடம் சென்று இளவரசரின் மாளிகையில் இரவு நடந்தவைகளுக்கும் ரஸ்புட்டினின்

கொலைக்கும் நிச்சயம் தொடர்பிருக்கிறது என்று தான் நம்புவதாகவே தெரிவித்தார். அதன்படி தனது அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

பொலிஸ் அதிகாரி சென்றதும் முன்யா கொல்வீனா (Munia Golovina) தொலைபேசி அழைப்பைத் தொடுத்து இளவரசரிடம் 'ரஸ்புட்டினுக்கு என்ன செய்துவிட்டாய்?' என்று கேட்டார்.

'நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?' என்று எதுவும் தெரியாததுபோல் இளவரசர் கேட்டார்.

'ரஸ்புட்டின் நேற்று உன்னுடன்தானே இருந்தார். இப்போது அவர் எங்கே? எல்லோரும் உன்னைப் பற்றித்தான் பேசுகிறார்கள். உடனடியாக வந்து என்னைப் பார். எல்லாவற்றையும் கேட்கக் கேட்க எனக்குப் பைத்தியம் பிடிக்கப்போகிறதுபோல் இருக்கிறது' என்றார்.

'சரி நான் அங்கே வருகிறேன்' என்று கூறிவிட்டு உடனே இளவரசர் முன்யா கொல்வீனாவின் மாளிகைக்கு சென்றார்.

இளவரசரைக் கண்டதும் அவர் 'ரஸ்புட்டின் எங்கே? அவருக்கு என்ன செய்துவிட்டாய்? எல்லோரும் அவர் இரவு உன்னுடைய மாளிகையிலே வைத்துக் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்கிறார்கள். நான்தான் உனக்கு அவரை முதல்முதலில் அறிமுகம் செய்துவைத்தேன். இப்போது நீ தான் அவரைக் கொலை செய்ததாகவும் கூறுகின்றார்கள். என்னால் எதனையுமே நம்பமுடியாமல் இருக்கின்றது. நான் பேரரசியாருடன் ஏற்கெனவே இதுபற்றிப் பேசிவிட்டேன் அவரும் அப்படித்தான் எண்ணுகிறார்' என்றார் ஆவேசமாக.

'உடனே அரசியாரைத் தொலைபேசியில் அழையுங்கள். நான் அவருக்கு எல்லாவற்றையும் தெளிவாக விளங்கப்படுத்துகிறேன்' என்றார்.

அதன்படி தொலைபேசி அழைப்புத் தொடுத்தபோது பேரரசியார் இளவரசரைச் சந்திக்கச் சம்மதம் தெரிவித்தார். ஆனார் மறுகணம் அதனை மறுத்துவிட்டார். ஏதும் கூறுவதானால் எல்லாவற்றையும் எழுத்திலே தரும்படி தெரிவித்தார்.

இளவரசர் அங்கிருந்து தனது மாளிகைக்குத் திரும்பினார். அங்கே சென்றபோது மீண்டும் பொலிஸ் அதிகாரிகள் இளவரசரைச் சந்திப்பதற்காகக் அங்கே காத்திருந்தனர். பொலிசார் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் இளவரசர் மீண்டும் மீண்டும் தான் முன்னர் கூறிய பதில்களையே அவர்களுக்குக் கூறினார். விசாரணைகளின் முடிவில்

'உங்கள் மாளிகையைச் சோதனையிடுமாறு பேரரசியார் பணித்துள்ளார். அதனால் உங்கள் மாளிகையைச் சேதனையிடப் போகிறோம்' என்று பொலிஸ் அதிகாரிகள் கூறினர். அதனைக் கேட்டதும் இளவரசருக்கு கோபம் வந்துவிட்டது.

'எனது மனைவி பேரரசருக்கு மருமகள். அரச குடும்பத்தைப் பற்றிய எந்த முடிவும் பேரரசரால்தான் எடுக்கப்படவேண்டும். பேரரசியாரால் அல்ல. பேரரசர் அப்படிக் கட்டளை இட்டிருந்தால் நான் எதுவித ஆட்சேபணைகளும் சொல்லமாட்டேன். ஆனால் இந்தக் கட்டளையின்படி எனது மாளிகையைச் சோதனையிட நான் அனுமதிக்கமாட்டேன்' என்று கூறி அவர்களைத் தடுத்துவிட்டார். ஆனால் அதற்கு முன்னரே மாளிகையில் உள்ள வேலைக்காரர்களும் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுவிட்டதை அறிந்தார். அதன் பின்னர் தனது மாளிகையைச் சோதனையிட அரை மனத்தோடு அனுமதித்தார். சோதனையின் போது அங்கே யாரோ கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு பல ஆதாரங்கள் இருப்பதை பொலிசார் கண்டனர்.

இப்படியாக நாளுக்குநாள் அடிக்கடி பொலிஸ் அதிகாரிகளின் வரவுகளும், விசாரணைகளுமாக இருந்ததினால் இளவரசர் சிறிது காலம் தலைநகரைவிட்டு வெளியேறி வேறொரு மாளிகையில் போய் தங்குவது என முடிவுசெய்து அங்கிருந்து புறப்பட ஆயத்தமானார். இதனை அறிந்த பேரரசியார் அப்படி வெளியேறிப் போகவிடாமல் தடுத்து அவரை இருபத்து நான்கு மணிநேரமும் வீட்டுக்காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார். அதேபோலவே டிமிற்றி பவலோவிச் அவர்களையும் காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

பேரரசியாரால் பேரரசருக்கும் இந்தச் செய்தி அறிவிக்கப்பட்டது. அதற்குப் பேரரசர் 'என்னை இந்தச் செய்தி உண்மையிலேயே உலுப்பிவிட்டது. நான் நாளை ஐந்து மணிக்கு தலைநகருக்கு வந்து சேருவேன். ஆனால் ஒன்று, இங்கே உள்ளவர்கள் இந்தச் செய்தியைக் கேட்டதும் மிகவும் மகிழ்ச்சியாகவே இருக்கிறார்கள். ஒருவரையொருவர் பாராட்டுகிறார்கள், வெற்றிக் களிப்பில் மிதக்கிறார்கள் என்பதனையும் உமக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்' என்றும் தன் கடிதத்தினிடையே குறிப்பிட்டிருந்தார். அதன்பிறகு பேரரசரும் மிகவும் அமைதியாகவே காணப்பட்டார். ஒருவேளை ரஸ்புட்டினின் தலையிடு இனிமேல் இருக்காது என்று பேரரசருக்கும் இந்தக் கொலை சிறிது ஆறுதலைக் கொடுத்திருக்கவேண்டும். முன்னர் அறிவித்திருந்தபடி அவரும் மறுநாளே தலைநகருக்கு வந்து சேர்ந்தார்.

ரஸ்புட்டின் காணாமல் போயிவிட்ட செய்தி மக்களிடையே மிகவும் வேகமாகப் பரவிவிட்டது. அந்தச் செய்தி உறுதி செய்யப்படும் வரை பத்திரிகைகளுக்கு ரஸ்புட்டினின் பெயரைப் பாவிக்கப்படாது என்று அரசினால் செய்தித் தணிக்கை செய்யப்பட்டது. ஆனால் பத்திரிகைகள் மறைமுகமாக அந்தச் செய்தியை வெளியிட்டன.

'ஒரு குறிப்பிட்ட நபர் வேறு சிலருடன் இன்னொருவர் வீட்டிற்குப் போனார். முதலாமவர் காணாமல் போய்விட்டார். முதலாமவர் இரண்டாமவர் வீட்டிற்கு இரவு நேரங்கழித்துப் போனபோதும் இரண்டாமவர் அவர் தனது வீட்டில் இல்லை என்றார்' இப்படி ஒரு செய்தியும் 'எங்கும் உறைபனி. தலைநகரின் நதிகளின் நீரெல்லாம் எல்லாம் இந்தப் பனியால் தடுக்கப்பட்டன. அமைதியான வளாகங்கள் எங்கும் பனிமழை தூவியது. இரவு வேளையில் வளாகத்தில் மரணக்குண்டுகளின் ஒலிகள் சூழ்ந்துகொண்டன. இறந்த சடலத்தையும், இறவாத உயிர்களையும் இரகசியமாகச் சுமந்துகொண்டு மோட்டார்வண்டிகள் அங்குமிங்கும் ஓடின. விநோதமான கெட்ட கனவுகளும் நஞ்சு கலந்த ஆடைகளும் நெய்யப்பட்டன. இறுதியில் பயங்கரமான கன்வுகள் எல்லாம் உண்மை ஆகின' இப்படி இன்னொரு செய்தியும் பத்திரிகைகளில் வெளியாகின.

இதே பத்திரிகையில் 'தலைநகரில் இன்று காலை ஆறு மணியளவில் ஓர் உயர்வகுப்பினரின் வீட்டில் நடந்த கொண்டாட்டத்தின் பின்னர் ரஸ்புட்டின் திடீரென காலமாகிவிட்டார்' என்ற செய்தியும் வெளியாகியது. அச்செய்தி வெளியாகிய ஒரு மணி நேரத்திற்குள்ளேயே ஒருவித பத்திரிகைகளும் தலைநகரில் இருக்கவில்லை. எல்லாம் விலைப்பட்டுவிட்டன.

கொலை நடப்பதற்கு முன்னர் இளவரசரும், விலாடிமர் புரூஸ்கோவிச் அவர்களும் சிலரிடம் இதுபற்றி வெளிப்படையாகவே பேசியிருந்தனர். அப்படிப்பட்டவர்களுக்கு இந்தக் கொலை நடந்தது ஒரு புதிராகவே தெரியவில்லை.

புலன் விசாரணைகளை நடாத்திக்கொண்டும், போகுமிடமெல்லாம் தேடிக்கொண்டும் இருந்த பொலிசார் பதினெட்டாம் திகதி அன்று

பெற்றோவஸ்கி பாலத்தில் இரத்தக்கறைகள் இருப்பதைக் கண்டுபிடித்தனர். அவ்விடத்தை சல்லடை போட்டுத் தேடினர். கொட்டியிருந்த பனியூடாக மிகவும் கவனமாக ஆராய்ந்தபோது அங்கே ரஸ்புட்டினினது பாதணி ஒன்று இருக்கக் கண்டார்கள். கீழே பார்த்தபோது உறைந்திருந்த நதியின் நீரின் மேலே ஒரு துவாரம் இருப்பதையும் கண்டார்கள். அங்கிருந்த மோட்டார் வண்டியின் சில்லுகளின் 'டயரின்' அடையாளங்களும் மொய்கா மாளிகையின் அருகிலிருந்த 'டயரின்' அடையாளங்களும் ஒன்றாக இருந்ததையும், இரு இடங்களிலும் இரத்தக்கறைகள் படிந்திருந்ததையும் பொலிசார் கண்டுபிடித்தனர். பொலிசார் உடனடியாகவே நீருள் முழ்கி சடலத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் நாள்முழுக்கத் தேடியும் எதுவும் அகப்படவில்லை. மறுநாளும் இதேபோல் உறைத்துபோயிருந்த நதியின் அடியிலே தேடினர். இறுதியாக பாலத்திலிருந்து சுமார் அறுநூறு யார் தூரத்தில் உறைந்துபோன நிலையில் ரஸ்புட்டினினது உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

கல் போல் உறைந்திருந்த உடலை வெளியே எடுத்தனர். இருகைகளின் மணிக்கட்டுகளிலும் கயிற்றினால் ஏற்பட்ட காயங்கள் தென்பட்டன. ஒரு கையை உயர்த்திக்கொண்டு இருப்பதுபோலும் காணப்பட்டது. இதிலிருந்து ரஸ்புட்டின் தண்ணீருள் போடப்பட்ட போது குளிர் நீர் உடலில் பட்டவுடன் மீண்டும் உயிர்ப்பிழைத்திருக்க வேண்டும் என்றும், தனது கைகளை விடுவிக்கச் சிரமப்பட்டிருக்கிறார் என்றும் பொலிசார் நம்பினர். ரஸ்புட்டினின் நுரையீரலுள் இருந்த நீர் அவர் ஆற்றுள் போடப்பட்டபோது உயிருடன்தான் இருந்திருக்கிறார் என்பதற்கான அறிகுறிகள் என்றும் மருத்துவப் பரிசோதகர் தெரிவித்தார்.

ரஷ்யாவின் தேவாலய வழக்கப்படி ஒரு பாதிரிமார்களும் நீரில் மூழ்கி இறக்கமாட்டார்கள் என்பது அவர்களது ஒரு திடமான நம்பிக்கை.

ஆனால் ரஸ்புட்டின் நீரில் முழ்கியதால்தான் இறுதியில் இறந்தார என்ற இந்தச் செய்தி அவரின் உண்மையான பக்தர்களைத் திகிலடையச் செய்தது. விஷம் கொடுத்தும், துப்பாக்கியால் சுடப்பட்டும், இரும்புக்கம்பியால் பலமாக அடித்தும் அவரது உயிரைப் போக்க முடியவில்லை. இறுதியில் குளிர் தண்ணீரில் மூழ்கியதாலேயே அவர் உயிர் பிரிந்திருக்கிறது. முகமோ பார்ப்பதற்கு அகோரமாக இருந்தது. தலை முடியிலும், தாடியில் அங்குமிங்கும் ஆங்காங்கே குருதிக் கட்டிகள் உறைந்துபோய் காணப்பட்டன. கண்கள் இரண்டும் திறந்த நிலையிலேயே பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தன. அதில் ஒரு கண் அதன் குழியிலிருந்து முற்றாக வெளியில் வந்து ஒரு மயிரிழையில் தொங்கிக்கொண்டிருந்தது.

அந்த உடல் ரஸ்புட்டினினதுதான் என்பது தெளிவாகத் தெரிந்த போதும் யாராவது நெருங்கிய உறவினர் அதனை உறுதிப்படுத்த வேண்டும். அங்கே தலைநகரின் தந்தையோடு வசித்து வந்த பதினெட்டு வயதான ரஸ்புட்டினின் மகள் மரியாவையும், வீட்டில் இருந்த மற்றவர்களையும் அங்கு வந்து ரஸ்புட்டினின் உடலை அடையாளம் காட்டும்படி அழைத்தனர். அவர்களும் அப்படியே அங்கு வந்து அது ரஸ்புட்டினின் உடல்தான் என்பதை உறுதி செய்தனர்.

விறைத்துப்போயிருந்த உடல் சாதாரண நிலைக்கு வர பல மணித்தியாலங்கள் எடுத்தன. அதன் பின்னர் அவரின் மரணத்திற்கான உண்மையான காரணத்தை அறிவற்காக மருத்துவர்கள் பிரேத பரிசோதனை ஆரம்பித்தனர். ஆனால் அதனைக் கேள்வியுற்ற பேரரசியார் என்ன நினைத்தாரோ தெரியாது அது ஆரம்பித்த சிறிது நேரத்திற்குள்ளேயே அதனை நிறுத்தும்படி உத்தரவிட்டார். அதன்படி அதுவும் நிறுத்தப்பட்டுவிட்டது. பேரரசியார் கன்னியர் மடத்தைச் சேர்ந்த அக்குலீனா (Akulina) என்பவரையே ரஸ்புட்டின் உடலைக் கழுவிச் சுத்தம் செய்ய உத்தரவு இட்டார்.

ரஸ்புட்டினின் மனைவி பரஸ்கோவியாவும் (Praskovia) மற்றவர்களும் பொக்ரொவஸ்கோவிலிருந்து ரஸ்புட்டின் இறந்த ஐந்தாவது நாள் வந்து சேர்ந்தார்கள். ரஸ்புட்டினின் மனைவி தலைநகருக்கு வந்துசேர்ந்ததும் மகள் மரியாவும் மற்றவர்களும் கறுப்பு ஆடைகள் அணிந்திருந்ததைக் கண்டதும் திடுக்குற்றார். 'அப்பாவுக்கு என்ன நடந்தது? என்ன நடந்தது? ஏன் எல்லோரும் சோகமாக இருக்கிறீர்கள்?' என்று மிகுந்த அவாவுடன் வினாவினார். எவரும் எதுவும் பேசாது நிற்பதைப் பார்த்துக்கொண்டு நின்றவுடன் அவருக்கு உண்மை விளங்கிவிட்டது. அவருக்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் 'ரஸ்புட்டினுக்கு உடல் நலமில்லை. உடனே தலைநகருக்கு வரவும்' என்றுதான் அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால்தான் மகளும் மற்றவர்களும் கறுப்பு ஆடைகள் அணிந்திருந்ததைக் கண்டதும் அப்படிக் கேட்டார். இதுவரை காலமும் எவ்விதத்திலும் கலங்காத அவர் அன்று யாராலும் கட்டுப்படுத்த முடியாமல் கதறிக் கதறி அழுதார்.

ரஸ்புட்டினின் மரணச்சடங்குகளுக்கான எல்லா ஒழுங்குகளையும் பேரரசியாரே முன்னின்று செய்தார். முதலில் உடலத்தை மார்கழி மாதம் 21 ஆம் திகதி அவர் பிறந்த கிராமமான பொக்ரொவஸ்கோ விற்குக் கொண்டு செல்வதென்றே தீர்மானித்தனர். பின்னர் அந்த முடிவை மாற்றி அரச பரம்பரையினரால் புதிதாக அமைக்கப்பட்டுக்கொண்டிருந்த தேவாலய வளாகத்தில் அடக்கம் செய்வதென்று தீர்மானித்தனர். அன்று பேரரசரின் குடும்பமும் ரஸ்புட்டினின் குடும்பமும் ரஸ்புட்டினுக்கு வேண்டிய சிலருமே அங்கே குழுமியிருந்தனர்.

சமய முறைப்படி கிரியைகள் எல்லாம் முடிவுற்றதும் பேரரசியார் பெட்டியினுள் அவரது குடும்பத்தினரால் கையெழுத்திடப்பட்ட உருவப்படம் ஒன்றினையும், தனது கையால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றினையும் உடலத்தின் மார்பில் வைத்தார். அதிலே 'எமக்காக

உயிர் துறந்தவரே, இருளடைந்த துன்பமான பாதையில் செல்லவிருக்கும் எமக்கு உமது ஆசீர்வாதத்தைத் தாருங்கள். மேலுலகத்திலிருந்து பிரார்த்திக்கும்போது எம்மையும் நினைவுகூருங்கள் இப்படிக்கு அலெக்ஸாண்ட்ரா' என்று எழுதப்பட்டிருந்தது. திடீரென நடந்த இந்தக் கொலையால் அவர்கள் அனைவரும் அதிர்ச்சியும் மிகுந்த கவலையும் அடைந்திருந்தனர். பேரரசியார் வெளிப்படையாகத் தன் கவலையைக் காட்டிக்கொள்ளத போதிலும் ரஸ்புட்டினுடைய சடலம் சவக்குழி யினுள் இறக்கப்பட்டபோது அவரது இரண்டு கண்களிலுமிருந்து பொல பொலவென்று கண்ணீர்த் துளிகள் விழுந்தன. ஆனால் அவரால் அவற்றைத் தடுக்க முடியவில்லை.

* * *

ரஸ்புட்டின் கொலைசெய்யப்பட்ட அன்று பல தேவாலயங்களிலும், சமூகங்களிடையேயும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பல சம்பவங்கள் நடந்ததாக செய்திகள் வெளியாகின. பாதிரிமார்கள் பலர் பைத்தியம் பிடித்தவர்கள்போல் ஆனார்கள். கன்னியர் மடத்தில் இருந்த சந்நியாசினிகள் பலர் கட்டுக்கடங்காத பாலுணர்ச்சிகளினால் உந்தப்பட்டு பாதிரிமார்களிடம் சரணடைந்தனர் என்றும் செய்திகளும் உலாவின.

ரஸ்புட்டின் அவருக்கென ஒதுக்கப்பட்ட நிலக் குழியிலே மூன்று மாதங்கள் வரையிலேதான் கிடந்தார். ரஷ்யப் புரட்சி ஆரம்பித்த இரண்டாவது வாரம் 1917 பங்குனி மாதம் மதுவெறி தலைக்கேறிய நிலையில் சில போர்வீரர்கள் கட்டிக்கொண்டிருக்கப்பட்ட அந்தத் தேவால வளாகத்துள்ளே புகுந்து ரஸ்புட்டினின் புதைகுழியைத் தோண்டி எடுத்தனர்.

பேரரசியாரால் அவரது மார்பில் வைக்கப்பட்ட உருவப்படத்தை எடுத்துச் சென்றனர். அந்த உருவப்படம் பின்னர் பழம்பொருள்களைச் சேகரிக்கும் ஓர் அமெரிக்கருக்கு கள்ளச் சந்தையில் விலைபேசி விற்கப்பட்டது. நிலத்தின் கீழே அழுகிய நிலையிலிருந்த ரஸ்புட்டினின் நாற்றமெடுத்த உடலத்தை அனைவரும் தாக்கி உருக்குலையச் செய்தனர். சிலர் அதன்மீது மலசலமும் கழித்தனர். அதனை ஒரு பெட்டிமேல் வைத்து அரசபரம்பரையினரின் குதிரை லாயத்திற்கு எடுத்துச் சென்றனர். பல மரங்களை எடுத்து அவற்றைக் கண்டபடி அடுக்கி அதன்மேல் உடலத்தை வைத்தனர். அவற்றின் மேல் மண்ணெண்ணெயை ஊற்றி அதற்கு நெருப்பு வைத்தனர். அது கிட்டத்தட்ட ஆறு மணித்தியாலங்களாக பெருஞ் சுவாலைவிட்டு எரிந்துகொண்டிருந்தது. ஏற்கெனவே ரஸ்புட்டினின் மரணம் மக்களிடையே ஒருவித அச்சத்தைத் தோற்றுவித்திருந்தது. அந்த அச்சம் தீருமுன் இப்படியொரு சம்பவம் நிகழுமென்று அவர்கள் எண்ணியிருக்கவில்லை. அப்படிப்பட்ட மக்கள் தூரத்திலிருந்தே அவற்றையெல்லாம் அச்சத்துடன் பார்த்துக்கொண்டு நின்றனர். எல்லாம் எரிந்து முடிந்தபின்னர் அதன் சாம்பரை எடுத்துக் காற்றில் நாலா பக்கமும் வீசினர். மீதியை பனிமூடிய நிலத்துள் குழிதோண்டிப் புதைத்தனர்.

ரஸ்புட்டின் தான் இறந்த பின்னர் சவக்குழியில் அமைதியாகக் கிடக்கமாட்டேன் என்றும், தன்னுடலை எரித்தபின்னர் சாம்பல் காற்றில் கலக்கும் என்று தான் இறக்குமுன் கூறிய கூற்று இவ்வகையில் உண்மையாகிவிட்டது.

◆◆



30

சாம்ராஜ்யம் சரிந்தது

ரஸ்புட்டினின் மரணச் செய்தியைக் கேட்டவுடன் மக்களெல்லாம் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தனர். காணுமிடமெல்லாம் ஒருவரையொருவர் கட்டித்தழுவினர். தேவாலயங்களில் டிமிற்றி பவலோவிச்சின் உருவப்படத்திற்கு முன்னால் மக்கள் மெழுகுவர்த்தி ஏற்றி வணங்கினர். இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போ, விலாடிமர் புரூஸ்கோவிச், டிமிற்றி பவலோவிச் ஆகியோர் நாட்டின் விடுதலை வீரர்களாகக் கருதப்பட்டனர். அவர்களுடைய புகைப்படங்கள் பெருவாரியாக விலைப்பட்டன. இனிமேல் ஜேர்மனியின் செல்வாக்கு தலைநகரிலே இருக்காது என்றே எண்ணினர். வெளிநாட்டுப் பத்திரிகைகளும் இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போவையும், அவரது மனைவி ஐரினாவையும் 'ரஷ்யாவின் காவலர்கள்' என்று தலையங்கமிட்டு அவர்களைப் புகழ்ந்து பக்கம்பக்கமாக எழுதின.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களும் இல்லாமலில்லை. 'ரஸ்புட்டின் மக்களின் குரலாகப் பிரிதிபலித்தவர். பேரரசரிடம் சென்று மக்களுக்காகப் பேசியவர்' என்றும் சிலர் குரல் கொடுத்தனர். இந்தக் கொலைக்கு எதிராக அரச பரம்பரையினரிடமிருந்தே கூடுதலான

எதிர்ப்புக்கள் கிளம்பின. இளவரசரின் மாமனார் இதனை ஒரு வீரச்செயல் என்பதை மறுத்துவிட்டார். பேரரசரின் சகோதரியார் 'இது ஒரு திட்டமிட்ட வெட்கக்கேடான செயல், இதிலே வீரியம் பேசுவதற்கு எதுவுமில்லை' என்றார்.

இளவரசர் இப்படியான திடீர் புகழை எதிர்பார்த்திருந்தாலும் இந்த அளவில் எதிர்பார்க்கவில்லை. தனக்கு ரஷ்ய அரசியலில் நீண்டதொரு எதிர்காலம் இருப்பதாகவே எண்ணி மகிழ்ந்தார். பல ஆயிரக்கணக்காண பாராட்டுக்கடிதங்களும், தந்திகளும் வந்து குவிந்தவண்ணமே இருந்தன. ஆனால் டிமிற்றி பவலோவிச் அவர்களை பெருமளவு குற்ற உணர்வுகள் வந்து அழுக்கின. அவரது தந்தை யாருக்கும் இவ்விதமான புகழ் வந்து சேர்வது பிடிக்கவில்லை. தனது மகனை இந்தக் கொலை பற்றிக் கேட்டபோது அவர் தனது மறைந்த தாயாரின் புகைப்படத்தின் முன்னால் நின்று 'நான் ரஸ்புட்டினைக் கொலை செய்யவில்லை' என்று சத்தியம் செய்தார்.

பேரரசர் நிக்கலஸ் அவர்களும் பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டார். இந்தக் கொலையாளிகள் இருவரும் அரச குடும்பத்தினர் ஆகையால் அவர்களை மன்னிக்கவும் முடியவில்லை. பொதுமக்களால் வீரர்களாகப் போற்றப்படும் இவர்களுக்குத் தண்டனையும் வழங்க முடியவில்லை.

அரச குடும்பத்தவரே கொலையாளிகளாக மாறியதை அவரால் சிறிதளவேனும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதேவேளையில் பேரரசரும் பேரரசியாரும் இவர்கள் பொதுமக்களால் பெரும் வீரர்களாகப் போற்றப்படுவதை சற்றேனும் விரும்பவுமில்லை. அவர்களது மிக நெருங்கிய நண்பரான ரஸ்புட்டினைக் கொலை செய்த குற்றத்திற்காக அவர்களை பேரரசரும் பேரரசியாரும் பழி வாங்கிவிடவும் கூடும்

என்பதற்காக அரச குடும்பத்தவர்களில் பலர் பேரரசருக்கு அவர்களை மன்னிக்கும்படி மன்றாடிக் கடிதங்கள் எழுதினர்.

'கொலை எப்போதும் கொலைதான். அது ஓர் அரச குடும்பத்தவ ராகவும் இருக்கலாம், ஒரு சாதாரண குடிமகனாகவும் இருக்கலாம். யாருக்கும் யாரையும் கொலைசெய்வதற்கு உரிமை கிடையாது' என்றார் பேரரசர்.

எத்தனையோ பேர் எப்படித்தான் மன்றாடிய போதும் பேரரசர் அவர்களுக்குத் தனது தண்டனையை கொடுத்தார். இளவரசரும், டிமிற்றி பவலோவிச்சும் ரஷ்யாவிற்குள்ளேயே நாடுகடத்தப்பட்டனர். இளவரசர் ரஷ்யாவின் நடுப்பகுதியில் இருக்கும் றக்கிற்நோ (Rakitnoe) பண்ணைக்கும், அடுத்தவர் பேசியவின் (Persia) கரையிலான கஸ்வின் (Kasvin) போர்முனைக்கும் அனுப்பிவைக்கப்பட வேண்டுமெனத் தீர்ப்பளித்தார்.

இளவரசருக்கு இந்த இடமாற்றம் அவ்வளவு தொந்தரவைக் கொடுக்காதபோதும் டிமிற்றி பவலோவிச் அவர்களுக்கு பெரிய துன்பத்தைக் கொடுத்தது. ஏற்கனவே உடல் நலம் கெட்டுப் போயிருந்த இவருக்கு அங்குள்ள போர்ச்சூழலும், உணவுப் பற்றாக்குறையும், நோய்களும் அவரை மேலும் மேலும் வாட்டி வதைத்தன. இதனை அறிந்த பதினாறு அரசகுடும்பத்தினர் பேரரசருக்கு டிமிற்றி பவலோ விச்சின் தண்டனையைக் குறைக்குமாறு மன்றாட்டக் கடிதம் ஒன்றை எழுதினர். ஆனால் பேரரசர் தண்டனையைக் குறைக்கவேயில்லை.

ரஸ்புட்டினின் மரணம் ஓர் அரசியல் கொலை. அவரது நடத்தை களுக்காவும், அரசியல் தலையீடுகளுக்காகவும், நாட்டை அழிவுப்பாதை யிலிருந்து காப்பாற்றுவதற்காகவும், பேரரசியாரின் மேலுள்ள வெறுப்பின் காரணமாகவும் செய்யப்பட்ட ஒன்று. இது பேரரசரையும்

பேரரசியாரையும் பொதுமக்களிடமிருந்து தள்ளியே வைத்திருந்தது. ஆனால் இப்போது அரச குடும்பத்தினர் கேட்ட மன்றாட்டங்களைச் செவிமடுக்காது அவர்களுக்குத் தண்டனை கொடுத்தது அவர்களை மேலும் மேலும் தள்ளி வைத்துவிட்டது.

இளவரசரும், டிமிற்றி பவலோவிச்சும் வீட்டுக்காவலில் வைக்கப் பட்டிருப்பதை அறிந்தவுடன் விலாடிமர் புரூஸ்கோவிச் தானாகவே போர்முனைக்குச் சென்று போர்வீரர்களுடன் சேர்ந்துகொண்டார். இதனால் இவரும், ஐவன் சுக்கோரினும் மற்றவர்களும் எதுவித தண்டனைகளும் பெறாமல் தப்பிவிட்டார்கள். ரஸ்புட்டினின் மரணச்சடங்கின் அன்றே இளவரசரும் டிமிற்றி பவலோவிச் அவர்களும் பேரரசர் கொடுத்த தண்டனைப்படி அவர்களை அந்தந்த இடங்களுக்குப் போகுமாறு பணிக்கப்பட்டனர். அந்தந்த இடங்களில் இவர்களைக் கண்காணிக்க என்றும் பேரரசர் ஆட்களை நியமித்திருந்தார்.

ரஸ்புட்டின் இறந்தபின்னர் பேரரசியார் அரசியல் விவகாரங்களில் தலையிடமாட்டார் என்று எண்ணியிருந்தவர்களுக்கெல்லாம் பெரும் ஏமாற்றமாகிப் போய்விட்டது. இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போவின் மாமனார் ஒருநாள் அரண்மனைக்கு வந்து பேரரசியாரிடம்; 'அலக்ஸ் நீர் இனிமேலும் அரசியல் விவகாரங்களில் தலையிடாது இருந்தால் எல்லோருக்கும் நல்லது. மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பாராளுமன்றத்தை அமைத்தால் பேரரசருடைய சுமைகள் குறையும், நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பமான நிலையும் குறையும்' என்று அறிவுரை கூறினார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் பேரரசியார் பொங்கியெழுந் தார். 'நிக்கொலஸ் II ஒரு பேரரசர், அவர் எல்லோரையும்விட மேலானவர். அவர் ஒருவர்தான் நாட்டை ஆளமுடியும். சாதாரண மக்கள் அடங்கிய பாராளுமன்றத்தோடு ஒரு நாட்டின் பேரரசர் எப்படி அந்த உயரிய

பணிகளைப் பகிர்ந்துகொள்ள முடியும்? இது ஒருபோதும் நடக்காது. நடக்க விடவும் மாட்டேன்' என்று அகந்தையும், கோபமும் மீறிடக் கூறினார்.

இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போவின் மாமனார் மீண்டும், மீண்டும் எவ்வளவோ புத்திமதிகளை எடுத்துக்கூறினார். ஆனால் பேரரசியாரும் பேரரசரும் அவை ஒன்றினையும் கேட்பதாக இல்லை. யாவற்றையும் அலட்சியம் செய்துகொண்டேயிருந்தனர். இறுதியில் அவருக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்டது.

'நான் கடந்த முப்பது மாதங்களாக மௌனமாகத்தான் இருந்தேன். அந்த முப்பது மாதங்களிலும் உமது அரசிலே நிகழ்ந்த அவமானமான செய்கைகள் எதனைப்பற்றியும் நான் எதுவுமே பேசவில்லை. நீங்கள் அழிவது என்று முடிவெடுத்துவிட்டீர்கள் போலிருக்கிறது. உங்கள் இனத்தவராகிய எங்களையும் நீங்கள் அழிவுப்பாதையில் இட்டுச் செல்கிறீர்கள். நாடு முழுவதையும் உங்களது குருட்டுத்தனமான பிடிவாத குணத்தால் அழிப்பதற்கு உங்களுக்கு எதுவித உரிமைகளுமில்லை. உங்களுக்கு யார் எப்படியான புத்திமதி கள் கூறினாலும் நீங்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. நீங்கள் மனிதப் பிறவிகள் அல்ல, அளவுக்குமீறிய சுயநலக் கார்கள். உங்களைப் போன்றவர்களை நான் எனது வாழ்நாளிலே கண்டதேயில்லை' என்று தனது ஆத்திரம் தீருமட்டும் கத்தினார்.

'நான் இதனை ஏற்றுக்கொள்ளவே மாட்டேன். நீர் கூறுவதுபோல் ஆபத்துக்கள் அப்படியொன்றும் பெரிதாக வந்துவிடவில்லை. நீர் இப்போது குழம்பிப்போய் இருக்கிறீர். நீர் அமைதியாக இருக்கும்போது நன்றாகச் சிந்தித்துப் பாரும். அப்போதுதான் உம்மைவிட நான் புத்திசாலி என்பதை நீர் நன்றாகப் புரிந்துகொள்வீர்' என்று சிறிது ஏளனமாகவே பேரரசியார் பதிலளித்தார்.

அதன்பிறகு பேரரசியார் ஒருநாளும் அவரோடு பேச விரும்ப வில்லை. பேரரசியார் எப்போதும் தற்பெருமையாகவும் மற்றவரை மதியாமலும், மற்றவர்களைவிட தாம் இருவரும் மேலானவர்கள் என்ற கர்வத்துடனேயே பேசுவார். அரச குடும்பத்துள் இருந்தவர்களே இவர்கள் இருவருக்கும் எதிராக அவர்களை முடி துறக்க வைக்க பலவழிகளிலும் முயன்றனர்.

இவை இப்படியிருக்க தலைநகரிலே பொருட்களின் தட்டுப்பாடு அதிகரித்தது. பொருட்கள் விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டு அவையாவும் போர் முனைகளுக்கு அனுப்பப்பட்டன. 1917 ஆம் ஆண்டு மாசி மாதம் 23 ஆம் திகதி உலக பெண்கள் தினம் அன்று பேரரசருக்கும், போருக்கும் எதிரான பொதுவுடமைவாதிகளின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்களின் வேலை நிறுத்தமும் தொடர்ந்தது. உணவுப் பொருட்கள் இல்லாமல் மக்கள் பசியால் வாடினர். இவர்கள் எல்லோரும் அன்று தலைநகரில் கூடி அரச குடும்பத்திற்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர். அரசுக்கெதிரான புரட்சி ஆரம்பமானது. சிவப்புநிறக் கொடிகளை ஏந்தியவண்ணம் பல ஆயிரக்கணக்கான மக்கள் தொடர்ந்து எந்நாளும் தலைநகரிலே ஆர்ப்பாட்டம் செய்தபடியே இருந்தனர். அரசாங்கத்தால் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் முதலில் அங்கிருந்த பாடசாலைகளை மூடிவிடும்படி அறிவித்தது.

அடுத்தநாளே இதனால் கோபங்கொண்ட பாடசாலை மாணவர் களும் அந்த ஆர்ப்பாட்டங்களிலே குதித்தனர். வீதிகளிலே வாகனங்களை ஓடவிடாது தடுத்தனர். இதனைக் கண்ட பேரரசர் அரசாங்கத்திலுள்ளோரின் வேண்டுதலின்படி ஜேர்மனுடனும், ஒஸ்ரியாவுடனும் நடக்கும் போர் நாளை முடிவுறும் என்று அறிவிக்கு மாறு தளபதியிடம் கூறினார். களத்தில் இருக்கும் போர்வீரர்களை தலைநகருக்கு வந்து கிளர்ச்சிக்காரர்களைக் கட்டுப்படுத்துமாறும்

அறிவித்தார். ஆனால் போர்வீரர்கள் தலைநகருக்கு வந்ததும் மேலும் மேலும் குழப்பங்கள் அதிகரித்தன. பல நூற்றுக் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதனைக் கண்ட தளபதி பேரரசருக்கு 'நிலைமை மோசமாக இருக்கின்றது. இந்த அரசாங்கத்தினரால் எதுவுமே செய்யமுடியவில்லை. மக்களிடம் அரசாங்கத்தின் மேல் உள்ள அதிருப்தி நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. சிறிதும் தாமதிக்காமல் உடனே நாட்டை நல்ல முறையில் நடத்தக்கூடிவர்களை அழைத்து ஒரு புதிய அரசாங்கத்தை அமைக்கும்படி ஒழுங்குகள் செய்யவும்' என்று ஒரு தந்தி கொடுத்திருந்தார்.

இதனைக்கண்ட பேரரசர் தளபதியின்மேல் கடுங்கோபங் கொண்டார். 'அந்த குண்டான தளபதி எனக்கு ஓர் அபசாரமான செய்தி அனுப்பியிருக்கிறார். நான் அதற்கு பதில் கூறப்போவதில்லை' என்றார்.

அதே மாதம் 27 ஆம் திகதி பேரரசருடைய பல அதிகாரிகள் தமது மேலதிகாரிகளின் கட்டளைகளையும் மீறி ஆர்ப்பாட்டக் காரர்களுடன் இணைந்துகொண்டார்கள். அரசாங்கத்தில் அங்கம் வகித்தோர் ஒன்றாகக்கூடி தற்போது இருக்கும் அரசரால் அமைக்கப்பட்ட அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு தாமே ஒரு தற்காலிக அரசாங்கத்தை அமைப்பதென ஒரு முடிவுக்கு வந்தனர். அதன்படியே செய்தனர். புரட்சியாளர்கள் பலர் துப்பாக்கி ஏந்திச்சுடுவதற்கும் பயிற்சி எடுத்தனர். அதற்கு எதிராக இருந்த தளபதியும், பேரரசருக்கு விசுவாசமான போர்வீரர்களும் அரச மாளிகையுள் சென்று ஒளிந்துகொண்டனர்.

இதனை அறிந்த மக்கள் அங்கு கூடிநின்று மாளிகையுள் ஒளிந்திருந்த தளபதியையும், போர்வீரர்களையும் இருபது நிமிடத்திற்குள் அவ்விடத்தைவிட்டு வெளியேறுமாறு கூக்குரலிட்டனர். வேறு வழியின்றி

அவர்கள் வெளியேறினர். இதுவரை காலமும் நாட்டை வழிநடத்தவென அரசரால் அமைக்கப்பட்ட அரசாங்கம் அன்றே கவிழ்ந்து வீழ்ந்தது.

தினமும் தெருவெல்லாம் ஆர்ப்பாட்டங்கள். தலைநகரெங்கும் அரசுக்கெதிரான புரட்சிக்காரர்கள். அங்கிருந்த காரியாலயங்கள், சிறைச்சாலைகள், மற்றும் அரசாங்கக் காரியாலயங்கள், பல விலை மதிப்பற்ற கட்டிடங்கள் எல்லாம் அவர்களால் முற்றுகையிடப்பட்டன. அவற்றில் பல தீயிட்டும் எரிக்கப்பட்டன. மேலதிகாரிகளுக்குக் கட்டுப் படாத பல இராணுவ வீரர்களும், கடற்படை வீரர்களும் தமது மேலதிகாரிகளை தாமே சுட்டுக்கொன்றனர். அப்படி இறந்தவர்களும், அரைகுறை உயிருடன் இருந்தவர்களும் அவர்களால் இழுத்துவரப்பட்டு புதைகுழிகளுள் இட்டுப் புதைக்கப்பட்டனர்.

இதுவரை காலமும் பல போர்முனைகளை பேரரசர் சந்தித்த போதும் தற்போது கிளம்பியுள்ள உள்நாட்டுக் கலவரத்தை அடக்க அவருக்குச் சக்தியில்லாமல் போய்விட்டது. பங்குனி மாதம் இரண்டாம் திகதி பேரரசர் தனது முடியைத் துறந்தார். இதனை மக்களுக்கும் அறிவித்தார். அதன் பின்னர் பன்னிரண்டு வயதான தனது மகன் இளவரசர் அலெக்ஸிக்கு முடிசூட்டினார். ஆனால் அதனையும் சில மணி நேரத்தின் பின்னர் துறக்கச்செய்தார்.

பேரரசர் நிக்கொலஸ் II வுக்கும், பேரரசியான அலெக்ஸுக்கும் அடுத்தபடி பேரரசருடைய தம்பியான சீமான் மைக்கேல் (Duke Michael) இற்குத்தான் முடியுரிமை போகவேண்டும். அவரை அரசராக முடிசூடும்படி பலர் வேண்டுகோள் விடுத்தனர். நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பங்களினால் அரச பரம்பரையினருள்ளேயே ஒருவர் முடியைத் துறந்து இன்னொருவருக்கு முடிசூட்டுவதால் அது நாட்டில் எதுவித சமாதானத்தையும் கொண்டுவராது என்பதை உணர்ந்த சீமான் மைக்கேல், பாராளுமன்றத்தினரால் தான் தெரிவுசெய்யப்பட்டால் மட்டுமே

தான் பேரரசராகப் பதவியேற்பதாகக் கூறி முடிசூடுவதற்கு மறுத்துவிட்டார். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. இதனால் ரஷ்யாவின் அரச பரம்பரையினரின் ஆட்சிக்கு அன்றே ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அரச பரம்பரையினரின் ஆட்சி அன்றோடு ஒழிந்தது.

இப்படியெல்லாம் தலைநகரில் நடைபெறுவதாக இளவரசர் யுசெப்போ கேள்விப்பட்டார். தனது தண்டனைக்குக் காரணமாகவிருந்த பேரரசர் இப்போது பதவியில் இல்லை என்று தெரிந்தவுடன் தானாகவே தலைநகருக்கு வந்து சேர்ந்தார். முடி துறந்த பேரரசர் மேலும், பேரரசியாரின் மேலும் அவர்களின் ஆணவமும், அகம்பாவமும் நிறைந்த செய்கைகளால் அண்மைக்காலமாகவே மிகுந்த வெறுப்புக் கொண்டிருந்தார். தான் செய்த கொலையால்; தலைநகரில் நடக்கும் நிகழ்வுகளைச் சீர்படுத்தலாம் என்று எண்ணியே அதனை முன்னின்று செய்தார். ஆனால் ரஸ்புட்டினின் கொலையின் பின்னர் அவர் எண்ணியபடி எதுவும் நடக்கவில்லை.

பேரரசரையும், பேரரசியாரையும் அரண்மனையிலிருந்து வெளியேற்றி சிறையில் வைக்கவேண்டும் அல்லாதுவிடில் அவர்கள் ஜேர்மனியுடன் எப்போதும் தொடர்பு வைத்துக்கொண்டு ரஷ்யாவிற்குத் துரோகம் செய்வார்கள் என்றார்.

ஐரினாவின் மாமனார் ரஸ்புட்டினின் கொலையால் மிகவும் பிரபல்யமாயிருந்த இளவரசரை பேரரசர் பதவியை ஏற்குமாறு கேட்டார். 'ரஷ்யாவின் முடி ஒருபோதும் பரம்பரை பரம்பரையாகவோ, அல்லது மற்றவர்களால் தெரிவு செய்யப்பட்டோ தொடர்ந்து வந்ததில்லை. அவ்வப்போதிருந்த நிலமைகளைப் பொறுத்தே முடிசூடப்பட்டது. இப்போது நீர்தான் மிகவும் பிரபல்யமாக இருக்கிறீர். பேரரசர் குடும்பத்தை மக்கள் முடிதுறக்கச் செய்துவிட்டார்கள். ரஷ்யா முடிசூடிய

மன்னர் இல்லாமல் இயங்குவது கடினம்' என்று தனது அறிவுரையைக் கூறினார்.

ஆனால் இளவரசர் பலதையும் நன்றாக யோசித்தார். பேரரசருக்கு வந்த முடிவு தனக்கும் வரமாட்டாது என்பது என்ன நிச்சயம்? நாட்டின் நிலமை எங்கோ போய்க்கொண்டு இருக்கின்றது. இப்போது முடிசூடினால் ஏராளமான பொறுப்புக்களைச் சுமக்கவேண்டி வரும். ஜரினாவிற்கும் பேரரசியாக ஆகவேண்டும் என்ற எண்ணம் ஒருபோதும் இருந்திருக்கவில்லை. இதனால் இளவரசர் அவர் கூறியபடி முடிசூடி அரசாளச் சம்மதிக்கவில்லை.

பேரரசர் முடி துறந்தவுடன் மற்றைய அரச குடும்பத்தினர் தமது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுடன் சென்று அவரவர் மாளிகைகளிலே தங்கியிருந்தனர். புதிதாக மக்களால் தோற்றுவிக்கப்பட்ட அரசாங்கத்தினரால் சில அரச பரம்பரையினர் அவர்களின் பாதுகாப்பு கருதி கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். பேரரசரும் பேரரசியாரும் அவர்களது பிள்ளைகளும் கைதுசெய்யப்பட்டு அவர்களது மாளிகையிலேயே கைதிகளாக வைக்கப்பட்டனர். மாளிகைக்கு வருவோர் போவோர் எல்லோரும் சோதனையிடப்பட்டனர். அரச குடும்பத்தவர் அங்கு வருபவர்களோடு ரஷ்ய மொழியில் பேசுவதற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். அரச பரம்பரையினரிடமிருந்த ஏராளமான தங்க நகைகளும், வைரக்கற்களும், வைர நகைகளும், விலையுயர்ந்த சித்திரங்களும், மற்றைய பெருட்களில் பெரும்பகுதியும் புதிய அரசாங்கத்தினரால் கைப்பற்றப்பட்டு மொஸ்கோ நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

பல மாதங்களாகத் தொடர்ந்த புரட்சியில் 1917 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி கேனஸ்கி (Kerensky) அவர்களுடைய அரசாங்கத்தை பொல்கிவிக்ஸ் (Bolsheviks) குழு லெனினின்

தலைமையில் கைப்பற்றியது. இதற்கு முன்னர் அரச குடும்பங்கள் அவ்வளவு அச்சமில்லாமல் அவர்களுடைய மாளிகைகளிலேயே வசித்துவந்தனர். ஆனால் லெனின் அவர்களின் தலைமையில் அவர்களுடைய நிலமையும் மோசமாகியது.

யெல்ற்றா (Yalta) பொதுவுடமைவாத குழு எல்லா அரசபரம்பரை யினரையும் உடனடியாக சுட்டுக்கொல்லும்படி கோஷமிட்டது. மற்றைய செவஸ்ரப்போல் (Sevastopol) பொதுவுடமை வாதக் குழு அவர்களை புதிய அரசின் கட்டளைகள் வரும்வரை பொறுத்திருக்கும்படி கூறியது. இரு குழுக்களும் முக்கிய இடங்களைக் கைப்பற்றுவதற்காக தமக்குளே பல முறை பல இடங்களில் அவ்வப்போது மோதியும் கொண்டன.

1918 ஆம் ஆண்டு பங்குனி மாதம் லெனின் ஜேர்மனியுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார். இதன்படி ஏராளமான சலுகைகள் ஜேர்மனிக்கு வழங்கப்பட்டன. இதிலே யுக்கிறேனின் பெரும்பகுதியையும், கிறிமியன் (Crimean) தீபகற்பத்தையும் அவர்களுக்கு விட்டுக்கொடுத்தது. கிறிமியன் தீபகற்பத்திலேதான் முக்கியமான அரச குடும்பத்தினர் வாழ்ந்துவந்தனர். ஜேர்மன் அரசாங்கம் உடனேயே அங்கே சிறை வைக்கப்பட்டிருந்த அரச குடும்பத்தினர் அனைவரையும் விடுதலை செய்தது. அதனையடுத்து அரச குடும்பத்தினருக்குச் சார்வான போர்வீரர்களுக்கும் பொல்கிவிக்ஸ் குழுவினருக்கும் உள்நாட்டுக்கலவரம் ஆரம்பமாகி அது நாடு முழுவதும் பரவியது. இந்தப் போரின் இறுதியில் பொதுவுடமைவாதிகளே வெற்றியீட்டினர். இவர்கள் திரும்பவும் எல்லா அரசகுடும்பத்தினரையும் கைப்பற்றிச் சிறையில் அடைத்தனர்.

பேரரசரும் அவரது குடும்பமும் முதலில் புரட்சிக்காரர்களால் கைப்பற்றப்பட்டபின்னர் சைபீரியாவிற்கு அனுப்பப்பட்டனர். அங்கே ருபொல்ஸ்கி (Tobolsk) என்ற மாகாணத்திலே சில காலம் ஓரளவு

வசதிகளுடன் வாழ்ந்துவந்தனர். பின்னர் 1918 ஆம் ஆண்டு சித்திரை மாதம் இகெற்றின்பேக் (Ekateringburg) என்கின்ற நிலக்கரிச் சுரங்கப் பகுதிக்கு மாற்றப்பட்டு ஒரு தொழிலதிபருடைய வீட்டிலே சிறை வைக்கப்பட்டனர்.

16 ஆம் திகதி ஜூலை மாதம் இரவு வேளையில் சில சிப்பாய்கள் அவர்கள் இருப்பிடம் வந்தனர். எல்லோரையும் நல்ல ஆடைகள் அணியுமாறு கூறினர். ஏன், எதற்கு என்று கேட்டதற்கு உங்கள் அனைவரையும் சேர்த்து ஒரு புகைப்படம் எடுக்கப்போகிறோம் என்று கூறினர். அவர்களும் அதற்குச் சம்மதித்து எல்லோரும் அவர்கள் கூறிய அறையினுள் சென்று காத்திருந்தனர். அங்கே வேறு பலரும் குழுமியிருந்தனர். பேரரசர் குடும்பத்தினர் எல்லோரையும் தயாராக இருங்கள் என்று கூறிவிட்டு அவர்களில் யாரும் எதிர்பாராத வகையில் திடீரென துப்பாக்கி வேட்டுக்களை அவர்கள் மீது பாய்ச்சினர். நாலு புறமுமிருந்து புறப்பட்ட துப்பாக்கி வேட்டுக்கள் பேரரசரையும், பேரரசியாரையும், அவர்களது நான்கு இளவரசிகளையும், இளவரசர் அலெக்ஸியின் உடலையும் சென்று துளைத்தன. மறுகணம் அவர்கள் எல்லோரும் இரத்த வெள்ளத்தில் மிதந்தனர். தான் நினைத்தபடி யெல்லாம் நாட்டையும், நாட்டு மக்களையும் ஆண்டுவந்த பேரரசரும் பேரரசியாரும் தமது நான்கு பெண் பிள்ளைகளுடனும், ஒரேயொரு மகனுடனும் அநாதரவற்ற பிணங்களாக அங்கே கிடந்தனர்.

◆◆



31

கனவிலும் காணாத முடிவுகள்

பேரரசரும் பேரரசியாரும் உயிருடன் இருந்து அரசாட்சி செய்த்போது தமக்குள்ள அதிகாரங்களை தமது சுயநலத்திற்காகவும், மற்றவரைப் பழிவாங்குவதற்காகவும் உபயோகப்படுத்தினர். முக்கியமாக பேரரசியார் தமது வருங்கால வாரிசான அலெக்ஸி (Alexei) யின் குருதியுறையா நோயை மக்களுக்குத் தெரியப்படுத்தாது மறைத்து வைப்பதற்காக ரஸ்புட்டினை தமது அரண்மனைக்குள்ளே அனுமதித் தார். அவரின் வார்த்தைகளையெல்லாம் தெய்வ வாக்குகளாக எண்ணி மனம்போன போக்கெல்லாம் செயற்பட்டார்.

ரஸ்புட்டினின் நடத்தைகளைப் பகிரங்கமாகவே மக்கள் பத்திரி கைகளில் படித்தனர். மற்றவர் வாயிலாகக்கேட்டும் அறிந்துகொண்டனர். பத்திரிகைகள் பலவிதமான கேலிச்சித்திரங்களை வரைந்து பிரசுரமாக்கின. அரச குடும்பத்தில் உள்ளவர்களும், அரசாங்கத்தில் உள்ளவர்களுமாக எத்தனையோபேர் எவ்வளவோ புத்திமதிகளைக் கூறியும் எதனையுமே அவர்கள் செவிமடுக்கவில்லை. இறுதியில் அவர்களுக்கு இப்படியான ஒரு இழிவான நிலை ஏற்பட்டுவிட்டது. இப்படியானதொரு முடிவு தங்களுக்கு வருமென்று அவர்களில் யாரும்

கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்கள். இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த அவர்கள் எல்லோருடைய உடலங்களையும் தூக்கி ஒரு பெரிய குழியை வெட்டி அதனுள்ளே போட்டு மண்ணால் மூடினர்.

இ னை அறிந்த மற்றைய அரசபரம்பரையினர் எல்லோரும் தமது எதிர்கால வாழ்க்கையை எண்ணி எண்ணி வருந்திக் கொண்டேயிருந்தனர். இரவில் படுக்கைக்குச் செல்வோர் தாம் திரும்பவும் காலையில் உயிருடன் விழித்தெழுவோமோ என்கின்ற அச்சத்துடனேயே காலத்தைக் கழித்தனர். 1918 ஆம் ஆண்டு கோடை காலம் அரச பரம்பரையினருக்கு ஓர் இருண்ட காலமாகவே இருந்தது.

பொல்கிவிக்ஸ் குழுவினர் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் இருந்த அரசகுடும்பத்தினர் அனைவரையும் ஒவ்வொருவராகச் சுட்டுக் கொன்று அழித்தனர். அதேவேளையில் சைபீரியன் நகரான அலபேயிவிஸ்க் (Alapayevsk) என்கிற இடத்தில் பல அரசகுடும்பத்தினர் சுட்டுக்கொல்லப்பட்டனர். தலைநகரிலும் லெனின் கட்டளைப்படி சில அரச குடும்பத்தினர் சுட்டுக்கொல்லப்பட்டனர். கிறிமியன் (Crimean) தீபகற்பத்தில் இருந்தவர்கள் இது ஜேர்மன் கட்டுப்பாட்டிற்குள் இருந்ததினால் தப்பித்துக்கொண்டார்கள்.

1918 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் உலகமகாயுத்தம் முடிவுக்கு வந்தது. அதன்பிறகு ஜேர்மன் படைகள் கிறிமியன் (Crimean) தீபகற்பத்தைக் கைவிட்டுவிட்டு வெளியேறின. அதன் பின்னர் மீண்டும் அங்கே குழப்பங்கள் ஆரம்பித்தன. அரச குடும்பத்திற்கு விசுவாசமான படைகளுக்கும் பொல்கிவிக்ஸ் குழுவினருக்கும் இடையில் மீண்டும் பலமான அதிகாரப்போட்டி எழுந்தது. ஆனால் அரசகுடும்பத்திற்கு விசுவாசமான படைகளால் திறமையாகச் செயற்பட முடியவில்லை. அவை மீண்டும் தோல்வியைத் தழுவின. இதன்போது நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

கருங்கடல் பகுதியில் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படாத கடற்படை யினரால் பல அதிகாரிகள் மீண்டும் கொலை செய்யப்பட்டனர். இவர்கள் கோடரிகளால் துண்டுதுண்டாக வெட்டப்பட்டும், கப்பலின் சூளையுள் உயிருடனே போட்டு எரிக்கப்பட்டும், கால்களை இரும்புக்கம்பிகளோடு சேர்த்துக்கட்டிக் கடலிலே வீசப்பட்டும் கொலை செய்யப்பட்டார்கள். செவஸ்ரப்போல் (Sevastopol) என்ற இடத்தில் கடற்படை வீரர்கள் பல பொதுமக்களைக் கொன்று குவித்தார்கள். அரசபரம்பரைக்கு ஆதரவானவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட அத்தனை ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் இவர்களால் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டார்கள்.

1919 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கூட்டுப்படைகள் கிறிமியன் (Crimean) தீபகற்பத்தின் பொறுப்புக்களைப் பிரித்து ஒவ்வொரு நாட்டுப்படைகளுக்கும் கொடுத்தது. இதன் கரையோரங்கள் ∴பிரான்ஸ் நாட்டு கடற்படைகளின் கீழ் கொண்டுவரப்பட்டன. இங்கு மீண்டும் கலவரங்கள் தொடர்ந்தன. இங்கு மீதமாக இருந்த அரச குடும்பத்தினருக்கு ரஷ்யாவின் பொதுவுடமைப் புரட்சியாளர்களால் மேலும் ஆபத்துக்கள் வர ஆரம்பித்தன. இந்தவேளையில்தான் பிரித்தானியாவின் அரசகுடும்பம் ரஷ்யாவில் மீதமாக இருக்கும் தமது நெருங்கிய் அரச பரம்பரையினரைக் காப்பாற்ற முன்வந்தது.

ஐந்தாம் ஜோர்ச் மன்னர் (King George V) பேரரசர் நிக்கலஸ் இற்கு ஒன்றுவிட்ட சகோதரன். இவருடைய தாயார் மகாராணி அலெஸ்ஸாண்ட்றா விதவையான பேரரசி மரியா விடெறேவ்னா (Maria Feodorovna) வின் சகோதரியுமாவர். தனது ஒன்றுவிட்ட சகோதரன் குடும்பத்தோடு கொலை செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டவுடன் மகாராணி அலெஸ்ஸாண்ட்றாவின் விடாத அழுத்தமும் தொடர்ந்து கொண்டே இருந்தது. பிரித்தானியா தனது கடற்படைக் கப்பலொன்றை

ரஷ்யாவிற்கு அனுப்பி அவர்களை அழைத்துவர ஏற்பாடுகள் செய்தது. விதவையான பேரரசி மரியா விடெறேவ்னா தனது சகோதரியின் இந்த அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார். ஆனால் பலவிதமான தூண்டுதல்களின் பின்னர் ஒருவாறு ரஷ்யாவைவிட்டு வெளியேறுவதற்குச் சம்மதித்தார்.

ஐந்தாம் ஜோர்ச் மன்னர் தனது சிற்றன்னையையும் அவருடன் நெருங்கியவர்களையும் அழைத்துவரத்தான் தனது கப்பலை அனுப்பினார். ஆனால் தான் வெளியேறுவதாயின் அங்கிருக்கும் அனைத்து அரசகுடும்பத்தினருடன்தான் வெளியேறுவேன் என்றும் விதவையான பேரரசி மரியா விடெறேவ்னா விடாப்பிடியாக இருந்தார். இதனால் கப்பல் தலைவர் என்ன செய்வதென்று தெரியாது தவித்தார். இறுதியில் வருவது வரட்டும் என்று அனைவரையும் அந்தக் கப்பலில் ஏற்றிச் செல்வோம் அப்படி ஏதும் பிரச்சனைகள் வந்தால் அதனைப் பின்பு பார்த்துக்கொள்வோம் என்ற முடிவில் அனைவரையும் அழைத்துச் செல்லச் சம்மதித்தார்.

1919 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 11 ஆம் திகதி 85 அரச குடும்பத்தினருடன் அந்தக்கப்பல் பிரித்தானியாவை நோக்கிப் புறப்பட்டது. கப்பல் துறைமுகத்தை விட்டுப் புறப்படும்போது இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போ இன் குடும்பம் உட்பட அங்கிருந்த பயணிகள் எல்லோரும் கப்பலின் மேல் தளத்தில் நின்றுகொண்டு தம்மைவிட்டு விலகி விலகிச்செல்லும் ரஷ்ய மண்ணின் கரையையே கண்களில் நீர் கசியப் பார்த்துக்கொண்டு நின்றனர். அப்போது அங்கிருந்த ஒரு காவலன் மட்டும் 'ஆண்டவன் அரசரைக் காப்பாற்றட்டும்' என்ற அவர்களது ரஷ்ய தேசியகீதத்தை உரத்துப் பாடிக்கொண்டிருந்தான்.

பிரித்தானிய அரசாங்கம் அவர்களை ரஷ்யாவிலிருந்து காப்பாற்றுவதற்குச் சம்மதித்தபோதும் விதவையான பேரரசி மரியா விடெறேவ்னாவிற்கும் அவருடைய மகள் எக்ஸ்சீனியா (Xenia) விற்கு

மட்டும்தான் புகலிடம் தருவதாகக் கூறியது. ஆனால் மற்றவர்களில் யாரும் எப்போதும் பிரித்தானியாவிற்குள் வந்து போகலாம் என்றும் அறிவித்தது. கப்பலில் வந்த பலர் மோல்ற்ரா (Malta) விற்கும் அங்கிருந்து ∴பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளுக்கும் சென்றனர்.

காலமும் ஓடிக்கொண்டடே இருந்தது. இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போ முன்னர் இலண்டனில் படித்தபோது பல வருட வாடகையை முன்பணமாகக் கொடுத்த 15 Parkside Street, Knightsbridge இருப்பிடம் இப்போதும் அவருக்கே சொந்தமாக இருந்தது. அது ரஷ்யாவை விட்டு வெளியேறிய பலர் ஒன்றுகூடும் இடமாகத் திகழ ஆரம்பித்தது. வெறுங்கையுடன் வெளியேறிய பல அரச குடும்பத்தினர் தாம் தஞ்சமடைந்த புகலிடங்களில் பலவிதமான துன்பங்களைச் சந்திக்கவேண்டி இருந்தது. இரக்க குணமுள்ள இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போ தான் ரஷ்யாவைவிட்டு வெளியேறும்போது கொண்டுவந்த நகைகளையும், வைரக்கற்களையும் விற்றும், வீட்டிலிருந்த பல பழைய பொருட்களை விற்றும் பல ரஷ்ய அகதிகளுக்கு ஆதரவு கொடுத்தார்.

அதன் பின்னர் ∴பிரான்ஸ் இற்கு இடம் பெயர்ந்தனர். அங்கும் பல அரசகுடும்பத்தினர் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். பலர் ஆங்கிலத்தை விட ∴பிரெஞ்சு மொழியை நன்றாகப் பேசக்கூடியவர்களாக இருந்தார்கள். இளவரசர் அங்கும் ரஷ்ய அகதிகளுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து கொடுத்தார். விரைவிலே ரஷ்யாவிலே ஓர் அமைதி நிலவும் அப்போது உடனே அங்கே செல்லவேண்டும் என்று அவர்களில் பலரும் எண்ணியபடியே காலத்தைக் கழித்தனர். தமது பிள்ளைகளை யெல்லாம் ரஷ்ய முறைப்படியே வளர்த்தனர். பலர் தமக்குத் தெரிந்த, தெரியாத எந்த வேலையாகினும் செய்வதற்கு முன்வந்தனர். ஆண்களும் பெண்களும் பலவிதமான தொழில்களையெல்லாம் செய்து தமது வாழ்நாளை ஓட்டிக்கொண்டிருந்தனர்.

இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போ தன்னிடமிருந்த இரண்டு விலை யுயர்ந்த சித்திரங்களை ஒரு அமெரிக்கருக்கு விற்பதற்கு முனைந்து ஓர் உடன்படிக்கையை எழுதினார். ஆனால் அந்த அமெரிக்கரிடம் கொடுத்த சித்திரங்களும் வரவில்லை, அதற்கான பணமும் வரவில்லை. மேலும் சில பொருட்களை எடுத்துக்கொண்டு அவற்றை அமெரிக்காவில் விற்றுவரவும், அந்த அமெரிக்கருக்கு எதிராக வழக்குத் தொடருவதற்கு மாக அமெரிக்காவிற்குச் சென்றார். ஆனால் அங்கே அந்த வழக்கில் வெற்றி பெறவில்லை. கொண்டுசென்ற பொருட்களையும் விற்கமுடியாமல் சுங்க அதிகாரிகள் தடுத்துவிட்டார்கள். பலரின் வேண்டுதலுக்கு இணங்க 1927 ஆம் ஆண்டு Rasputin, His Malignant Influence and His Assassination என்ற பெயருடைய புத்தகங்களை எழுதி வெளியிட்டார். ஆனால் இப்புத்தகத்திலே பல உண்மைகள் மறைக்கப்பட்டிருந்தன. இதனை அறிந்த சீமான் டிமிற்றி பவலோவிச் ரஸ்புட்டினின் கொலை சம்பந்தமான தமது இரகசியங்களைக் காப்பாற்றுவதென செய்த சத்தியத்தை மீறிவிட்டதாக இளவரசர்மேல் கடுங்கோபம் கொண்டார். ரஸ்புட்டினின் மூத்த மகள் மரியா இளவரசருக்கு எதிராக ஒரு வழக்குத்தொடுத்தார். ஆனால் அது தோல்வியிலேயே முடிந்தது. உடனே தான் இன்னொரு எழுத்தாளரான Patte Barham என்பவருடன் இணைந்து 'ரஸ்புட்டின்' என்ற புத்தகத்தை எழுதினார்.

பாரீஸ் நகரத்திலே இருந்தபோது ஐரீனாவினுடைய பல விலையுயர்ந்த நகைகள் களவுபோயின. அதேவேளையில் ஒரு ரஷ்ய பத்திரிகை இளவரசர் ஆன் தன்னினச்சேர்க்கையினால் ஃபிரான்ஸ் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுவிட்டார் என்ற செய்தியையும் வெளியிட்டது. இதனை வேறும் சில பத்திரிகைகளும் வெளியிட்டன. இதனால் கோபமுற்ற இளவரசர் இவற்றுக்கெதிராக வழக்குகள் தொடர்ந்தார். வழக்குகளின் முடிவில் இறுதியில் அந்தப் பத்திரிகைகள் தாம் தவறு செய்துவிட்டதை ஒப்புக்கொண்டு பெருமளவு குற்றப்

பணத்தை இளவரசருக்கு வழங்கின. இப்பணத்தையும் இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போ பல ரஷ்ய அகதிகளுக்கும், தர்ம ஸ்தாபனங் களுக்கும் கொடுத்தார்.

1920 ஆம் ஆண்டு ஒரு பெண் தான் பேரரசர் நிக்கலஸ் (Nicholas II) அவர்களின் கடைசி மகள் அனஸ்றாசியா (Anastasia) என்று கூறிக்கொண்டு வந்தார். பழைய அரண்மனை வேலையாட்களும், உத்தியோகத்தர்களில் சிலரும் அவர் உண்மையில் இளவரசிதான் என்று கூறி அவரின் கூற்றை உறுதி செய்தனர். ஆனால் பலருக்கு அந்தக் கூற்று குழப்பத்தைக் கொடுத்தது.

இப்படி நடப்பதைக் கேள்வியுற்ற இளவரசர் ஒருமுறை அவரைப் பார்க்கச் சென்றார். அவருடன் பலவற்றையும் பேசிக்கொண்டிருந்த இளவரசர் முடிவில் அவர் இளவரசி என்பதையோ, அவர் கூறும் கதைகள் எதையுமோ நம்பவில்லை. 'அவர் ஒரு பயந்த சுபாவமுள்ள, பலவீனமான, மட்டமான ஒரு சாதாரண பெண்தான். அவருக்கு ஜேர்மன் மொழி மட்டுமே பேசத்தெரியும். ஆங்கிலம் சிறிதளவும் தெரியாது. அவருக்கு ரஷ்ய மொழி விளங்கும் ஆனால் பேசமாட்டார். இதிலிருந்து அவர் ஓர் சிறந்த நடிகை மட்டும்தான்' என்று மற்றவர்களுக்குக் கூறினார்.

1928 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13 ஆம் திகதி விதவையான பேரரசி மரியா விடெறேவ்னா தனது எண்பதாவது வயதில் காலமானார். இவர் ரஷ்யாவை விட்டு வெளியேறி இப்போது பத்து வருடங்கள் ஆகிவிட்டன. இவரது மரச்சடங்கு கோப்பன்கேகனில் (Copenhagen) நடைபெற்றது. அதற்கு ஐரோப்பாவிலிருந்த அத்தனை ரஷ்ய அரச குடும்பத்தினரும் சமூகம் கொடுத்திருந்தனர். இவர்தான் ரஷ்யாவை முடிசூடி அரசாண்டவர்களில் இதுவரை காலமும் உயிரோடு இருந்தவர். இன்றோடு அதுவும் ஒரு சரித்திரமாகிவிட்டது.

இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போ வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார். ஆனால் அவரால் அதுவும் முடியவில்லை. இரண்டு தடவைகள் வாங்கிய கடன்களைக் கொடுக்க முடியாமல் திண்டாடினார். கடன்கொடுத்தவர்கள் இளவரசருடைய வீட்டிற்கு வந்து கொடுத்த பணத்திற்குப் பெறுமதியான பொருட்களை எடுத்துக்கொண்டு செல்ல வந்தனர். அந்த வேளையில் கூட ஓர் ஆதரவற்ற ரஷ்ய அகதி வந்து உதவி கேட்டதும் தன்னிடமிருந்த பணம் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டார். மற்றவர்கள் கடன்கள் பற்றிக் கேட்டதற்கு 'பரவாயில்லை, நான் ஆண்டவனை நம்புகிறேன், அவர் எனக்கு நிச்சயம் உதவுவார்' என்றார்.

1932 ஆம் ஆண்டு அமெரிக்க எம்.ஜி.எம் (MGM) திரைப்பட நிறுவனம் 'ரஸ்புட்டினும் பேரரசியும்' என்ற திரைப்படம் ஒன்றை வெளியிட்டது. அதிலே உண்மைக்குப் புறம்பான பல சம்பவங்கள் புகுத்தப்பட்டிருந்தன. இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போவின் மனைவி ஐரீனா ரஸ்புட்டினினால் பலவந்தமாகக் கற்பழிக்கப்படுவதாகவும், அதனால் கோபங்கொண்ட இளவரசர் ரஸ்புட்டினைக் கொலை செய்வதுமாகக் கதை பின்னப்பட்டிருந்தது. அந்தப் படம் வெளிவந்து அமெரிக்காவில் ஓடிக்கொண்டிருந்தபோது அதனைத் தடுத்து நிறுத்தும்படி இளவரசர் ஒரு வழக்குத் தொடுத்தார். ஆனால் எதுவித பயனுமில்லை. அந்தப் படத்திற்கு 'ரஸ்புட்டின் பைத்தியக்காரப் பாதிரியார்' (Rasputin, the Mad Monk) என்று புதிய பெயரிட்டு இலண்டனிலே திரையிட்டனர். அந்தப்படத்தின் ஆரம்பத்திலே 'இந்தப் படம் ஒரு தனி மனிதனின் பைத்தியக்கார ஆசைகள் ஒரு சாம்ராஜ்யத் தையே சரித்ததோடு சம்பந்தப்பட்டிருக்கின்றது. இதில் முக்கியமான பாத்திரங்கள் இப்போதும் உயிருடன் இருக்கின்றார்கள். மற்றவர்கள் மிகவும் கெடூரமாகக் கொல்லப்பட்டுவிட்டார்கள்' என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

இளவரசரும் அவரது மனைவி ஜரீனாவும் எத்தனையோ விதமாக அதனைத் திரையிட விடாமல் தடுப்பதற்கு முயன்றும் முடியவில்லை. இறுதியில் ப்னி கோல்ற்மான் (Fanny Holtzmann) என்கிற ஒரு பெண் அமெரிக்க யூத சட்டத்தரணியை அணுகினார். அவர் மூலமாக பிரித்தானிய பிரதமர், அரசர் வரையும் இந்த விவகாரம் சென்றுவிட்டது.

இளவரசர் ,முன்னர் அமெரிக்காவில் பொருட்களை விற்க முடியாமல் சிரமப்பட்ட தான் பெற்ற அனுபவங்களைக் கொண்டு அங்கே மீண்டும் சென்று வழக்கைத் தொடராமல் இலண்டனிலேயே எம்.ஜி.எம் திரைப்பட நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடந்தார். பலநாட்களாக வழக்குத் தொடர்ந்தது. இளவரசர், ஜரீனா உட்பட பல சாட்சியங்களை வரவழைத்து விசாரித்தனர். இறுதியில் நீதிபதி இளவரசருக்குச் சாதகமாகவே தீர்ப்பைக் கூறினார். எம்.ஜி.எம் திரைப்பட நிறுவனம் பெருமளவு பணத்தை இளவரசருக்கு நட்டஈடாக வழங்கும்படி தீர்ப்பு அளிக்கப்பட்டது. ரஷ்யாவின் பெரிய பணக்காரராக உயர்ந்திருந்து, ஒன்றுமே இல்லாத பிச்சைக்காரராக மாறும் அளவிற்கு இளவரசரின் குடும்பநிலை தாழ்ந்திருந்தது. ஆனால் இப்போது மீண்டும் பெருமளவு பணம் அவர்களுக்கு வந்து சேர்ந்தது. 'நான் ஆண்டவனை நம்புகிறேன், அவர் எனக்கு நிச்சயம் உதவுவார்' என்ற கூற்றுக்கிணங்க அவருக்கு ஆண்டவன் உதவிவிட்டார்.

என்ன துன்பங்கள், துயரங்கள் வந்தபோதிலும் இளவரசரும், ஜரீனவும் எப்போதும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாகவே வாழ்ந்து வந்தனர். இளவரசர் அறுபது வயதைத் தாண்டியபோதும் பெண்களைப் போல் கண்களுக்கு மை பூசுவதையும், முகத்திற்கு அதிகளவு அழகுசாதனப் பொருட்களைப் பூசுவதையும், தலைமுடிக்கு கறுப்பு மை பூசுவதையும் தொடர்ந்து செய்து கொண்டேயிருந்தார். விருந்து பசாரங்களின்போது முகத்தைச் சுருக்கிச் சிரிக்கும்போது இவரது

அளவுக்கதிகமான முகப்பூச்சுக்கள் வெடித்து சாப்பட்டுக் கோப்பைகளுள் விழுவதையும் பலர் கண்டிருக்கிறார்கள்.

காலமும் ஓடிக்கொண்டே இருந்தது. இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பமானது 1939 ஆம் அண்டு 1 ஆம் திகதி கிட்லரின் (Hitler) தலமையிலான ஜேர்மன் துருப்புக்கள் போலாந்துக்குள் பிரவேசித்தன. இதனைக் கண்ட இங்கிலாந்தும் .பிரான்ஸ்சும் ஜேர்மனுக்கெதிரான தமது போரை ஆரம்பித்தன. 1920 களிலும் 1930 களிலும் ரஷ்ய அகதிகள் கிட்லருக்குத் தமது ஆதரவுகளை வழங்கின. கிட்லர் ஒருவர்தான் பொதுவுடமைக் கொள்கைவாதியான ஸ்டாலினை (Stalin) அகற்றுவார் என்றும், யூதர்கள்தான் ரஷ்யாவின் பல பிரச்சனைகளுக்குக் காரணமானவர்கள் என்றும் நம்பினர். இளவரசரும் இதனையே நம்பினார். ஆனால் ஜேர்மன்-ரஷ்ய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் அவர்கள் கிட்லருக்கு தமது ஆதரவை வழங்க மறுத்தனர்.

இளவரசரை தம்முடன் ஒத்துழைக்குமாறு கிட்லர் அழைப்புக்கள் விடுத்தார். ரஷ்யாவைக் கைப்பற்றி இளவரசரை அரசராக்குவேன் என்றும் ஆசை காட்டினார். அதேவேளையில் தான் இங்கிலாந்தை வெற்றி கொண்டால் திருமதி வலிஸ் சிம்சன் (Mrs.Wallis Simpson) அவர் களுக்காக தனது முடியையே துறந்த பிரித்தானிய மன்னர் எட்டாம் எட்வேட் மன்னரை (King Edward VIII) மீண்டும் பிரித்தானியாவிற்கு அரசராக்குவேன் என்றார். தற்போது அரசபீடம் ஏறியிருக்கும் ஆறாம் ஜோர்ச் மன்னரை (King George VI) முடி துறக்கச் செய்வேன் என்றார். ஆனால் இளவரசர் தனக்கு எதுவித பதவிகளும் வேண்டாம் என்று மறுத்துவிட்டார். 1945 ஆம் ஆண்டு வைகாசி மாதம் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்து ஜேர்மனியர்கள் வெளியேற்றப்பட்டபோது பரீஸ் நகர மக்களோடு கைகோர்த்து அந்த வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தார்.

வயது செல்லச்செல்ல ஆன்மீகத்தில் கூடிய அக்கறை காட்டினார். ஆனால் அவருடைய பழக்கவழக்கங்கள் அவரை முழுதாக ஆன்மீகத் தில் ஈடுபட விடவில்லை. ஆனால் தான் எப்போதும் கடவுளை நம்பிக்கை உடையவர் என்றே கூறிக்கொள்வார். அதிகாலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்து வைத்தியசாலைகளுக்கும், ஆரோக்கியசாலைகளுக்கும் சென்று அங்குள்ள வயோதிகர்களின் கைகளைப் பற்றி நின்று ஆறுதல் சொல்வதிலும், அவர்களோடு நின்று பிரார்த்திப்பதிலும் பல மணி நேரத்தைக் கழித்தார். 1950 ஆம் ஆண்டளவில் தனது சுயசரிதையை எழுத விரும்பி அதனை எழுத ஆரம்பித்தார். 1952 ஆம் ஆண்டு Lost Splendour என்கிற பெயருடைய புத்தகத்தை எழுதி வெளியிட்டார். அது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. அதனையடுத்து 1954 ஆம் ஆண்டு En Exil என்கிற பெயருடைய புத்தகத்தையும் எழுதி வெளியிட்டார்.

இரண்டாம் உலகமகாயுத்தம் முடிவுற்றதும் ரஷ்ய அரசாங்கம் இளவரசரை நாட்டுக்கு வந்து அவர்களது அரச மாளிகைகளைப் புதுப்பிக்க உதவும்படி கேட்டனர். இளவரசருக்கு தனது நாட்டுக்குச் செல்ல விருப்பம் இருந்தபோதும் மனைவி ஐரீனாவின் எதிர்ப்பினால் அதனைக் கைவிட்டுவிட்டார்.

1950களின் இறுதியில் பரீஸ் நகரில் இளவரசரது பூட்டியார் விட்டுச்சென்ற ஒரு வீடு பல நீதிமன்றங்கள் சென்று வழக்குகள் தொடுத்தபின்னர் இவருக்குக் கிடைத்தது. அதனை விற்று பெருமளவு பணமும் பெற்றுக்கொண்டார். தன்னிடம் இருந்த பணத்தை ரஷ்யாவிலிருந்து வெளியேறி அகதிகளாக வாழ்பவர்களுக்கே மீண்டும் மீண்டும் கொடுத்தார். முக்கியமாக முன்னர் அரசபரம்பரையினராக இருந்தவர்களில் சிலரை யாருமே திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஆனால் இளவரசர் .ீலிக்ஸ் யுசெப்போ அவர்களையெல்லாம் தேடிச்

சென்று வேண்டிய உதவிகளைச் செய்துகொடுத்தார். சிலருடைய உயிர்களைக் கூட இவரது இரக்க குணம் காப்பாற்றியிருக்கின்றது.

ரஷ்யாவை விட்டு வெளியேறி மற்றைய நாடுகளில் அகதிகளாக வாழ்பவர்களினால் இளவரசர் ஒருவரே எல்லோராலும் நன்கு மதிக்கப் பட்டார். இளைஞனாக இருந்தபோது ஒரு கொலைகாரனாக மாறியபோதும் வயோதிகரான காலத்தில் பிறரை அன்புடன் நேசிக்கும் இரக்க குணமுள்ளவராக, ஒரு சிற்ந்த கொடையாளியாக விளங்கினார். 1967 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி தனது எண்பதாவது வயதில் படுக்கையிலேயே உயிர் நீத்தார்.

இவருடைய மரணம் உலகம் முழுவதும் பிரபல்யமான செய்தியாக வெளியிடப்பட்டது. ரஸ்புட்டினைக் கொலை செய்தவர் என்பதையே குறிக்கோள் காட்டி எழுதின. அவர் எத்தனையோ மக்களுக்கு எத்தனையோ விதமான உதவிகளைச் செய்திருந்தபோதும் அவைகளைவிட ஒரு கொலையாளி என்ற பெயரே பலரின் மனதில் இப்போதும் இருக்கின்றது. இதிலிருந்து ஒருவர் எத்தனை நன்மைகளை மற்றவர்களுக்குச் செய்தாலும் அவரை நினைப்பவர்களின் மனதில் முதலில் தோன்றுவது அவர் செய்த தீய செயல்தான் என்பது மேலும் உறுதியாகின்றது.

இளவரசருடைய மரணம் அவருடைய மனைவி ஐரீனாவை மிகவும் உலுப்பிவிட்டது. திருமணத்திற்கு முன்னரும், பின்னரும் ஆண் தன்னினச்சேர்க்கையிலும் கணவன் நாட்டம் கொண்டிருந்தபோதிலும் இளவரசரும் ஐரீனாவும் இறுதிவரை மிகவும் அன்பாகவே இருந்தனர். ஐரீனா கணவனுடைய விருப்பத்திற்கு ஏற்ப விட்டுக்கொடுத்து, கணவனுக்கேற்ற மனைவியாகவே வாழ்ந்தார். கணவனை இழந்த அதிர்ச்சியிலிருந்து ஒருபோதும் அவர் மீளவேயில்லை. 1970 ஆம்

ஆண்டு மாசி மாதம் 26 ஆம் திகதி திடீரென வந்த மாரடைப்பால் அவரும் தன்னுயிரை விட்டார்.

விலாடிமர் புரூஸ்கோவிச்சும் புரட்சியின்போது தப்பித்துவிட்டார். ஆனால் அவரை பொல்கிவிக்ஸ் (Bolsheviks) குழு திரும்பவும் பிடித்து அவருக்கெதிராக வழக்குத் தொடுத்தது. ஆனால் ரஸ்புட்டினைக் கொலை செய்ததற்காக மக்களிடையே பரவியிருந்த புகழ், அவருக்கு மரண தண்டனை கொடுக்கும் அளவிற்கு விடவில்லை. ஒருவருட பொது சேவை செய்யும்படி மட்டுமே தண்டனை கொடுக்கப்பட்டது. தான் செய்த குற்றத்திற்கு அவர் ஒருபோதும் வருந்தியதில்லை. அவர் தலைநகரை விட்டு நவறொசிக் (Novorossiik) என்ற இடத்திற்குச் சென்றார். அங்கே அவருக்கு ஒருவித விஷக் காய்ச்சல் பிடித்துவிட்டது. 1920 ஆம் ஆண்டு ஒரு யூதர்களின் மருத்துவ மனையில் அவர் காலமானார்.


டாக்டர் லசோவேட் (Dr.Lozovert) ருமேனியாவிற்குச் சென்று அங்கே ஒரு எண்ணெய் வியாபாரியாக பல வருடங்கள் வாழ்ந்தார். இராணுவத் தலைவர் ஐவன் சுக்கோரின் (Lt. Ivan Sukhotin) அவர்களும் ரஷ்யாவின் பல அரச அதிகாரிகள்போலே ஸ்ராலினின் (Stalin) படைகளிடம் அகப்பட்டுக்கொண்டார்.

டிமிற்றி பவலோவிச்சும் சில காலம் பிரித்தானிய இராணுவத்தில் ஒரு தலைவராகப் பணியாற்றினார். அவருக்கு வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்வது வெறுப்பாகவே இருந்தது. ஆனால் அதனையும் விட்டுவிட்டு ∴பிரான்ஸ் நாட்டில் சென்று குடியேறினார். 1926 ஆம் ஆண்டு ஓட்றி எமறி (Audery Emery of Cleveland. Ohio) என்கின்ற ஒரு பணக்கார மாதைத் திருமணம் செய்தார். இவர்களது திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பத்து வருட தாம்பத்திய வாழ்வில்

ஓர் ஆண் மகனுக்குத் தந்தையானார். ஆனால் கட்டுப்பாட்டுக்கு அடங்காத இவருடைய சிற்றின்ப வேட்கைகளினால் இவரை மனைவியார் விவாகரத்துச் செய்துகொண்டார். தனது இறுதி நாட்களில் சுவிற்சலாந்து நாட்டில் தனிமையிலே வாழ்ந்தார். 1942 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் திடீரென வந்த சிறுநீரக வியாதியினால் மரணமானார்.

ரஸ்புட்டினின் மூத்த மகள் ரஷ்யப் புரட்சிகளிலிருந்து ஒருவாறு தப்பித்து நாட்டைவிட்டு வெளியேறினார். மூன்று நூல்களை எழுதினார். அதில் கடைசி இரண்டு நூல்களான 'Rusputin', 'The Man behind the Myth' என்கிற நூல்களில் தனது தந்தையாரைப்பற்றி மிகவும் புகழ்ந்து எழுதினார். கடவுளுக்கு அடுத்த படியான தூய மனிதனாக தனது தந்தையாரை வைத்து (Starets) என்று அடிக்கடி அப்புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். அதேவேளையில் தந்தையாருடைய பாலியல் பழக்கங்களையும் அப்படியே பச்சையாக எழுதியிருக்கின்றார். இப்புத்தகங்களினால் ஏராளமான பணமும் சேர்த்தார். இவர் சிறிது காலம் மதுபானக் கடைகளில், விடுதிகளில் ஓர் பாடகியாகவும், சர்க்கஸ்களில் சிங்கத்தை அடக்குபவராகவும் பரிஸ் நகரில் பணியாற்றினார். தனது தந்தையான ரஸ்புட்டினைத் திட்டமிட்டுக் கொன்றவர்கள் என்பதினால் இளவரசர் .பீலிக்ஸ் யுசெப்போ மீதும், விலாடிமர் புரூஸ்கோவிச்சின் மீதும் அடங்காத கோபங் கொண்டிருந்த இவர் இரண்டு நாய்க்குட்டிகளை வாங்கி வளர்த்தார். அவைகளுக்கு யுசோவ், பூவ் (Youssou and Pov) என்று அவர்களின் பெயர்களைச் சுருக்கி செல்லப் பெயர்களாகவும் சூட்டியிருந்தார். இவரும் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்காவில் காலமானார்

◆◆



32

பொலீஸ் அறிக்கை

ரஸ்புட்டினினதும், இளவரசரினதும் மற்றையோர்களினதும் மர்மமான வாழ்வுபோலவே இந்தக் கொலையும் பலவிதமான மர்மங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது.

இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போ மார்கழி மாதம் 16ஆம் திகதி இரவு ரஸ்புட்டின் கொலைசெய்யப்பட்டு அவரது உடலத்தை மற்றையவர்கள் கொண்டுபோய் நதியினுள் போடப்பட்போது தான் அங்கிருந்த சோபாவில் இருந்தபடியே தூங்கிவிட்டதாகவும், அதிகாலை ஐந்துமணியளவில் புறப்பட்டு தனது மாமனார் வீட்டிற்குச் சென்றதாகவும், இவரைக் கண்டதும் இவரது மைத்துனர் 'என்ன நடந்தது? எங்கே போயிருந்தீர்? ஏன் இவ்வளவு நேரம் தாமதித்து வருகிறீர்? நாங்கள் உம்மைக்காணாது இங்கே ஏங்கிக்கொண்டிருந்தோம்' என்று கேட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார். இது நடந்து பல வருடங்களாகியும் அன்றிரவு அங்கே நடந்தவற்றை அவர் ஒருபோதும் பகிரங்கமாகக் கூறத் தயங்கியதில்லை. இவருடைய கூற்றும் இவருடன் அந்தக் கொலையிலே முக்கிய பங்கெடுத்த புரூஸ்கோவிச்சின் கூற்றும்

இவற்றிற்கு ஆதாரங்களாக விளங்குகின்றன. மற்றைய பங்காளர்களாகிய ஐவன் சுக்கோரின், டாக்டர் லசோவேட் இருவரும் பகிரங்கமாக எதனையுமே கூறவில்லை.

இவர்களுடைய கூற்றுக்கள் மட்டுமல்ல வேறும் பலருடைய அறிக்கைகளும், கூற்றுக்களும் தற்போது கிடைத்துள்ளன. இதிலே பல சம்பவங்கள் இளவரசரினதும், புரூஸ்கோவிச்சினதும் கூற்றுக் களிலிருந்து பலவகையில் மாறுபட்டிருக்கின்றன. ஆதலால் அவற்றை விரிவாக ஆராயவேண்டியதும் எமது கடமையாகும்.

1916ஆம் ஆண்டு மார்கழி மாதம் 17ஆம் திகதி சனிக்கிழமை ரஸ்புட்டினின் திடீர் மறைவு பற்றி பீட்டேகிறாட் (Petrograd) இராணுவ தலைமை அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை இது;

'இன்று அதிகாலை 2.30 மணியளவில் அமைந்திருந்த உள்நாட்டு விவகார அமைச்சில் காவலில் இருந்தவர் அதற்கு எதிரே இருந்த இளவரசர் .'.பீலிக்ஸ் யுசெப்போ மொய்கா கானல் (Moika Kanal) இல் பெரியதொரு துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டதாகக் கூறினார். இதிலிருந்த காவலாளி அவ்விடத்தைவிட்டு அகலக்கூடாது என்பதால் அவர் அருகே இருந்த பொலீஸ் நிலையத்திற்குத் தொலைபேசி அழைப்புச்செய்து விபரத்தைக் கூறினார். அவர்கள் இளவரசருடைய மாளிகை அமைந்திருந்த காசான் (Kazan) மாகாணப் பொலீஸ் நிலையத்திற்கு அதனை அறிவித்தனர்.

சேனைத்தலைவர் றோகோவ் (Colonel Rogov) தனது சகாக் களுடன் உடனே அங்கு சென்று விசாரித்தார். அங்கே நின்றிருந்த வாயில் காப்போன் அது மாளிகையில் இளவரசரின் பகுதியிலிருந்தே வந்தது என்று கூறினான். றோகோவ் தனது உதவியாளரான கேப்டன் கிறைலோவ் (Captain Krylov) அவர்களை உள்ளே சென்று விசாரித்து

வருமாறு அனுப்பினார். அங்கிருந்த வேலையாள் உள்ளே கொண்டாட்டம் நடைபெறுவதாகவும், அங்கு வந்திருந்த விருந்தினர்களில் ஒருவர் துப்பாக்கியால் சுடுவதற்குப் பழகியதாகவும், அப்படிச் செய்யும்போது அது குறி தவறி அங்கிருந்த கண்ணாடியில் பட்டு அது உடைந்து விட்டதாகவும் கூறி ஓர் உடைந்த யன்னலைக் காட்டினான். இந்த விபரங்கள் சேகரிக்கப்பட்டு அன்றே அரசாங்க அலுவலகத்திற்கும் அறிவிக்கப்பட்டது.

இளவரசரின் மாளிகையிலிருந்து பொலீஸ் அதிகாரிகள் சென்ற உடனே மாளிகையை நோக்கி மொய்கா கால்வாய் அருகேயுள்ள பாதைவழியாக ஒரு மோட்டார்வண்டி வந்து கால்வாயின் அருகிருந்த கால்நடைப் பாலத்தருகே வந்து நின்றது. அதிலிருந்து நான்கு ஆண்கள் இறங்கினார்கள். அவர்கள் இறங்கியதுதான் தாமதம் அந்த மோட்டார் வண்டிச்சாரதி அதன் விளக்குகளை அணைத்துவிட்டு அதிவேகத்துடன் மீண்டும் அதே பாதையில் சென்றது. இந்தக் காட்சியை ரஸ்புட்டினின் வீட்டில் காவலராக வேலைசெய்யும் ரிக்கோமிறோவ் (Tikhomirov) என்பவரும் அவதானித்திருந்தார். அந்த நால்வரும் மாளிகையின் முன்பக்க வாசலால் நுழையாது பக்கத்தில் இருந்த கதவு வழியாக நுழைந்ததைக் கண்ட ரிக்கோமிறோவ் அவர்களைத் திருடர்கள் என எண்ணி அவசரமாக அருகேயிருந்த் பொலீஸ் நிலையத்திற்கு ஓடிச்சென்று அங்கிருந்து இரகசியப் பொலீசாரின் தலைவருக்கு தான் கண்டவற்றைப்பற்றி அவசரத் தகவல் கொடுத்தார்.

சேனைத்தலைவர் றோகோவ் அதனை அறிந்ததும் இளவசர் மாளிகை திருடர்களால் தாக்கப்படப் போகின்றது என்று எண்ணி பல பொலீஸ் காவலர்களை மாளிகைக்கு அனுப்பினார். ஆனால் இப்போதுதான் பீட்டேகிறாட் (Petrograd) இலிருந்து பல உயர்மட்ட உத்தியோகத்தர்கள் அங்கே வந்திருக்கிறார்கள் என்று அங்கிருந்த வேலையாள் கூறினான்.

மீண்டும் இதுபற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டு அரசாங்க அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டது. காலை 6 மணி கழிந்தபின்னர் மாளிகைக்கு முன்னாலிருந்த பொலீஸ் நிலையத்தில் இரவு வேலை செய்த பொலீஸ் காவலர்களை அன்றிரவு நடந்தவற்றை விசாரித்தார்கள். இரவு நேரம் பல பொலீசாரின் குழல்ச் சத்தங்கள் வீதியில் கேட்டதும் தாம் யன்னலினூடாகப் பார்க்கையில் மாளிகையிலிருந்து இரண்டு பெண்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு ஒரு மோட்டார் வண்டியினுள் ஏற்ற முற்படுவதைக் கண்டதாகக் கூறினார்கள். ஆனால் அந்தப் பெண்கள் மோட்டார் வண்டியினுள் ஏறாது திரும்பவும் மாளிகைக்கு உள்ளேயே செல்வதற்கு முற்படுவதைக் கண்டதாகவும் கூறினார்கள். இதனைக் கண்ட பொலீஸ் அதிகாரிகள் அங்கே ஓடிவர அந்த மோட்டார்வண்டி மிகவும் வேகமாக ஓட ஆரம்பித்தது. அதற்குள் வேறு பயணிகளுமில்லை, அதன் விளக்குகளும் எரியவில்லை. அதனைப் பின்தொடர்ந்து சென்ற பொலீஸ் வண்டியால்கூட அதனைப் பின்தொடர முடியவில்லை. அவ்வளவு வேகமாகச் சென்று இருளில் மறைந்தது.

பொலீஸ் காவலர்கள் இளவரசரின் மாளிகையில் விசாரித்தபோது அந்த இரு பெண்களும் முறைகேடாக நடந்துகொண்டமையால் அவர்களை வெளியேற்றவேண்டி வந்தது என்று கூறினார்கள். இந்த ஆரவாரங்கள் முடிவுறும் தறுவாயில் மாளிகையின் பின்வளவிலிருந்து அடுத்தடுத்து நான்கு துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன. மீண்டும் பொலீஸ் அதிகாரிகள் உசாரானார்கள். இந்தத்தடவை சேனைத் தலைவரின் அங்கியை அணிந்திருந்த ஒருவர் வெளியே வந்து மாளிகையுள் பிரபுக்களும், சில அரச பரம்பரையினரும் இருப்பதாகவும், வேண்டுமென்றால் அவர்களே நேரில் வந்து அங்கு நடந்தவைகளுக்கு உங்களுக்கு விளக்கம் தருவார்கள் என்று கூறினார். இந்த உத்தரவாதத்தைக் கேட்டதும் பொலீஸ் அதிகாரிகளும், காவலர்களும் பொலீஸ் நிலையத்திற்குத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் கழிந்திருக்கும். திடீரென்று ஒரு மோட்டார்வண்டி வந்து மாளிகையின் முன்னல் நின்றது. நீண்ட அங்கி அணிந்திருந்த ஒருவரின் மேற்பார்வையில் மோட்டார் வண்டிச் சாரதியும், வேலையாட்களும் ஒரு மனித உடலம் போன்ற ஒரு பெரிய பொதியைத் தூக்கிக்கொண்டு வந்து அந்த மோட்டார் வண்டியினுள் வைத்தார்கள். மோட்டார் வண்டி மிகவும் வேகமாகப் புறப்பட்டுச் சென்று மறைந்தது. மறுகணம் அரசாங்க அலுவலகத்திலிருந்து தளபதி கிறிகோறிவ் (Grigoriev) அவர்களுக்கு இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போவினுடைய மாளிகையில் வைத்து ரஸ்புட்டின் கொலை செய்யப்பட்டுவிட்டதாக செய்தி வந்தது.

மாளிகைக்குத் திரும்பவும் வந்த பொலீஸ் அதிகாரிகள் இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போவைச் சந்தித்தனர். இளவரசர் ரஸ்புட்டினின் கொலை பற்றி ஒரு அறிக்கை எழுதவேண்டும் என்றார். இரவு நடந்த சில அசம்பாவிதங்களால் பொலீசார் முதலில் இதனை அவ்வளவு முக்கியமாக எடுத்துக்கொள்ளவில்லை. அவர்களை அழைத்துச் சென்று ரஸ்புட்டினின் உடலம் கிடந்த இடத்தைக் காட்டினார். உறைந்து போயிருந்த இரத்தக்கறைகளை அந்த அறையின் உள்ளேயும், பின் வளவில் இருந்த பனிக்கட்டிகளின் மேலும் கண்டனர். ரஸ்புட்டினின் உடல் எங்கே என்று கேட்டதற்கு 'அது எங்கே இருக்கவேண்டுமோ அங்கே இருக்கின்றது' என்று மட்டும் பதில் கூறினார்.

அதனையடுத்து பல பொலீஸ் உத்தியோகத்தர்களும், இரகசியப் பொலீஸ் அதிகாரிகளும், இராணுவ தளபதிகளும் இளவரசரின் இருப்பிடத்திற்கு விஜயம் செய்தனர். பல பொலீஸ் நிலையங்களுக்கு இந்தச் செய்தி அனுப்பப்பட்டு விசாரணைகளும் ஆரம்பமாகின. மாலை ஐந்து மணியளவில் அன்றிரவு இளவரசரின் மாளிகைக்கு வந்துபோன மோட்டார் வண்டிகளின் விபரங்களும், முக்கியமாக ரஸ்புட்டினின் உடலத்தைச் சுமந்து சென்ற வாகனத்தின் விபரங்களையும்

சேகரிக்கும்படி இரகசியப் பொலீசாருக்கு இரகசியத தந்தியும் கொடுக்கப்பட்டது' இதுதான் அந்த பொலீஸ் அறிக்கை.

இதற்கும் இளவரசரின் அறிக்கைக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. முதலாவது துப்பாக்கிச் சத்தம் சுமார் 2.30 மணியளவில் கேட்டதாக பொலீஸ் அறிக்கை தெரிவிக்கின்றது. இது கிட்டத்தட்ட இளவரசரின் கூறிறோடு ஒத்துப்போகின்றது. ஆனால் அரை மணி நேரம் கழித்து சேனைத்தலைவர் றோகோவ் (Colonel Rogov) தனது சகாக்களுடன் சென்றபோது அங்கிருந்த வேலையாள் காட்டிய உடைந்த யன்னல் நிச்சயம் வேறு ஓர் அறையாகவே இருக்கவேண்டும் அல்லது ரஸ்புட்டினின் உடலம் அப்போதே அங்கிருந்து அகற்றப்பட்டிருக்க வேண்டும். சேனைத்தலைவர் றோகோவ் அவர்கள் மாளிகைக்குச் சென்றது பற்றி இளவரசரோ, புரூஸ்கோவிச் அவர்களோ தாம் வெளியிட் அறிக்கைகளிலே குறிப்பிடவில்லை. இது வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருக்கலாம் அல்லது தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

மோட்டார்வண்டி வந்ததற்கும், அதிலிருந்து நால்வர் இறங்கியதற்கும் விளக்கம் தெளிவாகக் கொடுக்கப்படவில்லை. இளவரசரினதும், புரூஸ்கோவிச்சினதும் அறிக்கைகளின்படி டிமிற்றி பவலோவிச், ஐவன் சுக்கோரின், டாக்டர் லசோவேட் ஆகிய மூவரும் முதலில் ரஸ்புட்டினை துப்பாக்கியால் சுட்டதும் இறந்துவிட்டதாக எண்ணி அவருடைய ஆடைகளை எரிப்பதற்காக சென்றுவிட்டனர் என்றும் அவர்கள் ரஸ்புட்டின் இறுதியாக பின்வளவில் வைத்து மீண்டும் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லும்வரை அவர்கள் திரும்பி வரவில்லை என்றும் கூறினார். பொலீசாரின் அறிக்கைகளின்படி அங்கு வந்த இரண்டு மோட்டார்வண்டிகளும் யாரையும் ஏற்றிவரவில்லை என்பது உண்மை. எனவே முதலில் வந்த மோட்டார்வண்டிதான் நால்வரை திருப்பிக் கொண்டுவந்திருக்கவேண்டும். இவர்களிலே டாக்டர் லசோவேட்

அவர்கள்தான் மோட்டார்வண்டியை ஓட்டியவர். அப்படியென்றால் இன்னும் பெயர் தெரியாத இருவர் அல்லது ஒருவர் அவர்களுடன் வந்திருக்கின்றார். ஆனால் அப்படி வேறு யாரும் அங்கே வந்ததாக இளவரசரோ அல்லது புரூஸ்கோவிச்சோ கூறவில்லை. அந்த ஒருவர் மாளிகையில் இருந்த காவலராக இருக்கலாம் ஆனால் அவர்கள் கொடுத்த நேரங்கள் பொலீசார் கணக்கொடுத்த நேரங்களோடு ஒருபோதும் ஒத்துவரவில்லை.

இரண்டு பெண்கள் அங்கே இருந்ததாக பொலீசாரின் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபோதிலும் வேறு எவரும் குறிப்பிடவில்லை. நான்கு துப்பாக்கிச் சத்தம் கேட்டபின்னர் பொலீசார் அங்கே சென்றபோது சேனைத்தலைவரின் அங்கியை அணிந்திருந்த ஒருவர் வெளியே வந்து மாளிகையுள் பிரபுக்களும், சில அரச பரம்பரையினரும் இருப்பதாகவும் கூறினார். அவர் யாரென்பதும் மர்மமாகவே உள்ளது.

பொலீசாரின் அறிக்கையின்படி ரஸ்புட்டினின் உடலம் காலை எழு அல்லது ஏழரை மணிக்குத்தான் இளவரசர் மாளிகையிலிருந்து அகற்றப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிவிக்கின்றது. ஆனால் இளவரசரினதும், புரூஸ்கோவிச்சினதும் கூற்றிலிருந்து சிலமணி நேரம் முன்னதாகவே ரஸ்புட்டினின் உடலம் அங்கிருந்து அகற்றப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் இளவரசர் ஃபீலிக்ஸ் யுசொப்போ தான் எழுதிய இரண்டு புத்தகங்களிலும் தான் அங்கு வந்த பொலீஸ் அதிகாரியை அழைத்துச் சென்று ரஸ்புட்டினின் கொலை செய்யப்பட்ட, இரத்தக்கறை படிந்த உடலம் கிடந்த இடத்தைக் காட்டியதைக் குறிப்பிடவில்லை. தான் ஐந்து மணிக்கே தனது மாமனார் வீட்டிற்குச் சென்று படுக்கைக்குப் போய்விட்டதாகக் கூறியிருக்கின்றார்.

பொலீசாரின் அறிக்கையை பிழையென்று கூறமுடியாது. ஆனால் மேற்காட்டப்பட்ட உதாரணங்களிலிருந்து இளவரசரும், புரூஸ்கோவிச்சும் உண்மையை மறைக்க முற்பட்டிருக்கிறார்கள் என்றே எண்ணத்

தோன்றுகிறது. அந்த இரண்டு பெயர் தெரியாத நபர்கள் இளவரசர் ∴பீலிக்ஸ் அவர்களுடைய மைத்துனர்களான வியடோவும் நிக்கிற்றா அலெக்ஸாண்றோவிச் (Feodor and and Nikita Alexandrovich) அவர்களுமென்றே கொலை நடந்த மறுநாள் விநியோகிக்கப்பட்ட பீட்டேகிறாட் (Petrograd) இல் பிரத்தியேக பொலீஸ் பத்திரம் தெரிவிக்கின்றது. இந்த அறிக்கை அங்கே இரண்டு பெண்கள் இருந்ததையும் குறிப்பிடுகின்றது. ஆனால் இளவரசரின் மைத்துனர்கள் யாரும் தாம் அன்று மாளிகையில் இருந்ததாக ஒருபோதும் ஒத்துக்கொள்ளவில்லை. அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது: ரஸ்புட்டினிடம் ஒரு கைத்துப்பாக்கியைக் கொடுத்து அவர் தன்னைத் தானே சுட்டுக்கொல்லும்படி மற்றவர்கள் பணித்ததாகவும் ஆனால் ரஸ்புட்டின் அதற்கு மறுத்துவிட்டு டிமிற்றி பவலோவிச்சைக் குறிபார்த்துச் சுட்டதாகவும் அந்தக் குறி தவறி யன்னலில் பட்டுவிட்டதாகவும் அதன் பிறகு அங்கிருந்தோர் ரஸ்புட்டினைக் கொலை செய்ததாகவும் தெரிவிக்கின்றது. இந்த அறிக்கை அன்றிரவு மாளிகையில் இருந்த இனந்தெரியாத இரு நபர்களைப்பற்றியும், இரு பெண்களைப் பற்றியும், அங்கு நடந்ததாகப் பொலீசார் கூறிய அனைத்துச் சம்பவங்களுடனும் சரியாகப் பொருந்துகின்றன.

அனா விருபோவா தான் எழுதிய புத்தகத்திலே அந்தப் பெண்களில் ஒருவரை தனக்கு நன்றாகத் தெரியும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். அதுவுமல்லாமல் இளவரசரின் தந்தை வழியான ஒன்றுவிட்ட சகோதரன் ரஸ்புட்டின் கொலைசெய்யப்பட்ட அன்று தான் மாளிகையில் இருந்ததாகவும் தானும் ரஸ்புட்டினின் கொலையில் பங்கெடுத்ததாகவும் தெரிவித்தார். இளவரசரின் இன்னொரு ஒன்றுவிட்ட சகோதரரான இளவரசர் சேர்ஜ் ஒப்லென்ஸ்கி (Serge Obolensky) என்பவர் இளவரசர் ∴பீலிக்ஸ் யுசெப்போ ஓர் இரக்க குணமுள்ள, தாராள மனமுள்ள, தெய்வபக்தி நிறைந்த ஒருவர். இவர்

இன்னொருவரைத் திட்டமிட்டுக் கொலை செய்திருப்பார் என்பதை தான் ஒருபோதும் நம்பமாட்டேன் என்றார். ஆனால் இவரே இளவரசர் வாயிலாக அவரின் சேவகனான தீஸ்பே (Thesphe) என்பவர்தான் குடிபானத்தில் நஞ்சைக் கலந்ததாகவும், துப்பாக்கியால் ரஸ்புட்டினைச் சுட்டதாகவும் கூறவும் கேட்டிருந்தார்.

ரஸ்புட்டினின் காரியதரிசி ஆறோன் சிமோனோவிச் (Aaron Simanovich) அவர்கள் தனது எஜமானின் கொலை பற்றி மிகவும் மாறுபட்ட கூற்றுக்களைத் தெரிவித்தார். இளவரசரின் ஒன்றுவிட்ட சகோதரி ஒருவர் தானும், டிமிற்றி பவலோவிச்சும், பிரபு அலெக்ஸாண்டர் மிக்காலோவிச் (Duke Alexandader Michailovich) அவர்களின் இரு புதல்வர்களும், இளவரசர் ஃபீலிக்ஸ் யுசெப்போவின் மாளிகைக்குள் ரஸ்புட்டின் நுழைந்ததும் தமது துப்பாக்கிகளால் சுட்டதாகக் கூறியதாகக் கூறினார். ரஸ்புட்டின் நிலத்தில் வீழ்ந்ததும் இறந்துவிட்டதாக எண்ணி அவரது ஆடையாலேயே சுற்றிக் கட்டிவிட்டு கீழேயுள்ள பாதாள அறைக்கு தூக்கிச் சென்றதாகவும், சிறிது நேரத்தின் பின்னர் ரஸ்புட்டின் உயிர்த்தெழுந்து வெளியே ஓடிச்சென்று சுற்று மதிலால் ஏறி ஓட முயன்றபோது ஏறமுடியாமல் மயங்கி வீழ்ந்ததாகவும், இதனைக் கண்டு அங்கிருந்த நாய்கள் குரைத்ததைக் கேட்டே தாம் அங்கு சென்றதாகவும் கூறியிருந்தார்.

இவையெல்லாவற்றிலும் திகிலூட்டும் கூற்றுக்களாக இருப்பத ரஸ்புட்டினின் மூத்த மகள் மரியா தனது தந்தையாரைப் பற்றி எழுதிய மூன்றாவது புத்தகமே. இதில் 'இளவரசர் ஃபீலிக்ஸ் யுசொப்போ எனது தந்தையாரை தனது பாலியல் தேவைகளுக்காகப் பாவித்திருந்த போதிலும் இறுதியாக தனது கைத் துப்பாக்கியை எடுத்து எனது அப்பாவின் நெற்றியைக் குறிபார்த்துச் சுட்டார். அப்பா பின்பக்கமாக வீழ்ந்ததும் அவரை அடித்தும், உதைத்தும், கத்தியாலும் குத்தினர்.

அவரது கால்ச்சட்டையைக் கிழித்து எறிந்தனர். அடி வயிற்றில் பலமுறை கத்தியால் குத்திய பின்னர் அவரது ஆணுறுப்பை அறுத்து எறிந்தனர்' என்று எழுதியுள்ளார். இவருடன் இணைந்து அந்தப் புத்தகத்தை எழுதிய எழுத்தாளர் பற்றே பாகம் (Patte Barham) என்பவர் தான் அந்தப் புத்தகம் எழுதுவதற்கான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தபோது பரீசில் இளவரசரின் தலைமை வேலையாள் போல் (Paul) என்பவர் அன்று அறுத்தெறிந்து ஆணுறுப்பை எடுத்து ரஸ்புட்டினுடைய மதவெறியர்கள் இப்போதும் பத்திரமாக வைத்திருந்ததைப் பார்த்ததாக எழுதியிருந்தார். ஆனால் ரஸ்புட்டினின் உடலை நீவா நதியிலிருந்து வெளியில் எடுத்து பிரேத பரிசோதனை செய்த அறிக்கையில் இப்படி அவரின் ஆணுறுப்பு அறுக்கப் பட்டிருந்ததாக எதுவும் குறிப்பிட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

1916 ஆம் அண்டு மார்கழி 16ஆம் திகதி அன்று நடந்த கொலையைப் பற்றிய அறிக்கைகள் பலவகைகளில் முரண்படுகின்ற போதும் கிடைத்த ஆதாரங்களை வைத்து ஆராய்கின்ற போது சில உண்மைகள் தெளிவாகின்றன. அவையாவன:

இளவரசரும், ரஸ்புட்டினும் இரவு ஒருமணியளவில் மொய்கா மாளிகைக்கு வந்திருக்கின்றனர். நஞ்சு கொடுத்துத்தான் அவரைக் கொல்வது என்பதுதான் அவர்கள் எடுத்த முடிவாகியிருந்தது. உடலினுள் சென்ற நஞ்சு வேலை செய்யாதபோது அங்கிருந்தவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இளவரசரும் தான் ரஸ்புட்டினுக்கு நஞ்சு கலந்த 'கேக்' துண்டுகளைக் கொடுக்கத் தயங்கியதாகக் குறிப்பிட்டிருந்தார். ரஸ்புட்டினின் மகள் மரியா குறிப்பிட்டிருந்ததன்படி தனது தந்தையாருக்கு இனிப்பு என்றாலே பிடிக்காது அவர்கள் தமது கதை நன்றாக அமைய வேண்டும் என்பதற்காகவே அப்படிக் கூறுகின்றார்கள் என்றும், மஸ்கற் உடன் சைனைற் நஞ்சு ஒருபோதும் கலக்க மாட்டாது அது டம்ளரின் அடியிலே அடைந்திருக்கும்.

அதனால்தான் அவருக்கு நஞ்சினால் எதுவித தாக்கமும் ஏற்படவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

In Rasputin and the fall of the Romanovs என்கின்ற புத்தகத்தில் கொலின் வில்சன் (Collin Wilson) என்பவர் ரஸ்புட்டின் அதிகம் மதுபானம் குடிப்பவராகையால் அவருக்கு இரைப்பை நீர் வியாதி இருந்தது. இது நஞ்சின் தாக்கத்தைத் தாமதப்படுத்தியிருக்கலாம் என்று எழுதியிருந்தார். இவற்றோடு தனது இறுதிக்காலத்தில் மரணப் படுக்கையிலிருந்த டாக்டர் லசோவேட் அவர்கள் தான் வேண்டுமென்றே சைனைட்டுக்குப் பதிலாக வேறொரு இரசாயனப் பொருளைக் கலந்ததாகவும் கூறியிருந்தார்.


உண்மையில் இளவரசரோடு வேறும் பலர் அங்கே இருந்திருக்க வேண்டும். ரஸ்புட்டினுக்கு தன்னைத்தானே சுட்டுக் கொல்லும்படி துப்பாக்கி கொடுக்கப்பட்டதோ என்னவோ ஒது துப்பாக்கி வேட்டுச் சத்தம் சுமார் இரண்டரை மணிக்கு கேட்டிருக்கின்றது. இது உண்மை யில் பொலீசாருக்குக் காட்டிய கண்ணாடியில் பட்டிருந்தால் ரஸ்புட்டின் அடித்தோ, கழுத்துத் திருகப்பட்டோதான் கொலை செய்யப்பட்டிருப்பார். இளவரசரின் கூற்றுப்படி புரூஸ்கோவிச் துப்பாக்கியால் சுட்டு ரஸ்புட்டின் இறந்தபின்னர்தான் தான் அவரை அடித்ததாகக் கூறியிருக்கின்றார். ஆனால் அந்த அடிகள் அதற்கு முன்னரே வீழ்ந்திருக்கின்றன.

பிரபு அலெக்ஸாண்டர் மிக்காலோவிச் (Duke Alexandader Michailovich) அவர்களின் இரு புதல்வர்களும் மாளிகையில் இருந்ததற்கான சாட்சியங்கள் உள்ளன. இவர்கள் ரஸ்புட்டினுடைய உடலை அகற்றுவதற்காக அழைத்து வரப்பட்டிருக்கலாம். மோட்டார்வண்டியில் வந்திறங்கிய நால்வரில் இவர்களும் இருவரும் அடங்கலாம். காலை ஆறு மணியளவில் வெளியேறிய பெண்கள் இருவரும் பொலீசாரின் கவனத்தைத் திருப்பி அவர்களைக் குழப்புவதற்காக அனுப்பப்பட்டிருக்கலாம்.

ரஸ்புட்டின் கொலைசெய்யப்பட்டதும் இளவரசர் தனியே இறந்த உடலோடு இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்தவேளையில் இளவரசர் ரஸ்புட்டினின் உடலுக்கு ஏதாவது பாலியல் துர்ப்பிரயோகம் செய்திருக்கலாம் என்று அலெக்ஸ் டி ஜொங் (Alex De Jonge) என்பவர் குறிப்பிட்டிருந்தார். ஏனெனில் இந்த வேளையில் இளவரசர் அப்படியான செயல்கள் செய்யக்கூடிய நிலையிலே இருந்தார் என்றே குறிப்பிடுகின்றார். ரஸ்புட்டினுக்கும் இளவரசருக்கும் இடையில் இருந்த தொடர்பு பாலியல் ரீதியாகவே அதிகமாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இளவரசரின் பாதாள அறையில் ரஸ்புட்டின் உயிர்த்தெழுந்து ஓடியபோது புருஸ்கோவிச் துரத்திச் சென்று சுட்டதின் பின்னால் அவரால் எதுவுமே செய்யமுடியாமல் இருந்திருக்கின்றது. காலை ஏழு மணியளவில்தான் அவரது உடல் எடுத்துச் செல்லப்பட்டு நீவா நதியினுள் போடப்பட்டது.

இளவரசர் பொலீசாரை அழைத்துச் சென்று ரஸ்புட்டினின் உடல் இருந்த இடத்தைக் காட்டியது இப்போதும் மர்மமாகவே உள்ளது. தானே ரஸ்புட்டினைக் கொல்லவேண்டுமென்பது அவரது தனிப்பட்ட நோக்கமாக இருந்திருந்தாலும், ரஸ்புட்டினைக் கொன்றால் ரஷ்யாவைக் காப்பாற்றிவர் என்று தனக்குப் புகழ் கிடைக்கும் என்ற ஊழ்வினைப் பயனால் உந்தப்பட்டும் இருக்கலாம். அன்றிரவு உண்மையில் அந்த மாளிகையில் நடந்தவைகள் ஒருபோதும் வெளிவராமல் போகலாம். அதற்காக இளவரசரதும், புருஸ்கோவிச்சினதும் கூற்றுக்களை அப்படியே நம்பிவிட முடியாது. மற்றையவர்களுடைய கூற்றுப்படி இளவரசர் தனக்கு நன்மை தரக்கூடிய வகையிலே நடந்த சம்பவங்களை மிகவும் கவனமாகத் திரித்துக் கூறியிருக்கிறார். ஆனால் இறுதியில் உண்மையும், ரஸ்புட்டினும் இளவரசர் பீலிக்ஸ் யுசொப்போவிற்குப் பலியாகியேவிட்டன.



33

முடிவு

ஆரம்பத்தில் ரஸ்புட்டின் பிரபுக்கள், அரச பரம்பரையினருடன் மிகவும் அவதானமாகத்தான் பழகிக்கொண்டு வந்தார். ஆனால் தலைநகர் வாழ்க்கையிலே தானாகத் தேடிவந்த களியாட்டங்களும், ஆசையைத் தூண்டும் மதுக்களும், மனதை மயக்குகின்ற மாதர்களும், எதிர்பாராமல் கிடைத்த அதிகாரங்களும் ரஸ்புட்டினை வெகுவாகக் கவர்ந்துவிட்டன. பெண்கள் தமது தனிமையைப் போக்குவதற்காகவும், உத்வேகமான அனுபவங்களைப் பெறுவதற்காகவும் தாமாகவே வந்து ரஸ்புட்டினைச் சரணடைந்தார்கள். அரசபரம்பரையின் அங்கீகாரம் பெற்றவர் என்ற காரணத்தால் பல ஆண்களும் அவரிடம் வந்து நட்புக்கொண்டனர். மற்றவர்கள் எண்ணியதைப்போல் ரஸ்புட்டின் அரசகுடும்பத்தில் அவ்வளவு அதிகாரங்களைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அரசிளங்குமரனின் நோயைக் குணப்படுத்துபவர் என்கின்ற ஒரேயொரு காரணத்தால் அரசகுடும்பத்தை அழுங்குப்பிடியாகப் பிடித்துக்கொண்டேயிருந்தார்.

ரஸ்புட்டினிற்கு ஒருபோதும் தலைநகரின் அரசியல் நிலைமை களை நன்றாகப் புரிந்துகொள்ளும் திறமை இருந்ததில்லை. தமது கருத்துக் களை அரசருக்குத் தெரிவிக்க விரும்புவர்களுக்கும் அரசருக்கும் இடையில் ஒரு சிறிய பாலம் போன்றே தொழிற்பட்டார்.

இதனால் தான் நாட்டில் ஒரு மிக முக்கியமான பதவி ஒன்றை வகிப்பதாகவும் எண்ணினார்.

ரஸ்புட்டினுடன் பாவங்களைச் செய்தால் தமது தெய்வீகத் தன்மைகள் அதிகரிக்கும் என்று எண்ணித் தாமாகவே வந்து தம்மை அர்ப்பணிக்கும் பெண்களைத் தடுக்கவோ அவர்களுக்கு அறிவுரை கூறவோ ஒருபோதும் எத்தனிக்கவுமில்லை. நல்ல முறைகளைக் கடைப்பிடிக்கும் புராதன தேவாலயங்களின் கொள்கைகளையும் தனது சொந்த அபிலாஷைகளையும் பிரித்தறியவும் ஒருபோதும் முயன்றதில்லை. படிப்படியாக சிற்றின்பத்திற்கும், தெய்வீகத் தன்மைக்கும் உள்ள வேறுபாடுகள் ரஸ்புட்டினின் உள்ளத்திலிருந்து மங்கத் தொடங்கின.

தனது புகழின் உச்சியில் நின்றபோதுகூட அவரால் இருபதுக்கும் மேற்பட்ட பக்தர்களைக் கவர முடியவில்லை. அவரின் பக்தர்களிலே மிகவும் பிரபல்யமானவர்தான் அனா விருபோவா. இவருக்கு நடக்கவிருந்த திருமணத்தைச் செய்யவேண்டாம் என்று ரஸ்புட்டின் அறிவுரை கூறினார். ரஸ்புட்டினது அறிவுரைகளைக் கேட்காது திருமணம் செய்து, சில மாதங்களுக்குள்ளேயே அந்த திருமண பந்தங்களிலிருந்து தானாகவே விடுபட்டுக்கொண்டார். அதன் பிறகு மீண்டும் ரஸ்புட்டினினது ஆன்மீக வழிகாட்டல்களுக்குள் வந்து சேர்ந்துகொண்டார்.

அனா விருபோவா பெரிய புத்திசாலி என்று சொல்லமுடியாது. ஆனால் நீல நயனங்களும், கொழுகொழு கன்னங்களும், அடர்த்தியான கேசமும் கொண்ட மிகவும் கவர்ச்சியான அழகி. தந்தையார் ஓர் இசை வல்லுனராக அரச பரம்பரையில் பணியாற்றியவர். இதனால் அரச பரம்பரையினருடனான தொடர்பு இலகுவாகக் கிடைத்துவிட்டது. அரசரினதும், அரசியாரினதும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களில் அனா விருபோவாவும் மிகவும் ஒருவர் ஆனார். அரசியார் அனா விருபோவாவிற்கு ஒரு பட்டத்தைக்கொடுத்துக் கௌரவித்து

ரஸ்புட்டினைப்போல அரண்மனையிலேயே பணிகளைச் செய்வதற்காக வைத்திருந்தார்.

நாட்டுமக்களுக்கு அரசபரம்பரையினரின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி வெகுவாகத் தெரியாது. குழந்தை அலெக்ஸியின் தீராத நோய் போன்ற பல உண்மையான விடயங்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டன. அவர்கள் நடந்துகொள்ளும் முறைகளிலிருந்தும், பேசும் வார்த்தைகளிலிருந்தும், பொதுமக்கள் கொண்டிருந்த அபிப்பிராயங்களிலிருந்தும் எல்லோரும் அனா விருபோவாவையும் தமது பேரரசியார் போலவே எண்ணியிருந்தனர்.

அரசியார் ரஸ்புட்டினுடனான தனது தொடர்புகளை மிகவும் இரகசியமாகவே வைத்திருந்தார். ஆனால் அனா விருபோவா தனக்கு அரச பரம்பரையினருடனுடம், ரஸ்புட்டினுடனும் இருந்த தொடர்புகளைப் பற்றி மிகவும் பெருமிதப்பட்டுக்கொண்டார். ஆனால் இந்தப் பெருமிதம் அரச பரம்பரையினரின் கௌரவத்திற்குப் பங்கம் விளைவிப்பதை அனா விருபோவா அறியத் தவறிவிட்டார். தலைநகரில் வசித்தோருக்கு இவருக்கும், ரஸ்புட்டினுக்கும், அரசியாருக்கும் இடையில் இருந்த தொடர்புகளைப் பற்றி வெகுவாகவே தெரிந்திருந்தது. அரசியாரையும் ரஸ்புட்டினைப்பற்றியும் பத்திரிகைகளில் எழுதுவதற்கு தடை செய்யப்பட்டபோதிலும் அனா விருபோவாவையும், ரஸ்புட்டினையும் பற்றிய செய்திகளையும், படங்களையும் வேண்டியளவு பிரசுரிக்க அவைகள் தயங்கவில்லை.

அனா விருபோவாவின்மேல் எத்தனையே பழிகளைச் சுமத்தியபோதிலும் புரட்சியின் பின்னர் தன்னை நிரபராதி என்று நிரூபிப்பதற்காக தான் இன்னமும் கன்னிப் பெண்ணாகத்தான் இருக்கின்றேன் என்பதனை மருத்துவ ரீதியாக நிரூபித்துக் காட்டினார். இதனை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள்.

பேரரசரும் பேரரசியாரும் தாம் எண்ணியபடியே நாட்டை அரசாண்டார்கள். எத்தனையோபேர் எத்தனையே விதமான அறிவுரை களைக் கூறியபோதிலும் அவற்றையெல்லாம் தட்டிக்கழித்தார்கள், உதாசீனம் செய்தார்கள், தமது சுயநலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே மிகவும் கவனமாக இருந்தார்கள். மக்களின் குரலுக்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை. இதனால் இறுதியில் முடியைத்துறந்து, அவமானப்பட்டு, அந்த நாட்டு மக்களாலேயே துப்பாக்கியால் சுடப்பட்டு ஒரு சாதாரண குழியினுள் போட்டுப் புதைக்கப்பட்டார்கள். இவர் களுடைய புதைகுழியைக் கண்டுபிடிக்கவே ஆராய்ச்சியாளர்கள் சிரமப்பட்டார்கள். இந்த பேரரசர் (Tsar-ஜார்) யின் வீழ்ச்சியைக் கேள்விப் பட்டதும் எமது மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 'புதிய ருஷியா' என்கின்ற தலைப்பில் ஒரு கவிதையை எழுதியிருந்தார். அதிலே;

இம்மென்றால் சிறைவாசம் ஏனென்றால்
வனவாசம் இவ்வாறங்கே
செம்மையெல்லாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்
அம்மைமனங் கனிந்திட்டாள் அடிபரவி
உண்மைசொலும் அடியார் தம்மை
மும்மையிலும் காத்திடுநல் விழியாலே
நோக்கினாள் முடிந்தான் காலன்
இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான்
ஜாரரசன் இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்....

என்று எழுதிக்கொண்டே போகிறார். 'அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்' என்ற பழமொழி எவ்வளவு உண்மையானது!

◆◆◆

ரஸ்புட்டின் உறவு முறைகள்
- Relationships

ரஸ்புட்டின் முழுப்பெயர் (Gregory Efimovich Rusputin)	-	கிரகோறி எவிமெவிச் றஸ்புட்டின்.
எவிமி அக்கோலிவிச் ரஸ்புட்டின் (Efimy Akovlevich Rasputin)	-	ரஸ்புட்டினின் தந்தை.
பரஸ்கோவியா (Praskovia Fedorvia)	-	ரஸ்புட்டினின் மனைவி.
அனா எக்றோவ்னா (Anna Egorovna)	-	ரஸ்புட்டினின் தாய்.
டிமிட்றி (Dmitri)	-	ரஸ்புட்டினின் அண்ணன்.
டிமிட்றி (Dmitri)	-	ரஸ்புட்டினின் இரண்டாவது மகன்.
வாரியா (Varya)	-	ரஸ்புட்டினின் இரண்டாவது மகள்.
மரியா (Maria or Matriona)	-	ரஸ்புட்டினின் மூத்த மகள்.
கற்யா (Katya)	-	ரஸ்புட்டினின் கிரம வீட்டு வேலைசெய்பவர்.
ஐரீனா (Irina)	-	ஓர் அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்.
கிலிஸ்டி (Khlisti)	-	ஒரு வகையான மதப்பிரிவு.
ஒயெற்ஸ் பேயோற்ரா (Otyets Pyotr)	-	பழைய பகைவர்.

ஜார் நிக்கலஸ் (Tsar - Nicholas II)	-	ரஷ்ய பேரரசர்.
அலெக்ஸ்ஸான்றா (Tsarina - Alexandra)	-	ரஷ்ய பேரரசி. விக்டோரியா மகாராணியாரின் ஒன்பது பிள்ளைகளில் ஒருவரான இளவரசி அலிஸ் (Alice) இவருடைய தாயார். தந்தையார் கெஸ்ஸி - றம்ஸ்ராட் (Hesse-Darmstadt) என்ற ஜேர்மனியர்.
ஒல்கா (Olga)	-	ரற்ரீனா (Tatiana), மரியா (Maria), அனஸ்ராசியா (Anastasia) - இளவரசிகள். அலெக்ஸி (Alexei) - இளவரசன்.
ஜார் நிக்கலஸ்	-	இவருக்கும் பிரித்தானிய அரச குடும்பத்துடன் உறவுண்டு. தாயார் டாக்மா (Dagmar). டென்மார்க் அரசர் ஒன்பதாம் கிறிஸ்டியன் (Christian IX) அவர்களின் மகளும் ஏழாம் எட்வேட்டின் (Edward VII) மனைவி அலெஸ்ஸான்றாவின் (Alexandra) சகோதரியுமாவர். தந்தையார் பெயர் மூன்றாம் அலிஸ்க்ஸாண்டர் (Aleksander III). இவரைத் திருமணம் செய்தபின்னர் டாக்மா என்ற பெயர் மரியா விடெறேவ்னா (Maria Feodorovna) என்றாகிவிட்டது.
அனா விருபோவா (Anna Vyrubova)	-	பேரரசியின் நண்பி.
மைக்கேல் (Michael)	-	பேரரசரின் சகோதரர்.
டாக்டர் பிலிப்பே (Dr.Philippe)	-	பிரான்ஸ் நாட்டு அரச குடும்ப மருத்துவர். தெய்வ ரீதியான அறிவுரைகளை வழங்குபவர்.

பீலிக்ஸ் சுமாரக்கோவ் (Felix Sumarakov-Elston) - எல்ஸ்டன் சினேயிட் யுசெப்போ (Zenaide Youssoupov) - இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போ (Nikolas Yussupov), இளவரசர் பீலிக்ஸ் யுசெப்போ (Feliks Yussupov) இவர்களின் பெற்றோர்.

சீமான் டிமிற்றி பவலோவிச் (Grand Duke Dmitri Pavlovich) - யுசெப்போ பீலிக்ஸ் இன் ஆண் சினேகிதர்.

இலியடோ (Iliodor) - ரஸ்புட்டினுடன் ஒரே தேவாலயத்தில் பணியாற்றியவர்.

கேமோகன் (Hermogan) - ஒரு மதகுரு.

தியோபன் (Theophan) - ஒரு மதகுரு.

அக்குலினா (Akulina) - கன்னியர் மடத்தைச் சேர்ந்தவர்.

ஒல்கா விலடிமிறோவ்னா லக்ரீனா (Olga Vladimirovna Lokhtina) - ரஸ்புட்டினுக்கு எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்தவர்.

லீசா ரான்சின் (LisaTansin) - பின்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்

கொக்கோவ்ரோவ் (Kokovtsov) - பிரதம மந்திரி.

சினோயா குசிவா (Chionya Guseva) - ரஸ்புட்டினைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தியவர்.

இவானோவ் (Ivanov) - ரஸ்புட்டின் என்ற இராட்சகன் பேரரசரையும், பேரரசியாரையும் தனது மடியில் இருத்தி இரு கைகளிலும் இரு சிறிய பொம்மைகள்போல வைத்திருக்கும்படி அமைந்த கேலிச்சித்திரத்தை வரைந்தவர்.

எலிசபெற் வியோடேறோவ்னா (Elizabeth Feodorovna) - அரசியாரின் சகோதரி.

றொட்சியன்கோ (Rodzianko) - புதிய பிரதம மந்திரி.

டேவிட்சன் (Davidsohn) - ஒரு பத்திரிகை அறிவிப்பாளன் - மரியாவின் காதலன்.

றேமன்ட் பொயின்கேர் (Raymond Poincare) - பிரான்ஸின் தலைவர் ரஷ்யாவின் தலைநகரான சென்ட் பீட்டர்ஸ்பர்க் (St Petersburg) என்ற பெயரை பீற்றோகிராட் (Petrograd) என்று மாற்றி வைத்தனர்.

இளவரசி ரைனா (Princess Irina) - அவரது மனைவியார்.

அலெக்ஸாண்டர் புறோட்டோபோப்போவ் (Alexander Protopopov) - உள்துறை அமைச்சர். 1916 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்.

பீட்டர் ஸ்ரோலிபின் (Peter Stolypin) - ரஸ்புட்டினுக்கு பரம எதிரியாக இருந்த ரஷ்யப் பிரதமர்.

ஜெனரல் விலடிமர் டுகன்கொவிஸ்கி (Gen.Vladimir Dzhunkovsky) - உதவி உள்நாட்டு அமைச்சர்.

பிரபு அலெக்ஸாண்றா மிக்காயிலோவிச் (Duke Alexandra Michailovich) - பேரரசரின் மைத்துனர்

இளவரசி ஐரீனா அலெக்ஸாண்றோவ்னா (Princess Irina Alexandrivna)- பேரரசருடைய சகோதரி சீமாட்டி எக்சீனா Grand Duchess Xeniaவிற்கும் சீமான் அலெக்ஸாண்றா மிக்காயிலேவிச் Alexandra Michailovich இற்கும் பிறந்த ஒரே மகள்.

இளவரசர் நிக்கொலஸ் பீலிக்ஸ் யுசெப்போ (Nikolas Feliks Yussupov) - ரஸ்புட்டினைக் கொலை செய்தவர்.

மொய்கா கானல் (Moika Kanal) - இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போ பீலிக்ஸ் (Nikolas Yussupov Feliks) இன் இருப்பிடம்.

விலடிமர் லசுறோவ் (Vladimir Lazurov) - இளவரசர் நிக்கொலஸ் பீலிக்ஸ் யுசெப்போ இன் உடன்பிறவாத சகோதரன்.

பிரபு ஆவிட் மன்ருவில் (Baron Arwid Manteufel) - இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போவுடன் துப்பாக்கிச் சமர் செய்தவர்.

சீமாட்டி மரீனா கெய்டன் (Marina Heyden) - பிரபு ஆவிட் மன்ருவில் (Baron Arwid Manteufel) இன் மனைவி. - இளவரசர் நிக்கொலஸ் யுசெப்போவின் கள்ளக்காதலி.

ஜேர்மன் முடிக்குரிய இளவரசி சிசிலி (Crown Princes Cecilie) - இளவரசர் நிக்கொலஸ் பீலிக்ஸ் யுசெப்போவின் மனைவி ஐரீனாவின் ஒன்று விட்ட சகோதரி.) அவரது மாமனார் கையிசர் (Kaiser).

ஐவன் சுக்கோரின்
(Lt. Ivan Sukhotin) - இராணுவத் தலைவர். இளவரசர் நிக்கொலஸ் பீலிக்ஸ் யுசெப்போவுடன் சேர்ந்து ரஸ்புட்டினைக் கொலை செய்வதற்கு உதவியவர்.

விலாடிமர் புருஸ்கோவிச்
(Vladimir Purishkevich) - இவரும் இளவரசர் நிக்கொலஸ் பீலிக்ஸ் யுசெப்போவுடன் நான்காவது நபராக இணைந்து ரஸ்புட்டினைக் கொலை செய்வதற்கு உதவியவர்.

டாக்டர் லசோவேட்
(Dr.Lozovert) - அவர்களை இளவரசரின் சாரதிபோல் கொலை செய்தபோது பணியாற்றியவர்.

சேனைத்தலைவர்
றோகோவ்
(Colonel Rogov) - காசான் மாகாண பொலீஸ் அதிகாரி.

கப்டன் கிறைலோவ்
(Captain Krylov) - காசான் மாகாண உதவிப் பொலீஸ் அதிகாரி.

●●



➲ மரியா ரஸ்புட்டினுக்கு அன்னா வைருபோவா அனுப்பிய தபால் அட்டையில் இருக்கும் ஜாரினா மற்றும் ஜாரிவிச்சின் ஓவியப் படம்.



➲ ஜாரினாவும் அவரது மகன் ஜாரிவிச்சுடன் ஆன சந்திப்பிற்கு ரஸ்புட்டினுக்கு உதவி ஏற்பாடு செய்த அன்னா வைருபோவா



1908ல் கோமகன் டிமிற்றி பவ்லோவிச்சும் அவரது சகோதரி கோமகள் மேரி பவ்லோவ்னாவும். ➲



➲ 1913ல் இளவரசர் ஃபீலிக்ஸ் யுஸ்ஸோபோவும் இளவரசி ஐரினா அலெக்ஸாண்ட்ரோவ்னாவும் அவர்களது திருமண நிச்சயதார்த்தத்திற்குப் பின் எடுத்துக் கொண்ட படம்.



1920–ல் லண்டனில் ஃபீலிக்ஸும் ஐரினாவும் அவர்களது செஞ்சிலுவை அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற கண்காட்சிக்கு தலைமையேற்றபோது...



1915–ல் இளவரசர் ஃபீலிக்ஸ் யுஸ்ஸோபோவும் ஐரினாவும் அவர்களது மகள் ஐரினாவுடன்.



ஆகஸ்ட் 1904–ல் சக்ரவர்த்தினி அலெக்ஸாண்ட்ரா ஜாரிவிச்சுடன் (அவரது பெயர்சூட்டு விழாவிற்குப் பின்.)



டௌவேஜர் சக்கரவர்த்தினி மேரி ஃபியாடோரோவ்னா



1912ல் ஜார் நிக்கோலஸ் II–ம் ஜாரிவிச் அலெக்ஸியும்




லண்டன் ஆல்பர்ட் கூடத்தில் நடந்த ஆடையலங்கார விழாவில் போயர் உடையில் ஃபீலிக்ஸ்.

ரஸ்புட்டின் 1906ஆம் ஆண்டு



➲ 1906–ஆம் ஆண்டு வாக்கில் ரஸ்புட்டின்




➲ அவரது மகள் மரியாவின் லாஸ் ஏஞ்சலஸ், கலிஃபோர்னியாவில் உள்ள இல்லத்தின் படுக்கையறையில் இப்போது காணப்படும் கிறிகோறி ரஸ்புட்டினின் ஓவியப் படம்.




சைபீரியாவிலிருக்கும் ரஸ்புட்டினின் பண்ணையில் ரஸ்புட்டினும் அவரது குழந்தைகளும். இடதுபுறத்தில் மரியா.




1915–ல் அவரது வீட்டில் அளிக்கப்பட்ட தேநீர் உபசாரத்தின்போது ரஸ்புட்டின் அவரது ரசிகர், ரசிகைகளால் சூழப்பட்டிருக்கும் காட்சி.



➲ சென்ட் பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள ரஸ்புட்டினின் அடுக்கு மாளிகைக் குடியிருப்பின் நுழைவாயில் புகைப் படம்.



➲ 1915–ல் ஐவனோவால் வரையப் பட்ட 'ரஷ்யாவை ஆளும் இல்லம்'– ஒரு கேலிச் சித்திரம்.



சைபீரியாவில் உள்ள ரஸ்புட்டினின் குடும்ப இல்லம்



சைபீரியாவில் ரஸ்புட்டினும் அவரைப் பின்பற்றியவர்களும்



1916ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் தேதி இரவு நடந்த கொலையின் போது மொய்கா அரண்மனையின் தோற்றம்




சென்ட் பீட்டர்ஸ்பர்கில் உள்ள மொய்கா அரண்மனையின் தோற்றம் (கால்வாய் பாலத்திலிருந்து பார்க்கும்போது.)



நேவா ஆற்றின் மேலுள்ள பெட்ரோவ்ஸ்கி பாலம் – இங்கிருந்துதான் ரஸ்புட்டினின் கொலை செய்யப்பட்ட உடல் சதிகாரர்களால் வீசி எறியப்பட்டது.



மாஸ்கோ இல்லத்திலிருக்கும் இரகசிய அறையில் ஃபீலிக்ஸால் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருட்களை சோவியத் மக்கள் கண்டறிந்த காட்சி.




செண்ட் பீட்டர்ஸ்பர்கில் அரண்மனை சதுக்கத்திலிருந்து குளிர்கால மாளிகையின் தோற்றம் (1900 ஆம் ஆண்டு வாக்கில் எடுக்கப்பட்ட புகைப்படம்)

மொய்கா அரண்மனையின் முன்பக்க வாயில் ➲





இர்ஃவில் தயாரிக்கப்பட்ட மாதிரி கவுனை அணிந்திருக்கும் ஐரினா.




சென்ட் பீட்டர்ஸ்பர்கில் ஃபொன்டன்கா கால்வாயின் புறம் உள்ள யுஸ்ஸோபாவ் அரண்மனையில் கியுரேங்கியால் வடிவமைக்கப்பட்ட எழில்மிகு தோட்டம்.



அர்கான்கெல்ஸ்கோ, டிபோலோ அறை

➲ மொய்கா அரண்மனையில் அமைந்திருக்கும் எழில்மிகு படிக் கட்டுகள்.






➲ 1910–ல் மகாகோமகள் எலிஸபெத் தான் நிறுவிய மேரி மற்றும் மார்த்தா செவிலியர் நிறுவனத்தின் சீருடையணிந்து காணப்படுதல்.



➲ சென்ட் பீட்டர்ஸ்பர்கில் லிட்டினெ யி லு ள் ள யு ஸ் ஸ ா போ வ் அரண்மனை.



1914ல் ஜார் நிக்கோலஸ் II



விளாடிமிர் புரிஷ்கேவிச்



ரஸ்புட்டினின் பிணத்தோற்றம்

ரஸ்யாவின்

ரஸ்புட்டீன்

தீர்க்க தரிசியா?
மக்கள் புரட்சிக்கு வித்திட்டவரா?

எம்.ரி.செல்வராஜா

